முன்னுரை

லேவியராகமம் புஸ்தகத்தின் ஆசிரியர் மோசே. கி.மு. 1686 ஆம் வருஷத்தில் இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டது. சீனாய்மலையில் கர்த்தர் மோசேக்குக் கொடுத்த பிரமாணத்தின் ஒரு பகுதியாக இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

இரட்சிக்கப்பட்ட தேவனுடைய ஜனங்களின் ஆராதனை, ஊழியம், அன்றாட வாழ்க்கை முறை ஆகியவற்றை லேவியராகமம் புஸ்தகம் விளக்குகிறது.

யாத்திராகமம் புஸ்தகத்தில் எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்கள் வெளியேறி வனாந்தரத்தில் பிரயாணம் செய்த நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆசாரியத்துவ ஊழியத்திற்கு ஆரோனும், அவருடைய குமாரரும் அழைக்கப்படுதல், தேவனுடைய வாசஸ்தலம் ஸ்தாபிக்கப்படுதல் ஆகிய நிகழ்ச்சிகளெல்லாம் யாத்திராகமம் புஸ்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

பலிகளையும், காணிக்கைகளையும் செலுத்துவது சம்பந்தமான பிரமாணங்கள் லேவியராகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆசாரியருடைய பிரதிஷ்டை, ஆசரிப்புக் கூடார ஆராதனையின் ஸ்தாபனம், தேவனுடைய பிள்ளைகளின் ஆவி, ஆத்துமா, சரீரம், ஆகியவற்றின் பரிசுத்தம், இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தரோடுள்ள ஐக்கியம் கர்த்தருடைய பண்டிகைகள், ஆசரிப்புக்கூடாரத்தில் கர்த்தர் தமது ஜனங்கள் மத்தியில் வாசம்பண்ணுவது, தேவனை அணுக வேண்டிய முறைகள், தேவனோடு ஐக்கியமாக இருப்பதற்கான வழிகள் ஆகியவையெல்லாம் லேவியராகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

லேவியராகமம் புஸ்தகத்தில் சரித்திர சம்பந்தமான செய்திகள் எதுவும் சொல்லப்படவில்லை. ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆசாரிய ஊழியத்திற்காக பிரதிஷ்டைபண்ணப்படுகிறார்கள் (லேவி 8,9 ஆகிய அதிகாரங்கள்).

நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் அந்நிய அக்கினியை கொண்டு வந்தார்கள். அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு அவர்களை பட்சித்துப்போடுகிறது. அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்துப்போகிறார்கள் (லேவி 10-ஆவது அதிகாரம்). செலோமித்தின் குமாரன் இஸ்ரவேலரோடேகூட சண்டைபண்ணிக் கொண்டிருக்கிறான். அவன் கல்லெறிந்து கொல்லப்படுகிறான் (லேவி 24-ஆவது அதிகாரம்).

லேவியராகமம் புஸ்தகத்தில் ஆராதனைக்கு அடுத்த பிரமாணங்கள் விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். அவர்கள் செலுத்த வேண்டிய பலிகள், காணிக்கைகள், அவர்களுடைய போஜனங்கள், அவர்கள் பருகவேண்டிய பானங்கள், அவர்களுடைய சுத்திகரிப்பு ஆகியவற்றைப்பற்றியெல்லாம் கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லியிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். கர்த்தர் அவர்களை மற்ற ஜாதியாரிடமிருந்து வேறுபிரித்து, தமக்கு சொந்த ஜனமாக தெரிந்துகொள்கிறார். லேவியராகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரமாணங்களெல்லாம், இனிமேல் வரப்போகிற நன்மையான காரியங்களுக்கு அடையாளமாயிருக்கிறது. இவை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தில் நிறைவேறுகிறது.

லேவியருடைய ஆசாரிய ஊழியத்தைப்பற்றி இந்தப் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருப்பதினால், இது லேவியராகமம் என்று அழைக்கப்படுகிறது.

"அல்லாமலும், இஸ்ரவேல் ஜனங்கள் லேவிகோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள்; அந்த ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால், ஆரோனுடைய முறைமையின்படி அழைக்கப்படாமல், மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி அழைக்கப்பட்ட வேறொரு ஆசாரியர் எழும்பவேண்டுவதென்ன?" (எபி 7:11).

கர்த்தர் தங்களுக்கு சொல்லியிருக்கிற பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, லேவியர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். இவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களை இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கும் உபதேசம்பண்ணவேண்டும்.

யாத்திராகமம் புஸ்தகத்தின் முடிவில், கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபனம்பண்ணப்படுவதுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசாரியர்கள் கர்த்தருடைய வாசஸ்தலத்திலே அவருக்கு ஆராதனை செய்கிறார்கள். கர்த்தர் மோசேயின் மூலமாக லேவியருக்கு சொல்லியிருக்கிற பிரகாரம், அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்யவேண்டும்.

1 அதிகாரம்

கர்த்தருக்கு பலிசெலுத்துவது சம்பந்தமான பிரமாணங்கள் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பூர்வகாலம் முதலே மனுபுத்திரர் மத்தியில் கர்த்தருக்கு பலிசெலுத்தும் வழக்கம் இருந்து வருகிறது. கர்த்தர் மோசேக்கு பலிசெலுத்துவது சம்பந்தமான பிரமாணத்தை சொல்லுகிறார்.

காளை (லேவி 1:3-9). செம்மறியாடு அல்லது வெள்ளாடு (லேவி 1:10-13). காட்டுப்புறா அல்லது புறாக்குஞ்சு (லேவி 1:14-17). நாம் கர்த்தருக்கு எவ்வளவு பெரிய பலியை செலுத்துகிறோம் என்பது முக்கியமல்ல. கர்த்தருக்கு பலிசெலுத்துகிறவர்கள் சுத்த இருதயத்தோடு பலிசெலுத்தவேண்டும். நாம் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து பலி செலுத்தவேண்டும். கர்த்தர் நம்முடைய பலிகளை அங்கீகரிக்கும் வண்ணமாக நாம் அவருக்கு பலிசெலுத்தவேண்டும்.

சர்வாங்க தகனபலி
லேவி 1:1,2

லேவி 1:1. கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிட்டு, அவனை நோக்கி:

லேவி 1:2. நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லவேண்டியது என்னவென்றால், உங்களில் ஒருவன் கர்த்தருக்குப் பலி செலுத்த வந்தால், மாட்டு மந்தையிலாவது ஆட்டுமந்தையிலாவது ஒரு மிருகத்தைத் தெரிந்தெடுத்து, பலி செலுத்த வேண்டும்.

லேவியராகமம் முதல் அதிகாரம் முதல் வசனம் "வாயிக்ரா" என்னும் எபிரெய வார்த்தையோடு ஆரம்பமாகிறது. லேவியராகமத்தையும், யாத்திராகமத்தையும் இந்த வார்த்தை நெருக்கமாக இணைக்கிறது. பஞ்சாகமத்திலுள்ள ஐந்து புத்தகங்களும் சேர்ந்து "தோரா" என்று அழைக்கப்படுகிறது. ஐந்து புஸ்தகங்களும் தோராவின் ஐந்து பகுதிகளாகும்.

லேவியராகமம் புஸ்தகத்தில் கர்த்தரைக் குறிப்பதற்கு "யெகோவா" என்னும் பெயரைத் தவிர, வேறு எந்தப் பெயரும் பயன்படுத்தப்படவில்லை. லேவியராகமத்தில் யெகோவா என்னும் பெயர் 305 தடவைகளும், ஆதியாகமத்தில் 204 தடவைகளும், யாத்திரகாமத்தில் 388 தடவைகளும், எண்ணாகமத்தில் 393 தடவைகளும், உபாகமத்தில் 545 தடவைகளும் கர்த்தரைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிடுகிறார். பரிசுத்த வேதாகமத்தில், கர்த்தர் மோசேயைக் கூப்பிட்ட வேறு சில சம்பவங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. எரிகிற முட்செடியிலிருந்து - இஸ்ரவேலுக்குப் போகுமாறு தேவன் மோசேயை அழைத்தார் (லேவி 3:4)

2. சீனாய் மலையிலிருந்து - இஸ்ரவேல் புத்திரரிடம் பேசுவதற்காகக் கூப்பிட்டார் (லேவி 19:3).

3. சீனாய் மலையிலிருந்து - மலைக்கு மேலே வருமாறு கூறினார் (லேவி 19:20)

4. சீனாய் மலையிலிருந்து - நெருங்கி வருமாறு கூறினார் (லேவி 24:16).

5. ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து - ஆராதனை செய்வது பற்றி இஸ்ரவேல் புத்திரரிடம் பேசுவதற்காகக் கூப்பிட்டார் (லேவி 1:1).

மோசே லேவியராகமம் புஸ்தகத்தின் ஆசிரியர் என்று யூதமார்க்கத்தாரின் பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், லேவியராகமம் புஸ்தகத்தின் ஆசிரியர் மோசே தான் என்பதை அங்கீகரிக்கிறார். இதற்கான காரணம் வருமாறு :

1. விருத்தசேதனம் (லேவி 12:3= யோவான் 7:22-23)
2. குஷ்டரோகியைச் சுத்திகரித்தல் (லேவி 14:1-32=மத் 8)
3. சமுகத்தப்பம் (லேவி 24:5-9= மத் 12:4)
4. பெற்றோரைச் சபிக்கிறவர்களுக்கு மரண தண்டனை. (லேவி 20:9= மாற்கு 7:10)

கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிடுகிறார். ஆசரிப்புக் கூடாரம் ஸ்தாபனம்பண்ணப்பட்டவுடன், இதுவரையிலும் சீனாய் மலையிலிருந்து பேசிய கர்த்தர் இப்பொழுது ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து பேசுகிறார் (யாத் 40:33-38).

"ஒருவன் கர்த்தருக்குப் பலி செலுத்த வந்தால்" என்று கர்த்தர் தம்முடைய வார்த்தையை மோசேக்கு சொல்லுகிறார். பிரமாணங்களில் "-ஆல்" என்னும் வார்த்தை பல இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய பிரமாணம் யார் மீதும் கட்டாயமாகத் திணிக்கப்படவில்லை. யாத் 20-உபா 34 ஆகிய அதிகாரங்களுக்கு இடையில் "-ஆல்" என்னும் வார்த்தை 372 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆதி 1-யாத் 19 ஆகிய 69 அதிகாரங்களில் இந்த வார்த்தை 67 தடவைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பிரமாணத்திற்குக் கீழ்ப்படியுமாறு யாரும் கட்டாயப்படுத்தப்படவில்லை. ஆனால் கீழ்ப்படியாமைக்கு மரண தண்டனை நிச்சயம். கிருபையின் காலத்திலும், கர்த்தரைச் சேவிக்க வேண்டுமென்று யாரும் கட்டாயப்படுத்தப்படமாட்டார்கள். ஆனால் கர்த்தரைச் சேவிக்காதோருக்கு நரகம் நிச்சயம் உண்டு. இரட்சிப்புக்கும், நித்திய ஜீவனுக்கும் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிதல் அவசியம்.

பரிசுத்த வேதாகமத்தில் பலிகளையும் காணிக்கைகளையும் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவை இரண்டு வகைப்படும். அவையாவன :

1. சுகந்த வாசனையான பலிகள் (லேவி 1:1-3:17)
2. சுகந்த வாசனையல்லாத பலிகள் (லேவி 4:1-6:7)

சுகந்த வாசனையான பலிகளை மூன்று விதமாக பிரிக்கலாம். அவையாவன:

1. சர்வாங்க தகனபலிகள் - மிருகஜீவன்கள்
2. சர்வாங்க தகனபலிகள் - போஜனப்பலிகள்
3. சமாதான பலிகள்

சர்வாங்க தகனபலிகளாக செலுத்தப்படும் மிருகஜீவன்களை மூன்று வகையாக பிரிக்கலாம் (லேவி 1:1-17) அவையாவன :

1. காளைகள் (லேவி 1:1-9)
2. செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும் (லேவி 1:10-13)
3. காட்டுப்புறாக்களும், புறாக்களும் (லேவி 1:14-17)

சர்வாங்க தகனபலிகளாக செலுத்தப்படும் போஜனபலிகளை ஐந்து வகையாக பிரிக்கலாம் அவையாவன : (லேவி 2:1-16)

1. மெல்லியமாவு, எண்ணெய், தூபவர்க்கம் (லேவி 2:1-3)
2. புளிப்பில்லா அதிரசங்கள் (லேவி 2:4)
3. புளிப்பில்லா அடைகள் (லேவி 2:5-6)
4. பொறிக்கும் சட்டியில் பாகம்பண்ணப்பட்ட அடைகள் (லேவி 2:7-9)
5. முதற்கனிகள் (லேவி 2:12-16)

சமாதான பலிகள் மூன்று வகைப்படும் அவையாவன: (லேவி 3:1-17)

1. மாடு, காளை, பசு (லேவி 3:1-6)
2. ஆட்டுக்குட்டிகள் (லேவி 3:7-11)
3. வெள்ளாடுகள் (லேவி 3:12-17)

சுகந்த வாசனையல்லாத பலிகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன : (லேவி 4:1-6:7)

1. பாவநிவாரண பலிகள் - மிருகஜீவன்கள் மட்டும். (லேவி 4:1-35):
2. குற்றநிவாரண பலிகள் (லேவி 5:1-6:7)

பாவநிவாரண பலிகளாக செலுத்தப்படும் மிருகஜீவன்களை நான்கு பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன : (லேவி 4:1-35)

1. ஆசாரியருக்காகக் காளைகள் (லேவி 4:1-12)
2. ஜனங்களுக்காகக் காளைகள் (லேவி 4:13-21)
3. பிரபுக்கள் அறியாமல் செய்த பாவத்திற்காக இளங்கடா (லேவி 4:22-26)
4. சாதாரண ஜனங்கள் அறியாமல் செய்த பாவத்திற்காக வெள்ளாடுகளின் பழுதற்ற பெண்குட்டி (லேவி 4:27-35)

குற்றநிவாரண பலிகளை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன : (லேவி 5:1-6:7)

1. ஐசுவரியவான்களுக்குக் குற்றநிவாரண பலியாக ஆடுகளிலாவது, வெள்ளாடுகளிலாவது ஒரு பெண்குட்டி. (லேவி 5:1-6)
2. ஏழைகளுக்குக் குற்றநிவாரண பலியாக இரண்டு காட்டுப்புறாக்கள், இரண்டு புறாக்குஞ்சுகள் - ஒன்று பாவநிவாரண பலியாகவும், மற்றொன்று சர்வாங்க தகனபலியாகவும். (லேவி 5:7-10)
3. மிகவும் ஏழைகளுக்குக் குற்றநிவாரண பலியாக ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கு. (லேவி 5:11-13)
4. அறியாமல் பாவத்திற்குட்பட்டவனுக்குக் குற்ற நிவாரண பலியாக பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவும், அவன்மீது சுமத்தப்படும் சேக்கல் கணக்கான அபராதமும் (வெள்ளி). (லேவி 5:14-19)
5. திருடுகிறவனுக்குக் குற்ற நிவாரண பலியாகத் திருட்டின் மதிப்புக்குச் சரியான பழுதற்ற ஆட்டுக்கடாவும், அவன்மீது சுமத்தப்படும் சேக்கல் கணக்கான அபராதமும் (வெள்ளி). (லேவி 6:1-7)

பரிசுத்த வேதாகமத்தில் பலிகளைப்பற்றி ஒரு சில செய்திகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு : பலிகளில் இரண்டு வகைகள் உள்ளன. 1. சுகந்த வாசனையான பலிகள் 2. சுகந்த வாசனையல்லாத பலிகள்.

பலிகளைச் செலுத்துகிறவர்களில் இரண்டு பிரிவினர் உள்ளனர். 1. தனிநபர்கள். (லேவி 1:2,10; லேவி 2:1; லேவி 3:1) 2. சபையார் எல்லோரும் (லேவி 4:13-21; லேவி 16:1-34; எண் 19)

பலிகளைச் செலுத்துவதற்கு இரண்டு விதங்கள் உள்ளன. 1. மனோற்சாகம் (லேவி 1:1-3:17) 2. கட்டளையிடப் பட்டிருக்கிற பிரகாரம் (லேவி 4:1-6:7)

பரிசுத்த வேதாகமத்தில் பலிகளை செலுத்தவேண்டிய விதம் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. சர்வாங்க தகனபலிகளை முழுவதுமாகக் தகிக்க வேண்டும். (லேவி 1:6-17; லேவி 6:8-12) அதன் ஒரு பகுதி ஆசாரியருடைய பாகமாக இருந்தால் அதைத் தகிக்கக்கூடாது.
2. போஜனப்பலிகளின் ஒரு பகுதி தகிக்கப்படவேண்டும். தகிக்கப்படாத பகுதி ஆசாரியருக்குரியது. (லேவி 2:1-16; லேவி 6:14-18)

3. ஆசாரியருக்குரிய போஜனப்பலிகள் முழுவதுமாகத் தகிக்கப்படவேண்டும். (லேவி 6:19-23)

4. சமாதானப் பலிகளின் ஒரு பகுதி சுட்டெரிக்கப்பட வேண்டும். அதின் ஒரு பகுதியை ஆசாரியரும், பலி செலுத்துகிறவரும் புசிக்க வேண்டும். (லேவி 3:1-17; லேவி 7:11-21,28-38)

5. பாவநிவாரண பலியைப் பாளயத்திற்கு உள்ளே ஒரு பகுதியையும், பாளயத்திற்குப் புறம்பே ஒரு பகுதியையும் சுட்டெரிக்க வேண்டும். (லேவி 4:1-35; லேவி 6:24-30; லேவி 8:14-17)

6. குற்ற நிவாரண பலியின் ஒரு பகுதியைச் சுட்டெரிக்க வேண்டும். மற்றொரு பகுதியைப் புசிக்கவேண்டும். (லேவி 5:1-6:7; லேவி 7:1-10)

பரிசுத்த வேதாமகத்தில் பலியாக செலுத்தப்படும் மிருகஜீவன்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மந்தை (லேவி 1:1-9; லேவி 16:1-34; எண் 19)

2. செம்மறியாடுகளும், ஆடுகளும் (லேவி 1:1-13; லேவி 3:7-11)

3. வெள்ளாடுகளும், அதன் குட்டிகளும் (லேவி 1:10-13; லேவி 4:27-35)

4. புறாக்கள் (லேவி 5:7-10; ஆதி 15:9)

5. காட்டுப்புறாக்கள் (லேவி 5:7-10)

பரிசுத்த வேதாமகத்தில் காணிக்கையாக செலுத்தப்படும் மற்ற பொருட்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மெல்லிய மாவு (லேவி 2:1-4)

2. எண்ணெயும், தூபவர்க்கமும் (லேவி 2:1-4)

3. வேவிக்கப்பட்ட அடைகளும், எண்ணெயில் பொரிக்கப்பட்ட அடைகளும் (லேவி 2:4-9)

4. விளைச்சலின் முதற்கனிகள் (லேவி 2:12-16)

5. வெள்ளி (லேவி 5:15)

6. பானங்கள் (லேவி 23:13; லேவி 29:40-41)

7. வஸ்துக்கள் (லேவி 27:1-34)

பலியாக செலுத்தப்படும் மிருகங்களைப்பற்றிய பிரமாணங்களையும் கர்த்தர் சொல்லியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. சுத்தமான மிருகஜீவன்களாக இருக்க வேண்டும். (ஆதி 8:20)

2. பழுதற்ற மிருகஜீவன்களாக இருக்க வேண்டும். (லேவி 22:18-25)

3. குறைந்தபட்சம் எட்டு வயது நிரம்பியதாக இருக்க வேண்டும். (லேவி 22:27; லேவி 23:12)

கர்த்தர் பலிசெலுத்தப்படும் இடத்தைப்பற்றியும், பலிசெலுத்த வேண்டிய விதத்தைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்.

ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில், பலிபீடத்திற்கு அருகில் வடபுறமாக பலிசெலுத்தப்படவேண்டும் (லேவி 1:11; லேவி 3:2; லேவி 6:25; லேவி 7:2)

மற்ற மிருகஜீவன்களைக் கொல்வதுபோலவே, பலி செலுத்த வேண்டும். அதன் கழுத்தை அறுத்து, அதனுடைய இரத்தத்தை ஒரு பாத்திரத்தில் பிடிக்க வேண்டும். அதன் தோல் உரிக்கப்பட்டு, அதன் மாம்சத்தை சந்துசந்தாக வெட்ட வேண்டும். (லேவி 1:5-6; லேவி 4:8-12, 19-21). அதன் இரத்தத்தைத் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாகத் தெளித்து, பலிபீடத்தின் கீழே ஊற்றிவிடவேண்டும். (லேவி 1:5,11; லேவி 3:2; லேவி 4:6,7,18).

மனுஷருடைய பாவங்களுக்கு பாவநிவாரணம் செய்வதற்காகவும், தேவனுடைய சமுகத்தில் கிட்டிச் சேர்வதற்காகவும் பலிசெலுத்தப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு காணிக்கைகளைக் கொண்டு வருகிறார்கள். கர்த்தருக்கு காணிக்கை செலுத்துவதும், பலிகளை செலுத்துவதும் பூர்வகாலம் முதலே இருந்து வரும் வழக்கமாகும். தங்களிடத்திலுள்ளது எல்லாவற்றையும், கர்த்தரே தங்களுக்கு கொடுத்திருக்கிறார் என்பதை அங்கீகரித்து, அவருக்கு நன்றி சொல்லும் வண்ணமாக, ஜனங்கள் கர்த்தருக்கு பலிசெலுத்துகிறார்கள்.

மனுஷன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, தேவமகிமையை இழந்துபோயிருக்கிறான். கர்த்தருக்கும் மனுஷனுக்கும் இடையே உள்ள ஐக்கியம் தடைபட்டிருக்கிறது. கர்த்தர் தங்களுடைய பாவங்களை மன்னிக்கவேண்டும் என்பதற்காகவும், கர்த்தரோடு தங்களுடைய ஐக்கியம் மறுபடியும் புதுப்பிக்கப்படவேண்டும் என்பதற்காகவும் ஜனங்கள் பூர்வகாலம் முதலே பலிகளை செலுத்தி வருகிறார்கள்.

மனுஷன் தன்னுடைய விருப்பத்தின் பிரகாரமாக, தன்னுடைய இஷ்டத்தின் பிரகாரமாக கர்த்தருக்கு பலிகளை செலுத்தக்கூடாது. நாம் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, அவர் கட்டளையிட்டிருக்கிற பிரகாரம், பலிகளை செலுத்தவேண்டும். அப்போதுதான் கர்த்தர் நம்முடைய பலிகளை அங்கீகரிப்பார்.

கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் நாம் பலிகளை செலுத்தும்போது, கர்த்தருடைய நாமம் மகிமைப்படும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், நம்முடைய சொந்த விருப்பத்தின் பிரகாரம் பலிகளை செலுத்தினால், கர்த்தருடைய நாமம் மகிமைப்படாது. இதனால் கர்த்தருடைய நாமம் கனமடைவதற்கு பதிலாக, கனவீனமடையும்.

ஒரு சிலர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், தங்கள் இஷ்டம்போல பலிகளை செலுத்துகிறார்கள். இதன் மூலமாக கர்த்தரைக் கனம்பண்ணுவதாக நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட பலிகளை கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார்.

மனுஷன் தன்னுடைய பாவத்திற்கு நிவாரணமாக கர்த்தருக்கு பலிசெலுத்துகிறான். காலம் நிறைவேறியபோது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்காக, தம்மையே பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்துவின் கிருபாதாரபலி கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய திட்டத்தின் பிரகாரமாகவும் உண்டாயிற்று.

விசுவாசிகளாகிய நாம், கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற நன்மைகளை நினைவுகூர்ந்து, அவருக்கு அநுதினமும் ஆவிக்குரிய பலிகளை செலுத்தவேண்டும். நாம் கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளையும், துதியின் பலிகளையும் ஏறெடுக்கவேண்டும்.

பலிசெலுத்துவது சம்பந்தமான பிரமாணங்களை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாக, இஸ்ரவேல் ஜனங்களுக்கு தம்முடைய செய்திகளை சொன்னார். அவர் மோசேயின் மூலமாக தம்முடைய பிரமாணங்களை சொல்லுகிறார்.

மோசே வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணியவுடன், கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்புகிறது. சீனாய் மலையில் இருந்த கர்த்தர், இப்போது ஆசரிப்புக்கூடாரத்தில் இருக்கிறார். கர்த்தர் இதுவரையிலும் சீனாய் மலையிலே மோசேயோடு பேசினார். இப்போது அவர் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து மோசேயோடு பேசுகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்திலே, மகாபரிசுத்த ஸ்தலத்தில், கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெட்டியிலிருக்கிற கிருபாசனத்திலிருந்து கர்த்தர் மோசேயோடு பேசுகிறார். மோசே மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியிலே இருக்கிறார். மோசேக்கும், மகாபரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையே ஒரு திரைச்சீலை மறைவாயிருக்கிறது. மோசே கர்த்தருடைய சத்தத்தை மாத்திரம் கேட்கிறார்.

கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரரை சந்திக்கிறார். இது கர்த்தருடைய வாசஸ்தலம். இந்த வாசஸ்தலத்திலிருந்து கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் ஜெபங்களுக்கும், வேண்டுதல்களுக்கும், விண்ணப்பங்களுக்கும் செவிகொடுக்கிறார். அவர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரோடு பேசுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியிலிருந்து கர்த்தரை ஆராதிக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய சித்தத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய நீதிநெறி பிரமாணத்தைக் கொடுத்தபோது, இடியும் மின்னலும் உண்டாயிற்று. கர்த்தர் அக்கினியின் நடுவிலிருந்து அவர்களோடு பேசினார்.

இப்போதோ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு பாவநிவாரண பலிகள் சம்பந்தமான பிரமாணத்தை சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைகள் கிருபாசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறது. கர்த்தருடைய நீதிநெறி பிரமாணம் சொல்லப்பட்டபோது, இடியும் மின்னலுமாகிய பெரும் சத்தம் உண்டாயிற்று. இப்போதோ கர்த்தர் தம்முடைய மென்மையான குரலில் சாந்தமாகப் பேசுகிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் கிருபையுள்ளது என்பதற்கு கர்த்தருடைய மென்மையான சத்தம் அடையாளமாயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை இஸ்ரவேல் புத்திரருக்கு ஜீவனையும், ஆறுதலையும், சமாதானத்தையும் கொடுக்கிறது.

கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிடுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லவேண்டியது என்னவென்றால், உங்களில் ஒருவன் கர்த்தருக்குப் பலி செலுத்த வந்தால், மாட்டுமந்தையிலாவது ஆட்டுமந்தையிலாவது ஒரு மிருகத்தைத் தெரிந்தெடுத்து, பலிசெலுத்த வேண்டும்" (லேவி 1:1,2) என்று சொல்லுகிறார்.

காளை

லேவி 1:3-9

லேவி 1:3. அவன் செலுத்துவது மாட்டுமந்தையிலிருந்து எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலியானால், அவன் பழுதற்ற ஒரு காளையைச் செலுத்துவானாக; கர்த்தருடைய சந்நிதியில் தான் அங்கிகரிக்கப்படும்படி, அவன் அதை ஆசரிப்புக்கூடாரவாசலில் கொண்டுவந்து,

லேவி 1:4. அது தன் பாவநிவிர்த்திக்கென்று அங்கிகரிக்கப்படும்படி தன் கையை அதின் தலையின்மேல் வைத்து,

லேவி 1:5. கர்த்தருடைய சந்நிதியில் அந்தக் காளையைக் கொல்லக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தை எடுத்து, அதை ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

லேவி 1:6. பின்பு அவன் அந்தச் சர்வாங்க தகனபலியைத் தோலுரித்து, அதைச் சந்துசந்தாகத் துண்டிக்கக்கடவன்.

லேவி 1:7. அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் பலிபீடத்தின்மேல் அக்கினியைப் போட்டு, அக்கினியின்மேல் கட்டைகளை அடுக்கி,

லேவி 1:8. அவன் குமாரராகிய ஆசாரியர்கள், துண்டங்களையும் தலையையும் கொழுப்பையும் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் அடுக்கிவைக்கக்கடவர்கள்.

லேவி 1:9. அதின் குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரினால் கழுவுவானாக; அவைகளையெல்லாம் ஆசாரியன் பலி பீடத்தின் மேல் சர்வாங்க தகனபலியாகத் தகனிக்கக்கடவன்; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி.

ஒருவன் ஐசுவரியமுள்ளவனாகவும், கர்த்தருக்கு பெரிய காணிக்கை செலுத்த திராணியுமுள்ளவனாகவுமிருப்பானென்றால், அவன் மாட்டு மந்தையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு காளையை கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக செலுத்தவேண்டும். கர்த்தருடைய சந்நிதியில் தான் அங்கீகரிக்கப்படும்படி, அவன் அந்தக் காளையை ஆசரிப்புக்கூடாரவாசலில் கொண்டுவரவேண்டும் *(லேவி 1:3)*.

"அவன் அதை ஆசரிப்புக்கூடார வாசலில் கொண்டுவந்து" என்னும் வாக்கியம், மூலஎபிரெய பாஷையில் "அவன் அதை மனோற்சகாமாக கொண்டு வந்து" என்றிருக்கிறது. தேவனை ஆராதிப்பதும், தன்னுடைய பாவங்களுக்காகத் தேவனிடத்தில் பிராயச்சித்தம் பண்ணுவதும் அவரவர் மனோற்சாகமாகவும் தன்னுடைய சொந்த தீர்மானத்தின் பிரகாரமாகவும் செய்ய வேண்டிய காரியம். *(லேவி 1:2)*

அவன் செலுத்துகிற சர்வாங்க தகனபலி பழுதற்றதாகவும், அது காளையாகவும் இருக்கவேண்டும். அந்தக் காளையை அவன் தன்னுடைய மாட்டு மந்தையிலிருந்து எடுக்கவேண்டும். காளைக்கு சொந்தக்காரன் அதை கர்த்தருக்கு மனப்பூர்வமான காணிக்கையாக கொண்டு வரவேண்டும்.

கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தப்படும் காணிக்கையை கர்த்தர் அங்கீகரிக்கவேண்டும். காணிக்கை கொண்டு வருகிறவனையும் கர்த்தர் அங்கீகரிக்கவேண்டும். கர்த்தர் தமக்கு பிரியமான காணிக்கையை மாத்திரமே அங்கீகரிப்பார். மனவிசனத்தோடும், மனப்பூர்வமாக அல்லாமல் கட்டாயத்தோடும் கொண்டு வரும் காணிக்கையை கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார். அன்பினால் செலுத்தப்படும் காணிக்கையே கர்த்தருக்கு பிரியமானது.

கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக செலுத்துகிறவன், அந்தக் காளையை ஆசரிப்புக்கூடார வாசலிலே கொண்டு வரவேண்டும். அங்கே சர்வாங்க தகனபலிகளை செலுத்தும் வெண்கல பலிபீடம் இருக்கிறது. அது பலியை சுத்தப்படுத்தும் பலிபீடம்.

கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியை செலுத்துகிறவன் தன் பாவநிவிர்த்திக்கென்று தன் கையை அந்தக் காளையின் தலையின்மேல் வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் அதைக் கொல்லவேண்டும் *(லேவி 1:4,5)*.

பலிசெலுத்துகிறவர் தன் கையைப் பலிசெலுத்தப்படும் மிருகஜீவனின் தலையின்மீது வைக்கவேண்டும். அந்த மிருகத்தைக் கொல்லும்போது பலிசெலுத்துகிறவர் தன்னுடைய பாவங்களை அறிக்கை பண்ண வேண்டும் *(லேவி 3:2,8,13; லேவி 4:4,15,24,29,33; லேவி 16:21)*. இது ஒரு அடையாளம். இதன் விவரம் வருமாறு :

1. தன்னுடைய சொந்த பலியாக இது செலுத்தப்படுகிறது.

2. தன்னுடைய பாவங்களின் நிவாரணமாக இந்தப் பலி செலுத்தப்படுகிறது.

3. தன்னுடைய பாவத்தினால் பாவம் செய்தவன் மரணத்திற்குப் பாத்திரவானாக இருக்கிறான்.

4. நியாயப்பிரமாணத்தை மீறியதினால் இவன் மரிக்க வேண்டியவனாக இருக்கிறான்.

5. தன்னுடைய பாவங்களை மன்னிக்குமாறு இவன் தேவனிடம் விண்ணப்பம் பண்ணுகிறான்.

6. அவனுடைய பாவத்திற்குப் பரிகாரமாக அவனுக்குப் பதிலாக ஒரு பாவமும் அறியாத ஒரு மிருகஜீவன் பதிலீடாக மரிப்பதைக் கர்த்தர் அங்கீகரிக்கிறார்.

7. வரப்போகிற இரட்சகரில் அவன் நம்பிக்கை வைக்கிறான். இரட்சகர் பாவியினுடைய ஸ்தானத்தில் பாவிக்காக மரித்தார். *(யோவான் 3:16; எபி 2:9-18; 1பேதுரு 2:24)*.

பலிசெலுத்துகிறவனே காளையைக் கொல்லுகிறான். ஆசாரியர் இரத்தத்தைப் பெற்றுக் கொண்டு அதைப் பலிபீடத்தின்மீது சுற்றிலும் தெளிக்கிறார்.

பலிசெலுத்துகிறவன் காளையை ஆசரிப்புக்கூடார வாசலிலே அதை பலியாக செலுத்தவேண்டும். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னத்திற்குள் பிரவேசிப்பதற்கு தான் தகுதியற்றவன் என்பதையும், தன்னுடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்பட வேண்டியதாயிருக்கிறது என்பதையும் அவன் இதன் மூலமாக அங்கீகரிக்கிறான்.

பலிசெலுத்துகிறவன் தன்னுடைய பாவநிவிர்த்திகென்று, காளையை சர்வாங்க தகனபலியாக செலுத்துகிறான். பலிசெலுத்தாமல், தன்னால் தேவனோடு உடன்படிக்கை பண்ண முடியாது என்பதையும் அவரோடு ஐக்கியமாகயிருக்க முடியாது என்பதையும் அவன் அங்கீகரிக்கிறான்.

பலிசெலுத்துகிறவன் தன் கையை அந்தக் காளையின் தலையின்மேல் வைக்கிறான். இதன் மூலமாக அவன் தனக்குள்ளது எல்லாவற்றையும், அந்தக் காளையின்மீது வைத்து, அதை கர்த்தருடைய சமுகத்திலே ஒப்புக்கொடுக்கிறான்.

தன்னுடைய பாவத்தின் நிமித்தமாக, தான் மரணத்திற்கு பாத்திரவான் என்பதை பலிசெலுத்துகிறவன் அங்கீகரிக்கிறான். கர்த்தர் விரும்புவாரென்றால், தன்னுடைய பாவத்திற்காக தான் மரித்துப்போகவும் ஆயத்தமாயிருப்பதை அவன் அங்கீகரிக்கிறான்.

கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படும் இந்தப் பலியினால் மாத்திரமே தன்னுடைய பாவம் நிவிர்த்தி பண்ணப்படும் என்பதையும் பலிசெலுத்துகிறவன் அங்கீகரிக்கிறான். கர்த்தரே பாவநிவிர்த்திக்கென்று சர்வாங்க தகனபலியை நியமனம் செய்திருக்கிறார். இது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகாபிரதான பலிக்கு அடையாளமாயிருக்கிறது. முழுஉலகத்தின் பாவத்தையும் சுமந்த தீர்க்க, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, கல்வாரி சிலுவையிலே தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார்.

ஒரு மனுஷனுடைய குறிப்பிட்ட பாவம் மன்னிக்கப்படுவதற்காக சர்வாங்க தகனபலி செலுத்தப்படவில்லை. பாவம் நிவிர்த்தி பண்ணப்படவேண்டுமென்றால், கர்த்தருடைய சமுகத்திலே பாவநிவாரண பலியை செலுத்தவேண்டும். ஒவ்வொரு விதமான பாவத்திற்கும், ஒவ்வொரு விதமான பாவநிவாரண பலி நியமிக்கப்பட்டிருக்கிறது. சர்வாங்க தகனபலியானது மனுஷருடைய பாவத்தை பொதுவாக நிவிர்த்தி பண்ணும் பலியாகும்.

ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தை எடுத்து, அதை ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கவேண்டும் (லேவி 1:5). அந்த மிருகத்திற்கு அதன் இரத்தமே ஜீவனாகயிருக்கிறது. காளையின் இரத்தம், பலிசெலுத்துகிற ஆத்துமாவின் பாவநிவர்த்திக்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

அந்தச் சர்வாங்க தகனபலியைத் தோலுரித்து, அதைச் சந்துசந்தாகத் துண்டிக்கவேண்டும். அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் பலிபீடத்தின்மேல் அக்கினியைப் போட்டு, அக்கினியின்மேல் கட்டைகளை அடுக்கி, அவன் குமாரராகிய ஆசாரியர்கள், துண்டங்களையும் தலையையும் கொழுப்பையும் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் அடுக்கிவைக்கவேண்டும். அதின் குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரினால் கழுவவேண்டும்; அவைகளையெல்லாம் ஆசாரியன் பலிபீடத்தின் மேல் சர்வாங்க தகனபலியாகத் தகனிக்கக்வேண்டும் (லேவி 1:6-9).

பலிசெலுத்துகிறவனே அந்த சர்வாங்க தகனபலியை கர்த்தருடைய சந்நிதியில் கொன்று, அதை தோலுரிக்கவேண்டும். அவனே அதை சந்து சந்தாக துண்டிக்கவும் வேண்டும்.

ஆசாரியன் சந்துசந்தாகத் துண்டிக்கப்பட்ட மாம்சத்தைப் பலிசெலுத்துகிறவனிடமிருந்து பெற்றுக் கொள்கிறான். (லேவி 1:6-9; லேவி 7:8; 2நாளா 29:34).

இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி. ஒரு மிருகத்தின் மாம்சத்தை அக்கினியில் போட்டு தகனிக்கும்போது, அதன் வாசனை சுகந்த வாசனையாகயிருக்காது. ஆனாலும் இதுவே கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலியாயிருக்கிறது. ஆசாரியர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, அவருக்கு சர்வாங்க தகனபலியை செலுத்துகிறார். இந்தப் பலியானது கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது.

சர்வாங்க தகனபலியானது கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலியாயிருக்கிறது. அதுபோலவே இயேசுகிறிஸ்துவின் பலிமரணமானது பிதாவுக்கு பிரியமாயிருக்கிறது. கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக செலுத்துகிறவன், கர்த்தருடைய சந்நிதியில் தான் அங்கீகரிக்கப்படும்படி, அதை ஆசரிப்புக்கூடார வாசலிலே செலுத்துகிறான். அவன் சர்வாங்க தகனபலியை, தன் பாவநிவர்த்திக்கென்று செலுத்துகிறான். இதன் மூலமாக கர்த்தரோடு ஒப்புரவாகும் சிலாக்கியம் தனக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறான்.

கிறிஸ்துவானவர் தம்மையே கல்வாரி சிலுவையிலே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார். "கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்" (எபே 5:2).

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருக்கு ஆவிக்கேற்ற பலிகளை செலுத்தவேண்டும். இயேசுகிறிஸ்துவின் மூலமாக தேவன் நம்மை அங்கீகரிக்கும்படியாக, நாம் ஆவிக்கேற்ற பலிகளை செலுத்தவேண்டும்.

"ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (1பேது 2:5).

ஆடு, பறவை
லேவி 1:10-17

லேவி 1:10. அவன் செலுத்துவது செம்மறியாட்டு மந்தையிலுள்ள ஆடுகளிலாவது வெள்ளாட்டு மந்தையிலுள்ள ஆடுகளிலாவது எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலியானால், பழுதற்ற ஒரு கடாவைக் கொண்டுவந்து,

லேவி 1:11. கர்த்தருடைய சந்நிதியில் பலிபீடத்தின் வடபுறத்தில் அதைக் கொல்லக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

லேவி 1:12. பின்பு அவன் அதைச் சந்துசந்தாகத் துண்டித்து, அதின் தலையையும் கொழுப்பையும் கூடவைப்பானாக; அவைகளை ஆசாரியன் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் அடுக்கி வைக்கக்கடவன்.

லேவி 1:13. குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரினால் கழுவுவானாக; அவைகளையெல்லாம் ஆசாரியன் கொண்டுவந்து பலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன்; இது சர்வாங்க தகனபலி; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி.

லேவி 1:14. அவன் கர்த்தருக்குச் செலுத்துவது பறவைகளிலிருந்து எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலியானால், காட்டுப் புறாக்களிலாவது புறாக்குஞ்சுகளிலாவது எடுத்துச் செலுத்தக்கடவன்.

லேவி 1:15. அதை ஆசாரியன் பலிபீடத்தண்டையில் கொண்டுவந்து, அதின் தலையைக் கிள்ளி, பலிபீடத்தில் தகனித்து, அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின் பக்கத்தில் சிந்தவிட்டு,

லேவி 1:16. அதின் இரைப்பையை அதின் மலத்தோடுங்கூட எடுத்து, அதைப் பலி பீடத்தண்டையில் கீழ்புறமாகச் சாம்பல் இருக்கிற இடத்திலே எறிந்துவிட்டு,

லேவி 1:17. பின்பு அதின் செட்டைகளுடன் அதை இரண்டாக்காமல் பிளப்பானாக; பின்பு ஆசாரியன் அதைப் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் தகனிக்கக்கடவன்; இது சர்வாங்க தகனபலி; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி.

சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படும் ஆடு அல்லது ஒரு பறவையைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக ஒரு காளையை செலுத்த ஒருவனுக்கு திராணியில்லாதபோது, அவன் ஒரு ஆட்டுக்கடாவை, சர்வாங்க தகனபலியாக செலுத்தலாம்.

அவன் செலுத்துவது செம்மறியாட்டு மந்தையிலுள்ள ஆடுகளிலாவது வெள்ளாட்டு மந்தையிலுள்ள ஆடுகளிலாவது எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலியானால், பழுதற்ற ஒரு கடாவைக் கொண்டுவரவேண்டும் (லேவி 1:10).

பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலியாகத் தகனிக்கப்படும் மிருகஜீவன் பழுதற்றதாகவும், ஆணாகவும் இருக்க வேண்டும். ஒருசில இடங்களில் மிருகஜீவன்களில் பெண்களும் பலியிடப்பட்டிருக்கின்றன. ஆனாலும், இங்கு பழுதற்ற ஆண் மிருகஜீவனே அங்கீகரிக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் பதிலீட்டிற்கு இது அடையாளமாக இருக்கிறது (எபி 2:9-18; ஏசா 53).

கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக காளையையோ அல்லது ஆட்டுக்கடாவையோ செலுத்துவதற்கு திராணியில்லையென்றால், அவன் ஒரு புறாக்குஞ்சை கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக செலுத்தலாம்.

அவன் கர்த்தருக்குச் செலுத்துவது பறவைகளிலிருந்து எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலியானால், காட்டுப் புறாக்களிலாவது புறாக்குஞ்சுகளிலாவது எடுத்துச் செலுத்தவேண்டும் (லேவி 1:14).

கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படும் ஆட்டுக்கடா அமைதியான மிருகம். அது பிறருக்கு தீங்கு செய்யாது. அதுபோலவே காட்டுப்புறாவும் அமைதியான பறவை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஆட்டுக்குட்டியைப்போல கிறிஸ்துவானவரும் கல்வாரி சிலுவையில் தம்மை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தபோது ஒரு ஆட்டுக்குட்டியைப்போல அமைதியாயிருந்தார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாமும் சாந்தகுணமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

கர்த்தருக்கு ஆட்டுக்கடாவை சர்வாங்க தகனபலியாக செலுத்தும்போது, காளையை பலிசெலுத்துவதுபோலவே செலுத்தவேண்டும். கர்த்தருடைய சந்நிதியில் பலிபீடத்தின் வடபுறத்தில் அந்த ஆட்டுக்கடாவை கொல்லவேண்டும். அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கவேண்டும் (லேவி 1:11).

பலிசெலுத்துகிறவன், கடாவை கர்த்தருடைய சந்நிதியில், பலிபீடத்தின் வடபுறத்தில் கொல்லவேண்டும். தேவனுடைய சிங்காசனம் உலகத்தின் வடபகுதியில் இருக்கிறது (ஏசா 14:12-14; சங் 75:6-7).

பின்பு அவன் அதைச் சந்துசந்தாகத் துண்டித்து, அதின் தலையையும் கொழுப்பையும் கூடவைக்கவேண்டும். அவைகளை ஆசாரியன் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் அடுக்கி வைக்கக்வேண்டும் (லேவி 1:12).

பலிசெலுத்துகிறவனே அந்தக் கடாவை சந்துசந்தாகத் துண்டிக்கவேண்டும். (லேவி 1:2-6,10-13,14-17).

குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரினால் கழுவவேண்டும் அவைகளையெல்லாம் ஆசாரியன் கொண்டு வந்து பலிபீடத்தின்மேல் தகனிக்கவேண்டும்; இது சர்வாங்க தகனபலி; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி (லேவி 1:13).

கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக காளையையோ அல்லது ஆட்டுக்கடாவையோ செலுத்த திராணியில்லாதவர்கள், காட்டுப் புறாக்களிலாவது புறாக்குஞ்சுகளிலாவது எடுத்துச் செலுத்தவேண்டும் (லேவி 1:14). இதுவும் கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலி என்று அழைக்கப்படுகிறது.

சர்வாங்க தகனபலியாக காளையையும், ஆட்டுக்கடாவையும் செலுத்துவதுபோல, காட்டுபுறாவையும் சர்வாங்க தகனபலியாக செலுத்தவேண்டும்.

அவன் கர்த்தருக்குச் செலுத்துவது பறவைகளிலிருந்து எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலியானால், காட்டுப் புறாக்களிலாவது புறாக்குஞ்சுகளிலாவது எடுத்துச் செலுத்த வேண்டும் (லேவி 1:14).

அதை ஆசாரியன் பலிபீடத்தண்டையில் கொண்டுவந்து, அதின் தலையைக் கிள்ளி, பலிபீடத்தில் தகனித்து, அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின் பக்கத்தில் சிந்தவிட்டு, அதின் இரைப்பையை அதின் மலத்தோடுங்கூட எடுத்து, அதைப் பலிபீடத்தண்டையில் கீழ்புறமாகச் சாம்பல் இருக்கிற இடத்திலே எறிந்துவிட்டு, பின்பு அதின் செட்டைகளுடன் அதை இரண்டாக்காமல் பிளப்பானாக; பின்பு ஆசாரியன் அதைப் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் தகனிக்க வேண்டும்; இது சர்வாங்க தகனபலி; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி (லேவி 1:15-17).

சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படும் பறவையை ஆசாரியன் பலிபீடத்தண்டையில் கொண்டுவந்து, அதின் தலையைக் கிள்ளவேண்டும். அதன் பின்பு அதைப் பலிபீடத்தில் தகனித்து, அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின் பக்கத்தில் சிந்தவிடவேண்டும். ஆசாரியனே பறவைகளிலிருந்து எடுக்கப்பட்ட சர்வாங்க தகனபலிகளில் எல்லாக் காரியங்களையும் செய்கிறான். (லேவி 1:15-17) பெரிய மிருக ஜீவன்களைப் பலியிடும்போது பலியிடுகிறவர் ஆசாரியருக்குப் பல உதவிகளைச் செய்கிறார் (லேவி 1:5-6,10-13).

பறவைகளின் சிறகுகள், சாம்பல்கள், மீதமுள்ள பகுதிகள் ஆகியவை பலிசெலுத்தப்பட்டு முடிந்த பின்பு, பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோகப்படும். இதுவே சாம்பல் இருக்கிற இடம் (லேவி 4:12,21).

காளைக்கும் ஆட்டுக்கடாவுக்கும் இருப்பதுபோல காட்டுபுறாவுக்கு கொம்புகள் இல்லை. கால்களில் குளம்புகளில் இல்லை. ஆனாலும் கர்த்தர் தகனபலியாக செலுத்தப்படும் காட்டுபுறாவையும் அங்கீகரிக்கிறார். இதுவும் கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலியாயிருக்கிறது.

நாம் கர்த்தருக்கு எதை பலியாக செலுத்துகிறோம் என்பது முக்கியமல்ல. அதை எப்படி செலுத்துகிறோம் என்பதே முக்கியம். நம்முடைய இருதயத்தில் கர்த்தர்மீது அன்பும் மனுஷர்மீது பிரியமும் இருக்கவேண்டும்.

"முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப்பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூருகிறதும், தன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல் பிறனிடத்தில் அன்புகூருகிறதுமே சர்வாங்க தகனம் முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது" (மாற் 12:33).

கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிட்டு, அவரை நோக்கி, சர்வாங்க தகனபலி சம்பந்தமான கட்டளைகளை சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. சர்வாங்க தகனபலி செலுத்துமாறு நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லு. (லேவி 1:2).

2. அவன் பழுதற்ற ஒரு காளையைச் செலுத்துவானாக (லேவி 1:3).

3. பலிசெலுத்துகிறவன் அதை மனோற்சகாமாகச் செலுத்த வேண்டும்.

4. அது தன் பாவநிவிர்த்திக்கென்று அங்கீகரிக்கப்படும்படி தன் கையை அதின் தலையின்மேல் வைக்க வேண்டும் (லேவி 1:4).

5. கர்த்தருடைய சந்நிதியில் அந்தக் காளையைக் கொல்லக்கடவன். (லேவி 1:5).

6. ஆசாரியர்கள் அதின் இரத்தத்தை எடுத்து, அதை ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

7. பலிசெலுத்துகிறவன் அந்தச் சர்வாங்க தகனபலியைத் தோலுரித்து, அதைச் சந்துசந்தாகத் துண்டிக்கக்கடவன். (லேவி 1:6).

8. ஆசாரியர் பலிபீடத்தின்மேல் அக்கினியைப் போட்டு, அக்கினியின்மேல் கட்டைகளை அடுக்கி, துண்டங்களையும் தலையையும் கொழுப்பையும் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் அடுக்கி வைக்கக்கடவர்கள். அதின் குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரினால் கழுவுவானாக; அவைகளையெல்லாம் ஆசாரியன் பலிபீடத்தின் மேல் சர்வாங்க தகனபலியாகத் தகனிக்கக்கடவன்.

9. பழுதற்ற செம்மறியாடையாவது, வெள்ளாடையாவது பலிசெலுத்தக் கொண்டுவர வேண்டும் (லேவி 1:10).

10. கர்த்தருடைய சந்நிதியில் பலிபீடத்தின் வடபுறத்தில் பலிசெலுத்துகிறவன் கொல்லக்கடவன்; (லேவி 1:11).

11. ஆசாரியர்கள் அதின் இரத்தத்தைப் பலி பீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக் கடவர்கள்.

12. பலியிடுகிறவன் அதைச் சந்துசந்தாகத் துண்டிக்கவேண்டும் (லேவி 1:12).

13. அவைகளை ஆசாரியன் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் அடுக்கி வைக்கக்கடவன். குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரினால் கழுவுவானாக; அவைகளையெல்லாம் ஆசாரியன் கொண்டுவந்து பலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன்; (லேவி 1:12-13).

14. பலிசெலுத்துகிறவன் காட்டுப் புறாக்களிலாவது புறாக்குஞ்சுகளிலாவது எடுத்துச் செலுத்தக்கடவன் (லேவி 1:14).

15. அதை ஆசாரியன் பலிபீடத்தண்டையில் கொண்டுவந்து, அதின் தலையைக் கிள்ளி, பலிபீடத்தில் தகனித்து, அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின் பக்கத்தில் சிந்தவிட்டு, அதின் இரைப்பையை அதின் மலத்தோடுங்கூட எடுத்து, அதைப் பலிபீடத்தண்டையில் கீழ்புறமாகச் சாம்பல் இருக்கிற இடத்திலே எறிந்துவிட்டு, பின்பு அதின் செட்டைகளுடன் அதை இரண்டாக்காமல் பிளப்பானாக; பின்பு ஆசாரியன் அதைப் பலிபீடத்திலுள்ள அக்கினியில் இருக்கிற கட்டைகளின்மேல் தகனிக்கக்கடவன். (லேவி 1:15-17 ; லேவி 15:10).

சர்வாங்க தகனபலி கிறிஸ்துவிற்கு அடையாளமாகும். கிறிஸ்துவானவர் தம்மை ஒரு பாவமும் அற்றவராகப் பழுதற்றவராகத் தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்தார். மனுஷருடைய பாவங்களுக்கு பரிகாரமாக இயேசுகிறிஸ்து மரித்தார். மனுஷனுடைய பாவங்களுக்காக மனுஷன் மரிக்கவேண்டிய ஸ்தானத்தில் இயேசுகிறிஸ்து மரித்தார். (யோவான் 3:16; எபி 2:9-18; எபி 9:11-14; எபி 10:1-18; 1பேதுரு 1:18-23; 1பேதுரு 2:24).

சர்வாங்க தகனபலியில் தோலைத் தவிர, மற்ற எல்லாமே தகனிக்கப்படுகிறது. மற்ற பலிகளில் ஆசாரியருக்காக ஒரு பகுதி ஒதுக்கப்படும். ஆனால் சர்வாங்கதகனபலியில் ஆசாரியருக்கு ஒன்றும் ஒதுக்கப்படாமல், எல்லாமே தகனிக்கப்படுகிறது.

சர்வாங்க தகனபலி கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாயிருக்கிறது. கர்த்தர் இதில் பிரியமாக இருக்கிறார். ஆகையினால், சர்வாங்க தகனபலிக்குக் "கர்த்தருக்குச் சுகந்தவாசனையான தகனபலி" என்னும் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. (ஆதி 8:21). இவையெல்லாம் கிறிஸ்துவிற்கு அடையாளமாகும். கிறிஸ்துவானவர் தேவனுக்குத் தம்மை மரணபரியந்தம் ஒப்புக்கொடுத்தார். தம்மையே பலியாக அர்ப்பணித்தார். இயேசுகிறிஸ்து பாவத்தைச் சுமந்தார் என்பதற்கு சுகந்த வாசனையல்லாத பலிகள் அடையாளமாகும் (எபே 5:2).

2 அதிகாரம்

கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தும் போஜனபலியைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மெல்லிய மாவு, எண்ணெய், தூபவர்க்கம் ஆகியவை (லேவி 2:1). அடுப்பில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலி (லேவி 2:4). தட்டையான சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலி (லேவி 2:5,6). பொரிக்குஞ் சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலி (லேவி 2:7).

போஜனபலியை நிர்வாகம்பண்ண வேண்டிய விதம் (லேவி 2:2,3). பொரிக்குஞ் சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலியை நிர்வாகம்பண்ண வேண்டிய விதம் (லேவி 2:8-10). போஜனபலியை புளித்த மாவினால் செய்யக்கூடாது. அதில் தேனை சேர்க்கக்கூடாது (லேவி 2:11,12). போஜனபலி உப்பினால் சாரமாக்கப்படவேண்டும் (லேவி 2:13).

போஜனபலியாக செலுத்தப்படும் முதற்பலன்களைப்பற்றிய பிரமாணம் (லேவி 2:14-16).

போஜன பலி
லேவி 2:1-10

லேவி 2:1. ஒருவன் போஜன பலியாகிய காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்த வேண்டுமானால், அவன் காணிக்கை மெல்லிய மாவாயிருப்பதாக; அவன் அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின் மேல் தூபவர்க்கம் போட்டு,

லேவி 2:2. அதை ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களிடத்தில் கொண்டுவருவானாக; அப்பொழுது ஆசாரியன் அந்த மாவிலும் எண்ணெயிலும் ஒரு கைப்பிடி நிறைய தூபவர்க்கம் எல்லாவற்றோடும் எடுத்து, அதைப் பலிபீடத்தின்மேல் ஞாபகக்குறியாகத் தகனிக்கக் கடவன்; அது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி.

லேவி 2:3. அந்தப் போஜனபலியில் மீதியாயிருப்பது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; கர்த்தருக்கு இடும் தகனபலிகளில் இது மகா பரிசுத்தமானது.

லேவி 2:4. நீ படைப்பது அடுப்பில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலியானால், அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் செய்த புளிப்பில்லா அதிரசங்களாயாவது, எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளாயாவது இருப்பதாக.

லேவி 2:5. நீ படைப்பது தட்டையான சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலியானால், அது எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா மெல்லிய மாவினால் செய்யப்பட்டதாயிருப்பதாக.

லேவி 2:6. அதைத் துண்டு துண்டாகப் பிட்டு, அதின்மேல் எண்ணெய் வார்ப்பாயாக; இது ஒரு போஜனபலி.

லேவி 2:7. நீ படைப்பது பொரிக்குஞ் சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலியானால், அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் செய்யப்படுவதாக.

லேவி 2:8. இப்படிச் செய்யப்பட்ட போஜனபலியைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாக; அது ஆசாரியனிடத்தில் கொண்டு வரப்படும்போது, அவன் அதைப் பலி பீடத்தண்டையில் கொண்டுவந்து,

லேவி 2:9. அந்தப் போஜனபலியிலிருந்து ஆசாரியன் ஞாபகக்குறியாக ஒரு பங்கை எடுத்துப் பலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன்; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி.

லேவி 2:10. இந்தப் போஜனபலியில் மீதியானது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; கர்த்தருக்கு இடும் தகனங்களில் இது மகா பரிசுத்தமானது.

இந்த அதிகாரத்தில் போஜனபலியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதியாகமத்தில் முதன் முதலாக போஜனபலி செலுத்தப்பட்டதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. "காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான்" (ஆதி 4:3).

கர்த்தரிடத்தில் தான் வைத்திருக்கிற பக்தியை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காகவும், கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற ஏராளமான நன்மைகளுக்கு அவருக்கு நன்றி சொல்லும் வண்ணமாகவும், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு போஜனபலியை செலுத்துகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு போஜனபலியைப்பற்றிய பிரமாணத்தை சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரில் சாதாரண ஏழைகளாகயிருக்கிறவர்கள் போஜனபலியை செலுத்துகிறார்கள். இவர்களால் காளை வெள்ளாட்டுக்கடா போன்ற மிருகங்களை சர்வாங்க தகனபலியாக செலுத்த முடியாது. அந்த அளவுக்கு இவர்களிடத்தில் பொருளாதார வசதி இருக்காது.

இஸ்ரவேல் ஜனத்தாரில் சாதாரண ஏழைகளாகயிருக்கிறவர்கள் தங்கள் அன்றாட போஜனத்திற்காக அப்பம் புசிக்கிறார்கள். இவை மெல்லிய மாவினாலும், எண்ணெயினாலும் செய்யப்பட்டவை. தாங்கள் அன்றாடம் புசிக்கிற அப்பங்களை, இவர்கள் கர்த்தருக்கு போஜனபலியாக செலுத்துகிறார்கள். கர்த்தரும் இவர்கள் செலுத்துகிற போஜனபலியை அங்கீகரிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் தங்களுக்கு போஜனம் கொடுத்து, தங்களை பராமரிக்கிறார் என்பதை இஸ்ரவேல் ஜனத்தார் நன்றியுள்ள இருதயத்தோடு அங்கீகரிக்கிறார்கள். தங்களுடைய போஜனத்திற்கு தாங்கள் கர்த்தரையே நம்பியிருப்பதையும் இதன் மூலமாக உறுதிபண்ணுகிறார்கள். தங்களுக்கு தேவையான அன்றாட போஜனத்தை கர்த்தர் தாமே தமது கிருபையினாலே தங்களுக்கு கொடுக்கவேண்டும் என்று பயபக்தியோடு விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் தங்களுக்கு போஜனம் கொடுக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் அந்தப் போஜனத்தை கர்த்தருக்கு ஸ்தோத்திரம்பண்ணி புசிக்கிறார்கள். அதே வேளையில் புசிப்பதற்கு அப்பமில்லாமல் பசியோடிருக்கும் தரித்திரரை நினைவுகூர்ந்து, தங்களிடத்திலுள்ள போஜனத்தை அவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கிறார்கள். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். கர்த்தர் தாம் பட்ட கடனை திருப்பி செலுத்துவார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு போஜனபலியை செலுத்தும்போது, கர்த்தர் அவர்களுடைய பலியை அங்கீகரிக்கிறார். தமக்கு செலுத்தப்படும் போஜனபலியானது எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும் என்பதையும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். கானான் தேசத்தில் மெல்லிய மாவும், எண்ணெயும் தாரளமாய்க் கிடைக்கிறது.

"உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணுகிறார்; அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுகளும் ஏரிகளுமுள்ள தேசம்; அது கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சச்செடிகளும் அத்திமரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசம்; அது ஒலிவமரங்களும், எண்ணெயும் தேனுமுள்ள தேசம். அது தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்கதும் ஒன்றும் உனக்குக் குறைவு படாததுமான தேசம்; அது கல்லுகள் இரும்பாயிருக்கிறதும், செம்பு வெட்டி எடுக்கத்தக்க மலைகளுள்ளதுமான தேசம்" (உபா 8:7-9).

கர்த்தருக்கு போஜனபலியாகிய காணிக்கையை செலுத்துகிறவர், அதை மெல்லிய மாவாக செலுத்தவேண்டும். அந்த மாவின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மேல் தூபவர்க்கம் போடவேண்டும்.

கர்த்தர் இந்த வசனப்பகுதியில் நான்குவிதமான போஜனபலிகளைப்பற்றிச் சொல்லுகிறார். அவையாவன : 1. அடுப்பில் சுடப்படாத மெல்லியமாவு 2. அடுப்பில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலி. 3. தட்டையான சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலி. 4. பொரிக்குஞ் சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலி.

தமக்கு காணிக்கையாக செலுத்தப்படும் போஜனபலியானது, எவ்வாறு செலுத்தப்படவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

"போஜனபலியாகிய காணிக்கை மெல்லிய மாவாயிருப்பதாக; அவன் அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின் மேல் தூபவர்க்கம் போட்டு, அதை ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களிடத்தில் கொண்டுவருவானாக; அப்பொழுது ஆசாரியன் அந்த மாவிலும் எண்ணெயிலும் ஒரு கைப்பிடி நிறைய தூபவர்க்கம் எல்லாவற்றோடும் எடுத்து, அதைப் பலிபீடத்தின்மேல் ஞாபகக்குறியாகத் தகனிக்கக் கடவன்; அது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி" (லேவி 2:1,2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

போஜனபலி மிருகஜீவன்களின் மாம்சத்தைக் குறிக்காது. (லேவி 1:1-17). அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின் மேல் தூபவர்க்கம் போடப்பட்டிருக்கும். ஞாபகக்குறியாகப் போஜனபலியின் ஒரு பகுதி தகனிக்கப்படும். (லேவி 2:2) மீதியாயிருப்பது ஆசாரியருடைய ஊழியங்களுக்காக அவர்களைச் சேரும். (லேவி 2:3). மெல்லிய மாவு என்பது கோதுமை மாவைக்குறிக்கிறது.

கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தப்படும் போஜனபலிகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. மெல்லியமாவு, எண்ணெய், தூபவர்க்கம் (லேவி 2:1-3)

2. புளிப்பில்லாத அதிரசம் (லேவி 2:4)

3. புளிப்பில்லாத அடை (லேவி 2:5-6)

4. எண்ணெயில் பொறிக்கப்பட்ட அடை (லேவி 2:7-9)

5. விளைச்சலின் முதற்கனி. (லேவி 2:12-16)

கர்த்தருக்கு செலுத்தப்படும் போஜனபலியானது, அடுப்பில் பாகம்பண்ணப்பட்டதாகவும், தட்டையான சட்டியில் பாகம்பண்ணப்பட்டதாகவும் அல்லது பொரிக்குஞ்சட்டியில் பாகம்பண்ணப்பட்டதாகவும் இருக்கலாம்.

கர்த்தர் வெவ்வேறு விதமான போஜனபலிகளைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

"நீ படைப்பது அடுப்பில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலியானால், அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் செய்த புளிப்பில்லா அதிரசங்களாயாவது, எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளாயாவது இருப்பதாக" (லேவி 2:4)

"நீ படைப்பது தட்டையான சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலியானால், அது எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா மெல்லிய மாவினால் செய்யப்பட்டதாயிருப்பதாக. அதைத் துண்டு துண்டாகப் பிட்டு, அதின்மேல் எண்ணெய் வார்ப்பாயாக; இது ஒரு போஜனபலி" (லேவி 2:5,6).

"நீ படைப்பது பொரிக்குஞ் சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலியானால், அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் செய்யப்படுவதாக" (லேவி 2:7).

இஸ்ரவேல் புத்திரர் குறைந்த செலவில் கர்த்தருக்கு போஜனபலியை காணிக்கையாக செலுத்துகிறார்கள். ஆனாலும் இந்தப் பலியை செலுத்தும்போதும், கர்த்தர் சொன்ன பிரகாரம் இதை செலுத்தவேண்டும்.

கர்த்தருக்கு போஜனபலியாகிய காணிக்கையை செலுத்துமாறு கொண்டு வருகிறவனே, அதை ஆசாரியரிடத்தில் கொடுக்க வேண்டும். ஆசாரியன் அந்தப் போஜனபலியை பலிபீடத்தண்டையில் கொண்டு வரவேண்டும்.

அந்தப் போஜனபலியிலிருந்து ஆசாரியன் ஞாபகக்குறியாக ஒரு பங்கை எடுத்துப் பலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன்; இது கர்த்தருக்குச் சுகந்தவாசனையான தகனபலி (லேவி 2:8,9).

போஜனபலிகளெல்லாம் ஆசாரியனிடத்தில் கொண்டுவரப்பட வேண்டும். அது அவர்களுடைய ஊழியத்திற்குக் காணிக்கையாகும். போஜனபலியிலிருந்து ஒரு பகுதியை எடுத்து, அதைக் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாகத் தகனிக்கவேண்டும் (லேவி 2:2-3,8-10,14-16). போஜன பலிகளெல்லாம் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான பலி என்று அழைக்கப்படுகிறது. மிருகஜீவன்களின் பலிகளில் சிலவும், கர்த்தருக்குச் சுகந்த வாசனையான பலிகளாகும்.

இஸ்ரவேல் புத்திரர் செலுத்துகிற போஜனபலியில் ஒரு பகுதி பலிபீடத்தின்மேல் தகனிக்கப்படுகிறது. ஆசாரியரே இந்தப் போஜனபலியை தகனிக்கிறார். இது ஞாபகக்குறியாக தகனிக்கப்படுகிறது. கர்த்தர் தங்களுக்கு போஜனம் கொடுத்து தங்களை அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார் என்பதை நினைவுகூரும் வண்ணமாக, இஸ்ரவேல் புத்திரர் கொண்டு வரும் போஜனபலியின் ஒரு பகுதி, கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் தகனிக்கப்படுகிறது.

ஆசரிப்புக்கூடாரத்தில் கர்த்தருடைய ஊழியத்தை செய்கிற ஆசாரியருக்கும் போஜனம் கிடைக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கொண்டு வரும் போஜனபலியில் ஒரு பகுதி கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலியாக, பலிபீடத்திலே தகனிக்கப்படுகிறது.

அந்தப் போஜனபலியில் மீதியாயிருப்பது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; கர்த்தருக்கு இடும் தகனபலிகளில் இது மகா பரிசுத்தமானது (லேவி 2:3,10).

ஆதியாகமம் புஸ்தகத்தில் பரிசுத்தம் என்னும் வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. பஞ்சாகமத்திலுள்ள மற்ற நான்கு புஸ்தகங்களில் மோசே "பரிசுத்தம்" என்னும் வார்த்தையை 187 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார். இது நபர்களையும், பொருட்களையும் குறிக்கும். பரிசுத்தப் பயன்பாட்டிற்காக வேறுபிரிக்கப்பட்டிருப்பவை பரிசுத்தமானவையாகும். பரிசுத்தத்தில் இரண்டு விதம் உண்டு. ஒன்று பரிசுத்தம், மற்றொன்று மகா பரிசுத்தம் (லேவி 21:22).

ஆசாரியர்களும், அவர்களுடைய குடும்பத்தாரும் பரிசுத்தமானதையும், மகா பரிசுத்தமானதையும் புசிக்கலாம். மகா பரிசுத்தமானது என்பது அக்கினியினால் தகனிக்கப்பட்ட பலிகளைக் குறிக்கும். இவற்றின் ஒரு பகுதி ஞாபகக்குறியாக அக்கினியினால் தகனிக்கப்படும். ஆராதனையிலும், பலிசெலுத்துவதிலும் தேவனுக்காகச் செலுத்தப்படுவது படைப்பு எனப்படுகிறது.

கர்த்தருடைய பலிபீடத்திலே ஊழியம் செய்கிற ஆசாரியரையும் கர்த்தர் போஷிக்கிறார். தமக்கு ஊழியம் செய்கிற ஆசாரியரின் நன்மைகளை கர்த்தர் விசாரிக்கிறார்.

பரிசுத்த வேதாகமத்தில், மகாபரிசுத்தமான காரியங்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் மகாபரிசுத்தமான காரியங்களாகும். அவற்றின் விவரம் வருமாறு :

1. மகா பரிசுத்த ஸ்தலம் (யாத் 26:33-34)
2. வெண்கல பலிபீடம் (யாத் 29:37 ; யாத் 40:10)
3. பொன்பலிபீடம் (யாத் 30:10)
4. ஆசரிப்புக் கூடாரமும், அதன் பணிமுட்டுகளும், பாத்திரங்களும் (யாத் 30:29 ; யாத் 4:4,19)
5. தூபவர்க்கம் அல்லது சுகந்தவாசனை (யாத் 30:36)
6. எல்லா போஜனபலிகளும், அதன் ஒரு பகுதி அக்கினியினால் தகனிக்கப்படும். (லேவி 2:3,10 ; லேவி 6:17 ; லேவி 10:12 ; எண் 18:9)
7. பாவநிவாரண பலிகள் (லேவி 6:17,25,29 ; லேவி 10:17 ; எண் 18:9)
8. குற்றநிவாரண பலிகள் (லேவி 6:17 ; லேவி 7:1,6 ; லேவி 14:13; எண் 18:9)
9. சமுகத்தப்பம் (லேவி 24:9)
10. கர்த்தருக்காக அர்ப்பணிக்கப்பட்ட எல்லாப் பொருட்களும் (லேவி 27:28)

பரிசுத்த வேதாகமத்தில், மகாபரிசுத்தமான நபர்களைப்பற்றியும், மேலும் சில காரியங்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் மகாபரிசுத்தமானவை. அவற்றின் விவரம் வருமாறு :

1. பரிசுத்தப்பூமி (யாத் 3:5)
2. சபைகூடுதல் (லேவி 23; யாத் 12:16)
3. தேவனுடைய வாசஸ்தலம் (யாத் 15:13)
4. ஓய்வுநாள் (யாத் 16:23; யாத் 20:8; யாத் 35:2)
5. தேசம் (யாத் 19:6; உபா 7:6; உபா 14:2,21)
6. மனுஷர் (லேவி 11:44; யாத் 22:31; யாத் 29:37)
7. ஆசரிப்புக்கூடார ஸ்தலம் (யாத் 26:33)
8. வஸ்திரங்கள் (லேவி 16:4;யாத் 28:2-4)
9. பொருட்கள் (லேவி 22:2; யாத் 28:38)
10. வரங்கள் (யாத் 28:38)
11. கிரீடம் (யாத் 29:6; யாத் 39:30)
12. பலிகள் (லேவி 23:20; யாத் 29:33-34)
13. அபிஷேகதைலம் (யாத் 30:25)
14. தூபவர்க்கம் (யாத் 30:37)
15. பரிசுத்த ஸ்தலம் (லேவி 16:33)
16. தேவன் (லேவி 19:2; லேவி 20:7,26; லேவி 21:8)
17. முதற்கனிகள் (லேவி 19:24)
18. தேவனுடைய நாமம் (லேவி 20:3; லேவி 22:2,32)
19. ஆசாரியர்கள் (லேவி 21:6-8)
20. போஜனபலிகள் (லேவி 22:2-16)
21. தசமபாகங்கள் (லேவி 27:30-32)
22. தண்ணீர் (எண் 5:17)
23. நசரேயர் (எண் 6:5-8)
24. அசைவாட்டப்படும் பலிகள் (எண் 6:20)
25. தலையீற்று (எண் 18:17)
26. ஏறெடுக்கப்படும் பலிகள் (எண் 18:19)
27. கருவிகள் (எண் 31:6)
28. பாளயம் (உபா 23:14)

புளித்தமா, தேன், உப்பு, முதற்கனிகள் லேவி 2:11-16

லேவி 2:11. நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தும் எந்த போஜனபலியும் புளித்தமாவினால் செய்யப்படாதிருப்பதாக; புளித்தமாவுள்ளதொன்றையும் தேனுள்ள தொன்றையும் கர்த்தருக்குத் தகனபலியாகத் தகனிக்கவேண்டாம்.

லேவி 2:12. முதற்கனிகளைக் காணிக்கையாகக் கொண்டுவந்து, அவைகளைக் கர்த்தருக்குச் செலுத்தலாம்; ஆனாலும், பலி பீடத்தின்மேல் அவைகள் சுகந்த வாசனையாகத் தகனிக்கப்படலாகாது.

லேவி 2:13. நீ படைக்கிற எந்த போஜனபலியும் உப்பினால் சாரமாக்கப்படுவதாக; உன் தேவனுடைய உடன்படிக்கையின் உப்பை உன் போஜனபலியிலே குறையவிடாமல், நீ படைப்பது எல்லாவற்றோடும் உப்பையும் படைப்பாயாக.

லேவி 2:14. முதற்பலன்களை போஜனபலியாக நீ கர்த்தருக்குச் செலுத்தவந்தால், நிறைந்த பச்சையான கதிர்களை நெருப்பிலே வாட்டி உதிர்த்து, அதை உன் முதற்பலனின் போஜனபலியாகக் கொண்டுவரக்கடவாய்.

லேவி 2:15. அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மேல் தூபவர்க்கத்தைப் போடுவாயாக; இது ஒரு போஜனபலி.

லேவி 2:16. பின்பு ஆசாரியன், உதிர்த்த தானியத்திலும் எண்ணெயிலும் எடுத்து, ஞாபகக்குறியான பங்கை அதின் தூபவர்க்கம் எல்லாவற்றோடுங்கூடத் தகனிக்கக் கடவன்; இது கர்த்தருக்கு இடும் தகனபலி.

தமக்கு காணிக்கையாக செலுத்தப்படும் போஜனபலியில் புளித்தமாவும் தேனும் சேர்க்கப்படக்கூடாது என்று கர்த்தர் தடைபண்ணுகிறார். "நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தும் எந்த போஜனபலியும் புளித்தமாவினால் செய்யப்படாதிருப்பதாக; புளித்தமாவுள்ளதொன்றையும் தேனுள்ள தொன்றையும் கர்த்தருக்குத் தகனபலியாகத் தகனிக்கவேண்டாம்" (லேவி 2:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வந்தபோது, அவர்கள் புளிப்பில்லாத அப்பத்தைப் புசித்தார்கள். அதை நினைவுகூரும் வண்ணமாக, அவர்கள் கர்த்தருக்கு போஜனபலியை காணிக்கையாக செலுத்தும்போது, புளிப்பில்லாத மாவையே செலுத்துகிறார்கள்.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற தேசம். ஆனாலும் தேன் உள்ளது எதையும் தமக்கு தகனபலியாக தகனிக்கவேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தப்படும் போஜனபலியில் புளித்தமாவும் தேனும் ஏன் தடைபண்ணப்பட்டிருக்கிறது என்பதற்கான காரணங்களை வேதபண்டிதர்கள் விளக்கமாக சொல்லுகிறார்கள்.

புறஜாதியார் மத்தியிலே அவர்களுடைய விக்கிரகங்களுக்கு புளித்த மாவையும் தேனையும் காணிக்கையாக செலுத்துவது வழக்கம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு போஜனபலியாக காணிக்கை செலுத்தும்போது, அதிலே புளித்த மாவையும் தேனையும் சேர்த்தால், அவர்கள் விக்கிரகாராதனையை கற்றுக்கொள்வதற்கு வாய்ப்புண்டாகும். கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரரை, புறஜாதியார் மத்தியிலிருந்து மொத்தமாக வேறுபிரிக்க விரும்புகிறார். இதற்காகவே, கர்த்தருக்கு செலுத்தப்படும் போஜனபலியில் புளித்தமாவும் தேனும் தடைபண்ணப்பட்டிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

புளித்த மாவானது ஆவியின் வியாகுலத்திற்கும் துக்கத்திற்கும் அடையாளம். "இப்படியாக என் மனம் கசந்தது, என் உள்ளிந்திரியங்களிலே குத்துண்டேன்" (சங் 73:21). தேனானது மாம்சத்தின் சந்தோஷத்திற்கு அடையாளம். கர்த்தருக்கு காணிக்கை செலுத்துகிறவர்கள், தங்கள் மாம்சத்தில் சந்தோஷப்படாமல் தங்கள் ஆவியிலே சந்தோஷப்படவேண்டும். தேன் மனுஷருடைய மாம்சத்தை உற்சாகப்படுத்தும்.

கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரை ஆராதிக்கவேண்டும். மாம்சத்தின் சந்தோஷத்தோடும், மாம்சத்தின் உற்சாகத்தோடும் கர்த்தரை ஆராதிக்கக் கூடாது. ஆகையினால் மாம்சத்தின் சந்தோஷத்திற்கு உதவியாயிருக்கும் தேனை, கர்த்தருக்கு தகனபலியாக தகனிப்பது தடைபண்ணப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு படைக்கிற போஜனபலியானது உப்பினால் சாரமாக்கப்படவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். "நீ படைக்கிற எந்த போஜனபலியும் உப்பினால் சாரமாக்கப்படுவதாக; உன் தேவனுடைய உடன்படிக்கையின் உப்பை உன் போஜனபலியிலே குறையவிடாமல், நீ படைப்பது எல்லாவற்றோடும் உப்பையும் படைப்பாயாக" (லேவி 2:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பலிபீடம் அவருடைய பந்தியின் மேஜையாயிருக்கிறது. நாம் போஜனம்பண்ணும் நம்முடைய மேஜையில் எப்போதும் உப்பு வைத்திருப்பதுபோல, கர்த்தருடைய பலிபீடத்திலே காணிக்கையாக செலுத்தப்படும்போது, உப்பும் காணிக்கையாக செலுத்தப்படவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு செய்துகொள்ளும் உடன்படிக்கை, "உப்பின் உடன்படிக்கை" என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பிரபஞ்சத்து மனுஷர், தங்கள் மத்தியிலே உடன்படிக்கை பண்ணிக்கொள்ளும்போது, அவர்கள் ஒன்றாய்ப் புசித்து குடித்து, தங்களுடைய உடன்படிக்கையை உறுதிபண்ணிக் கொள்கிறார்கள். மனுஷருடைய எல்லா போஜனங்களிலும் உப்பு பயன்படுத்தப்படுகிறது.

தமக்கு காணிக்கையாக செலுத்தப்படும் போஜனபலியை கர்த்தர் அங்கீகரிக்கிறார் என்பதற்கு அடையாளமாக, போஜனபலியோடு, உப்பையும் படைக்கப்படுகிறது. கர்த்தர் தம்முடைய ஜனத்தாரோடு போஜனம்பண்ணுகிறார். கர்த்தருடைய ஜனமும் அவரோடேகூட அவருடைய பந்தியிலே போஜனம்பண்ணுகிறார்கள். இதன் மூலமாக கர்த்தர் தம்முடைய ஜனத்தோடு பண்ணிக்கொண்ட உடன்படிக்கையை உறுதிபண்ணுகிறார்.

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" *(வெளி 3:20).*

பூர்வகாலத்திலே, மனுஷர் மத்தியில் உப்பானது நட்புக்கு அடையாளமாயிருந்தது. கர்த்தருக்கு போஜனபலியை காணிக்கையாக செலுத்துகிறவர், அந்தப் போஜனபலியோடு உப்பைக் கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தில் உப்பானது ஏற்கெனவே சேகரிக்கப்பட்டு சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருக்கு காணிக்கைகளைக் கொண்டு வருகிறவர்கள், விறகு, உப்பு போன்றவற்றை பொதுவான காணிக்கையாக கொண்டு வருகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் படைக்கும் போஜனபலியில், கர்த்தருடைய சமுகத்தில் ஏற்கெனவே சேமிக்கப்பட்டிருக்கும் உப்பு பயன்படுத்தப்படுகிறது.

"பின்னும் உன் தேவனுடைய ஆலயத்துக்கு அவசியமாய்க் கொடுக்க வேண்டியிருப்பதை, நீ ராஜாவின் கஜானாவிலிருந்து வாங்கிக் கொடுப்பாயாக. நதிக்கு அப்புறத்திலிருக்கிற எல்லா கஜான்சிகளுக்கும் அர்தசஷ்டா என்னும் ராஜாவாகிய நாம் இடுகிற கட்டளை என்னவென்றால், பரலோகத்தின் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும் வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியன் நூறு தாலந்து வெள்ளி, நூற்றுக்கலக் கோதுமை, நூற்றுக்கலத் திராட்சரசம், நூற்றுக்கல எண்ணெய்மட்டும் உங்களைக் கேட்பவை எல்லாவற்றையும், வேண்டிய உப்பையும், தாமதமில்லாமல் கொடுக்கவும், பரலோகத்தின் தேவனுடைய கற்பனையின் படியே, எது தேவையாயிருக்குமோ அதுவெல்லாம் பரலோகத்தின் தேவனுடைய ஆலயத்திற்கு ஜாக்கிரதையாய்ச் செலுத்தப்படவும்வேண்டும்" *(எஸ்றா 7:20-23).*

கர்த்தருடைய ஆலயம் கட்டப்பட்டபோது, வெளிப்பிரகாரத்தின் சுற்றுச் சுவரிலே பல அறைகள் கட்டப்பட்டன. அந்த அறைகளில் ஒரு அறை உப்பை சேமித்து வைப்பதற்கு பிரத்தியேகமாக பயன்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் இந்த உலகத்திற்கு உப்பாயிருக்கிறோம்.

தமக்கு முதற்கனிகளை காணிக்கையாக கொண்டு வருவது பற்றியும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய அறுவடை நாளிலே அறுக்கிற முதற்பலன்களை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தவேண்டும். இதுபற்றி உபாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் உன் தேசத்தில் நீ பயிரிடும் நிலத்தின் கனிகளிலெல்லாம் முந்தின பலனை எடுத்து, ஒரு கூடையிலே வைத்து, உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொண்டிருக்கும் ஸ்தானத்திற்குப் போய், அந்நாட்களில் இருக்கும் ஆசாரியனிடத்தில் சென்று, அவனை நோக்கி: கர்த்தர் எங்களுக்குக் கொடுக்க நம்முடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் வந்து சேர்ந்தேன் என்று இன்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் அறிக்கையிடுகிறேன் என்பாயாக" *(உபா 26:2,3).*

"முதற்கனிகளைக் காணிக்கையாகக் கொண்டுவந்து, அவைகளைக் கர்த்தருக்குச் செலுத்தலாம்; ஆனாலும், பலிபீடத்தின்மேல் அவைகள் சுகந்த வாசனையாகத் தகனிக்கப்படலாகாது" (லேவி 2:12) என்றும்,

"முதற்பலன்களை போஜனபலியாக நீ கர்த்தருக்குச் செலுத்தவந்தால், நிறைந்த பச்சையான கதிர்களை நெருப்பிலே வாட்டி உதிர்த்து, அதை உன் முதற்பலனின் போஜனபலியாகக் கொண்டுவரக்கடவாய்" (லேவி 2:14) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் முதற்கனிகளை காணிக்கையாகக் கொண்டு வரும்போது, அவைகளை கர்த்தருக்கு செலுத்தவேண்டும். அந்த முதற்கனிகளை கர்த்தருடைய பலிபீடத்திலே சுகந்த வாசனையாக தகனிக்கக்கூடாது (லேவி 2:12). முதற்கனிகளை ஆசாரியர்களிடத்தில் கொடுக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய மெல்லிய மாவு, எண்ணெய், தூபவர்க்கம் போன்ற போஜனபலி நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் முதற்கனிகளை போஜனபலியாக செலுத்தவேண்டும் என்று நியமனம் செய்யப்படவில்லை. முதற்கனிகளின் காணிக்கையை அவர்கள் மனவிருப்பத்தின்படியும், மனஉற்சாகமாகவும், சுயாதீனமாகவும் செலுத்தவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் முதற்பலன்களை தமக்கு போஜனபலியாக செலுத்த வந்தால், அதை எவ்வாறு செலுத்தவேண்டும் என்று, கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

"முதற்பலன்களை போஜனபலியாக நீ கர்த்தருக்குச் செலுத்தவந்தால், நிறைந்த பச்சையான கதிர்களை நெருப்பிலே வாட்டி உதிர்த்து, அதை உன் முதற்பலனின் போஜனபலியாகக் கொண்டுவரக்கடவாய். அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மேல் தூபவர்க்கத்தைப் போடுவாயாக; இது ஒரு போஜனபலி" (லேவி 2:14,15) என்றும்,

"பின்பு ஆசாரியன், உதிர்த்த தானியத்திலும் எண்ணெயிலும் எடுத்து, ஞாபகக்குறியான பங்கை அதின் தூபவர்க்கம் எல்லாவற்றோடுங்கூடத் தகனிக்கக்கடவன்; இது கர்த்தருக்கு இடும் தகனபலி" (லேவி 2:16) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

முதற்பலன்களை கர்த்தருக்கு போஜனபலியாக செலுத்துகிறவர்கள், நிறைந்த பச்சையான கதிர்களை செலுத்தவேண்டும். கதிர்கள் நிறைவானதாகயிருக்கவேண்டும். அந்தக் கதிர் முழுவதும் தானியம் நிரம்பியதாகயிருக்கவேண்டும். கர்த்தருக்கு முதற்பலன்களை காணிக்கையாக செலுத்தும்போது சிறிய கதிர்களையோ, தானியம் உதிர்ந்த கதிர்களையோ செலுத்தக்கூடாது. அவை நிறைந்த பச்சையான கதிர்களாயிருக்கவேண்டும்.

கர்த்தருக்கு முதற்பலன்களை போஜனபலியாக செலுத்தும்போது, அந்தக் கதிர்களை பச்சையாக செலுத்தக்கூடாது. பச்சையான கதிர்களை நெருப்பிலே வாட்டி, அதை உதிர்த்து, அதை அதன் முதற்பலனின் போஜனபலியாக செலுத்தவேண்டும். பச்சையான கதிர்களை நெருப்பில் வாட்டிய பின்பு, அதை முழுவதுமாக உதிர்த்து விடலாம். வாட்டிய கதிர்களை போரடித்து உதிர்க்கலாம். அப்போது கர்த்தருக்கு கதிர்களாக செலுத்தாமல், தானியமாக செலுத்த முடியும்.

நெருப்பிலே வாட்டி உதிர்த்த தானியத்தின்மேல் எண்ணெய் வார்க்கவேண்டும். அதன்மேல் தூபவர்க்கத்தைப் போடவேண்டும். இது கர்த்தருக்கு செலுத்தப்படும் போஜனபலி. முதற்பலன்களின் தானியத்தின்மேல் எண்ணெய் வார்த்து, தூபம்போடுவது மனுஷருடைய தாழ்மைக்கும், அவர்களுடைய ஞானத்திற்கும் அடையாளம். நம்முடைய ஞானமும் மனத்தாழ்மையும், நம்முடைய ஆவியை மென்மையாக்கவேண்டும். கடினமான தானியம் மென்மையாவது போல, நம்முடைய கல்லான இருதயம் மென்மையான இருதயமாய் மாறவேண்டும்.

நெருப்பிலே வாட்டி உதிர்த்த தானியத்தின்மேல் எண்ணெய் வார்த்து, தூபவர்க்கத்தைப் போடும்போது, அது நறுமணமுள்ளதாகயிருக்கும். அதுபோலவே நம்முடைய ஊழியமும், நம்முடைய மனத்தாழ்மையினாலும், ஞானத்தினாலும், நறுமணமுள்ளதாகயிருக்க வேண்டும். நம்முடைய ஊழியம் கர்த்தருக்கு பிரியமானதாகவும், அவருடைய பரிசுத்தவான்களுக்கு பிரயோஜனமுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் போஜனபலியாகிய காணிக்கையை கர்த்தருக்கு செலுத்தும்போது, அந்தப் போஜனபலியிலிருந்து ஆசாரியன் ஞாபகக்குறியாக ஒரு பங்கை எடுத்துப் பலிபீடத்தின்மேல் தகனிப்பார் (லேவி 2:9). இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி.

இதுபோலவே, இஸ்ரவேல் புத்திரர் முதற்பலன்களை கர்த்தருக்கு போஜனபலியாக செலுத்தும்போது, ஆசாரியன், உதிர்த்த தானியத்திலும் எண்ணெயிலும் எடுத்து, ஞாபகக்குறியான பங்கை அதின் தூபவர்க்கம் எல்லாவற்றோடுங்கூடத் தகனிக்கக்கவேண்டும்; இது கர்த்தருக்கு இடும் தகனபலி (லேவி 2:16).

நாம் கர்த்தருக்காக செலுத்துகிற காணிக்கைகளெல்லாம் அக்கினியினால் தகனிக்கப்படுகிறது. நாம் கர்த்தர்மீது வைத்திருக்கும் பரிசுத்தமான அன்பே அக்கினிக்கு அடையாளமாயிருக்கிறது. நாம் கர்த்தருக்கு பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தும்போது, கர்த்தர்மீது உண்மையான அன்புகூர்ந்து, நம்முடைய பலிகளை செலுத்தவேண்டும். அன்பில்லாமல் செலுத்தப்படும் பலியும் காணிக்கையும் கர்த்தருக்கு பிரியமான பலியாக இருக்காது.

நாம் கர்த்தருக்கு போஜனபலியை செலுத்தும்போது அதின்மேல் தூபவர்க்கம் போடப்படுகிறது. தூபவர்க்கமானது இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்திற்கு அடையாளம். கிறிஸ்துவானவர், பிதாவின் சமுகத்திலே, நமக்காக எப்போதும் பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார். கிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்தின் மூலமாக, கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், நம்மையும், நம்முடைய காணிக்கைகளையும் பலிகளையும், ஊழியங்களையும் அங்கீகரிக்கிறார்.

இரண்டு எபிரெய வார்த்தைகள் சேர்ந்து, போஜனபலி என்னும் வாக்கியமாகிறது. அவையாவன: ஒன்று "மின்காஹ்" மற்றொன்று "கோர்பான்" என்பதாகும். மின்காஹ் என்பதற்கு பலி அல்லது காணிக்கை என்று பொருள். கோர்பான் என்பதற்கு பலிபீடத்திற்குக் கொண்டுவரப்படும் பொருள், தியாகமான காணிக்கை என்று பொருள்.

போஜனபலியில் இரத்தம் எதுவும் சிந்தப்படவில்லை. ஆகையினால் இது கிறிஸ்துவின் பாவநிவாரண பலிக்கு அடையாளம் அல்ல. தேவன் நம்முடைய பாவத்தை மன்னித்தற்காக இது நாம் செலுத்தும் ஸ்தோத்திரக் காணிக்கையாகவே கருதப்படுகிறது. போஜனபலியில் புளிப்பையோ அல்லது தேனையோ சேர்க்கக்கூடாது. புளிப்பு அழிவைக் குறிக்கும். (லேவி 2:11; 2கொரி 5:8). இதில் உப்பு சேர்க்கப்படவேண்டும். உப்பு சுத்தத்தையும், ஜீவன் பாதுகாக்கப்படுவதையும் குறிக்கும். உடன்படிக்கைகளைச் செய்யும்போது உப்பைப் பயன்படுத்துவது வழக்கம்.

தமக்கு செலுத்தப்படும் போஜனபலியாகிய காணிக்கையைக் குறித்து கர்த்தர் கொடுத்திருக்கும் கட்டளைகளின் விவரம் வருமாறு :

1. போஜனபலியாகிய காணிக்கை மெல்லிய மாவாயிருப்பதாக. அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின் மேல் தூபவர்க்கம் போடவேண்டும் (லேவி 2:1)

2. அதை ஆசாரியர்களிடத்தில் கொண்டு வருவானாக; ஆசாரியன் அதைப் பலிபீடத்தின்மேல் ஞாபகக்குறியாகத் தகனிக்கக்கடவன் (லேவி 2:2)

3. அந்தப் போஜனபலியில் மீதியாயிருப்பது ஆசாரியரைச் சேரும். இது மகா பரிசுத்தமானது. ஆசாரியர்கள் இதைப் புசிக்கலாம். (லேவி 2:3)

4. போஜனபலி அடுப்பில் பாகம்பண்ணப்பட்டதானால், அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் செய்த புளிப்பில்லா அதிரசங்களாயாவது, எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளாயாவது இருப்பதாக. (லேவி 2:4)

5. போஜனபலி தட்டையான சட்டியில் பாகம்பண்ணப்பட்டதானால், அது எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா மெல்லிய மாவினால் செய்யப்பட்டதாயிருப்பதாக. (லேவி 2:5)

6. போஜனபலியைத் துண்டு துண்டாகப் பிட்டு, அதின்மேல் எண்ணெய் வார்ப்பாயாக. (லேவி 2:6)

7. போஜனபலி பொரிக்குஞ் சட்டியில் பாகம்பண்ணப்பட்டதானால், அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் செய்யப்படுவதாக. (லேவி 2:7)

8. இப்படிச் செய்யப்பட்ட போஜனபலியைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாக. (லேவி 2:8)

9. ஆசாரியன் அதைப் பலிபீடத்தண்டையில் கொண்டுவந்து, அந்தப் போஜனபலியிலிருந்து ஞாபகக்குறியாக ஒரு பங்கை எடுத்துப் பலிபீடத்தின்மேல் தகனிக்கக் கடவன் (லேவி 2:8-9)

10. இந்தப் போஜனபலியில் மீதியானது ஆசாரியரைச் சேரும். இது ஆசாரியருடைய பங்கு. அவர்கள் இதைப் போஜனம் பண்ணலாம். (லேவி 2:10)

11. நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தும் எந்த போஜனபலியும் புளித்தமாவினால் செய்யப்படாதிருப்பதாக. (லேவி 2:11)

12. முதற்கனிகளைக் காணிக்கையாகக் கொண்டுவந்து, அவைகளைக் கர்த்தருக்குச் செலுத்தலாம். ஆனாலும், பலிபீடத்தின்மேல் அவைகள் சுகந்த வாசனையாகத் தகனிக்கப்படலாகாது. (லேவி 2:12)

13. நீ படைக்கிற எந்த போஜனபலியும் உப்பினால் சாரமாக்கப்படுவதாக

14. நீ படைப்பது எல்லாவற்றோடும் உப்பையும் படைப்பாயாக. (லேவி 2:13)

15. முதற்பலன்களை போஜனபலியாகக் கொண்டுவரக்கடவாய். (லேவி 2:14)

16. போஜனபலியின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மேல் தூபவர்க்கத்தைப் போடுவாயாக; (லேவி 2:15)

17. ஆசாரியன் போஜனபலியில் ஞாபகக் குறியான பங்கை அதின் தூபவர்க்கம் எல்லாவற்றோடுங்கூடத் தகனிக்கக் கடவன். (லேவி 2:16)

சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரண பலிகளும் என்பது வேறு. போஜனபலி என்பது வேறு. போஜனபலி கர்த்தருக்குச் செலுத்தப்படும் ஸ்தோத்திரபலியாகும். கர்த்தரை இரட்சகராக அங்கிகரித்து, அவர் தன்னை மன்னித்ததற்காகக் கர்த்தரை ஸ்தோத்தரிப்பது. தேவனுக்கு எல்லாமே உரியது என்று அங்கிகரித்து அவருக்கு நன்றி செலுத்துவது. தேவனுடைய ஆசீர்வாதங்களுக்காக அவரைத் துதித்து, தங்களுடைய பாவங்களை மன்னித்தற்காக அவரை ஸ்தோத்தரிப்பது போஜனபலியின் அடையாளம். பாவநிவாரண பலியும், சர்வாங்க தகனபலியும் பாவ நிவாரணத்திற்கு அடையாளம்.

3 அதிகாரம்

கர்த்தருடைய சந்நிதியில் சமாதான பலியை படைப்பது சம்பந்தமான பிரமாணம் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மாட்டு மந்தையிலிருந்து எடுத்து, சமாதானபலியாக செலுத்தப்படும் காளை அல்லது பசு (லேவி 3:1-5). ஆட்டு மந்தையிலிருந்து எடுத்து, சமாதானபலியாக செலுத்தப்படும் ஆட்டுக்குட்டி (லேவி 3:6-11). சமாதான பலியாக செலுத்தப்படும் வெள்ளாட்டுக்கடா (லேவி 3:12-17).

சமாதான பலி - காளை, பசு லேவி 3:1-5

லேவி 3:1. ஒருவன் சமாதான பலியைப் படைக்கவேண்டுமென்று, மாட்டுமந்தையில் எடுத்துச் செலுத்துவானாகில், அது காளையானாலும் சரி, பசுவானாலும் சரி, பழுதற்றிருப்பதை கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தக்கடவன்.

லேவி 3:2. அவன் தன் பலியின் தலைமேல் தன் கையை வைத்து, ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக அதைக் கொல்லக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

லேவி 3:3. பின்பு சமாதான பலியிலே குடல்களை மூடிய கொழுப்பையும், குடல்களிலுள்ள கொழுப்பு முழுவதையும்,

லேவி 3:4. இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின் மேல் இருக்கிற ஜவ்வையும் எடுத்து, கர்த்தருக்குத் தகனபலியாகச் செலுத்துவானாக.

லேவி 3:5. அதை ஆரோனின் குமாரர் பலிபீடத்து அக்கினியிலுள்ள கட்டைகளின் மேல் போட்டிருக்கும் சர்வாங்க தகனபலியின்மீதில் போட்டுத் தகனிக்கக்கடவர்கள்; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி.

கர்த்தருடைய பலிபீடத்தில் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலிகள், கர்த்தரை ஆராதிப்பதற்காகவும், அவரை துதிப்பதற்காகவும், அவரை மகிமைப்படுத்துவதற்காகவும் செலுத்தப்படும் பலிகளாகும். ஆகையினால் சர்வாங்க தகனபலிகள் பலிபீடத்தின்மேல் முற்றிலுமாக தகனிக்கப்படவேண்டும்.

சமாதானபலிகளை, சர்வாங்க தகனபலிகளைப்போல முழுவதுமாக தகனிக்கவேண்டியதில்லை. கர்த்தர் தம்முடைய சிருஷ்டிகளுக்கு நன்மை செய்கிறவராயிருக்கிறார். அவர் சர்வசிருஷ்டிகளையும் போஷித்து பராமரிக்கிறார். கர்த்தர் நமக்கு நன்மையான எல்லா ஈவுகளையும் தருகிறார். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தும் சமாதானபலியானது, பலிபீடத்திற்கு சொந்தக்காரராகிய கர்த்தருக்கும், பலிபீடத்தில் ஊழியம் செய்கிற ஆசாரியருக்கும், சமாதான பலியை படைத்திருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கும் பங்கிட்டு கொடுக்கப்படுகிறது.

நாம் கர்த்தரோடு சமாதானமாகயிருக்க வேண்டுமென்றால், அவரோடு ஒப்புரவாகவேண்டும். கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தப்படும் சமாதானபலியிலே, ஒப்புரவாகுதல், ஒருமனப்படுதல், ஐக்கியமாயிருத்தல் ஆகிய அம்சங்கள் இடம்பெற்றிருக்கிறது. ஆகையினால் இந்தப் பலியானது சமாதான பலி என்று அழைக்கப்படுகிறது.

கர்த்தரும் இஸ்ரவேல் ஜனத்தாரும், ஒப்புரவானதற்கு அடையாளமாகவும், அவர்கள் இப்போது பகையில்லாமல் சிநேகமாகவும், ஐக்கியமாகவும் இருப்பதற்கு அடையாளமாகவும், சமாதான பலியிலே ஏகமாய் பந்தியிருக்கிறார்கள். சமாதானபலியானது சிநேகத்திற்கும், ஐக்கியத்திற்கும் அடையாளமாயிருக்கிறது.

சமாதான பலியை செலுத்துகிற இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு சமாதானத்தை உறுதிபண்ணுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஒப்புரவாகியிருப்பதினால், அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்களை போஷித்து பராமரிக்கிறார். அவர்களுக்கு நன்மையான ஈவுகளை ஆசீர்வாதமாகக் கொடுக்கிறார். சமாதான பலியானது இஸ்ரவேல் புத்திரரின் சந்தோஷத்திற்கும், செழிப்பான ஜீவியத்திற்கும் அடையாளமாகும்.

கர்த்தர் தங்களுக்கு நன்மையான ஈவுகளைத் தரவேண்டுமென்று, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தங்கள் விண்ணப்பங்களுக்கு செவிகொடுத்து, கர்த்தர் அவற்றை ஏற்ற காலத்திலே நிறைவேற்றி தருவார் என்னும் எதிர்பார்ப்புக்கு அடையாளமாக, அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் சமாதான பலிகளை செலுத்துகிறார்கள்.

கர்த்தர் தங்களுடைய விண்ணப்பங்களை கேட்டு, தம்முடைய பெரிதான கிருபையினாலும் இரக்கத்தினாலும் தங்களுக்கு கிருபையுள்ள ஆசீர்வாதங்களை கொடுத்திருக்கிறார் என்பதை நன்றியோடு அங்கீகரிக்கும் வண்ணமாக, அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் சமாதான பலிகளை செலுத்துகிறார்கள்.

கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தப்படும் சமாதான பலிகளானது, அவருக்கு செலுத்தப்படும் நன்றி பலிகளாகயிருக்கிறது. கர்த்தருக்கு பலியாக செலுத்தப்படும் காளை, பசு, ஆட்டுக்குட்டி, வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றைவிட, நம்முடைய ஸ்தோத்திர பலிகளே அவருக்கு மிகவும் பிரியமானதாயிருக்கும்.

"சமாதானபலியாகிய ஸ்தோத்திரபலியின் மாம்சமானது செலுத்தப்பட்ட அன்றைத்தினமே புசிக்கப்பட வேண்டும்; அதில் ஒன்றும் விடியற்காலமட்டும் வைக்கப்படலாகாது. அவன் செலுத்தும் பொருத்தனையாயாவது உற்சாகபலியாயாவது இருக்குமானால், அது செலுத்தப்படும் நாளிலும், அதில் மீதியானது மறு நாளிலும் புசிக்கப்படலாம்" (லேவி 7:15,16).

கர்த்தருடைய சந்நிதியில் சமாதான பலிகளை படைப்பது சம்பந்தமான பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. சமாதானபலியை அது காளையானாலும் சரி, பசுவானாலும் சரி, அதைக் கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தக் கடவன்.

2. அது பழுதற்றிருக்க வேண்டும்.

3. பலிசெலுத்துகிறவன் பலியின் தலைமேல் தன் கையை வைத்து, ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக அதைக் கொல்லக்கடவன். (லேவி 3:2).

4. ஆசாரியர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக் கடவர்கள்.

5. சமாதான பலியிலே குடல்களை மூடிய கொழுப்பையும், குடல்களிலுள்ள கொழுப்பு முழுவதையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடே கூடக் கல்லீரலின்மேல் இருக்கிற ஜவ்வையும் எடுத்து, கர்த்தருக்குத் தகனபலியாக பலிசெலுத்துகிறவன் செலுத்துவானாக. அதை ஆசாரியன் பலிபீடத்து அக்கினியிலுள்ள கட்டைகளின் மேல் போட்டிருக்கும் சர்வாங்க தகனபலியின் மீதில் போட்டுத் தகனிக்கக்கடவர்கள். (லேவி 3:3-6).

6. பலிசெலுத்துகிறவன் ஆட்டுக்குட்டியைப் பலியாகச் செலுத்தவேண்டுமானால், அதைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரக்கடவன் (லேவி 2:7).

7. பலிசெலுத்துகிறவன் பலியின் தலைமேல் தன் கையை வைத்து, ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக அதைக் கொல்லக்கடவன்; (லேவி 3:8).

8. ஆசாரியர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

9. சமாதான பலியிலே அதின் கொழுப்பையும், நடுவெலும்பிலிருந்து எடுத்த முழு வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகளின்மேல் இருக்கிற கொழுப்பு முழுவதையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடே கூடக் கல்லீரலின்மேல் இருக்கிற ஜவ்வையும் ஆசாரியன் பலிபீடத்தின் மேல் தகனிக்கக்கடவன்; (லேவி 3:9-11).

10. பலிசெலுத்துகிறவன் செலுத்துவது வெள்ளாடாயிருக்குமானால், அவன் அதை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரக்கடவன். (லேவி 3:12).

11. பலிசெலுத்துகிறவன் அதின் தலைமேல் தன் கையை வைத்து, ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக அதைக் கொல்லக்கடவன்; (லேவி 3:13).

12. ஆசாரியர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

13. அதிலே குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகள்மேலிருக்கிற கொழுப்பு முழுவதையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடே கூடக் கல்லீரலின்மேல் இருக்கிற ஜவ்வையும் ஆசாரியர் பலிபீடத்தின்மேல் அவைகளைத் தகனிக்கக்கடவர்கள்; (லேவி 3:14-16).

14. கொழுப்பையாவது இரத்தத்தையாவது உங்கள் தலைமுறைதோறும் நீங்கள் புசிக்கலாகாது (லேவி 3:17).

சமாதானபலி - ஆட்டுக்குட்டி, வெள்ளாடு லேவி 3:6-17

லேவி 3:6. அவன் கர்த்தருக்குச் சமாதானபலியைப் படைக்க வேண்டுமென்று ஆட்டுமந்தையிலிருந்து எடுத்துச் செலுத்துவானாகில், அது ஆண் ஆனாலும் சரி, பெண் ஆனாலும் சரி, பழுதற்றிருப்பதைச் செலுத்துவானாக.

லேவி 3:7. அவன் ஆட்டுக்குட்டியைப் பலியாகச் செலுத்தவேண்டுமானால், அதைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து,

லேவி 3:8. தன் பலியின் தலைமேல் தன் கையை வைத்து, ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக அதைக் கொல்லக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

லேவி 3:9. பின்பு அவன் சமாதான பலியிலே அதின் கொழுப்பையும், நடுவெலும்பிலிருந்து எடுத்த முழு வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகளின்மேல் இருக்கிற கொழுப்பு முழுவதையும்,

லேவி 3:10. இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடே கூடக் கல்லீரலின் மேல் இருக்கிற ஜவ்வையும் எடுத்து, கர்த்தருக்குத் தகனபலியாகச் செலுத்தக்கடவன்.

லேவி 3:11. அதை ஆசாரியன் பலி பீடத்தின் மேல் தகனிக்கக்கடவன்; இது கர்த்தருக்கு இடும் தகன ஆகாரம்.

லேவி 3:12. அவன் செலுத்துவது வெள்ளாடாயிருக்குமானால், அவன் அதை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து,

லேவி 3:13. அதின் தலைமேல் தன் கையை வைத்து, ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக அதைக் கொல்லக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

லேவி 3:14. அவன் அதிலே குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகள் மேலிருக்கிற கொழுப்பு முழுவதையும்,

லேவி 3:15. இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின் மேல் இருக்கிற ஜவ்வையும் எடுத்து, கர்த்தருக்குத் தகனபலியாகச் செலுத்தக்கடவன்.

லேவி 3:16. ஆசாரியன் பலிபீடத்தின்மேல் அவைகளைத் தகனிக்கக்கடவன்; இது சுகந்த வாசனையான தகன ஆகாரம்; கொழுப்பு முழுவதும் கர்த்தருடையது.

லேவி 3:17. கொழுப்பையாவது இரத்தத்தையாவது நீங்கள் புசிக்கலாகாது; இது உங்கள் வாசஸ்தலங்கள் எங்கும் உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும் என்று சொல் என்றார்.

கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக செலுத்துவதற்கு காட்டுப்புறா, புறாக்குஞ்சு ஆகிய பறவைகள் அங்கீகரிக்கப்படுகிறது. ஆனால் கர்த்தருடைய சந்நிதியில் சமாதான பலியாக செலுத்துவதற்கு இந்தப் பறவைகள் எதுவும் அங்கீகரிக்கப்படவில்லை.

காட்டுப்புறா, புறாக்குஞ்சு ஆகியவை மொத்தமாக தகனிக்கப்படவேண்டும். ஆகையினால் இவை சமாதானபலியாக செலுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. காட்டுப்புறாவிலும், புறாக்குஞ்சுகளிலும் போதுமான அளவு கொழுப்பு இருக்காது. இந்தக் கொழுப்பு இவற்றை பலிபீடத்தின்மீது தகனிப்பதற்கு போதுமானதாயிருக்காது.

கர்த்தருக்கு சமாதானபலியாக மாட்டுமந்தையிலிருந்து காளையையோ அல்லது பசுவையோ செலுத்தலாம். அதுபோலவே ஆட்டுமந்தையிலிருந்து எடுத்த ஒரு ஆட்டுக்குட்டியையோ அல்லது ஒரு வெள்ளாட்டையோ கர்த்தருடைய சந்நிதியில் சமாதான பலியாக செலுத்தலாம்.

கர்த்தருடைய சந்நிதியில் ஆட்டுக் குட்டியையும், வெள்ளாட்டுக்கடாவையும் சமாதானபலியாக செலுத்தவேண்டிய பிரமாணத்தை கர்த்தர் சொல்லியிருக்கிறார். காளை, பசு ஆகியவற்றை சமாதானபலியாக செலுத்தும்போது பின்பற்றவேண்டிய பிரமாணமே, ஆட்டுக்குட்டி, வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றை சமாதானபலியாக செலுத்தும்போதும் பின்பற்றப்படவேண்டும்.

இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்க வேண்டும். மிருகஜீவன்களைப் பலியிடும்போது இரத்தம் சிந்தப்படுகிறது. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்பதற்கு இது அடையாளமாகும்.

சர்வாங்க தகனபலியும், பாவநிவாரண பலியும் வேறு. சமாதான பலி என்பது வேறு. சர்வாங்க தகனபலி பாவநிவாரணத்திற்காகச் செலுத்தப்படுகிறது. சமாதானபலி தேவனோடு ஐக்கியம் ஏற்படுத்துவதற்காகச் செலுத்தப்படுகிறது. பாவம் நிவாரணமானால்தான், தேவனோடு ஐக்கியமாக இருக்க முடியும். சமாதான பலியின் ஒரு பகுதியைப் பலிசெலுத்துகிறவர் புசிக்க வேண்டும் (லேவி 7:15).

தேவனோடு தன்னுடைய ஐக்கியம் புதுப்பிக்கப்பட்டதற்காக பலிசெலுத்துகிறவர் மகிழ்ந்து, சமாதானப் பகுதியில் ஒரு பாகத்தைப் புசிக்கிறார். சமாதான பலி ஒரு ஸ்தோத்திரபலியாகும். தேவனோடு தனக்குச் சமாதானம் ஏற்பட்டதற்காக அவர் தேவனைத் துதிக்கிறார் (லேவி 7:11-21).

4 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் பாவநிவாரணத்தைப்பற்றிய பிரமாணம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவன் கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை அறியாமையினால் மீறி, செய்யத்தகாததை செய்து, பாவத்திற்குட்பட்டால், அவனுடைய பாவம் நிவிர்த்திபண்ணப்படுவதற்கு, பாவநிவாரண பலி செலுத்தப்படவேண்டும்.

அபிஷேகம் பெற்ற ஆசாரியன் செய்த பாவத்தினிமித்தம் செலுத்தப்படும் பாவநிவாரண பலி (லேவி 4:1-12). இஸ்ரவேல் சபையார் எல்லாரும் பாவத்திற்குட்பட்டு குற்றவாளிகளாகும்போது, அவர்களுடைய பாவத்தினிமித்தம் செலுத்தப்படும் பாவநிவாரண பலி (லேவி 4:13-21).

ஒரு அதிபதி பாவத்திற்குட்பட்டு குற்றவாளியாகும்போது, அவருடைய பாவத்தினிமித்தம் செலுத்தப்படவேண்டிய பாவநிவாரணபலி (லேவி 4:22-26). சாதாரண ஜனங்களில் ஒருவன் பாவத்திற்குட்பட்டு குற்றவாளியாகும்போது, அவனுடைய பாவத்தினிமித்தம் செலுத்தப்படவேண்டிய பாவநிவாரணபலி (லேவி 4:27-35).

பாவநிவாரண பலி
லேவி 4:1,2

லேவி 4:1. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 4:2. நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்ல வேண்டியது என்னவென்றால், ஒருவன் கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை அறியாமையினால் மீறி, செய்யத்தகாததைச் செய்து பாவத்துக்கு உட்பட்டால் அறியவேண்டியதாவது:

கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிடுகிறார். தமக்கு செலுத்தப்படும் பலிகளைப்பற்றிய பிரமாணங்களை கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

இந்த அதிகாரத்தில் பாவநிவாரண பலியைப்பற்றிய பிரமாணம் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் மோசேயினிடத்தில் சொன்ன வார்த்தைகளில் இது இரண்டாவது பகுதியாகும். ஒரு வேளை கர்த்தர் மற்றொரு நாளில் இந்தப் பிரமாணத்தை மோசேயினிடத்தில் சொல்லியிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் மகிமையுள்ள சிங்காசனத்திற்கும் கேருபீன்களுக்கும் நடுவிலிருந்து, தம்முடைய பிரமாணங்களை மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தர் சீனாய் மலையிலே மோசேக்கு தம்முடைய கட்டளையை கொடுப்பதற்கு முன்பாகவே, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தியிருக்கிறார்கள்.

இந்த வசனப்பகுதியில் பாவத்தின் தன்மையைக் குறித்து பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை அறியாமையினால் மீறி, செய்யத்தகாததை செய்வது பாவமாகும். கர்த்தருடைய கட்டளை தெய்வீக கட்டளையாகயிருக்கிறது.

ஒருவன் கர்த்தருடைய கட்டளையைமீறி செய்யத்தகாததை செய்கிறான் என்றால், அவனுடைய ஆத்துமாவே செய்யத்தகாததை செய்து பாவம் செய்கிறது. ஒரு ஆத்துமா பாவத்தில் ஈடுபடவில்லையென்றால், அது பாவமாக கருதப்படாது. பாவம் என்பது ஆத்துமாவின் பாவமாகும்.

"ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின் பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின் பேரிலும், கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப்போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்கவேண்டுமோ?" (மீகா 6:7).

"எனக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனோ, தன் ஆத்துமாவைச் சேதப்படுத்துகிறான்; என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள் என்று சொல்லுகிறது" (நீதி 8:36).

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்ல வேண்டியது என்னவென்றால், ஒருவன் கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை அறியாமையினால் மீறி, செய்யத்தகாததைச் செய்து பாவத்துக்கு உட்பட்டால் அறியவேண்டியதாவது" (லேவி 4:1,2) என்று சொல்லுகிறார். இந்த வசனத்தில் "ஒருவன்" என்னும் வார்த்தையானது "ஒருவனுடைய ஆத்துமா" என்று மொழிபெயர்க்கப்படவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

ஒருவன் தேவனுடைய பிரமாணத்திற்கு எதிராக அறியாமையினால் பாவம் செய்யும்போது, அவன் பாவநிவாரண பலியைக் கர்த்தருடைய சன்னதியில் கொண்டுவந்து, தன்னுடைய பாவத்திற்குப் பாவநிவாரணம் பண்ண வேண்டும் (லேவி 4:2-3,13,22,27).

பாவம் செய்தவர்களில் நான்கு விதமான ஜனங்களைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய விவரம் வருமாறு :

1. ஆசாரியர் (லேவி 4:3)
2. இஸ்ரவேல் சபையார் (லேவி 4:13)
3. பிரபுக்கள் (லேவி 4:22)
4. பொதுஜனங்கள் (லேவி 4:27)

நியாயப்பிரமாணத்தை மீறுவது பாவம். (1யோவான் 3:4) அதற்குரிய தண்டனையைப் பாவம் செய்தவர் அனுபவிக்க வேண்டும். இந்த நியதி ஆசாரியருக்கும், பொதுஜனங்களுக்கும் பொருந்தும். (லேவி 4:2-3). யார் செய்தாலும் பாவம் பாவமே. தேவனிடத்தில் பட்சபாதமில்லை. எந்தப் பாவியையும் தேவன் ஒன்றுபோலவே பாவிக்கிறார்.

மனுஷனுடைய ஆத்துமா பாவம் செய்யும்போது, அந்தப் பாவத்தை நிவிர்த்திபண்ணுவதற்கு, கர்த்தருடைய சமுகத்திலே பாவநிவாரணபலியை செலுத்தவேண்டும். பாவம் செய்கிறவன் அறியாமையினால் பாவம் செய்தாலும், அவன் வெளிப்படையாக பாவநிவாரண பலியை செலுத்தவேண்டும்.

ஒருவன் கர்த்தருடைய கட்டளைகளை மீறி, தன்னுடைய சிந்தையிலோ அல்லது தன்னுடைய வார்த்தையிலோ அல்லது தன்னுடைய செய்கையிலோ பாவம் செய்திருக்கலாம். கர்த்தருடைய கட்டளைகளை மீறி செய்யத்தகாததை செய்வது எதுவாகயிருந்தாலும் அது பாவமாகவே கருதப்படும். அந்தப் பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்கு பாவநிவாரண பலியை செலுத்தவேண்டும். மனுஷருடைய பாவத்திற்கும் முடிவு இல்லை. ஆகையினால் அவர்கள் செலுத்தவேண்டிய பாவநிவாரண பலிக்கும் முடிவு இருக்காது.

இஸ்ரவேல் புத்திரர் வருஷத்தில் ஒருநாளை பாவநிவாரண நாளாக நியமித்திருக்கிறார்கள். அந்த நாளிலே, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், தங்களுடைய வருஷாந்திர பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக, கர்த்தருக்கு பாவநிவாரண பலியை செலுத்துவார்கள்.

பாவங்களில் இரண்டு வகைப்படும் செய்யவேண்டியதை செய்யாமலிருப்பதும் பாவம். செய்யக்கூடாததை செய்வதும் பாவம். இந்த அதிகாரத்தில் செய்யக்கூடாததை செய்கிற பாவத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பாவம் செய்கிறவன் கர்த்தருடைய கட்டளையை தன்னுடைய அறியாமையினால் மீறி, செய்யத்தகாததை செய்து பாவத்திற்குட்படுகிறான்.

பாவத்திற்குட்படுகிறவன் துணிகரமாய்ப் பாவம் செய்யவில்லை. அவன் கர்த்தருடைய கட்டளையை அறியாமையினால் மீறுகிறான். ஒருவேளை இவன் கர்த்தருடைய கட்டளையைப்பற்றி அறியாதவனாயிருக்கலாம். கர்த்தருடைய கட்டளை என்ன என்பதை அறியாதவர்கள், தங்கள் அறியாமையினால் செய்யக்கூடாததை செய்து விடுவார்கள். இவர்கள் வேண்டுமென்றே துணிகரமாகப் பாவம் செய்கிறவர்களல்ல. தாங்கள் செய்வது பாவம் என்பதை அறிந்திருந்தால், இவர்கள் அந்தப் பாவத்தை செய்திருக்கமாட்டார்கள்.

ஒருவன் செய்யத்தகாததை செய்வதும் பாவமாகவே கருதப்படுகிறது. அவன் பாவத்தை அறியாமையினால் செய்திருந்தாலும், அவன் பாவம் செய்தவனாகவே இருக்கிறான். அவன் பாவத்திற்குட்படுகிறான். இவனுடைய பாவம் நிவிர்த்திபண்ணப்படுவதற்கு, இவன் கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவாரண பலியை செலுத்தவேண்டும்.

அபிஷேகம் பெற்ற ஆசாரியன் லேவி 4:3-12

லேவி 4:3. அபிஷேகம் பெற்ற ஆசாரியன், ஜனங்கள் குற்றத்திற்கு உட்படத்தக்கதாகப் பாவஞ்செய்தால், தான் செய்த பாவத்தினிமித்தம் பழுதற்ற ஒரு இளங்காளையை பாவநிவாரண பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரக்கடவன்.

லேவி 4:4. அவன் அந்தக் காளையை ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, அதின் தலைமேல் தன் கையை வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் அதைக் கொல்லக்கடவன்.

லேவி 4:5. அப்பொழுது, அபிஷேகம் பெற்ற ஆசாரியன் அந்தக் காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, அதை ஆசரிப்புக்கூடாரத்தில் கொண்டுவந்து,

லேவி 4:6. தன் விரலை இரத்தத்தில் தோய்த்து, பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதியில் ஏழுதரம் தெளிக்கக்கடவன்.

லேவி 4:7. பின்பு, ஆசாரியன் அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக் கூடாரத்திலே கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் சுகந்த தூபபீடத்துக் கொம்புகளின் மேல் பூசி, காளையினுடைய மற்ற இரத்தம் முழுவதையும் ஆசரிப்புக் கூடார வாசலுக்கு முன்பாக இருக்கிற தகனபலி பீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

லேவி 4:8. பாவநிவாரணபலியான காளையின் எல்லாக் கொழுப்புமாகிய குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகள்மேல் இருக்கிற கொழுப்பு முழுவதையும்,

லேவி 4:9. இரண்டு குண்டிக்காய்களையும், அவைகள்மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடே கூடக் கல்லீரலின் மேல் இருக்கிற ஜவ்வையும்,

லேவி 4:10. சமாதானபலியின் காளையிலிருந்து எடுக்கிறதுபோல அதிலிருந்து எடுத்து, அவைகளைத் தகனபலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன்.

லேவி 4:11. காளையின் தோலையும், அதின் மாம்சம் முழுவதையும், அதின் தலையையும், தொடைகளையும், அதின் குடல்களையும், அதின் சாணியையும்,

லேவி 4:12. காளை முழுவதையும் பாளயத்துக்குப் புறம்பே சாம்பல் கொட்டுகிற சுத்தமான இடத்திலே கொண்டுபோய், கட்டைகளின்மேல் போட்டு, அக்கினியாலே சுட்டெரிக்கக்கடவன்; சாம்பல் கொட்டியிருக்கிற இடத்திலே அதைச் சுட்டெரிக்கக்கடவன்.

எல்லோரும் பாவம் செய்து ஏகமாய் கெட்டுப்போயிருக்கிறார்கள். பாவம் செய்தவர்கள் தேவமகிமையை இழந்துவிடுகிறார்கள். அபிஷேகம்பெற்ற ஆசாரியனும் பாவம் செய்கிறான். இஸ்ரவேல் சபையார் எல்லாரும் பாவம் செய்கிறார்கள். இஸ்ரவேலின் பிரபுவும் பாவம் செய்கிறான். இஸ்ரவேல் ஜனங்களில் சாதாரணமானவனும் பாவம் செய்கிறான்.

இவர்கள் அறியாமையினால் கர்த்தருடைய கட்டளையைமீறி, செய்யத்தகாததை செய்து பாவத்திற்குட்படுகிறார்கள். இவர்களுடைய பாவத்தினிமித்தம் செலுத்தப்படவேண்டிய பாவநிவாரண பலியைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் முதலாவதாக, அபிஷேகம்பெற்ற ஆசாரியன், பாவத்திற்குட்பட்டு குற்றவாளியாகும்போது, அவனுடைய பாவத்தினிமித்தம் செலுத்த வேண்டிய பாவநிவாரண பலியைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

அபிஷேகம் பெற்ற ஆசாரியன் கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை அறியாமையினால் மீறி, செய்யத்தகாததை செய்தால், அவன் பாவத்திற்குட்பட்டவனாயிருக்கிறான். பிரதான ஆசாரியன் அபிஷேகம் பெற்றவன். அவன் துணிகரமாய் பாவம் செய்தவனாகயிருக்கக்கூடாது. சாதாரண ஜனங்கள் அறியாமையினால் பாவம் செய்து, பாவத்திற்குட்படும்போது, அவர்கள் தங்கள் பாவத்திற்காக பாவநிவாரணபலியை செலுத்தலாம். சாதாரண ஜனங்களைப்போலவே அபிஷேகம் பெற்ற ஆசாரியனும், தன்னுடைய பாவத்தை நிவிர்த்தி செய்வதற்கு, பாவநிவாரண பலியை செலுத்தலாம்.

"அபிஷேகம் பெற்ற ஆசாரியன், ஜனங்கள் குற்றத்திற்கு உட்படத்தக்கதாகப் பாவஞ்செய்தால், தான் செய்த பாவத்தினிமித்தம் பழுதற்ற ஒரு இளங்காளையை பாவநிவாரண பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரக்கடவன்" (லேவி 4:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுக்காக விசேஷித்த ஊழியம் செய்தவர்கள் எல்லோருமே பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப் பட்டிருக்கிறார்கள். (லேவி 4:5; எண் 3:3; 1சாமு 10:1; 2சாமு 12:7). ஆசாரியர் (யாத் 29:29), ராஜாக்கள் (1சாமு 10:1), தீர்க்கதரிசிகளும், தேவனுக்காக விசேஷித்த செய்திகளைக் கூறிய மற்றவர்களும் (1இராஜா 19:16; ஏசா 61:1-2; லூக்கா 4:18-21; அப் 3:21). தேவனுடைய சமுகத்தில் படைக்கப்பட்ட காணிக்கைகளும், பலிகளும், மற்ற பொருட்களும் பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டன. (லேவி 2:4; லேவி 7:12; யாத் 40:9-15).

இந்த வசனத்தில் ஆசாரியன் என்பது பிரதான ஆசாரியனைக் குறிக்கும் (லேவி 8:12; லேவி 21:10; யாத் 29:7). பாவம் செய்த ஆசாரியன் மற்றவர்களுடைய பாவங்களுக்காக இரத்தத்தைத் தெளிக்க முடியாது. முதலாவதாக ஆசாரியன் தன் பாவங்களிலிருந்து நிவாரணம் பெறவேண்டும். அதன் பின்பே, அவன் மற்றவர்களுடைய பாவங்களுக்காக நிவாரணம் செய்ய முடியும்.

ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதியில் ஊழியம் செய்கிறவன். கர்த்தருடைய பரிசுத்தமான ஊழியத்தை செய்கிறவன் பரிசுத்தமாயிருக்கவேண்டும். ஆசரியன் அறியாமையினால் பாவம் செய்தாலும், அவனுடைய பாவம் கர்த்தருடைய பார்வையில் பெரிதாயிருக்கிறது. ஆகையினால் ஆசாரியன் பாவநிவாரண பலியாக ஒரு இளங்காளையை தம்முடைய சந்நிதியில் கொண்டு வரவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இளங்காளை என்பது இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அறியாமையினால் பாவம் செய்து, அவர்களுடைய பாவநிவிர்த்திக்காக செலுத்தப்படும் பாவநிவாரண பலியாகும் (லேவி 4:14). இஸ்ரவேல் சபையார் எல்லோருடைய பாவங்களையும் நிவிர்த்தி பண்ணுவதற்காக செலுத்தப்படும் பாவநிவாரணபலி, ஒரு ஆசாரியனுடைய பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறது.

அபிஷேகம் பெற்ற ஆசாரியன் அந்தக் காளையை ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, அதின் தலைமேல் தன் கையை வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் அதைக் கொல்லக்கடவன் (லேவி 4:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இளங்காளை என்பது கிறிஸ்துவிற்கு அடையாளம். இயேசு கிறிஸ்து பாவமில்லாத வாலிபராக இருந்தார். மனுஷருடைய இடத்தில் அவர் மரித்தார். (1பேதுரு 1:18-23; 1பேதுரு 2:21-25).

சர்வாங்க தகனபலிகளாக செலுத்தப்படும் மிருகங்கள் :

1. காளை - நான்கு வயதிற்கு மேற்பட்டது. (லேவி 1:3; லேவி 8:2; லேவி 16:3)
2. செம்மறியாடு அல்லது வெள்ளாடு (லேவி 1:10; லேவி 9:2; லேவி 16:3,5-28)

சமாதானபலிகளாக செலுத்தப்படும் மிருகங்கள் :

1. காளை அல்லது பசு (லேவி 3:1)
2. ஆட்டுமந்தையிலுள்ள ஆண் அல்லது பெண் அல்லது குட்டி (லேவி 3:6-7,12)

பாவநிவாரணபலிகளாக செலுத்தப்படும் மிருகங்கள் :

1. இளங்காளை - நான்கு வயதிற்கு மேற்பட்டது (லேவி 4:3-4,8,12-21)
2. இளங்காடா (லேவி 4:23)
3. ஆடுகளிலாவது, வெள்ளாடுகளிலாவது ஒரு பெண்குட்டி அல்லது குட்டி (லேவி 5:6)
4. இளங்காளை (லேவி 9:2)

குற்றநிவாரணபலிகளாக செலுத்தப்படும் மிருகங்கள் :

1. பெண்குட்டி அல்லது குட்டி (லேவி 5:6)
2. ஆட்டுக்கடா (லேவி 5:15,18; லேவி 6:6)

மனோற்சாகமாக செலுத்தப்படும் பலிகள் :

1. சர்வாங்க தகனபலிகள் - மாடுகளிலாகிலும், ஆடுகளிலாகிலும், வெள்ளாடுகளிலாகிலும் பழுதற்ற ஒரு ஆண் (லேவி 22:18-21).
2. விசேஷித்த பொருத்தனைகள் - மாடுகளிலாகிலும், ஆடுகளிலாகிலும், வெள்ளாடுகளிலாகிலும் பழுதற்ற ஒரு ஆண். (லேவி 22:18-21,27)
3. மாடு - நான்கு வயதிற்கு மேற்பட்டது. (லேவி 22:23)
4. வெள்ளாடுகளில் ஆண் அல்லது குட்டி (லேவி 22:23)

பண்டிகைகாலத்துப் பலிகள்

1. பஸ்கா பண்டிகை - ஆண் ஆட்டுக்குட்டி (யாத் 12:5)
2. பெந்தெகொஸ்தே - ஒன்பது ஆட்டுக்குட்டிகள், ஒரு காளை, இரண்டு ஆட்டுக்கடாக்கள், ஒரு வெள்ளாட்டுக்கடா (லேவி 23:18-19)

வேதாகமத்தில் பல பலிகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. பலியிடப்படும் மிருகங்கள் அனைத்தும் ஆணாகவே உள்ளன. இது ஆதாமின் மூலமாக வந்த பாவத்தைக் குறிப்பிடுகிறது. தேவனுடைய பிரதிநிதியாக ஆதாமே நியமிக்கப்பட்டார். பிதாக்களின் பாவங்கள் பிள்ளைகளிடத்தில் கேட்கப்படுகிறது. மீட்பரும் ஒரு புருஷராகவே வந்தார். (1தீமோ 2:4-5). பெண் ஆடுகளும் பலியிடப்பட்டிருக்கின்றன. மீறுதலில் புருஷரைப் போலவே ஸ்திரீகளுக்கும் பங்குண்டு என்பதை இது விளக்குகிறது. ஸ்திரீகளும் தங்கள் பாவங்களிலிருந்து மீட்கப்படவேண்டும். சமாதான பலிகளில் மட்டும் பெண்ணாட்டுக் குட்டிகள் பலியிடப்படுகிறது.

ஆசாரியன் தன் கைகளை காளையினுடைய தலையின்மேல் வைக்கும்போது, தான் செய்த பாவத்தை அறிக்கை செய்கிறான். தன்னுடைய பாவங்களையெல்லாம் பாவநிவாரண பலியாகிய காளையின் தலையின்மீது சுமத்துகிறான்.

"அதின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பிவிடக்கடவன்" (லேவி 16:21).

ஆசாரியன், அந்தக் காளையை கர்த்தருடைய சந்நிதியில் கொல்லவேண்டும். அப்பொழுது, அபிஷேகம் பெற்ற ஆசாரியன் அந்தக் காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, அதை ஆசரிப்புக்கூடாரத்தில் கொண்டுவந்து, தன் விரலை இரத்தத்தில் தோய்த்து, பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதியில் ஏழுதரம் தெளிக்கக்கடவன் (லேவி 4:5,6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. இரத்தத்தினால் பாவநிவிர்த்தி உண்டாகிறது. ஆசாரியன் அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக் கூடாரத்திலே கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் சுகந்த தூபபீடத்துக் கொம்புகளின் மேல் பூசி, காளையினுடைய மற்ற இரத்தம் முழுவதையும் ஆசரிப்புக் கூடார வாசலுக்கு முன்பாக இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடவேண்டும் (லேவி 4:7).

ஏழுதரம் என்பது ஒரு பரிபூரணமான கிரியையின் நிறைவைக் குறிக்கும்.

பரிசுத்த வேதாகமத்தில் இரத்தம் பூசப்பட்ட ஒரு சில இடங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. சுகந்த தூபபீடத்து கொம்புகள் (லேவி 4:7)
2. தகனபலிபீடத்தின் அடியில்
3. பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு எதிரே (லேவி 4:6)
4. தகனபீடத்துக் கொம்புகள் (லேவி 4:30)
5. தகனபீடத்து மீது (லேவி 1:5,11; லேவி 3:2)
6. பலிபீடத்தின் பக்கத்தில் (லேவி 5:9)
7. பரிசுத்த ஸ்தலத்தில் (லேவி 6:30; லேவி 16:27)
8. ஆசாரியரின் வலதுகாதின் மடலில் (லேவி 8:23-24)
9. ஆசாரியரின் வலதுகையின் பெருவிரலில் (லேவி 8:23-24)
10. ஆசாரியரின் வலதுகாலின் பெருவிரலில் (லேவி 8:23-24)
11. வீடுகளின்மீது (லேவி 14:51-53)
12. சுத்திகரிக்கப்படும் நபருடைய வலது காதின்மீது (லேவி 14:25,28)
13. சுத்திகரிக்கப்படும் நபரின் வலதுகை பெருவிரல் (லேவி 14:25,28)
14. சுத்திகரிக்கப்படும் நபரின் வலதுகால் பெருவிரல் (லேவி 14:25,28)
15. கிருபாசனத்தின்மீது (லேவி 16:14-15)
16. ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிரில் (எண்19:4)
17. ஜனங்களின்மீது (யாத் 24:6-8)
18. உடன்படிக்கைப் புஸ்தகம்மீது (யாத் 24:6-8)
19. ஆசாரியர்மீது (யாத் 29:21)
20. ஆசாரியரின் வஸ்திரங்கள்மீது (யாத் 29:21)

சில பலிகளைச் செலுத்திய பின்பு, அதன் இரத்தத்தைத் தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடவேண்டும். அந்த ஜீவன் இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு இது அடையாளம். இதுபோலவே பாவநிவாரண பலிகளைச் செலுத்தும் எல்லோர்மீதும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் இலவசமாக ஊற்றப்படுகிறது. பலிபீடத்தின் அடியில் என்பது பலிசெலுத்துகிறவரின் தாழ்மையைக் குறிக்கும். அவர் கர்த்தரிடத்தில் தன்னை முழுவதுமாக அர்ப்பணிக்கிறார்.

கொல்லப்பட்ட காளையின் இரத்தத்தில் ஒரு பகுதியை, ஆசாரியன் தன் விரலை இரத்தத்தில் தோய்த்து, பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதியில் ஏழுதரம் தெளிக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 4:6). திரைக்குள்ளே மகாபரிசுத்த ஸ்தலம் இருக்கிறது. அந்த ஸ்தலத்திலே கிருபாசனம் வைக்கப்பட்டிருக்கிறது. கிருபாசனத்திற்கு வெளியே திரைச்சீலை தொங்கவிடப்பட்டிருக்கிறது.

ஆசாரியன் காளையின் இரத்தத்தை திரைக்கு எதிரே தெளிக்கவேண்டும். அப்போது அவன் திரைக்குள்ளே இருக்கும் உடன்படிக்கைப்பெட்டியையும், கிருபாசனத்தையும் பார்த்து, தன் விரலிலுள்ள இரத்தத்தை ஏழுதரம் தெளிக்கிறான். மகாபரிசுத்த ஸ்தலம் திரைச்சீலையினால் மூடப்பட்டிருக்கிறது. ஆசாரியனால் கிருபாசனத்தைப் பார்க்க முடியாது. ஆனாலும் அவன் கிருபாசனம் இருக்கிற திசையின் பக்கமாய்த் திரும்பி, திரையை நோக்கிப் பார்த்து, அந்த திரையின்மீது அந்த திரைக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதியில், காளையின் இரத்தத்தை ஏழுதரம் தெளிக்கவேண்டும்.

ஆசாரியன் காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக்கூடாரத்திலே, கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் சுகந்த தூபபீடத்து கொம்புகளின்மேல் பூசவேண்டும். ஆசாரியன் சுகந்த தூபபீடத்திலே ஊழியம் செய்கிறான். ஆசாரியன் செய்யத்தகாததை செய்து பாவத்திற்குட்பட்ட படியினால், அவன் கர்த்தருடைய ஊழியத்தை செய்ய முடியாதவனாகயிருக்கிறான். அவனுடைய பாவம், கர்த்தருக்கு ஊழியம் செய்ய முடியாதபடிக்கு அவனை தடைபண்ணுகிறது. அந்த தடை நீங்கவேண்டும் என்பதற்காகவும், தன்னுடைய பாவம் நிவிர்த்தியாகவேண்டும் என்பதற்காகவும், ஆசாரியன் காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, அதை சுகந்த தூபபீடத்து கொம்புகளின்மேல் பூசுகிறான்.

ஆசாரியன் இந்தக் காரியங்களை செய்த பின்பு, மற்ற இரத்தம் முழுவதையும், ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடுகிறான். ஆசாரியன் இவ்வாறு செய்வதினால், தன்னுடைய சொந்த இரத்தத்தையே தண்ணீரைப்போல ஊற்றியதாக பாவிக்கிறான். தான் கர்த்தருடைய கட்டளையை அறியாமையினால் மீறி, செய்யத்தகாததை செய்த பாவத்திற்காக, இந்தக் காளையைப்போல தான் கொல்லப்படவேண்டும் என்றும், காளையின் இரத்தம் தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றப்படுவதுபோல, தன்னுடைய சொந்த இரத்தம் ஊற்றப்படவேண்டும் என்றும் ஆசாரியன் அங்கீகரிக்கிறான். தன்னுடைய பாவத்தினிமித்தமாக, தான் கொல்லப்படவேண்டும் என்பதை பாவம் செய்தவன் ஒப்புக்கொள்கிறான்.

பாவம் செய்த ஆத்துமா, உண்மையாக மனந்திரும்பி, கர்த்தருக்கு முன்பாக தன்னை மொத்தமாக அற்பணிப்பதற்கும், அவனுடைய ஆத்துமா கர்த்தருடைய சந்நிதியில் ஊற்றப்படுவதற்கும், காளையின் இரத்தம் தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றப்படுவது அடையாளமாயிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய ஆத்துமாவை மரணத்திற்கு வார்த்ததற்கும் இந்த சம்பவம் அடையாளமாயிருக்கிறது.

பாவநிவாரணபலியான காளையின் கொழுப்புகள் முதலானவை தகனபலிபீடத்தின்மேல் தகனிக்கப்பட வேண்டும்.

"பாவநிவாரணபலியான காளையின் எல்லாக் கொழுப்புமாகிய குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகள்மேல் இருக்கிற கொழுப்பு முழுவதையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகள்மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடே கூடக் கல்லீரலின்மேல் இருக்கிற ஜவ்வையும், சமாதானபலியின் காளையிலிருந்து எடுக்கிறதுபோல அதிலிருந்து எடுத்து, அவைகளைத் தகனபலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன்" (லேவி 4:8-10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாவநிவாரண பலி, சமாதானபலி ஆகியவற்றின் ஒரு பகுதி தகனபலிபீடத்தின்மேல் தகனிக்கப்பட வேண்டும். பலிசெலுத்துகிறவர் தேவனிடத்தில் தனது மன்னிப்புக்காக மன்றாடுகிறார். தேவனோடு சமாதானமாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். (லேவி 4:10= லேவி 3:3-5,9-11, 14-16).

பாவநிவாரண பலி முழுவதும் தகனபலிபீடத்தின்மீது தகனிக்கப்படுகிறது. (லேவி 4:8-10) மற்றவை பாளயத்திற்கு வெளியே சுட்டெரிக்கப்படுகிறது. (லேவி 4:11-12). இப்படிப்பட்ட பலிகள் பூரண சர்வாங்க தகனபலிகள் என்றழைக்கப்படுகிறது. (லேவி 4:12). ஆசாரியர் இதிலிருந்து புசிக்க முடியாது. ஏனெனில் இவை பலி செலுத்துகிறவருக்கே உரியவை. இதே பிரமாணம் அவருடைய போஜனபலிகளுக்கும் பொருந்தும் (லேவி 6:23). சமாதானபலிகளை மட்டுமே பலிசெலுத்துகிறவர் புசிக்க முடியும் (லேவி 7:15-21).

மேலும் ஆசாரியன், "காளையின் தோலையும், அதின் மாம்சம் முழுவதையும், அதின் தலையையும், தொடைகளையும், அதின் குடல்களையும், அதின் சாணியையும், காளை முழுவதையும் பாளயத்துக்குப் புறம்பே சாம்பல் கொட்டுகிற சுத்தமான இடத்திலே கொண்டுபோய், கட்டைகளின்மேல் போட்டு, அக்கினியாலே சுட்டெரிக்கக்கடவன்; சாம்பல் கொட்டியிருக்கிற இடத்திலே அதைச் சுட்டெரிக்கக்கடவன்" (லேவி 4:11,12) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவாரண பலி செலுத்தப்படுவதினால், பாவம் நிவிர்த்திபண்ணப்படுகிறது. பாவநிவாரண பலி கர்த்தருடைய நாமமகிமைக்காக செலுத்தப்படுகிறது. பாவம் செய்தவன் செய்யத்தகாததை செய்து கர்த்தருடைய நாமத்திற்குஅவகீர்த்தி ஏற்படுத்தியிருக்கிறான். அவன் தன்னுடைய பாவத்திற்காக பாவநிவாரண பலியை செலுத்தி, கர்த்தருக்கு கீர்த்தி உண்டாக்குகிறான். கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறான். பாவம் செய்தவன் தன்னுடைய பாவத்தினால் கர்த்தரை கனவீனம் பண்ணுகிறான். தன்னுடைய பாவத்திற்காக அவன் பாவநிவாரணபலி செலுத்தும்போது, கர்த்தரை கனம்பண்ணுகிறான்.

இஸ்ரவேல் சபையார்
லேவி 4:13-21

லேவி 4:13. இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அறியாமையினால் பாவஞ்செய்து, காரியம் தங்கள் கண்களுக்கு மறைவாயிருக்கிறதினால், கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை மீறி, செய்யத்தகாததைச் செய்து, பாவத்துக்குட்பட்டுக் குற்றவாளிகளானால்,

லேவி 4:14. அவர்கள் செய்த பாவம் தெரியவரும்போது, சபையார் அந்தப் பாவத்தினிமித்தம் ஒரு இளங்காளையை ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாகப் பலி யிடக் கொண்டுவரவேண்டும்.

லேவி 4:15. சபையின் மூப்பர் கர்த்தருடைய சந்நிதியில் தங்கள் கைகளை அதின் தலைமேல் வைக்கக்கடவர்கள்; பின்பு கர்த்தருடைய சந்நிதியில் அந்தக் காளையைக் கொல்லவேண்டும்.

லேவி 4:16. அப்பொழுது, அபிஷேகம் பெற்ற ஆசாரியன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக்கூடாரத்தில் கொண்டுவந்து,

லேவி 4:17. தன் விரலை இரத்தத்தில் தோய்த்து, கர்த்தருடைய சந்நிதியில் திரைக்கு எதிரே ஏழுதரம் தெளித்து,

லேவி 4:18. ஆசரிப்புக் கூடாரத்தில் கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் பலிபீடத்தின் கொம்புகளின்மேல் அந்த இரத்தத்தில் கொஞ்சம் பூசி, மற்ற இரத்தமெல்லாம் ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற தகனபலி பீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

லேவி 4:19. அதின் கொழுப்பு முழுவதையும் அதிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேல் தகனித்து,

லேவி 4:20. பாவநிவாரணபலியின் காளையைச் செய்தபிரகாரம் இந்தக் காளையையும் செய்து, இவ்வண்ணமாய் ஆசாரியன் அவர்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவர்களுக்கு மன்னிக்கப்படும்.

லேவி 4:21. பின்பு காளையைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய், முந்தின காளையைச் சுட்டெரித்ததுபோலச் சுட்டெரிக்கக்கடவன்; இது சபைக்காகச் செய்யப்படும் பாவநிவாரணபலி.

இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அறியாமையினால் பாவம் செய்து பாவத்திற்குட்பட்டு, குற்றவாளிகளாகும்போது, அவர்களுடைய பாவங்கள் நிவிர்த்திபண்ணப்படுவதற்காக கர்த்தர் பாவநிவாரணபலியை நியமிக்கிறார். இஸ்ரவேல் சபையார் எல்லாருடைய பாவம் என்பது இஸ்ரவேல் தேசத்தாரின் பொதுவான பாவத்தைக் குறிக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தாரின் தலைவர்கள், கர்த்தருடைய கட்டளையைமீறி, செய்யத்தகாததை செய்து பாவத்திற்குட்படும்போது, அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரையும் பாவத்திலே வழிநடத்துகிறார்கள். இஸ்ரவேல் சபையார் செய்த பாவம் தெரியவரும்போது, அவர்கள் அந்தப் பாவத்தினிமித்தம் ஆசாரிப்புக்கூடாரத்திற்கு முன்பாக, ஒரு இளங்காளையை, பாவநிவாரண பலியாக பலியிட கொண்டு வரவேண்டும் (லேவி 4:14)

பாவம் செய்தது தெரிய வரும்போது, அதற்காக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவன் நீதியானவர். அவர் உடனடியாகத் தண்டிப்பார். தான் அனுபவிக்கும் தண்டனைக்கு அந்தப் பாவியே பொறுப்பானவனாக இருப்பான். ஆகையினால், தான் ஒரு பாவி என்று உணர்த்தப்பட்டவுடன், அவன் தேவனுடைய சமுகத்தில் உடனடியாகப் பாவநிவாரணம் செய்ய ஆவன செய்ய வேண்டும். (யோவான் 16:7-11; ரோமர் 2:12-16).

இஸ்ரவேல் சபையாரின் தலைவர்கள் பாவம் செய்யும்போது, அவர்கள் இஸ்ரவேல் சபையாரை பாவத்திலே வழிநடத்துகிறார்கள். அப்போது இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அறியாமையினால் பாவஞ்செய்து, காரியம் தங்கள் கண்களுக்கு மறைவாயிருக்கிறதினால், கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை மீறி, செய்யத்தகாததைச் செய்து, பாவத்துக்குட்பட்டுக்குற்றவாளிகளாகிறார்கள் (லேவி 4:13).

"இஸ்ரவேல் சபையார் எல்லாரும்" என்னும் வாக்கியம் ஒருசில தனிநபர்களைக் குறிக்காது. இது இஸ்ரவேல் ஜனத்தார் எல்லாரையும் குறிக்கும். "அவன்" என்னும் பிரதிப்பெயர்ச்சொல் இங்கு "அவர்கள்", "தங்கள்" என்று பயன்படுத்தப்பட்டிருக்கிறது (லேவி 4:3,4,8,13,14,20).

பாவம் செய்கிறவன்மீது கர்த்தருடைய கோபம் எழும்பும். இஸ்ரவேல் சபையார் எல்லாரும் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோர்மீதும் எழும்பும். இஸ்ரவேல் சபையார் கர்த்தருடைய கோபத்திற்கு தப்பிக்க வேண்டுமென்றால், அவர்கள் தங்களுடைய பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்காக, கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன்பாக பாவநிவாரண பலியை கொண்டு வரவேண்டும்.

சபையின் தலைவர்கள் பாவம் செய்யும்போது அவர்கள் முழுசபையையும் தவறான பாதையிலே வழிநடத்திவிடுவார்கள். அப்போது சபையார் எல்லாரும் அறியாமையினால் பாவம் செய்வார்கள். கர்த்தருடைய சபை இந்தப் பூமியில் இருக்கும் வரையிலும், அது கரை திறை இல்லாத, ஒரு பாவமும் அறியாத, பரிபூரணமான பரிசுத்த சபையாக இருக்காது. சபையானது பரலோகத்திற்கு போகும் முன்பாக, அது இந்தப் பூமியிலிருக்கும் வரையிலும், அறியாமையினால் பாவம் செய்து, பாவத்திற்குட்பட்டு, குற்றம் செய்திருக்கும்.

அபிஷேகம் பெற்ற ஆசாரியன் பாவம் செய்யும்போது, காளையினுடைய தலையின்மீது அவன் தன் கையை வைக்கிறான். இஸ்ரவேல் சபையார் எல்லாரும் பாவத்திற்குட்பட்டு குற்றவாளிகளாகும்போது, சபையின் மூப்பர் கர்த்தருடைய சந்நிதியில் தங்கள் கைகளை அந்தக் காளையின் தலைமேல் வைக்கவேண்டும்; பின்பு கர்த்தருடைய சந்நிதியில் அந்தக் காளையைக் கொல்லவேண்டும் (லேவி 4:15).

முழு இஸ்ரவேலருக்கும் சபையின் மூப்பர் பிரதிநிதியாக இருக்கிறார்கள். காளையை யார் கொல்ல வேண்டுமென்று இங்கு கூறப்பட வில்லை. மற்ற பலிகளில் பலிசெலுத்துகிறவர் பலியிடப்படும் மிருகஜீவன்களைக் கொன்றது போன்று, இங்கு இஸ்ரவேலின் மூப்பர்கள் காளையைக் கொல்ல வேண்டும் (லேவி 1:4-5,11).

இஸ்ரவேல் சபையாரின் மூப்பரில் குறைந்த பட்சம் மூன்று மூப்பர் தெரிந்தெடுக்கப்படுவார்கள் என்றும், அவர்கள் தங்கள் கைகளை காளையினுடைய தலையின்மேல் வைக்கவேண்டும் என்றும் யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது. இந்த மூப்பர்கள் இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் பொதுவான பிரதிநிதிகளாயிருக்கிறார்கள்.

அபிஷேகம் பெற்ற ஆசாரியன், கர்த்தருடைய சந்நிதியில் கொல்லப்பட்ட காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக்கூடாரத்தில் கொண்டுவந்து, தன் விரலை இரத்தத்தில் தோய்த்து, கர்த்தருடைய சந்நிதியில் திரைக்கு எதிரே ஏழுதரம் தெளிக்கவேண்டும் (லேவி 4:16,17).

"அபிஷேகம் பெற்ற ஆசாரியன்" என்பது பிரதான ஆசாரியனைக் குறிக்கும். (லேவி 4:3,5,16; லேவி 6:22; லேவி 21:10; எண் 35:25,28; யோசு 20:6; 2இராஜா 25:18).

பிரதான ஆசாரியன் இளங்காளையின் இரத்தத்தை எடுத்து, ஆசரிப்புக் கூடாரத்திற்குள் கொண்டுவந்து, கர்த்தருடைய சந்நிதியில் திரைக்கு எதிரே ஏழுதரம் தெளிக்க வேண்டும். திரைக்கு அடுத்த பக்கத்தில் உடன்படிக்கைப் பெட்டி இருக்கிறது. தெளிக்கப்படும் இடம் ஒருவேளை பொன் பலிபீடத்திற்கு முன்பாக உள்ள தரைப்பகுதியாக இருக்கலாம். அதன்பின்பு, கொம்புகளின்மேல் அந்த இரத்தத்தில் கொஞ்சம் பூசி, மற்ற இரத்தத்தையெல்லாம் ஆசரிப்புக் கூடார வாசலில் இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடவேண்டும் (லேவி 4:16-18). அதின் கொழுப்பு முழுவதையும் அதிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேல் தகனித்து, பின்பு காளையைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய், முந்தின காளையைச் சுட்டெரித்ததுபோலச் சுட்டெரிக்கக்கடவன் (லேவி 4:19-21).

காளையின் இரத்தம் கர்த்தருடைய சந்நிதியில் திரைக்கு எதிரே ஊற்றப்படாமல், ஏழுதரம் தெளிக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களையெல்லாம் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது. கிறிஸ்துவின் இரத்தம் நம்மீது ஊற்றப்படாமல், தெளிக்கப்படுவதே, நம்முடைய பாவங்கள் சுத்திகரிக்கப்படுவதற்கு போதுமானதாயிருக்கிறது.

"அப்படியே, அவர் அநேகம் ஜாதிகள்மேல் தெளிப்பார்; அவர்நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்; ஏனெனில், தங்களுக்குத் தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்துகொள்வார்கள்" (ஏசா 52:15).

காளையின் இரத்தம் கர்த்தருடைய சந்நிதியில் திரைக்கு எதிரே ஏழுதரம் தெளிக்கப்படுகிறது. ஏழு என்னும் எண் பரிபூரணத்தைக் குறிக்கிறது. தேவனாகிய கர்த்தர் இந்த உலகத்தை ஆறுநாட்களிலே சிருஷ்டித்து, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். ஏழுதரம் தெளிப்பது என்பது இயேசுகிறிஸ்துவின் பரிபூரணமான கிருபாதார பலிக்கு அடையாளமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம், மனுஷருடைய ஆத்துமாவை பூரணமாக சுத்தப்படுத்துகிறது.

"ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" (எபி 10:14).

அபிஷேகம் பெற்ற ஆசாரியன், ஆசரிப்புக்கூடாரத்தில் கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் பலிபீடத்தின் கொம்புகளின்மேல் அந்த இரத்தத்தில் கொஞ்சம் பூசி, மற்ற இரத்தமெல்லாம் ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடுகிறார் (லேவி 4:18).

அபிஷேகம் பெற்ற ஆசாரியன் பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்ட காளையின் அதின் கொழுப்பு முழுவதையும் அதிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேல் தகனித்து, பாவநிவாரணபலியின் காளையைச் செய்தபிரகாரம் இந்தக் காளையையும் செய்யவேண்டும். இவ்வண்ணமாய் ஆசாரியன் அவர்களுக்குப் பாவநிவிர்த்தி செய்ய வேண்டும்; அப்பொழுது அது அவர்களுக்கு மன்னிக்கப்படும் (லேவி 4:19,20).

"பின்பு காளையைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய், முந்தின காளையைச் சுட்டெரித்ததுபோலச் சுட்டெரிக்கக்கடவன்; இது சபைக்காகச் செய்யப்படும் பாவநிவாரணபலி" (லேவி 4:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்ட காளை கொல்லப்பட்டு, அதன் இரத்தம் தெளிக்கப்படுகிறது. இதன் மூலமாக இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் பாவநிவிர்த்தி செய்யப்படுகிறது. அப்பொழுது அவர்களுடைய பாவம் அவர்களுக்கு மன்னிக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். பாவநிவிர்த்தியின் வாக்குத்தத்தத்திற்கு, பாவநிவாரண பலி ஆதாரமாயிருக்கிறது.

பிரபு
லேவி 4:22-26

லேவி 4:22. ஒரு பிரபு தன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை மீறி, அறியாமையினால் செய்யத்தகாததைச் செய்து, பாவத்துக்குட்பட்டுக் குற்றவாளியானால்,

லேவி 4:23. தான் செய்தது பாவம் என்று தனக்குத் தெரியவரும்போது, அவன் வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு இளங்கடாவைப் பலியாகக் கொண்டுவந்து,

லேவி 4:24. அந்தக் கடாவின் தலைமேல் தன் கையை வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் அதைக் கொல்லக்கடவன்; இது பாவநிவாரணபலி.

லேவி 4:25. அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேல் பூசி, மற்ற இரத்தத்தைத் தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

லேவி 4:26. அதின் கொழுப்பு முழுவதையும், சமாதானபலியின் கொழுப்பைப்போல, பலிபீடத்தின்மேல் தகனித்து, இவ்வண்ணமாய் ஆசாரியன் அவன் செய்த பாவத்தைக்குறித்து அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

கர்த்தர் அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியனின் பாவத்தை பார்ப்பதுபோலவும், இஸ்ரவேல் சபையார் எல்லாருடைய பாவங்களைப் பார்ப்பதுபோலவும், இஸ்ரவேல் புத்திரருடைய பிரபுவின் பாவத்தையும் கண்ணோக்கிப் பார்க்கிறார். பிரபுக்கள் பாவம் செய்யும்போது கர்த்தர் அவர்கள்மேலும் கோபப்படுகிறார்.

ஒரு பிரபு தன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை மீறி, அறியாமையினால் செய்யத்தகாததைச் செய்து, பாவத்துக்குட்பட்டுக் குற்றவாளியாகிறான் (லேவி 4:22).

நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் இரண்டுவிதமான பாவங்கள் உள்ளன. அவையாவன :

1. அறியாமல் செய்த பாவங்கள் (லேவி 4:2,13-14, 22-23,27-28; லேவி 5:15,18; எண் 15:24-29, (உபா 19:4).

2. துணிகரமான பாவங்கள் (யாத் 21:14; எண் 15:30; உபா 1:43; உபா 17:12-13; உபா 18:20-22; சங் 19:13; 2பேதுரு 2:10, லேவி 24:11-16; எபி 10:26-31).

குற்றவாளியான பிரபு தான் செய்தது பாவம் என்று தனக்குத் தெரியவரும்போது, அவன் வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு இளங்கடாவைப் பலியாகக் கொண்டுவந்து, அந்தக் கடாவின் தலைமேல் தன் கையை வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் அதைக் கொல்லவேண்டும்; இது பாவநிவாரணபலி (லேவி 4:23,24).

சாதாரண மனுஷரைப் போலவே பிரபுக்களும் தங்களுடைய பாவங்களுக்குப் பாவநிவாரணம் செய்ய வேண்டும் (லேவி 4:23-26). பிரபுக்களின் ஐசுவரியம், அந்தஸ்து, அதிகாரம் ஆகிய எதுவும் அவர்களுடைய பாவங்களை மன்னிக்காது. பிரபுக்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டியவர்கள்.

ஒருவேளை குற்றம் செய்த பிரபுவின் மனச்சாட்சி, அவனுடைய பாவத்தை அவனுக்கு உணர்த்தியிருக்கலாம். அல்லது அவனுடைய சிநேகிதர்கள் அவனுடைய பாவத்தை அவனுக்கு கண்டித்து உணர்த்தியிருக்கலாம். பிரபுவின் பாவத்திற்கு நிவாரணமாக, வெள்ளாடுகளும் பழுதற்ற ஒரு இளங்கடாவும் பாவநிவாரண பலியாக செலுத்தவேண்டும் என்று கர்த்தர் நியமித்திருக்கிறார்.

அபிஷேகம் பெற்ற ஆசாரியனும், இஸ்ரவேல் சபையார் எல்லோரும் பாவத்திற்குட்பட்டு குற்றவாளிகளாகும்போது, அவர்களுக்கு பாவநிவாரண பலியாக ஒரு இளங்காளையை கர்த்தர் நியமிக்கிறார். பிரபுவின் பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்கு ஒரு இளங்காளை நியமிக்கப்படாமல், வெள்ளாடுகளில் ஒரு இளங்கடா மாத்திரமே நியமிக்கப்பட்டிருக்கிறது.

அபிஷேகம் பெற்ற ஆசாரியனுடைய பாவத்தை நிவிர்த்திபண்ணும்போதும், இஸ்ரவேல் சபையார் எல்லோருடைய பாவத்தை நிவிர்த்திபண்ணும்போதும், பாவநிவாரண பலியாக கொல்லப்பட்ட மிருகத்தின் இரத்தம், கர்த்தருடைய சந்நிதியில் திரைக்கு எதிரே ஏழுதரம் தெளிக்கப்படுகிறது. ஆனால் பிரபுவின் பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்கு, இளங்கடாவின் இரத்தம் திரைக்கு எதிரே தெளிக்கப்படவில்லை.

பிரபுவின் பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்காக, ஆசாரியன் பாவநிவாரண பலியாக கொல்லப்பட்ட இளங்கடாவின் இரத்தத்தில், கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேல் பூசி, மற்ற இரத்தத்தைத் தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடவேண்டும் (லேவி 4:25).

அபிஷேகம் பெற்ற ஆசாரியனுடைய பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்காகவும், இஸ்ரவேல் சபையார் எல்லாருடைய பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்காகவும் ஒரு இளங்காளை பாவநிவாரண பலியாக செலுத்தப்படுகிறது. அந்தக் காளை முழுவதையும் பாளையத்திற்கு புறம்பே கட்டைகளின்மேல் போட்டு, அக்கினியாலே சுட்டெரிக்கவேண்டும் என்று கர்த்தர் கட்டளை கொடுத்திருக்கிறார் (லேவி 4:12,21).

பிரபுவுக்கு பாவநிவிர்த்தி செய்வதற்காக, ஆட்டுக்கடா கொல்லப்படும்போது, அந்தக் கடாவானது பாளயத்திற்கு புறம்பே சுட்டெரிக்கப்படவில்லை.

அபிஷேகம் பெற்ற ஆசாரியனுடைய பாவமும், இஸ்ரவேல் சபையார் எல்லாரும் செய்கிற பாவமும், பிரபு செய்கிற பாவத்தைவிட மிகவும் பெரிய பாவமாகவும், கடுமையான பாவமாகவும் கர்த்தருடைய பார்வையில் தெரிகிறது. ஆகையினால் ஆசாரியனுக்கும் இஸ்ரவேல் சபையாருக்கும் பாவநிவாரண பலி செலுத்தப்படும்போது, அதன் மாம்சம் பாளயத்திற்கு புறம்பே அக்கினியிலே சுட்டெரிக்கப்படுகிறது. ஆனால் பிரபுவின் பாவத்திற்காக பாவநிவாரண பலியாக செலுத்தப்படும் ஆட்டுக்கடாவின் மாம்சம் பாளயத்திற்கு புறம்பே அக்கினியிலே சுட்டெரிக்கப்படவில்லை.

அபிஷேகம் பெற்ற ஆசாரியன் அந்த ஆட்டுக்கடாவின் கொழுப்பு முழுவதையும், சமாதானபலியின் கொழுப்பைப்போல, பலிபீடத்தின்மேல் தகனிக்கவேண்டும். இவ்வண்ணமாய் ஆசாரியன் அந்தப் பிரபு செய்த பாவத்தைக்குறித்து அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யவேண்டும்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும் (லேவி 4:26). பிரபுவின் பாவம் மன்னிக்கப்படவேண்டுமென்றால் அவன் தன் பாவத்திற்கு மனந்திரும்பவேண்டும். அவனுடைய இருதயம் புதுப்பிக்கப்பட வேண்டும். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. அதுபோலவே பாவத்திற்கு மனந்திரும்பாமலும் பாவமன்னிப்பு கிடைப்பதற்கு வாய்ப்பில்லை.

சாதாரண ஜனங்களில் ஒருவன் லேவி 4:27-35

லேவி 4:27. சாதாரண ஜனங்களில் ஒருவன் அறியாமையினால் கர்த்தரின் கட்டளைகளில் யாதொன்றை மீறி, செய்யத்தகாததைச் செய்து, பாவத்துக்குட்பட்டுக் குற்றவாளியானால்,

லேவி 4:28. தான் செய்தது பாவம் என்று தனக்குத் தெரியவரும்போது, அவன் தான் செய்த பாவத்தினிமித்தம் வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு பெண்குட்டியைப் பலியாகக் கொண்டுவந்து,

லேவி 4:29. பாவநிவாரணபலியின் தலைமேல் தன் கையை வைத்து, சர்வாங்க தகனபலியிடும் இடத்தில் அந்தப் பாவநிவாரணபலியைக் கொல்லக்கடவன்.

லேவி 4:30. அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேல் பூசி, மற்ற இரத்தமெல்லாம் பலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

லேவி 4:31. சமாதானபலியிலிருந்து கொழுப்பை எடுப்பதுபோல, அதின் கொழுப்பு முழுவதையும் எடுத்து, ஆசாரியன் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகத் தகனித்து, இவ்வண்ணமாய் அவனுக்குப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

லேவி 4:32. அவன் பாவநிவாரண பலியாக ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டுவருவானாகில், பழுதற்ற பெண்குட்டியைக் கொண்டுவந்து,

லேவி 4:33. அந்தப் பாவநிவாரணபலியின் தலைமேல் தன் கையை வைத்து, சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் அதைப் பாவநிவாரண பலியாகக் கொல்லக்கடவன்.

லேவி 4:34. அப்பொழுது ஆசாரியன் அந்தப் பாவநிவாரணபலியின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேல் பூசி, மற்ற இரத்தமெல்லாம் பலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

லேவி 4:35. சமாதான பலியான ஆட்டுக்குட்டியின் கொழுப்பை எடுக்கிறது போல, அதின் கொழுப்பு முழுவதையும் எடுத்து, கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளைப் போல, பலிபீடத்தின்மேல் ஆசாரியன் தகனிக்கவேண்டும்; இவ்வண்ணமாய் அவன் செய்த பாவத்துக்கு ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

பிரபு பாவத்திற்குட்பட்டு குற்றவாளியாகும்போது, அவனுடைய பாவத்திற்காக கொண்டு வரப்படும் பாவநிவாரண பலிக்கும், சாதாரண ஜனங்களில் ஒருவன் பாவத்திற்குட்பட்டு குற்றவாளியாகும்போது, அவனுடைய பாவத்திற்காக கொண்டு வரப்படும் பாவநிவாரண பலிக்கும் அதிகவித்தியாசம் எதுவுமில்லை.

சாதாரண ஜனங்களில் ஒருவன் அறியாமையினால் கர்த்தரின் கட்டளைகளில் யாதொன்றை மீறி, செய்யத்தகாததைச் செய்து, பாவத்துக்குட்பட்டுக் குற்றவாளியானால், தான் செய்தது பாவம் என்று தனக்குத் தெரியவரும்போது, அவன் தான் செய்த பாவத்தினிமித்தம் வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு பெண்குட்டியைப் பலியாகக் கொண்டுவரவேண்டும் (லேவி 4:27,28).

ஆசாரியர்கள், பிரபுக்கள், மூப்பர்கள் ஆகியோரைத் தவிர இஸ்ரவேலின் மற்ற ஜனங்கள் சாதாரண ஜனங்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். சாதாரண ஜனங்கள் பாவநிவாரண பலியாகப் பெண்குட்டியைப் பலியிடுகிறார்கள். ஆசாரியர்களும் (லேவி 4:14), பிரபுக்களும் (லேவி 4:22-23) மிருகஜீவன்களில் ஆண்குட்டியைப் பலியிட வேண்டும். பலியிடப்படுவது ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அது பழுதற்றதாக இருக்க வேண்டும். பாவநிவாரண பலியாக அங்கீகரிக்கப்படும் விதமாக அது இருக்க வேண்டியது மிகவும் அவசியம் (லேவி 4:28).

அவன் தான் செய்த பாவத்தினிமித்தம் வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு பெண்குட்டியைப் பலியாகக் கொண்டுவர வேண்டும். தன்னுடைய பாவத்தை அவன் அங்கிகரித்து, தன்னுடைய பாவநிவிர்த்திக்காக செலுத்த வேண்டிய பலிகளை உடனடியாகச் செலுத்த வேண்டும்.

பிரபு பாவநிவாரண பலியாக வெள்ளாடுகளில் ஒரு இளங்கடாவை பலியாக கொண்டு வரவேண்டும். சாதாரண ஜனங்களில் ஒருவன், பாவநிவாரண பலியாக, வெள்ளாடுகளில் ஒரு பெண் குட்டியை பலியாக கொண்டு வரவேண்டும். பிரபுவுக்கு ஆண்கடாவும், சாதாரண ஜனங்களில் ஒருவனுக்கு பெண்குட்டியும் பாவநிவாரண பலியாக நியமிக்கப்பட்டிருக்கிறது.

சாதாரண ஜனங்களில் ஒருவன் அறியாமையினால் கர்த்தரின் கட்டளையை மீறி செய்யத்தகாததை செய்து பாவத்திற்குட்படுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளது. தாவீதும் தன்னிடத்தில் இதுபோன்ற இரகசியமான பாவங்கள் இருக்குமோ என்று நினைத்து, கர்த்தரிடத்தில் தனக்காக ஜெபம்பண்ணுகிறார். இப்படிப்பட்ட இரகசிய பாவங்கள், நம்மையும் அறியாமல் நம்மிடத்தில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

"தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்" (சங் 19:12) என்று சங்கீதக்காரர் ஜெபம்பண்ணுவதுபோல நாமும் ஜெபம்பண்ணவேண்டும்.

சாதாரண ஜனங்களில் ஒருவன் பாவத்திற்குட்பட்டு குற்றவாளியாகும்போது, அவன் ஒரு பெண்குட்டியை பலியாகக் கொண்டு வந்து பாவநிவாரணபலியின் தலைமேல் தன் கையை வைத்து, சர்வாங்க தகனபலியிடும் இடத்தில் அந்தப் பாவநிவாரணபலியைக் கொல்ல வேண்டும் (லேவி 4:29).

அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேல் பூசி, மற்ற இரத்தமெல்லாம் பலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு, சமாதானபலியிலிருந்து கொழுப்பை எடுப்பதுபோல, அதின் கொழுப்பு முழுவதையும் எடுத்து, ஆசாரியன் பலி பீடத்தின்மேல் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகத் தகனித்து, இவ்வண்ணமாய் அவனுக்குப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும் (லேவி 4:30,31).

ஆசாரியர்களுக்கும், பொதுஜனங்களுக்கும் பாவநிவாரணம் செய்யப்படும்போது, இரண்டு முக்கியமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவையாவன:

1. ஆசாரியருக்குப் பாவநிவாரண பலி செலுத்தப்படும்போது அதன் இரத்தத்தை மகா பரிசுத்த ஸ்தலத்தில் கர்த்தருடைய சந்நிதானத்திற்கு முன்பாகவும், பொன்பலிபீடத்திலுள்ள கொம்புகளிலும் தெளிக்க வேண்டும். (லேவி 4:6-7) சாதாரண ஜனங்களுக்கு வெண்கல பலிபீடத்திலுள்ள கொம்புகளில் தெளிக்க வேண்டும்.

2. ஆசாரியர்களுக்காகச் செலுத்தப்படும் பாவநிவாரண பலியின் மிருகஜீவனை வெண்கல பலிபீடத்திலும், பாளயத்திற்கு வெளியேயும் முழுவதுமாகத் தகனிக்க வேண்டும். *(லேவி 4:8-12)* சாதாரண ஜனங்களுக்காகச் செலுத்தப்படும் பாவநிவாரண பலியில், ஒரு பாகத்தைத் தகனித்துவிட்டு, மற்றொரு பாகத்தை ஆசாரியர் புசிக்கலாம். *(லேவி 4:31; உபா 6:26)*

"சமாதான பலியான ஆட்டுக்குட்டியின் கொழுப்பை எடுக்கிறதுபோல, அதின் கொழுப்பு முழுவதையும் எடுத்து, கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளைப் போல, பலிபீடத்தின்மேல் ஆசாரியன் தகனிக்கவேண்டும்; இவ்வண்ணமாய் அவன் செய்த பாவத்துக்கு ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும்" *(லேவி 4:35)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சாதாரண ஜனங்களில் ஒருவன் பாவநிவாரண பலியாக ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டுவருவானாகில், பழுதற்ற பெண்குட்டியைக் கொண்டுவந்து, அந்தப் பாவநிவாரணபலியின் தலைமேல் தன் கையை வைத்து, சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் அதைப் பாவநிவாரண பலியாகக் கொல்ல வேண்டும் *(லேவி 4:32,33)*.

ஆசாரியன் அந்தப் பாவநிவாரணபலியின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகனபலி பீடத்துக் கொம்புகளின்மேல் பூசி, மற்ற இரத்தமெல்லாம் பலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடவேண்டும் *(லேவி 4:34)*.

கர்த்தருடைய பலிபீடத்திலே, பாவநிவாரண பலியை செலுத்துவதற்காக, ஐசுவரியவானும் தரித்திரனும், பிரபுவும் சாதாரண ஜனங்களில் ஒருவனும், அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியனும் வருமாறு அழைக்கப்படுகிறார்கள். கர்த்தருடைய பலிபீடம் எல்லோருடைய பாவங்களும் நிவிர்த்தி பண்ணப்படுகிற ஸ்தலமாகயிருக்கிறது. கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் பாவிகள் எல்லோரும் தம்மிடத்தில் வரலாம் என்றும், தம்முடைய இரத்தத்தின் மூலமாக அவர்கள் தங்களுடைய பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அழைக்கிறார்.

"இப்படியிருக்க, பிரபுக்களின் முகத்தைப்பாராமலும், ஏழையைப்பார்க்கிலும் ஐசுவரியவானை அதிகமாய் எண்ணாமலும் இருக்கிறவரை நோக்கி இப்படிச் சொல்லலாமா? இவர்கள் எல்லாரும் அவர் கரங்களின் கிரியையே" *(யோபு 34:19)*.

பாவநிவாரண பலிகளின் மூலமாக, நாம் ஒரு சில ஆவிக்குரிய உபதேசங்களைக் கற்றுக்கொள்கிறோம். நாம் எல்லோருமே பாவங்களை வெறுக்கவேண்டும். நாம் பாவத்திற்கு விரோதமாக மிகவும் எச்சரிப்பாக ஜீவிக்கவேண்டும். பாவம் செய்யாதவாறு நம்முடைய ஆத்துமாவைக் காத்துக்கொள்ளவேண்டும்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு மெய்யான பாவநிவாரண பலியாக இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களையெல்லாம் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது.

நம்முடைய பாவங்களை முற்றிலுமாய் நீக்குவதற்கும், நம்மை சுத்திகரிப்பதற்கும் காளை, வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தம் போதுமானதல்ல.

கர்த்தர் மோசேயினிடத்தில் பாவநிவாரண பலிகள் சம்பந்தமான கட்டளைகளை சொல்லுகிறார். அதன் பொதுவான விவரம் வருமாறு :

1. அபிஷேகம் பெற்ற ஆசாரியன், பாவஞ் செய்தால், தான் செய்த பாவத்தினிமித்தம் பழுதற்ற ஒரு இளங்காளையை பாவநிவாரண பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரக்கடவன் *(லேவி 4:2-3)*.

2. அவன் அந்தக் காளையை ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரக்கடவன். *(லேவி 4:4)*.

3. அதின் தலைமேல் தன் கையை வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் அதைக் கொல்லக்கடவன்.

4. அபிஷேகம் பெற்ற ஆசாரியன் அந்தக் காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, அதை ஆசரிப்புக் கூடாரத்தில் கொண்டுவரக்கடவன் (லேவி 4:5).

5. தன் விரலை இரத்தத்தில் தோய்த்து, பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதியில் ஏழுதரம் தெளிக்கக்கடவன் (லேவி 4:6).

6. ஆசாரியன் அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக் கூடாரத்திலே கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் சுகந்த தூபபீடத்துக் கொம்புகளின் மேல் பூசக்கடவன். (லேவி 4:7).

7. ஆசாரியன் காளையினுடைய மற்ற இரத்தம் முழுவதையும் ஆசரிப்புக் கூடார வாசலுக்கு முன்பாக இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடக்கடவன்.

8. பாவநிவாரணபலியான காளையின் எல்லாக் கொழுப்புமாகிய குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகள்மேல் இருக்கிற கொழுப்பு முழுவதையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகள்மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக் காய்களோடே கூடக் கல்லீரலின்மேல் இருக்கிற ஜவ்வையும், சமாதானபலி யின் காளையிலிருந்து எடுக்கிறதுபோல அதிலிருந்து எடுத்து, அவைகளைத் தகனபலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன். (லேவி 4:8-10).

9. காளையின் தோலையும், அதின் மாம்சம் முழுவதையும், அதின் தலையையும், தொடைகளையும், அதின் குடல்களையும், அதின் சாணியையும், காளை முழுவதையும் பாளயத்துக்குப் புறம்பே சாம்பல் கொட்டுகிற சுத்தமான இடத்திலேகொண்டுபோய், கட்டைகளின் மேல் போட்டு, அக்கினியாலே சுட்டெரிக்கக்கடவன்; சாம்பல் கொட்டியிருக்கிற இடத்திலே அதைச் சுட்டெரிக்கக்கடவன். (லேவி 4:11-12).

10. இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அறியாமையினால் பாவஞ்செய்தால், சபையார் அந்தப் பாவத்தினிமித்தம் ஒரு இளங்காளையை ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாகப் பலியிடக் கொண்டுவரவேண்டும். (லேவி 4:13-14).

11. சபையின் மூப்பர் கர்த்தருடைய சந்நிதியில் தங்கள் கைகளை அதின் தலைமேல் வைக்கக்கடவர்கள்; பின்பு கர்த்தருடைய சந்நிதியில் அந்தக் காளையைக் கொல்லவேண்டும். (லேவி 4:15).

12. அபிஷேகம் பெற்ற ஆசாரியன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக்கூடாரத்தில் கொண்டுவரக் கடவன். (லேவி 4:16).

13. தன் விரலை இரத்தத்தில் தோய்த்து, கர்த்தருடைய சந்நிதியில் திரைக்கு எதிரே ஏழுதரம் தெளிக்கக்கடவன். (லேவி 4:17).

14. ஆசாரியன் ஆசரிப்புக் கூடாரத்தில் கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் பலிபீடத்தின் கொம்புகளின்மேல் அந்த இரத்தத்தில் கொஞ்சம் பூசக்கடவன். (லேவி 4:18).

15. ஆசாரியன் மற்ற இரத்தத்தையெல்லாம் ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடக்கடவன்.

16. அதின் கொழுப்பு முழுவதையும் அதிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன். (லேவி 4:19-20).

17. காளையைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய், சுட்டெரிக்கக்கடவன் (லேவி 4:21).

18. ஒரு பிரபு தான் செய்தது பாவம் என்று தனக்குத் தெரியவரும்போது, அவன் வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு இளங்கடாவைப் பலியாகக் கொண்டு வரக்கடவன். (லேவி 4:22-23).

19. அந்தக் கடாவின் தலைமேல் தன் கையை வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் அதைக் கொல்லக்கடவன். (லேவி 1:11, 4:24).

20. ஆசாரியன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேல் பூசி, மற்ற இரத்தத்தைத் தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடக்கடவன் (லேவி 4:25).

21. ஆசாரியன் அதின் கொழுப்பு முழுவதையும், பலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன். (லேவி 3:3-5, 4:26).

22. சாதாரண ஜனங்களில் ஒருவன் தான் செய்தது பாவம் என்று தனக்குத் தெரியவரும்போது, அவன் தான் செய்த பாவத்தினிமித்தம் வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு பெண்குட்டியைப் பலியாகக் கொண்டுவரக்கடவன். (லேவி 4:27-28,32).

23. பாவநிவாரணபலியின் தலைமேல் பாவம் செய்த சாதாரண ஜனங்களில் ஒருவன் தன் கையை வைத்து, சர்வாங்க தகனபலியிடும் இடத்தில் அந்தப் பாவநிவாரணபலியைக் கொல்லக்கடவன். (லேவி 1:11, லேவி 4:29,32-33).

24. ஆசாரியன் அதின் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேல் பூசி, மற்ற இரத்தத்தையெல்லாம் பலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடக்கடவன் (லேவி 4:30,34).

25. ஆசாரியன் அதின் கொழுப்பு முழுவதையும் எடுத்து, ஆசாரியன் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகத் தகனிக்கக்கடவன். (லேவி 3:3-5, லேவி 4:31,35).

5 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் குற்றநிவாரண பலியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பாவநிவாரண பலிக்கும், குற்றநிவாரண பலிக்கும் அதிகமான வித்தியாசம் எதுவுமில்லை. இவ்விரண்டு பலிகளுமே ஒருவருடைய பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்காகவே செலுத்தப்படுகிறது. பொதுவான பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு பாவநிவாரண பலியையும், ஒரு சில குறிப்பிட்ட பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு குற்றநிவாரண பலியையும் கர்த்தர் நியமனம் செய்திருக்கிறார்.

மனுஷருக்கு அக்கிரமமாக சொல்லப்பட்டிருக்கிற பாவங்கள். ஒருவன் இடப்பட்ட ஆணையை கேட்டிருந்தும், தான் கண்டதையும் அறிந்ததையும் தெரிவியாதிருப்பது (லேவி 5:1). அசுத்தமான யாதொரு வஸ்துவை அறியாமல் தொடுவது (லேவி 5:2,3). பதறி ஆணையிடுவது (லேவி 5:4).

கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றம் செய்வது (லேவி 5:14-16). கர்த்தருடைய கட்டளைகளினால் விலக்கப்பட்டதை செய்வது (லேவி 5:17-19).

மேலும் சில பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக குற்றநிவாரண பலிகள் செலுத்தப்பட்டிருக்கிறது (லேவி 6:2-4; 14:12; 19:21; எண் 6:12).

குற்றநிவாரண பலி - வெள்ளாடு அல்லது ஒரு பெண்குட்டி (லேவி 5:5,6). இரண்டு காட்டுப்புறாக்கள் அல்லது இரண்டு புறாக்குஞ்சுகள் (லேவி 5:7-10). மெல்லிய மாவு (லேவி 5:11-13). குற்றநிவாரண பலியாக பழுதற்ற ஆட்டுக்கடா நியமிக்கப்பட்டிருக்கிறது (லேவி 5:15-19).

அக்கிரமம், குற்றம்
லேவி 5:1-6

லேவி 5:1. சாட்சியாகிய ஒருவன், இடப்பட்ட ஆணையைக் கேட்டிருந்தும், தான் கண்டதையும் அறிந்ததையும் தெரிவியாதிருந்து பாவஞ்செய்தால், அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

லேவி 5:2. அசுத்தமான காட்டு மிருகத்தின் உடலையாவது, அசுத்தமான நாட்டு மிருகத்தின் உடலையாவது, அசுத்தமான ஊரும் பிராணிகளின் உடலையாவது, இவ்வித அசுத்தமான யாதொரு வஸ்துவையாவது, ஒருவன் அறியாமல் தொட்டால், அவன் தீட்டும் குற்றமும் உள்ளவனாவான்.

லேவி 5:3. அல்லது, எந்த அசுத்தத்தினாலாகிலும் தீட்டுப்பட்ட ஒரு மனிதனை ஒருவன் அறியாமல் தொட்டு, பின்பு அதை அறிந்துகொண்டால், அவன் குற்றமுள்ளவனாவான்.

லேவி 5:4. மனிதர் பதறி ஆணையிடும் எந்தக் காரியத்திலானாலும், ஒருவன் தீமை செய்கிறதற்காவது நன்மை செய்கிறதற்காவது, தன் மனம் அறியாமல், தன் உதடுகளினால் பதறி ஆணையிட்டு, பின்பு அவன் அதை அறிந்துகொண்டால், அதைக் குறித்துக் குற்றமுள்ளவனாவான்.

லேவி 5:5. இப்படிப்பட்டவைகள் ஒன்றில், ஒருவன் குற்றமுள்ளவனாகும்போது, அவன் தான் செய்தது பாவம் என்று அறிக்கையிட்டு,

லேவி 5:6. தான் செய்த பாவத்துக்குப் பாவநிவாரணபலியாக, ஆடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது, ஒரு பெண்குட்டியைக் குற்றநிவாரண பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவர வேண்டும்; அதினாலே ஆசாரியன் அவன் செய்த பாவத்தைக்குறித்து அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்.

கர்த்தருடைய ஜனத்தார் உண்மையை மாத்திரமே பேசவேண்டும். உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லாததென்றும் சொல்லவேண்டும். உண்மையை மூடிமறைப்பதும், பாதி உண்மையை மறைத்து மீதி உண்மையை பேசுவதும், பொய்பேசுவதும் பாவமாகும். நீதிமன்றத்திலே நாம் சாட்சியாக நிற்கும்போது, நாம் கண்டதையும், அறிந்ததையும் குறித்து உண்மையாய்ச் சாட்சி சொல்லவேண்டும்.

"சாட்சியாகிய ஒருவன், இடப்பட்ட ஆணையைக் கேட்டிருந்தும், தான் கண்டதையும் அறிந்ததையும் தெரிவியாதிருந்து பாவஞ்செய்தால், அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்" *(லேவி 5:1)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதருடைய நீதிமன்றத்திலே, வழக்குகளைக் குறித்து சாட்சி சொல்லுகிறவர்களை, கர்த்தர் பேரில் ஆணையிட்டு சொல்லச் சொல்லுவார்கள். சாட்சிக்காரர்களை மாத்திரமல்லாமல், சந்தேகப்படுகிறவர்களையும் தங்களுக்கு தெரிந்த உண்மையைச் சொல்லுமாறு நீதிபதிகள் ஆணையிடுவார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரதான ஆசாரியனுக்கு முன்பாக விசாரிக்கப்பட்டார். யூதர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக சாட்சி சொன்னார்கள். இயேசுவோ அவர்களுக்கு பிரதியுத்தம் ஒன்றும் சொல்லாமல் பேசாமலிருந்தார். ஆனாலும் தேவன்பேரில் ஆணையிட்டுக் கேட்டபோது, கிறிஸ்துவானவர் அமைதியாயிராமல், அவர்களுக்கு சத்தியத்தைச் சொன்னார்.

"அப்பொழுது, பிரதான ஆசாரியன் எழுந்திருந்து, அவரை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்றான். இயேசுவோ பேசாமலிருந்தார். அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான்" *(மத் 26:62,63).*

"அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்; அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" *(மத் 26:64).*

லேவி 5:1- ஆவது வசனத்தில் "ஒருவன் பாவம் செய்தால்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்திற்கு "ஒரு ஆத்துமா பாவம் செய்தால்" என்பது பொருளாகும். ஆத்துமாவே பாவம் செய்கிறது. ஒருவனுடைய ஆத்துமா, தான் கண்டதையும் அறிந்ததையும் தெரிவிக்குமாறு ஆணையிடப்படும்போது, அந்த ஆத்துமா உண்மை சொல்லுவதற்கு மறுக்கக்கூடாது. அது உண்மையை மறைத்து பொய்சொல்லவும் கூடாது. ஆத்துமா மவுனமாயும் இருக்கக்கூடாது.

நாம் கண்டதையும் அறிந்ததையும் தெரிவிக்கவேண்டும். நாம் காணாததையும், அறியாததையும், கண்டது போலவும், அறிந்ததுபோலவும் பாவித்து, நம்முடைய இஷ்டப்பிரகாரம் எதையும் சொல்லக்கூடாது. ஒரு காரியத்தைக் குறித்து சாட்சி சொல்லுகிறவர்கள் மிகவும் கவனமாகப் பேசவேண்டும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமும் பல சமயங்களில் சாட்சி சொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் சாட்சி சொல்லும்போது, இந்த வசனத்தை நினைவுகூர்ந்து சாட்சி சொல்லவேண்டும். நாம் கர்த்தர்மீது ஆணையிட்டு பேசும்போது, மிகவும் கவனமாகவும் எச்சரிப்பாகவும் பேசவேண்டும். கர்த்தருடைய நாமத்தினால் ஆணையிடுவது மிகவும் பரிசுத்தமானது. கர்த்தருடைய நாமத்தினாலே பேசுகிறவர்கள் மிகவும் கவனமாகவும், எச்சரிப்பாகவும் பேசவேண்டும். கவனக்குறைவாகவும், உண்மையை மூடி மறைக்கும் வண்ணமாகவும், ஏனோதானோவென்றும் பேசுவது கர்த்தருக்கு விரோதமான பாவம்.

அசுத்தமான யாதொரு வஸ்தையும் தொடுவது தீட்டும் குற்றமும் ஆகும் என்று கர்த்தர் சொல்லுகிறார். "அசுத்தமான காட்டு மிருகத்தின் உடலையாவது, அசுத்தமான நாட்டு மிருகத்தின் உடலையாவது, அசுத்தமான ஊரும் பிராணிகளின் உடலையாவது, இவ்வித அசுத்தமான யாதொரு வஸ்துவையாவது, ஒருவன் அறியாமல் தொட்டால், அவன் தீட்டும் குற்றமும் உள்ளவனாவான்" (லேவி 5:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அல்லது, எந்த அசுத்தத்தினாலாகிலும் தீட்டுப்பட்ட ஒரு மனிதனை ஒருவன் அறியாமல் தொட்டு, பின்பு அதை அறிந்துகொண்டால், அவன் குற்றமுள்ளவனாவான் (லேவி 5:3).

ஒருவன் அசுத்தமான யாதொன்றை தொட்டுவிட்டு, கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்திற்குள்ளே தன்னை சுத்தம்பண்ணாமல் வரக்கூடாது. நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம், அசுத்தமானவன் தன்னை முதலாவதாக சுத்தம்பண்ணவேண்டும். அவனுடைய குற்றமும் தீட்டும் அவனை விட்டு நீங்கவேண்டும். அதன் பின்பே அவன் கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு வந்து பலியையோ அல்லது காணிக்கையையோ செலுத்தவேண்டும்.

முதலாவது தீட்டும் குற்றமும் நீங்கவேண்டும். அதற்கு பின்பே பாவநிவாரணமும், குற்றநிவாரணமும் செலுத்தவேண்டும் என்பது கர்த்தருடைய பிரமாணம்.

ஒரு மனுஷன் பதறி ஆணையிடுவது கர்த்தருடைய பார்வையில் பாவமாயிருக்கிறது. "மனிதர் பதறி ஆணையிடும் எந்தக் காரியத்திலானாலும், ஒருவன் தீமை செய்கிறதற்காவது நன்மை செய்கிறதற்காவது, தன் மனம் அறியாமல், தன் உதடுகளினால் பதறி ஆணையிட்டு, பின்பு அவன் அதை அறிந்துகொண்டால், அதைக் குறித்துக் குற்றமுள்ளவனாவான்" (லேவி 5:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆணையிடுகிறவன் அந்த ஆணைக்கு கட்டுப்படவேண்டும். தனக்கு நஷ்டம் வந்தாலும் தான் பண்ணின ஆணையை நிறைவேற்றவேண்டும். ஒரு சிலர் யோசித்துப் பார்க்காமல், அவசரப்பட்டு, பதறி ஆணையிடுகிறார்கள். அதன் பின்பு தாங்கள் ஆணையிட்ட காரியம் கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமானது என்பதை அறிந்துகொள்கிறார்கள்.

ஒருவன் பதறி ஆணையிட்டாலும், தான் ஆணையிட்டதை நிறைவேற்றாமலிருப்பது அவனுக்கு குற்றமாயிருக்கும். இந்தக் குற்றத்தை அவன் மனமறியாமல், தன் உதடுகளினால் பதறி ஆணையிட்டிருந்தால், இந்தக் குற்றத்திற்கு நிவாரணமாக, குற்றநிவாரண பலியை செலுத்தலாம்.

குற்றமுள்ளவர்கள், குற்றநிவாரண பலியை செலுத்துவதற்கு முன்பாக, தங்கள் பாவத்தைக் குறித்து முதலாவதாக அறிக்கை செய்யவேண்டும். அதன்பின்பே குற்றநிவாரண பலியை செலுத்தவேண்டும்.

"இப்படிப்பட்டவைகள் ஒன்றில், ஒருவன் குற்றமுள்ளவனாகும்போது, அவன் தான் செய்தது பாவம் என்று அறிக்கையிட்டு, தான் செய்த பாவத்துக்குப் பாவநிவாரணபலியாக, ஆடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது, ஒரு பெண்குட்டியைக் குற்றநிவாரண பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவர வேண்டும்; அதினாலே ஆசாரியன் அவன் செய்த பாவத்தைக்குறித்து அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்" (லேவி 5:5,6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. ஆனாலும் பாவத்தை அறிக்கை செய்யாமல், பாவமன்னிப்பு பெறுவது இயலாத காரியம். குற்றமுள்ளவன், தன்னுடைய பாவத்தைக் குறித்து அறிக்கை செய்யவில்லையென்றால், அவன் செலுத்தும் குற்றநிவாரண காணிக்கையை கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார்.

தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டுமென்று கர்த்தருடைய சமுகத்திலே பலிகளையும் காணிக்கைகளையும் கொண்டு வருகிறவர்கள், முதலாவதாக தங்களுடைய பாவத்திற்காக மனம் திரும்பவேண்டும். தாங்கள் செய்த பாவங்களை கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கை பண்ணவேண்டும். கர்த்தர் தாமே தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் தங்களுடைய பாவங்களை மன்னித்தருளவேண்டுமென்று, கர்த்தருடைய சமுகத்திலே மிகுந்த பணிவோடும் பயபக்தியோடும் ஜெபம்பண்ணவேண்டும்.

பாவம் செய்தவன் கர்த்தருடைய சமுகத்தில் பணிவோடு ஜெபம்பண்ணவேண்டும். ஆசாரியன் அவன் செய்த பாவத்தைக் குறித்து, அவனுக்காக பாவநிவிர்த்தி செய்யவேண்டும்.

கர்த்தர் மோசேயினிடத்தில் பாவநிவாரணம் பண்ணவேண்டிய காரியங்களைப்பற்றி சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. சாட்சியாகிய ஒருவன், இடப்பட்ட ஆணையைக் கேட்டிருந்தும், தான் கண்டதையும் அறிந்ததையும் தெரிவியாதிருந்து பாவஞ்செய்தல். (லேவி 5:1; எண் 5:21)

2. சுத்தமான யாதொரு வஸ்துவையாவது, ஒருவன் அறியாமல் தொட்டுப் பாவம் செய்தல் (லேவி 5:2-3).

3. மனிதன் தன் மனம் அறியாமல், தன் உதடுகளினால் பதறி ஆணையிட்டுப் பாவம் செய்தல் (லேவி 5:4).

தீட்டு என்னும் வார்த்தை முதல் தடவையாக இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (லேவி 5:2). நோவாவின் மிருகஜீவன்களில் தீட்டானவை என்னும் பாகுபாடு காணப்படவில்லை. (ஆதி 7:2).

ஒருவனை தீட்டுப்படுத்தும் காரியங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மரித்தோருடைய சரீரத்தைத் தொடுவது. (எண் 9:10; எண் 19:13)

2. அசுத்தமான நபரைத் தொடுவது. (லேவி 5:3; லேவி 22:4-6)

3. அசுத்தமான மிருகஜீவன்களைப் புசிப்பது (லேவி 11; உபா 14)

4. பிள்ளையைப் பெற்றிருக்கும் ஸ்திரீ (லேவி 12:1-8)

5. வியாதியஸ்தர் (லேவி 13:1-15:33)

6. தீட்டான வீடு (லேவி 14:34-57)

7. தானாக இறந்துபோன மிருகஜீவன். (லேவி 17:15)

8. ஆசாரியர் செய்யும் சில சேவைகள் (எண் 19)

9. நெருங்கிய உறவினரிடையே சேருதல். (லேவி 20:19-21)

10. மனுஷ எலும்பையாவது, பிரேதக் குழியையாவது தொடுதல் (எண் 19:16)

11. செத்துப்போன மனுஷனுடைய கூடாரத்தில் பிரவேசித்தல் (எண் 19:14)

பாவம் செய்தவன் தன்னுடைய பாவத்திற்கு நிவாரணமாக பாவநிவாரண பலியை செலுத்தவேண்டும். மேலும் அவன் மோசேயின் பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம், குற்றநிவாரண பலியையும், சர்வாங்க தகனபலியையும் செலுத்தவேண்டும். பாவம் செய்தவன் நிவாரண பலிகளை செலுத்துவதோடு, வேறு சில காரியங்களையும் செய்யவேண்டும் என்று பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. தன் பாவத்தைக் குறித்து குற்றமுள்ளவனாக வேண்டும். (லேவி 5:5)

2. தான் செய்தது பாவம் என்று அறிக்கையிட வேண்டும்.

3. தான் செய்த பாவத்துக்குப் பாவநிவாரண பலி செலுத்த வேண்டும். (லேவி 5:6)

பரிசுத்தவேதாகமத்தில் ஒரு சில பாவங்கள் "குற்றங்கள்" என்று அழைக்கப்படுகிறது. அது பற்றிய விவரம் வருமாறு :

1. ஆணையைக் குறித்து உண்மையில்லாதிருத்தல் (லேவி 5:1).
2. அசுத்தமானதைத் தொடுதல். (லேவி 5:2-3)
3. பதறி ஆணையிடுதல். (லேவி 5:4)
4. கர்த்தருக்குரிய பரிசுத்தமான சடங்குகளில் அறியாமையினால் குற்றம் செய்தல். (லேவி 5:15; லேவி 22:14-16)
5. தன் வசத்தில் நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருளில் அநியாயம் செய்தல். (லேவி 6:2-3; யாத் 22:9-13; எண் 5:6-27)

குற்றநிவாரண பலியாக செலுத்த வேண்டியவை பற்றி கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். அவற்றின் விவரம் வருமாறு :

1. ஆடுகளில் ஒருபெண்குட்டி (லேவி 5:6)
2. வெள்ளாடுகளில் ஒரு பெண்குட்டி
3. காட்டுப்புறா (லேவி 5:7)
4. புறா
5. ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கு (லேவி 5:11).
6. ஆட்டுக்கடா (லேவி 5:15,18)

பாவநிவாரணபலி - புறா, மெல்லியமா லேவி 5:7-13

லேவி 5:7. ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவனுக்குச் சக்தியில்லாதிருந்தால், அவன் செய்த குற்றத்தினிமித்தம் இரண்டு காட்டுப்புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஒன்றைப் பாவநிவாரண பலியாகவும் மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியாகவும், கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வரக்கடவன்.

லேவி 5:8. அவைகளை ஆசாரியனிடத்தில் கொண்டு வருவானாக; அவன் பாவநிவாரண பலிக்கானதை முன்னே செலுத்தி, அதின் தலையை அதின் கழுத்தினிடத்தில் கிள்ளி, அதை இரண்டாக்காமல் வைத்து,

லேவி 5:9. அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின் பக்கத்தில் தெளித்து, மீதியான இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியிலே வடியவிடுவானாக; இது பாவநிவாரணபலி.

லேவி 5:10. மற்றதை நியமத்தின்படியே அவன் தகனபலியாய்ச் செலுத்தக்கடவன்; இவ்விதமாக அவன் செய்த பாவத்தை ஆசாரியன் நிவிர்த்திசெய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

லேவி 5:11. இரண்டு காட்டுப்புறாக்களையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது கொண்டு வர அவனுக்குச் சக்தியில்லாதிருந்தால், பாவம் செய்தவன் பாவநிவாரணத்துக்காக ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கைத் தன் காணிக்கையாகக் கொண்டுவருவானாக; அது பாவநிவாரண பலியாயிருப்பதினால், அதின்மேல் எண்ணெய் வார்க்காமலும் தூபவர்க்கம் போடாமலும் இருந்து,

லேவி 5:12. அதை ஆசாரியனிடத்தில் கொண்டு வரவேண்டும்; அதிலே ஆசாரியன் ஞாபகக்குறியான பங்காகத் தன் கைப்பிடி நிறைய எடுத்து, கர்த்தருக்கு இடும் தகனபலிகளைப்போல, பலிபீடத்தின் மேல் தகனிக்கக்கடவன்; இது பாவநிவாரணபலி.

லேவி 5:13. இவ்விதமாக மேற்சொல்லிய காரியங்கள் ஒன்றில் அவன் செய்த பாவத்துக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும், மீதியானது போஜன பலியைப்போல் ஆசாரியனைச் சேரும் என்றார்.

ஒருவன் செய்த பாவத்திற்கு, பாவநிவாரணபலியாக ஆடுகளிலாவது, வெள்ளாடுகளிலாவது, ஒரு பெண்குட்டியை குற்றநிவாரண பலியாக தம்முடைய சந்நிதியில் கொண்டு வரவேண்டும் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஒரு சிலருக்கு இப்படிப்பட்ட மிருகஜீவன்களை குற்றநிவாரண பலியாக கொண்டு வர திராணியிருக்காது. அவர்களிடத்தில் பொருளாதார சக்தி இருக்காது. அவர்கள் ஏழைகளாகயிருப்பார்கள்.

ஐசுவரியவான் குற்றம் செய்தாலும், தரித்திரன் குற்றம் செய்தாலும், அவனுடைய குற்றம் நிவிர்த்தி பண்ணப்படவேண்டும். தான் செய்தது குற்றம் என்பதை அவனுடைய மனச்சாட்சி அவனுக்கு உணர்த்தவேண்டும். ஐசுவரியவானும், தரித்திரனும் கர்த்தருடைய சமுகத்திலே வந்து, தங்களுடைய பாவங்களைக் குறித்து அறிக்கை செய்யவேண்டும். அதன் பின்பு அவர்கள் கர்த்தர் நியமித்திருக்கிற குற்றநிவாரண பலியை செலுத்தவேண்டும்.

"ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவனுக்குச் சக்தியில்லாதிருந்தால், அவன் செய்த குற்றத்தினிமித்தம் இரண்டு காட்டுப்புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஒன்றைப் பாவநிவாரண பலியாகவும் மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியாகவும், கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வரக்கடவன்" (லேவி 5:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தம்மோடு ஒப்புரவாவதற்குத் தேவன் எல்லா ஜனங்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கிறார். தேவனுடைய நிபந்தனைகளை யாரும் எளிதாகக் கைக்கொள்ளலாம். செல்வந்தருக்கு ஒரு பாவநிவாரணமும், ஏழை எளியவர்களுக்கு வேறுவிதமான பாவநிவாரணமும் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆட்டுக்கடாவிலிருந்து காட்டுப்புறா வரையிலும் பலியாகச் செலுத்தலாம். ஒன்றும் முடியாதவர்கள் மெல்லிய மாவில் பத்தில் ஒரு பங்கைக்கூட செலுத்தலாம் (லேவி 5:6,7,11,15).

தான் செய்த பாவத்திற்கு பாவநிவாரண பலியாக ஆடுகளிலாவது, வெள்ளாடுகளிலாவது ஒரு பெண்குட்டியை குற்றநிவாரண பலியாக கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வர சக்தியில்லாதிருந்தால், அவன் இரண்டு காட்டுப்புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வரவேண்டும்.

அவனுக்கு இந்தப் பறவைகளை கொண்டு வரக்கூட சக்தியில்லாதிருந்தால், பாவம் செய்தவன், பாவநிவாரணத்திற்காக ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கை தன் காணிக்கையாக கொண்டு வரவேண்டும்.

"இரண்டு காட்டுப்புறாக்களையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது கொண்டு வர அவனுக்குச் சக்தியில்லாதிருந்தால், பாவம் செய்தவன் பாவநிவாரணத்துக்காக ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கைத் தன் காணிக்கையாகக் கொண்டுவருவானாக" (லேவி 5:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சிலர் மிகவும் ஏழையாக இருப்பார்கள். அவர்களால் ஆட்டுக்குட்டியையோ, வெள்ளாட்டுக் குட்டியையோ, புறாக்களையோ, காட்டுப் புறாக்களையோ கொண்டுவர முடியவில்லை என்றால், ஒரு எப்பா மெல்லி மாவிலே பத்தில் ஒரு பங்கைக் கொண்டுவந்து பலிசெலுத்தலாம் (லேவி 16:36) இந்தப் போஜனபலியில் எண்ணெயோ, தூபவர்க்கமோ சேர்க்கப்படலாகாது.

லேவியராகமம் 2 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டிருப்பது பாவநிவாரண பலி. அது ஸ்தோத்திரபலியல்ல. (லேவி 5:11; லேவி 2:1-16). மிகவும் ஏழைகளாக இருக்கிறவர்கள் மட்டுமே மிருகஜீவன்களைப் பலியிடுவதற்குப் பதிலாகப் போஜனபலியைச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள் (லேவி 5:7,11).

ஒருவன் தரித்திரரானாயிருந்தாலும், அவன் செய்த பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்கு, கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார். ஒருவனுடைய தரித்திரம் அவனுடைய பாவமன்னிப்புக்கு தடையாகயிருக்காது. விசுவாசிகளாகிய நாம் எல்லோருமே பரலோகத்தை நோக்கி பிரயாணம் செய்துகொண்டிருக்கிறோம். பரலோகத்திற்குப் போவதற்கு, நம்முடைய வறுமையும், தரித்திரமும் ஒருபோதும் தடையாயிருப்பதில்லை.

ஒருவன் தான் செய்த குற்றத்தினிமித்தம் இரண்டு காட்டுப்புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஒன்றைப் பாவநிவாரண பலியாகவும் மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியாகவும், கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வரவேண்டும் (லேவி 5:7). அவன் கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலியை செலுத்துவதற்கு முன்பாக பாவநிவாரண பலியை செலுத்தவேண்டும். மனுஷருடைய பாவம் முதலாவதாக நிவிர்த்தி பண்ணப்படவேண்டும்.

பாவநிவாரண பலியை செலுத்திய பின்பே, சர்வாங்க தகனபலி செலுத்தப்படுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பாவநிவாரண பலியை அங்கீகரித்து, அவர்களுடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணியிருக்கிறார். இதை அங்கீகரித்து, அவருக்கு நன்றி சொல்லும் வண்ணமாக, அவர்கள் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியை செலுத்துகிறார்கள். சர்வாங்க தகனபலி கர்த்தரை கனம்பண்ணும் வண்ணமாகவும், அவரை துதிக்கும் வண்ணமாகவும் செலுத்தப்படுகிறது. பாவநிவாரணபலி மனுஷருடைய பாவங்கள் நிவிர்த்திபண்ணப்படுவதற்காக செலுத்தப்படுகிறது.

பாவம் செய்தவன், தான் செய்த குற்றத்தினிமித்தமாக இரண்டு காட்டுப்புறாக்களை அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளை ஆசாரியனிடத்தில் கொண்டுவரவேண்டும். ஆசாரியன் பாவநிவாரண பலிக்கானதை முன்னே செலுத்தி, அதின் தலையை அதின் கழுத்தினிடத்தில் கிள்ளி, அதை இரண்டாக்காமல் வைத்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின் பக்கத்தில் தெளித்து, மீதியான இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியிலே வடியவிடவேண்டும்; இது பாவநிவாரணபலி (லேவி 5:8,9).

இரண்டு புறாக்கள் அல்லது இரண்டு காட்டுப்புறாக்களில் ஒன்றைப் பாவநிவாரண பலியாகச் செலுத்தவேண்டும் (லேவி 5:7-9) மற்றொன்றைச் சர்வாங்கத் தகனபலியாகத் தகனிக்கவேண்டும் லேவி 5:1-13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பாவநிவாரண பலிகளுக்கும், லேவி 4:1-35 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பாவநிவாரண பலிகளுக்கும் வித்தியாசம் உண்டு.

மற்றதை நியமத்தின்படியே ஆசாரியன் தகனபலியாய்ச் செலுத்தவேண்டும்; இவ்விதமாக அவன் செய்த பாவத்தை ஆசாரியன் நிவிர்த்திசெய்யக்கடவன் என்றும், அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 5:10).

பாவநிவாரண பலியைக் குறிப்பதற்கு "அஷாம்" என்னும் எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பொதுவாக இந்த வார்த்தை நீதிநெறியை மீறிய பாவம் அல்லது சடங்காசாரத்தை மீறிய பாவம், அறியாமையினால் செய்த பாவம் ஆகியவற்றைக் குறிக்கும். தான் செய்த பாவம் ஒருவனுக்கு உணர்த்தப்படும்போது அதற்குரிய நிவாரண பலியைச் செலுத்தி, தன் பாவத்திலிருந்து பாவநிவாரணம் பெற்றுக் கொள்ள வேண்டும். அஷாம் என்னும் எபிரெய வார்த்தை பாவத்தையும், பலியையும் குறிக்கும்.

எபிரெய மொழியில் அஷாம் என்னும் வார்த்தையைப்போலவே "காடாஹ்" என்னும் எபிரெய வார்த்தையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது பாவத்தையும், பாவநிவாரண பலியையும் குறிக்கும். எங்கெல்லாம் பாவம் இருக்கிறதோ அங்கெல்லாம் பாவநிவாரணமும் தேவைப்படுகிறது.

பாவநிவாரணமாகச் செலுத்தப்பட்ட முதலாவது புறாவின் அல்லது காட்டுப்புறாவின் இரத்தம் சிந்தப்பட வேண்டும். இரண்டாவது புறா அல்லது காட்டுப்புறா சர்வாங்க தகனபலியாகத் தகிக்கப்படுகிறது. இந்தப் பாவநிவாரண பலியைத் தேவன் அங்கீகரித்து, திருப்தி அடைந்திருக்கிறார் என்பதை இது விளக்குகிறது. இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான பலியாகும் (லேவி 1:9,13, 17).

இயேசு கிறிஸ்து மனுஷருடைய பதிலீடாகத் தேவனுக்குப் பூரணமாகக் கீழ்ப்படிந்து, தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். பாவநிவாரண பலியும், குற்ற நிவாரண பலியும் இயேசு கிறிஸ்துவின் பதிலீட்டு மரணத்திற்கு அடையாளமாகும். (லேவி 5:10).

பாவம் செய்தவன் தன்னுடைய பாவநிவாரணத்திற்காக ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கை தன் காணிக்கையாக ஆசாரியனிடத்தில் கொண்டு வரவேண்டும்; அது பாவநிவாரண பலியாயிருப்பதினால், அதின்மேல் எண்ணெய் வார்க்காமலும் தூபவர்க்கம் போடாமலும் இருக்கவேண்டும்.

அந்த மாவிலே ஆசாரியன் ஞாபகக்குறியான பங்காகத் தன் கைப்பிடி நிறைய எடுத்து, கர்த்தருக்கு இடும் தகனபலிகளைப்போல, பலிபீடத்தின் மேல் தகனிக்கவேண்டும்; இது பாவநிவாரணபலி (லேவி 5:12).

ஏழையாக இருந்தாலும், இரத்தம் சிந்துதல் இல்லாமல் அவனுக்குப் பாவநிவாரணம் இல்லை. (லேவி 17:11; எபி 9:22). இஸ்ரவேல் புத்திரர் எல்லோருடைய பாவத்தையும் நிவாரணம் செய்வதற்கு இரத்தம் சிந்துதல் தேவையாக இருக்கிறது. ஆசாரியர் மூலமாக இஸ்ரவேல் ஜனங்கள் மிருகஜீவன்களைப் பலி செலுத்தி, தங்கள் பாவத்திற்கு நிவாரணம் செய்தார்கள். அவ்வாறு நிவிர்த்தி செய்ய முடியாதவர்கள் பாவநிவாரணத்தின் மகா நாளிலே செலுத்தப்படும் பாவநிவாரண பலியின் மூலமாகத் தங்கள் பாவங்களிலிருந்து நிவிர்த்தி செய்யப்படுவார்கள் (லேவி 5:12-13; லேவி 16:1-34).

ஏழைகள் மெல்லிய மாவைக் கொண்டுவரும்போது, பாவநிவாரண பலியில் தங்களுக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்கள். மற்றவர்கள் இவர்களுக்காகப் பாவநிவாரண பலிகளைச் செலுத்துகிறார்கள். ஏழைகள் தங்களால் முடிந்ததைக் கொடுக்கிறார்கள். இது ஏழை விதவை இரண்டு வெள்ளிக்காசுகளைக் கொடுப்பது போன்று உள்ளது(லூக்கா 21:1-4). மெல்லிய மாவின் ஒரு பகுதி தகனிக்கப்பட்ட பின்பு, மீதமுள்ள மாவு ஆசாரியரைச் சேரும். பாவநிவாரண பலியோடு போஜனபலி அல்லது பானபலி சேர்த்துச் செலுத்தப்படமாட்டாது (எண் 15:1-11)

இவ்விதமாக மேற்சொல்லிய காரியங்கள் ஒன்றில் அவன் செய்த பாவத்துக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யக்கடவன் என்றும், அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும், மீதியானது போஜனபலியைப்போல ஆசாரியனைச் சேரும் என்றும், கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 5:13).

கர்த்தருடைய சமுகத்திலே கொண்டு வரப்படும் மெல்லிய மாவு பாவநிவாரண பலியாக இருக்கிறது. ஆகையினால் அதின்மேல் எண்ணெய் வார்க்கக்கூடாது. அதின்மேல் தூபவர்க்கம் போடக்கூடாது. மாவின்மேல் எண்ணெய் வார்த்து தூபவர்க்கம் போடும்போது அதிகமாய் பணம் செலவாகும். பாவம் செய்த தரித்திரனுக்கு இந்தப் பணத்தை செலவு பண்ணும் சக்தி இருக்காது. இது ஏழைகளின் பாவநிவாரணத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கிற பாவநிவாரண பலி. ஆகையினால் இந்தப் பலியானது மிகவும் எளிமையான முறையில் செலுத்தப்படுகிறது.

பாவம் செய்தவன் தன்னுடைய பாவத்திற்காக மனம் வருந்தவேண்டும். அவனுடைய மனச்சாட்சியில், பாவத்தைக் குறித்த குற்றவுணர்வும், துக்கமும் ஏற்பட்டிருக்கவேண்டும். இங்கு மெல்லிய மாவினால் ருசியான பதார்த்தம் செய்யப்படவில்லை. அது பாவநிவாரண பலியாக கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் தகனிக்கப்படுகிறது. ஆகையினால் அந்தப் பலி சுவையாகயிருக்கவேண்டும் என்பதற்காக எண்ணெய் வார்க்க வேண்டிய அவசியமில்லை. மேலும் அந்தப் பலி நறுமணமுள்ளதாகயிருக்கவேண்டும் என்பதற்காக, அந்த மாவின்மேல் தூபவர்க்கம் போடவேண்டிய அவசியமுமில்லை.

குற்றநிவாரண பலி - அபராதம் லேவி 5:14-19

லேவி 5:14. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 5:15. ஒருவன் கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றஞ்செய்து, அறியாமையினால் பாவத்துக்குட்பட்டால், அவன் தன் குற்றத்தினிமித்தம் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படியே, நீ அவன் மேல் சுமத்தும் அபராதம் எவ்வளவோ, அவ்வளவு வெள்ளிச் சேக்கல் பெறும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவைக் குற்றநிவாரணபலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து,

லேவி 5:16. பரிசுத்தமானதைக்குறித்துத் தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தைச் செலுத்தி, அதினோடு ஐந்தில் ஒரு பங்கை அதிகமாகக் கூட்டி, ஆசாரியனுக்குக் கொடுப்பானாக; குற்றநிவாரண பலியாகிய ஆட்டுக்கடாவினாலே அவனுக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

லேவி 5:17. ஒருவன் செய்யத்தகாதென்று கர்த்தருடைய கட்டளைகளினால் விலக்கப்பட்ட யாதொன்றைச் செய்து பாவத்துக்குட்பட்டால், அதை அவன் அறியாமையினால் செய்தாலும், அவன் குற்றமுள்ளவனாயிருந்து, தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

லேவி 5:18. அதினிமித்தம் அவன் குற்றநிவாரணபலியாக, உன் மதிப்புக்குச் சரியான பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவை ஆசாரியனிடத்தில் கொண்டுவருவானாக; அவன் அறியாமல் செய்த தப்பிதத்தை ஆசாரியன் அவனுக்காக நிவிர்த்திசெய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

லேவி 5:19. இது குற்றநிவாரணபலி; அவன் கர்த்தருக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தான் என்பது நிச்சயம் என்றார்.

சாட்சியாக ஒருவன் தான் கண்டதையும் அறிந்ததையும் தெரிவியாதிருந்தால், அவனுக்கு ஒரு பாதிப்பும் ஏற்படாது. ஆனால் நிரபராதியாகயிருக்கிறவனுக்கு பாதிப்பு ஏற்படும். கர்த்தர் இதுவரையிலும் இப்படிப்பட்ட அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுவதற்கு செலுத்தவேண்டிய குற்றநிவாரண பலியைப்பற்றிச் சொன்னார்.

இப்போது, ஒருவன் கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றம் செய்து, பாவத்திற்குட்படுவதைப்பற்றியும், அதற்காக செலுத்தப்படவேண்டிய குற்றநிவாரண பலியயைப்பற்றியும், கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றம் செய்வதினால் மனுஷருக்கு ஒரு பாதிப்பும் ஏற்படாது. ஆனால் இது கர்த்தருக்கு விரோதமாக செய்யும் பாவமாகயிருக்கும்.

லேவி 5-ஆவது அதிகாரத்தின் முடிவிலும், லேவி 6-ஆவது அதிகாரத்தின் ஆரம்பத்திலும் கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றம் செய்து, கர்த்தருக்கு விரோதமாக அநியாயம் செய்வதைப்பற்றியும், குற்றம் செய்தவன் அதற்காக செலுத்தவேண்டிய குற்றநிவாரண பலியைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகள் கர்த்தருக்கே உரியது. அதை மனுஷன் தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது. கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணப்பட்டதை, மனுஷன் தனக்கு சொந்தமானதாக மாற்றிக்கொள்ளக்கூடாது. கர்த்தருக்கு அற்பணிக்கப்பட்டது பரிசுத்தமானது. அதை மனுஷன் தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்துவது, கர்த்தருக்கு விரோதமாக செய்யப்படும் அநியாயமாகும்.

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி, "ஒருவன் கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றஞ்செய்து, அறியாமையினால் பாவத்துக்குட்பட்டால், அவன் தன் குற்றத்தினிமித்தம் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படியே, நீ அவன் மேல் சுமத்தும் அபராதம் எவ்வளவோ, அவ்வளவு வெள்ளிச் சேக்கல் பெறும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவைக் குற்றநிவாரணபலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரவேண்டும்" (லேவி 5:14,15) என்றும்,

"பரிசுத்தமானதைக்குறித்துத் தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தைச் செலுத்தி, அதினோடு ஐந்தில் ஒரு பங்கை அதிகமாகக் கூட்டி, ஆசாரியனுக்குக் கொடுப்பானாக; குற்றநிவாரணபலியாகிய ஆட்டுக்கடாவினாலே அவனுக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும்" (லேவி 5:16) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு செலுத்தவேண்டிய தசமபாகம், காணிக்கைகள், முதற்கனிகள், மிருகங்களின் தலையீற்றுக்கள் ஆகியவற்றை மனுஷன் தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்திக்கொள்ளக்கூடாது. இவை கர்த்தருக்கு பரிசுத்தமானது. இவற்றை கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான காணிக்கைகளாக படைக்கவேண்டும்.

கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தப்படும் பலிகளில் ஒரு பகுதி ஆசாரியரை சேரும். அவற்றை ஆசாரியர் மாத்திரமே கர்த்தருடைய பிரமாணத்தின்படி புசிக்கவேண்டும். ஆசாரியர் மாத்திரம் புசிக்கவேண்டியதை, சாதாரண மனுஷன் புசிப்பது கர்த்தருடைய கட்டளைக்கு மீறுகிற பாவமாகும்.

ஒருவன் செய்யத்தகாதென்று கர்த்தருடைய கட்டளைகளினால் விலக்கப்பட்ட யாதொன்றைச் செய்து பாவத்துக்குட்பட்டால், அதை அவன் அறியாமையினால் செய்தாலும், அவன் குற்றமுள்ளவனாயிருந்து, தன் அக்கிரமத்தைச் சுமப்பான் (லேவி 5:17).

பாவத்தின் சம்பளம் மரணம். ஒருவன் துணிகரமாகப் பாவம் செய்யும்போது, அவனுக்கு நிச்சயமாய் தண்டனை கொடுக்கப்படும். அவன் அறியாமையினால் பாவம் செய்தால் அந்தப் பாவம் அவனுக்கு மன்னிக்கப்படும். அறியாமையினால் செய்த பாவத்திற்கும், குற்றநிவாரண பலியை செலுத்தவேண்டும்.

"மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே" (எபி 10:28).

ஒருவன் கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமான காரியத்தை அறியாமல் செய்து, பாவத்திற்குட்பட்டு, தன் அக்கிரமத்தை சுமக்கும்போது, அதினிமித்தம் அவன் குற்றநிவாரணபலியாக, மோசேயின் மதிப்புக்குச் சரியான பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவை ஆசாரியனிடத்தில் கொண்டுவரவேண்டும்; அவன் அறியாமல் செய்த தப்பிதத்தை ஆசாரியன் அவனுக்காக நிவிர்த்திசெய்யவேண்டும்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும் (லேவி 5:18).

"இது குற்றநிவாரணபலி; அவன் கர்த்தருக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தான் என்பது நிச்சயம்" (லேவி 5:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவை குற்றநிவாரண பலியாக நியமித்திருக்கிறார். குற்றநிவாரண பலியோடு, அபதாரமாக, அவனுடைய குற்றத்தின் மதிப்பில் ஐந்தில் ஒரு பங்கை அதிகமாய்க் கூட்டிக்கொடுக்கவேண்டும்.

குற்றநிவாரண பலிக்கும் மற்ற பலிகளுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :

1. தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்திற்கு ஈடாகக் குற்றநிவாரண பலி செலுத்தப்படுகிறது. (லேவி 5:16; லேவி 6:4-5).

2. குற்றநிவாரண பலியோடு நஷ்டத்தைத் தொகையை அதோடு சேர்த்து, ஐந்தில் ஒரு பங்கை அதிகமாகக் கூட்டியும் கொடுக்க வேண்டும் (லேவி 5:15-6:7; எண் 5:5-8).

3. குற்றநிவாரண பலியின் இரத்தம் மிகவும் எளிமையாகக் கையாளப்பட்டது (லேவி 5:6,10,13,16,18; லேவி 6:7= லேவி 4:5-7,16-18,25,30)

4. காளை, ஆடு, வெள்ளாடு, காட்டுப்புறாக்கள், புறாக்கள், மெல்லிய மாவு ஆகியவற்றிற்குப் பதிலாக ஆட்டுக்கடாவைக் குற்றநிவாரண பலியாகச் செலுத்தலாம் (லேவி 5:15,18; லேவி 6:6=லேவி 4:3,14,23,28; லேவி 5:6,7,11).

5. பலிசெலுத்துகிறவருடைய சூழ்நிலைகள், ஸ்தானங்கள், வித்தியாசமாக இருந்தாலும் குற்றநிவாரண பலிகள் அனைத்துமே ஒரே காரணத்திற்காகவே செலுத்தப்படுகிறது (லேவி 5:15-6:7=லேவி 4:1-5:13).

தசமபாகங்கள், முதற்கனிகள், தலையீற்றுகள், தலைப்பிள்ளைகளை மீட்கும் கிரயம், வாசஸ்தலத்திற்கும், ஆராதனைக்கும் அடுத்த காரியங்கள் ஆகியவை கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளாகும். இந்தக் காரியங்களில் தவறு செய்யக்கூடாது. இதில் பாவம் செய்வது குற்றமாகும் (லேவி 27; எண் 5:6-8).

குற்றநிவாரண பலிகளில் ஆட்டுக்கடா மட்டுமே பலியாகச் செலுத்தப்படுகிறது (லேவி 5:15,18; லேவி 6:6).

குற்றம் செய்தவன் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படியே, அவனுக்கு எவ்வளவு அபராதம் விதிக்கப் படுகிறதோ அதை வெள்ளியாகச் செலுத்த வேண்டும். அதோடு பழுதற்ற ஒரு ஆட்டுக் கடாவையும் குற்ற நிவாரணபலியாகச் செலுத்த வேண்டும். அதுமட்டுமல்லாமல், அவனுடைய தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தில் ஐந்தில் ஒரு பங்கை (20சதவீதம்) கூட்டிக் கொடுக்க வேண்டும். (லேவி 5:15-16). வெள்ளி நஷ்டத்திற்கு ஈடாகக் கொடுக்கப்படுகிறது. அவனுடைய குற்றத்திற்கு நிவாரணமாக ஆட்டுக்கடா பலியாகச் செலுத்தப்படுகிறது.

தான் செய்த குற்றத்தைப் பற்றி அவனுக்கு உணர்த்தப்படும் போது, அவன் தாமதம் பண்ணாமல் குற்றநிவாரண பலியைச் செலுத்தவேண்டும் (லேவி 5:17-18).

கர்த்தர் பழுதற்ற மிருகஜீவன்களை மட்டுமே பலிசெலுத்துவதற்கு அனுமதிக்கிறார். தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து பாவமில்லாதவர். பழுதற்றவர். (1பேதுரு 1:18-23; 1பேதுரு 2:22). கிறிஸ்தவ விசுவாசிகள் கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கு இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் (எபே 5:27). பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நாம் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும் (1தெச 3:13; யூதா 1:24).

நஷ்டத்தின் மதிப்பைப் பாவம் செய்தவனும், நஷ்டம் அடைந்தவனும் அங்கிகரிக்க வேண்டும். அதற்கு நஷ்ட ஈடாக அதன் மதிப்பையும், அதோடு இருபது சதவீதம் கூட்டியும் தரவேண்டும். தான் செய்த குற்றத்திற்கு நிவாரணமாக அவன் குற்றநிவாரண பலியையும் செலுத்த வேண்டும்.

குற்றம் செய்தவன் கர்த்தருக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறான். தன்னுடைய பாவத்தைக் குறித்து அவன் உணர்வுடையவனாக இருந்தாலும், உணர்வற்றவனாக இருந்தாலும் அவன் செய்தது பாவமே. அறியாமல் செய்தது என்பதினால் எந்தப் பாவமும் பாவமில்லாமல் போவதில்லை. பாவத்திற்குப் பரிகாரம் தேடவேண்டும். அறியாமையினால் யாரும் பிரமாணத்தை மீறக்கூடாது. பிரமாணத்தை மீறுவது எப்பொழுதுமே பாவம். அது கர்த்தருக்கு எதிராகச் செய்யப்படும் குற்றம்.

6 அதிகாரம்

இந்த அதிகாரத்தின் முதல் பகுதி, இதற்கு முந்தின அதிகாரத்தின் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த வசனப்பகுதியில் குற்றநிவாரண பலியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது (லேவி 6:1-7).

கர்த்தர் மோசேயை நோக்கி மேலும் சில பிரமாணங்களை சொல்லுகிறார். சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணம் (லேவி 6:8-13). போஜனபலியின் பிரமாணம் (லேவி 6:14-18).

நித்திய போஜனபலியின் பிரமாணம். (லேவி 6:19-23). பாவநிவாரண பலியின் பிரமாணம் (லேவி 6:24-30).

குற்றநிவாரணபலி லேவி 6:1-7

லேவி 6:1. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 6:2. ஒருவன் கர்த்தருக்கு விரோதமாக அநியாயம் செய்து, தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருளிலாவது, கொடுக்கல் வாங்கலிலாவது, தன் அயலானுக்கு மாறாட்டம்பண்ணி, அல்லது ஒரு வஸ்துவைப் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டு, அல்லது தன் அயலானுக்கு இடுக்கண்செய்து,

லேவி 6:3. அல்லது காணமற்போனதைக் கண்டடைந்தும் அதை மறுதலித்து, அதைக் குறித்துப் பொய்யாணையிட்டு, மனிதர் செய்யும் இவை முதலான யாதொரு காரியத்தில் பாவஞ்செய்தானேயாகில்,

லேவி 6:4. அவன் செய்த பாவத்தினாலே குற்றவாளியான படியால், தான் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டதையும், இடுக்கண் செய்து பெற்றுக்கொண்டதையும், தன் வசத்திலே ஒப்புவிக்கப்பட்டதையும், காணாமற்போயிருந்து தான் கண்டெடுத்ததையும்,

லேவி 6:5. பொய்யாணையிட்டுச் சம்பாதித்த பொருளையும் திரும்பக் கொடுக்கக்கடவன்; அந்த முதலைக் கொடுக்கிறதும் அல்லாமல், அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகவுங் கூட்டி, அதைத் தான் குற்றநிவாரண பலியை இடும் நாளில், அதற்குரியவனுக்குக் கொடுத்துவிட்டு,

லேவி 6:6. தன் குற்றநிவாரணபலியாக, உன் மதிப்புக்குச் சரியான பழுதற்ற ஆட்டுக்கடாவைக் கர்த்தருக்குச் செலுத்தும்படி, அதை ஆசாரியனிடத்தில் குற்றநிவாரண பலியாகக் கொண்டுவருவானாக.

லேவி 6:7. கர்த்தருடைய சந்நிதியில் அவன் பாவத்தை ஆசாரியன் நிவிர்த்திசெய்யக்கடவன்; அப்பொழுது அவன் குற்றவாளியாகச் செய்த அப்படிப்பட்ட எந்தக் காரியமும் அவனுக்கு மன்னிக்கப்படும் என்றார்.

ஒரு மனுஷன் கர்த்தருக்கு விரோதமாக செய்யும் அநியாயத்தைப்பற்றியும், தன் அயலானுக்கு விரோதமாக செய்யும் பாவத்தைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் தன் அயலானுக்கு இடுக்கண் செய்தாலும், அவன் செய்த பாவம், கர்த்தருக்கு விரோதமாக செய்த அநியாயமாகவே கருதப்படுகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஒருவன் கர்த்தருக்கு விரோதமாக அநியாயம் செய்து, தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருளிலாவது, கொடுக்கல் வாங்கலிலாவது, தன் அயலானுக்கு மாறாட்டம்பண்ணி, அல்லது ஒரு வஸ்துவைப் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டு, அல்லது தன் அயலானுக்கு இடுக்கண்செய்து, அல்லது காணமற்போனதைக் கண்டடைந்தும் அதை மறுதலித்து, அதைக் குறித்துப் பொய்யாணையிட்டு, மனிதர் செய்யும் இவை முதலான யாதொரு காரியத்தில் பாவஞ்செய்தானேயாகில்" (லேவி 6:1-3) என்று சொல்லுகிறார்.

ஒருவன் தன் அயலானுக்கு விரோதமாக தீமையான காரியங்களை பேசும்போது, அவன் கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமான காரியங்களை பேசுகிறான். கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமாக தீங்கு செய்கிறவன், அந்தப் பிரமாணத்தை சொன்ன கர்த்தருக்கு விரோதமாகவே தீங்கு செய்கிறான். நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாகப் பாவம் செய்கிறவன், நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிற தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான்.

"சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்; சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப் பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்; நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துவாயானால், நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயாதிபதியாயிருப்பாய். நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர், மற்றவனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்?" (யாக் 4:11,12).

ஒருவன் தமக்கு விரோதமாகவும், தன் அயலானுக்கு விரோதமாகவும் செய்கிற ஒரு சில அநியாயங்களைக் குறித்து கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். நம்பிக்கை துரோகம்பண்ணுவது கர்த்தருக்கு விரோதமான பாவம். இது தன் அயலானுக்கு விரோதமாக செய்யப்படும் இடுக்கண். இப்படிப்பட்ட பாவத்தை செய்கிறவன், கர்த்தருக்கு விரோதமாக அநியாயம் செய்கிறான். அவன் தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருளிலாவது, கொடுக்கல் வாங்கலிலாவது, தன் அயலானுக்கு மாறாட்டம்பண்ணி தன் அயலானுக்கு இடுக்கண் செய்கிறான்.

கர்த்தருக்கு விரோதமாக அநியாயம் செய்கிறவன், தன் அயலானிடத்திலிருந்து, ஒரு வஸ்துவைப் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டு, அவனுக்கு இடுக்கண்செய்கிறான். இவனால் தன் பாவத்தை மறைக்க முடியாது. இவன் எல்லோருக்கும் முன்பாக, தன் அயலானுடைய வஸ்துவை, பலாத்காரமாக பறித்துக்கொண்டவன்.

ஒருவன் காணமற்போனதைக் கண்டடைந்தும் அதை மறுதலிக்கிறான். அவன் அதைக் குறித்துப் பொய்யாணையிடுகிறான். இவையெல்லாம் கர்த்தருக்கு விரோதமாகவும், மனுஷருக்கு விரோதமாகவும் செய்யப்படும் பாவமாகும்.

கர்த்தருக்கு விரோதமாக அநியாயம் செய்தவனும், தன் அயலானுக்கு விரோதமாக இடுக்கண் செய்தவனும், தான் செய்த பாவத்தினாலே குற்றவாளியாகிறான். இப்படிப்பட்ட அநியாயக்காரன், தான் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டதையும், இடுக்கண்செய்து பெற்றுக்கொண்டதையும், தன் வசத்திலே ஒப்புவிக்கப்பட்டதையும், காணாமற்போயிருந்து தான் கண்டெடுத்ததையும், பொய்யாணையிட்டுச் சம்பாதித்த பொருளையும் திரும்பக் கொடுக்க வேண்டும்.

தன் அயலானுக்கு விரோதமாக இடுக்கண் செய்தவன் தான் அநியாயமாய் பறித்துக்கொண்டதை மாத்திரம் திரும்பக் கொடுத்தால் போதாது. அவன் அந்த முதலைக் கொடுக்கிறதும் அல்லாமல், அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகவுங் கூட்டி, அதற்குரியவனுக்குக் கொடுக்கவேண்டும்.

மேலும் அந்த அநியாயக்காரன் தன் குற்றநிவாரணபலியாக, மோசேயின் மதிப்புக்குச் சரியான பழுதற்ற ஆட்டுக்கடாவைக் கர்த்தருக்குச் செலுத்தும்படி, அதை ஆசாரியனிடத்தில் குற்றநிவாரண பலியாகக் கொண்டுவரவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 6:6).

தன் பாவத்தினாலே குற்றவாளியானவன், தான் ஏமாற்றி பெற்றுக்கொண்ட பொருளை அதற்குரியவனிடத்தில் திருப்பிக் கொடுக்கவேண்டும். தான் ஏமாற்றியதை மாத்திரம் கொடுக்காமல், அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகவும் கூட்டிக்கொடுக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அதன் பின்பு அவன் குற்றநிவாரண பலியையும் செலுத்தவேண்டும். கர்த்தர் குற்றநிவாரண பலியாக ஒரு பழுதற்ற ஆட்டுக்கடாவை நியமித்திருக்கிறார்.

கர்த்தருடைய சந்நிதியில் அவன் பாவத்தை ஆசாரியன் நிவிர்த்திசெய்யக் கடவன் என்றும், அப்பொழுது அவன் குற்றவாளியாகச் செய்த அப்படிப்பட்ட எந்தக் காரியமும் அவனுக்கு மன்னிக்கப்படும் என்றும், (லேவி 6:7) கர்த்தர் சொல்லுகிறார்.

குற்றம் செய்தவன் பொய்யாணையிட்டுச் சம்பாதித்த பொருளையும், அந்த முதலைக் கொடுக்கிறதும் அல்லாமல், அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகவுங் கூட்டிக் கொடுக்கக்கடவன். அத்தோடு தன் குற்றநிவாரணபலியாக, பழுதற்ற ஓர் ஆட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும். (லேவி 6:5-6).

ஒருவன் எந்தெந்த காரியங்களிலெல்லாம் பொய்யாணையிடுவான் என்று கர்த்தர் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. தன் வசனத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருளைப் பற்றி (லேவி 6:2,5)
2. கொடுக்கல் வாங்கலில் இடுக்கண் செய்தல். (லேவி 6:2,4)
3. ஒரு வஸ்துவைப் பலாத்காரமாய்த் தரித்துக் கொள்ளுதல். (லேவி 6:2,4)
4. ஏமாற்றி ஒரு பொருளைப் பெற்றுக் கொள்ளுதல். (லேவி 6:2,4)
5. காணாமற்போயிருந்து கண்டு எடுத்த பொருளைப் பற்றி (லேவி 6:3,4)

கர்த்தருடைய சந்நிதியில் பொய்யாணையிடுகிறவனுடைய பாவத்தை ஆசாரியன் நிவிர்த்தி செய்யவேண்டும். பிரச்சனையுள்ள மனுஷர்களுக்கு நடுவிலும், மேலும் தேவனுக்கும், மனுஷருக்கும் நடுவிலும் ஆசாரியர் மத்தியஸ்தராக இருக்கிறார் (லேவி 6:6-7).

பரிசுத்த வேதாகமத்தில் குற்றநிவாரண பலிகளின் பிரமாணத்தைப்பற்றி இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது :

1. சில குறிப்பிட்ட பாவங்களைச் செய்தவன். (லேவி 6:1-5) தன் குற்றநிவாரண பலியைக் கொண்டு வரவேண்டும் (லேவி 5:6).
2. தான் செய்த பாவத்துக்குப் பாவநிவாரணபலியாக, ஆடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது, ஒரு பெண்குட்டியைக் குற்றநிவாரண பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவர வேண்டும் (லேவி 5:6).
3. அதினாலே ஆசாரியன் அவன் செய்த பாவத்தைக்குறித்து அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்.
4. ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவனுக்குச் சக்தியில்லாதிருந்தால், அவன் செய்த குற்றத்தினிமித்தம் இரண்டு காட்டுப்புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஒன்றைப் பாவநிவாரண பலியாகவும் மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியாகவும், கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வரக்கடவன். (லேவி 5:7).
5. அவைகளை ஆசாரியனிடத்தில் கொண்டுவருவானாக. (யாத் 5:8)
6. அவன் பாவநிவாரண பலிக்கானதை முன்னே செலுத்தி, அதின் தலையை அதின் கழுத்தினிடத்தில் கிள்ளி, அதை இரண்டாக்காமல் வைத்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, பலி பீடத்தின் பக்கத்தில் தெளிப்பானாக. (யாத் 5:8-9)
7. மீதியான இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியிலே வடியவிடுவானாக; (லேவி 5:9).
8. மற்றதை நியமத்தின்படியே அவன் தகனபலியாய்ச் செலுத்தக்கடவன். (லேவி 5:10).
9. இவ்விதமாக அவன் செய்த பாவத்தை ஆசாரியன் நிவிர்த்திசெய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும். (லேவி 5:10).

10. இரண்டு காட்டுப்புறாக்களையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது கொண்டு வர அவனுக்குச் சக்தியில்லாதிருந்தால், பாவம் செய்தவன் பாவநிவாரணத்துக்காக ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கைத் தன் காணிக்கையாகக் கொண்டு வருவானாக; (லேவி 5:11).

11. அதிலே ஆசாரியன் ஞாபகக்குறியான பங்காகத் தன் கைப்பிடி நிறைய எடுத்து, கர்த்தருக்கு இடும் தகனபலிகளைப்போல, பலிபீடத்தின் மேல் தகனிக்கக்கடவன்; (லேவி 5:12).

12. அவன் செய்த பாவத்துக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும் (லேவி 5:13).

13. மீதியானது போஜன பலியைப்போல ஆசாரியனைச் சேரும் (லேவி 5:13).

14. ஒருவன் கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றஞ்செய்து, அறியாமையினால் பாவத்துக்குட்பட்டால், அவன் தன் குற்றத்தினிமித்தம் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படியே, அவன் மேல் சுமத்தும் அபராதம் எவ்வளவோ, அவ்வளவு வெள்ளிச் சேக்கல் பெறும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவைக் குற்றநிவாரண பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, பரிசுத்தமானதைக் குறித்துத் தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தைச் செலுத்தி, அதினோடு ஐந்தில் ஒரு பங்கை அதிகமாகக் கூட்டிக் கொடுப்பானாக; (லேவி 5:15-16).

15. இதை ஆசாரியனுக்குக் கொடுப்பானாக. குற்றநிவாரண பலியாகிய ஆட்டுக்கடாவினாலே அவனுக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யக் கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும் (லேவி 5:16).

16. ஒருவன் செய்யத்தகாதென்று கர்த்தருடைய கட்டளைகளினால் விலக்கப்பட்ட யாதொன்றைச் செய்து பாவத்துக்குட்பட்டால், அதினிமித்தம் அவன் குற்றநிவாரணபலியாக, பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவை ஆசாரியனிடத்தில் கொண்டு வருவானாக; ஆசாரியன் அவனுக்காக நிவிர்த்திசெய்யக் கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும். (லேவி 5:17-18).

17. ஒருவன் கர்த்தருக்கு விரோதமாக அநியாயம் செய்து, மனுஷருக்கு விரோதமாகவும் அநியாயம் செய்து பாவம் செய்தவன் தான் நஷ்டப்படுத்திய பொருளைத் திரும்பக் கொடுக்கக்கடவன். அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகவுங் கூட்டிக் கொடுக்கக்கடவன். (லேவி 6:1-5).

18. தன் குற்றநிவாரணபலியாக, பழுதற்ற ஆட்டுக்கடாவைக் கர்த்தருக்குச் செலுத்தும்படி, அதை ஆசாரியனிடத்தில் குற்றநிவாரண பலியாகக் கொண்டு வருவானாக. கர்த்தருடைய சந்நிதியில் அவன் பாவத்தை ஆசாரியன் நிவிர்த்தி செய்யக்கடவன். (லேவி 6:6-7).

சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணம் லேவி 6:8-13

லேவி 6:8. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 6:9. நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கற்பிக்கவேண்டிய சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணம் என்னவென்றால், சர்வாங்க தகனபலியானது இராமுழுவதும் விடியற்காலமட்டும் பலிபீடத்தின்மேல் எரியவேண்டும்; பலிபீடத்தின் மேலுள்ள அக்கினி எரிந்துகொண்டே இருக்கவேண்டும்.

லேவி 6:10. ஆசாரியன் தன் சணல்நூல் அங்கியைத் தரித்து, தன் சணல்நூல் ஜல்லடத்தை அரையில் போட்டுக்கொண்டு, பலிபீடத்தின்மேல் அக்கினியில் எரிந்த சர்வாங்க தகனபலியின் சாம்பலை எடுத்து, பலிபீடத்துப் பக்கத்தில் கொட்டி,

லேவி 6:11. பின்பு தன் வஸ்திரங்களைக் கழற்றி, வேறு வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, அந்தச் சாம்பலைப் பாளயத்துக்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொண்டுபோய்க் கொட்டக்கடவன்.

லேவி 6:12. பலிபீடத்தின்மேலிருக்கிற அக்கினி அவியாமல் எரிந்து கொண்டிருக்கவேண்டும்; ஆசாரியன் காலைதோறும் அதின் மேல் எரியும்படி கட்டைகளைப் போட்டு, அதின்மேல் சர்வாங்க தகனபலியை வரிசையாக வைத்து, அதின்மேல் சமாதான பலிகளின் கொழுப்பைப் போட்டுத் தகனிக்கக்கடவன்.

லேவி 6:13. பலிபீடத்தின்மேல் அக்கினி எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்க வேண்டும்; அது ஒருபொழுதும் அவிந்துபோகலாகாது.

கர்த்தர் மோசேக்கு சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணத்தை சொல்லுகிறார். மோசே இந்தப் பிரமாணத்தை ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் கற்பிக்கவேண்டும். "சர்வாங்க தகனபலியானது இராமுழுவதும் விடியற்காலமட்டும் பலிபீடத்தின்மேல் எரியவேண்டும்; பலிபீடத்தின் மேலுள்ள அக்கினிஎரிந்துகொண்டே இருக்கவேண்டும்" (லேவி 7:8,9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியர் சர்வாங்க தகனபலியை கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து நிறைவேற்றவேண்டும். ஒவ்வொரு நாளும், காலையிலும் மாலையிலும், பலிபீடத்தின்மேல் ஒரு ஆட்டுக்குட்டியை சர்வாங்க தகனபலியாக செலுத்தவேண்டும். இந்த சர்வாங்க தகனபலி இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் பொதுவானதாக செலுத்தப்படுகிறது.

பலிபீடத்தின் மேலுள்ள அக்கினி அணைந்துபோகாமல் எரிந்துகொண்டே இருக்கவேண்டும். ஆசாரியன் காலைதோறும் அதின்மேல் எரியும்படி கட்டைகளைப் போடவேண்டும். பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலியை வைத்து தகனிப்பது ஆசாரியருடைய ஊழியம்.

ஆசாரியன் தன் சணல்நூல் அங்கியைத் தரித்து, தன் சணல்நூல் ஜல்லடத்தை அரையில் போட்டுக்கொண்டு, பலிபீடத்தின்மேல் அக்கினியில் எரிந்த சர்வாங்க தகனபலியின் சாம்பலை எடுத்து, பலிபீடத்துப் பக்கத்தில் கொட்டவேண்டும். பின்பு தன் வஸ்திரங்களைக் கழற்றி, வேறு வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, அந்தச் சாம்பலைப் பாளயத்துக்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொண்டுபோய்க் கொட்டவேண்டும் (லேவி 7:10,11).

பலிபீடத்தின்மேலிருக்கிற அக்கினி அவியாமல் எரிந்துகொண்டிருக்கவேண்டும்; இதைக்கவனிப்பது ஆசாரியருடைய ஊழியம். ஆசாரியன் காலைதோறும் அதின் மேல் எரியும்படி கட்டைகளைப் போடவேண்டும். ஆசாரியன் அந்த பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலியை வரிசையாக வைத்து, அதின்மேல் சமாதான பலிகளின் கொழுப்பைப் போட்டுத் தகனிக்கவேண்டும் (லேவி 6:12).

"பலிபீடத்தின்மேல் அக்கினி எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்க வேண்டும்; அது ஒருபொழுதும் அவிந்துபோகலாகாது" (லேவி 6:13) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆசாரியரே பலிபீடத்தை சுத்தம்பண்ணவேண்டும். சாம்பலை எடுத்து கொட்டுவதும் ஆசாரியருடைய ஊழியம். இது போன்ற ஊழியத்தை செய்வது தன்னுடைய கவுரவத்திற்கு குறைவானது என்று எந்த ஆசாரியரும் நினைக்கக்கூடாது. பாவம் செய்வது மாத்திரமே நமக்கு அவமானம். கர்த்தருக்காக நாம் செய்யும் எந்த ஊழியமும் நமக்கு அவமானமல்ல. கர்த்தருடைய ஊழியத்தை செய்வது நமக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய பாக்கியம்.

பலிபீடத்திலே சர்வாங்க தகனபலி காலையிலும் மாலையிலும் செலுத்தப்படுகிறது. ஆசாரியர் எல்லா வேளைகளிலும், எப்போதும் சர்வாங்க தகனபலிகளை செலுத்திக்கொண்டே இருக்கமாட்டார்கள். ஆனாலும் பலிபீடத்தின்மேல் அக்கினி எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நாம் கர்த்தருக்கு எப்போதும் பலிகளை செலுத்தாவிட்டாலும் நம்முடைய இருதயத்தில் கர்த்தர்மீதுள்ள பரிசுத்தமான அன்பு எப்போதும் எரிந்துகொண்டிருக்க வேண்டும். நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ணவேண்டும்.

பரிசுத்த வேதாகமத்தில் சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணத்தைப்பற்றி இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

1. ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணத்தைப் பற்றி கற்பிப்பாயாக. *(லேவி 6:9).*

2. சர்வாங்க தகனபலியானது இராமுழுவதும் விடியற்காலமட்டும் பலிபீடத்தின்மேல் எரியவேண்டும்.

3. ஆசாரியன் தன் சணல்நூல் அங்கியைத் தரித்து, தன் சணல்நூல் ஜல்லடத்தை அரையில் போட்டுக்கொண்டு, பலிபீடத்தின்மேல் அக்கினியில் எரிந்த சர்வாங்க தகனபலியின் சாம்பலை எடுத்து, பலிபீடத்துப் பக்கத்தில் கொட்ட வேண்டும் *(லேவி 6:10).*

4. தன் வஸ்திரங்களைக் கழற்றி, வேறு வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, அந்தச் சாம்பலைப் பாளயத்துக்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொண்டு போய்க் கொட்டக்கடவன். *(லேவி 6:11).*

5. பலிபீடத்தின்மேலிருக்கிற அக்கினி அவியாமல் எரிந்துகொண்டிருக்க வேண்டும்; *(லேவி 6:12).*

6. ஆசாரியன் காலைதோறும் அதின் மேல் எரியும்படி கட்டைகளைப் போட்டு, அதின்மேல் சர்வாங்க தகனபலியை வரிசையாக வைத்து, அதின்மேல் சமாதான பலிகளின் கொழுப்பைப் போட்டுத் தகனிக்கக்கடவன். *(லேவி 6:12).*

7. பலிபீடத்தின்மேல் அக்கினி எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்க வேண்டும்; அது ஒருபொழுதும் அவிந்துபோகலாகாது. *(லேவி 6:13).*

ஆசரிப்புக் கூடாரத்திற்கு வெளியில் ஆசாரியர்கள் தங்களுடைய விசேஷ ஆசாரிய வஸ்திரங்களை அணியக்கூடாது. ஆசரிப்புக் கூடாரத்திற்குள்ளேயே ஆசாரியருடைய வஸ்திரங்களை வைப்பதற்கு அதற்குரிய இடங்கள் இருக்கும். தேவாலயத்தில் இதுபோன்ற காரியங்களுக்காகப் பல அறைகள் உள்ளன. *(1இராஜா 6:5,10; 1நாளா 9:26,33; 1நாளா 23:28; 1நாளா 28:11-12).* சாம்பல் சுத்தமான ஒரு இடத்திலே கொட்டப்பட வேண்டும்.

ஆசாரியன் காலைதோறும் அதின் மேல் எரியும்படி கட்டைகளைப் போட வேண்டும். இதுபோல மாலைதோறும் பலிபீடத்தின்மீது எரியும்படி கட்டைகளைப் போடவேண்டும். *(எண் 28:4).*

தேவனை ஆராதிப்பது ஒருபோதும் நின்றுபோகக்கூடாது. இதற்கு அடையாளமாகப் பலிபீடத்தின்மேல் அக்கினி எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கவேண்டும். அன்றாட பலிகளைத் தகனிப்பதற்காகவும், விசேஷித்த பலிகளைத் தகனிப்பதற்காகவும் பலிபீடத்தின்மீது அக்கினி எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும். இந்த அக்கினி முதலாவதாக வானத்திலிருந்து வந்தது. *(லேவி 9:24).*

போஜனபலியின் பிரமாணம் லேவி 6:14-18

லேவி 6:14. போஜனபலியின் பிரமாணம் என்னவென்றால், ஆரோனின் குமாரர் அதைக் கர்த்தருடைய சந்நிதியில் பலிபீடத்துக்கு முன்னே படைக்கவேண்டும்.

லேவி 6:15. அவன் போஜனபலியின் மெல்லிய மாவிலும் அதின் எண்ணெயிலும் தன் கைப்பிடி நிறைய எடுத்து, போஜனபலியின்மேலுள்ள தூபவர்க்கம் யாவற்றோடும் கூட அதை ஞாபகக்குறியாகப் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகத் தகனிக்கக்கடவன்.

லேவி 6:16. அதில் மீதியானதை ஆரோனும் அவன் குமாரரும் புசிப்பார்களாக; அது புளிப்பில்லா அப்பத்துடன் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கப்படக்கடவது; ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்தில் அதைப் புசிக்கவேண்டும்.

லேவி 6:17. அதைப் புளித்தமாவுள்ளதாகப் பாகம்பண்ண வேண்டாம்; அது எனக்கு இடப்படும் தகனங்களில் நான் அவர்களுக்குக் கொடுத்த அவர்களுடைய பங்கு; அது பாவநிவாரண பலியைப்போலும் குற்றநிவாரண பலியைப்போலும் மகா பரிசுத்தமானது.

லேவி 6:18. ஆரோனின் பிள்ளைகளில் ஆண்மக்கள் யாவரும் அதைப் புசிப்பார்களாக; கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளில் அது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது; அவைகளைத் தொடுகிறவனெவனும் பரிசுத்தமாய் இருப்பான் என்று சொல் என்றார்.

கர்த்தர் போஜனபலியின் பிரமாணத்தைப்பற்றிச் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரோ அல்லது ஆசாரியரோ போஜனபலியை படைத்திருக்கலாம். கர்த்தர் இரண்டுவிதமான போஜனபலியைப்பற்றி தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். முதலாவது போஜனபலி பொதுவான போஜனபலியாகும். இந்தப் போஜனபலியில் ஆசாரியனுடைய கைப்பிடி நிறைய எடுக்கப்பட்டு, அது கர்த்தருக்கு சுகந்த வாசனையாக தகனிக்கப்படுகிறது. இந்தப் போஜனபலியில் மீதியானதை ஆரோனும் அவருடைய குமாரரும் புசிக்கவேண்டும்.

ஆரோனின் குமாரர் அதைக் கர்த்தருடைய சந்நிதியில் பலிபீடத்துக்கு முன்னே படைக்கவேண்டும். அவன் போஜனபலியின் மெல்லிய மாவிலும் அதின் எண்ணெயிலும் தன் கைப்பிடி நிறைய எடுத்து, போஜனபலியின்மேலுள்ள தூபவர்க்கம் யாவற்றோடும் கூட அதை ஞாபகக்குறியாகப் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகத் தகனிக்கவேண்டும் (லேவி 6:14,15).

ஆரோனும் அவருடைய குமாரரும் போஜனபலியில் மீதியானதை எவ்வாறு புசிக்கவேண்டும் என்றும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். அவர்கள் அதை புளிப்பில்லா அப்பத்துடன் புசிக்கவேண்டும். அவர்கள் அதை பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கவேண்டும்.

ஆரோனும் அவருடைய குமாரரும் போஜனபலியில் மீதியானதை ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்தில் புசிக்கவேண்டும். ஆரோனின் பிள்ளைகளில் ஆண்பிள்ளைகள் மாத்திரம் அதைப் புசிக்கவேண்டும். ஆசாரியர்களில் பரிசுத்தமாயிருக்கிறவர்கள் மாத்திரம் அந்தப் போஜனபலியை புசிக்கவேண்டும்.

போஜனபலியில் மீதியானதை ஆரோனும் அவருடைய குமாரரும் புசிக்கவேண்டும். அதை புளிப்பில்லா அப்பத்துடன் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கவேண்டும்; ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்தில் அதைப் புசிக்கவேண்டும் (லேவி 6:16).

அதைப் புளித்தமாவுள்ளதாகப் பாகம்பண்ணவேண்டாம் என்றும், அது எனக்கு இடப்படும் தகனங்களில் நான் அவர்களுக்குக் கொடுத்த அவர்களுடைய பங்கு என்றும் அது பாவநிவாரண பலியைப்போலும் குற்றநிவாரண பலியைப்போலும் மகா பரிசுத்தமானது என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 6:17).

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனின் பிள்ளைகளில் ஆண்மக்கள் யாவரும் அதைப் புசிப்பார்களாக; கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளில் அது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது; அவைகளைத் தொடுகிறவனெவனும் பரிசுத்தமாய் இருப்பான் என்று சொல்" (லேவி 6:18) என்று சொல்லுகிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் போஜனபலியின் பிரமாணத்தைப்பற்றி இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

1. ஆரோனின் குமாரர் போஜனபலியைக் கர்த்தருடைய சந்நிதியில் பலிபீடத்துக்கு முன்னே படைக்கவேண்டும் *(லேவி 6:14)*.

2. ஆசாரியன் போஜனபலியின் மெல்லிய மாவிலும் அதின் எண்ணெயிலும் தன் கைப்பிடி நிறைய எடுத்து, போஜனபலியின்மேலுள்ள தூபவர்க்கம் யாவற்றோடும் கூட அதை ஞாபகக்குறியாகப் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகத் தகனிக்கக்கடவன். *(லேவி 6:15)*.

3. இதில் மீதியானதை ஆரோனும் அவன் குமாரரும் புசிப்பார்களாக; அது புளிப்பில்லா அப்பத்துடன் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கப்படக்கடவது; ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்தில் அதைப் புசிக்கவேண்டும் *(லேவி 6:16,18)*.

4. இதைப் புளித்தமாவுள்ளதாகப் பாகம் பண்ணவேண்டாம் *(லேவி 6:17)*.

5. இது கர்த்தருக்கு இடப்படும் தகனங்களில் கர்த்தர் ஆசாரியருக்குக் கொடுத்த அவர்களுடைய பங்காகும்.

6. இது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது. *(லேவி 6:18)*.

பரிசுத்த வேதாகமத்தில் மூன்று பலிகள் மகாபரிசுத்தமான பலிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. போஜனபலிகள் *(லேவி 2:10)*.
2. பாவநிவாரண பலிகள் *(லேவி 2:10)*.
3. குற்றநிவாரண பலிகள் *(லேவி 2:10)*.

"ஆரோனின் பிள்ளைகளில் ஆண்மக்கள் யாவரும்" என்னும் வாக்கியம், ஆசரிப்புக் கூடாரத்து ஆராதனையில் அனுமதிக்கப்பட்ட ஆண்மக்கள் அனைவரையும் குறிக்கும். இதை அவர்கள் பிராகாரங்களிலும், பரிசுத்த ஸ்தலத்திலும் மட்டுமே புசிக்க வேண்டும். *(லேவி 6:16)*. 30 வயதிற்கு உட்பட்ட ஆண்மக்கள் யாரும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை *(எண் 4:3,23,30,39)*.

போஜனபலியை தொடுகிறவனெவனும் பரிசுத்தமாய் இருப்பான் என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தப் பரிசுத்தம் சடங்காரச்சாரமான பரிசுத்தமாகும். தெய்வீக ஊழியங்களுக்காக ஆசாரியர் வேறுபிரிக்கப்பட்டிருக்கிறார். போஜனபலியைப் புசிப்பதற்கு ஆசாரியர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

நித்திய போஜனபலி
லேவி 6:19-23

லேவி 6:19. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 6:20. ஆரோன் அபிஷேகம் பண்ணப்படும் நாளில், அவனும் அவன் குமாரரும் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய படைப்பு என்னவென்றால், ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கை, காலையில் பாதியும் மாலையில் பாதியும், நித்திய போஜனபலியாகச் செலுத்தக்கடவர்கள்.

லேவி 6:21. அது சட்டியிலே எண்ணெய்விட்டுப்பாகம்பண்ணப்படக் கடவது; பாகம்பண்ணப்பட்டபின்பு அதைக் கொண்டுவந்து, போஜனபலி யாகப் பாகம்பண்ணப்பட்ட துண்டுகளைக் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகப் படைக்கக்கடவாய்.

லேவி 6:22. அவன் குமாரரில் அவனுடைய ஸ்தலத்திலே அபிஷேகம் பண்ணப்படுகிற ஆசாரியனும் அப்படியே செய்யக்கடவன்; அது முழுவதும் தகனிக்கப்படவேண்டும்; அது கர்த்தர் நியமித்த நித்திய கட்டளை.

லேவி 6:23. ஆசாரியனுக்காக இடப்படும் எந்தப் போஜனபலியும் புசிக்கப்படாமல், முழுவதும் தகனிக்கப்படவேண்டும் என்றார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் போஜனபலியை படைப்பதுபோல, ஆசாரியர்களும் நித்திய போஜனபலியை படைக்கவேண்டும். இது ஆரோன் அபிஷேகம் பண்ணப்படும்நாளில், அவரும் அவருடைய குமாரரும் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய படைப்பு ஆகும் (லேவி 6:20).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் படைக்கும் போஜனபலியில் ஒரு பாகம் தகனிக்கப்படுகிறது. அதில் மீதியானதை ஆரோனும் அவருடைய குமாரரும், கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து புசிக்கிறார்கள். ஆசாரியர் படைக்கும் போஜனபலியை அவர்கள் புசிக்கக்கூடாது. அந்தப் போஜனபலி முழுவதுமாக தகனிக்கப்படவேண்டும்.

ஆசாரியர் தமக்கு செலுத்தவேண்டிய போஜனபலியின் படைப்பைப்பற்றி, கர்த்தர் மோசேக்கு தெளிவாக சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோன் அபிஷேகம் பண்ணப்படும்நாளில், அவனும் அவன் குமாரரும் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய படைப்பு என்னவென்றால், ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கை, காலையில் பாதியும் மாலையில் பாதியும், நித்திய போஜனபலியாகச் செலுத்தக்கடவர்கள்" (லேவி 6:19,20) என்று சொல்லுகிறார்.

நித்திய போஜனபலி சட்டியிலே எண்ணெய்விட்டுப் பாகம்பண்ணப்பட வேண்டும். பாகம்பண்ணப்பட்டபின்பு அதைக் கொண்டுவந்து, போஜனபலியாகப் பாகம்பண்ணப்பட்ட துண்டுகளைக் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகப் படைக்கவேண்டும் (லேவி 6:21).

ஆரோனுடைய குமாரரில் அவருடைய ஸ்தலத்திலே அபிஷேகம்பண்ணப்படுகிற ஆசாரியனும் அப்படியே செய்யவேண்டும்; அது முழுவதும் தகனிக்கப்படவேண்டும்; அது கர்த்தர் நியமித்த நித்திய கட்டளை. ஆசாரியனுக்காக இடப்படும் எந்தப் போஜனபலியும் புசிக்கப்படாமல், முழுவதும் தகனிக்கப்படவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 6:22,23).

பிரதான ஆசாரியன் கர்த்தருக்கு, ஒவ்வொரு நாளும் போஜனபலியை செலுத்தவேண்டும் என்றும், தான் அபிஷேகம்பண்ணப்பட்ட நாளிலிருந்து, தன்னுடைய ஜீவியகாலம் வரையிலும், அந்தப் போஜனபலியை அநுதினமும் செலுத்தவேண்டும் என்றும் யூதமார்க்கத்து சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். பிரதான ஆசாரியன் அநுதினமும் காலையிலும், மாலையிலும் இரண்டுதரம் போஜனபலியை செலுத்துகிறார். அவர் அந்தப் போஜனபலியை தன்னுடைய சொந்தக் கிரயத்தினால் செலுத்துகிறார்.

ஆசாரியர் செலுத்தும் போஜனபலியானது புசிக்கப்படுவதுபோல வேவிக்கப்படும் என்றும், ஆனாலும் ஆசாரியர் அதை புசிப்பதில்லை என்றும், அது முழுவதுமாக தகனிக்கப்படும் என்றும் யூதமார்க்கத்து சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் நித்தியபோஜனபலி சம்பந்தமான கட்டளைகள் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது :

1. ஆரோன் அபிஷேகம் பண்ணப்படும் நாளில், அவனும் அவன் குமாரரும் கர்த்தருக்கு நித்திய போஜனபலியாகச் செலுத்தக்கடவர்கள் (லேவி 6:20,22-23).
2. ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கை, காலையில் பாதியும் மாலையில் பாதியும், நித்திய போஜனபலியாகச் செலுத்தக்கடவர்கள்.
3. அது சட்டியிலே எண்ணெய்விட்டுப் பாகம்பண்ணப்படக்கடவது (லேவி 16:18,21).
4. பாகம்பண்ணப்பட்டபின்பு அதைக் கொண்டுவந்து, போஜனபலியாகப் பாகம்பண்ணப்பட்ட துண்டுகளைக் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகப் படைக்கக்கடவாய். (லேவி 16:21).

5. பிரதான ஆசாரியனும், மற்ற ஆசாரியரும் அவர்களுடைய ஸ்தானத்தில் அபிஷேகம் பண்ணப்படுகிறவர்களும் போஜன பலியாகப் பாகம்பண்ணப்பட்ட துண்டுகளைக் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகப் படைக்கக்கடவர்கள். (லேவி 6:22).

6. அது முழுவதும் தகனிக்கப்பட வேண்டும்; (லேவி 6:22-23) அதைப் புசிக்கக்கூடாது. இயேசு கிறிஸ்துவின் பரிபூரண பலிக்கும் அவருடைய உயிர்த்தெழுதலுக்கும், அவர் பரமேறியதற்கும் இது அடையாளமாகும். (லூக்கா 24:39-53; அப் 1:9-11).

7. அது கர்த்தர் நியமித்த நித்திய கட்டளை (லேவி 6:20,22-23).

பாவநிவாரணபலியின் பிரமாணம் லேவி 6:24-30

லேவி 6:24. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 6:25. நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொல்லவேண்டியதாவது, பாவநிவாரணபலியின் பிரமாணம் என்னவென்றால், சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் பாவநிவாரணபலியும் கர்த்தருடைய சந்நிதியில் கொல்லப்படக்கடவது; அது மகா பரிசுத்தமானது.

லேவி 6:26. பாவ நிவிர்த்திசெய்ய அதைப் பலியிடுகிற ஆசாரியன் அதைப் புசிக்கக்கடவன்; ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரமாகிய பரிசுத்த ஸ்தலத்திலே அது புசிக்கப்படவேண்டும்.

லேவி 6:27. அதின் மாம்சத்தில் படுகிறது எதுவும் பரிசுத்தமாயிருக்கும்; அதின் இரத்தத்திலே கொஞ்சம் ஒரு வஸ்திரத்தில் தெறித்ததானால், இரத்தந்தெறித்த வஸ்திரத்தைப் பரிசுத்த ஸ்தலத்தில் கழுவவேண்டும்.

லேவி 6:28. அது சமைக்கப்பட்ட மண்பாண்டம் உடைக்கப்பட வேண்டும்; செப்புப்பானையில் சமைக்கப்பட்டதானால், அது விளக்கப்பட்டுத் தண்ணீரில் கழுவப்படவேண்டும்.

லேவி 6:29. ஆசாரியரில் ஆண்மக்கள் யாவரும் அதைப் புசிப்பார்களாக; அது மகா பரிசுத்தமானது.

லேவி 6:30. எந்தப் பாவநிவாரணபலியின் இரத்தத்தில் கொஞ்சம் பரிசுத்த ஸ்தலத்தில் பாவநிவிர்த்தியின் பொருட்டு ஆசரிப்புக் கூடாரத்திற்குள்ளே கொண்டுவரப்பட்டதோ, அந்தப் பலி புசிக்கப்படலாகாது, அது அக்கினியிலே தகனிக்கப்படவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவாரண பலியை செலுத்துவதுபோல ஆசாரியரும் பாவநிவாரண பலியை செலுத்தவேண்டும். கர்த்தர் பாவநிவாரண பலியின் பிரமாணத்தை மோசேயினிடத்தில் சொல்லுகிறார். மோசே இந்தப் பிரமாணத்தை ஆரோனிடத்திலும், அவருடைய குமாரரிடத்திலும் சொல்லவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொல்லவேண்டியதாவது, பாவநிவாரணபலியின் பிரமாணம் என்னவென்றால், சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் பாவநிவாரணபலியும் கர்த்தருடைய சந்நிதியில் கொல்லப்படக்கடவது; அது மகா பரிசுத்தமானது" (லேவி 6:24,25) என்று சொல்லுகிறார்.

பாவ நிவிர்த்திசெய்ய அதைப் பலியிடுகிற ஆசாரியன் அதைப் புசிக்கக்கவேண்டும்; ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரமாகிய பரிசுத்த ஸ்தலத்திலே அதை புசிக்கவேண்டும் (லேவி 6:26).

அதின் மாம்சத்தில் படுகிறது எதுவும் பரிசுத்தமாயிருக்கும்; அதின் இரத்தத்திலே கொஞ்சம் ஒரு வஸ்திரத்தில் தெறித்ததானால், இரத்தந்தெறித்த வஸ்திரத்தைப் பரிசுத்த ஸ்தலத்தில் கழுவவேண்டும் என்றும் (லேவி 6:27).

அது சமைக்கப்பட்ட மண்பாண்டம் உடைக்கப்படவேண்டும்; செப்புப்பானையில் சமைக்கப்பட்டதானால், அது விளக்கப்பட்டுத் தண்ணீரில் கழுவப்படவேண்டும் என்றும் *(லேவி 6:28)* கர்த்தர் சொல்லுகிறார்.

பாவநிவாரண பலியாக செலுத்தப்படும் மிருகஜீவன் கர்த்தருடைய சந்நிதியில் கொல்லப்படவேண்டும். சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் பாவநிவாரண பலியும் கொல்லப்படவேண்டும். பாவநிவாரணபலி பாவத்தை நிவிர்த்தி பண்ணப்படுவதற்கு செலுத்தப்படும் பலியாகும். இந்தப் பலியானது ஆசாரியரின் பாவத்தை நிவர்த்தி பண்ணுவதற்காக செலுத்தப்படுகிறது.

பாவநிவிர்த்தி செய்த பின்பு அதை ஆசாரியர் ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரமாகிய பரிசுத்த ஸ்தலத்திலே புசிக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். பாவநிவாரண பலியின் இரத்தம் பரிசுத்தமானது. ஆகையினால் அந்த இரத்தத்தில் கொஞ்சம் ஆசாரியனுடைய வஸ்திரத்தில் தெறித்துவிட்டால், அந்த இரத்தத்தை பரிசுத்த ஸ்தலத்திலேயே கழுவவேண்டும் என்றும் கர்த்தர் கட்டளையிடுகிறார்.

பாவநிவாரணபலி சமைக்கப்படும் பாத்திரத்தைப்பற்றியும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். அது மண்பானையில் சமைக்கப்பட்டால், அந்தப் பானையை உடைத்துப்போடவேண்டும். அதை செப்புப்பானையில் சமைத்தால், அதை விளக்கி தண்ணீரிலே கழுவவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆசாரியரில் ஆண்மக்கள் யாவரும் அதைப் புசிப்பார்களாக; அது மகா பரிசுத்தமானது. எந்தப் பாவநிவாரணபலியின் இரத்தத்தில் கொஞ்சம் பரிசுத்த ஸ்தலத்தில் பாவநிவிர்த்தியின்பொருட்டு ஆசரிப்புக் கூடாரத்திற்குள்ளே கொண்டுவரப்பட்டதோ, அந்தப் பலி புசிக்கப்படலாகாது, அது அக்கினியிலே தகனிக்கப்படவேண்டும்" *(லேவி 6:29,30)* என்று சொல்லுகிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் பாவநிவாரண பலியின் பிரமாணத்தைப்பற்றி இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

1. நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் பாவநிவாரணபலியின் பிரமாணத்தைச் சொல்லுவாயாக. *(லேவி 6:25)*.

2. சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் பாவநிவாரணபலியும் கர்த்தருடைய சந்நிதியில் கொல்லப்படக்கடவது; *(லேவி 6:25; லேவி 1:11)*.

3. பாவ நிவிர்த்திசெய்ய அதைப் பலியிடுகிற ஆசாரியன் அதைப் புசிக்கக்கடவன்; *(லேவி 6:26,29)*.

4. ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரமாகிய பரிசுத்த ஸ்தலத்திலே அது புசிக்கப்படவேண்டும் *(லேவி 6:26)*.

5. அதின் மாம்சத்தில் படுகிறது எதுவும் பரிசுத்தமாயிருக்கும்; *(லேவி 6:27)*.

6. அதின் இரத்தத்திலே கொஞ்சம் ஒரு வஸ்திரத்தில் தெறித்ததானால், இரத்தந்தெறித்த வஸ்திரத்தைப் பரிசுத்த ஸ்தலத்தில் கழுவவேண்டும். *(லேவி 6:27)*.

7. அது சமைக்கப்பட்ட மண்பாண்டம் உடைக்கப்படவேண்டும்; *(லேவி 6:28)*.

8. செப்புப்பானையில் சமைக்கப்பட்டதானால், அது விளக்கப்பட்டுத் தண்ணீரில் கழுவப்படவேண்டும். *(லேவி 6:28)*.

9. எந்தப் பாவநிவாரணபலியின் இரத்தத்தில் கொஞ்சம் பரிசுத்த ஸ்தலத்தில் பாவநிவிர்த்தியின்பொருட்டு ஆசரிப்புக் கூடாரத்திற்குள்ளே கொண்டுவரப் பட்டதோ, அந்தப் பலி புசிக்கப்படலாகாது. *(லேவி 6:30; லேவி 4:5-7,16-18; எபி 13:11)*. பிராகாரத்தில் தெளிக்கப்பட்ட பலியின் ஒரு பங்கைப் புசிக்கலாம். *(லேவி 4:25,30,34; லேவி 6:26-30; லேவி 7:1-10)*.

10. அது அக்கினியிலே முழுவதுமாகத் தகனிக்கப்படவேண்டும் *(லேவி 6:30)*.

பாவநிவாரண பலி மகா பரிசுத்தமானது என்று இரண்டு இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. (லேவி 6:25,29). காண்க, லேவி 2:10).

பாவ நிவிர்த்திசெய்ய அதைப் பலியிடுகிற ஆசாரியன் அதைப் புசிக்கவேண்டும். பிரபுக்களும், மற்ற ஜனங்களும் செலுத்திய பலிகளின் மாம்சத்தை என்ன செய்ய வேண்டுமென்று இந்த வாக்கியம் விளக்குகிறது. கொழுப்பை முழுவதுமாகத் தகனிக்க வேண்டும். ஆசாரியர் மாம்சத்தைப் புசிக்கவேண்டும். (லேவி 6:26; லேவி 4:16-35). கர்த்தர் பலிசெலுத்துகிறவர்களுடைய பலியை அங்கிகரித்திருக்கிறார் என்பதற்குப் புசிப்பது ஓர் அடையாளமாகும். இதன் மூலமாகத் தேவன் அவர்களோடு மறுபடியும் ஐக்கியமாக இருக்கிறார். (லேவி 10:17).

பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கப்படும் பலிகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. போஜனபலிகளில் மீதமானது. (லேவி 2:1-3; லேவி 7:14)
2. இஸ்ரவேலரின் போஜனபலிகள் (லேவி 2:4-10)
3. பாவநிவாரண பலிகளின் மாம்சம். (லேவி 4:26; லேவி 6:26; லேவி 10:17)
4. குற்றநிவாரண பலிகளின் மாம்சம். (லேவி 7:6)
5. சமாதானபலிகளின் மாம்சம். (லேவி 7:15-17)
6. குஷ்டம் நீங்கி சுத்திகரிக்கப்பட்டவன் குற்றநிவாரண பலியாகக் கொண்டுவரும் ஆழாக்கு எண்ணெய் ஆசாரியனுக்குரியது. (லேவி 14:10-13)
7. மெல்லிய மாவிலே புளிப்பாகப் பாகம் பண்ணப்பட்ட இரண்டு அப்பங்கள். (லேவி 23:17-20)
8. சமுகத்தப்பம் (லேவி 24:9)

பாவநிவாரண பலியின் மாம்சத்தில் படுகிறது எதுவும் பரிசுத்தமாயிருக்கும். பாவநிவாரண பலியினுடைய மாம்சம் பரிசுத்தமானதாகக் கருதப்படுகிறது (லேவி 6:25-29). இது கிறிஸ்துவிற்கு அடையாளம். அவர் நமக்காகப் பலியானார். நம்முடைய எல்லாப் பாவங்களுக்காகவும் அவர் பாவநிவிர்த்தி செய்தார். (பிலி 2:7; எபி 2:9-18; எபி 9:14-28; 1பேதுரு 1:8-23; 1பேதுரு 2:24). பாவநிவாரண மாம்சத்தில் படுகிறது பரிசுத்தமாயிருப்பதுபோல, இயேசுகிறிஸ்துவைத் தொடுகிறவர் அனைவரும் பரிசுத்தமாவார்கள்.

பாவநிவாரண பலியை புசிக்கக்கூடாது. பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுவரப்பட்ட பலியைப் புசிக்கக்கூடாது. அதை அக்கினியிலே முழுவதுமாகத் தகனிக்க வேண்டும். பாவநிவாரண பலிகளில் இரண்டு வகைகள் உள்ளன. ஒரு பாவநிவாரண பலியின் இரத்தம் பரிசுத்த ஸ்தலத்திற்குள் தெளிக்கப்படுகிறது. அதன் மாம்சத்தைப் புசிக்கக்கூடாது. அதை முழுவதுமாக அக்கினியிலே தகனிக்க வேண்டும் (லேவி 4:5-7,16-18; எபி 13:11). மற்றொரு பாவநிவாரண பலியின் இரத்தம் பிராகாரத்திலுள்ள வெண்கல பலிபீடத்தின்மீது தெளிக்கப்படுகிறது. அது அந்தப் பலிபீடத்தின்கீழே ஊற்றப்படுகிறது. அதன் மாம்சத்தின் ஒரு பகுதியைப் புசிக்கலாம். (லேவி 4:25,30,34; லேவி 6:26-30; லேவி 7:1-10; லேவி 6:26).

7 அதிகாரம்

குற்றநிவாரண பலியின் பிரமாணம் (லேவி 7:1-7). தகனபலியும் போஜனபலியும் (லேவி 7:8-10). சமாதானபலிகளின பிரமாணம். அது புசிக்கப்படவேண்டிய விதம் (லேவி 7:11-21). கர்த்தருக்கு தகனபலியாக செலுத்தப்படும் மிருகத்தின் கொழுப்பை புசிக்கக்கூடாது. இரத்தத்தையும் புசிக்கக்கூடாது (லேவி 7:22-27). கர்த்தருக்கு செலுத்தப்படும் சமாதானபலியில் ஆசாரியரின் பங்கு (லேவி 7:28-34). கர்த்தர் பலிகளைப்பற்றி சொல்லியிருக்கிற பொதுவான பிரமாணம் (லேவி 7:35-38).

குற்றநிவாரண பலியின் பிரமாணம் லேவி 7:1-10

லேவி 7:1. குற்றநிவாரண பலியின் பிரமாணம் என்னவென்றால், அது மகா பரிசுத்தமானது.

லேவி 7:2. சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில், குற்றநிவாரண பலியும் கொல்லப்பட வேண்டும்; அதின் இரத்தத்தைப் பலி பீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து,

லேவி 7:3. அதினுடைய கொழுப்பு முழுவதையும், அதின் வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும்,

லேவி 7:4. இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் மேல் சிறு குடல்களினிடத்திலிருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடே கூடக்கல்லீரலின்மேல் இருக்கிற ஜவ்வையும் எடுத்துச் செலுத்துவானாக.

லேவி 7:5. இவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குத் தகனபலியாகத் தகனிக்கக்கடவன்; அது குற்றநிவாரண பலி.

லேவி 7:6. ஆசாரியரில் ஆண்மக்கள் யாவரும் அதைப் புசிப்பார்களாக; அது பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கப்படவேண்டும்; அது மகாபரிசுத்தமானது.

லேவி 7:7. பாவநிவாரணபலி எப்படியோ குற்றநிவாரணபலியும் அப்படியே; அவ்விரண்டிற்கும் பிரமாணம் ஒன்றே; அதினாலே பாவநிவிர்த்திசெய்த ஆசாரியனை அது சேரும்.

லேவி 7:8. ஒருவனுடைய சர்வாங்க தகனபலியைச் செலுத்தின ஆசாரியன் தான் செலுத்தின தகனபலியின் தோலைத் தனக்காக வைத்துக்கொள்ளவேண்டும்.

லேவி 7:9. அடுப்பிலே பாகம்பண்ணப்பட்டதும், சட்டியிலும் தட்டின்மேலும் சமைக்கப்பட்டதுமான போஜனபலியாவும் அதைச் செலுத்துகிற ஆசாரியனுடையவைகளாயிருக்கும்.

லேவி 7:10. எண்ணெயிலே பிசைந்ததும் எண்ணெயிலே பிசையாததுமான சகல போஜனபலியும் ஆரோனுடைய குமாரர் யாவருக்கும் சரிபங்காகச் சேரவேண்டும்.

பாவநிவாரண பலியைப்போலவே குற்றநிவாரண பலியும் செலுத்தப்படுகிறது. கர்த்தர் இவ்விரண்டு பலிகளுக்கும் ஒரே மாதிரியான பிரமாணத்தையே சொல்லியிருக்கிறார்.

"பாவநிவாரணபலி எப்படியோ குற்றநிவாரணபலியும் அப்படியே; அவ்விரண்டிற்கும் பிரமாணம் ஒன்றே; அதினாலே பாவநிவிர்த்திசெய்த ஆசாரியனை அது சேரும்" (லேவி 7:7).

கர்த்தர் மோசேயினிடத்தில் குற்றநிவாரணபலியின் பிரமாணத்தைப்பற்றிச் சொல்லுகிறார். அது மகா பரிசுத்தமானது. சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில், குற்றநிவாரண பலியும் கொல்லப்படவேண்டும் (லேவி 7:1,2). குற்றநிவாரண பலியாக கொல்லப்படும் மிருகத்தின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கவேண்டும்.

அந்த மிருகத்தின் கொழுப்பு முழுவதையும், அதின் வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேல் சிறு குடல்களினிடத்திலிருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடே கூடக்கல்லீரலின்மேல் இருக்கிற ஜவ்வையும் எடுத்து குற்றநிவாரண பலியாக செலுத்தவேண்டும் (லேவி 7:3,4).

இவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குத் தகனபலியாகத் தகனிக்கவேண்டும்; அது குற்றநிவாரண பலி. ஆசாரியரில் ஆண்மக்கள் யாவரும் அதைப் புசிப்பார்களாக; அது பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கப்படவேண்டும்; அது மகாபரிசுத்தமானது (லேவி 7:5,6).

குற்றநிவாரண பலியாக கொல்லப்படும் மிருகத்தின் இரத்தம், குற்றத்தை நிவிர்த்தி பண்ணுவதற்காக கர்த்தருக்கு செலுத்தப்படுகிறது. ஆசாரியர் அந்த மிருகத்தின் மாம்சத்தை புசிக்கவேண்டும். ஆசாரியர் பாவநிவாரண பலியின் மாம்சத்தை பரிசுத்த ஸ்தலத்திலே புசிப்பதுபோல, குற்றநிவாரண பலியின் மாம்சத்தையும், பரிசுத்த ஸ்தலத்திலே புசிக்கவேண்டும்.

குற்றநிவாரண பலியாக கொல்லப்படும் மிருகத்தின் இரத்தத்தை பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கவேண்டும். யூதருடைய பாரம்பரிய சரித்திரத்தின் பிரகாரம், பலிபீடத்தைச் சுற்றிலும், அதன் மையப்பகுதியில் ஒரு சிகப்பு நூல் கட்டப்பட்டிருக்கும் என்றும், அது பலிபீடத்தை இரண்டு பகுதிகளாக பிரிக்கும் என்றும் சொல்லுகிறார்கள். சர்வாங்க தகனபலியின் இரத்தம் சிகப்பு நூலின் மேற்பகுதியிலுள்ள பலிபீடத்தின்மேலும், குற்றநிவாரண பலிகள், சமாதான பலிகள் ஆகியவற்றின் இரத்தம் சிகப்பு நூலின் கீழ்ப்பகுதியிலுள்ள பலிபீடத்தின்மேலும் தெளிப்படுவது வழக்கம்.

குற்றநிவாரண பலியை செலுத்துகிறவருக்கு, அந்த பலியின் மாம்சத்தில் பங்கு எதுவும் பாகம்பண்ணி கொடுக்கப்படுவதில்லை. சமாதானபலியில், பலிசெலுத்துகிறவருக்கு பங்கு உண்டு. குற்றநிவாரண பலியில் பலிசெலுத்துகிறவருக்கு பங்கு இல்லை. குற்றநிவாரண பலியின் மாம்சத்தை ஆசாரியரின் ஆண்மக்கள் யாவரும் பரிசுத்த ஸ்தலத்திலே புசிக்கவேண்டும். அதன் மாம்சம் ஆசாரியருக்குள்ளே பாகம்பண்ணி கொடுக்கப்படுகிறது.

கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற கிருபைகளுக்கும் இரக்கங்களுக்கும் நன்றி சொல்லும் வண்ணமாக சமாதானபலி செலுத்தப்படுகிறது. சமாதானபலியை செலுத்துகிறவர்கள், அதன் மாம்சத்தை புசித்து பந்தியிருக்கிறார்கள். சமாதானபலி செலுத்துகிறவர்கள் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக் கொண்டதற்காக சந்தோஷப்படுகிறார்கள். அவர்கள் மிகுந்த சந்தோஷத்தோடு சமாதானபலியின் மாம்சத்தைப் புசிக்கிறார்கள்.

குற்றநிவாரண பலியை செலுத்துகிறவர்களோ, தங்களுடைய குற்றங்களுக்கு மனம் வேதனைப்பட்டு, வருத்தப்பட்டு, துக்கப்பட்டு, தங்களுடைய குற்றங்கள் நிவிர்த்தி பண்ணப்படுவதற்காக பலி செலுத்துகிறார்கள். பலி செலுத்துபவர்களிடத்தில் தங்கள் பாவத்தைக் குறித்த துக்கம் அதிகமாயிருப்பதினால், அவர்கள் குற்றநிவாரண பலியின் மாம்சத்தில் பந்தியிருப்பது முறையாக இருக்காது.

துக்கமாகயிருக்கிறவர்கள் ஒன்றும் புசியாமல் உபவாசம்பண்ணுவதுதான் முறையாகயிருக்கும். ஆகையினால் குற்றநிவாரண பலியை செலுத்துகிறவர்கள், அந்த மிருகத்தின் மாம்சத்தை புசிப்பதில்லை. அவர்கள் பாவத்தைவிட்டு விலகியிருக்கவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறார்கள். தாங்கள் ஏற்கெனவே செய்த பாவத்தினிமித்தமாக மனவேதனையோடிருக்கிறார்கள்.

ஒருவனுடைய சர்வாங்க தகனபலியைச் செலுத்தின ஆசாரியன் தான் செலுத்தின தகனபலியின் தோலைத் தனக்காக வைத்துக்கொள்ளவேண்டும் (லேவி 7:8). இதன் மூலமாக ஆசாரியனுடைய பொருளாதார தேவைகள் சந்திக்கப்படும். ஆசாரியன் சர்வாங்க தகனபலியின் தோல்களை சேகரித்து, அதை விற்பனை செய்து, தன்னுடைய குடும்பத்தின் பொருளாதார தேவைகளை சந்தித்துக்கொள்வார்.

போஜனபலியும் ஆசாரியருக்குரியது. போஜனபலியை உடனே புசிக்கவேண்டும். ஆகையினால் போஜனபலியை செலுத்துகிற ஆசாரியர் யாவருக்கும் அது சரிபங்காக பாகம்பண்ணப்படுகிறது.

அடுப்பிலே பாகம்பபண்ணப்பட்டதும், சட்டியிலும் தட்டின்மேலும் சமைக்கப்பட்டதுமான போஜனபலியாவும் அதைச் செலுத்துகிற ஆசாரியனுடையவைகளாயிருக்கும். எண்ணெயிலே பிசைந்ததும் எண்ணெயிலே பிசையாததுமான சகல போஜனபலியும் ஆரோனுடைய குமாரர் யாவருக்கும் சரிபங்காகச் சேரவேண்டும் (லேவி 7:9,10).

பரிசுத்த வேதாகமத்தில் குற்றநிவாரண பலியின் பிரமாணத்தைப்பற்றி இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

1. சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில், குற்றநிவாரண பலியும் வெண்கல பலிபீடத்தின் வலதுபுறத்தில் கொல்லப்பட வேண்டும். (லேவி 7:2; லேவி 1:11).

2. ஆசாரியன் இரத்தத்தைப் பலி பீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்க வேண்டும். (லேவி 7:2).

3. அதினுடைய கொழுப்பு முழுவதையும், அதின் வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேல் சிறு குடல்களினிடத்திலிருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடே கூடக்கல்லீரலின்மேல் இருக்கிற ஜவ்வையும் ஆசாரியன் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குத் தகனபலியாகத் தகனிக்கவேண்டும். (லேவி 7:3-5).

4. ஆசாரியரில் ஆண்மக்கள் யாவரும் அதைப் புசிப்பார்களாக; அது பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கப்படவேண்டும்; (லேவி 7:6).

5. பாவநிவாரணபலி எப்படியோ குற்றநிவாரணபலியும் அப்படியே ஆசாரியனுடைய பங்கு ஆசாரியனைச் சேரும் (லேவி 7:7).

6. ஒருவனுடைய சர்வாங்க தகனபலியைச் செலுத்தின ஆசாரியன் தான் செலுத்தின தகனபலியின் தோலைத் தனக்காக வைத்துக்கொள்ளவேண்டும். அடுப்பிலே பாகம்பபண்ணப்பட்டதும், சட்டியிலும் தட்டின்மேலும் சமைக்கப்பட்டதுமான போஜன பலியாவும் அதைச் செலுத்துகிற ஆசாரியனுடையவைகளாயிருக்கும். எண்ணெயிலே பிசைந்ததும் எண்ணெயிலே பிசையாததுமான சகல போஜனபலியும் ஆரோனுடைய குமாரர் யாவருக்கும் சரிபங்காகச் சேரவேண்டும். (லேவி 7:8-10).

குற்றநிவாரண பலியின் மாம்சத்தை ஆசாரியரில் ஆண்மக்கள் மாத்திரமே புசிக்கவேண்டும். பெண்மக்கள் அதைப் புசிப்பதற்கு அனுமதியில்லை. பரிசுத்த வேதாகமத்தில் ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கும் இடையே ஒரு சில வேறுபாடுகள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :

1. ஆண்பிள்ளைகளுடைய மாம்சத்தில் உடன்படிக்கையின் அடையாளம் இருக்கிறது. (லேவி 12:3; யாத் 12:44-48).

2. ஆண்பிள்ளைகள் ஊழியம் செய்வதற்காகத் தேவனுக்குரியவர்கள். (யாத் 13:12,15).

3. வருஷத்தில் மூன்றுதரம் ஆண்மக்கள் யாவரும் தேவனுடைய பிரசன்னத்தில் வந்து நிற்க வேண்டும். (யாத் 23:17; உபா 16:16).

4. ஆரோனின் ஆண் புத்திரர் பலிகளில் ஒரு பாகத்தைப் புசிக்கவேண்டும். (லேவி 6:18,29; லேவி 7:6; எண் 18:10).

சர்வாங்க தகனபலியைச் செலுத்தின ஆசாரியன் தகனபலியின் தோலைத் தனக்காக வைத்துக் கொள்ள வேண்டும். இந்த உரிமை ஆதாமின் காலத்திற்குப் போவதாக அவர்கள் நம்பினார்கள். முதலாவது பலிகளின் தோல்களை ஆதாம் உடைகளாகத் தரித்துக் கொண்டார் (ஆதி 3:21).

சமாதானபலிகளின் பிரமாணம் லேவி 7:11-21

லேவி 7:11. கர்த்தருக்குச் செலுத்துகிற சமாதானபலிகளின் பிரமாணம் என்னவென்றால்,

லேவி 7:12. அதை ஸ்தோத்திரத்துக்காகச் செலுத்துவானானால், அவன் ஸ்தோத்திர பலியோடுங்கூட எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளையும், எண்ணெயிலே பிசைந்து வறுக்கப்பட்ட மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களையும் படைக்கக்கடவன்.

லேவி 7:13. அவைகளைப் படைக்கிறதும் அல்லாமல், புளித்தமாவினால் செய்த அப்பத்தையும், தன்னுடைய சமாதான பலியாகிய ஸ்தோத்திரபலியோடுகூட படைக்க வேண்டும்.

லேவி 7:14. அந்தப் படைப்பு முழுவதிலும் வகைக்கு ஒவ்வொன்றை எடுத்துக் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் பலியாகச் செலுத்துவானாக; அது சமாதான பலியின் இரத்தத்தைத் தெளித்த ஆசாரியனுடையதாகும்.

லேவி 7:15. சமாதானபலியாகிய ஸ்தோத்திரபலியின் மாம்சமானது செலுத்தப்பட்ட அன்றைத்தினமே புசிக்கப்படவேண்டும்; அதில் ஒன்றும் விடியற்காலமட்டும் வைக்கப்படலாகாது.

லேவி 7:16. அவன் செலுத்தும் பலி பொருத்தனையாயாவது உற்சாகபலியாயாவது இருக்குமானால், அது செலுத்தப்படும் நாளிலும், அதில் மீதியானது மறு நாளிலும் புசிக்கப்படலாம்.

லேவி 7:17. பலியின் மாம்சத்தில் மீதியாயிருக்கிறது மூன்றாம் நாளில் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது.

லேவி 7:18. சமாதானபலியின் மாம்சத்தில் மீதியானது மூன்றாம் நாளில் புசிக்கப்படுமானால், அது அங்கிகரிக்கப்படாது; அதைச் செலுத்தினவனுக்கு அது பலிக்காது; அது அருவருப்பாயிருக்கும்; அதைப் புசிக்கிறவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

லேவி 7:19. தீட்டான எந்த வஸ்துவிலாவது அந்த மாம்சம் பட்டதானால் அது புசிக்கப்படாமல் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக் கடவது; மற்ற மாம்சத்தையோ சுத்தமாயிருக்கிறவனெவனும் புசிக்கலாம்.

லேவி 7:20. ஒருவன் தீட்டுள்ளவனாயிருக்கையில் கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்தைப் புசித்தால், அவன் தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்.

லேவி 7:21. மனுஷருடைய தீட்டையாவது, தீட்டான மிருகத்தையாவது, அருவருக்கப்படத்தக்க தீட்டான மற்ற எந்த வஸ்துவையாவது ஒருவன் தொட்டிருந்து, கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்திலே புசித்தால், அவன் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் என்றார்.

கர்த்தர் மோசேயை நோக்கி சமாதானபலிகளின் பிரமாணத்தை சொல்லுகிறார். சமாதானபலியை மூன்றுவிதமான காரணங்களுக்காக செலுத்தலாம். அதன் விவரம் வருமாறு :

1. கர்த்தரிடத்திலிருந்து தாங்கள் பெற்றுக்கொண்ட விசேஷித்த கிருபைகளுக்கும், இரக்கங்களுக்கும் ஸ்தோத்திரம் செலுத்துவதற்காக, கர்த்தருக்கு சமாதான பலிகளை செலுத்தலாம். ஒருவேளை கர்த்தர் இவர்களை வியாதியிலிருந்து பாதுகாத்திருப்பார். அல்லது இவர்களுக்கு வந்த வியாதியை குணப்படுத்தியிருப்பார். கர்த்தர் இவர்களுடைய பிரயாணங்களை வாய்க்கப்பண்ணியிருப்பார். இவர்களுடைய கடல் பிரயாணங்களிலும் மற்ற பிரயாணங்களிலும் பாதுகாப்பை கொடுத்திருப்பார். கர்த்தர் இவர்களை சிறையிருப்பிலிருந்து மீட்டு இரட்சித்திருப்பார். இப்படிப்பட்ட காரணங்களுக்காக இஸ்ரவேல் புத்திரர் ஸ்தோத்திரத்திற்காக கர்த்தருக்கு சமாதானபலிகளை செலுத்துகிறார்கள்.

2. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் பொருத்தனைபண்ணி ஜெபம்பண்ணுகிறார்கள் (லேவி 7:16). தாங்கள் கஷ்டங்களையும் வேதனைகளையும், ஆபத்துக்களையும் சந்திக்கும்போது, கர்த்தர் இந்தப் பிரச்சனைகளிலிருந்து தங்களை விடுவித்தால், கர்த்தருக்கு விசேஷித்த காணிக்கைகளை செலுத்துவதாக பொருத்தனை பண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு செலுத்தும் சமாதானபலி பொருத்தனையின் பலியாகயிருக்கலாம்.

3. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு செலுத்தும் சமாதானபலி உற்சாக பலியாகயிருக்கலாம் (லேவி 7:17). கர்த்தர் தங்களுக்கு காண்பித்த விசேஷித்த கிருபைகளுக்கும் இரக்கங்களுக்கும் அவருக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கும் வண்ணமாக, இஸ்ரவேல் புத்திரர் மனப்பூர்வமாக, உற்சாக பலிகளை செலுத்துகிறார்கள். அவர்கள் உற்சாக பலிகளை செலுத்துவதோடு, கர்த்தரிடத்தில் தங்கள் ஜெபங்களையும் ஏறெடுக்கிறார்கள். ஸ்தோத்திரத்திற்காக சமாதான பலிகளை செலுத்துகிறவர்கள், அந்தப் பலிகளோடு ஜெபவிண்ணப்பங்களை ஏறெடுக்காமல், ஸ்தோத்திரங்களை மாத்திரம் ஏறெடுக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தமக்கு சமாதானபலிகளை செலுத்த வேண்டிய விதம் பற்றி கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். அவர்கள் அதை ஸ்தோத்திரத்துக்காகச் செலுத்துவார்களானால், அவர்கள் ஸ்தோத்திர பலியோடுங்கூட எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளையும், எண்ணெயிலே பிசைந்து வறுக்கப்பட்ட மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களையும் படைக்கவேண்டும் (லேவி 7:12).

போஜனபலியோடு புளிப்பில்லா அதிரசங்களும், புளிப்பில்லா அடைகளும், மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களும் படைக்கப்படவேண்டும். சமாதானபலிகளில் புளிப்புள்ள அப்பம் படைக்கப்படுகிறது. இது சமாதானபலியின் விசேஷித்த அம்சமாகும்.

இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லாத அடைகளையும், அதிரசங்களையும் படைக்கிறதும் அல்லாமல், புளித்தமாவினால் செய்த அப்பத்தையும், தன்னுடைய சமாதான பலியாகிய ஸ்தோத்திரபலியோடுகூட படைக்கவேண்டும் (லேவி 7:13).

புளிப்பில்லா அப்பம் சுவையாகயிருக்காது. இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்கும்போது புளிப்பில்லாத அப்பத்தைப் புசிக்கவேண்டும். அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, அந்த தேசத்தை விட்டு வெளியேறியபோது, புளிப்பில்லாத அப்பத்தைப் புசித்தார்கள். அந்த சம்பவத்தை நினைவுகூரும் வண்ணமாக, இஸ்ரவேல் புத்திரர், பஸ்கா பண்டிகையின்போது, புளிப்பில்லாத அப்பத்தை மாத்திரமே புசிக்கிறார்கள்.

பஸ்கா பண்டிகையை தவிர மற்ற பண்டிகைகளில், இஸ்ரவேல் புத்திரர் புளிப்புள்ள அப்பத்தைப் புசிப்பதற்கு கர்த்தர் அனுமதி கொடுக்கிறார். புளிப்புள்ள அப்பம் மெதுவாகயிருக்கும். புளிப்பில்லாத அப்பம் கடினமாயிருக்கும். மேலும் புளிப்புள்ள அப்பத்தில் அதிக சுவை இருக்கும். கர்த்தருக்கு சமாதானபலிகளை செலுத்துகிறவர்கள், கர்த்தரோடுகூட பந்தியிலே போஜனம்பண்ணுகிறார்கள். போஜனம்பண்ணுவது சந்தோஷமாயிருக்க வேண்டும். பந்தியில் சுவையான போஜனம் பரிமாறப்படவேண்டும். ஆகையினால் கர்த்தருக்கு செலுத்துகிற சமாதானபலிகளில், புளிப்புள்ள அப்பங்கள் செலுத்தப்படுகிறது.

கர்த்தருக்கு ஸ்தோத்திரத்திற்காக செலுத்தப்படும் சமாதானபலியின் படைப்பு முழுவதிலும் வகைக்கு ஒவ்வொன்றை எடுத்துக் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் பலியாகச் செலுத்த வேண்டும்; அது சமாதான பலியின் இரத்தத்தைத் தெளித்த ஆசாரியனுடையதாகும் (லேவி 7:14).

கர்த்தருக்கு செலுத்தப்படுகிற சமாதானபலியில் மாம்சமும் செலுத்தப்படவேண்டும். சமாதானபலியாகிய ஸ்தோத்திரபலியின் மாம்சமானது செலுத்தப்பட்ட அன்றைத்தினமே புசிக்கப்படவேண்டும்; அதில் ஒன்றும் விடியற்காலமட்டும் வைக்கப்படலாகாது (லேவி 7:15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சமாதானபலியாக செலுத்தப்படும் மாம்சத்தில் ஆசாரியருக்கும், சமாதானபலியை கொண்டு வருகிறவருக்கும் பங்கு இருக்கிறது. அவர்கள் தங்களுடைய பாகமாக பெற்றுக்கொண்ட மாம்சத்தை அன்றைய தினமே புசிக்கவேண்டும். அதைப் பாடம்பண்ணி, மறுநாள் விடியற்காலம் மட்டும் வைத்திருக்கக்கூடாது.

சமாதானபலியாக செலுத்தப்படும் மாம்சம் பரிசுத்தமானது. ஆனாலும் அந்த மாம்சத்தை பரிசுத்த ஸ்தலத்தில் மாத்திரம் புசிக்க வேண்டும் என்று கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லவில்லை. குற்றநிவாரண பலியின் மாம்சம் பரிசுத்த ஸ்தலத்தில் மாத்திரமே புசிக்கப்படவேண்டும் (லேவி 7:6).

சமாதானபலிகளின் மாம்சத்தை ஆசாரியர்களும், சமாதானபலிகளை கொண்டு வருகிறவர்களும் தங்கள் கூடாரங்களுக்கு கொண்டுபோய், அந்த மாம்சத்தை தங்கள் குடும்பத்தாரோடு அங்கே புசிக்கலாம். கர்த்தர் இதன் மூலமாக குற்றநிவாரணபலிக்கும், சமாதானபலிக்கும் வித்தியாசம் ஏற்படுத்தியிருக்கிறார்.

கர்த்தர் சமாதான பலியின் மாம்சத்திற்கும் மற்ற மாம்சத்திற்கும் வித்தியாசம் ஏற்படுத்துகிறார். சமாதான பலியின் மாம்சம் பரிசுத்தமானது. சமாதானபலியின் மாம்சமானது, செலுத்தப்பட்ட அன்றையதினமே புசிக்கப்படவேண்டும்.

பலியின் மாம்சத்தில் மீதியாயிருக்கிறது மூன்றாம் நாளில் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது (லேவி 7:17) என்றும், சமாதானபலியின் மாம்சத்தில் மீதியானது மூன்றாம் நாளில் புசிக்கப்படுமானால்,அது அங்கிகரிக்கப்படாது; அதைச் செலுத்தினவனுக்கு அது பலிக்காது; அது அருவருப்பாயிருக்கும்; அதைப் புசிக்கிறவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான் (லேவி 7:18) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

சமாதானபலியின் மாம்சத்தைப் புசிக்கிறவர்கள், கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, அதை மிகுந்த பயபக்தியோடு புசிக்கவேண்டும். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாதவர்கள், அந்தப் பிரமாணத்தை அசட்டைபண்ணுவதோடு, அந்தப் பிரமாணத்தைக் கொடுத்த கர்த்தரையும் அசட்டைபண்ணுகிறார்கள்.

கர்த்தர் சமாதானபலியின் மாம்சத்தினால் இஸ்ரவேல் புத்திரருக்கு பந்தி வைக்கிறார். ஆகையினால் அந்த மாம்சத்தை செலுத்தப்பட்ட அன்றையதினத்திலேயே புசிக்கவேண்டும் என்றும், அதை அவர்களுடைய கூடாரத்திலும் புசிக்கலாம் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருக்கு சமாதானபலிகளை செலுத்துகிறவர்கள், அந்த மாம்சத்தில் தங்களுக்கு பாகமாக கொடுக்கப்பட்ட பங்கை, தங்களுடைய கூடாரங்களுக்கு எடுத்துக்கொண்டுபோய், அங்கே தங்களுடைய சிநேகிதரோடு சந்தோஷமாய்ப் புசிக்கலாம். அந்த மாம்சத்தில் ஒரு பங்கை தரித்திரருக்கும் கொடுத்து அவர்களுக்கு உதவிசெய்யலாம்.

கர்த்தருக்கு போஜனபலியாக செலுத்தப்படும் மாம்சம் பரிசுத்தமானது. ஆகையினால் சுத்தமாயிருக்கிறவர்கள் மாத்திரமே, அந்த மாம்சத்தைப் புசிக்கவேண்டும். அசுத்தமானவர்கள், தீட்டானவர்கள் சமாதான பலியின் மாம்சத்தைப் புசிக்கக்கூடாது.

தீட்டான எந்த வஸ்துவிலாவது அந்த மாம்சம் பட்டதானால் அது புசிக்கப்படாமல் அக்கினியிலே சுட்டெரிக்கப்படவேண்டும்; மற்ற மாம்சத்தையோ சுத்தமாயிருக்கிறவனெவனும் புசிக்கலாம் (லேவி 7:19).

ஒருவன் தீட்டுள்ளவனாயிருக்கையில் கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்தைப் புசித்தால், அவன் தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் (லேவி 7:20) என்றும்,

மனுஷருடைய தீட்டையாவது, தீட்டான மிருகத்தையாவது, அருவருக்கப்படத்தக்க தீட்டான மற்ற எந்த வஸ்துவையாவது ஒருவன் தொட்டிருந்து, கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்திலே புசித்தால், அவன் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் (லேவி 7:21) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

சமாதானபலியின் மாம்சம் பரிசுத்தமானதாகயிருப்பதினால், சுத்தமாயிருக்கிறவர்கள் மாத்திரமே அதைப் புசிக்கவேண்டும். பரிசுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் ஐக்கியமில்லை.

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப்பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" (1கொரி 11:28,29).

பரிசுத்த வேதாகமத்தில் சமாதானபலிகளின் பிரமாணத்தைப்பற்றி இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

1. அவன் ஸ்தோத்திர பலியோடுங்கூட எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளையும், எண்ணெயிலே பிசைந்து வறுக்கப்பட்ட மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களையும் படைக்கக்கடவன். (லேவி 7:11-12).

2. அவைகளைப் படைக்கிறதும் அல்லாமல், புளித்தமாவினால் செய்த அப்பத்தையும், தன்னுடைய சமாதான பலியாகிய ஸ்தோத்திரபலியோடுகூட படைக்க வேண்டும். (லேவி 7:13).

3. அந்தப் படைப்பு முழுவதிலும் வகைக்கு ஒவ்வொன்றை எடுத்துக் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் பலியாகச் செலுத்துவானாக; அது சமாதான பலியின் இரத்தத்தைத் தெளித்த ஆசாரியனுடையதாகும். (லேவி 7:14).

4. சமாதானபலியாகிய ஸ்தோத்திரபலியின் மாம்சமானது செலுத்தப்பட்ட அன்றைத் தினமே புசிக்கப்படவேண்டும்; அதில் ஒன்றும் விடியற்காலமட்டும் வைக்கப்படலாகாது (லேவி 7:15).

5. அவன் செலுத்தும் பலி பொருத்தனையாயாவது உற்சாகபலியாயாவது இருக்குமானால், அது செலுத்தப்படும் நாளிலும், அதில் மீதியானது மறு நாளிலும் புசிக்கப்படலாம். பலியின் மாம்சத்தில் மீதியாயிருக்கிறது மூன்றாம் நாளில் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது. (லேவி 7:16-17).

6. சமாதானபலியின் மாம்சத்தில் மீதியானது மூன்றாம் நாளில் புசிக்கப்படுமானால், அது அங்கிகரிக்கப்படாது; அதைச் செலுத்தினவனுக்கு அது பலிக்காது; அது அருவருப்பாயிருக்கும்; அதைப் புசிக்கிறவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான். (லேவி 7:18) சமாதான பலியின் மாம்சம் பரிசுத்தமானது. அது பாழாய்போகக்கூடாது. இந்த மாம்சம் பாழாய்ப்போனால், அது தேவனுக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றமாகக் கருதப்படும். ஏனெனில் இந்த மாம்சம் தேவனுக்குப் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. சமாதானபலியின் மாம்சம் அழுகிப் போகக்கூடாது. கிறிஸ்துவின் சரீரம் அழிவைக் காண்பதில்லை என்பதற்கு இது அடையாளமாகும். (சங் 16:10; அப் 2:27-30).

7. தீட்டான எந்த வஸ்துவிலாவது அந்த மாம்சம் பட்டதானால் அது புசிக்கப்படாமல் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது. (லேவி 7:19).

8. மற்ற மாம்சத்தையோ சுத்தமாயிருக்கிறவனெவனும் புசிக்கலாம்.

9. ஒருவன் தீட்டுள்ளவனாயிருக்கையில் கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்தைப் புசித்தால், அவன் தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். (லேவி 7:20).

10. மனுஷருடைய தீட்டையாவது, தீட்டான மிருகத்தையாவது, அருவருக்கப்படத்தக்க தீட்டான மற்ற எந்த வஸ்துவையாவது ஒருவன் தொட்டிருந்து, கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்திலே புசித்தால், அவன் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான். (லேவி 7:21).

மூன்றுவிதமான சமாதானபலிகள் உள்ளன. அவையாவன:

1. ஸ்தோத்திரபலிகள் (லேவி 7:11-15)

2. பொருத்தனை பலிகள் (லேவி 7:16-21)

3. உற்சாக பலிகள் (லேவி 7:16

அதிரசங்கள் என்பதற்கான எபிரெய வார்த்தை "கல்லாஹ்" என்பதாகும். இதற்கு அதிரசம், அல்லது துளையிடப்பட்ட அப்பம் என்று பொருள். இதற்கான வேர்ச்சொல் "கல்லல்" என்பதாகும். இதற்குத் துளையிடுதல் என்று பொருள். அதிரசங்களை வறுக்கும்போது, அதில் துளையிட்டு வறுப்பார்கள்.

புளித்தமாவினால் செய்த அப்பங்கள் சமுதாயப் பண்டிகைகளில் பயன்படுத்தப்படும். ஸ்தோத்திரப்பலிகளில் இதைப் பயன்படுத்தலாம். ஜனங்களின் உள்ளான பக்தியை இது வெளிப்படுத்துகிறது. மேலும் தேவனுடைய வார்த்தையினாலும், ஜெபத்தினாலும் புசிக்கப்படுவது அனைத்தும் பரிசுத்தமாக்கப்படுகிறது. (1தீமோ 4:4-5; 2கொரி 10:23,30) வயிற்றுக்குள் போகிற போஜனம் மனுஷரைத் தீட்டுப்படுத்தாது. (மத் 15:11).

ஏறெடுத்துப் படைக்கும் பலி ஸ்தோத்திர பலியில் படைக்கப்படுகிறது. இது கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கப்படுகிறது. ஏறெடுத்துப் படைக்கப்படும் மாம்சத்தை ஆசாரியர் புசிக்கலாம். அந்த மாம்சத்தோடு புளித்தமாவினால் செய்த அப்பத்தையும், தன்னுடைய சமாதான பலியாகிய ஸ்தோத்திரபலியோடுகூட படைக்க வேண்டும். அந்தப் படைப்பு முழுவதிலும் வகைக்கு ஒவ்வொன்றை எடுத்துக் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் பலியாகச் செலுத்த வேண்டும். இவை ஆசாரியனுடையதாகும். (லேவி 7:12-15).

சமாதானபலியாகிய ஸ்தோத்திரபலியின் மாம்சமானது செலுத்தப்பட்ட அன்றைத்தினமே புசிக்கப்படவேண்டும். பலி செலுத்துகிறவர் தன்னுடைய உற்றார், உறவினரோடு இதைப்புசிக்கலாம். பெரிய காளை, (லேவி 3:1), வெள்ளாட்டுக்கடா (லேவி 3:7) ஆகியவற்றை ஒருவரே ஒரே நாளில் புசிப்பது என்பது இயலாத காரியம். ஆசாரியர் உதவி செய்தாலும் அதை ஒரே நாளில் புசிக்க முடியாது. (லேவி 7:15-18). ஆகையினால் சமாதானபலியின் மாம்சத்தை உற்றார் உறவினரோடு புசிப்பது வழக்கம்.

தேவனுக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கும்போதும், (லேவி 7:12), பொருத்தனைகளைச் செய்யும்போதும் (லேவி 7:16), உற்சாக பலிகளைச் செலுத்தும்போதும் சமாதான பலிகள் செலுத்தப்படும். சமாதான பலியின் மாம்சத்தை அதே நாளில் புசிக்க வேண்டும். மீதியிருந்தால் மறுநாளில் புசிக்கலாம். ஆனால் அதை மூன்றாம் நாளில் புசிக்கக்கூடாது (லேவி 7:18). பலியின் மாம்சத்தில் மீதியாயிருக்கிறது மூன்றாம் நாளில் அக்கினியிலே சுட்டெரிக்கப்படவேண்டும்.

தீட்டான எந்த வஸ்துவிலாவது அந்த மாம்சம் பட்டதானால், அது புசிக்கப்படாமல் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது. பரிசுத்தமானதைத் தொடும்போது தொட்டது பரிசுத்தமாகிறது. அசுத்தமானதைத் தொடும்போது தொட்டது அசுத்தமாகிறது. (லேவி 7:19=லேவி 6:18; யாத் 29:37; யாத் 30:29). இயேசு கிறிஸ்துவைத் தொட்டால் குணமாகலாம் என்பதற்கு இது அடையாளம் (மத் 8:3).

சமாதானபலியின் கொழுப்பும் இரத்தமும் லேவி 7:22-27

லேவி 7:22. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 7:23. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், மாடு ஆடு வெள்ளாடு என்பவைகளின் கொழுப்பை நீங்கள் புசிக்கலாகாது.

லேவி 7:24. தானாய்ச் செத்த மிருகத்தின் கொழுப்பையும், பீறுண்ட மிருகத்தின் கொழுப்பையும் பலவித வேலைகளுக்கு வழங்கலாம்; ஆனாலும் நீங்கள் அதை ஒருபோதும் புசிக்கலாகாது.

லேவி 7:25. கர்த்தருக்குத் தகனபலியாகச் செலுத்தப்படும் மிருகத்தின் கொழுப்பைப் புசிக்கிற எந்த ஆத்துமாவும் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்.

லேவி 7:26. உங்கள் வாசஸ்தலங்களில் எங்கும் யாதொரு பறவையின் இரத்தத்தையாவது, யாதொரு மிருகத்தின் இரத்தத்தையாவது புசிக்கலாகாது.

லேவி 7:27. எவ்வித இரத்தத்தையாகிலும் புசிக்கிற எவனும் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் என்று சொல் என்றார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு செலுத்தும் சமாதானபலியின் கொழுப்பையும் இரத்தத்தையும் புசிக்கக்கூடாது. இதைப் புசிப்பதை கர்த்தர் ஏற்கெனவே தடைபண்ணியிருக்கிறார்.

"கொழுப்பையாவது இரத்தத்தையாவது நீங்கள் புசிக்கலாகாது; இது உங்கள் வாசஸ்தலங்கள் எங்கும் உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும் என்று சொல்" *(லேவி 3:17)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கொழுப்பையும் இரத்தத்தையும் பற்றி கர்த்தர் ஏற்கெனவே சொன்ன பிரமாணத்தை, இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், மாடு ஆடு வெள்ளாடு என்பவைகளின் கொழுப்பை நீங்கள் புசிக்கலாகாது. தானாய்ச் செத்த மிருகத்தின் கொழுப்பையும், பீறுண்ட மிருகத்தின் கொழுப்பையும் பலவித வேலைகளுக்கு வழங்கலாம்; ஆனாலும் நீங்கள் அதை ஒருபோதும் புசிக்கலாகாது. கர்த்தருக்குத் தகனபலியாகச் செலுத்தப்படும் மிருகத்தின் கொழுப்பைப் புசிக்கிற எந்த ஆத்துமாவும் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்" *(லேவி 7:22-25)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் இரத்தத்தையும் புசிக்கக்கூடாது. கர்த்தர் மோசேயை நோக்கி, "உங்கள் வாசஸ்தலங்களில் எங்கும் யாதொரு பறவையின் இரத்தத்தையாவது, யாதொரு மிருகத்தின் இரத்தத்தையாவது புசிக்கலாகாது. எவ்வித இரத்தத்தையாகிலும் புசிக்கிற எவனும் தன் ஜனங்களில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் என்று சொல்" *(லேவி 7:26,27)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தங்களுக்கு செய்திருக்கிற நன்மைகளை ஸ்தோத்திரத்தோடு நினைவுகூரும் வண்ணமாக, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு கொழுப்பை படைக்கிறார்கள். இரத்தமானது மனுஷருடைய ஆத்துமாவின் பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்காக செலுத்தப்படுகிறது. ஆகையினால் கொழுப்பு தகனிக்கப்படவேண்டும் என்றும், இரத்தம் சிந்தப்படவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை.

கர்த்தருக்கு பலியாக செலுத்தப்படும் மிருகத்தின் கொழுப்பு முழுவதுமாக தகனிக்கப்படவேண்டும். இது கல்வாரி சிலுவையில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மை முழுவதுமாக பலியாக ஒப்புக்கொடுத்ததற்கு அடையாளம்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பாவநிவாரண பலி, குற்றநிவாரண பலி ஆகியவற்றின் மூலமாக, மனுஷருடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்பட்டது. ஆனால் அந்த பாவநிவாரணம் தற்காலிகமானது. மனுஷன் மறுபடியும் பாவம் செய்யும்போது, அவன் தன்னுடைய பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்கு, மறுபடியும் மறுபடியுமாக, பாவநிவாரண பலிகளையும், குற்றநிவாரண பலிகளையும் செலுத்தவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ தம்மை ஒரு தரம் மாத்திரமே பலியாக ஒப்புக்கொடுத்தார். அவர் ஒரு தரம் மாத்திரமே கல்வாரி சிலுவையிலே மரித்தார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் எல்லோருடைய பாவங்களையும் நிவிர்த்தி பண்ணுவதற்காக, ஒரு தரம் மாத்திரம் சிந்தப்பட்டது. அவருடைய இரத்தம் மனுபுத்திரர் எல்லோருடைய பாவங்களையும் நீக்கி அவர்களை சுத்திகரிப்பதற்கு போதுமானதாகயிருக்கிறது.

பரிசுத்த வேதாகமத்தில் கொழுப்பு, இரத்தம் ஆகியவற்றை புசிப்பது சம்பந்தமான கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மாடு ஆடு வெள்ளாடு என்பவைகளின் கொழுப்பை நீங்கள் புசிக்கலாகாது. (லேவி 7:23).

2. தானாய்ச் செத்த மிருகத்தின் கொழுப்பையும், பீறுண்ட மிருகத்தின் கொழுப்பையும் புசிக்கலாகாது. (லேவி 7:24).

3. கர்த்தருக்குத் தகனபலியாகச் செலுத்தப்படும் மிருகத்தின் கொழுப்பைப் புசிக்கலாகாது. (லேவி 7:25).

4. உங்கள் வாசஸ்தலங்களில் எங்கும் யாதொரு பறவையின் இரத்தத்தையாவது, யாதொரு மிருகத்தின் இரத்தத்தையாவது புசிக்கலாகாது (லேவி 7:26).

இங்கு முதன்முறையாகக் கொழுப்பைப் புசிப்பதற்கு விரோதமான பிரமாணம் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பே இரத்தம் புசிப்பது தடைபண்ணப்பட்டிருக்கிறது. (ஆதி 9:4). இந்தக் கட்டளை மோசேயின் பிரமாணத்தில் ஒரு பகுதியாயிற்று (லேவி 1:17; லேவி 7:26-27; லேவி 17:10,12,14). இந்தப் பிரமாணத்தை மீறுகிறவன் அறுப்புண்டு போவான் (லேவி 7:25-27). புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இரத்தம் புசிப்பது தடைபண்ணப்பட்டிருக்கிறது (அப் 15:19-20,29). கொழுப்பைப் பற்றி புதிய ஏற்பாட்டில் ஒன்றும் கூறப்படவில்லை.

சமாதானபலிகளில் ஆசாரியரின் பாகம் லேவி 7:28-34

லேவி 7:28. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 7:29. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், கர்த்தருக்குச் சமாதான பலி செலுத்துகிறவன் தான் செலுத்தும் சமாதானபலியைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வருவானாக.

லேவி 7:30. கர்த்தருக்குச் தகனபலியாகப் படைப்பவைகளை அவன் கைகளே கொண்டுவரவேண்டும்; மார்க்கண்டத்தையும் அதனோடுகூட அதின்மேல் வைத்த கொழுப்பையும் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டும்படிக்குக் கொண்டுவரக்கடவன்.

லேவி 7:31. அப்பொழுது ஆசாரியன் அந்தக் கொழுப்பைப் பலிபீடத்தின்மேல் தகனிக்கவேண்டும்; மார்க்கண்டமோ ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்.

லேவி 7:32. உங்கள் சமாதானபலிகளில் வலது முன்னந்தொடையை ஏறெடுத்துப் படைக்கும் பலியாகப் படைக்கும்படி ஆசாரியனிடத்தில் கொடுப்பீர்களாக.

லேவி 7:33. ஆரோனுடைய குமாரரில், சமாதானபலியின் இரத்தத்தையும் கொழுப்பையும் செலுத்துகிறவனுக்கு, வலது முன்னந்தொடை பங்காகச் சேரும்.

லேவி 7:34. இஸ்ரவேல் புத்திரரின் சமாதானபலிகளில் அசைவாட்டும் மார்க்கண்டத்தையும் ஏறெடுத்துப்படைக்கும் முன்னந்தொடையையும் நான் அவர்கள் கையில் வாங்கி, அவைகளை ஆசாரியனாகிய ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்குள் நடக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தேன் என்று சொல் என்றார்.

கர்த்தருக்கு சமாதானபலிகளை செலுத்துகிறவர்கள், அதை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வரவேண்டும். கர்த்தர் மோசேயினிடத்தில் இது சம்பந்தமாக தம்முடைய பிரமாணத்தை சொல்லும்போது, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், கர்த்தருக்குச் சமாதானபலி செலுத்துகிறவன் தான் செலுத்தும் சமாதானபலியைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வருவானாக" (லேவி 7:29) என்று சொல்லுகிறார்.

கர்த்தருக்குச் தகனபலியாகப் படைப்பவைகளை அவன் கைகளே கொண்டுவரவேண்டும்; மார்க்கண்டத்தையும் அதனோடுகூட அதின்மேல் வைத்த கொழுப்பையும் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டும்படிக்குக் கொண்டுவர வேண்டும் அப்பொழுது ஆசாரியன் அந்தக் கொழுப்பைப் பலி பீடத்தின்மேல் தகனிக்கவேண்டும் (லேவி 7:30,31)

மார்க்கண்டமோ ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். சமாதானபலிகளில் வலது முன்னந்தொடையை ஏறெடுத்துப் படைக்கும் பலியாகப் படைக்கும்படி ஆசாரியனிடத்தில் கொடுக்கவேண்டும். இது ஆசாரியரின் பங்கு. ஆரோனுடைய குமாரரில், சமாதானபலியின் இரத்தத்தையும் கொழுப்பையும் செலுத்துகிறவனுக்கு, வலது முன்னந்தொடை பங்காகச் சேரும் (லேவி 7:31-33).

கர்த்தர் தம்முடைய சந்நிதியில் ஊழியம் செய்கிற ஆசாரியரையும், அவருடைய குமாரரையும் போஷிக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரரின் சமாதானபலிகளில் அசைவாட்டும் மார்க்கண்டத்தையும் ஏறெடுத்துப்படைக்கும் முன்னந்தொடையையும் நான் அவர்கள் கையில் வாங்கி, அவைகளை ஆசாரியனாகிய ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்குள் நடக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தேன் என்று சொல்" (லேவி 7:34) என்று சொல்லுகிறார்.

கர்த்தருக்கு செலுத்தப்படும் சமாதானபலியில் மார்க்கண்டம், முன்னந்தொடை ஆகியவை ஆசாரியரின் பங்கு ஆகும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்முடைய மகாபிரதான சமாதானபலியாக இருக்கிறார். அவர் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காகவும், சாபங்களிலிருந்து நம்மை மீட்பதற்காகவும், நமக்கு ஆசீர்வாதத்தை கிரயத்திற்கு வாங்குவதற்காகவும், நமக்கு எல்லா நன்மைகளையும் கொடுப்பதற்காகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, கல்வாரி சிலுவையிலே, நமக்காக மரித்தார்.

கர்த்தருடைய பலியின் மூலமாக வரும் ஆசீர்வாதங்களில், விசுவாசிகளாகிய நாம் பங்குள்ளவர்களாகயிருக்கிறோம். கர்த்தருடைய பந்தியில் நாம் பங்கு பெறும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதத்திலும், அவருடைய பலிமரணத்தின் மூலமாக வரும் நன்மைகளிலும் பங்கு பெறுகிறோம்.

சமாதானபலிகளில் ஆசாரியரின் பாகத்தைப்பற்றிய கட்டளைகள் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது அதன் விவரம் வருமாறு :

1. கர்த்தருக்குச் சமாதானபலி செலுத்துகிறவன் தான் செலுத்தும் சமாதானபலியை ஆசாரியருக்காகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வருவானாக. (லேவி 7:29=லேவி 7:14).

2. கர்த்தருக்குத் தகனபலியாகப் படைப்பவைகளை அவன் கைகளே கொண்டுவரவேண்டும். கொழுப்பு தகனிப்பதற்கும், மார்க்கண்டம் ஆசாரியருக்கும் உரியது (லேவி 7:30-31).

3. ஆரோனுடைய குமாரரில், சமாதானபலியின் இரத்தத்தையும் கொழுப்பையும் செலுத்துகிறவனுக்கு, வலது முன்னந்தொடை பங்காகச் சேரும். (லேவி 7:32-33).

4. இஸ்ரவேல் புத்திரரின் சமாதானபலிகளில் அசைவாட்டும் மார்க்கண்டமும், ஏறெடுத்துப் படைக்கும் முன்னந்தொடையும் எப்போதும் ஆசாரியருக்குச் சேரும். (லேவி 7:34).

அசைவாட்டும் பலி வெண்கல பலிபீடத்தை நோக்கி அசைவாட்டப்படுகிறது. இது கர்த்தருக்குப் படைக்கப்படுகிறது என்பதற்கு அடையாளம். பலிபீடத்தை விட்டு, தள்ளி அசைவாட்டப்படுவதினால், இது ஆசாரியருக்கு அவருடைய ஊழியத்திற்காகக் கொடுக்கப்படுகிறது என்பதற்கு அடையாளமாகும் (லேவி 7:34-36).

ஏறெடுத்துப் படைக்கும் படைப்பு, மேலும் கீழுமாகப் பல தடவை காண்பிக்கப்படும். மேலே உயர்த்தப்படும்போது அது கர்த்தருக்கு உரியது. கீழே தாழ்த்தப்படும்போது அது கர்த்தருடைய ஊழியக்காரராகிய ஆசாரியருக்குரியது என்பதற்கு ஏறெடுத்துப் படைப்பது ஓர் அடையாளமாகும். (லேவி 7:34-36).

அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்பது ஆசாரிய ஊழியம் செய்யுமாறு அபிஷேகம் செய்யப்பட்ட ஆரோனையும், அவருடைய குமாரரையும் குறிக்கும் (லேவி 7:35-36).

பலிகளின் பொதுவான பிரமாணம்

லேவி 7:35-38

லேவி 7:35. கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி ஆரோனும் அவன் குமாரரும் நியமிக்கப்பட்ட நாளிலே, இது அபிஷேகம்பண்ணப்பட்ட அவர்களுக்குக் கர்த்தருடைய தகனபலி களில் கிடைக்கும்படி உண்டான கட்டளை.

லேவி 7:36. இப்படி அவர்களுக்கு இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாகக் கொடுக்கும்படி கர்த்தர் அவர்களை அபிஷேகம்பண்ணின நாளிலே கட்டளையிட்டார்.

லேவி 7:37. சர்வாங்க தகனபலிக்கும் போஜனபலிக்கும் பாவநிவாரண பலி க்கும் குற்ற நிவாரண பலிக்கும் பிரதிஷ்டை பலிகளுக்கும் சமாதான பலிகளுக்கும் அடுத்த பிரமாணம் இதுவே.

லேவி 7:38. கர்த்தருக்குத் தங்கள் பலிகளைச் செலுத்தவேண்டும் என்று அவர் இஸ்ரவேல் புத்திரருக்குச் சீனாய் வனாந்தரத்திலே கற்பிக்கும்போது இவைகளை மோசேக்குச் சீனாய்மலையில் கட்டளையிட்டார்.

தமக்கு செலுத்தப்படும் தகனபலிகளுக்கு முடிவுரையாக கர்த்தர் இந்த வசனப்பகுதியில் தம்முடைய பிரமாணங்களை சொல்லுகிறார். ஆசாரியர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு அபிஷேகம்பண்ணப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய தகனபலிகளில் பங்கு கிடைக்கவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் போஷிப்பதுபோல, தமக்கு ஊழியம் செய்கிற ஆசாரியரையும், அவர்களுடைய குடும்பத்தாரையும் போஷிக்கிறார்.

கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி ஆரோனும் அவருடைய குமாரரும் நியமிக்கப்பட்ட நாளிலே, இது அபிஷேகம்பண்ணப்பட்ட அவர்களுக்குக் கர்த்தருடைய தகனபலிகளில் கிடைக்கும்படி உண்டான கட்டளை (லேவி 7:35).

இப்படி அவர்களுக்கு இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாகக் கொடுக்கும்படி கர்த்தர் அவர்களை அபிஷேகம்பண்ணின நாளிலே கட்டளையிட்டார் (லேவி 7:36).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு செலுத்தவேண்டிய பலிகளை தங்கள் தலைமுறை தோறும், நித்திய நியமமாக செலுத்த வேண்டும். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்தின்படி அவருக்கு காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தவேண்டும். தமக்கு செலுத்தப்படும் பலிகளில், கர்த்தர் தமக்கு ஊழியம் செய்கிற ஆசாரியர்களுக்கும் பங்கை நியமித்திருக்கிறார்.

கர்த்தருக்குத் தங்கள் பலிகளைச் செலுத்தவேண்டும் என்று அவர் இஸ்ரவேல் புத்திரருக்குச் சீனாய் வனாந்தரத்திலே கற்பிக்கும்போது இவைகளை மோசேக்குச் சீனாய்மலையில் கட்டளையிட்டார் (லேவி 7:38).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்மை ஆராதிக்கவேண்டிய பிரமாணங்களை சொல்லுகிறார். தமக்கு செலுத்தவேண்டிய பலிகளைப்பற்றிய பிரமாணங்களையும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

சர்வாங்க தகனபலிக்கும் போஜனபலிக்கும் பாவநிவாரண பலிக்கும் குற்ற நிவாரண பலிக்கும் பிரதிஷ்டை பலிகளுக்கும் சமாதான பலிகளுக்கும் அடுத்த பிரமாணம் இதுவே (லேவி 7:37).

கர்த்தர் தமக்கு செலுத்தப்படும் பலிகளின் பொதுவான பிரமாணங்களை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். இந்த வசனப்பகுதியில் ஒரு சில பலிகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு :

1. சர்வாங்க தகனபலிகள் (லேவி 1:1-17 ;லேவி 6:8-13)
2. போஜனபலிகள் (லேவி 2:1-16 ; லேவி 6:14-23 ; லேவி 10:12)
3. பாவநிவாரண பலிகள் (லேவி 4:1-35 ; லேவி 6:24-30)
4. குற்றநிவாரண பலிகள் (லேவி 5:1-6:7 ; லேவி 7:1-10)
5. அபிஷேகம்பண்ணப்படுகிற ஆசாரியர்கள் (லேவி 6:19-23 ; லேவி 8:1-10:20 ; யாத் 29:38-46)
6. சமாதான பலிகள் (லேவி 3:1-17 ; லேவி 7:11-21)

பலிகளைப் பற்றி கூறப்படும் அட்டவணைகளில் சமாதானபலி பொதுவாக மூன்றாவதாகக் கூறப்படும் (லேவி 3:1-17), ஆனால் இங்கு கடைசியில் கூறப்பட்டிருக்கிறது. (லேவி 7:11-21).

கர்த்தர் இந்தப் பிரமாணங்களை சீனாய் மலையிலே மோசேக்கு கட்டளையிட்டார். மற்ற பிரமாணங்கள், கட்டளைகள் ஆகியவற்றைப் போல பலிகளின் பிரமாணங்களையும் கர்த்தர் சீனாய் மலையிலிருந்து கொடுத்தார். மற்ற பிரமாணங்களையும், கட்டளைகளையும் கட்டளையிட்டதுபோலவே, கர்த்தர் பலிகள், காணிக்கைகள், ஆகியவற்றின் பிரமாணங்களையும் கட்டளையிட்டிருக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து ஜனங்களுக்கு மோசேயின் பிரமாணம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்தப் பிரமாணங்களைக் கைக்கொண்டு கர்த்தரை ஆராதித்தார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கோ இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விசுவாசிகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்கள் கர்த்தருக்கு பலிகளை செலுத்தி அவரை ஆராதித்தார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ, கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

8 அதிகாரம்

ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணப்படுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் சபையாருக்கு முன்பாக பிரதிஷ்டைபண்ணப்படுகிறார்கள் (லேவி 8:1-4). கர்த்தர் தனக்கு சொன்ன பிரகாரம் மோசே அவர்களை ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணுகிறார் (லேவி 8:5).

மோசே அவர்களை ஜலத்தினால் ஸ்நானம்பண்ணியிருக்கிறார். மோசே அவர்களுக்கு ஆசாரிய வஸ்திரங்களை போடுகிறார் (லேவி 8:6-9,13). ஆசரிப்புக்கூடாரமும், பரிசுத்த பணிமுட்டுக்களும் அபிஷேகம்பண்ணப்பட்டு, பரிசுத்தம் பண்ணப்படுகிறது. அதன் பின்பு ஆசாரியரும் அபிஷேகம்பண்ணப்படுகிறார்கள் (லேவி 8:10-12).

மோசே ஆரோனுக்காகவும், அவருடைய குமாரருக்காகவும் பாவநிவாரண பலியை செலுத்துகிறார் (லேவி 8:14-17). மோசே ஆசாரியருக்காக சர்வாங்க தகனபலி செலுத்துகிறார் (லேவி 8:18-21). பிரதிஷ்டைப்படுத்துவதற்குரிய ஆட்டுக்கடா (லேவி 8:22-30). ஆரோனும் அவருடைய குமாரரும் ஏழுநாள் ஆசரிப்புக்கூடார வாசலை விட்டு புறப்படாமல் அங்கேயே தங்கியிருக்கவேண்டும் (லேவி 8:31-36).

ஆசாரியரின் அபிஷேகம் லேவி 8:1-13

லேவி 8:1. கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 8:2. நீ ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து, வஸ்திரங்களையும், அபிஷேக தைலத்தையும், பாவநிவாரணபலிக்கு ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு கூடையில் புளிப்பில்லா அப்பங்களையும் கொண்டு வந்து,

லேவி 8:3. சபையையெல்லாம் ஆசாரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாகக் கூடிவரச்செய் என்றார்.

லேவி 8:4. கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே மோசே செய்தான்; சபை ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாகக் கூடினபோது,

லேவி 8:5. மோசே சபையை நோக்கி: செய்யும்படி கர்த்தர் கட்டளையிட்ட காரியம் இதுவே என்று சொல்லி,

லேவி 8:6. கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து, அவர்களை ஜலத்தினால் ஸ்நானம்பண்ணுவித்து,

லேவி 8:7. அவனுக்கு உள்ளங்கியைப் போட்டு, இடைக்கச்சையைக் கட்டி, மேலங்கியை உடுத்தி, ஏபோத்தைத் தரித்து, அதின்மேல் ஏபோத்தின் விசித்திரமான கச்சையைக் கட்டி,

லேவி 8:8. அவனுக்கு மார்ப்பதக்கத்தை அணிந்து, மார்ப்பதக்கத்திலே ஊரீம் தும்மீம் என்பவைகளையும் வைத்து,

லேவி 8:9. அவன் தலையிலே பாகையைத் தரித்து, பாகையின்மேல் அவன் நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் பொற்பட்டத்தைக் கட்டினான்.

லேவி 8:10. பின்பு மோசே, அபிஷேகதைலத்தை எடுத்து, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவற்றையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப்படுத்தி,

லேவி 8:11. அதில் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளித்து, பலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும் அதின் பாதத்தையும் பரிசுத்தப்படுத்தும்படிக்கு அபிஷேகம் பண்ணி,

லேவி 8:12. அபிஷேகதைலத்திலே கொஞ்சம் ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி அபிஷேகம்பண்ணினான்.

லேவி 8:13. பின்பு மோசே, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, ஆரோனின் குமாரரை வரவழைத்து, அவர்களுக்கு அங்கிகளை உடுத்தி, இடைக்கச்சைகளைக் கட்டி, குல்லாக்களைத் தரித்து,

ஆரோனையும் அவருடைய குமாரரையும் ஆசாரிய ஊழியத்திற்கு அபிஷேகம்பண்ணி பிரதிஷ்டைபண்ணுமாறு கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். மோசே சீனாய் மலையின்மேல் கர்த்தருடைய சமுகத்திலிருந்தபோது, கர்த்தர் அவருக்கு இந்தக் கட்டளையை கொடுத்தார் (யாத் 28,29 ஆகிய அதிகாரங்கள்).

கர்த்தர் மோசேக்கு ஆசாரிய ஊழியத்தைப்பற்றி ஏற்கெனவே சொன்ன கட்டளைகளை இங்கு மறுபடியுமாகச் சொல்லுகிறார். ஆசரிப்புக்கூடாரம் புதிதாய்ப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே கர்த்தருக்கு ஊழியம் செய்ய ஆசாரியர் ஒருவருமில்லை. இது விளக்கு இல்லாத விளக்குத்தண்டுபோல இருக்கிறது.

கர்த்தர் பலிகளைப்பற்றிய தம்முடைய பிரமாணங்களைச் சொல்லியிருக்கிறார். ஆசாரியர்கள் இல்லாமல் பலிகளை செலுத்த முடியாது. ஆசரிப்புக்கூடாரத்தில் ஆசாரியரின் ஊழியம் தேவைப்படுகிறது.

ஆரோன் மோசேயின் மூத்த சகோதரர். ஆரோனும் அவருடைய குமாரரும் மோசேக்கு நெருங்கிய உறவுக்காரர்கள். கர்த்தர் ஆரோனையும் அவருடைய குமாரரையும் ஆசாரிய ஊழியத்திற்கு பரிசுத்தம் பண்ணி பிரதிஷ்டைபண்ணுமாறு ஏற்கெனவே கட்டளை கொடுத்திருக்கிறார். ஆனாலும் மோசே கர்த்தருடைய கட்டளையை உறுதிபண்ண விரும்புகிறார். கர்த்தருடைய சமுகத்திலிருந்து ஆரோனுடைய ஆசாரிய ஊழியத்தைப்பற்றிய கட்டளை மறுபடியுமாய் வரும் வரையிலும், மோசே பொறுமையோடு காத்திருக்கிறார்.

மோசே கர்த்தருடைய தெளிவான வழிநடத்துதல் இல்லாமல், தன்னுடைய குடும்பத்தாரை இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே மேன்மைப்படுத்தவோ அல்லது உயர்த்தவோ விரும்பவில்லை. கர்த்தருடைய ஊழியத்தில் தன்னுடைய குடும்பத்தாரை பிரதிஷ்டைபண்ணும் விஷயத்தில் மோசே மிகவும் கவனத்தோடும், எச்சரிப்போடும், பொறுமையோடும் இருக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து, வஸ்திரங்களையும், அபிஷேகதைலத்தையும், பாவநிவாரணபலிக்கு ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு கூடையில் புளிப்பில்லா அப்பங்களையும் கொண்டு வந்து, சபையையெல்லாம் ஆசாரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாகக் கூடிவரச்செய்" (லேவி 8:1-3) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே மோசே செய்கிறார். அவர் இஸ்ரவேல் சபையாரையெல்லாம் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக கூடிவரச்செய்கிறார் (லேவி 8:4). மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும், இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் முன்பாக, ஆசாரிய ஊழியத்திற்கு பரிசுத்தப்படுத்தி பிரதிஷ்டைபண்ணுகிறார். பிரதிஷ்டை வைபவம் இஸ்ரவேல் சபையார் எல்லாருக்கும் முன்பாக நடைபெறுகிறது.

ஆரோனையும் அவருடைய குமாரரையும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணுகிற வைபவம் கர்த்தரால் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆசாரிய ஊழியம் பரிசுத்தமானது. ஆகையினால் மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும், ஆசாரிய ஊழியத்திற்கு பரிசுத்தம்பண்ணுகிறார். ஆசாரியரை பிரதிஷ்டைபண்ணுகிற வைபவம் கர்த்தருக்கும் இஸ்ரவேல் சபையாருக்கும் முன்பாக நடைபெறுகிறது.

ஆரோனின் ஆசாரிய ஊழியத்தை கர்த்தரும் இஸ்ரவேல் புத்திரரும் அங்கீகரிக்கவேண்டும். அவர்கள் ஆரோனுடைய குமாரரின் ஆசாரிய ஊழியத்தையும் அங்கீகரிக்கவேண்டும். ஆகையினால் மோசே இஸ்ரவேல் சபையார் எல்லோரையும் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக கூடிவரச்செய்கிறார். ஆரோனையும், அவருடைய குமாரரையும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணுகிற வைபவம் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக நடைபெறுகிறது.

ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணப்படுவதை இஸ்ரவேல் சபையார் எல்லோரும் பார்க்கிறார்கள். அவர்கள் வெறும் பார்வையாளர்களாக மாத்திரம் இருக்கக்கூடாது. அவர்கள் ஆசாரிய ஊழியத்தையும், அந்த ஊழியத்திற்கு கர்த்தர் ஆரோனையும் அவருடைய குமாரரையும் பிரதிஷ்டை பண்ணியிருப்பதையும் அங்கீகரிக்கவேண்டும். அவர்கள் ஆசாரியரையும், ஆசாரிய ஊழியத்தையும் கனம்பண்ணவேண்டும்.

ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணப்படுவதை இஸ்ரவேல் சபையார் எல்லோரும் தங்கள் கண்களால் பார்க்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு தங்கள் கண்களால் கண்ட சாட்சிகளாயிருக்கிறார்கள். இருந்தாலும், இஸ்ரவேல் சபையார் பிற்காலத்தில் லேவியின் குமாரருக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். "லேவியின் புத்திரராகிய நீங்களே மிஞ்சிப்போகிறீர்கள்" (எண் 16:7) என்று சொல்லுகிறார்கள்.

ஆரோனையும் அவருடைய குமாரரையும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணும்போது, மோசே கர்த்தருடைய பிரதிநிதியாக ஊழியம் செய்கிறார். மோசே இஸ்ரவேல் சபையார் எல்லோரையும் நோக்கி, "செய்யும்படி கர்த்தர் கட்டளையிட்ட காரியம் இதுவே" (லேவி 8:5) என்று சொல்லுகிறார். கர்த்தர் இந்த பிரதிஷ்டை வைபவத்தை நடத்துமாறு தனக்கு கட்டளையிட்டிருக்கிறார் என்று மோசே இஸ்ரவேல் சபையாருக்கு சொல்லுகிறார்.

மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணுகிறார். அவர்களை பிரதிஷ்டைபண்ணவேண்டும் என்னும் கட்டளையை தான் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதாக மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். அவர் இஸ்ரவேல் சபையாரை நோக்கி, "செய்யும்படி கர்த்தர் கட்டளையிட்ட காரியம் இதுவே" என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் ஆசாரிய ஊழியத்திற்கு அபிஷேகம்பண்ணி பரிசுத்தப்படுத்துகிறார்.

மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் வரவழைத்து, அவர்களை ஜலத்தினால் ஸ்நானம்பண்ணுவிக்கிறார் (லேவி 8:6). ஸ்நானம்பண்ணுதல் சுத்திகரிப்புக்கு அடையாளமாயிருக்கிறது. ஆரோனும் அவருடைய குமாரரும் தங்களை பாவமான எல்லா காரியங்களிலிருந்தும் சுத்தம்பண்ணிக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக தங்களுடைய பரிசுத்தத்தை எப்போதும் காத்துக்கொள்கிறார்கள். இதற்கு அடையாளமாக மோசே அவர்களை ஜலத்தினால் ஸ்நானம்பண்ணுவிக்கிறார்.

மோசே ஆரோனுக்கு உள்ளங்கியைப் போட்டு, இடைக்கச்சையைக் கட்டி, மேலங்கியை உடுத்தி, ஏபோத்தைத் தரித்து, அதின்மேல் ஏபோத்தின் விசித்திரமான கச்சையைக் கட்டுகிறார். மோசே ஆரோனுக்கு மார்ப்பதக்கத்தை அணிந்து, மார்ப்பதக்கத்திலே ஊரீம் தும்மீம் என்பவைகளையும் வைக்கிறார். மோசே ஆரோனின் தலையிலே பாகையைத் தரித்து, பாகையின்மேல் அவருடைய நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் பொற்பட்டத்தைக் கட்டுகிறார் (லேவி 8:7-9).

நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து ஆசாரிய ஊழியத்திற்கு கனம்பண்ணப்பட்டதற்கு இது அடையாளமாகும். மோசே ஆரோனுக்கு ஆசாரிய வஸ்திரத்தை உடுத்தியதுபோல, ஆரோனுடைய குமாரருக்கும் உடுத்துகிறார் (லேவி 8:13). புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் ஆவிக்குரிய ஆசாரியர்களாயிருக்கிறோம். கர்த்தருடைய ஜனம் கண்ணியமான வஸ்திரங்களை அணிந்திருக்கவேண்டும் என்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது.

கிறிஸ்துவானவர் நீதியின் மார்ப்பதக்கத்தை அணிந்திருக்கிறார். அவருடைய சிரசின்மீது பரிசுத்தமான கிரீடம் சூட்டப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவரே சபையின் பிரதான ஆசாரியராயிருக்கிறார். அவரே சபையின் தீர்க்கதரிசியாகவும், ராஜாவாகவும் இருக்கிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள் அனைவரும் நீதியின் வஸ்திரத்தை தரித்திருக்கவேண்டும். நாம் பரிசுத்தம் என்னும் பாகையை அணிந்திருக்கவேண்டும். விசுவாசிகளுக்கு பரிசுத்தமே மெய்யான அழகு.

மோசே பிரதான ஆசாரியனை அபிஷேகம்பண்ணுகிறார். மோசே வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவற்றையும் அபிஷேக தைலத்தினால் அபிஷேகம்பண்ணி பரிசுத்தப்படுத்துகிறார் (லேவி 8:10).

மோசே அபிஷேக தைலத்தில் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளித்து, பலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும் அதின் பாதத்தையும் பரிசுத்தப்படுத்தும்படிக்கு அபிஷேகம் பண்ணுகிறார் (லேவி 8:11).

மோசே அபிஷேகதைலத்திலே கொஞ்சம் ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவரைப் பரிசுத்தப்படுத்தும்படி அபிஷேகம்பண்ணுகிறார் (லேவி 8:12). அபிஷேக தைலம் ஆரோனுடைய சிரசின் மேலும் அவருடைய அங்கியின்மேலும் வடிகிறது. ஆரோனுடைய அபிஷேகம், இயேசுகிறிஸ்துவின் அபிஷேகத்திற்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியினால், கிறிஸ்துவானவரை அளவில்லாமல் அபிஷேகம்பண்ணியிருக்கிறார்.

மோசே ஆரோனுக்கு ஆசாரிய வஸ்திரங்களை உடுத்தியதுபோல, ஆரோனுடைய குமாரருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற வஸ்திரங்களையும் உடுத்துகிறார். பின்பு மோசே, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, ஆரோனின் குமாரரை வரவழைத்து, அவர்களுக்கு அங்கிகளை உடுத்துகிறார். மோசே அவர்களுக்கு இடைக்கச்சைகளைக் கட்டி, குல்லாக்களைத் தரிக்கிறார் (லேவி 8:13).

லேவியராகமம் புஸ்தகத்தில் மூன்று சரித்திர பகுதிகள் உள்ளன. அதன் விவரம் வருமாறு :

1. ஆசாரியருடைய பிரதிஷ்டையும், அவர்களுடைய ஊழியமும் (லேவி 8:1-10:7)

2. மோசே ஆசாரியரைக் கடிந்து கூறுகிறார். (லேவி 10:16-20)

3. தேவதூஷணம் கூறுவதற்குத் தண்டனை (லேவி 24:10-23)

முதலாவது பகுதியில் ஆரோனும், அவருடைய குமாரரும் பிரதிஷ்டை பண்ணப்பட்ட சம்பவம் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. அவர்களைப் பரிசுத்தப்படுத்துவதில் மோசே தேவனுடைய பிரதிநிதியாகச் செயல்படுகிறார். பரிசுத்தப்படுத்துதல் என்பதற்கு தேவனுடைய ஊழியத்திற்காக வேறுபிரித்தல் என்று பொருள்.

ஆசாரிப்புக்கூடார வாசலில் இந்த ஆசாரியர் பிரதிஷ்டை பண்ணப்பட்டு, அபிஷேகம் பண்ணப்படுகிறார்கள். ஆசரிப்புக்கூடார வாசலில் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. இந்த வாக்கியம் பஞ்சாகமத்தில் 45 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வேதாகமத்தின் மற்ற புஸ்தகங்கள் அனைத்திலும் இரண்டு தடவைகள் மட்டுமே இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆசரிப்புக்கூடார வாசலில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு :

1. ஆரோனும், அவனுடைய குமாரரும் இங்கு பிரதிஷ்டை பண்ணப்பட்டார்கள். (யாத் 29:1-37).

2. இஸ்ரவேல் புத்திரர் பாவம்செய்த பின்பு, யெகோவா தேவன் அவர்களை இங்கு சந்தித்தார். (யாத் 33:9-10).

3. தொட்டிக்குக் காணிக்கைகள் இங்கு செலுத்தப்பட்டன. (யாத் 33:8).

4. இஸ்ரவேலின் எல்லா மிருகஜீவ பலிகளும் இங்குக் கொண்டுவரப்பட்டுக் கொல்லப்பட்டன. (லேவி 1:3; லேவி 3:2; லேவி 4:4; லேவி 12:6; லேவி 17:4-9; லேவி 19:21-22; எண் 6:13-18).

5. வருஷாந்திர சுத்திகரிப்பின் நாளில் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் இங்கு கூடிவந்தார்கள். (லேவி 16).

6. நசரேய பொருத்தனைகள் இந்த வாசலில் நிறைவேறின. (எண் 6).

7. இஸ்ரவேல் புத்திரரின் சபையார் ஆசரிப்புக்கூடார வாசலில் வழக்கமாகக் கூடிவந்தார்கள். (எண் 10:3).

8. இஸ்ரவேல் புத்திரரைச் சந்திப்பதற்காகத் தேவன் இங்கு இறங்கி வந்தார். (எண் 12:5).

9. தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணியவர்கள் இங்கு ஒடுக்கப் பட்டார்கள். (எண் 16:18-19; எண் 20:6; எண் 25:6).

10. இஸ்ரவேலில் வாதை முடிவுக்கு வந்தபோது, மோசே கூடாரவாசலில் இருந்தார். (எண் 16:45-50).

11. இஸ்ரவேலின் நியாயத்தீர்ப்பு இந்த வாசலில் நடைபெற்றது. (லேவி 27:2).

12. தேவன் மோசேயைக் கடைசி முறையாக இங்கு சந்தித்தார். (மோசேயின் மரணத்திற்குச் சற்று முன்பாக) (உபா 31:15).

கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே மோசே செய்கிறார். மோசே தேவனுடைய வார்த்தைக்குப் பரிபூரணமாகக் கீழ்ப்படிகிறார். தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியத்தை உடனடியாக நிறைவேற்றுகிறார். ஆரோனையும், அவருடைய குமாரரையும் இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் முன்பாகப் பிரதிஷ்டை பண்ணுகிறார். கர்த்தர் இவர்களைத் தமது ஊழியத்திற்குத் தெரிந்தெடுத்திருக்கிறார் என்பது இதன் வாயிலாக ஜனங்களுக்குத் தெரிய வரும்.

ஆசாரியரை பிரதிஷ்டைபண்ணுவதற்கு மோசே செய்த காரியங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் எல்லோரையும் மோசே கூடிவரச்செய்கிறார் (லேவி 8:3-5).

2. மோசே இஸ்ரவேலரிடம் பேசுகிறார் (லேவி 8:5).

3. மோசே ஆரோனையும், அவருடைய குமாரரையும் வரவழைக்கிறார் (லேவி 8:6).

4. மோசே அவர்களை ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுவிக்கிறார்.

5. மோசே ஆரோனுக்கு உள்ளங்கியைப் போடுகிறார் (லேவி 8:7).

6. மோசே ஆரோனுக்கு இடைக்கச்சையைக் கட்டுகிறார்.

7. மோசே ஆரோனுக்கு மேலங்கியை உடுத்துகிறார்.

8. மோசே ஆரோனுக்கு ஏபோத்தைத் தரிக்கிறார்.

9. மோசே ஆரோனுக்கு மார்ப்பதக்கத்தை அணிவிக்கிறார் (லேவி 8:8).

10. மோசே மார்ப்பதக்கத்திலே ஊரீம், தும்மீம் என்பவைகளை வைக்கிறார்.

11. மோசே ஆரோனின் தலையில் பாகையைத் தரிக்கிறார் (லேவி 8:9).

12. மோசே பாகையின்மேல் ஆரோனின் நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் பொற்பட்டத்தைக் கட்டுகிறார்.

13. மோசே, அபிஷேகதைலத்தை எடுத்து, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவற்றையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப்படுத்துகிறார் (லேவி 8:10).

14. மோசே அதில் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளிக்கிறார் (லேவி 8:11).

15. மோசே பலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும், பரிசுத்தப்படுத்தும் படிக்கு அபிஷேகம் பண்ணுகிறார்.

16. மோசே தொட்டியையும் அதின் பாதத்தையும் பரிசுத்தப்படுத்தும்படிக்கு அபிஷேகம் பண்ணுகிறார்.

17. மோசே அபிஷேகதைலத்திலே கொஞ்சம் ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவரைப் பரிசுத்தப்படுத்தும்படி அபிஷேகம் பண்ணுகிறார் (லேவி 8:12).

18. மோசே, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்ட படியே, ஆரோனின் குமாரரை வரவழைக்கிறார்.

19. மோசே அவர்களுக்கு அங்கிகளை உடுத்துகிறார் (லேவி 8:13).

20. மோசே அவர்களுக்கு இடைக் கச்சைகளைக் கட்டுகிறார்.

21. மோசே அவர்களுக்குக் குல்லாக்களைத் தரிக்கிறார்.

22. ஆரோனுக்கும், அவருடைய குமாரருக்கும் பாவநிவாரண பலிக்கான காளையை மோசே கொண்டுவருகிறார் (லேவி 8:14).

23. மோசே காளையை அடிக்கிறார் (லேவி 8:15).

24. மோசே அதின் இரத்தத்தை எடுத்து, தன் விரலினால் பலிபீடத்தின் கொம்புகளின்மேல் சுற்றிலும் பூசுகிறார்.

25. மோசே மற்ற இரத்தத்தைப் பலி பீடத்தின் அடியில் ஊற்றிவிடுகிறார்.

26. கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே மோசே, குடல்கள்மேல் இருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின்மேல் இருந்த ஜவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும் எடுத்து, பலிபீடத்தின் மேல் தகனிக்கிறார் (லேவி 8:16).

27. மோசே காளையையும் அதின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியிலே சுட்டெரிக்கிறார் (லேவி 8:17).

28. ஆரோனுக்கும், அவருடைய குமாரருக்கும் சர்வாங்க தகனபலிக்கு மோசே ஆட்டுக்கடாவைக் கொண்டு வருகிறார். (லேவி 8:18).

29. மோசே ஆட்டுக்கடாவைக் கொல்லுகிறார் (லேவி 8:19).

30. மோசே அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கிறார்.

31. மோசே ஆட்டுக்கடாவைச் சந்து சந்தாகத் துண்டிக்கிறார் (லேவி 8:20).

32. மோசே அதின் தலையையும் துண்டங்களையும் கொழுப்பையும் தகனிக்கிறார்.

33. மோசே குடல்களையும் தொடைகளையும் தண்ணீரால் கழுவுகிறார் (லேவி 8:21).

34. மோசே ஆட்டுக்கடா முழுவதையும் பலி பீடத்தின்மேல் கர்த்தருக்குச் சுகந்த வாசனைக்கான சர்வாங்க தகனபலியாகத் தகனிக்கிறார்.

35. மோசே ஆரோனையும், அவருடைய குமாரரையும் பிரதிஷ்டைப் படுத்துவதற்குரிய மற்ற ஆட்டுக்கடாவைக் கொண்டு வருகிறார் (லேவி 8:22).

36. மோசே அந்த ஆட்டுக்கடாவைக் கொல்லுகிறார் (லேவி 8:23).

37. மோசே அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனுடைய வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரலிலும் வலதுகாலின் பெருவிரலிலும் பூசுகிறார்.

38. மோசே அந்த இரத்தத்திலே கொஞ்சம் ஆரோனின் குமாரருடைய வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரலிலும் வலதுகாலின் பெருவிரலிலும் பூசுகிறார் (லேவி 8:24).

39. மோசே இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கிறார்.

40. மோசே ஆட்டுக்கடாவின் ஒருசில பகுதிகளை எடுத்து, அதோடு போஜனபலியையும் எடுத்து, அவைகளையெல்லாம் ஆரோனுடைய உள்ளங்கைகளிலும் ஆரோனின் குமாரருடைய உள்ளங்கைகளிலும் வைத்து, அசைவாட்டும் பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டுகிறார் (லேவி 8:25-27).

41. மோசே அவைகளை அவர்கள் உள்ளங்கைகளிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேலிருக்கிற தகனபலியின்மேல் தகனிக்கிறார் (லேவி 8:28).

42. மோசே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டுகிறார். இது மோசேயின் பங்கு. (லேவி 8:29).

43. மோசே அபிஷேகதைலத்திலும், பலிபீடத்தின்மேலிருந்த இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோன்மேலும் அவர் வஸ்திரங்கள்மேலும், அவர் குமாரர்மேலும் அவர்கள் வஸ்திரங்கள் மேலும் தெளித்து, அவர்களையும், அவர்கள் வஸ்திரங்களையும் பரிசுத்தப் படுத்துகிறார் (லேவி 8:30).

44. மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் நோக்கி, அந்த மாம்சத்தை ஆசரிப்புக் கூடாரவாசலிலே வேவிக்க வேண்டுமென்று கூறுகிறார். (லேவி 8:31) அந்த மாம்சத்தைப் போஜன பலியோடு அவர்கள் புசிக்க வேண்டும். மாம்சத்திலும் அப்பத்திலும் மீதியானதை அக்கினியிலே சுட்டெரிக்க வேண்டும். (லேவி 8:32) பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறும்வரைக்கும், ஏழுநாள் ஆசரிப்புக்கூடாரவாசலை விட்டு அவர்கள் புறப்படக்கூடாது. (லேவி 8:33-36)

ஆசாரியர் பிரதிஷ்டைபண்ணப்படும் விதம்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மோசே அவர்களைக் கர்த்தரிடத்தில் அழைத்து வருகிறார் (லேவி 8:1-5).
2. மோசே அவர்களை ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுவிக்கிறார் (லேவி 8:6).
3. மோசே அவர்களுக்கு வஸ்திரங்களை அணிவிக்கிறார் (லேவி 8:7-9,13).
4. மோசே அவர்களை அபிஷேகம் பண்ணுகிறார் (லேவி 8:10-12).
5. அவர்கள் கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்துகிறார்கள். (லேவி 8:14-30).
6. தேவனோடு ஆசாரியருடைய ஐக்கியம். (லேவி 8:31-32).
7. ஆசாரியர் வேறுபிரிக்கப்படுவதும், அவர்களுடைய ஊழியமும். (லேவி 8:33-36).

ஆசாரியரின் பாவநிவாரண பலி
லேவி 8:14-30

லேவி 8:14. பாவநிவாரண பலிக்கான காளையைக் கொண்டுவந்தான்; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்;

லேவி 8:15. அப்பொழுது அது கொல்லப்பட்டது; மோசே அதின் இரத்தத்தை எடுத்து, தன் விரலினால் பலிபீடத்தின் கொம்புகளின்மேல் சுற்றிலும் பூசி, பலிபீடத்திற்காகப் பிராயச்சித்தஞ்செய்து, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிட்டு, அதின்மேல் பாவநிவிர்த்தி செய்யும்பொருட்டு அதைப் பரிசுத்தப்படுத்தினான்.

லேவி 8:16. பின்பு மோசே, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, குடல்கள்மேல் இருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின்மேல் இருந்த ஜவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும் எடுத்து, பலி பீடத்தின் மேல் தகனித்து,

லேவி 8:17. காளையையும் அதின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியிலே சுட்டெரித்தான்.

லேவி 8:18. பின்பு அவன் சர்வாங்க தகனபலிக்கு ஆட்டுக்கடாவைக் கொண்டு வந்தான்; அதின் தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

லேவி 8:19. அப்பொழுது அது கொல்லப்பட்டது; மோசே அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்தான்.

லேவி 8:20. ஆட்டுக்கடா சந்து சந்தாகத் துண்டிக்கப்பட்டது; கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, மோசே அதின் தலையையும் துண்டங்களையும் கொழுப்பையும் தகனித்தான்.

லேவி 8:21. குடல்களையும் தொடைகளையும் தண்ணீரால் கழுவினபின், மோசே ஆட்டுக்கடா முழுவதையும் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குச் சுகந்த வாசனைக்கான சர்வாங்க தகனபலியாகத் தகனித்தான்.

லேவி 8:22. பின்பு பிரதிஷ்டைப்படுத்துவதற்குரிய மற்ற ஆட்டுக்கடாவைக் கொண்டு வந்தான்; அதின் தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

லேவி 8:23. பின்பு அது கொல்லப்பட்டது; மோசே அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனுடைய வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரலிலும் வலதுகாலின் பெருவிரலிலும் பூசினான்.

லேவி 8:24. பின்பு ஆரோனுடைய குமாரரையும் அழைத்தான்; மோசே அந்த இரத்தத்திலே கொஞ்சம் அவர்களுடைய வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரலிலும் வலதுகாலின் பெருவிரலிலும் பூசி, இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து,

லேவி 8:25. கொழுப்பையும், வாலையும், குடல்கள் மேலிருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின் மேலிருந்த ஜவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும், வலது முன்னந்தொடையையும் எடுத்து,

லேவி 8:26. கர்த்தருடைய சந்நிதியில் வைத்திருந்த புளிப்பில்லா அப்பங்களின் கூடையிலுள்ள புளிப்பில்லா அதிரசத்தில் ஒன்றையும், எண்ணெயிட்ட அப்பமாகிய அதிரசத்தில் ஒன்றையும், ஒரு அடையையும் எடுத்து, அந்தக் கொழுப்பின் மேலும், முன்னந்தொடையின் மேலும் வைத்து,

லேவி 8:27. அவைகளையெல்லாம் ஆரோனுடைய உள்ளங்கைகளிலும் அவன் குமாரருடைய உள்ளங்கைகளிலும் வைத்து, அசைவாட்டும் பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டி,

லேவி 8:28. பின்பு மோசே அவைகளை அவர்கள் உள்ளங்கைகளிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேலிருக்கிற தகனபலியின் மேல் தகனித்தான்; அவைகள் சுகந்த வாசனையான பிரதிஷ்டைப் பலிகள்; இது கர்த்தருக்குப் தகனபலியானது.

லேவி 8:29. பின்பு மோசே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டினான். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவிலே அது மோசேயின் பங்காயிற்று.

லேவி 8:30. மோசே அபிஷேகதைலத்திலும், பலி பீடத்தின்மேலிருந்த இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோன்மேலும் அவன் வஸ்திரங்கள்மேலும், அவன் குமாரர்மேலும் அவர்கள் வஸ்திரங்கள் மேலும் தெளித்து, ஆரோனையும் அவன் வஸ்திரங்களையும், அவன் குமாரரையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும் பரிசுத்தப்படுத்தினான்.

ஜனங்கள் கர்த்தருடைய சந்நிதியிலே பலிகளை கொண்டு வருகிறார்கள். ஜனங்களுக்காக பலிகள் செலுத்தப்படுவதுபோல ஆசாரியருக்காகவும் பலிகள் செலுத்தப்படுகிறது. கர்த்தருடைய சந்நிதியில் எல்லாவிதமான பலிகளும் ஆசாரியருக்காக செலுத்தப்படுகிறது. ஆசாரியர்கள் ஜனங்கள் கொண்டு வரும் காணிக்கைகளையும் பலிகளையும் குறித்து கரிசனையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

இஸ்ரவேல் சபையார் தங்களுடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காகவும், குற்றங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காகவும் கர்த்தருடைய சந்நிதியில் காணிக்கைகளை கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய பாவங்களைக் குறித்தும், குற்றங்களைக் குறித்தும் ஆசாரியர்கள் கரிசனையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் அறியாமையால் இந்த தப்பிதங்களை செய்திருந்தாலும், ஆசாரியர்கள் அவர்கள்மீது அன்புள்ளவர்களாகவும் மனதுருக்கமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இஸ்ரவேல் சபையாரைப்போலவே ஆசாரியர்களும் பாவங்களையும் குற்றங்களையும் செய்வதற்கு வாய்ப்புள்ளது.

கர்த்தருடைய சந்நிதியில் இஸ்ரவேல் புத்திரர் கொண்டு வரும் பலிகளை, ஆசாரியர்கள் பெற்றுக்கொண்டு, அவற்றை பலிபீடத்திலே சர்வாங்க தகனபலியாகவும் பாவநிவாரண பலியாகவும் செலுத்துகிறார்கள். பலி செலுத்துகிற ஆசாரியர்கள் பரிசுத்தமாயிருக்கவேண்டும். ஆசாரியரின் பாவங்கள் நிவிர்த்திபண்ணப்பட்டிருக்கவேண்டும். ஆகையினால் மோசே ஆசாரியருக்காக பாவநிவாரண பலியை செலுத்துகிறார்.

மோசே பாவநிவாரண பலிக்கான காளையை கொண்டு வருகிறார். பாவநிவாரண பலியாக செலுத்தப்படும் மிருகங்களில் காளையே மிகவும் பெரியது. அது அதிக விலை மதிப்புள்ளது. ஆசாரியரின் பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு, பாவநிவாரண பலியாக காளை நியமிக்கப்பட்டிருக்கிறது (லேவி 8:14).

இஸ்ரவேல் சபையாரின் பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக ஆசாரியர்கள் பாவநிவாரண பலிகளை செலுத்துகிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பாவநிவிர்த்தியை அறிவிக்கிறார்கள். பாவநிவாரண பலிகளை செலுத்துகிறவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்று ஆசாரியர்கள் அறிவிக்கும்போது, தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்னும் நிச்சயமும் உறுதியும் ஆசாரியர்களிடத்தில் இருக்கவேண்டும்.

கர்த்தர் ஆசாரியரிடத்தில் ஒப்புரவாகுதலின் ஊழியத்தை நியமித்திருக்கிறார். இந்த ஊழியத்தை செய்கிற ஆசாரியர்கள் முதலாவதாக கர்த்தரோடு ஒப்புரவாகவேண்டும். தாங்கள் ஒப்புரவான பின்பு, மற்றவர்களை ஒப்புரவாக்கவேண்டும்.

ஆசாரியரின் பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக, மோசே பாவநிவாரண பலிக்கான காளையை கொண்டு வருகிறார். இந்தக் காளை பாவநிவாரணபலியாக செலுத்தப்படும் விதம் பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. பாவநிவாரண பலிக்கான காளையினுடைய தலையின்மேல் ஆரோனும் அவருடைய குமாரரும் தங்கள் கைகளை வைக்கிறார்கள் (லேவி 8:14).

ஆட்டுக்கடாவின் தலையின்மேல் ஆரோனும் அவருடைய குமாரரும் தங்கள் கைகளை வைக்கிறார்கள். ஆட்டுக்கடா அவர்களுடைய பாவத்திற்குப் பதிலீடாகிறது. அவர்களுடைய பாவம் ஆட்டுக்கடாவிற்குக் கடந்து போகிறது.

அப்பொழுது பாவநிவாரண பலிக்கான காளை கொல்லப்படுகிறது; மோசே அதின் இரத்தத்தை எடுத்து, தன் விரலினால் பலிபீடத்தின் கொம்புகளின்மேல் சுற்றிலும் பூசி, பலிபீடத்திற்காகப் பிராயச்சித்தஞ்செய்து, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிட்டு, அதின்மேல் பாவநிவிர்த்தி செய்யும்பொருட்டு அதைப் பரிசுத்தப்படுத்துகிறார் (லேவி 8:15)

பின்பு மோசே, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, குடல்கள்மேல் இருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின்மேல் இருந்த ஜவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும் எடுத்து, பலிபீடத்தின் மேல் தகனித்து, காளையையும் அதின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியிலே சுட்டெரிக்கிறார் (லேவி 8:16,17).

மோசே ஆசாரியருடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு பாவநிவாரண காளையைக் கொண்டு வந்து, அதை பாவநிவாரண பலியாக செலுத்துகிறார். அதன் பின்பு அவர் சர்வாங்க தகனபலிக்கு ஆட்டுக்கடாவைக் கொண்டு வருகிறார்; அந்த ஆட்டுக்கடாவினுடைய தலையின்மேல் ஆரோனும் அவருடைய குமாரரும் தங்கள் கைகளை வைக்கிறார்கள் (லேவி 8:18).

அப்பொழுது அந்த ஆட்டுக்கடா கொல்லப்படுகிறது; மோசே அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கிறார். ஆட்டுக்கடா சந்து சந்தாகத் துண்டிக்கப்படுகிறது; கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, மோசே அதின் தலையையும் துண்டங்களையும் கொழுப்பையும் தகனிக்கிறார் குடல்களையும் தொடைகளையும் தண்ணீரால் கழுவினபின், மோசே ஆட்டுக்கடா முழுவதையும் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குச் சுகந்த வாசனைக்கான சர்வாங்க தகனபலியாகத் தகனிக்கிறார் (லேவி 8:19-21).

ஆசாரியரின் பாவம் நிவிர்த்தி பண்ணபபடுவதற்கு காளை பாவநிவாரண பலியாக செலுத்தப்படுகிறது. கர்த்தர் ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் ஆசாரிய ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். ஆசாரிய ஊழியம் கனமுள்ளது. அது மகிமையானது. கர்த்தர் ஆசாரிய ஊழியத்தை தங்களுக்கு கொடுத்திருப்பதன் மூலமாக, கர்த்தர் தங்களை கனப்படுத்தியிருக்கிறார் என்பதை ஆசாரியர்கள் அங்கீகரிக்கிறார்கள். அதற்காக அவர்கள் கர்த்தரை நன்றியோடு துதிக்கிறார்கள்.

கிறிஸ்துவானவர் தனக்கு அப்போஸ்தல ஊழியத்தை கொடுத்திருப்பதற்காக, அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவுக்கு நன்றி சொல்லுகிறார்.

"என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்" (1தீமோ 1:12).

இதன் பின்பு, மோசே பிரதிஷ்டைப்படுத்துவதற்குரிய மற்ற ஆட்டுக்கடாவைக் கொண்டு வருகிறார். இது பிரதிஷ்டைபடுத்துவதற்குரிய ஆட்டுக்கடா ஆகும். இது சமாதானபலியாக செலுத்தப்படுகிறது. இந்த ஆட்டுக்கடாவினுடைய தலையின்மேல் ஆரோனும் அவருடைய குமாரரும் தங்கள் கைகளை வைக்கிறார்கள் (லேவி 8:22).

பின்பு அந்த ஆட்டுக்கடா கொல்லப்படுகிறது; மோசே அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனுடைய வலதுகாதின் மடலிலும், வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும் பூசுகிறார் (லேவி 8:23).

மோசே அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுக்கிறார். ஆரோனும், அவருடைய குமாரரும் ஆசாரிய ஊழியம் செய்ய ஆரம்பிக்கும் வரையிலும் மோசேயே ஆசாரிய ஊழியத்தைச் செய்கிறார். மோசே ஒரு தீர்க்கதரிசி (உபா 18:15-20). அவர் ஒரு ஆசாரியர். (லேவி 9:23). அவர் ஒரு ராஜா (உபா 33:5).

பின்பு மோசே ஆரோனுடைய குமாரரையும் அழைக்கிறார். மோசே அந்த இரத்தத்திலே கொஞ்சம் அவர்களுடைய வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரலிலும் வலதுகாலின் பெருவிரலிலும் பூசி, இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கிறார் (லேவி 8:24).

மோசே கொல்லப்பட்ட அந்த ஆட்டுக்கடாவின் கொழுப்பையும், வாலையும், குடல்கள் மேலிருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின் மேலிருந்த ஜவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும், வலது முன்னந்தொடையையும் எடுத்து, கர்த்தருடைய சந்நிதியில் வைத்திருந்த புளிப்பில்லா அப்பங்களின் கூடையிலுள்ள புளிப்பில்லா அதிரசத்தில் ஒன்றையும், எண்ணெயிட்ட அப்பமாகிய அதிரசத்தில் ஒன்றையும், ஒரு அடையையும் எடுத்து, அந்தக் கொழுப்பின் மேலும், முன்னந்தொடையின் மேலும் வைக்கிறார் (லேவி 8:25,26).

புளிப்பில்லா அப்பங்களும், கூடைகளில் மற்ற அப்பங்களும் கொண்டுவரப்படுகிறது. ஆசாரியர் பிரதிஷ்டை பண்ணப்படுவதற்கு முன்பாகவே, இவைகள் அனைத்தும் செய்யப்பட்டு விட்டன. மோசேயின் ஊழியத்தை ஆசாரியர்கள் தொடர்ந்து செய்கிறார்கள் (லேவி 8:2,26).

மோசே அவைகளையெல்லாம் ஆரோனுடைய உள்ளங்கைகளிலும் அவர் குமாரருடைய உள்ளங்கைகளிலும் வைத்து, அசைவாட்டும் பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டுகிறார் (லேவி 8:27).

மோசே அப்பங்களின் கூடைகளை ஆரோனுடைய உள்ளங்கைகளிலும் அவர் குமாரருடைய உள்ளங்கைகளிலும் வைக்கிறார். அதை அசைவாட்டும் பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டுகிறார். அதன் பின்பு அவைகளை அவர்கள் உள்ளங்கைகளிலிருந்து எடுத்து, பலிபீடத்தின் மேலிருக்கிற தகனபலியின்மேல் தகனிக்கிறார் (லேவி 8:27-28).

இதன் பின்பு, மோசே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டுகிறார். (லேவி 8:29). இதன் பின்பு மார்க்கண்டம் பிரதான ஆசாரியனிடத்தில் கொடுக்கப்படுகிறது. அசைவாட்டப்பட்ட மற்ற பாகங்கள் மற்ற ஆசாரியரிடம் கொடுக்கப்படுகிறது (லேவி 7:34; லேவி 10:14-15; யாத் 29:27).

பின்பு மோசே அவைகளை அவர்கள் உள்ளங்கைகளிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேலிருக்கிற தகனபலியின்மேல் தகனிக்கிறார்; அவைகள் சுகந்த வாசனையான பிரதிஷ்டைப் பலிகள்; இது கர்த்தருக்குப் தகனபலியானது (லேவி 8:28).

பின்பு மோசே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டுகிறார். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவிலே அது மோசேயின் பங்காயிற்று (லேவி 8:29)

மோசே அபிஷேகதைலத்திலும், பலிபீடத்தின்மேலிருந்த இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோன்மேலும் அவருடைய வஸ்திரங்கள்மேலும், அவருடைய குமாரர்மேலும் அவர்கள் வஸ்திரங்கள் மேலும் தெளித்து, ஆரோனையும் அவருடைய வஸ்திரங்களையும், அவருடைய குமாரரையும் அவருடைய குமாரரின் வஸ்திரங்களையும் பரிசுத்தப்படுத்துகிறார் (லேவி 8:30).

கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே, மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணுகிறார். அவர்களை அபிஷேகம்பண்ணி பரிசுத்தப்படுத்துகிறார். மோசே அவர்களுக்காக பாவநிவாரண பலிக்கான காளையையும், சர்வாங்க தகனபலிக்கு ஆட்டுக்கடாவையும், பிரதிஷ்டைபடுத்துவதற்குரிய மற்ற ஆட்டுக்கடாவையும் கர்த்தருடைய சந்நிதியில் செலுத்துகிறார்.

ஆசாரியர்மீதும், அவர்களுடைய வஸ்திரங்கள் மீதும் இரத்தமும், அபிஷேகதைலமும் தெளிக்கப்படுகிறது. இது அவர்களுடைய பிரதிஷ்டை, பரிசுத்தப்படுத்தப்படுதல் ஆகிய சடங்குகளின் முடிவாகும். இதற்கு முன்பு ஆசாரியர்கள்மீதும், (லேவி 8:23-24) பலிபீடத்தின்மீதும் (லேவி 8:14-15) இரத்தம் தெளிக்கப்பட்டது. ஆரோன் ஏற்கெனவே பிரதான ஆசாரியனாக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார் (லேவி 8:10-13).

ஆகையினால் இந்தச் சடங்கு அவர்களுடைய பாவநிவிர்த்திக்காகவோ அல்லது அவர்களைப் பரிசுத்தப்படுத்துவதற்காகவோ செய்யப்பட வில்லை. இரத்தத்தில் தொடர்ந்து நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே இங்கு இரத்தம் தெளிக்கப்படுகிறது. அத்துடன் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும், ஆசாரியருக்குத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக அபிஷேக தைலம் தெளிக்கப்படுகிறது.

அபிஷேகதைலம் சம்பந்தமான சடங்குகள் தேவனுடைய தெரிந்தெடுப்பிற்கு அடையாளம். தேவன் ஒருவரை அழைத்து, தாம் நியமித்திருக்கும் ஊழியத்திற்கு அவரை அபிஷேகித்து, தமது வல்லமையை அவருக்குத் தருகிறார். ஆசாரியர், தீர்க்கதரிசிகள், ராஜாக்கள் ஆகியோரைக் கர்த்தர் அபிஷேகம் பண்ணியிருக்கிறார். தங்களுடைய அழைப்பிற்கு அவர்கள் உண்மையுள்ளவர்களாக நடந்து கொண்டால், தேவனுடைய ஆதரவு அவர்களுக்குக் கிடைக்கும்.

அவர்கள் பாவம் செய்து, தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினால், அவர்களுக்குத் தேவனுடைய சாபமே வரும். அவர்கள் மனந்திருந்தி, தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்பிற்கு மறுபடியும் திரும்பி வந்து, அந்த ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும். அவர்கள் திரும்பி வரவில்லையென்றால், தேவனுடைய சாபம் அவர்களிடத்தில் நித்திய காலமாக இருக்கும். இது தேவதூதர்களுக்கும் பொருந்தும். (எசே 28:11-17; ஏசா 14:12-14; மத் 24:41; வெளி 12:10-12; வெளி 20:10)

ஆசாரியருக்கு கட்டளை லேவி 8:31-36

லேவி 8:31. பின்பு மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் நோக்கி: நீங்கள் அந்த மாம்சத்தை ஆசரிப்புக் கூடாரவாசலிலே வேவித்து, ஆரோனும் அவன் குமாரரும் அதைப் புசிப்பார்களாக என்று கட்டளையிட்டிருக்கிறபடியே, அங்கே அதையும் உங்கள் பிரதிஷ்டைப் பலிகளுள்ள கூடையில் இருக்கிற அப்பத்தையும் புசித்து,

லேவி 8:32. மாம்சத்திலும் அப்பத்திலும் மீதியானதை அக்கினியிலே சுட்டெரித்து,

லேவி 8:33. பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறும்வரைக்கும், ஏழுநாள் ஆசரிப்புக்கூடாரவாசலை விட்டுப் புறப்படாதிருங்கள்; ஏழுநாளளவும் நீங்கள் பிரதிஷ்டைப்படுத்தப்படுவீர்கள்.

லேவி 8:34. இன்று செய்ததுபோல, உங்கள் பாவநிவிர்த்திக்காக இனிமேலும் செய்யவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார்.

லேவி 8:35. நீங்கள் சாகாதபடிக்கு ஏழுநாள் இரவும் பகலும் ஆசரிப்புக் கூடாரவாசலிலிருந்து, கர்த்தருடைய காவலைக் காக்கக் கடவீர்கள்; இப்படி நான் கற்பிக்கப்பட்டேன் என்றான்.

லேவி 8:36. கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிட்ட எல்லாக் காரியங்களையும் ஆரோனும் அவன் குமாரரும் செய்தார்கள்.

மோசே இதுவரையிலும் ஆரோனையும் அவருடைய குமாரரையும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணுகிறார். பிரதிஷ்டை வைபவம் முடிந்த பின்பு கர்த்தர் தனக்கு சொன்ன கட்டளைகளை மோசே ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் சொல்லுகிறார்.

மோசே இதுவரையிலும் ஆசாரிய ஊழியம் செய்தார். இப்போது ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணப் பட்டிருக்கிறார்கள். இனிமேல் அவர்கள் மோசேயின் ஆசாரிய ஸ்தானத்தில், கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யவேண்டும். ஆசாரிய ஊழியத்தை எவ்வாறு செய்யவேண்டும் என்று மோசே அவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறார்.

மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் நோக்கி, "நீங்கள் அந்த மாம்சத்தை ஆசரிப்புக் கூடாரவாசலிலே வேவித்து, ஆரோனும் அவன் குமாரரும் அதைப் புசிப்பார்களாக என்று கட்டளையிட்டிருக்கிறபடியே, அங்கே அதையும் உங்கள் பிரதிஷ்டைப் பலிகளுள்ள கூடையில் இருக்கிற அப்பத்தையும் புசித்து, மாம்சத்திலும் அப்பத்திலும் மீதியானதை அக்கினியிலே சுட்டெரிக்கவேண்டும்" *(லேவி 8:31,32)* என்று சொல்லுகிறார்.

ஆரோனும் அவருடைய குமாரரும் சமாதான பலியின் மாம்சத்தை வேகவைக்க வேண்டும். வேவிக்கப்பட்ட அந்த மாம்சத்தை ஆசாரியர்கள் ஆசாரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்திலே புசிக்கவேண்டும். மீதமுள்ள மாம்சத்தை அவர்கள் அக்கினியிலே சுட்டெரிக்கவேண்டும். இதுவே மோசே அவர்களுக்கு சொல்லுகிற முதலாவது கட்டளை.

கர்த்தருக்குச் செலுத்தப்படும் பலி பழுதற்றதாக இருக்கவேண்டும். அது பாழாய்ப்போகக்கூடாது. ஆகையால், அது பாழாவதற்கு முன்பாகவே அதைப் புசிக்க வேண்டும். மீதியானதை சுட்டெரித்துவிட வேண்டும். கர்த்தருக்குப் பலியாகச் செலுத்தப்பட்டதைப் பாழாய்ப்போக விடக்கூடாது.

ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசரிப்புக்கூடாரத்திலே ஏழுநாட்களுக்கு தங்கியிருக்கவேண்டும். மோசே அவர்களை நோக்கி, "பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறும்வரைக்கும், ஏழுநாள் ஆசரிப்புக்கூடாரவாசலை விட்டுப் புறப்படாதிருங்கள்; ஏழுநாளளவும் நீங்கள் பிரதிஷ்டைப்படுத்தப்படுவீர்கள்" *(லேவி 8:33)* என்று சொல்லுகிறார்.

பிரதிஷ்டையின் சடங்குகள் ஏழு நாட்களுக்கு நடைபெறும். இந்த ஏழு நாட்களுக்கும் ஆசாரியர் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு, வெளியே போகக்கூடாது. *(லேவி 8:33-35; யாத் 29:35-37)*. ஆசாரியருக்குக் கொடுக்கப்படும் பலிகளின் பங்கை அவர்கள் புசித்து, பிராகாரத்தில் படுத்துத் தூங்கவேண்டும். ஒருவேளை அவர்களுக்குக் கொடுக்கப்படும் தோல்களைத் தரையில் விரித்துக் கொள்ளலாம்.

ஆசாரிய ஊழியமானது நல்ல போராட்டத்தைப் போராடுவதற்கு சமமான ஊழியம். யுத்தக்களத்திலே யுத்தம்பண்ணுகிறவர்கள் கடினமான பயிற்சிகளை மேற்கொள்வார்கள். அவர்கள் பல்வேறுவிதமான கஷ்டங்களை சகிப்பதற்கு தங்களை ஆயத்தம்பண்ணிக்கொள்வார்கள். உலகப்பிரகாரமான காரியங்களிலிருந்து விலகி, யுத்தம்பண்ணுவதிலேயே கவனமாயிருப்பார்கள்.

"நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான்" *(2தீமோ 2:3,4)*.

உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. கர்த்தருடைய ஆசாரியர்கள் உலகத்தையும், உலகப்பிரகாரமான காரியங்களையும் நேசிக்காமல், கர்த்தரையே நேசிக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியங்களில் கவனம் செலுத்தவேண்டும். இதற்காக அவர்களுக்கு ஊழியப்பயிற்சி கொடுக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியின் ஒரு பகுதியாக அவர்கள் ஏழுநாட்களுக்கு ஆசரிப்புக்கூடார வாசலை விட்டு வெளியே போகாமல், அந்த ஏழுநாட்களும் அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்குள்ளேயே தங்கியிருக்கவேண்டும்.

ஆசாரியருடைய பிரதிஷ்டையின் நாட்கள் ஏழாம் நாளில் நிறைவேறுகிறது. அவர்கள் அந்த ஏழுநாட்களும் ஆசரிப்புக்கூடார வாசலை விட்டு புறப்படக்கூடாது என்று மோசே சொல்லுகிறார். ஏழுநாட்கள் என்பது சிருஷ்டிப்பின் நாட்களுக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் ஆறுநாட்களாக இந்தப் பூமியையும், இந்தப் பூமியிலுள்ள சர்வசிருஷ்டிகளையும் சிருஷ்டித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். கர்த்தர் ஓய்வுநாளை கனம்பண்ணுகிறார்.

ஆசாரியருடைய பிரதிஷ்டையின் நாட்கள் ஏழுநாட்களுக்கு நடைபெறுகிறது. ஏழாம் நாளிலே தாங்கள் செய்யவேண்டிய ஊழியத்திற்கு, ஆசாரியர்கள் தங்களை ஆறுநாட்களுக்கு ஆயத்தம்பண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளையை காத்துக்கொள்கிறார்கள்.

விசுவாசிகளாகிய நாம் எல்லோருமே நித்திய தேவனுடைய மகிமையைக் காத்துக்கொள்ளவேண்டும். கர்த்தரைக் கனம்பண்ணும் காரியங்களை மாத்திரமே நாம் செய்யவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஊழியங்களை காத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய ஆத்துமாவின் பரிசுத்தத்தையும் நம்முடைய ஜீவியத்தின் சாட்சியையும் நாம் காத்துக்கொள்ளவேண்டும்.

ஆரோனும் அவருடைய குமாரரும் ஏழுநாளளவும் பிரதிஷ்டைபடுத்தப்படுகிறார்கள். பிரதிஷ்டையின் நாட்கள் ஏழாம் நாளில் நிறைவேறுகிறது. மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் நோக்கி, "நீங்கள் சாகாதபடிக்கு ஏழுநாள் இரவும் பகலும் ஆசரிப்புக் கூடாரவாசலிலிருந்து, கர்த்தருடைய காவலைக் காக்கக் கடவீர்கள்; இப்படி நான் கற்பிக்கப்பட்டேன்" (லேவி 8:35) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிட்ட எல்லாக் காரியங்களையும் ஆரோனும் அவன் குமாரரும் செய்கிறார்கள் (லேவி 8:36).

ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசரிப்புக்கூடாரத்தில் ஆசாரிய ஊழியம் செய்கிறார்கள். அவர்களுடைய ஆசாரிய ஊழியம் குறைவுள்ளது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார்.

"ஆனதால், இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டது எவ்வளவு விசேஷித்த காரியமோ, அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்" (எபி 7:21,22).

மோசே ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் பாவநிவாரண பலியை செலுத்துகிறார். இதன் மூலமாக ஆசாரியரின் பாவங்கள் நிவிர்த்திபண்ணப்பட்டாலும் அவர்கள் மறுபடியும் பாவம் செய்வதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் மோசே அவர்களை நோக்கி, "இன்று செய்ததுபோல, உங்கள் பாவநிவிர்த்திக்காக இனிமேலும் செய்யவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார்" (லேவி 8:34) என்று சொல்லுகிறார்.

ஆசாரியருடைய பிரதிஷ்டையின் கடைசி கட்டளைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு :

1. பலிகளின் மாம்சத்தை ஆசரிப்புக் கூடாரவாசலிலே வேவிக்க வேண்டும். (லேவி 8:31).

2. ஆரோனும், அவருடைய குமாரரும் அதே இடத்தில் அதைப் புசிக்க வேண்டும்.

3. ஆரோனும், அவருடைய குமாரரும் அதையும் கூடையிலிருக்கிற அப்பத்தையும் புசிக்க வேண்டும்.

4. மாம்சத்திலும் அப்பத்திலும் மீதியானதை அக்கினியிலே சுட்டெரிக்க வேண்டும். (லேவி 8:32).

5. ஏழுநாள் இரவும் பகலும் ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்க வேண்டும். (லேவி 8:33,35).

6. இன்று செய்ததுபோல , அவர்கள், தங்கள் பாவநிவிர்த்திக்காக இனிமேலும் ஏழுநாட்களுக்குச் செய்யவேண்டும். (லேவி 8:34; யாத் 29:35-37).

7. ஏழுநாள் இரவும் பகலும் கர்த்தருடைய காவலைக் காக்க வேண்டும். (லேவி 8:35).

பழைய ஏற்பாட்டுக்காலத்து ஆசாரியரின் ஊழியம் விசேஷித்த ஊழியமாகயிருந்தாலும், அவர்களுடைய ஊழியம் நிலைத்திருக்கவில்லை. இயேசுகிறிஸ்துவினுடைய ஆசாரிய ஊழியம் மாத்திரமே மாறாத ஆசாரிய ஊழியமாகவும், நித்திய ஆசாரிய ஊழியமாகவும் நிலைத்திருக்கிறது.

9 அதிகாரம்

ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசாரிய ஊழியத்திற்காக பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிறார்கள். ஏழுநாளளவும் அவர்கள் பிரதிஷ்டைபண்ணப் படுகிறார்கள். எட்டாம் நாளிலே ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசாரிய ஊழியத்தை செய்ய ஆரம்பிக்கிறார்கள்.

ஆசாரியர்கள் இஸ்ரவேல் சபையாருடைய பிரதிநிதியாக கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஊழியம் செய்கிறவர்கள். மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் கர்த்தருடைய சந்நிதியில் பலியிடுமாறு சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தரிசனமாவார் என்றும் மோசே சொல்லுகிறார் (லேவி 9:1-7).

ஆரோன் தன் பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு பாவநிவாரண பலியையும் சர்வாங்க தகனபலியையும் செலுத்துகிறார் (லேவி 9:8-14). அதன் பின்பு அவர் இஸ்ரவேல் சபையாருக்காக பலிகளை செலுத்துகிறார். ஆரோன் இஸ்ரவேல் ஜனங்களை ஆசீர்வதிக்கிறார் (லேவி 9:15-22).

கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்படுகிறது (லேவி 9:23). கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, பலிபீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியையும், கொழுப்பையும் எரித்துவிடுகிறது (லேவி 9:24).

ஆசாரியரின் பாவநிவாரண பலி லேவி 9:1-7

லேவி 9:1. எட்டாம் நாளிலே மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் இஸ்ரவேலின் மூப்பரையும் அழைத்து,

லேவி 9:2. ஆரோனை நோக்கி: நீ பாவநிவாரண பலியாகப் பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், சர்வாங்க தகனபலியாகப் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் தெரிந்து கொண்டு, கர்த்தருடைய சந்நிதியில் பலியிடக்கடவாய்.

லேவி 9:3. மேலும் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: கர்த்தருடைய சந்நிதியில் பலியிடும்படிக்கு, நீங்கள் பாவநிவாரணபலியாகப் பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக்கடாவையும், சர்வாங்க தகனபலியாக ஒரு வயதான பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், ஒரு ஆட்டுக்குட்டியையும்,

லேவி 9:4. சமாதானபலிகளாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், எண்ணெயிலே பிசைந்த போஜனபலியையும் கொண்டுவாருங்கள்; இன்று கர்த்தர் உங்களுக்குத் தரிசனமாவார் என்று சொல் என்றான்.

லேவி 9:5. மோசே கட்டளையிட்டவைகளை அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். சபையார் எல்லாரும் சேர்ந்து, கர்த்தருடைய சந்நிதியில் நின்றார்கள்.

லேவி 9:6. அப்பொழுது மோசே: கர்த்தர் கட்டளையிட்ட இந்தக் காரியத்தைச் செய்யுங்கள்; கர்த்தருடைய மகிமை உங்களுக்குக் காணப்படும் என்றான்.

லேவி 9:7. மோசே ஆரோனை நோக்கி: நீ பலிபீடத்தண்டையில் சேர்ந்து, கர்த்தர் கட்டளையிட்டபடியே, உன் பாவநிவாரணபலியையும் உன் சர்வாங்க தகனபலியையும் செலுத்தி, உனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, ஜனங்களுடைய பலியையும் செலுத்தி, அவர்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய் என்றான்.

எட்டாம் நாளிலே மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் இஸ்ரவேலின் மூப்பரையும் அழைத்து, கர்த்தர் தனக்குசொன்ன கட்டளைகளை அவர்களுக்கு சொல்லுகிறார். ஆசாரியர்கள் ஏழுநாளளவும் பிரதிஷ்டைபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறியவுடன், எட்டாம் நாளிலே, மோசே ஆசாரியருக்கு கட்டளை கொடுக்கிறார். பிரதிஷ்டை வைபவம் முடிந்த பின்பு ஆசாரியருக்கு ஓய்வு கொடுக்கப்படவில்லை. அவர்கள் ஆசாரிய ஊழியத்தை உடனே செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள்.

கர்த்தருடைய ஊழியம் மிகவும் விசேஷமானது. அது சோம்பேறியாக செய்யப்படும் ஊழியமல்ல. கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள் உற்சாகமாயும், சுறுசுறுப்பாயும் ஊழியம் செய்யவேண்டும். அப்போதுதான் கர்த்தர் நம்முடைய ஊழியங்களையும், கைகளின் பிரயாசங்களையும் ஆசீர்வதிப்பார்.

மோசே ஆரோனையும், அவருடைய குமாரரையும், இஸ்ரவேலின் மூப்பரையும் அழைத்து, "இன்று கர்த்தர் உங்களுக்கு தரிசனமாவார்" என்று சொல்லுகிறார். மோசே இந்த வாக்கியத்தை ஆரோனிடத்தில் சொல்லுகிறார். மோசே தனக்கு சொன்ன இந்த வாக்கியத்தை, ஆரோன் தன் குமாரருக்கும், இஸ்ரவேலின் மூப்பருக்கும் சொல்லவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கர்த்தருடைய தரிசனத்தைக் காணவேண்டும் என்னும் எதிர்பார்ப்பு உண்டாகவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தரிசனமானதுபோல புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, கர்த்தருடைய தரிசனம் எல்லோருக்கும், எல்லா வேளையிலும், பிரத்தியட்சமாய் கிடைப்பதில்லை. நம்முடைய மாம்சப்பிரகாரமான கண்களால் கர்த்தரை நம்மால் எப்போதும் பிரத்தியட்சமாய்ப் பார்க்க முடியும் என்று எதிர்பார்க்கக்கூடாது.

கர்த்தர் நமக்கு தரிசனம் கொடுக்கும்போது, அந்த தரிசனத்தை பயபக்தியோடு பார்த்துக்கொள்ளலாம். கர்த்தர் நமக்கு தரிசனம் கொடுக்காவிட்டாலும், நாம் விசுவாசத்தினால், நம்முடைய மனக்கண்களால் கர்த்தரை தரிசிக்கவேண்டும். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்.

நாம் கர்த்தருக்கு அருகாமையில் வரும்போது, கர்த்தரும் நமக்கு அருகாமையில் வருகிறார். தமக்கு அருகாமையில் வருகிறவர்களை, கர்த்தர் தம்மோடுகூட சேர்த்துக்கொள்கிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்கள் கர்த்தருக்கு பாவநிவாரண பலிகளையும், சர்வாங்க தகனபலிகளையும், சமாதானபலிகளையும், போஜனபலிகளையும் செலுத்தினார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ கர்த்தருக்கு ஆவிக்கேற்ற பலிகளை செலுத்துகிறோம்.

கர்த்தர் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் சபையாரின் பலிகளை அங்கீகரித்துபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்முடைய ஆவிக்குரிய பலிகளையும் அங்கீகரிக்கிறார். விசுவாசத்தினால் செலுத்தும் காணிக்கைகளும் பலிகளும் கர்த்தருக்கு பிரியமானது. ஆவிக்கேற்ற பலிகளை செலுத்துகிற நாம், ஆவிக்கேற்ற பிரகாரமாக ஜீவிக்கவேண்டும்.

கர்த்தருடைய தரிசனத்தைக் காணவேண்டுமென்று ஆசாரியர், இஸ்ரவேல் சபையார் எல்லோரும் ஆவலாய்க் காத்திருக்கிறார்கள். கர்த்தரும் தம்முடைய தரிசனத்தை அவர்களுக்கு காண்பிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய தரிசனத்தைக் காண்பதற்கு மோசே அவர்கள் எல்லோரையும் ஆயத்தம்பண்ணுகிறார். அதற்காக மோசே, எட்டாம் நாளிலே ஆரோனையும் அவருடைய குமாரரையும் இஸ்ரவேலின் மூப்பரையும் அழைக்கிறார் (லேவி 9:1).

"எட்டாம் நாள்" என்பது ஏழுநாள் பிரதிஷ்டைக்குப் பின்பு வரும் எட்டாம் நாள் ஆகும். (லேவி 8:31-36) பிரதிஷ்டையின் ஏழுநாட்கள் எந்தக் கிழமையில் ஆரம்பித்து இருந்தாலும் அதில் ஒரு ஓய்வுநாளும் வந்திருக்கும். ஓய்வுநாளில் ஒருவேலையும் செய்யக்கூடாது என்பது உலகப்பிரகாரமான வேலையைக் குறிக்கும். ஓய்வுநாளில் செய்ய வேண்டிய வேலையை ஓய்வுநாளுக்கு முந்திய நாளிலோ அல்லது பிந்திய நாளிலோ செய்து கொள்ளலாம். ஓய்வுநாளில் கர்த்தரை ஆராதனை செய்வதில் எந்தத் தடையும் இல்லை. ஏழாம் நாளிலும் ஆராதனை நடைபெறுகிறது. எட்டாம் நாளிலும் ஆராதனை நடைபெறுகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் எட்டாம் நாளைப்பற்றி ஒரு சில கட்டளைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மிருகஜீவன்களில் ஆண்தலையீற்றுகளை எட்டாம் நாளில் தேவனுக்குக் கொடுக்க வேண்டும். (யாத் 22:30).

2. ஆசாரியர் எட்டாம் நாளில் ஊழியத்தை ஆரம்பிக்கவேண்டும் (லேவி 9:1).

3. எட்டாம் நாளில் இஸ்ரவேலின் ஆண்மக்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டும் (லேவி 12:3).

4. குஷ்டரோகிகள் எட்டாம் நாளில் சுத்திகரிப்பு செய்ய வேண்டும் (லேவி 14:10,23).

5. எட்டாம் நாளில் பிரமியமுள்ளவன் சுத்திகரிப்பு செய்ய வேண்டும் (லேவி 15:14-15).

6. எட்டாம் நாளில் உதிர ஊறல் உள்ளவள் சுத்திகரிப்பு செய்ய வேண்டும். (லேவி 15:29).

7. கூடாரங்களின் பண்டிகையின்போது எட்டாம் நாள் சபை கூடும் பரிசுத்த நாளாகும். (லேவி 23:36,39; எண் 9:35).

8. நசரேயனுடைய கடைசி சடங்குகள் எட்டாம் நாளில் நிறைவேற்றப்படும். (எண் 6:10).

ஆரோன் கர்த்தருக்கு செலுத்தவேண்டிய தன்னுடைய பலிகளை ஆயத்தம்பண்ணவேண்டும். மோசே ஆரோனை நோக்கி, "நீ பாவநிவாரண பலியாகப் பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், சர்வாங்க தகனபலியாகப் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் தெரிந்து கொண்டு, கர்த்தருடைய சந்நிதியில் பலியிடக்கடவாய்" (லேவி 9:2) என்று சொல்லுகிறார்.

ஆரோன் தன்னுடைய பாவநிவாரண பலியாக பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியை கர்த்தருக்கு பலி செலுத்தவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலிருந்தபோது, ஆரோன் அவர்களுக்கு ஒரு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து கொடுத்தார். இது ஆரோனுடைய பாவம். அவருடைய பாவம் நிவிர்த்தி பண்ணப்படவேண்டும். ஆரோன் பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், அவருடைய பாவத்தை நிவிர்த்திபண்ணுவதற்கு, பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியை பாவநிவாரண பலியாக செலுத்தவேண்டும் என்று மோசே சொல்லுகிறார்.

ஆரோன் தனக்கு பாவநிவாரண பலியை செலுத்துவதுபோல, ஆரோனுடைய குமாரரும், இஸ்ரவேல் புத்திரரும், தங்களுடைய பாவநிவாரண பலிகளை செலுத்துவதற்கு ஆயத்தம்பண்ணவேண்டும். அவர்கள் எல்லோரும் பாவநிவாரண பலிகளை கொண்டு வரவேண்டும் என்று ஆரோன் அவர்களிடத்தில் சொல்லவேண்டும்.

மோசே ஆரோனை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: கர்த்தருடைய சந்நிதியில் பலியிடும்படிக்கு, நீங்கள் பாவநிவாரணபலியாகப் பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக்கடாவையும், சர்வாங்க தகனபலியாக ஒரு வயதான பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், ஒரு ஆட்டுக்குட்டியையும், சமாதானபலிகளாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், எண்ணெயிலே பிசைந்த போஜனபலியையும் கொண்டுவாருங்கள் என்று சொல்" (லேவி 9:3,4) என்று சொல்லுகிறார்.

ஆரோன் முதலாவதாக தன்னுடைய பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்கு பாவநிவாரண பலியை செலுத்தவேண்டும். தன்னுடைய பாவம் நிவிர்த்தி பண்ணப்பட்ட பின்பு, ஆரோன் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு, அவர்களுக்காக பாவநிவாரண பலிகளை செலுத்தவேண்டும்.

மோசே ஆரோனை நோக்கி, "நீ பலிபீடத்தண்டையில் சேர்ந்து, கர்த்தர் கட்டளையிட்டபடியே, உன் பாவநிவாரணபலியையும் உன் சர்வாங்க தகனபலியையும் செலுத்தி, உனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, ஜனங்களுடைய பலியையும் செலுத்தி, அவர்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்" (லேவி 9:7) என்று சொல்லுகிறார்.

பிரதான ஆசாரியர் தன்னுடைய பாவத்திற்காக பாவநிவாரண பலியை செலுத்துகிறார். அவர் ஆசாரியராகயிருந்தாலும், பாவிகளில் ஒருவராகயிருக்கிறார். பிரதான ஆசாரியரும் பாவிகளோடு சேர்ந்து, அவர்களுடைய பாவங்களுக்கு பங்காளியாயிருக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே மகாபிரதான ஆசாரியர். அவரிடத்தில் ஒரு பாவமும் இல்லை. அவர் பாவம் அறியாதவர். கிறிஸ்துவானவர் பாவிகளிடமிருந்து வேறுபிரிக்கப்பட்டிருக்கிறார். ஆகையினால் கிறிஸ்துவுக்கு பாவநிவாரணம் தேவையில்லை.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையிலே, தம்மையே பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவானவர் தம்முடைய பாவத்திற்காக சிலுவையில் மரிக்கவில்லை. அவரிடத்தில் பாவம் ஒன்றுமில்லை. அவர் உலகத்தாரின் பாவங்களை தம்மீது ஏற்றுக்கொண்டு, மனுபுத்திரருடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக, கல்வாரி சிலுவையிலே பாவநிவாரண பலியாக மரித்தார்.

ஆரோன் தனக்காக பாவநிவிர்த்தி செய்த பின்பு, அவர் இஸ்ரவேல் ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்யவேண்டும். ஆரோன் இஸ்ரவேல் சபையாருடைய பலிகளை செலுத்தி, அவர்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்யவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களுக்காக பாவநிவிர்த்தி செய்யப்படுவதை கர்த்தர் அங்கீகரிக்கிறார். அது மாத்திரமல்ல அவர்களுக்காக பாவநிவிர்த்தி பண்ணப்படவேண்டும் என்றும் கர்த்தர் கட்டளையிடுகிறார்.

ஆகையினால் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவாரண பலிகளை செலுத்தும்போது, தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுமா என்று சந்தேகப்படவேண்டிய அவசியமில்லை. கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். கர்த்தர் தாமே, "ஜனங்களுடைய பலியையும் செலுத்தி, அவர்களுக்காக பாவநிவிர்த்தி செய்" என்று கட்டளை கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம், ஜனங்களுக்காக பலிகள் செலுத்தப்படும்போது, அவர்களுடைய பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்.

தங்களுடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படுவதற்காக, இஸ்ரவேல் புத்திரர் பாவநிவாரண பலிகளையும், சமாதான பலிகளையும், போஜனபலிகளையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரவேண்டுமென்று மோசே அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார்.

மோசே கட்டளையிட்டவைகளை அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாகக் கொண்டுவருகிறார்கள். சபையார் எல்லாரும் சேர்ந்து, கர்த்தருடைய சந்நிதியில் நிற்கிறார்கள் (லேவி 9:5).

அப்பொழுது மோசே அவர்களை நோக்கி, "கர்த்தர் கட்டளையிட்ட இந்தக் காரியத்தைச் செய்யுங்கள்; கர்த்தருடைய மகிமை உங்களுக்குக் காணப்படும்" (லேவி 9:6) என்று சொல்லுகிறார்

மோசே இதுவரையிலும் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்து வந்தார். இப்போது ஆசாரியர்கள் ஊழியம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஆசாரியரின் முதலாவது ஊழியத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பாவநிவாரண பலியாகப் பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், சர்வாங்க தகனபலியாகப் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் தெரிந்து கொண்டு, கர்த்தருடைய சந்நிதியில் பலியிடவேண்டும் (லேவி 9:1-2).

2. இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: கர்த்தருடைய சந்நிதியில் பலியிடும்படிக்கு, நீங்கள் பாவநிவாரணபலியாகப் பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக்கடாவையும், சர்வாங்க தகனபலியாக ஒரு வயதான பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், ஒரு ஆட்டுக்குட்டியையும், சமாதானபலிகளாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், எண்ணெயிலே பிசைந்த போஜனபலியையும் கொண்டுவாருங்கள்; இன்று கர்த்தர் உங்களுக்குத் தரிசனமாவார் என்று சொல்ல வேண்டும் (லேவி 9:3-4).

3. ஆரோன் பலிபீடத்தண்டையில் சேர்ந்து, கர்த்தர் கட்டளையிட்டபடியே, தன் பாவநிவாரணபலியையும் தன் சர்வாங்க தகனபலியையும் செலுத்த வேண்டும். (லேவி 9:7).

4. ஆரோன் தனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, ஜனங்களுடைய பலியையும் செலுத்தி, அவர்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்ய வேண்டும். (லேவி 9:7).

ஆரோன் செலுத்திய பலிகள் லேவி 9:8-22

லேவி 9:8. அப்பொழுது ஆரோன் பலிபீடத்தண்டையில் சேர்ந்து, தன் பாவநிவாரணபலியாகிய கன்றுக்குட்டியைக் கொன்றான்.

லேவி 9:9. ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவனிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவன் தன் விரலை அந்த இரத்தத்தில் தோய்த்து, பலிபீடத்தின் கொம்புகளின் மேல் பூசி, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியிலே ஊற்றி,

லேவி 9:10. பாவநிவாரணபலியின் கொழுப்பையும், குண்டிக்காய்களையும், கல்லீரலில் எடுத்த ஜவ்வையும், கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, பலிபீடத்தின் மேல் தகனித்து,

லேவி 9:11. மாம்சத்தையும் தோலையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியிலே சுட்டெரித்தான்.

லேவி 9:12. பின்பு சர்வாங்க தகனபலியையும் கொன்றான்; ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவனிடத்தில் கொண்டுவந்தார்கள்; அதை அவன் பலி பீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்தான்.

லேவி 9:13. சர்வாங்க தகனபலியின் துண்டங்களையும் தலையையும் அவனிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவன் அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனித்து,

லேவி 9:14. குடல்களையும் தொடைகளையும் கழுவி, பலி பீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியின்மேல் தகனித்தான்.

லேவி 9:15. பின்பு அவன் ஜனங்களின் பலியைக் கொண்டுவந்து, ஜனங்களின் பாவநிவிர்த்திக்குரிய வெள்ளாட்டுக்கடாவைக் கொன்று, முந்தினதைப் பலியிட்டது போல, அதைப் பாவநிவாரணபலியாக்கி,

லேவி 9:16. சர்வாங்க தகனபலியையும் கொண்டு வந்து, நியமத்தின்படி அதைப் பலியிட்டு,

லேவி 9:17. போஜனபலியையும் கொண்டுவந்து, அதில் கைநிறைய எடுத்து, அதைக் காலையில் செலுத்தும் சர்வாங்க தகனபலியுடனே பலி பீடத்தின்மேல் தகனித்தான்.

லேவி 9:18. பின்பு ஜனங்களின் சமாதானபலிகளாகிய காளையையும் ஆட்டுக்கடாவையும் கொன்றான்; ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவனிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவன் அதைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து,

லேவி 9:19. காளையிலும் ஆட்டுக்கடாவிலும் எடுத்த கொழுப்பையும், வாலையும், குடல்களை மூடிய ஜவ்வையும், குண்டிக்காய்களையும், கல்லீரலின்மேல் இருந்த ஜவ்வையும் கொண்டுவந்து,

லேவி 9:20. கொழுப்பை மார்க்கண்டங்களின் மேல் வைத்தார்கள்; அந்தக் கொழுப்பைப் பலிபீடத்தின்மேல் தகனித்தான்.

லேவி 9:21. மார்க்கண்டங்களையும் வலது முன்னந்தொடையையும், மோசே கட்டளையிட்டபடியே, ஆரோன் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டினான்.

லேவி 9:22. பின்பு ஆரோன் ஜனங்களுக்கு நேராகத் தன் கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்து, தான் பாவநிவாரணபலியையும், சர்வாங்க தகனபலியையும், சமாதான பலிகளையும் செலுத்தின இடத்திலிருந்து இறங்கினான்.

ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிறார்கள். மோசே இதுவரையிலும் கர்த்தருடைய சந்நிதியில் பலிகளை செலுத்தினார். ஆரோனை பிரதான ஆசாரியராக பிரதிஷ்டைபண்ணுவதற்கு முன்பாக, மோசே ஆசாரிய ஊழியம் செய்தார். இப்போது ஆரோன் ஆசாரிய ஊழியத்தை ஆரம்பிக்கிறார். லேவியருடைய ஆசாரிய ஊழியம் ஆரம்பமாகிறது.

ஆரோன் பலிபீடத்தண்டையில் சேர்ந்து, தன் பாவநிவாரணபலியாகிய கன்றுக்குட்டியைக் கொல்லுகிறார் (லேவி 9:8). ஆரோன் இந்தக் கன்றுக்குட்டியை தன்னுடைய சொந்தக் கைகளினால் கொல்லுகிறார். கன்றுக்குட்டியை கொல்லுவது பிரதான ஆசாரியருடைய வேலையல்ல. இந்த வேலையை பிரதான ஆசாரியருக்கு கீழே பணிபுரியும் மற்ற ஆசாரியர்கள் செய்யவேண்டும். ஆனால் பிரதான ஆசாரியனாகிய ஆரோனே இப்போது, தன் பாவநிவாரண பலியாகிய கன்றுக்குட்டியை, தன்னுடைய சொந்தக் கைகளினால் கொல்லுகிறார்.

இதுவரையிலும் மோசே கர்த்தருடைய சந்நிதியில் சகலவிதமான பலிகளையும் செலுத்தினார். இப்போது அந்தப் பலிகளை ஆரோன் செலுத்துகிறார். ஆரோன் சர்வாங்க தகனபலிகளையும், மற்ற பலிகளையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்து, அவையெல்லாவற்றையும் நியமத்தின்படி பலியிடுகிறார் (லேவி 9:16).

அப்பொழுது ஆரோன் பலிபீடத்தண்டையில் சேர்ந்து, தன் பாவநிவாரணபலியாகிய கன்றுக்குட்டியைக் கொல்லுகிறார். ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவரிடத்தில் கொண்டுவருகிறார்கள்; ஆரோன் தன் விரலை அந்த இரத்தத்தில் தோய்த்து, பலிபீடத்தின் கொம்புகளின் மேல் பூசி, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியிலே ஊற்றுகிறார் (லேவி 9:8,9).

ஆரோன் தன் விரலை அந்த இரத்தத்தில் தோய்க்கிறார். பின்பு பலிபீடத்தின் கொம்புகளின் மேல் பூசி, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியிலே ஊற்றுகிறார். சாதாரண பிரமாணத்தைப் போல ஆரோன் இதை செயல்படுத்தவில்லை. (லேவி 4:5-7,16-18) பிரதிஷ்டையின்போது மோசே பாவநிவாரண பலி செலுத்தியதுபோல ஆரோன் செயல்படுகிறார் (லேவி 8:15). பரிசுத்த ஸ்தலத்தில் ஆரோன் இன்னும் பிரதான ஆசாரியனாக அறிமுகம் செய்து வைக்கப்படவில்லை (லேவி 9:23).

ஆரோன் பாவநிவாரணபலியின் கொழுப்பையும், குண்டிக்காய்களையும், கல்லீரலில் எடுத்த ஜவ்வையும், கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, பலிபீடத்தின் மேல் தகனிக்கிறார். ஆரோன் மாம்சத்தையும் தோலையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியிலே சுட்டெரிக்கிறார் (லேவி 9:10-11).

ஆரோன் பாவநிவாரண பலியின் மாம்சத்தையும் தோலையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியில் சுட்டெரிக்கிறார். எல்லா சாபமும் பதிலீடாகப் பலியிடப்பட்ட மிருகஜீவன்மீது விழுகிறது. முழுபலியும் தகனிக்கப்பட்டால் மட்டுமே பாவநிவாரணம் பூர்த்தியாகும். ஆகையினால் இங்கு மாம்சமும், தோலும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியில் சுட்டெரிக்கப்படுகிறது (லேவி 9:10; எபி 13:11-13).

பின்பு ஆரோன் சர்வாங்க தகனபலியையும் கொல்லுகிறார்; ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவரிடத்தில் கொண்டுவருகிறார்கள்; அதை ஆரோன் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கிறார் (லேவி 9:12).

ஆரோனின் குமாரர் சர்வாங்க தகனபலியின் துண்டங்களையும் தலையையும் அவனிடத்தில் கொண்டுவருகிறார்கள்; ஆரோன் அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனிக்கிறார். அவர் குடல்களையும் தொடைகளையும் கழுவி, பலிபீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியின்மேல் தகனிக்கிறார் (லேவி 9:13,14).

ஆரோன் அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனிக்கிறார். ஆரோன் தன்னுடைய பாவநிவாரண பலியாக இதைச் செய்கிறார். ஒவ்வொரு பாவத்திற்கும் பாவநிவாரண பலி செலுத்தப்படவேண்டும். சர்வாங்க தகனபலி பொதுவான குற்றங்களுக்கும், மூலபாவத்திற்கும் செலுத்தப்படும். கிறிஸ்து எல்லாருடைய எல்லாப் பாவங்களையும் நிவாரணம் பண்ணுவதற்குப் போதுமானவராக இருக்கிறார் என்பதற்கு இது அடையாளமாகும். (யோவான் 1:29; 1பேதுரு 2:24).

ஆரோனுடைய குமாரரின் நடபடிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை ஆரோனிடத்தில் கொண்டுவருகிறார்கள்.

2. ஆரோனின் குமாரர் சர்வாங்க தகனபலியின் இரத்தத்தை ஆரோனிடத்தில் கொண்டு வருகிறார்கள்; (லேவி 9:12).

3. ஆரோனின் குமாரர் சர்வாங்க தகனபலியின் துண்டங்களையும் தலையையும் ஆரோனிடத்தில் கொண்டு வருகிறார்கள் (லேவி 9:13).

4. ஆரோனின் குமாரர் சமாதானபலியின் இரத்தத்தை ஆரோனிடத்தில் கொண்டு வருகிறார்கள்; (லேவி 9:18) கொழுப்பையும், வாலையும், ஜவ்வையும், பலிபீடத்திற்குக் கொண்டுவருகிறார்கள் (லேவி 9:19-20).

ஆரோனின் குமாரர் பலிசெலுத்துவதிலும், மாம்சத்தைத் துண்டங்களாக வெட்டுவதிலும் பாத்திரங்களில் இரத்தத்தைப் பிடிப்பதிலும் உதவி செய்திருக்க வேண்டும். ஆரோன் அவர்களுடைய எல்லா வேலைகளையும் மேற்பார்வையிட்டு, பிரதான ஆசாரியருக்குரிய எல்லா ஊழியங்களையும் செய்திருப்பார்.

பின்பு ஆரோன் ஜனங்களின் பலியைக் கொண்டுவந்து, ஜனங்களின் பாவநிவிர்த்திக்குரிய வெள்ளாட்டுக்கடாவைக் கொன்று, முந்தினதைப் பலியிட்டது போல, அதைப் பாவநிவாரணபலியாக்கி, சர்வாங்க தகனபலியையும் கொண்டு வந்து, நியமத்தின்படி அதைப் பலியிடுகிறார். அவர் போஜனபலியையும் கொண்டுவந்து, அதில் கைநிறைய எடுத்து, அதைக் காலையில் செலுத்தும் சர்வாங்க தகனபலியுடனே பலிபீடத்தின்மேல் தகனிக்கிறார் (லேவி 9:15-17).

ஆரோன் தன்னுடைய பாவநிவிர்த்திக்குப் பாவநிவாரண பலி செலுத்திய பின்பு (லேவி 9:8-14) இஸ்ரவேல் ஜனங்களின் பாவநிவிர்த்திக்குப் பாவநிவாரண பலி செலுத்துகிறார். சர்வாங்க தகனபலி பூரண கீழ்ப்படிதலுக்கு அடையாளம். (லேவி 9:16) போஜனபலி ஸ்தோத்திரம் பண்ணுவதற்கு அடையாளம். (லேவி 9:17) சமாதான பலி தேவனோடு ஐக்கியமாக இருப்பதற்கு அடையாளம் (லேவி 9:18-21).

பின்பு ஆரோன் ஜனங்களின் சமாதானபலிகளாகிய காளையையும் ஆட்டுக்கடாவையும் கொல்லுகிறார்; ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவரிடத்தில் கொண்டுவருகிறார்கள்; அவர் அதைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கிறார் (லேவி 9:18).

ஆரோனின் குமாரர் காளையிலும் ஆட்டுக்கடாவிலும் எடுத்த கொழுப்பையும், வாலையும், குடல்களை மூடிய ஜவ்வையும், குண்டிக்காய்களையும், கல்லீரலின்மேல் இருந்த ஜவ்வையும் கொண்டுவந்து, கொழுப்பை மார்க்கண்டங்களின் மேல் வைக்கிறார்கள்; ஆரோன் அந்தக் கொழுப்பைப் பலிபீடத்தின்மேல் தகனிக்கிறார் (லேவி 9:19,20).

பின்பு மார்க்கண்டங்களையும் வலது முன்னந்தொடையையும், மோசே கட்டளையிட்டபடியே, ஆரோன் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டுகிறார் (லேவி 9:21).

நியமத்தின்படி எல்லா பலிகளையும் செலுத்திய பின்பு, ஆரோன் ஜனங்களுக்கு நேராகத் தன் கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதிக்கிறார். ஜனங்களை எப்பொழுது ஆசீர்வதிக்கவேண்டும் என்பதை ஆரோனே தீர்மானம்பண்ணுகிறார். அவர் தன் கைகளை உயர்த்தி ஜனங்களை ஆசீர்வதிக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்கள்மீது வந்து தங்கும். கர்த்தருடைய சிங்காசனம் பரலோகத்தில் இருக்கிறது. ஆரோன் தன் கைகளை உயர்த்தி இஸ்ரவேல் ஜனங்களை ஆசீர்வதிக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதம் பரலோகத்திலிருந்து இறங்கி வருகிறது.

ஆரோன் தன் கைகளை உயர்த்தி ஜனங்களை ஆசீர்வதித்தாலும், மெய்யான ஆசீர்வாதம் கர்த்தரிடத்திலிருந்தே வருகிறது. கர்த்தர் ஆசீர்வதிக்கும் ஆசீர்வாதமே தங்கியிருக்கும். ஆரோன் தன் கைகளை உயர்த்தி ஜனங்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்று கர்த்தரே அவருக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். ஆரோனும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து இஸ்ரவேல் ஜனங்களை ஆசீர்வதிக்கிறார்.

ஆரோன் தன் கைகளை உயர்த்தி ஜனங்களை ஆசீர்வதிக்கும்போது, ஆசீர்வாதம் பரலோகத்திலிருந்து இறங்கி வருகிறது. கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷர்களை ஆசீர்வதித்து, பரலோகத்திற்கு ஏறிப்போனார்.

ஆரோன் தன் கைகளை உயர்த்தி ஜனங்களை ஆசீர்வதித்த பின்பு தான் பாவநிவாரணபலியையும், சர்வாங்க தகனபலியையும், சமாதான பலிகளையும் செலுத்தின இடத்திலிருந்து இறங்குகிறார் (லேவி 9:22).

ஆரோன் ஜனங்களுக்கு நேராகத் தன் கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதிக்கிறார். ஆசாரியர் ஆசாரிய ஊழியம் செய்த பின்பு, தங்களுடைய கைகளை உயர்த்தி, ஜனங்களை ஆசீர்வதிப்பது வழக்கம். ஆசீர்வதிக்கும்போது ஆசாரியர் என்ன கூறினார்கள் என்பது தெரியவில்லை.

எண் 6:24-26 ஆகிய வசனங்களில் ஆசாரியர் கூறவேண்டுமென்று நியமிக்கப்பட்டிருக்கிற வாக்கியத்தை அவர்கள் கூறியிருக்கலாம். (2நாளா 6:3-11; சங் 90:17). யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம் ஆசாரியர் ஜனங்களை "உங்களுடைய பலிகள் ஏற்றுக் கொள்ளப்படுவதாக. கர்த்தர் உங்கள் மத்தியில் வாசம்பண்ணுவாராக. அவர் உங்கள் பாவங்களை மன்னிப்பாராக" என்று கூறி ஆசீர்வதிப்பார்கள்.

ஆரோன் பலிகளை செலுத்தின இடத்திலிருந்து இறங்குகிறார். பலிபீடத்தில் ஆசாரியர் நிற்பதற்காக ஒரு மேடை இருக்கும். அதிலிருந்து சர்வாங்க தகனபலிகளை ஆசாரியர்கள் செலுத்துவாகள். ஆரோன் அதிலிருந்து இறங்குகிறார் (யாத் 27:5).

லேவி 9-ஆவது அதிகாரத்தில் ஆரோனுடைய நடபடிகளைப்பற்றி விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஆரோன் பலிபீடத்தண்டையில் சேருகிறார் (லேவி 9:8).

2. தன் பாவநிவாரணபலியாகிய கன்றுக் குட்டியைக் கொல்லுகிறார் (லேவி 9:8; எபி 5:1-4; எபி 7:27-28).

3. ஆரோன் தன் விரலை பாவநிவாரணபலியின் இரத்தத்தில் தோய்த்து, பலிபீடத்தின் கொம்புகளின் மேல் பூசுகிறார் (லேவி 9:9).

4. மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியிலே ஊற்றுகிறார்.

5. பாவநிவாரணபலியின் கொழுப்பையும், குண்டிக்காய்களையும், கல்லீரலில் எடுத்த ஜவ்வையும், பலிபீடத்தின் மேல் தகனிக்கிறார் (லேவி 9:10).

6. மாம்சத்தையும் தோலையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியிலே சுட்டெரிக்கிறார் (லேவி 9:11).

7. ஆரோன் சர்வாங்க தகனபலியைக் கொல்லுகிறார் (லேவி 9:12).

8. ஆரோன் சர்வாங்க தகனபலியின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கிறார்.

9. சர்வாங்க தகனபலியின் துண்டங்களையும் தலையையும் பலிபீடத்தின்மேல் தகனிக்கிறார் (லேவி 9:13).

10. குடல்களையும் தொடைகளையும் கழுவுகிறார் (லேவி 9:14).

11. அவைகளைப் பலிபீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியின்மேல் தகனிக்கிறார்.

12. ஆரோன் ஜனங்களின் பாவநிவாரண பலியை வெண்கல பலிபீடத்திற்குக் கொண்டு வருகிறார் (லேவி 9:15).

13. ஜனங்களின் பாவநிவிர்த்திக்குரிய வெள்ளாட்டுக்கடாவை ஆரோன் கொன்று, முந்தினதைப் பலியிட்டது போல, அதைப் பாவநிவாரண பலியாக்குகிறார்.

14. சர்வாங்க தகனபலியையும் கொண்டு வந்து, நியமத்தின்படி ஆரோன் அதைப் பலியிடுகிறார் (லேவி 9:16).

15. போஜனபலியையும் கொண்டுவந்து, அதில் கைநிறைய எடுத்து, அதைக் காலையில் செலுத்தும் சர்வாங்க தகனபலியுடனே பலிபீடத்தின்மேல் தகனிக்கிறார் (லேவி 9:17).

16. ஆரோன் ஜனங்களின் சமாதானபலிகளாகிய காளையையும் ஆட்டுக்கடாவையும் கொல்லுகிறார் (லேவி 9:18).

17. ஆரோன் அவைகளின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கிறார்.

18. ஆரோன் கொழுப்பையும், வாலையும், குடல்களை மூடிய ஜவ்வையும், குண்டிக்காய்களையும், கல்லீரலின்மேல் இருந்த ஜவ்வையும் கொண்டுவந்து, அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனிக்கிறார் (லேவி 9:19-20).

19. ஆரோன் கர்த்தருடைய சந்நிதியில் மார்க்கண்டங்களையும் வலது முன்னந்தொடையையும் அசைவாட்டும் பலியாக அசைவாட்டுகிறார் (லேவி 9:21).

20. ஆரோன் ஜனங்களுக்கு நேராகத் தன் கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதிக்கிறார் (லேவி 9:22).

21. ஆரோன் பலிகளைச் செலுத்தின பலிபீடத்திலிருந்து இறங்குகிறார்.

கர்த்தருடைய மகிமை லேவி 9:23,24

லேவி 9:23. பின்பு மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக்கூடாரத்துக்குள் பிரவேசித்து, வெளியே வந்து, ஜனங்களை ஆசீர்வதித்தார்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்பட்டது.

லேவி 9:24. அன்றியும் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, பலிபீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியையும் கொழுப்பையும் எரித்துவிட்டது; ஜனங்களெல்லாரும் அதைக் கண்டபோது ஆரவாரித்து முகங்குப்புற விழுந்தார்கள்.

மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறார்கள் (லேவி 9:23). ஆனால் அவர்கள் அங்கே எதற்காக பிரவேசித்தார்கள் என்பது பற்றியோ, அங்கு என்ன செய்தார்கள் என்பது பற்றியோ இந்த வசனப்பகுதியில் சொல்லப்படவில்லை. கர்த்தருடைய தெய்வீக மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்படவேண்டும் என்று ஜெபம்பண்ணுவதற்காக அவர்கள் இருவரும் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசித்ததாக யூதமார்க்கத்து ரபீமார்கள் சொல்லுகிறார்கள்.

பிராகாரத்திலுள்ள வெண்கல பீடத்தில் இதுவரையிலும் ஆரோன் பலிசெலுத்திக் கொண்டிருந்தார். இப்பொழுது மோசே ஆரோனை ஆசரிப்புக் கூடாரத்திற்குள் அழைத்துச் செல்கிறார். பரிசுத்த ஸ்தலத்தில் ஆரோனின் ஆசாரிய ஊழியத்தைப் பற்றி எடுத்துக் கூறுவதற்காக மோசே ஆரோனை அங்கு அழைத்துச் சென்றிருக்கலாம்.

மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து வெளியே வந்து, ஜனங்களை ஆசீர்வதிக்கிறார்கள். ஜனங்கள் எல்லோரும் கர்த்தருடைய சந்நிதியில் கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய மகிமையை காணவேண்டும் என்னும் ஆர்வத்தோடும், எதிர்பார்ப்போடும் அங்கே காத்திருக்கிறார்கள். "இன்று கர்த்தர் உங்களுக்கு தரிசனமாவார்" (லேவி 9:4) என்று இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குத்தத்தமாக சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், "கர்த்தருடைய மகிமை உங்களுக்கு காணப்படும்" (லேவி 9:6) என்று மோசேயும் சொல்லியிருக்கிறார்.

மோசேயும் ஆரோனும் ஜனங்களை ஆசீர்வதிக்கிறார்கள் (லேவி 9:23). இரண்டாம் முறையாக இந்தப் பகுதியில் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். முதலாவதாக ஆரோன் மட்டும் ஜனங்களை ஆசீர்வதித்தார். (லேவி 9:22) இப்போது ஆரோனும், மோசேயும் சேர்ந்து ஜனங்களை ஆசீர்வதிக்கிறார்கள்.

மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசித்து கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்படவேண்டும் என்று ஜெபம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கும் வண்ணமாக, கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்படுகிறது.

ஆரோன் கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவாரண பலிகளையும், சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும் செலுத்தியபோது கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்படவில்லை. ஆனால் மோசேயும் ஆரோனும் ஜெபம்பண்ணியபோது, கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்படுகிறது. பரிசுத்தவான்களின் ஜெபம் ஜீவனும் வல்லமையுமுள்ளது.

ஆவிக்குரிய ஆசாரியர்கள், கர்த்தரை துதிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய சமுகத்திலே ஸ்தோத்திரபலிகளையும் விண்ணப்பங்களையும் ஏறெடுக்கவேண்டும். சகலவிதமான காணிக்கைகளையும் பலிகளையும் விட, ஆவிக்கேற்ற ஆசாரியர்களின் ஜெபங்களும், துதிகளும், ஸ்தோத்திரங்களும் கர்த்தருக்கு பிரியமானதாயிருக்கிறது. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமே கர்த்தருக்கு ஆவிக்கேற்ற ஆசாரியர்களாயிருக்கிறோம்.

கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்படுகிறது. அந்த மகிமை எப்படியிருக்கிறது என்று அதைப்பற்றி இந்த வசனத்தில் விவரமாக சொல்லப்படவில்லை. கர்த்தருடைய மகிமையும் தோற்றமும் எப்படிப்பட்டது என்று நமக்கு தெரியவில்லை. ஆனாலும் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் கர்த்தருடைய மகிமையை பிரத்தியட்சமாய்க் காண்கிறார்கள். தாங்கள் காண்பது கர்த்தருடைய மகிமை என்பதை அவர்கள் எல்லோரும் அங்கீகரிக்கிறார்கள். கர்த்தருடைய ஆலயத்திலே நாம் விசுவாசத்தோடு தங்கியிருக்கும்போது, கர்த்தருடைய அழகை நாம் தரிசிப்போம்.

கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு வருகிறது. அது பலிபீடத்தின்மேல் இருக்கிற சர்வாங்க தகனபலியையும், கொழுப்பையும் எரித்துவிடுகிறது. இந்த அக்கினி பரலோகத்திலிருந்து வந்த அக்கினியா அல்லது மகாபரிசுத்த ஸ்தலத்திலிருந்து வந்த அக்கினியா அல்லது சகல ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாய்க் காணப்பட்ட கர்த்தருடைய மகிமையிலிருந்து புறப்பட்டு வந்த அக்கினியா என்பது தெரியவில்லை.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் செலுத்தின பலிகளை அங்கீகரித்திருக்கிறார் என்பதற்கு அடையாளமாக, கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, பலிபீடத்தின்மேல் இருக்கிற சர்வாங்க தகனபலியையும் கொழுப்பையும் எரித்துவிடுகிறது.

"அக்கினி எரித்துவிடுகிறது" என்னும் வாக்கியத்திற்கு, அக்கினி பட்சித்துப்போடுகிறது அல்லது அக்கினி புசித்துவிடுகிறது என்று பொருள் சொல்லலாம். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய சந்நிதியில் பலிகளை செலுத்தியிருக்கிறார்கள். அவர்கள் செலுத்தின பலிகளை கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு வந்த அக்கினி புசித்து விடுகிறது.

வெண்கல பலிபீடத்தில் எரிந்து கொண்டிருக்கும் அக்கினியைக் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு வந்த அக்கினி முதலாவதாக எரித்தது என்று யூதருடைய பாரம்பரிய வரலாறு கூறுகிறது. சாலொமோன் கட்டிய தேவாலயம் பிரதிஷ்டை பண்ணப்படும் வரையிலும் இந்த அக்கினி எரிந்தது என்றும், அப்போது மறுபடியும் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு வந்தது என்றும் யூதருடைய வரலாறு கூறுகிறது (2நாளா 7:1).

பலிபீடத்தில் ஏற்கெனவே அக்கினி எரிந்து கொண்டிருந்தது. (லேவி 8:16; லேவி 9:10,13; யாத் 40:29) இப்போது கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு வந்திருப்பது தேவனுடைய பிரசன்னத்தின் பிரத்தியட்சமான வெளிப்பாடாகும். கர்த்தர் பலிகளை அங்கிகரித்திருக்கிறார் என்பதற்கும் இது அடையாளம். (ஆதி 4:4; நியா 6:21; நியா 13:19-20; 1இராஜா 18:38; 1நாளா 21:26-28) தேவனுடைய பிரசன்னம் லேவி 9:4,6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் செலுத்தின பலிகளை அங்கீகரிக்கிறார். இதுவரையிலும் அவர்கள்மீது பற்றியெரிந்த தேவனுடைய கோபம் இப்போது தணிந்திருக்கிறது என்பதற்கு இது அடையாளம். கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்ட அக்கினி, அவர்கள் செலுத்தின பலிகளை பட்சித்துப்போட்டதினால், கர்த்தர் அவர்களுடைய பாவநிவாரண பலிகளை அங்கீகரித்து, அவர்களுடைய பாவங்களை நிவிர்த்தி செய்திருக்கிறார் என்பதற்கு இது அடையாளம்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தின பலிகளை, அவருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்ட அக்கினி எரித்துப்போட்டதினால், கர்த்தர் அவர்களோடு மறுபடியும் உடன்படிக்கை செய்திருக்கிறார் என்பதற்கும், அவர்களோடு ஐக்கியமாயிருக்கிறார் என்பதற்கும் இது அடையாளம்.

கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்ட அக்கினி, பலிபீடத்தின்மேல் வந்து தங்குகிறது. அந்த அக்கினி பலிபீடத்தை சூழ்ந்துகொள்கிறது. இது வரப்போகிற நன்மையான காரியங்களுக்கு அடையாளம். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் அப்போஸ்தலர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் அக்கினியாக இறங்கி வந்தார்.

"அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது" (அப் 2:3).

பரிசுத்த அக்கினி நம்முடைய ஆத்துமாவில் இறங்கி வரும்போது, கர்த்தர்மீது நாம் வைத்திருக்கிற விசுவாசமும், பக்தியும் அதிகரிக்கும். நம்முடைய ஆத்துமாவில் காணப்படுகிற மாம்சத்தின் இச்சைகளை பரிசுத்த அக்கினி எரித்துப்போடும். கர்த்தர் நம்மையும், நம்முடைய ஊழியங்களையும் அங்கீகரிக்கிறார் என்பதற்கு, பரிசுத்த ஆவியானவரின் அக்கினி நம்மீது இறங்கி வருவது அடையாளமாயிருக்கிறது.

கர்த்தருடைய சந்நிதியில் கூடிவந்திருக்கிற இஸ்ரவேல் சபையார் எல்லோரும், கர்த்தருடைய மகிமையை பிரத்தியட்சமாய்க் காண்கிறார்கள். கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, பலிபீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியையும் கொழுப்பையும் எரித்து விடுகிறதையும் அவர்கள் பார்க்கிறார்கள்.

ஜனங்கள் எல்லோரும் கர்த்தருடைய மகிமையையும், கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்ட அக்கினியையும் கண்டபோது ஆரவாரித்து, முகங்குப்புற விழுகிறார்கள். தங்களுக்கு கர்த்தருடைய கிருபை கிடைத்திருக்கிறது என்பதை இஸ்ரவேல் ஜனத்தார் அறிந்து மிகுந்த சந்தோஷப்பட்டு ஆரவாரிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்குள் பரிசுத்தமான சந்தோஷம் கொண்டு, ஆர்ப்பரிந்து மகிழுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மிகுந்த சந்தோஷத்தினாலே ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி ஆரவாரிக்கிறார்கள். அவர்களுடைய ஆரவாரம், அவர்களுடைய இருதயத்தில் காணப்படுகிற சந்தோஷத்தின் மிகுதிக்கு அடையாளம்.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் கர்த்தருடைய மகிமையையும், அவருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்ட அக்கினியையும் கண்டபோது முகங்குப்புற விழுகிறார்கள். அவர்கள் மிகுந்த மனத்தாழ்மையோடு, கர்த்தர் மீதுள்ள தங்கள் பக்தியை வெளிப்படுத்துகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும், மாட்சிமையையும் கனம்பண்ணுகிறார்கள்.

கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தவான்கள் நிற்கும்போது அவர்களுடைய மனோபாவங்கள் வித்தியாசமாகயிருக்கும். கர்த்தர்மீது தாங்கள் வைத்திருக்கும் பக்தியையும் விசுவாசத்தையும் அவர்கள் ஒவ்வொரு விதமாக வெளிப்படுத்துவார்கள். பரிசுத்த வேதாகமத்தில் ஒரு சில மனோபாவங்களைபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. துதித்து ஆரவாரிப்பது

2. சத்தமிட்டு ஜெபிப்பது

3. பெருமூச்சுவிட்டு ஜெபிப்பது

4. அழுதுபுலம்பது

5. துக்கித்துப் புலம்புவது

6. நடனமாடுவது

7. கைதட்டுவதும் கைகளை உயர்த்துவதும்

8. நடுநடுங்குதலும், தத்தளித்தலும்

9. சாஷ்டாங்கமாய் விழுதல்

(1) தேவனுடைய பிரசன்னத்தில் மகிமையினால் சாஷ்டாங்கமாய் விழுதல்

(2) ஆராதனையிலும் ஜெபத்திலும் மனோ வாஞ்சையாய் சாஷ்டாங்கமாய் விழுதல்

(3) ஜெபத்தின் பாரத்தினால் சாஷ்டாங்கமாய் விழுதல்

மனோபாவங்களை வெளிப்படுத்துவது ஆசீர்வாதமோ, சாபமோ அல்ல. இவை மனுஷருடைய மனோபாவங்களின் விளைவே. மறுஜீவனில் உண்டாகும் மனோபாவங்களைப் பற்றி மத் 8:12; மத் 22:13; மத் 24:51; மத் 25:30; லூக்கா 13:28; லூக்கா 16:19-31 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

10 அதிகாரம்

ஆரோனின் குமாரராகிய நாதாப் அபியூ ஆகியோரின் பாவமும், அவர்களுடைய மரணமும் (லேவி 10:1,2). ஆரோன் ஒன்றும்பேசாமல் அமைதியாயிருக்கிறார் (லேவி 10:3).

மோசேயினுடைய வார்த்தையின்படியே நாதாபும் அபியூவும் அடக்கம்பண்ணப்படுகிறார்கள் (லேவி 10:4-7). ஆசாரியர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறபோது திராட்சரத்தையும் மதுவையும் குடிக்கக்கூடாது (லேவி 10:8-11). கர்த்தர் தங்களுக்கு நியமித்தபடியே ஆசாரியர்கள் கர்த்தருடைய சந்நிதியில் பலிகளை செலுத்தவேண்டும் (லேவி 10:12-20).

அந்நிய அக்கினி
லேவி 10:1,2

லேவி 10:1. பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள்.

லேவி 10:2. அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்.

ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் கர்த்தருக்கு விரோதமாக மிகப்பெரிய பாவம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் அந்நிய அக்கினியை கொண்டு வருகிறார்கள்.

ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவருகிறார்கள் (லேவி 10:1). இந்த சம்பவம் எண் 3:4-ஆவது வசனத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

மோசேயோடு எழுபதுபேர் சீனாய்மலைக்குச் சென்று அங்கு கர்த்தரோடு பந்தியிருந்தார்கள். (யாத் 24:1-11). அவர்களில் நாதாபும், அபியூவும் இருந்தார்கள். இவர்கள் இருவரும் சமீபத்தில்தான் ஆசாரிய ஊழியத்திற்காக வேறுபிரிக்கப்பட்டவர்கள். (லேவி 8:13-36) இவர்கள் தங்களை உயர்த்தியதினாலும், சுயபெருமையினாலும், மதுபானவெறியினாலும் பாவம் செய்தார்கள். அவர்கள் ஆசாரிய ஊழியத்தின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல் தவறுசெய்ததினால் கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்டு வந்த அக்கினி அவர்களை அழித்துப்போடுகிறது (லேவி 10:1-7).

மோசே ஆரோனையும் அவருடைய குமாரரையும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டை செய்திருக்கிறார். ஆரோனின் நான்கு குமாரர்களில், நாதாப், அபியூ ஆகிய இருவரும் தங்கள் மனதில் பெருமையுள்ளவர்களாயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்கள் இருவருக்கும் ஆசாரிய ஊழியத்தைக் கொடுத்து அவர்களைக் கனப்படுத்தியிருக்கிறார். ஆனால் நாதாபும் அபியூவுமோ கர்த்தரைக் கனம்பண்ணாமல், தங்களை கனம்பண்ணுகிறார்கள்.

ஆசாரியர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும். ஆனால் நாதாபும் அபியூவும் கர்த்தர் கட்டளையிடாததையும் செய்து தங்களுக்கு பெயரும் புகழும் உண்டாகவேண்டுமென்று நினைக்கிறார்கள். கர்த்தர் ஆசாரிய ஊழியத்தைப்பற்றி மோசேக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். மோசேயும் கர்த்தருடைய கட்டளைகளை ஆசாரியருக்கு தெளிவாக சொல்லியிருக்கிறார். நாதாபுக்கும் அபியூவுக்கும் கர்த்தருடைய கட்டளைகள் தெரியும். ஆனாலும் அவர்கள், கர்த்தர் தங்களுக்கு கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வருகிறார்கள்.

தம்முடைய சந்நிதியில் அந்நிய தூபத்தை படைப்பதை கர்த்தர் தடைபண்ணியிருக்கிறார். "அதின்மேல் அந்நிய தூபத்தையாகிலும், தகனபலியையாகிலும், போஜன பலியையாகிலும் படைக்கவேண்டாம்; அதின்மேல் பானபலியை ஊற்றவும்வேண்டாம்" (யாத் 30:9).

ஆனால் நாதாபும் அபியூவும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், தங்களுடைய சுயஇஷ்டத்தின் பிரகாரமும் சுயவிருப்பத்தின் பிரகாரமும் கர்த்தருக்கு ஊழியம் செய்யலாம் என்று நினைக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் அந்நிய அக்கினியை கொண்டு வந்தது, அவர்கள் அறியாமையினால் செய்த பாவமல்ல. அவர்கள் கர்த்தருடைய கட்டளையை அறிந்தும், துணிகரமாய் இந்தப் பாவத்தை செய்திருக்கிறார்கள்.

கர்த்தருடைய சந்நிதியில் அக்கினி எரிந்துகொண்டிருக்கிறது. அது பரிசுத்த அக்கினி. ஆசாரியர்கள் அந்த அக்கினியை மாத்திரம் பயன்படுத்தவேண்டும். ஆனால் நாதாபும் அபியூவுமோ கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்ட பரிசுத்தமான அக்கினியை பயன்படுத்தாமல், அந்நிய அக்கினியை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வருகிறார்கள். கர்த்தர் கட்டளையிட்டிருக்கிற பரிசுத்தமான அக்கினியை மாத்திரமே, பலிபீடத்திலே பலிகளை சர்வாங்கமாக தகனிப்பதற்கும், தூபபீடத்திலே தூபங்களை எரிப்பதற்கும் பயன்படுத்தவேண்டும்.

"பின்பு, அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின" (வெளி 8:5).

நாதாபும் அபியூவும் பலிபீடத்திலுள்ள பரிசுத்தமான அக்கினியை பயன்படுத்தாமல், சமாதான பலிகளை வேவிப்பதற்கு பயன்படுத்தப்படும் பொதுவான அக்கினியை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வருகிறார்கள். அவர்கள் இருவரும் இந்த அந்நிய அக்கினியை தூபகலசத்தின்மேல் போட்டு அதின்மேல் தூபத்தையும் போடுகிறார்கள். இந்த அக்கினியானது பரிசுத்தமான அக்கினியல்ல. கர்த்தர் இதை அந்நிய அக்கினி என்று சொல்லுகிறார்.

கர்த்தருக்கு தூபங்காட்டும்போது, ஒரு ஆசாரியர் மாத்திரமே தூபங்காட்டவேண்டும். ஒரு ஆசாரியர் மாத்திரம் தன் கையில் தூபகலசத்தைப் பிடித்திருக்கவேண்டும். ஆனால் இங்கே இவர்கள் இருவரும் தன் தன் கையிலே, ஆளுக்கு ஒரு தூபகலசத்தை பிடித்துக்கொண்டு நிற்கிறார்கள். அவர்கள் இருவரும் தன் தன் தூபகலசத்தை எடுத்துக்கொண்டு, அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்கு கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வருகிறார்கள்.

கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் பயபக்தியோடும், பரிசுத்தத்தோடும் செய்யவேண்டும். கர்த்தர் தங்களுக்கு நியமித்திருக்கிற பிரகாரம், கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அவருக்கு ஆசாரிய ஊழியம் செய்யவேண்டும். ஆனால் நாதாபும் அபியூவுமோ கர்த்தர்மீது பக்தியில்லாமல், அவசரப்பட்டு, கர்த்தருடைய கட்டளையை தியானித்துப் பார்க்காமல், தங்களுடைய சுயவிருப்பம்போல அவருடைய சந்நிதியில் பிரவேசிக்கிறார்கள்.

கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்படுகிறது. கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, பலிபீடத்தின் மேலிருந்த சர்வாங்க தகனபலியையும், கொழுப்பையும் எரித்துவிடுகிறது. ஜனங்கள் எல்லோரும் அதைக் கண்டபோது ஆரவாரித்து, முகங்குப்புற விழுந்து கிடக்கிறார்கள் (லேவி 9:23,24). ஆனால் ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவுமோ, கர்த்தர் தங்களுக்கு கட்டளையிடாத அந்நிய அக்கினியை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வருகிறார்கள்.

நாதாபும் அபியூவும் திராட்சரசமும் மதுபானமும் பானம்பண்ணி வெறித்திருப்பதற்கும் வாய்ப்புள்ளது. அவர்கள் குடிபோதையிலே கர்த்தருடைய சந்நிதியில் பிரவேசிக்கிறார்கள். ஆசாரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறபோது ஆசாரியர்கள் திராட்சரசத்தையும், மதுபானத்தையும் குடிக்கவேண்டாம் என்று கர்த்தர் விசேஷமாய்க் கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் ஆரோனை நோக்கி, "நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் சாகாதிருக்கவேண்டுமானால், ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கிறபோது, திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்கவேண்டாம்" (லேவி 10:8,9) என்று சொல்லுகிறார்.

ஆசாரியர் சமாதான பலிகளின் மாம்சத்தைப் புசிக்கவேண்டும். அது பரிசுத்தமான மாம்சம். ஆசாரியர்கள் அந்த மாம்சத்தை பரிசுத்தத்தோடு புசிக்கவேண்டும். அது கர்த்தருக்கு பரிசுத்தமானது. நாதாபும் அபியூவும் சமாதானபலிகளின் மாம்சத்தை பரிசுத்தமில்லாமல், பெருந்தீனி உண்பதுபோல புசித்து, திராட்சரசத்தையும் மதுபானத்தையும் பானம்பண்ணியிருக்கிறார்கள். அவர்கள் குடித்து வெறித்திருக்கிறார்கள்.

குடிகாரர்களிடத்தில் தெளிந்த புத்தியும், தெளிந்த சிந்தனையும் இருக்காது. நாதாபும் அபியூவும் குடிவெறியில், நிதானமிழந்து, தன் தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும், அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்கு கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வருகிறார்கள். இது கர்த்தருக்கு விரோதமான பாவம். இது அவர்கள் அறியாமையினால் செய்த பாவமல்ல. இந்தப் பாவத்தை அவர்கள் இருவரும் துணிகரமாக செய்திருக்கிறார்கள்.

நாதாபும் அபியூவும், கர்த்தர் தங்களுக்கு கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தபோது, அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சிக்கிறது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்துப்போகிறார்கள் (லேவி 10:2).

நாதாப் அபியூ ஆகியோரின் பாவங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஆசாரிய ஊழியத்திற்கான பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து ஊழியம் செய்யவில்லை.

2. அவர்கள் கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வருகிறார்கள். (லேவி 10:1; எண் 3:4)

3. அவர்கள் தவறான நேரத்தில், தவறான ஸ்தலத்தில் அக்கினியைக் கொண்டு வருகிறார்கள்.

4. தேவனுக்கு முன்பாக அவர்கள் தங்களையும், சபையாரையும் பரிசுத்தப்படுத்திக் கொள்ளவில்லை. (லேவி 10:3; லேவி 9:24).

5. அவர்கள் இருவரும் திராட்சரசமும், மதுவும் குடித்து வெறியிருக்கிறார்கள். (லேவி 10:3,9).

கர்த்தர் அவர்கள் இருவருக்கும் கடினமான தண்டனையைக் கொடுக்கிறார். தாம் கொடுக்கும் தண்டனையை காலதாமதம்பண்ணாமல், உடனே கொடுத்துவிடுகிறார். நாதாபும் அபியூவும் பிரதான ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர்கள். ஆரோன் கர்த்தருடைய பரிசுத்தவான். அவர்கள் எல்லோருமே மோசேயின் சொந்தக்காரர்கள். ஆரோன் மோசேயின் மூத்த சகோதரர். கர்த்தர் ஆரோனுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் விசேஷித்த கிருபைகளையும், ஊழியத்தையும் கொடுத்து, அவர்களை கனம்பண்ணியிருக்கிறார்.

ஆனால் இப்போது நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் செத்துக் கிடக்கிறார்கள். கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்ட அக்கினியே அவர்கள் இருவரையும் பட்சித்துப்போடுகிறது.

நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் அந்நிய அக்கினியை கொண்டு வந்தது, கர்த்தருடைய பார்வையில் மிகப்பெரிய பாவமாகவும், மிகப்பெரிய துரோகமாகவும் இருக்கிறது. அவர்கள் மோசேயின் வார்த்தைக்கும் கீழ்ப்படியவில்லை. தேவனுடைய தெய்வீக பிரமாணத்திற்கும் கீழ்ப்படியவில்லை. கர்த்தர் மோசேயின் மூலமாக, ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் ஆசாரிய ஊழியத்தின் பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார்.

ஆசாரியர்கள் இதுவரையிலும், கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்ட பிரகாரம் ஒவ்வொரு காரியத்தையும் செய்திருக்கிறார்கள். அவர்கள் இதுவரையிலும் கர்த்தருடைய கட்டளையை மீறவில்லை. ஆசாரிய ஊழியம் இதுவரையிலும் கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம், முறைப்படி நடைபெற்று வருகிறது. ஆனால் இப்போதோ நாதாபும் அபியூவும், கர்த்தர் தங்களுக்கு கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வருகிறார்கள்.

அவர்கள் இருவரும் கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்டதை செய்யாமல், தங்களுடைய சுயபுத்தியினாலே தங்களுக்கு தாங்களே கட்டளை கொடுத்து, கர்த்தருக்கு விரோதமான பாவத்தை செய்கிறார்கள். கர்த்தருக்கு பலிசெலுத்துவதைவிட அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவது மிகவும் முக்கியமானது. கர்த்தர் இஸ்ரவேல் சபையாருக்கு தம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் உணர்த்த விரும்புகிறார். கர்த்தர் அவர்களுக்கு கீழ்ப்படிதலைக்குறித்து போதிக்க விரும்புகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர், தாங்கள் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும், கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து செய்யவேண்டும். சகலமும் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், விருப்பத்தின் பிரகாரமாகவும் நடைபெறவேண்டும். இஸ்ரவேல் சபையாரில் ஒருவரும் கர்த்தருடைய கட்டளையை மீறக்கூடாது. ஆனால் இங்கு ஆரோனின் குமாரராகிய இரண்டு ஆசாரியர்கள் கர்த்தருடைய கட்டளையை மீறியிருக்கிறார்கள்.

கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள், கர்த்தருக்கு முன்பாகவும் ஜனங்களுக்கு முன்பாகவும் பரிசுத்தமாயும், எடுத்துக்காட்டாயும் இருக்கவேண்டும். ஆனால் இந்த ஆசாரியர்களில் இருவரும் கர்த்தருடைய கட்டளையை மீறுகிறார்கள். ஆகையினால் கர்த்தர் இவர்கள் இருவரையும் உடனே தண்டித்து, தம்முடைய கோபத்தையும் நீதியையும் வெளிப்படுத்துகிறார்.

நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் செத்துப்போனது கர்த்தருடைய நீதியாயிருக்கிறது. கர்த்தர் இப்போதுதான் ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் ஆசாரிய ஊழியத்தின் பிரமாணத்தை சொல்லியிருக்கிறார். ஆரோனும் அவருடைய குமாரரும் இப்போதுதான் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிறார்கள். கர்த்தர் ஆசாரிய ஊழியத்தின் பிரதிஷ்டையை கனம்பண்ணுகிறார்.

ஆசாரிய ஊழியத்தில் எந்தவிதமான தப்பிதமும், முறைகேடும் காணப்படக்கூடாது என்பதில் கர்த்தர் மிகவும் கவனமாயிருக்கிறார். நாதாபும் அபியூவும் ஆரம்பத்திலேயே கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் ஆசாரியரின் பாவத்தை ஆரம்பத்திலேயே தண்டித்து, அவர்களை எச்சரிக்கிறார். ஆசாரியர்கள் இனிமேலும் இதுபோன்ற பாவத்தை செய்யாதவாறு, கர்த்தர் அவர்களை ஆரம்பத்திலேயே தண்டித்து உணர்த்துகிறார்.

கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, ஆரோனின் குமாரராகிய நாதாபையும், அபியூவையும் பட்சித்துப்போடுகிறதையும் இஸ்ரவேல் சபையார் எல்லோரும் பார்க்கிறார்கள். அவர்கள் இருவரும் எல்லோருடைய கண்களுக்கும் முன்பாக, கர்த்தருடைய சந்நிதியில் செத்துப்போகிறார்கள். அவர்களுடைய மரணம் இரகசியமாக நடைபெற்ற மரணமல்ல. எல்லோருக்கும் முன்பாக அவர்கள் செத்துப்போகிறார்கள். அவர்களுடைய பாவம் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த தண்டனையையும் எல்லோரும் பார்த்திருக்கிறார்கள். ஆகையினால் பாவம் செய்கிறவர்கள் இனிமேல் பயப்படுவார்கள். கர்த்தர் தம்முடைய நீதியினால் நாதாபையும் அபியூவையும் தண்டித்ததுபோல தங்களையும் தண்டிப்பார் என்னும் பயம் ஆசாரியர் எல்லோருடைய இருதயத்திலும் இருக்கும். அவர்களிடத்தில் கர்த்தர்மீது பக்தி மாத்திரமல்ல பயமும் கலந்திருக்கும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகள்மீது அக்கினியாக இறங்கி வருகிறார். அனனியாவும் சப்பீராளும் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக பொய்சொன்னார்கள். கர்த்தர் அவர்கள் இருவரையும் அடித்தார். அவர்கள் இருவரும் உடனே செத்துப்போனார்கள்.

கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு வந்த அக்கினியினால் ஏற்பட்ட அழிவுகளைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. சோதோம், கொமோரா (ஆதி 19:24)
2. எகிப்தின்மீது வாதை (யாத் 9:23-24)
3. இஸ்ரவேலில் வாதை (எண் 11:1-3)
4. இஸ்ரவேலின் 250 மனுஷர் (எண் 16:35; எண் 26:10)
5. எலியாவினால் 102 மனுஷர் (2இராஜா 1:10-14)

வருங்காலத்தில் அக்கினியினால் வரப்போகும் அழிவைப்பற்றியும் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. முதலாம் எக்காள நியாயத்தீர்ப்பு (வெளி 8:7)
2. இரண்டு சாட்சிகளிடமிருந்து வந்த அக்கினி. (வெளி 11:5)
3. பாபிலோனின் அழிவு. (வெளி 18:8)
4. கலகக்காரர்களைத் தேவனால் வானத்திலிருந்து இறங்கி வந்த அக்கினி அழித்துப்போட்டது. (வெளி 20:9)
5. அக்கினி பூமியைப் புதுப்பிக்கும். (2பேதுரு 3:10-13)

நாதாபும் அபியூவும்
லேவி 10:3-7

லேவி 10:3. அப்பொழுது மோசே ஆரோனை நோக்கி: என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு, சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன் என்று கர்த்தர் சொன்னது இதுதான் என்றான்; ஆரோன் பேசாதிருந்தான்.

லேவி 10:4. பின்பு மோசே ஆரோனின் சிறிய தகப்பனான ஊசியேலின் குமாரராகிய மீசவேலையும் எல்சாபானையும் அழைத்து: நீங்கள் கிட்டவந்து, உங்கள் சகோதரரைப் பரிசுத்த ஸ்தலத்துக்கு முன்னின்று எடுத்து, பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோங்கள் என்றான்.

லேவி 10:5. மோசே சொன்னபடி அவர்கள் கிட்டவந்து, அவர்களை அவர்கள் உடுத்தியிருந்த சட்டைகளோடும் எடுத்துப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோனார்கள்.

லேவி 10:6. மோசே ஆரோனையும் எலெயாசார் இத்தாமார் என்னும் அவன் குமாரரையும் நோக்கி: நீங்கள் சாகாதபடிக்கும், சபையனைத்தின்மேலும் கடுங்கோபம் வராதபடிக்கும், நீங்கள் உங்கள் தலைப்பாகையை எடுத்துப்போடாமலும், உங்கள் வஸ்திரங்களைக் கிழிக்காமலும் இருப்பீர்களாக; உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் கர்த்தர் கொளுத்தின இந்த அக்கினிக்காகப் புலம்புவார்களாக.

லேவி 10:7. நீங்கள் சாகாதபடிக்கு ஆசரிப்புக் கூடாரவாசலிலிருந்து புறப்படாதிருங்கள்; கர்த்தருடைய அபிஷேகதைலம் உங்கள்மேல் இருக்கிறதே என்றான்; அவர்கள் மோசேயினுடைய வார்த்தையின்படியே செய்தார்கள்.

தன்னுடைய குமாரராகிய நாதாபும் அபியூவும் செத்துப்போனதைப் பார்த்து ஆரோன் அதிர்ச்சியடைகிறார். அவர்களைச் சுற்றிலுமிருக்கிற எல்லோருக்கும் மிகுந்த பயமும் நடுக்கமும் உண்டாயிற்று. மோசேயும் இளகிய மனதுள்ளவர். ஆரோனுடைய குமாரர் இருவரும் செத்துப்போனதைப் பார்த்து மோசேயும் துக்கப்பட்டிருப்பார். ஆனாலும் மோசே தன்னுடைய மனதை தேற்றிக்கொண்டு, கர்த்தர் தனக்கு சொல்லுகிற வார்த்தைகளை, ஆரோனிடத்தில் சொல்லுகிறார்.

அப்பொழுது மோசே ஆரோனை நோக்கி, "என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு, சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன் என்று கர்த்தர் சொன்னது இதுதான்" (லேவி 10:3) என்று சொல்லுகிறார் ஆரோன் பேசாதிருக்கிறார்.

தேவன் நாதாபையும், அபியூவையும் அழித்துப்போடுகிறார். அவர்கள் மதுபானவெறியில் இருந்தார்கள். கர்த்தர் அவர்களை நியாயந்தீர்க்கவில்லையென்றால், பின்வரும் சந்ததிகளில் ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் மதுபான வெறிகொண்டு, ஊழியம் செய்வதற்கு துணிந்து விடுவார்கள். வருங்கால சந்ததியாருக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டுமென்பதற்காகக் கர்த்தர் அவர்களைக் கொன்றுபோட்டார். ஆரோன் இதை அங்கீகரித்து, ஒன்றும் பேசாதிருக்கிறார்.

கர்த்தருடைய சந்நிதியில் துக்கத்தோடும், வேதனையோடும் இருக்கிற தன்னுடைய மூத்த சகோதரன் ஆரோனைப் பார்த்து, "கர்த்தர் சொன்னது இதுதான்" என்று மோசே சொல்லுகிறார். கர்த்தர் எதை சொன்னார் என்பது ஆரோனுக்கு தெரியும். கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம் எல்லோருடைய இருதயங்களிலும் பேசுகிறார்.

"என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு, சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன்" என்பதே கர்த்தர் சொல்லுகிற வார்த்தை. ஆரோன் இந்த வார்த்தையைக் கேட்டு பேசாமல் அமைதியாயிருக்கிறார். மோசே சொல்லுகிற வார்த்தை ஆரோனை அமைதிப்படுத்துகிறது.

தன்னுடைய குமாரராகிய நாதாபும் அபியூவும் மரணத்திற்கு பாத்திரவான்கள் என்பதை ஆரோன் அறிந்துகொள்கிறார். அவர்கள் இருவரும் கர்த்தரை பரிசுத்தம்பண்ணவில்லை.அவர்கள் கர்த்தரை மகிமைப்படுத்தவில்லை. ஆகையினால் நாதாபும் அபியூவும் ஜனங்கள் மத்தியில் இல்லாதவாறு அறுப்புண்டுபோனார்கள்.

கர்த்தர் மகிமைப்படும் வண்ணமாக, தன்னுடைய குமாரராகிய நாதாபும் அபியூவும் செத்துப்போனார்கள் என்பதை ஆரோன் அறிந்துகொள்கிறார். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. அவர் நீதியுள்ளவர். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியும் நியாயமுமுள்ளதாக இருக்கும். நாதாபும் அபியூவும் ஆரோனின் குமாரராயிருந்தாலும், அவர்கள் இருவரும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணப்பட்டவர்களாகயிருந்தாலும், கர்த்தர் பட்சபாதமில்லாமல், அவர்களுடைய பாவத்தினிமித்தமாக, அவர்களை தண்டிக்கிறார்.

மோசே தன்னிடத்தில் சொல்லுகிற கர்த்தருடைய வார்த்தைகளை ஆரோன் பொறுமையோடு கேட்கிறார். ஆரோனுடைய குமாரர்களில் இருவர் கர்த்தருடைய சந்நிதியிலே செத்துக்கிடக்கிறார்கள். கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்ட அக்கினியே அவர்களை பட்சித்துப்போட்டது. செத்துக்கிடக்கிற தன்னுடைய இரண்டு குமாரர்களையும் பார்த்து, ஆரோனுடைய மனதிலே துக்கமும் வேதனையும் நிரம்பியிருக்கிறது. இந்த சோகமான சூழ்நிலையிலும் ஆரோன் தன்னை கர்த்தருடைய பரிசுத்தமான சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கிறார்.

ஆரோன் கர்த்தருக்கு முன்பாகவும், மோசேக்கு முன்பாகவும், இஸ்ரவேல் சபையாருக்கு முன்பாகவும், தன்னுடைய பொறுமையைக் காத்துக்கொள்கிறார். நம்முடைய பாவத்தினிமித்தமாக கர்த்தர் நம்மை திருத்தும்போது, நாமும் ஆரோனைப்போல பேசாமல் அமைதியாயிருக்க வேண்டும்.நாம் வேதனைகளை அனுபவிக்கும் போது கர்த்தரிடத்தில் விவாதம் பண்ணக்கூடாது. கர்த்தருக்கு விரோதமாக வாக்குவாதம்பண்ணக்கூடாது. நாம் கர்த்தரிடத்தில் சண்டைபோடுகிறவர் களாயிருக்கக்கூடாது. நாம் கர்த்தருடைய நீதிக்கும், நியாயத்திற்கும் கீழ்ப்படியவேண்டும். கர்த்தருடைய சித்தமும் விருப்பமும் நம்முடைய சித்தமாகவும் விருப்பமாகவும் மாறவேண்டும்.

நம்முடைய மீறுதல்களினிமித்தமாகவும் அக்கிரமங்களினிமித்தமாகவும் கர்த்தர் நம்மைத் தண்டிக்கும்போது, அந்தத் தண்டனைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவற்றை பயபக்தியோடு தாங்கிக்கொள்ளவேண்டும். நம்மைத் தண்டிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமல்ல. நம்முடைய பாவத்திற்கு நாம் மனந்திரும்பவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம். கர்த்தர் காரணமில்லாமல் யாரையும் எப்போதும் தண்டிக்கமாட்டார்.

நம்முடைய பாவத்தினிமித்தமாக கர்த்தர் நம்மைத் தண்டிக்கும்போது, கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதைப் பார்த்து, நம்முடைய இருதயத்தில் நமக்கு ஆறுதலும் சமாதானமும் ஏற்படவேண்டும். நாம் வேதனைகளையும் பாடுகளையும் அனுபவிக்கும்போது, நம்முடைய மனது குழப்பமடையாமல், கர்த்தருக்குள் சமாதானமாயிருக்கவேண்டும். நம்முடைய வேதனைகளைவிட, கர்த்தருடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்பதே நம்முடைய விருப்பமாயிருக்கவேண்டும்.

ஆரோன் கர்த்தரைவிட தன்னுடைய குமாரரைக் கனம்பண்ண விரும்பவில்லை. தன்னுடைய இரண்டு குமாரரும் செத்துப்போனது ஆரோனுக்கு துக்கமாகயிருந்தாலும், அவர்களுடைய மரணத்தின் மூலமாக கர்த்தர் மகிமைப்படுவதைப் பார்த்து ஆரோன் ஆறுதலடைகிறார். ஆரோனுக்கு கர்த்தருடைய நாமம் பரிசுத்தப்படுவதே முக்கியமானதாயிருக்கிறது. ஆரோனுக்கு தன்னுடைய குமாரரைவிட, தேவனுடைய நாமமும், அவருடைய ஆசரிப்புக்கூடாரமும், அவருடைய பிரமாணமும், முக்கியமானதாகவும், பெரிதாகவும் இருக்கிறது.

ஆரோன் தன்னுடைய குடும்ப கவுரவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இஸ்ரவேல் சபையார் மத்தியில் தனக்கும் தன்னுடைய குடும்பத்தாருக்கும் இருக்கிற மதிப்பையும் மரியாதையையும் யோசித்துப் பார்க்கவில்லை. கர்த்தர் சொன்ன பிரகாரம், "என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு, சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன்" என்னும் வார்த்தை, தன்னுடைய குமாரர் இரண்டு பேருடைய மரணத்தின் மூலமாக நிறைவேறுவதைப் பார்த்து ஆரோன் ஒன்றும் பேசாமல் அமைதியாயிருக்கிறார். அவருடைய மனதிலே குழப்பமில்லாமல் ஆறுதலும் சமாதானமும் ஏற்பட்டிருக்கிறது.

ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் செத்துக்கிடக்கிறார்கள். கர்த்தருடைய சந்நிதி பரிசுத்தமானது. அவர்களுடைய பிரேதங்கள் அங்கேயே கிடப்பது முறையானதல்ல. நாதாபும் அபியூவும் தங்களுடைய பாவத்தினிமித்தமாக செத்துக்கிடக்கிறார்கள். ஆனாலும் மோசே அவர்கள்மீது இரக்கப்பட்டு, அவர்களுக்கு கண்ணியமான அடக்க ஆராதனை நடைபெறுவதற்கு ஒழுங்குபடுத்துகிறார். அவர்கள் இருவரும் தேவனுடைய நீதியினால் செத்துப்போனாலும், அவர்களுக்கு மனுஷருடைய இரக்கத்தினால் நல்ல அடக்கம் கிடைக்கிறது.

பின்பு மோசே ஆரோனின் சிறிய தகப்பனான ஊசியேலின் குமாரராகிய மீசவேலையும் எல்சாபானையும் அழைத்து: "நீங்கள் கிட்டவந்து, உங்கள் சகோதரரைப் பரிசுத்த ஸ்தலத்துக்கு முன்னின்று எடுத்து, பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோங்கள்" என்று சொல்லுகிறார். மோசே சொன்னபடி அவர்கள் கிட்டவந்து, அவர்களை அவர்கள் உடுத்தியிருந்த சட்டைகளோடும் எடுத்துப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோகிறார்கள் *(லேவி 10:4,5).*

மீசவேலும், எல்சாபானும் ஆகிய இருவரும் ஆரோனுடைய நெருங்கிய உறவினர்கள். அவர்கள் இதுவரையிலும் ஆசாரிய ஊழியத்திற்குத் தெரிந்தெடுக்கப்படவில்லை *(யாத் 6:22).*

இஸ்ரவேல் சபையாருக்கு நாதாப் அபியூ ஆகியோரின் மரணம் அதிர்ச்சியாயிருக்கிறது. அவர்களுடைய கண்களுக்கு முன்பாக செத்துப்போன ஆசாரியர்கள் இருவரும் தாங்கள் உடுத்தியிருக்கிற சட்டைகளோடு பாளயத்திற்கு புறம்பே கொண்டு போகப்படுவதை பார்த்து இஸ்ரவேல் சபையார் மிகுந்த துக்கமடைகிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் பயமும் திகிலும், கலக்கமும் நிரம்பியிருக்கிறது.

இஸ்ரவேல் சபையாருக்கு நாதாபையும் அபியூவையும் பற்றி ஏற்கெனவே நன்றாய்த் தெரியும். அவர்கள் இருவரும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அதிக கனமும் மகிமையும் மேன்மையுள்ளவர்கள். மோசே சீனாய் மலைக்கு போனபோது, நாதாபும் அபியூவும் அவரோடு கூடப்போனவர்கள்.

"பின்பு அவர் மோசேயை நோக்கி: நீயும் ஆரோனும் நாதாபும் அபியூவும் இஸ்ரவேலின் மூப்பரில் எழுபதுபேரும் கர்த்தரிடத்தில் ஏறிவந்து, தூரத்திலிருந்து பணிந்துகொள்ளுங்கள்" (யாத் 24:1) என்று சொன்னார்.

நாதாபும் அபியூவும் பரலோகத்திலிருந்து விசேஷித்த கிருபைகளையும், மேன்மைகளையும் பெற்றிருந்தார்கள். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அவர்களுடைய நம்பிக்கையாகயிருந்தார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் இருவரும் கர்த்தருடைய சந்நிதியிலே செத்துக்கிடக்கிறார்கள். அவர்களுடைய பிரேதங்களைப் பார்த்து இஸ்ரவேல் சபையார் அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள். அந்த அதிர்ச்சி அவர்களை விட்டு நீங்குவதற்கு முன்பாக, இப்போது அவர்கள் இருவருடைய பிரேதங்களும், அவர்கள் உடுத்தியிருந்த ஆசாரிய வஸ்திரங்களோடு பாளயத்திற்கு புறம்பே கொண்டு போகப்படுகிறது.

சீனாய் மலையின்மீது மோசேயோடு ஏறிப்போனவர்கள், இப்போது செத்துப்போனவர்களாக, கொண்டுபோகப்படுகிறார்கள். தேவனுடைய கோபம் பிரத்தியட்சமாக வெளிப்படுகிறது. தேவனுடைய நீதியில் பட்சபாதம் எதுவுமில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய கட்டளைக்கும் எல்லோரும் கீழ்ப்படியவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தாரால் ஒன்றும் பேசமுடியவில்லை. அவர்களால் "இந்தப் பரிசுத்தமான தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கத்தக்கவன் யார்?" (1சாமு 6:20) என்று மாத்திரமே கதறி அழமுடிகிறது

ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் செத்துப்போனதற்காக ஆசாரியர்கள் அழுது புலம்பக்கூடாது. அவர்கள் மரித்தவர்களுக்காக துக்கம் கொண்டாடக்கூடாது. மோசே ஆரோனையும் எலெயாசார் இத்தாமார் என்னும் அவருடைய குமாரரையும் நோக்கி, "நீங்கள் சாகாதபடிக்கும், சபையனைத்தின்மேலும் கடுங்கோபம் வராதபடிக்கும், நீங்கள் உங்கள் தலைப்பாகையை எடுத்துப்போடாமலும், உங்கள் வஸ்திரங்களைக் கிழிக்காமலும் இருப்பீர்களாக" (லேவி 10:6) என்று சொல்லுகிறார்.

மோசே ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் சொன்ன கட்டளைகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. நீங்கள் உங்கள் தலைப்பாகையை எடுத்துப்போடாமல் இருங்கள்.
2. நீங்கள் உங்கள் வஸ்திரங்களைக் கிழிக்காமல் இருங்கள்.
3. உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் கர்த்தர் கொளுத்தின இந்த அக்கினிக்காகப் புலம்புவார்களாக. ஆனால் நீங்கள் புலம்பக்கூடாது.
4. நீங்கள் சாகாதபடிக்கு ஆசரிப்புக் கூடாரவாசலிலிருந்து புறப்படாதிருங்கள் (லேவி 10:7).

தலைப்பாகையை எடுத்துப்போடுவதும், வஸ்திரங்களைக் கிழிப்பதும் துக்கத்திற்குப் பொதுவான அடையாளங்களாகும். (லேவி 13:45; ஆதி 37:29; ஆதி 44:13; 2சாமு 1:11; 2சாமு 15:32; யோபு 1:20; யோபு 2:13).

ஆசாரியர்கள் மரித்தோருக்காகப் புலம்பக் கூடாது. மரித்த சடலங்களைத் தொடவும் கூடாது. (லேவி 21:10-12). நாதாபும், அபியூவும் மரித்துப்போனது அவர்களுடைய பாவங்களுக்காகத் தேவன் கொடுத்த நியாயத்தீர்ப்பு. ஆசாரியர் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் கனப்படுத்த வேண்டும். ஆசாரியருடைய செயல்களில் தங்களுக்கும் பங்குள்ளது என்பதைக் குறிப்பதற்காகவும், தாங்களும் பாவம் செய்தவர்கள் என்பதை அங்கீகரிப்பதற்காகவும் ஜனங்கள் துக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஆசாரியர்கள் மரித்துப்போனவர்களுக்காக அழுது புலம்பாவிட்டாலும், இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும், மரித்துப்போன நாதாபுக்காகவும் அபியூவுக்காகவும் அழுது புலம்பவதில் தடை எதுவுமில்லை. மோசே அவர்களை நோக்கி, "உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் கர்த்தர் கொளுத்தின இந்த அக்கினிக்காகப் புலம்புவார்களாக" (லேவி 10:6) என்று சொல்லுகிறார்.

தன்னுடைய குமாரர் மரித்துப்போனதற்காக ஆரோன் அழுது புலம்பக்கூடாது. அதுபோலவே தங்களுடைய சகோதரர் மரித்துப்போனதற்காக, ஆரோனின் மற்ற இரண்டு குமாரரும் அழுது புலம்பக்கூடாது. இவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள். அவர்கள் கர்த்தருடைய காவலைக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆசாரிய ஊழியத்திற்கு தடை எதுவும் ஏற்படக்கூடாது. மனுஷருடைய துக்கமோ, வேதனையோ, பிரச்சனைகளோ ஊழியத்திற்கு ஒருபோதும் தடையாயிருக்கக்கூடாது.

"அப்பொழுது நான் அவர்களிடத்திற்கு ஆட்களை அனுப்பி: நான் பெரிய வேலையைச் செய்கிறேன், நான் வரக்கூடாது; நான் அந்த வேலையைவிட்டு உங்களிடத்திற்கு வருகிறதினால் அது மினக்கட்டுப்போவானேன் என்று சொல்லச்சொன்னேன்" (நெகே 6:3).

ஆசாரியர்கள் கர்த்தரைக் கனம்பண்ணும் ஊழியத்தை செய்கிறார்கள். தங்களுடைய குடும்பத்திலுள்ளவர்கள் மரித்துப்போனாலும், அவர்கள் குடும்பத்தாரின் துக்கத்தில் பங்குபெறாமல், ஆசாரிய ஊழியத்தில் கவனமாயிருக்கவேண்டும். ஆசாரிய ஊழியம் பரிசுத்தமானது. இந்த ஊழியம் மரித்துப்போனவர்களால் தீட்டுப்படக்கூடாது.

நாதாபும் அபியூவும் கர்த்தருடைய கட்டளையை மீறி, அவருடைய சந்நிதியில் அந்நிய அக்கினியை கொண்டு வந்தார்கள். இதனால் கர்த்தர் அவர்களை அடித்தார். அவர்கள் இருவரும் தேவனுடைய சந்நிதியில் செத்துப்போனார்கள். கர்த்தருடைய கோபமும், நீதியான நியாயத்தீர்ப்பும் அவர்கள்மேல் வந்திருக்கிறது. கர்த்தர் கொடுக்கும் தண்டனையை ஆரோனும் அவருடைய குடும்பத்தாரும் அங்கீகரிக்கவேண்டும். ஆசாரியர்கள் செத்துப்போனவர்களுக்காக அழுது புலம்பும்போது, கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு கீழ்ப்படியாமல், கர்த்தரை கனவீனம்பண்ணுவார்கள். ஆகையினால் ஆசாரியர்கள் செத்துப்போனவர்களுக்காக அழுது புலம்பவேண்டாம் என்று மோசே சொல்லுகிறார்.

நாதாபும் அபியூவும் செத்துப்போனதினால் ஆரோனுக்கும், அவருடைய மற்ற இரண்டு குமாரருக்கும் துக்கம் அதிகமாயிருக்கும். இந்த சூழ்நிலையில் அவர்களால் செத்துப்போனவர்களுக்காக அழாமல் இருக்க முடியாது. ஆனாலும் அவர்கள் தங்கள் துக்கத்தை தாங்கிக்கொள்ள வேண்டும். அழுகையை அடக்கிக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு பொறுமையோடு கீழ்ப்படியவேண்டும். வேதனைகளையும் பாடுகளையும் சகித்துக்கொள்ளவேண்டும்.

விசுவாசிகளாகிய நம்மை கர்த்தரே ஆளுகை செய்கிறார். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. நம்முடைய உணர்வுகளும், ஆசைகளும் நமக்கு கட்டுப்படும். நம்முடைய உணர்வுகள் நம்மை ஆளுகை செய்யாமல், நாம் உணர்வுகளை ஆளுகை செய்வோம். கர்த்தர்மீது பாரத்தை வைத்துவிட்டு, அவர்மீது நம்பிக்கையாயிருப்பதே விசுவாசிகளுக்கு மிகுந்த ஆறுதல். ஆரோனும், அவருடைய மற்ற இரண்டு குமாரரும் தங்கள் துக்கத்தையும், வேதனைகளையும் சகித்துக்கொண்டு, தங்கள் கண்ணீரை அடக்கிக்கொண்டு, கர்த்தருக்கு ஆசாரிய ஊழியத்தை தொடர்ந்து செய்கிறார்கள்.

மோசே ஆரோனையும் எலெயாசார் இத்தாமார் என்னும் அவருடைய குமாரரையும் நோக்கி, " நீங்கள் சாகாதபடிக்கு ஆசரிப்புக் கூடாரவாசலிலிருந்து புறப்படாதிருங்கள்; கர்த்தருடைய அபிஷேகதைலம் உங்கள்மேல் இருக்கிறதே" (லேவி 10:7) என்று சொல்லுகிறார்; அவர்கள் மோசேயினுடைய வார்த்தையின்படியே செய்கிறார்கள்.

"நீங்கள் சாகாதபடிக்கு ஆசரிப்புக் கூடாரவாசலிலிருந்து புறப்படாதிருங்கள்" என்று மோசே ஆரோனுக்கும், அவருடைய குமாரரில் உயிரோடிருக்கிற இரண்டு பேருக்கும் சொல்லுகிறார். லேவி 21:10-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பிரமாணங்கள் இன்னும் கொடுக்கப்படவில்லை.

நாதாபுக்கும் அபியூவுக்காகவும் ஆசாரியர்கள் அழுது புலம்பாவிட்டாலும், இஸ்ரவேல் குடும்பத்தார் அவர்களுக்காக அழுது புலம்புவதற்கு தடை ஏதுமில்லை. மோசே ஜனங்களை நோக்கி, "உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் கர்த்தர் கொளுத்தின இந்த அக்கினிக்காக புலம்புவார்களாக" (லேவி 10:6) என்று சொல்லுகிறார்.

தங்களுடைய ஆசாரியர்களில் இரண்டுபேர் செத்துப்போனதற்காக இஸ்ரவேல் குடும்பத்தார் அழுது புலம்பவேண்டும். அவர்கள் அதற்காக மாத்திரமல்ல, கர்த்தருடைய கோபம் அவருடையசந்நிதியில் வெளிப்பட்டதற்காகவும் இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் அழுது புலம்பவேண்டும்.

திராட்சரசமும் மதுவும் லேவி 10:8-11

லேவி 10:8. கர்த்தர் ஆரோனை நோக்கி:

லேவி 10:9. நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் சாகாதிருக்கவேண்டுமானால், ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கிறபோது, திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்கவேண்டாம்.

லேவி 10:10. பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும், தீட்டுள்ளதற்கும் தீட்டில்லாததற்கும், வித்தியாசம்பண்ணும்படிக்கும்,

லேவி 10:11. கர்த்தர் மோசேயைக்கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்ன சகலபிரமாணங்களையும் அவர்களுக்குப் போதிக்கும்படிக்கும், இது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும் என்றார்.

கர்த்தர் மோசேயின் மூலமாக சொன்ன எல்லா வார்த்தைகளுக்கும் ஆரோன் கவனமாக செவிகொடுத்து, அதற்கு கீழ்ப்படிகிறார். இப்போது கர்த்தர் ஆரோனிடத்தில் நேரடியாகவே பேசுகிறார். இது ஆரோனுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியமும் பாக்கியமுமாகும்.

கர்த்தர் ஆரோனை நோக்கி, "நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் சாகாதிருக்கவேண்டுமானால், ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கிறபோது, திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்கவேண்டாம்" (லேவி 10:8,9) என்று சொல்லுகிறார். அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தில் பிரவேசிக்கிறபோது, திராட்சரசமும் மதுவும் குடித்தவர்களாக பிரவேசித்தால், அவர்கள் செத்துப்போவார்கள். இது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு.

நாதாபும் அபியூவும் ஆசாரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசித்தபோது ஒரு வேளை திராட்சரசமும் மதுவும் குடித்தவர்களாக பிரவேசித்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. இதனால் அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களை பட்சித்துப்போட்டதற்கும் வாய்ப்புள்ளது. நாதாபுக்கும் அபியூவுக்கும் ஏற்பட்ட மரணத்தைப் பார்த்து ஆரோனும் அவருடைய மற்ற இரண்டு குமாரரும் எச்சரிப்படையவேண்டும்.

ஆசாரியர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறபோது திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்க வேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் இவ்வாறு சொல்லுவதினால், அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்காத மற்ற வேளைகளில், திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்கலாம் என்று பொருள் கொள்ளமுடியாது. ஒவ்வொரு ஆசாரியரும் நசரேய விரதமிருக்கிறவர். நசரேயர்கள் திராட்சரசமோ மதுவோ குடிக்கமாட்டார்கள்.

ஒருவேளை ஆசாரியர்கள், ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளியே இருக்கும்போது, திராட்சரசத்தையும் மதுவையும் குடித்திருந்தாலும், ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறபோது, அவர்கள் அதை குடிக்கக்கூடாது.

எசேக்கியேல் தேவாலயத்தை தரிசனத்தில் கண்டபோது, ஆசாரியருக்குரிய பிரமாணத்தை சொல்லுகிறார். ஆசாரியர்கள் திராட்சரசம் குடிக்கக்கூடாது என்று எசேக்கியேலும் சொல்லுகிறார். "ஆசாரியர்களில் ஒருவனும், உட்பிராகாரத்துக்குள் பிரவேசிக்கும்போது, திராட்சரசம் குடிக்கலாகாது" (எசே 44:21).

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே, கர்த்தருக்கு சுவிசேஷ ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களும், மதுபானத்திற்கு அடிமையாயிருக்கக்கூடாது. அவர்கள் குடித்து வெறித்தவர்களாயிருக்கக்கூடாது.

"அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டை பண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும்" (1தீமோ 3:3).

ஆசாரியர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறபோது திராட்சரசத்தையும், மதுவையும் குடிக்கிறவர்களாய் பிரவேசிக்கக்கூடாது. அதைக் குடித்துவிட்டு, அதற்குள்ளே பிரவேசித்தால், கர்த்தருடைய நீதியான கரம் அவர்களைக் கொன்றுபோடும்.

நியாயத்தீர்ப்பு எப்போது வரும் என்று நமக்கு தெரியாது. அது நாம் நினையாத நேரத்தில் நம்மீது வருவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் ஊழியக்காரர்கள், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, பயபக்தியோடு ஊழியம் செய்யவேண்டும்.

"உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" (லூக் 21:34).

ஆசாரியர்கள் கர்த்தருடைய சந்நிதியில் சமாதானமாயும், தெளிந்த புத்தியோடும், தெளிந்த சிந்தனையோடும் ஊழியம் செய்யவேண்டும். திராட்சரசமும் மதுபானமும் குடிக்கிறவர்களுடைய இருதயம் கலக்கத்திலிருக்கும். அவர்களுக்கு தெளிந்த சிந்தனை இருக்காது. அவர்களுடைய வார்த்தைகள் உளறும்.

"ஆனாலும் இவர்களும் திராட்சரசத்தால் மயங்கி, மதுபானத்தால் வழிதப்பிப்போகிறார்கள்; ஆசாரியனும் தீர்க்கதரிசியும் மதுபானத்தால் மதிமயங்கி, திராட்சரசத்தால் விழுங்கப்பட்டு, சாராயத்தினால் வழிதப்பி, தீர்க்கதரிசனத்தில் மோசம்போய், நியாயந்தீர்க்கிறதில் இடறுகிறார்கள்" (ஏசா 28:7).

ஆசாரியர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமான ஊழியத்தை செய்கிறார்கள். அவர்களுக்கு பரிசுத்தத்திற்கும், அசுத்தத்திற்கும் வித்தியாசம் தெரியவேண்டும். குடித்து வெறித்திருக்கிறவர்களால் பரிசுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் காணமுடியாது. அவர்கள் குடிவெறியினால் குழப்பத்திலிருப்பார்கள். அவர்களிடத்தில் தெளிந்த புத்தியும், தெளிந்த சிந்தனையும் இருக்காது.

கர்த்தர் ஆரோனை நோக்கி, "பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும், தீட்டுள்ளதற்கும் தீட்டில்லாததற்கும், வித்தியாசம் பண்ணும்படிக்கும், கர்த்தர் மோசேயைக்கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்ன சகலபிரமாணங்களையும் அவர்களுக்குப் போதிக்கும்படிக்கும், இது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும்" (லேவி 10:10,11) என்று சொல்லுகிறார்.

ஆசாரியர்களுக்கு பரிசுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் இடையே வித்தியாசம் பண்ணவும் தெரிந்திருக்கவேண்டும். இதுபற்றிய உபதேசங்களையும், பிரமாணங்களையும் ஆசாரியர்கள் மற்றவர்களுக்கு போதிக்கவும்வேண்டும். கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள், ஜனங்களுக்கு போதிக்கிற ஊழியத்தையும் செய்யவேண்டும்.

"அவர்கள் யாக்கோபுக்கு உம்முடைய நியாயங்களையும், இஸ்ரவேலுக்கு உம்முடைய பிரமாணத்தையும் போதித்து, உமது சந்நிதானத்திலே தூபவர்க்கத்தையும், உமது பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளையும் இடுவார்கள்" (உபா 33:10).

திராட்சரசத்தையும் மதுவையும் குடித்து வெறித்திருக்கிற ஆசாரியர்களால் கர்த்தருடைய பிரமாணங்களை ஜனங்களுக்கு தெளிவாக போதிக்க முடியாது. குடிகாரர்கள் தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். இவர்களால் ஆவிக்குரிய விடுதலையைப்பற்றி போதிக்க முடியாது. குடிகாரர்களின் போதனைகளும், அவர்களுடைய ஜீவியமும் முரண்பட்டிருக்கும். அவர்கள் தாங்கள் சொல்லுகிறபடி ஜீவிக்கமாட்டார்கள். அவர்களுடைய வார்த்தைகளும் கிரியைகளும் வெவ்வேறாயிருக்கும். அவர்கள் சொன்னதை செய்யமாட்டார்கள். செய்வதை சொல்லவும் மாட்டார்கள்.

மாம்சத்திற்கு அடிமைகளாகயிருக்கிறவர்களால், ஆவிக்குரிய விடுதலையைப்பற்றி போதிக்கமுடியாது. இவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை கட்டியெழுப்பும் ஊழியத்தில் பிரயோஜனமில்லாதவர்கள். இப்படிப்பட்ட ஆசாரியர்கள், தாங்கள் ஒரு கையினால் கட்டியதை, மறுகையினால் இடித்துப்போடுவார்கள். ஆசாரியர்கள் கர்த்தருக்கு பிரியமான ஊழியத்தையும், பிரயோஜனமான ஊழியத்தையும் செய்யவேண்டும்.

கர்த்தர் ஆரோனுக்கு சொன்ன கட்டளையின் விவரம் வருமாறு :

1. ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கிற போது, திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்கவேண்டாம். (லேவி 10:9).

2. பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும், தீட்டுள்ளதற்கும் தீட்டில்லாததற்கும், வித்தியாசம்பண்ண வேண்டும் (லேவி 10:10).

3. கர்த்தர் மோசேயைக்கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்ன சகல பிரமாணங்களையும் ஜனங்களுக்குப் போதிக்க வேண்டும். (லேவி 10:11).

பரிசுத்த வேதாகமத்தில் திராட்சரசத்தைப்பற்றி ஒரு சில செய்திகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. யாயீன் என்னும் எபிரெய வார்த்தை குடித்து வெறிக்கச் செய்யும் மதுபானத்தைக் குறிக்கும்.

2. யாயீன் என்னும் எபிரெய வார்த்தை மதுபானமல்லாத சாதாரண திராட்ச ரசத்தையும் குறிக்கும். (ஏசா 16:10; எரே 48:33; மத் 9:17; மாற்கு 2:22; யோவான் 2:3-10).

3. மோசேயின் பிரமாணத்தில் குடித்து வெறித்திருக்காத அளவுக்கு மதுபானம் அங்கிகரிக்கப்படுகிறது. (உபா 14:26)

4. நசரேய விரதமிருக்கிறவர்கள் மதுபானம் அருந்தக்கூடாது (எண் 6).

5. திராட்சரசம் தேவனுக்குப் பானபலியாகப் படைக்கப்பட்டது. (யாத் 29:40; லேவி 23:13; எண் 15:5-10; எண் 28:14).

6. யாயீன் என்னும் திராட்சரசத்திற்கும், ஆஜ், சாதாஹ் என்னும் மதுபானங்களுக்கும் வேறுபாடுள்ளது.

7. கண்கள் திராட்சரசத்தினால் சிவப்பாகும். (ஆதி 49:12).

8. திராட்சரசம் பரியாசம் செய்யும் (நீதி 20:1).

9. மதுபானம் இரத்தவருணமாயிருக்கும் போது அதைப் பயன்படுத்தக்கூடாது. (நீதி 23:31).

10. திராட்சரசம் குடிப்பது ராஜாக்களுக்குத் தகுதியல்ல. (நீதி 31:4).

11. திராட்சரசத்தை மற்ற பானங்களோடு கலந்து பருகுவார்கள். (நீதி 9:2; நீதி 23:30; உன் 8:2; மாற்கு 15:23)

12. மெல்கிசேதேக்கு ஆபிரகாமிற்குத் திராட்சரசம் கொடுத்தார் (ஆதி 14:18).

பரிசுத்த வேதாகமத்தில் திராட்சரசத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் பல்வேறு எபிரெய பெயர்களின் விவரம் வருமாறு :

1. திராட்சரசம் (Wine) - "தியரோஷ்" (ஆதி 27:28,37; உபா 7:13; உபா 11:14; உபா 18:4; உபா 28:51; உபா 33:28; 2இராஜா 18:32; 2நாளா 31:5). "new" (நெகே 10:39; நெகே 13:5,12; நீதி 3:10; ஏசா 24:7; ஏசா 65:8; ஓசி 4:11; ஓசி 9:2; யோவே 1:10; ஆகாய் 1:11; சக 9:17) "sweet" (மீகா 6:15).

   தியரோஷ் என்னும் திராட்சரசத்தில் தசமபாகம் செலுத்த வேண்டும். (உபா 12:17; உபா 14:23) யாயீன் என்னும் திராட்சரசத்தில் தசமபாகம் செலுத்த வேண்டியதில்லை. ஏனெனில் தியரோஷ் புதிய ரசமாகும். யாயீன் பழைய ரசமாகும். கர்த்தர் முதற்கனிகளை விரும்புகிறார். (யாத் 13:2,15; யாத் 23:16-19; யாத் 34:26).

2. திராட்சைரசம் (grape drink) - "ஏனாப்" (ஓசி 3:1)

3. திராட்சரசம் (grape juice) "அவ்சேஷ்" (ஏசா 49:26; யோவே 1:5; யோவே 3:18; ஆமோ 9:13)

4. மதுபானம் (strong drink) "சாய்கால்" (உபா 14:26).

5. ஆலை "யாக்கேப்" (உபா 16:13)

6. சிவந்ததிராட்சரசம் (pure red wine) "கேமேர்" (ஏசா 27:2)

7. சிவந்ததிராட்சரசம் (red wine) - "காமார்" (எஸ்றா 6:9; எஸ்றா 7:22; தானி 5:1,2,4,23)

8. ஆலை (winepress) "காத்" (நியா 6:11; புல 1:15) "winefat" (ஏசா 63:2)

9. திராட்சரசம் (mixed wine) - "சோபே" (ஏசா 1:22)

10. கலப்புள்ள சாராயம் (mixed wine) "மம்சாக்" (நீதி 23:30)

புதிய ஏற்பாட்டில் திராட்சரசம் பயன்படுத்தப்பட்டிருக்கும் வசனப்பகுதிகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. புதிய ரசம் (மத் 9:17; மாற்கு 2:22; லூக்கா 5:37-39). அப் 2:13 ஆவது வசனத்தில் மதுபானம் என்று கூறப்பட்டிருப்பது இனிப்பான திராட்ச ரசத்தைக் குறிக்கும். கிரேக்க மொழியில் ஆயினோஸ் என்னும் வார்த்தை மதுபானத்தைக் குறிக்கும்.

2. வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசம். (மாற்கு 15:23).

3. திராட்சரசமும், மதுவும் (லூக்கா 1:15).

4. திராட்சரசம் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (லூக்கா 10:34)

5. இயேசு தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றினார். (யோவான் 2:3, ஏசா 10; யோவான் 4:46).

6. மதுபானம் பண்ணாமல் இருக்கிறது நன்மையாயிருக்கும் என்று பவுல் கூறுகிறார் (ரோமர் 14:21).

7. துன்மார்க்கத்துக்கேதுவான மதுபான வெறி கொள்ளக்கூடாது. (எபே 5:18) மதுபானம் பண்ணக்கூடாது. (1பேதுரு 4:3) மதுபானப்பிரியராய் இருக்கக்கூடாது. (1தீமோ 3:3,8; தீத்து 1:7; தீத்து 2:3) என்று தேவன் தம்முடைய பிள்ளைகளை எச்சரித்திருக்கிறார்.

8. அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகக் கொஞ்சம் திராட்சரசம் கூட்டிக்கொள் என்று பவுல் தீமோத்தேயுவிற்கு ஆலோசனை கூறுகிறார். (1தீமோ 5:23)

9. மது என்னும் வார்த்தை அடையாளமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (வெளி 14:8,10; வெளி 16:19; வெளி 17:2; வெளி 18:3).

10. திராட்சரசத்தை சேதப்படுத்தக்கூடாது. (வெளி 6:6, வெளி 18:13)

வேதாகமத்தில் "திராட்சரசம்" என்னும் வார்த்தை மதுபானத்திற்கும், சாதாரண திராட்ச பழத்தின் ரசத்திற்கும் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. திராட்சைக்குலையிலுள்ள ரசத்திற்கும் திராட்சரசம் என்னும் பெயரே வழங்கப்பட்டிருக்கிறது. (ஏசா 65:8), புதிய ரசம் என்பது திராட்சைப் பழங்களை அப்பொழுது தான் பிழிந்து தயாரிக்கப்படும் ரசமாகும். மதுபான வெறியர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. (லூக்கா 21:34; ரோமர் 13:13; 2கொரி 6:9-11; கலா 5:19-21).

ஆசாரியரின் பாகம் லேவி 10:12-20

லேவி 10:12. மோசே ஆரோனையும் மீதியாயிருந்த அவன் குமாரராகிய எலெயாசாரையும் இத்தாமாரையும் நோக்கி: நீங்கள் கர்த்தருடைய தகனபலிகளில் மீதியான போஜனபலியை எடுத்து, பலிபீடத்தண்டையிலே புளிப்பில்லாததாகப் புசியுங்கள்; அது மகா பரிசுத்தமானது.

லேவி 10:13. அதைப் பரிசுத்த ஸ்தலத்திலே புசியுங்கள்; அது கர்த்தருடைய தகனபலிகளில் உனக்கும் உன் குமாரருக்கும் ஏற்படுத்தப்பட்டதாயிருக்கிறது; இப்படிக் கட்டளை பெற்றிருக்கிறேன்.

லேவி 10:14. அசைவாட்டும் மார்க்கண்டத்தையும், ஏறெடுத்துப் படைக்கும் முன்னந்தொடையையும், நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் குமாரத்திகளும் சுத்தமான ஸ்தலத்திலே புசிப்பீர்களாக; இஸ்ரவேல் புத்திரருடைய சமாதானபலிகளில் அவைகள் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் கிடைக்கும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

லேவி 10:15. கொழுப்பாகிய தகனபலிகளோடே அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டும்படி ஏறெடுத்துப் படைக்கும் முன்னந்தொடையையும், அசைவாட்டும் மார்க்கண்டத்தையும் கொண்டுவருவார்கள்; அது கர்த்தர் கட்டளையிட்டபடியே உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் நித்திய கட்டளையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றான்.

லேவி 10:16. பாவநிவாரணபலியாகச் செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக்கடாவை மோசே தேடிப்பார்த்தான்; அது தகனிக்கப்பட்டிருந்தது; ஆகையால், மீதியாயிருந்த எலெயாசார் இத்தாமார் என்னும் ஆரோனின் குமாரர்மேல் அவன் கோபங்கொண்டு:

லேவி 10:17. பாவநிவாரணபலியை நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தில் புசியாமற்போனதென்ன? அது மகா பரிசுத்தமாயிருக்கிறதே; சபையின் அக்கிரமத்தைச் சுமந்து தீர்ப்பதற்குக் கர்த்தருடைய சந்நிதியில் அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்பொருட்டு, அதை உங்களுக்குக் கொடுத்தாரே.

லேவி 10:18. அதின் இரத்தம் பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளே கொண்டுவரப்படவில்லையே; நான் கட்டளையிட்டபடி நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கவேண்டியதாயிருந்ததே என்றான்.

லேவி 10:19. அப்பொழுது ஆரோன் மோசேயை நோக்கி: அவர்கள் தங்கள் பாவநிவாரண பலியையும், தங்கள் சர்வாங்க தகனபலியையும் கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தின இன்றுதானே எனக்கு இப்படி நேரிட்டதே; பாவநிவாரணபலியை இன்று நான் புசித்தேனானால், அது கர்த்தரின் பார்வைக்கு நன்றாய் இருக்குமோ என்றான்.

லேவி 10:20. மோசே அதைக் கேட்டபோது அமைதலாயிருந்தான்.

மோசே ஆரோனையும், மீதியாயிருக்கிற அவருடைய இரண்டு குமாரரையும், ஆசாரிய ஊழியத்தை செய்யுமாறு வழிநடத்துகிறார். நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் செத்துப்போனதினால், அவர்களுடைய ஆசாரிய ஊழியத்தில் சிறிய தடை ஏற்பட்டது. செத்துப்போனவர்களை பாளயத்திற்கு புறம்பே கொண்டுபோய் அடக்கம்பண்ணுமாறு மோசே கட்டளையிடுகிறார்.

ஆரோனும், மீதியாயிருக்கிற அவருடைய குமாரரும் சாகாதபடிக்கு ஆசரிப்புக்கூடார வாசலிலிருந்து புறப்படாதிருக்கவேண்டும் என்றும் மோசே அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார். கர்த்தரும் ஆரோனிடத்தில், ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறபோது திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்கவேண்டாம் என்று கட்டளையிடுகிறார்.

நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் செத்துப்போனதினால் ஆரோனும், மீதியாயிருக்கிற அவருடைய இரண்டு குமாரரும் வருத்தப்படுகிறார்கள். அவர்களுடைய மனதில் துக்கம் நிரம்பியிருக்கிறது. ஆனாலும் அவர்களுடைய துக்கம் ஆசாரிய ஊழியத்திற்கு தடையாயில்லை. அவர்கள் ஊழியம் செய்வதை நிறுத்திவிட்டு, செத்துப்போன நாதாபுக்காகவும், அபியூவுக்காகவும் அழுது புலம்பிக்கொண்டிருக்கவில்லை.

கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்களுக்கும் துக்கமும் வேதனையும் வரும். நம்முடைய ஊழியங்களுக்கு துக்கம் தடையாகயிருக்கக்கூடாது. நாம் கர்த்தருக்காக செய்யும் ஊழியத்தை இன்னும் அதிக உற்சாகத்தோடு செய்வதற்கு, நம்முடைய துக்கம் உதவியாயிருக்கவேண்டும்.

மோசே ஆரோனையும் மீதியாயிருக்கிற அவன் குமாரராகிய எலெயாசாரையும் இத்தாமாரையும் நோக்கி ஆசாரிய ஊழியக்காரியங்களைக் குறித்து பேசுகிறார். மோசே இதற்குமேல் செத்துப்போன நாதாபையும் அபியூவையும் குறித்து அவர்களிடத்தில் ஒன்றும் சொல்லவில்லை. மோசே அவர்களிடத்தில் துக்கமான காரியங்களைக் குறித்து பேசுவதற்கு பதிலாக ஊழியக்காரியங்களைக் குறித்து பேசுகிறார்.

ஆரோனின் இரண்டு குமாரர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்துப்போனார்கள். ஆரோனுடைய குடும்பத்திலே பெரிய இழப்பு உண்டாயிற்று. ஆரோன் செத்துப்போன தன் குமாரரை நினைத்து துக்கப்படாமல், உயிரோடிருக்கிற மற்ற இரண்டு குமாரர்களை நினைத்து ஆறுதலடையவேண்டும். கர்த்தர் தமது கிருபையினால், தன்னுடைய முழுக்குடும்பத்தையும் அழித்துப்போடாமல், தன்னுடைய குமாரரில் இரண்டு பேரை உயிரோடு வைத்திருக்கிறார் என்பதை நினைத்து ஆரோன் கர்த்தரை துதிக்கவேண்டும். அவர் கர்த்தருடைய சமுகத்திலே ஆறுதல் பெறவேண்டும்.

ஆரோனின் குமாரரில் இரண்டுபேர் செத்துப்போகாமல் உயிரோடிருப்பதினால், கர்த்தர் அவர்களுடைய ஆசாரிய ஊழியத்தை அங்கீகரிக்கிறார் என்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தை, நிறுத்திவிடாமல், அதை தொடர்ந்து செய்யவேண்டும். ஊழியக்காரர்கள், கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தை நிறுத்திப்போடுவதற்கு காரணத்தை தேடிக்கொண்டிராமல், ஊழியத்தை தொடர்ந்து செய்வதற்கு, கர்த்தருடைய கிருபையை பெற்றுக்கொள்ளவேண்டும்.

மோசே ஆரோனுடைய நான்கு குமாரரையும் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணினார். அந்த நான்கு ஆசாரியர்களில் இரண்டு பேர் கர்த்தருடைய சந்நிதியில் செத்துப்போனார்கள். இப்போது மீதமுள்ள இரண்டு ஆசாரியர் மாத்திரமே உயிரோடிருக்கிறார்கள். உயிரோடிருக்கிற இரண்டு ஆசாரியர்களும், செத்துப்போன இரண்டு ஆசாரியர்களுடைய ஊழியங்களையும் கூடுதலாக செய்யவேண்டும். இதன் மூலமாக, ஆரோனுடைய குமாரரில், உயிரோடிருக்கிற இரண்டு ஆசாரியர்களுக்கும் ஆசாரிய ஊழியம் இரண்டு மடங்காக அதிகரிக்கிறது. அவர்கள் ஆசாரிய ஊழியத்தை இன்னும் மிகுந்த கவனத்தோடும், மிகுந்த உற்சாகத்தோடும் செய்யவேண்டும். நான்கு ஆசாரியர்கள் செய்யவேண்டிய ஊழியத்தை, இனிமேல் இரண்டு ஆசாரியர்கள் செய்யவேண்டும்.

கர்த்தருடைய சமுகத்தில் செலுத்தப்படும் பலிகளில் ஆசாரியரின் பங்கைப்பற்றி, மோசே ஏற்கெனவே அவர்களுக்கு சொல்லியிருக்கிறார். அவர்கள் தங்களுக்கு பாகமாக கொடுக்கப்படும் பங்கை, பரிசுத்தஸ்தலத்திலே புசிக்கவேண்டும்.

மோசே ஆரோனையும் மீதியாயிருக்கிற அவருடைய குமாரராகிய எலெயாசாரையும் இத்தாமாரையும் நோக்கி, "நீங்கள் கர்த்தருடைய தகனபலிகளில் மீதியான போஜனபலியை எடுத்து, பலி பீடத்தண்டையிலே புளிப்பில்லாததாகப் புசியுங்கள்; அது மகா பரிசுத்தமானது. அதைப் பரிசுத்த ஸ்தலத்திலே புசியுங்கள்; அது கர்த்தருடைய தகனபலிகளில் உனக்கும் உன் குமாரருக்கும் ஏற்படுத்தப்பட்டதாயிருக்கிறது; இப்படிக் கட்டளை பெற்றிருக்கிறேன்" (லேவி 10:12,13) என்று சொல்லுகிறார்.

மேலும் மோசே அவர்களை நோக்கி, "அசைவாட்டும் மார்க்கண்டத்தையும், ஏறெடுத்துப் படைக்கும் முன்னந்தொடையையும், நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் குமாரத்திகளும் சுத்தமான ஸ்தலத்திலே புசிப்பீர்களாக; இஸ்ரவேல் புத்திரருடைய சமாதானபலிகளில் அவைகள் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் கிடைக்கும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது" (லேவி 10:14) என்றும்,

"கொழுப்பாகிய தகனபலிகளோடே அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டும்படி ஏறெடுத்துப் படைக்கும் முன்னந்தொடையையும், அசைவாட்டும் மார்க்கண்டத்தையும் கொண்டுவருவார்கள்; அது கர்த்தர் கட்டளையிட்டபடியே உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் நித்திய கட்டளையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது" (லேவி 10:15) என்றும் சொல்லுகிறார்.

ஆசாரியரின் பங்கு சம்பந்தமான கட்டளைகளின் விவரம் :

1. தகனபலிகளில் மீதியான போஜன பலியை எடுத்துக் கொள்ள வேண்டும்.
2. புளிப்பில்லாததாகப் புசிக்க வேண்டும்.
3. பலிபீடத்தண்டையிலே புசிக்க வேண்டும். (லேவி 10:13).
4. அசைவாட்டும் மார்க்கண்டத்தையும், ஏறெடுத்துப் படைக்கும் முன்னந்தொடையையும், ஆசாரியருடைய குடும்பத்தார் அனைவரும் சுத்தமான ஸ்தலத்திலே புசிக்க வேண்டும். (லேவி 10:14).
5. கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டும்படி ஏறெடுத்துப் படைக்கும் முன்னந்தொடையும், அசைவாட்டும் மார்க்கண்டமும் ஆசாரியருடைய பங்காகும். (லேவி 10:15).
6. அது கர்த்தர் கட்டளையிட்டபடியே ஆசாரியருக்கு நித்திய கட்டளையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது (லேவி 10:15).

பரிசுத்த ஸ்தலத்திலுள்ள பொன்பலிபீடத்தை இந்த வாக்கியம் குறிக்கிறது. பலிகளைச் செலுத்தும்போது ஆசாரிய ஊழியம் செய்யும் பிரதான ஆசாரியனும், மற்ற ஆசாரியரும் சர்வாங்க தகனபலிகளின் இந்தப் பகுதியைப் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்க வேண்டும். ஆசாரிய ஊழியம் செய்யாதவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் வரக்கூடாது. அவர்கள் தகனபலிகளில் மீதியானதைப் புசிக்கக்கூடாது. சமாதானபலிகளின் ஒரு பங்கை ஆசாரியரின் குடும்பத்தார் பரிசுத்தமான இடத்தில் புசிக்கலாம் (லேவி 10:14-15). இந்தப் பரிசுத்த இடம் வெளிப்பிராகாரத்திலோ அல்லது ஆசரிப்புக் கூடாரத்திற்கு வெளியிலோ இருக்கலாம்.

போஜனபலியை புசிப்பது சம்பந்தமாக மோசே அவர்களுக்கு நியமித்த காரியங்களில், ஆரோனும், உயிரோடிருக்கிற அவருடைய இரண்டு குமாரரும் ஒரு காரியத்தை மீறுகிறார்கள்.

பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக்கடாவை மோசே தேடிப்பார்க்கிறார். அது தகனிக்கப்பட்டிருக்கிறது. ஆரோனும் அவருடைய குமாரரும் பாவநிவாரண பலியை பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கவில்லை (லேவி 10:16,17).

பாவநிவாரணபலியாகச் செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக்கடாவைப் பற்றிய பிரமாணம் லேவி 2:1-16; லேவி 9:15-16 ஆகிய வசனங்களில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. நாதாப், அபியூ ஆகியோருடைய மரணத்தினால் ஆசாரியர் மத்தியிலே குழப்பம் உண்டாயிற்று. (லேவி 10:1-10) ஆகையினால் வெள்ளாட்டுக்கடா பரிசுத்த இடத்திலே புசிக்கப்படுவதற்குப் பதிலாக அது தகனிக்கப்பட்டிருக்கிறது. (லேவி 10:17-19).

ஆரோன் பிரதான ஆசாரியனுடைய ஊழியத்திற்கு இப்பொழுது தான் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய ஊழியம் நன்றாக நடைபெற்றது. (லேவி 9:1-24) ஆரோனுடைய குமாரர்கள் ஆசாரிய ஊழியம் செய்ய ஆரம்பிக்கும்போது எல்லாமே பிரச்சனையாகிவிடுகிறது. (லேவி 10:1-20)

"பின்பு அவன் ஜனங்களின் பலியைக் கொண்டுவந்து, ஜனங்களின் பாவநிவிர்த்திக்குரிய வெள்ளாட்டுக்கடாவைக் கொன்று, முந்தினதைப் பலியிட்டது போல, அதைப் பாவநிவாரணபலியாக்கி, சர்வாங்க தகனபலியையும் கொண்டு வந்து, நியமத்தின்படி அதைப் பலியிட்டு, போஜனபலியையும் கொண்டுவந்து, அதில் கைநிறைய எடுத்து, அதைக் காலையில் செலுத்தும் சர்வாங்க தகனபலியுடனே பலிபீடத்தின்மேல் தகனித்தான்" (லேவி 9:15-17).

ஜனங்களின் பாவநிவர்த்திக்குரிய வெள்ளாட்டுக்கடாவை கொல்லும்போது, அதனுடைய இரத்தம் பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டு வரப்படவேண்டும். ஆசாரியரின் பாவநிவிர்த்திக்குரிய பலியில் செய்யப்படுவதுபோலவே, ஜனங்களின் பாவநிவிர்த்திக்குரிய பலியிலும் செய்யப்படவேண்டும். அதன்பின்பு கொல்லப்பட்ட வெள்ளாட்டுக்கடாவின் மாம்சம் பாளயத்திற்கு புறம்பே தகனிக்கப்படவேண்டும்.

மோசே இப்போது பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக்கடாவை தேடிப்பார்க்கிறார். அதன் இரத்தம் பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுவரப்படவில்லை. ஆனாலும் அந்த வெள்ளாட்டுக்கடாவின் மாம்சம் பாளயத்திற்கு புறம்பே சுட்டெரிக்கப்படுகிறது.

ஆகையால், மோசே மீதியாயிருந்த எலெயாசார் இத்தாமார் என்னும் ஆரோனின் குமாரர்மேல் கோபங்கொள்கிறார். மோசே அவர்களை நோக்கி, "பாவநிவாரணபலியை நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தில் புசியாமற்போனதென்ன? அது மகா பரிசுத்தமாயிருக்கிறதே; சபையின் அக்கிரமத்தைச் சுமந்து தீர்ப்பதற்குக் கர்த்தருடைய சந்நிதியில் அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்பொருட்டு, அதை உங்களுக்குக் கொடுத்தாரே. அதின் இரத்தம் பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளே கொண்டுவரப்படவில்லையே; நான் கட்டளையிட்டபடி நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கவேண்டியதாயிருந்ததே" (லேவி 10:17,18) என்று சொல்லுகிறார்.

ஆரோனின் குமாரர்கள் இரண்டுபேரும், தங்கள் தகப்பனாருடைய வழிநடத்துதலின் பிரகாரமாக பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தை, பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே கொண்டு வராமலும், அதன் மாம்சத்தை பரிசுத்த ஸ்தலத்திலே புசியாமலும் இருந்திருக்கலாம். மோசே ஆரோனுடைய குமாரரிடத்தில் இது பற்றிகேட்டபோது, அவர்கள் மோசேக்கு பதில் சொல்லவில்லை. அவர்களுக்கு பதிலாக ஆரோன் மோசேக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

ஆரோன் மோசேயை நோக்கி, "அவர்கள் தங்கள் பாவநிவாரண பலியையும், தங்கள் சர்வாங்க தகனபலியையும் கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தின இன்றுதானே எனக்கு இப்படி நேரிட்டதே; பாவநிவாரணபலியை இன்று நான் புசித்தேனானால், அது கர்த்தரின் பார்வைக்கு நன்றாய் இருக்குமோ" (லேவி 10:19) என்று சொல்லுகிறார்.

ஆரோன் மோசேயினிடத்தில், "எனக்கு இப்படி நேரிட்டதே" என்று சொல்லுவது, நாதாப் அபியூ ஆகியோரின் மரணத்தைக் குறிக்கிறது. அவர்கள் இருவரும் கர்த்தருடைய சந்நிதியில் செத்துப்போனதினால் ஆரோனுடைய இருதயம் வேதனைப்படுகிறது. ஆகையினால் ஆரோன் இதுபற்றிச் சொல்லும்போது, "அவர்கள் தங்கள் பாவநிவாரண பலியையும், தங்கள் சர்வாங்க தகனபலியையும் கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தின இன்றுதானே எனக்கு இப்படி நேரிட்டதே" என்று மனவேதனையோடு சொல்லுகிறார்.

ஆரோன் பிரதான ஆசாரியனாகயிருந்தாலும், அவருடைய இருதயத்திலும் பாசம் இருக்கிறது. தன்னுடைய குமாரரைக் குறித்து அவருடைய மனதில் அக்கரையிருக்கிறது. ஆரோன் ஆசாரியரின் பரிசுத்த வஸ்திரத்தை தரித்திருந்தாலும், அவருடைய மனதிலே ஒரு தகப்பனுடைய பாசமும் நேசமும் நிரம்பியிருக்கிறது. அந்தப் பாசம் அவரை விட்டு நீங்கவில்லை.

நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் செத்துப்போனதைப்பற்றி, மோசே ஆரோனிடத்தில் சொன்னபோது, ஆரோன் பேசாமல் அமைதியாயிருந்தார் (லேவி 10:3). அவருடைய வாயிலிருந்து வார்த்தைகள் வெளிப்படாவிட்டாலும், அவருடைய இருதயத்திலிருந்து துக்கமும் வேதனையும் வெளிப்படுகிறது. அவருக்குள்ளே வருத்தமும் கலக்கமும் நிரம்பி வழிகிறது.

ஆரோனும் அவருடைய குமாரரும் பாவநிவாரணபலியின் மாம்சத்தை, மோசே அவர்களுக்கு கட்டளையிட்டபடி, பரிசுத்த ஸ்தலத்திலே புசித்திருக்கவேண்டும். ஆனால் அவர்களோ அதை அங்கே புசிக்கவில்லை. ஆரோன் இதுபற்றி மோசேயினிடத்தில் சொல்லும்போது, "இன்றுதானே எனக்கு இப்படி நேரிட்டதே; பாவநிவாரணபலியை இன்று நான் புசித்தேனானால், அது கர்த்தரின் பார்வைக்கு நன்றாய் இருக்குமோ" என்று கேட்கிறார். மோசே அதைக் கேட்டபோது ஒன்றும் பேசாமல் அமைதலாயிருக்கிறார்.

பாவநிவாரண பலியின் மாம்சத்தை ஆரோனும் அவருடைய குமாரரும் பரிசுத்த ஸ்தலத்திலே புசிக்கவேண்டும் என்று மோசே கட்டளை கொடுத்திருக்கிறார். ஆனாலும் ஆரோனும், உயிரோடிருக்கிற அவருடைய இரண்டு குமாரரும், மிகுந்த துக்கத்திலும், மிகுந்த மனவேதனையிலும், மிகுந்த வருத்தத்திலும் இருப்பதினால், அவர்கள் மோசேயின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல், பாவநிவாரண பலியின் மாம்சத்தை புசியாதிருக்கிறார்கள். அவர்களுடைய ஆவி துக்கமாயிருக்கிறது. அவர்களுடைய மனது கலங்கியிருக்கிறது.

ஆரோன் தன்னுடைய மனதிலே துக்கத்தையும், வேதனையையும் சுமந்துகொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட துக்கமான சூழ்நிலையில், தான் பாவநிவாரண பலியை புசிப்பது கர்த்தரின் பார்வைக்கு நன்றாயிருக்குமோ என்று கேட்கிறார். ஆரோன் சொல்லுகிற காரணத்தை மோசே அங்கீகரித்து, ஒன்றும் பேசாமல் அமைதியாயிருக்கிறார்.

ஆரோனும் அவருடைய குமாரரும் பாவநிவாரண பலியின் மாம்சத்தைப் புசிப்பது சம்பந்தமாக தான் சொன்ன கட்டளையை மீறியிருந்தாலும், அவர்கள் செய்தது மோசேயின் பார்வைக்கு நியாயமானதாக தெரிகிறது. பாவநிவாரணபலியின் மாம்சத்தில் மீதமாயிருப்பது பாளயத்திற்கு புறம்பே சுட்டெரிக்கப்படவேண்டும். ஆரோனும் அவருடைய குமாரரும், பாவநிவாரண பலியின் மாம்சத்தை, பரிசுத்த ஸ்தலத்தில் புசியாமலேயே, அதை பாளயத்திற்கு புறம்பே சுட்டெரித்துப்போடுகிறார்கள்.

ஆசாரியரின் குழப்பங்களைப்பற்றியும், தோல்விகளைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. நாதாபும், அபியூவும் மதுபானவெறியோடு கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்ய முயற்சி பண்ணினார்கள். அவர்கள் கொல்லப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணம். (லேவி 10:1-5,9).

2. மற்ற ஆசாரியர்களுக்குக் கடுமையான எச்சரிப்பு கொடுக்கப்படுகிறது. கர்த்தருடைய பிரமாணத்திற்கு எதிராக ஆசாரியர்கள் செயல்படக்கூடாது. செத்துப்போன நாதாபு, அபியூ ஆகியோருக்காக இவர்கள் துக்கம் அனுசரிக்கவும் கூடாது. இதை மீறினால் இவர்களும் கொல்லப்படுவார்கள் (லேவி 10:6-7).

3. மதுபான வெறியைக் குறித்து மற்ற ஆசாரியர்களுக்கும், கட்டளை கொடுக்க வேண்டிய அவசியம் உண்டாயிற்று. (லேவி 10:9).

4. பரிசுத்தமுள்ளதற்கும், பரிசுத்தமில்லாததற்கும் தீட்டுள்ளதற்கும், தீட்டில்லாததற்கும் வித்தியாசம் பண்ண வேண்டும் என்னும் கட்டளையை வலியுறுத்த வேண்டிய அவசியம் உண்டாயிற்று. (லேவி 10:10).

5. கர்த்தர் மோசேயைக்கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்ன சகல பிரமாணங்களையும் அவர்களுக்குப் போதிக்கும்படிக்கு நித்திய கட்டளை கொடுக்கப்பட்டது. (லேவி 10:11).

6. கர்த்தருடைய தகனபலிகளில் மீதியான போஜனபலியை எடுத்து, பலி பீடத்தண்டையிலே புளிப்பில்லாததாகப் புசிக்க வேண்டும் என்னும் கட்டளை ஆசாரியருக்கு மறுபடியும் கூறப்படுகிறது (லேவி 10:12-20).

7. ஆசாரியர் கீழ்ப்படியாமையின் இரண்டு காரியங்களைச் செய்து தவறு பண்ணுகிறார்கள். (லேவி 10:18).

ஆசாரியரின் தோல்வி மோசேக்கும், பிரச்சனையாயிற்று. தேவன் தங்களை நியாயந்தீர்ப்பாரோ என்னும் பயம் மோசேக்கு வந்தது. தேவன் ஆரோனிடம் முதல் மூன்று கட்டளைகளைக் கூறுகிறார். (லேவி 10:8-11) மேலும் ஆறு கட்டளைகளை மோசே கூறுகிறார். (லேவி 10:12-15) ஆசாரியர் கீழ்ப்படியாமல் தவறு செய்கிறார்கள். மோசே அவர்களைக் கடிந்து கொள்கிறார். (லேவி 10:16-20).

"சபையின் அக்கிரமத்தைச் சுமந்து தீர்ப்பதற்குக் கர்த்தருடைய சந்நிதியில் அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும் பொருட்டு, அதை உங்களுக்குக் கொடுத்தாரே" (லேவி 10:17) என்று மோசே ஆசாரியருக்கு சொல்லுகிறார்.

ஆசாரியர், அவருடைய குடும்பத்தார், பலிசெலுத்தும் இஸ்ரவேலர் ஆகியோர் பலிகளின் ஒரு பகுதியைப் புசிப்பது பாவநிவாரண கிரியையோடு தொடர்புடையது. அது மகா பரிசுத்தமானது. (லேவி 10:12-19). புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்குக் கர்த்தருடைய பந்தி எவ்வளவு முக்கியமானதோ அந்தளவிற்குப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாவநிவாரண பலியின் ஒரு பகுதியைப் புசிப்பது மிகவும் முக்கியமானதாயிருக்கிறது (2கொரி 11).

ஆசாரியர் கீழ்ப்படியாமல் செய்த தவறுகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. பாவநிவாரண பலியின் இரத்தம் பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளே கொண்டுவரப்படவில்லை. இரத்தம் பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுவரப்பட்டு, தேவனுடைய சமுகத்திற்கு முன்பாகத் தெளிக்கப்பட வேண்டும். பொன்பலி பீடத்திலுள்ள கொம்புகளில் பூசப்பட வேண்டும். ஆனால் இதைச் செய்வதற்கு ஆசாரியர்கள் இரத்தத்தைப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுவரவில்லை. (லேவி 4:5-7,15-19; லேவி 9:15).

2. பாவநிவாரண பலியின் மாம்சத்தை அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கவில்லை. லேவி 6:26,29; லேவி 7:6-7 ஆகிய வசனங்களில் அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் அதைப் புசிக்க வேண்டுமென்று கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது.

"அது கர்த்தரின் பார்வைக்கு நன்றாய் இருக்குமோ" (லேவி 10:19) என்று ஆரோன் மோசேயினிடத்தில் கேட்கிறார். ஆரோன் தன்னுடைய இரண்டு குமாரர்களையும் இப்பொழுதுதான் இழந்திருக்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தன்னைத்தானே கட்டாயப்படுத்தி அவரால் பாவநிவாரண பலியைப் புசிக்க முடியாது. கர்த்தரும் அதில் பிரியப்படமாட்டார் என்று கூறுகிறார்.

மோசே அதைக் கேட்டபோது அமைதலாயிருக்கிறார். மோசே இதற்கு மேலும் ஆரோனோடு வாக்குவாதம் பண்ணவில்லை. இரண்டு மகன்களையும் இழந்த தந்தையினுடைய மனநிலை எப்படியிருக்கும் என்பதை மோசே புரிந்து கொள்கிறார். நாதாபும், அபியூவும் மரித்துப்போனார்கள். அவர்களுக்காக ஆரோன் அழவும்கூடாது. துக்கம் அனுசரிக்கவும்கூடாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பாவநிவாரண பலியைப் புசிக்கும் மனநிலை ஆரோனுக்கு இராது என்பதைப் புரிந்து கொண்டு மோசே அமைதலாயிருக்கிறார்.

11 அதிகாரம்

எபிரெயருக்கு நிருபம் எழுதின ஆசிரியர் சடங்காச்சார பிரமாணங்களைப்பற்றி எழுதியிருக்கிறார்

"அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம். இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல" (எபி 9:9,10).

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு காணிக்கைகள், பலிகள், ஆராதனைகள் ஆகியவை சம்பந்தமான பிரமாணத்தை சொல்லியிருக்கிறார். அதுபோலவே அவர் போஜனபானங்கள், பல்வேறுவிதமான ஸ்நானங்கள் ஆகியவற்றைப்பற்றியும் தம்முடைய பிரமாணத்தில் சொல்லியிருக்கிறார்.

மிருகங்களில் புசிக்கத்தக்க ஜீவஜந்துக்கள் என்றும், புசிக்க தகாத அசுத்தமான ஜீவஜந்துக்கள் என்றும் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் இவ்விரண்டு விதமான மிருகஜீவன்களுக்கும் வித்தியாசம் சொல்லுகிறார். சுத்தமான மிருகஜீவன்களை புசிக்கலாம். அசுத்தமான மிருகஜீவன்களை புசிக்கக்கூடாது.

ஜீவஜந்துக்களைப்பற்றிய பிரமாணம் (லேவி 11:1-8). ஜலத்திலிருக்கிற மச்சங்களைப்பற்றிய பிரமாணம் (லேவி 11:9-12). பறவைகளைப்பற்றிய பிரமாணம் (லேவி 11:13-19). ஊரும் பிராணிகள் பற்றிய பிரமாணம் (லேவி 11:20-28). தரையில் ஊருகிற பிராணிகள் பற்றிய பிரமாணம் (லேவி 11:29-43).

கர்த்தர் சுத்தமானதற்கும் அசுத்தமானதற்கும் வித்தியாசம் சொல்லுகிறார். சுத்தமான மிருகஜீவன்களைப்பற்றிய பொதுவான பிரமாணம். அசுத்தமான மிருகஜீவன்களை புசியாமலிருப்பதற்கான காரணம் (லேவி 11:44-47).

ஜீவ ஜந்துக்கள்
லேவி 11:1-8

லேவி 11:1. கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:

லேவி 11:2. நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், பூமியிலிருக்கிற சகல மிருகங்களிலும் நீங்கள் புசிக்கத்தக்க ஜீவ ஜந்துக்கள் யாதெனில்:

லேவி 11:3. மிருகங்களில் விரிகுளம்புள்ளதாயிருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும் அசைபோடுகிறதுமானவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம்.

லேவி 11:4. ஆனாலும், அசைபோடுகிறதும் விரிகுளம்புள்ளதுமானவைகளில் ஒட்டகமானது அசை போடுகிறதாயிருந்தாலும், அதற்கு விரிகுளம்பில்லாதபடியால், அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும்.

லேவி 11:5. குழிமுசலானது அசைபோடுகிறதாயிருந்தாலும், அதற்கு விரிகுளம்பில்லை; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும்.

லேவி 11:6. முயலானது அசைபோடுகிறதாயிருந்தும், அதற்கு விரிகுளம்பில்லை; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும்.

லேவி 11:7. பன்றியின் குளம்பு விரிகுளம்பும் இரண்டாகப் பிரிந்ததுமாயிருந்தும், அது அசைபோடாது; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும்.

லேவி 11:8. இவைகளின் மாம்சத்தைப் புசிக்கவும், இவைகளின் உடல்களைத் தொடவும் வேண்டாம்; இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது.

ஆரோன் தேவனுடைய வீட்டிற்கு பிரதான ஆசாரியராக பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிறார். கர்த்தர் இப்போது மோசேயோடு பேசும்போது, ஆரோனோடும் சேர்ந்து பேசுகிறார். மோசேயும் ஆரோனும் கர்த்தருக்கு உடன் ஊழியக்காரர்களாயிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் ஒருமனப்பட்டு கர்த்தருடைய சித்தத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டும்.

ஆசாரியர்கள் சுத்தமானதற்கும் அசுத்தமானதற்கும் வித்தியாசம்பண்ண வேண்டும். அவர்களுக்கு சுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் வித்தியாசம் தெரிந்திருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களால், சுத்தமானதையும், அசுத்தமானதையும் பற்றி ஜனங்களுக்கு போதிக்க முடியும். ஆசாரியர்கள் ஜனங்களுக்கு போதிக்கவேண்டியவர்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் என்ன செய்யவேண்டும் என்றும், என்ன செய்யக்கூடாது என்றும் ஆசாரியர்கள் அவர்களுக்கு போதிப்பார்கள். ஆசாரியர்கள் மாம்சத்தைப் புசிக்கலாம். ஆனாலும் எல்லாவிதமான மாம்சங்களையும் அவர்கள் புசிக்கக்கூடாது. ஒரு சில ஜீவஜந்துக்களின் மாம்சங்கள் அசுத்தமானவை. ஆசாரியர்கள் அவற்றை புசிக்கக்கூடாது. அவை அவர்களுக்கு தீட்டானவை.

ஆசாரியர்கள் சுத்தமான மாம்சத்தை புசிக்கலாம். ஜீவஜந்துக்களில் சில அசுத்தமாயிருக்கிறது. கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார். கர்த்தருடைய பிரமாணத்தின்படி, ஆசாரியர்கள் அசுத்தமான மாம்சத்தைப் புசிப்பதற்கு தடைபண்ணப்பட்டிருக்கிறார்கள். அசுத்தமான மிருகத்தின் மாம்சங்கள் புசிப்பதற்கு தகுதியற்றவை.

ஒரு சில மிருகஜீவஜந்துக்களின் மாம்சத்தை சுத்தமானது என்று நாம் நினைப்போம். ஆனால் கர்த்தரோ அதை அசுத்தமானது என்று சொல்லுகிறார். ஆசாரியர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். எந்த ஜீவஜந்துக்களை கர்த்தர் அசுத்தமானது என்று சொல்லுகிறாரோ, அந்த ஜீவஜந்துக்கள் ஆசாரியருக்கும் அசுத்தமாயிருக்கவேண்டும். மனுஷர் குழிமுசலை சாப்பிடுகிறார்கள். குழிமுசல் சுத்தமான ஜீவஜந்து என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். கர்த்தரோ குழிமுசலை அசுத்தமானது என்று சொல்லி, அதை புசிப்பதற்கு தடைபண்ணிவிடுகிறார்.

பல தேசங்களிலே பன்றியின் மாம்சத்தைப் புசிக்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய பிரமாணத்தின்படி பன்றியானது அசுத்தமான ஜீவஜந்தாகவே இருக்கிறது. கர்த்தர் எந்தெந்த ஜீவஜந்துக்களை புசிக்கக்கூடாது என்று சொல்லுகிறாரோ, அவற்றை நாம் புசியாமலிருப்பது நமக்கு நல்லது. அந்த ஜீவஜந்துக்களின் மாம்சம் நம்முடைய சரீரத்திற்கு தீமையானதாகயிருக்கலாம். தீட்டான மாம்சத்தைப் புசிப்பதினால் நம்முடைய சரீர ஆரோக்கியம் கெட்டுப்போகலாம்.

கர்த்தரே நம்முடைய சரீரத்திற்கு ஆண்டவராயிருக்கிறார். நம்முடைய சரீரத்தை கர்த்தர் ஆளுகை செய்யவேண்டும். நம்முடைய சுயஇஷ்டங்களும், சுயஇச்சைகளும், சுயஆசைகளும் நம்முடைய சரீரங்களை ஆளுகை செய்யக்கூடாது. நம்முடைய சரீரத்தின் ஆசைகளையும், இச்சைகளையும் நிறைவேற்றுவதற்காக, நமக்கு இஷ்டமானதை புசித்து, நம்முடைய சரீர ஆரோக்கியத்தை கெடுத்துப்போடக்கூடாது. நம்முடைய சரீரத்தை கெடுத்துப்போடுவது, கர்த்தருக்கு விரோதமாக நாம் செய்கிற பாவம்.

நம்முடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு பிரியமானதை செய்ய நாடாமல், கர்த்தருக்கு பிரியமானதை செய்ய நாம் நாடவேண்டும். நம்முடைய போஜன விஷயங்களில் நாம் மிகுந்த கவனத்தோடிருக்கவேண்டும். பெருந்தீனி உண்பது நம்முடைய சரீர ஆரோக்கியத்தைக் கெடுத்துப்போடும்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு போஜனம்பண்ணுவது சம்பந்தமான பிரமாணத்தை சொல்லுவதற்கு முன்பாகவே, இஸ்ரவேல் ஜனத்தாருக்கும், புறஜாதி ஜனத்தாருக்கும் போஜனவிஷயங்களில் வித்தியாசம் இருந்தது. ஒவ்வொரு தேசத்தாரும் தங்களுடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரமாக, ஒரு சில போஜனங்களை புசிக்கிறார்கள். அவர்கள் வேறு சில போஜனங்களை அசுத்தமானது என்று தள்ளிவிடுகிறார்கள். ஒரு தேசத்தாருக்கு சுத்தமான மாம்சமாயிருப்பது, மற்ற தேசத்தாருக்கு அது அசுத்தமானதாயிருக்கிறது. அதுபோலவே ஒரு தேசத்தாருக்கு அசுத்தமாயிருப்பது, மற்ற தேசத்தாருச்கு அசுத்தமானதாகவோ அருவருப்பானதாகவோ இருப்பதில்லை.

பூர்வகாலங்களில் எபிரெயர்களும் எகிப்தியர்களும் ஒன்றாய் அமர்ந்து போஜனம்பண்ணுவதில்லை. "எகிப்தியர் எபிரெயரோடே சாப்பிட மாட்டார்கள்; அப்படிச் செய்வது எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கும்; ஆகையால், அவனுக்குத் தனிப்படவும், அவர்களுக்குத் தனிப்படவும், அவனோடே சாப்பிடுகிற எகிப்தியருக்குத் அவர்களுக்குத் தனிப்படவும் வைத்தார்கள்" (ஆதி 43:32).

கர்த்தர் ஜீவஜந்துக்களில் ஒரு சில மிருகங்களை புசிக்கக்கூடாது என்று தடைபண்ணுகிறார். இந்த மிருகங்கள் கர்த்தருடைய பார்வையில் அசுத்தமானதாகவும், தீட்டானதாகவும் இருக்கிறது. புறஜாதியார் இந்த மிருகஜீவன்களை தங்களுடைய விக்கிரகங்களுக்கு பலியாகசெலுத்துகிறார்கள். அவர்கள் தங்களுடைய விக்கிரகாரா தனையிலும், குறிசொல்லுவதிலும் இந்த மிருகங்களில் மாம்சத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆகையினால் கர்த்தர் இந்த மிருகங்களை அசுத்தமான மிருகங்கள் என்று சொல்லுகிறார்.

கர்த்தர் அசுத்தமானது என்று சொல்லும் மிருகங்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் அசுத்தமானதாயிருக்க வேண்டும். இந்த மிருகங்கள் கர்த்தருடைய பார்வையில் அருவருப்பானவை. இந்த மிருகங்களின் மாம்சம் தீட்டானது. இஸ்ரவேல் ஜனத்தார் அசுத்தமான மாம்சத்தைப் புசித்து தங்களை கர்த்தருக்கு முன்பாக தீட்டுப்படுத்திக்கொள்ளக்கூடாது.

விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட மாம்சத்தை இஸ்ரவேல் ஜனத்தார் புசிக்கக்கூடாது. அப்படிப்பட்ட மாம்சத்தை கர்த்தருடைய ஜனத்தார் அருவருத்து ஒதுக்கி தள்ளவேண்டும். விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட மாம்சத்தைப் புசிக்கிறவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே சோதனைக்குட்படுத்திக் கொள்கிறார்கள். விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட மாம்சத்தைப் புசிக்கிறவர்கள், விக்கிரகாராதனையில் ஈடுபடுவதற்கும் வாய்ப்புள்ளது.

புறஜாதி ஜனத்தார் விக்கிரகங்களை ஆராதிக்கும்போது, ஒவ்வொரு விக்கிரகத்திற்கும் ஒரு மிருகத்தை விசேஷமாக நியமித்திருக்கிறார்கள். இந்த மிருகங்கள் அவர்களுடைய விக்கிரகாராதனையில் மிகவும் முக்கியமானது.

கிரேக்கருடைய வீனஸ் என்னும் தெய்வத்திற்கு பன்றியின் மாம்சம் பரிசுத்தமானது. அவர்களுடைய மினர்வா என்னும் தெய்வத்திற்கு ஆந்தையும், யூப்பித்தருக்கு கழுகும், கேகேட் என்னும் விக்கிரகத்திற்கு நாயும் பரிசுத்தமான மிருகங்களாகும். விக்கிரகங்களுக்கு பரிசுத்தமான இந்த மிருகங்களை, கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் அசுத்தமானது என்றும், தீட்டானது என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், பூமியிலிருக்கிற சகல மிருகங்களிலும் நீங்கள் புசிக்கத்தக்க ஜீவ ஜந்துக்கள் யாதெனில்: . மிருகங்களில் விரிகுளம்புள்ளதாயிருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும் அசைபோடுகிறதுமானவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம்" (லேவி 11:1-3) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் பூமியிலிருக்கிற சகல மிருகங்களிலும், புசிக்கத்தக்க ஜீவஜந்துக்களின் அட்டவணை உபா 14:4-6-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"நீங்கள் புசிக்கத்தகும் மிருகங்களாவன: மாடும், செம்மறியாடும், வெள்ளாடும், மானும், வெளிமானும், கலைமானும், வரையாடும், புள்ளிமானும், சருகுமானும் புல்வாயுமே. மிருகங்களில் விரிகுளம்புள்ளதாயிருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரித்திருக்கிறதும், அசைபோடுகிறதுமான சகல மிருகங்களையும் நீங்கள் புசிக்கலாம்" (உபா 14:4-6).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தர் தங்களுக்கு அனுமதித்திருக்கிற சுத்தமான மிருகங்களை மாத்திரமே புசிக்கவேண்டும். அவர்கள் எந்தெந்த மிருகங்களை புசிக்கக்கூடாது என்றும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "நீங்கள் ஆனாலும், அசைபோடுகிறதும் விரிகுளம்புள்ளதுமானவைகளில் ஒட்டகமானது அசைபோடுகிறதாயிருந்தாலும், அதற்கு விரிகுளம்பில்லாதபடியால், அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும்" என்றும்,

"குழிமுசலானது அசைபோடுகிறதாயிருந்தாலும், அதற்கு விரிகுளம்பில்லை; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். முயலானது அசைபோடுகிறதாயிருந்தும், அதற்கு விரிகுளம்பில்லை; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். பன்றியின் குளம்பு விரிகுளம்பும் இரண்டாகப் பிரிந்ததுமாயிருந்தும், அது அசைபோடாது; அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும்" (லேவி 11:4-7) என்றும் சொல்லுகிறார்.

சுத்தமான மிருகங்களின் குணாதிசயங்களைப்பற்றி கர்த்தர் இங்கு சொல்லுகிறார். அவையாவன : 1. அவை விரிகுளம்புள்ளதாயிருக்கவேண்டும். 2. அவற்றின் குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கவேண்டும் 3. அவை அசைபோடுகிறவைகளாயிருக்கவேண்டும்.

கர்த்தர் சுத்தமான ஜீவஜந்துக்களையும், அசுத்தமான ஜீவஜந்துக்களையும் பற்றி சொல்லுகிற பிரமாணம், உபாகமம் புஸ்தகத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

"நீங்கள் புசிக்கத்தகும் மிருகங்களாவன: மாடும், செம்மறியாடும், வெள்ளாடும், மானும், வெளிமானும், கலைமானும், வரையாடும், புள்ளிமானும், சருகுமானும் புல்வாயுமே" (உபா 14:4,5).

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை மிருகங்களின் மாம்சத்தை புசியாதபடிக்கு பட்டினி போடவில்லை. அவர்கள் புசிப்பதற்கு விதவிதமான மிருகஜீவன்களை அனுமதிக்கிறார். அவர்கள் விரிகுளம்புள்ள மிருகங்கள் எல்லாவற்றையும் புசிக்கலாம். அவர்கள் குளம்புகள் இரண்டாக பிரிந்திருக்கிற அனைத்து மிருகங்களையும் புசிக்கலாம். அசைபோடுகிற எல்லா மிருகங்களின் மாம்சத்தையும் இஸ்ரவேல் ஜனத்தார் புசிக்கலாம்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற பிரமாணத்தின்படி, குழிமுசல், முயல், பன்றி ஆகியவை புசிப்பதற்கு தடைபண்ணப்பட்டிருக்கிற மிருகமாயிருக்கிறது. இந்த மிருகங்கள் எல்லாம் அசுத்தமானவை, அருவருப்பானவை, தீட்டானவை. பக்தியுள்ள யூதர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, சுத்தமான மிருகஜீவன்களை மாத்திரமே புசித்தார்கள். அவர்கள் அசுத்தமானதை புசிப்பதுமில்லை. அவற்றின் உடல்களை தொடுவதுமில்லை.

கர்த்தர் அசுத்தமான மிருகஜீவன்களின் பெயர்களை மோசேக்கும் ஆரோனுக்கும் சொல்லுகிறார். அதன் பின்பு கர்த்தர் அவர்களை நோக்கி, "இவைகளின் மாம்சத்தைப் புசிக்கவும், இவைகளின் உடல்களைத் தொடவும் வேண்டாம்; இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது" (லேவி 11:8) என்றும் சொல்லுகிறார்.

யூதர்கள் பன்றியின் மாம்சத்தைப் புசிப்பதில்லை. யூதர்களுடைய இந்த உணவுப் பழக்கத்தினிமித்தமாக, அந்தியோகஸ் என்பவன், பன்றியின் மாம்சத்தைப் புசிக்காத யூதர்களில் அநேகரை கொன்றுபோட்டான்.

கர்த்தர் புசிப்பதற்கு தடைபண்ணியிருக்கிற மிருகஜீவன்கள் எல்லாமே அசுத்தமானவை. அவை மனுஷருடைய சரீர ஆரோக்கியத்திற்கு கேடுண்டாக்கக் கூடியவை. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை போஜனகாரியங்களில் எச்சரிக்கிறார். அவர்கள் அசுத்தமானதை புசித்து தங்கள் சரீர ஆரோக்கியத்தை கெடுத்துப்போடக்கூடாது.

கர்த்தர் அசுத்தமான ஒரு சில மிருகஜீவன்களைப்பற்றி இங்கு சொல்லும்போது, அவர் நமக்கு எச்சரிப்பான சில உபதேசங்களையும் சொல்லுகிறார். நாம் பன்றிகளைப்போல அசுத்தமாயிருக்கக் கூடாது. குழிமுசல்களைப்போல இருதயம் சோர்ந்துபோனவர்களாயும் இருக்கக்கூடாது. நாம் இந்தப் பூமியிலே முயல்களைப்போல நிலையில்லாமல் அலையக்கூடாது.

அசுத்தமான மிருகங்களெல்லாம் அழிந்துபோகும். நாம் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் அசுத்தமான இந்த மிருகங்களைப்போல ஜீவித்து, அவை அழிந்துபோவதுபோல நாமும் அழிந்துபோகக்கூடாது. நாம் பரிசுத்தமானதை மாத்திரம் புசித்து, கர்த்தருக்கு பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

அசுத்தமான மிருகஜீவன்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஒட்டகம் (உபா 14:7)
2. குழிமுசல் (லேவி 11:5; உபா 14:7; நீதி 30:24)
3. முயல் (லேவி 11:6; உபா 14:7)
4. பன்றி (லேவி 11:7; உபா 14:8)

ஜலத்திலிருக்கிறவைகள்
லேவி 11:9-12

லேவி 11:9. ஜலத்திலிருக்கிறவைகளில் நீங்கள் புசிக்கத்தக்கது யாதெனில்: கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களிலே சிறகும் செதிளும் உள்ளவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம்.

லேவி 11:10. ஆனாலும், கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களில் நீந்துகிறதும் வாழ்கிறதுமான பிராணிகளில் சிறகும் செதிளும் இல்லாதவைகள் யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக.

லேவி 11:11. அவைகள் உங்களுக்கு அருவருப்பாயிருக்கக்கடவது; அவைகளின் மாம்சத்தைப் புசியாதிருந்து, அவைகளின் உடல்களை அருவருப்பீர்களாக.

லேவி 11:12. தண்ணீர்களிலே சிறகும் செதிளும் இல்லாத யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருக்கக்கடவது.

ஜலத்திலிருக்கிற மச்சங்களில் சுத்தமான மச்சங்களுக்கும், அசுத்தமான மச்சங்களுக்கும் கர்த்தர் வித்தியாசம் சொல்லுகிறார். தண்ணீர்களிலே சிறகும் செதிளும் உள்ளவைகள் எல்லாம் சுத்தமானவை. சிறகும் செதிளும் இல்லாதவைகள் அசுத்தமானவை.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "ஜலத்திலிருக்கிறவைகளில் நீங்கள் புசிக்கத்தக்கது யாதெனில்: கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களிலே சிறகும் செதிளும் உள்ளவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம்" (லேவி 11:9) என்று சொல்லுகிறார்.

மேலும் கர்த்தர் அவர்களை நோக்கி, "ஆனாலும், கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களில் நீந்துகிறதும் வாழ்கிறதுமான பிராணிகளில் சிறகும் செதிளும் இல்லாதவைகள் யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக" என்றும்,

"அவைகள் உங்களுக்கு அருவருப்பாயிருக்கக்கடவது; அவைகளின் மாம்சத்தைப் புசியாதிருந்து, அவைகளின் உடல்களை அருவருப்பீர்களாக. தண்ணீர்களிலே சிறகும் செதிளும் இல்லாத யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருக்கக்கடவது" (லேவி 11:10-12) என்றும் சொல்லுகிறார்.

மீன்களில் புசிப்பதற்கு தடைபண்ணப்பட்டிருக்கிறவைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு அசுத்தமானவை மாத்திரமல்ல, அவை அவர்களுக்கு அருவருப்பானதாகவும் இருக்கவேண்டும். கர்த்தர் தடைபண்ணியிருக்கிற மீன்களை புசிக்கலாம் என்னும் எண்ணம்கூட இஸ்ரவேல் புத்திரருடைய மனதிலே எழும்பக்கூடாது. அவர்கள் அசுத்தமான மீன்களை புசியாதிருப்பதோடு, அவற்றை அருவருத்து, அவற்றை விட்டு விலகவும்வேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் அவருக்கு ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறார்கள். கர்த்தருடைய ஜனத்தார் உலகப்பிரகாரமான ஜனங்களைவிட விசேஷமானவர்கள். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளோடு சுவிசேஷத்தின் மூலமாக உடன்படிக்கை செய்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தை, தமக்கு சொந்தமான ஜனமாக தெரிந்துகொண்டிருக்கிறார். விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய சுவீகார புத்திரராயிருக்கிறோம்.

நாம் கர்த்தருடைய பிள்ளைகளாயிருப்பதோடு, அவருடைய சிநேகிதராகவும் இருக்கிறோம். விசுவாசிகளாகிய நாம் சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற உபதேசங்களுக்கு கீழ்ப்படியவேண்டும். நம்முடைய சுயஇச்சைகளுக்கும், சுயஆசைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், கர்த்தருடைய விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்கள், அவருடைய சிலுவையை சுமப்பதற்கும் ஆயத்தமாயிருக்கவேண்டும். நம்முடைய சுயத்தை சிலுவையில் அறைந்து, கிறிஸ்துவுக்காக ஜீவிக்க நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

ஜலத்திலிருக்கிறவைகளில் எவையெல்லாம் அருவருப்பானது என்று கர்த்தர் சொல்லுகிறாரோ, அவற்றை நாம் அருவருக்கவேண்டும். கர்த்தர் எதை புசிக்கக்கூடாது என்று சொல்லுகிறாரோ, அதை நாம் புசிக்கக்கூடாது. மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றவேண்டுமென்று விரும்புகிற ஜனங்கள் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியமாட்டார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய விருப்பத்தைவிட, தங்களுடைய சொந்த விருப்பமே முக்கியமானதாயிருக்கும்.

பறவைகள், மிருகஜீவன்கள் ஆகியவற்றைப்போல சுத்தமான, அசுத்தமான மீன்களின் பெயர்கள் அட்டவணையாகக் கொடுக்கப்படவில்லை. மீன்களுக்குப் பொதுவான பிரமாணங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களிலே சிறகும் செதிளும் உள்ளவைகளையெல்லாம் இஸ்ரவேல் ஜனங்கள் புசிக்கலாம். சிறகும் செதிளும் இல்லாதவைகள் யாவும் அவர்கள் புசிக்கக்கூடாது.

பறவைகள்
லேவி 11:13-19

லேவி 11:13. பறவைகளில் நீங்கள் புசியாமல் அருவருக்கவேண்டியவைகள் யாதெனில்: கழுகும், கருடனும், கடலுராஞ்சியும்,

லேவி 11:14. பருந்தும், சகலவித வல்லூறும்,

லேவி 11:15. சகலவித காகங்களும்,

லேவி 11:16. தீக்குருவியும், கூகையும், செம்புகமும், சகலவித டேகையும்,

லேவி 11:17. ஆந்தையும், நீர்க்காகமும், கோட்டானும்,

லேவி 11:18. நாரையும், கூழக்கடாவும், குருகும்,

லேவி 11:19. கொக்கும், சகலவித ராஜாளியும், புழுக்கொத்தியும், வௌவாலும் ஆகிய இவைகளே.

பறவைகளில் எவையெல்லாம் இஸ்ரவேல் புத்திரருக்கு அருவருப்பாயிருக்க வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். சுத்தமான பறவைகளையும், அசுத்தமான பறவைகளையும் வேறு பிரிப்பதற்கு, கர்த்தர் இந்த வசனப்பகுதியில் பொதுவான விதிமுறை எதையும் சொல்லவில்லை. எந்தெந்த பறவைகளையெல்லாம் புசிக்கக்கூடாதோ அந்த பறவைகளின் அட்டவணை இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "பறவைகளில் நீங்கள் புசியாமல் அருவருக்கவேண்டியவைகள் யாதெனில்: கழுகும், கருடனும், கடலுராஞ்சியும், பருந்தும், சகலவித வல்லூறும், சகலவித காகங்களும், தீக்குருவியும், கூகையும், செம்புகமும், சகலவித டேகையும்" என்றும்,

"ஆந்தையும், நீர்க்காகமும், கோட்டானும், நாரையும், கூழக்கடாவும், குருகும், கொக்கும், சகலவித ராஜாளியும், புழுக்கொத்தியும், வௌவாலும் ஆகிய இவைகளே" (லேவி 11:13-19) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் எதையெல்லாம் தடைபண்ணியிருக்கிறாரோ அதை இஸ்ரவேல் ஜனத்தார் புசிக்கக்கூடாது. இந்த பறவைகளெல்லாம் அசுத்தமானவை. அவை தீட்டானவை. இஸ்ரவேல் புத்திரர் தீட்டான இந்தப் பறவைகளை அருவருக்கவேண்டும். புசிப்பதற்கு தடைபண்ணியிராத மற்ற பறவைகளை இஸ்ரவேல் புத்திரர் புசிக்கலாம்.

பருந்து, வல்லூறு, இராஜாளி, கோட்டான் ஆகிய பறவைகள் மற்ற உயிரினங்களை கொன்று அவற்றை புசிக்கிறது. இவை மாம்ச பட்சிகள். இவற்றின் குணம் மிகவும் கொடூரமானது. இந்தப் பறவைகள் மற்ற மிருகஜீவன்களின் இரத்தத்தையும் மாம்சத்தையும் புசிக்கிறது. இப்படிப்பட்ட கொடூர குணமுள்ள பறவைகளை இஸ்ரவேல் ஜனத்தார் அருவருத்து வெறுத்து ஒதுக்கவேண்டும்.

மனுஷரிலும் அநேகர் கொடூரகுணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் குற்றமில்லாத இரத்தத்தை சிந்துகிறவர்கள். இப்படிப்பட்டவர்கள் இரத்தப்பிரியராயிருப்பார்கள். கர்த்தருடைய ஜனமாகிய நாம், கொடூரகுணமுள்ள துன்மார்க்கரைவிட்டு விலகி ஜீவிக்கவேண்டும். நாம் அவர்களைப்போல குற்றமில்லாத இரத்தத்தை சிந்தக்கூடாது. நாம் துன்மார்க்கரைப்போல இரத்தப்பிரியராயிருக்கக்கூடாது.

பறவைகளில் புறாவானது சாந்தகுணமுள்ளது. மனுஷன் புறாவின் மாம்சத்தைப் புசிக்கலாம். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு புறாக்களை காணிக்கையாக செலுத்தலாம். ஆனாலும் கழுகு, கருடன் போன்ற மாம்ச பட்சிகளை இஸ்ரவேல் ஜனத்தார் புசிக்காமல் அருவருக்கவேண்டும். அவற்றை வெறுத்து ஒதுக்கவேண்டும். இப்படிப்பட்ட அசுத்தமான பறவைகள் கர்த்தருக்கும் மனுஷருக்கும் அருவருப்பானவை.

ஒரு சில பறவைகள் கூட்டமாகப் பறக்காமல் எப்போதும் தனிமையிலிருக்கும். அவை இருளில் வாசம்பண்ணும். ஆந்தை தனிமையான இடத்தில் தங்கியிருக்கும். "வனாந்தர நாரைக்கு ஒப்பானேன்; பாழான இடங்களில் தங்கும் ஆந்தையைப் போலானேன்" (சங் 102:6).

நாரை, ஆந்தை ஆகிய பறவைகள் எப்போதும் துக்கமுகத்தோடிருக்கும். கர்த்தருடைய ஜனம் துக்கப்படக்கூடாது. கர்த்தர் நம்முடைய துக்கத்தை சந்தோஷமாய் மாற்றியிருக்கிறார். நம்முடைய கவலைகள், பாரங்கள் எல்லாவற்றையும் கர்த்தருடைய பாதபடியில் சமர்ப்பித்து விட்டு, நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும்.

"நாரையும் முள்ளம்பன்றியும் அதைச் சுதந்தரிக்கும், ஆந்தையும் காக்கையும் அதிலே குடியிருக்கும்; அதின்மேல் வெட்டவெளியின் நூலையும், வெறுமையின் தூக்கையும் பிடிப்பார்" (ஏசா 34:11).

கர்த்தருடைய இஸ்ரவேல் ஜனங்கள் மிகவும் விசேஷமானவர்கள். அவர்கள் எப்போதும் துக்கமாக இருக்கவேண்டியவர்களல்ல. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க வேண்டியவர்கள். அதற்கு அடையாளமாக, துக்கமான முகமுடைய பறவைகளை, இஸ்ரவேல் ஜனத்தார் புசிக்கக்கூடாது என்று கர்த்தர் தடைபண்ணுகிறார்.

கர்த்தருடைய ஜனம் ஆந்தைகளைப்போல எப்போதும் தனிமையிலும் இருக்கக்கூடாது. விசுவாசிகள் மற்ற விசுவாசிகளோடு பரிசுத்தமான ஐக்கியத்தில் நிலைத்திருக்க வேண்டும். நாம் எப்போதும் துக்கமுகமாகவும், தனிமையிலும் இருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமல்ல.

பருந்து, வல்லூறு போன்ற பறவைகள் பாம்பு, தேள் போன்ற விஷஜந்துகளை புசிக்கிறது. இப்படிப்பட்ட பறவைகள் அசுத்தமானவைகள். வேறு சில பறவைகள் அசுத்தமான புழுக்களை புசிக்கிறது. இப்படிப்பட்ட பறவைகளை புசிப்பதினால் நம்முடைய சரீரத்தின் ஆரோக்கியம் கெட்டுப்போகும். அசுத்தமான பறவைகளை புசிப்பதினால், நம்மை நாமே தீட்டுப்படுத்திக்கொள்வோம். ஆகையினால் அசுத்தமான இந்தப் பறவைகளை நாம் அருவருத்து விலகவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கருடன், பருந்து போன்ற பறவைகளை புறஜாதியார் தங்களுடைய தெய்வங்களாக நினைத்து அதை ஆராதிக்கிறார்கள். அவற்றை குறிசொல்லுவதற்கும் பயன்படுத்துகிறார்கள். ஒரு சில பறவைகளை விக்கிரகங்களுக்கு வாகனங்கள் என்று சொல்லி, புறஜாதியார் அவற்றை வழிபடுகிறார்கள். கர்த்தருடைய ஜனத்திற்கு இப்படிப்பட்ட அசுத்தமான பறவைகள், அருவருப்பானதாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் புறஜாதியாரின் பழக்க வழக்கங்களை பின்பற்றி, பறவைகளை ஆராதிக்கக்கூடாது. நாம் சிருஷ்டிகளை ஆராதியாமல், சிருஷ்டிகரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும்.

அசுத்தமான பறவைகளின் விவரம் வருமாறு :

1. கழுகு
2. கருடன் (லேவி 11:13; உபா 14:12).
3. கடலுராஞ்சி (லேவி 11:13; உபா 14:12)
4. பருந்து (லேவி 11:14; உபா 14:13)
5. சகலவித வல்லூறு (லேவி 11:14; உபா 14:13; யோபு 28:7)
6. சகலவித காகங்கள் (லேவி 11:15; உபா 14:14)
7. தீக்குருவி (லேவி 11:16; உபா 14:15)
8. கூகை (லேவி 11:16; உபா 14:15)
9. செம்புகம் (லேவி 11:16; உபா 14:15)
10. சகலவித டேகை (லேவி 11:16; உபா 14:15)
11. ஆந்தை (லேவி 11:17; உபா 14:16)
12. நீர்க்காகம் (லேவி 11:17; உபா 14:17)
13. கோட்டான் (லேவி 11:17; உபா 14:16)
14. நாரை (லேவி 11:18; உபா 14:16)
15. கூழக்கடா (லேவி 11:18; உபா 14:17; சங் 102:6)
16. குருகு (லேவி 11:18; உபா 14:17)
17. கொக்கு (லேவி 11:19; உபா 14:18)
18. சகலவித ராஜாளி (லேவி 11:19; உபா 14:18)
19. புழுக்கொத்தி (லேவி 11:19; உபா 14:18)
20. வௌவால் (லேவி 11:19; உபா 14:18)

ஊரும் பறவைகள்
லேவி 11:20-42

லேவி 11:20. பறக்கிறவைகளில் நாலுகாலால் நடமாடுகிற ஊரும்பிராணிகள் யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக.

லேவி 11:21. ஆகிலும், பறக்கிறவைகளில் நாலுகாலால் நடமாடுகிற யாவிலும், நீங்கள் புசிக்கத்தக்கது யாதெனில்: தரையிலே தத்துகிறதற்குக் கால்களுக்குமேல் தொடைகள் உண்டாயிருக்கிறவைகளிலே,

லேவி 11:22. வெட்டுக்கிளி ஜாதியாயிருக்கிறதையும், சோலையாம் என்னும் கிளிஜாதியாயிருக்கிறதையும், அர்கொல் என்னும் கிளிஜாதியாயிருக்கிறதையும், ஆகாபு என்னும் கிளிஜாதியாயிருக்கிறதையும் நீங்கள் புசிக்கலாம்.

லேவி 11:23. பறக்கிறவைகளில் நாலு காலால் நடமாடுகிற மற்ற யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக.

லேவி 11:24. அவைகளாலே தீட்டுப்படுவீர்கள்; அவைகளின் உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

லேவி 11:25. அவைகளின் உடலைச் சுமந்தவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

லேவி 11:26. விரிநகங்களுள்ளவைகளாயிருந்தும், இருபிளவான குளம்பில்லாமலும் அசைபோடாமலும் இருக்கிற மிருகங்கள் யாவும் உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; அவைகளைத் தொடுகிறவன் எவனும் தீட்டுப்படுவான்.

லேவி 11:27. நாலுகாலால் நடக்கிற சகல ஜீவன்களிலும் தங்கள் உள்ளங்கால்களை ஊன்றி நடக்கிற யாவும் உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; அவைகளின் உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

லேவி 11:28. அவைகளின் உடலைச் சுமந்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது.

லேவி 11:29. தரையில் ஊருகிற பிராணிகளில் உங்களுக்கு அசுத்தமானவைகள் எவையெனில்: பெருச்சாளியும், எலியும், சகலவிதமான ஆமையும்,

லேவி 11:30. உடும்பும், அழுங்கும், ஓணானும், பல்லியும், பச்சோந்தியும் ஆகிய இவைகளே.

லேவி 11:31. சகல ஊரும் பிராணிகளிலும் இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது; அவைகளில் செத்ததைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

லேவி 11:32. அவைகளில் செத்தது ஒன்று யாதொன்றின்மேல் விழுந்தால் அது தீட்டுப்பட்டிருக்கும்; அது மரப்பாத்திரமானாலும், வஸ்திரமானாலும், தோலானாலும், பையானாலும், வேலை செய்கிறதற்கேற்ற ஆயுதமானாலும் சாயங்காலம்மட்டும் தீட்டாயிருக்கும்; அது தண்ணீரில் போடப்படவேண்டும், அப்பொழுது சுத்தமாகும்.

லேவி 11:33. அவைகளில் ஒன்று மண்பாண்டத்திற்குள் விழுந்தால், அதற்குள் இருக்கிறவை யாவும் தீட்டுப்பட்டிருக்கும்; அதை உடைத்துப்போடவேண்டும்.

லேவி 11:34. புசிக்கத்தக்க போஜனபதார்த்தத்தின்மேல் அந்தத் தண்ணீர் பட்டால், அது தீட்டாகும்; குடிக்கத்தக்க எந்தப் பானமும் அப்படிப்பட்ட பாத்திரத்தினால் தீட்டுப்படும்.

லேவி 11:35. அவைகளின் உடலில் யாதொன்று எதின்மேல் விழுமோ, அதுவும் தீட்டுப்படும்; அடுப்பானாலும் மண்தொட்டியானாலும் தகர்க்கப்படுவதாக; அவைகள் தீட்டுப்பட்டிருக்கும்; ஆகையால், அவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது.

லேவி 11:36. ஆனாலும் நீருற்றும் மிகுந்த ஜலம் உண்டாகிய கிணறும் சுத்தமாயிருக்கும்; அவைகளிலுள்ள உடலைத் தொடுகிறவனோ தீட்டுப்படுவான்.

லேவி 11:37. மேற்சொல்லியவைகளின் உடலில் யாதொன்று விதைத்தானியத்தின்மேல் விழுந்தால், அது தீட்டுப்படாது.

லேவி 11:38. அந்த உடலில் யாதொன்று தண்ணீர் வார்க்கப்பட்டிருக்கிற விதையின்மேல் விழுந்ததானால், அது உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது.

லேவி 11:39. உங்களுக்கு ஆகாரத்துக்கான ஒரு மிருகம் செத்தால், அதின் உடலைத் தொடுகிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

லேவி 11:40. அதின் மாம்சத்தைப் புசித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதின் உடலை எடுத்துப்போனவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

லேவி 11:41. தரையில் ஊருகிற பிராணிகளெல்லாம் உங்களுக்கு அருவருப்பாயிருக்கக்கடவது; அவை புசிக்கப்படலாகாது.

லேவி 11:42. தரையில் ஊருகிற சகல பிராணிகளிலும், வயிற்றினால் நகருகிறவைகளையும், நாலுகாலால் நடமாடுகிறவைகளையும், அநேகங் கால்களுள்ளவைகளையும் புசியாதிருப்பீர்களாக; அவைகள் அருவருப்பானவைகள்.

ஈக்கள், தேனீக்கள், குளவிகள் ஆகியவற்றை புசிக்கக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இவையெல்லாம் அருவருப்பாயிருக்கவேண்டும். இந்தப் பூச்சிகள் பறக்கிறவைகளாகயிருந்தாலும், இவை நாலுகாலால் நடக்கிறவைகளாயிருக்கிறது. "பறக்கிறவைகளில் நாலுகாலால் நடமாடுகிற ஊரும்பிராணிகள் யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக" *(லேவி 11:20)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பறக்கிறவைகளில் நாலு காலால் நடக்கிற ஊரும் பிராணிகள் யாவும் புசிப்பதற்கு தகுதியற்றவை. ஆனாலும் பறக்கிறவைகளில் நாலு காலால் நடமாடுகிறவைகளில் ஒரு சிலவற்றை புசிக்கலாம் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "பறக்கிறவைகளில் நாலுகாலால் நடமாடுகிற யாவிலும், நீங்கள் புசிக்கத்தக்கது யாதெனில்: தரையிலே தத்துகிறதற்குக் கால்களுக்குமேல் தொடைகள் உண்டாயிருக்கிறவைகளிலே, வெட்டுக்கிளி ஜாதியாயிருக்கிறதையும், சோலையாம் என்னும் கிளிஜாதியாயிருக்கிறதையும், அர்கொல் என்னும் கிளிஜாதியாயிருக்கிறதையும், ஆகாபு என்னும் கிளிஜாதியாயிருக்கிறதையும் நீங்கள் புசிக்கலாம்" *(லேவி 11:21,22)* என்று சொல்லுகிறார்.

தரையில் ஊருகிற பிராணிகளில் அநேகம் பிராணிகள் இஸ்ரவேல் புத்திரருக்கு அசுத்தமானவைகளாகும். "தரையில் ஊருகிற பிராணிகளில் உங்களுக்கு அசுத்தமானவைகள் எவையெனில்: பெருச்சாளியும், எலியும், சகலவிதமான ஆமையும், உடும்பும், அழுங்கும், ஓணானும், பல்லியும், பச்சோந்தியும் ஆகிய இவைகளே" *(லேவி 11:29,30)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தரையில் ஊருகிற பிராணிகளைப்பற்றி கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்கியம், இந்த அதிகாரத்தில் மறுபடியுமாய் சொல்லப்பட்டிருக்கிறது. "தரையில் ஊருகிற பிராணிகளெல்லாம் உங்களுக்கு அருவருப்பாயிருக்கக்கடவது; அவை புசிக்கப்படலாகாது. தரையில் ஊருகிற சகல பிராணிகளிலும், வயிற்றினால் நகருகிறவைகளையும், நாலுகாலால் நடமாடுகிறவைகளையும், அநேகங் கால்களுள்ளவைகளையும் புசியாதிருப்பீர்களாக; அவைகள் அருவருப்பானவைகள்" *(லேவி 11:41,42)*.

எல்லாவிதமான பாம்பு வகைகளும் இதில் அடங்கும். நான்குகால்களுக்கு அதிகமான கால்களையுடைய மிருகஜீவன்கள் தீட்டானவைகள். *(லேவி 11:41-43)*.

எபிரெய மொழியில் எழுதப்பட்டிருக்கும் "தோரா" *(பஞ்சாகமம்)* புஸ்தகத்தில் "வயிறு" என்பதைக் குறிக்கும் எபிரெய வார்த்தை "காச்சோன்" என்பதாகும். இந்த எபிரெய வார்த்தை இந்தப் புஸ்தகத்தின் மத்தியில் வருகிறது. இந்த எபிரெய வார்த்தையின், மைய எழுத்தாகிய "ச்" என்னும் எழுத்து பஞ்சாகமம் புஸ்தகத்தின் மைய எழுத்தாகும்.

தரையில் ஊருகிற பிராணிகளில், இஸ்ரவேல் புத்திரருக்கு அருவருப்பானவைகள் எவை என்பதையும், கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "தரையில் ஊருகிற பிராணிகளில் உங்களுக்கு அசுத்தமானவைகள் எவையெனில்: பெருச்சாளியும், எலியும், சகலவிதமான ஆமையும், உடும்பும், அழுங்கும், ஓணானும், பல்லியும், பச்சோந்தியும் ஆகிய இவைகளே" (லேவி 11:29,30) என்று சொல்லுகிறார்.

ஊரும் பிராணிகள் தரையிலுள்ள மண்ணைப் புசிக்கிறது. மண்ணே அவற்றின் பிரதான ஆகாரம். ஆகையினால் தரையில் ஊருகிற சகல பிராணிகளையும் இஸ்ரவேல் புத்திரர் புசிக்கக்கூடாது என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். மண்ணை புசிக்கும் ஊரும் பிராணிகள் மனுஷருடைய போஜனத்திற்கு தகுதியானதல்ல.

பறவைகளில் நாலுகாலால் நடமாடுகிற ஊரும் பிராணிகளில் புசிக்க தகுந்தவை எவையெனில் :

1. வெட்டுக்கிளி (மத் 3:4)

2. சோலையாம்

3. அர்கொல்

4. ஆகாபு

பறக்கிறவைகளில் நாலு காலால் நடமாடுகிற மற்ற யாவும் இஸ்ரவேல் புத்திரருக்கு அருவருப்பாயிருக்கிறது (லேவி 11:23). அசுத்தமான மிருகங்கள் செத்துப்போன பின்பும், அவற்றின் பிரேதம் இஸ்ரவேல் புத்திரருக்கு அருவருப்பாயிருக்கும். அந்த சரீரத்தைக்குறித்தும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "அவைகளாலே தீட்டுப்படுவீர்கள்; அவைகளின் உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். அவைகளின் உடலைச் சுமந்தவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தொய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்" என்றும்,

விரிநகங்களுள்ளவைகளாயிருந்தும், இருபிளவான குளம்பில்லாமலும் அசைபோடாமலும் இருக்கிற மிருகங்கள் யாவும் உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; அவைகளைத் தொடுகிறவன் எவனும் தீட்டுப்படுவான்" என்றும்,

"நாலுகாலால் நடக்கிற சகல ஜீவன்களிலும் தங்கள் உள்ளங்கால்களை ஊன்றி நடக்கிற யாவும் உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; அவைகளின் உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். அவைகளின் உடலைச் சுமந்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது" (லேவி 11:24-28) என்றும் சொல்லுகிறார்.

மிருகஜீவன்களைச் சுத்தமானவை, அசுத்தமானவை என்று வேறுபிரிப்பதற்கு அவற்றின் நகங்கள், குளம்புகள் ஆகியவற்றைச் சோதித்துப் பார்க்க வேண்டும். அசுத்தமான மிருகங்களைத் தொடுகிறவன் எவனும் தீட்டுப்படுவான். அவைகளின் உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். அவைகளின் உடலைச் சுமந்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; (லேவி 11:26-28).

தரையில் ஊருகிற பிராணிகளில் அசுத்தமானவைகள் எவையெனில் :

1. பெருச்சாளி

2. எலி

3. ஆமை

4. உடும்பு

5. அழுங்கு

6. ஓணான்

7. பல்லி

8. பச்சோந்தி

செத்துப்போன மிருகங்களின் சரீரத்தைத் தொடுகிறவர்கள் தீட்டுப்பட்டவர்கள். இவர்கள் சடங்காச்சாரப் பிரகாரமாக அசுத்தமாயிருக்கிறார்கள். செத்துப்போன அசுத்தமான மிருகங்களின் சரீரத்தைத் தொட்டவர்கள், தீட்டுப்பட்டிருப்பதினால், அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. அவர்கள் பரிசுத்தமானது எதையும் புசிக்கக்கூடாது. தீட்டுப்பட்டவர்கள் தங்கள் உற்றார் உறவினரோடும், அயலகத்தாரோடும் நெருக்கமாக பேசி பழக்கக்கூடாது.

செத்துப்போன மிருகங்களின் சரீரத்தை தொட்டதினால் தீட்டுப்பட்டவர்கள், சாயங்காலம் வரைக்கும் மாத்திரமே தீட்டுப்பட்டவர்களாயிருப்பார்கள். "அவைகளின் உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்" (லேவி 11:24) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தப் பிரமாணத்திலிருந்து நாம் ஆவிக்குரிய சத்தியத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு நாள் இரவிலும் நாம் நித்திரை செய்வதற்கு முன்பாக, அன்றைய தினத்தின் பகல் வேளையிலே நாம் செய்த பாவங்களுக்காக கர்த்தருடைய சமுகத்திலே மன்னிப்பு கேட்கவேண்டும். கர்த்தர் தாமே தம்முடைய இரத்தத்தினால் நம்முடைய பாவக்கறைகளை கழுவி சுத்திகரிக்கவேண்டுமென்று, ஒவ்வொரு நாள் இரவிலும், நித்திரை செய்வதற்கு முன்பாக, கர்த்தருடைய சமுகத்திலே கருத்தாய் ஜெபம்பண்ணவேண்டும். நாம் நித்திரை செய்யப்போகும்போது அசுத்தமானவர்களாகவும், தீட்டுப்பட்டவர்களாகவும் நித்திரை செய்யாமல், சுத்திகரிக்கப்பட்டவர்களாய் நித்திரை பண்ணவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் செத்துப்போன ஊரும் பிராணிகளின் சரீரத்தைத் தொட்டாலும், அல்லது செத்துப்போன சரீரம் வீட்டிலுள்ள பாத்திரத்தில் விழுந்தாலும், அந்தப் பாத்திரமும் தீட்டுப்பட்டதாயிருக்கும். "சகல ஊரும் பிராணிகளிலும் இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது; அவைகளில் செத்ததைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்" (லேவி 11:31) என்றும்,

"அவைகளில் செத்தது ஒன்று யாதொன்றின்மேல் விழுந்தால் அது தீட்டுப்பட்டிருக்கும்; அது மரப்பாத்திரமானாலும், வஸ்திரமானாலும், தோலானாலும், பையானாலும், வேலை செய்கிறதற்கேற்ற ஆயுதமானாலும் சாயங்காலம்மட்டும் தீட்டாயிருக்கும்; அது தண்ணீரில் போடப்படவேண்டும், அப்பொழுது சுத்தமாகும்" (லேவி 11:32) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

தீட்டுப்பட்ட பாத்திரம் மண்பாண்டமாயிருந்தால் அதை உடைத்துப்போடவேண்டும். "அவைகளில் ஒன்று மண்பாண்டத்திற்குள் விழுந்தால், அதற்குள் இருக்கிறவை யாவும் தீட்டுப்பட்டிருக்கும்; அதை உடைத்துப்போடவேண்டும்" (லேவி 11:33).

தீட்டான மிருகங்களில் ஒன்று செத்துப்போய், அது மண்பாண்டம், புசிக்கத்தக்க போஜன பதார்த்தம், பானம், தண்ணீர் ஆகியவற்றின்மீது விழுந்தால், அவையும் தீட்டுப்பட்டிருக்கும். தீட்டுப்பட்ட பொருட்களைச் சுத்திகரிப்பதற்குத் தனியாகப் பிரமாணம் சொல்லப்பட்டிருக்கிறது (லேவி 11:32-33).

செத்துப்போன ஊரும் பிராணிகளில் ஒன்று போஜன பதார்த்தத்தின்மேல் பட்டாலும், அல்லது அதன் உடல் வேறு எதன் மேல் விழுந்தாலும், அவையெல்லாமே தீட்டுப்பட்டிருக்கும்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "புசிக்கத்தக்க போஜனபதார்த்தத்தின்மேல் அந்தத் தண்ணீர் பட்டால், அது தீட்டாகும்; குடிக்கத்தக்க எந்தப் பானமும் அப்படிப்பட்ட பாத்திரத்தினால் தீட்டுப்படும். அவைகளின் உடலில் யாதொன்று எதின்மேல் விழுதோ, அதுவும் தீட்டுப்படும்; அடுப்பானாலும் மண்தொட்டியானாலும் தகர்க்கப்படுவதாக; அவைகள் தீட்டுப்பட்டிருக்கும்; ஆகையால், அவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது" (லேவி 11:34,35) என்று சொல்லுகிறார்.

ஊரும் பிராணிகளில் அசுத்தமான பிராணி செத்துப்போனாலும், அதன் சரீரம் கிணற்றில் விழும்போது, அந்த கிணறு தீட்டுப்படுவதில்லை. செத்துப்போன ஊரும் பிராணிகளின் சரீரம் நீரூற்றிலும், கிணற்றிலும் விழும்போது, "ஆனாலும் நீரூற்றும் மிகுந்த ஜலம் உண்டாகிய கிணறும் சுத்தமாயிருக்கும்; அவைகளிலுள்ள உடலைத் தொடுகிறவனோ தீட்டுப்படுவான். மேற்சொல்லியவைகளின் உடலில் யாதொன்று விதைத்தானியத்தின்மேல் விழுந்தால், அது தீட்டுப்படாது" (லேவி 11:36,37) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

செத்துப்போன ஊரும் பிராணியின் சரீரம் விதையின்மேல் விழுந்தாலும், ஆகாரத்தின்மேல் விழுந்தாலும், அது தீட்டுப்பட்டிருக்கும். "அந்த உடலில் யாதொன்று தண்ணீர் வார்க்கப்பட்டிருக்கிற விதையின்மேல் விழுந்ததானால், அது உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது. உங்களுக்கு ஆகாரத்துக்கான ஒரு மிருகம் செத்தால், அதின் உடலைத் தொடுகிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்" (லேவி 11:38,39) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

செத்துப்போன ஊரும் பிராணியினால் தீட்டுப்பட்டவன், தன்னை எவ்வாறு சுத்தம்பண்ணவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். "அதின் மாம்சத்தைப் புசித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதின் உடலை எடுத்துப்போனவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்" (லேவி 11:40) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி சரீரம் தீட்டுப்படுவது பற்றிய தம்முடைய பிரமாணத்தை தெளிவாக சொல்லியிருக்கிறார். நம்முடைய ஆத்துமாவும் மிகவும் விசேஷமானது. அது விலையேறப்பெற்றது. பாவத்தினால் கறைபடாதபடி நம்முடைய ஆத்துமாவை நாம் காத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய ஆத்துமா பாவத்தினால் கறைபடும்போது, அதை காலதாமதம்பண்ணாமல் உடனே சுத்தம்பண்ணவேண்டும். கர்த்தருடைய மன்னிக்கும் கிருபையே நம்முடைய ஆத்துமாவை சுத்திகரிக்கும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சரீரங்களையும், வீட்டில் பயன்படுத்துகிற பாத்திரங்களையும் சுத்தமாக வைத்திருந்தார்கள். அது தீட்டுப்பட்டு அசுத்தமாகும்போது, அதை உடனே சுத்தம்பண்ணினார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு சடங்காச்சாரமான அசுத்தங்களெல்லாமே தீட்டானவை. அதை அருவருக்கவேண்டுமென்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளை கொடுத்திருக்கிறார்.

ஊருகிற பிராணிகள்
லேவி 11:43-47

லேவி 11:43. ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களை அருவருப்பாக்கிக் கொள்ளாமலும், அவைகளால் தீட்டுப்படாமலும் இருப்பீர்களாக; அவைகளாலே நீங்கள் தீட்டுப்படுவீர்கள்.

லேவி 11:44. நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், தரையில் ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களைத் தீட்டுப்படுத்தாமல், உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக.

லேவி 11:45. நான் உங்கள் தேவனாயிருக்கும்படி உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக.

லேவி 11:46. சுத்தமானதற்கும் அசுத்தமானதற்கும், புசிக்கத்தக்க ஜந்துக்களுக்கும் புசிக்கத்தகாத ஜந்துக்களுக்கும் வித்தியாசம்பண்ணும் பொருட்டு,

லேவி 11:47. மிருகத்துக்கும் பறவைகளுக்கும், தண்ணீர்களில் நீந்துகிற சகல ஜீவஜந்துக்களுக்கும், பூமியின்மேல் ஊருகிற சகல பிராணிகளுக்கும் அடுத்த பிரமாணம் இதுவே என்று சொல்லுங்கள் என்றார்.

ஜீவஜந்துக்களில் எவை புசிக்க தகுந்தது என்பதையும், எவை புசிக்க தகாதது என்பதையும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் தெளிவாக சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய பிரமாணத்தின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு பரிசுத்தத்தைப்பற்றி உபதேசம் பண்ணுகிறார். கர்த்தர் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையும் நமக்கு மிகவும் பிரயோஜனமுள்ளது. கர்த்தர் தம்முடைய வார்த்தையைஎந்த நோக்கத்தோடு சொல்லுகிறார் என்பதையும், அவருடைய வார்த்தையின் அர்த்தத்தையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

நோயாளிகள் மருத்துவர்களை பார்க்கப் போகும்போது, அவர்கள் உணவு பதார்த்தங்களை குறித்து ஆலோசனை சொல்லுவார்கள். நோயாளிகள் எப்படிப்பட்ட உணவுகளை புசிக்கவேண்டும் என்றும், எதை புசிக்கக்கூடாது என்றும் மருத்துவர்கள் அவர்களுக்கு தெளிவுபடுத்துவார்கள். கர்த்தரே நம்முடைய பரமவைத்தியர். நாம் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பம்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் சரீரங்களை தீட்டுப்படுத்திக்கொள்ளாமல், தங்களை எவ்வாறு சுத்திகரித்து, பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும் என்று, கர்த்தர் இந்தப் பிரமாணங்களின் மூலமாக கற்றுக்கொடுக்கிறார்.

"ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களை அருவருப்பாக்கிக்கொள்ளாமலும், அவைகளால் தீட்டுப்படாமலும் இருப்பீர்களாக; அவைகளாலே நீங்கள் தீட்டுப்படுவீர்கள்" (லேவி 11:43) என்றும்,

"நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், தரையில் ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களைத் தீட்டுப்படுத்தாமல், உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக" (லேவி 11:44) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பரிசுத்தமாக்குதல் என்பதற்குத் தேவனுடைய ஊழியத்திற்காக வேறுபிரிக்கப்படுதல் என்று பொருள். தேவஊழியம் செய்கிற மனுஷர் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவது என்பது இதன் பொருளாகாது. தேவனுக்காக வேறுபிரிக்கப்படுவது என்பதே இதன் பொருளாகும்.

பரிசுத்தம் என்னும் பெயருக்கு அசுத்தமானவை, அருவருப்பானவை ஆகியவற்றிலிருந்து வேறுபிரிந்திருப்பது என்று பொருள். பாவத்திலிருந்து வேறுபிரிந்து, தேவன் எந்த ஊழியத்திற்காகப் பிரதிஷ்டை பண்ணியிருக்கிறாரோ அந்தப் பிரதிஷ்டையைக் காத்துக் கொள்வது பரிசுத்தமாகும்.

லேவி 19:2-37; லேவி 20:2-27 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பரிசுத்தம் அவர்களுடைய நீதிநெறியான பரிசுத்தத்தைக் குறிக்கும். (1தெச 4:3; 1தெச 5:6-23; எபி 12:14). வெளிப்பிராகாரமான சுத்திகரிப்பு பரிசுத்தமல்ல. உள்ளான ஜீவியத்தைச் சுத்திகரிப்பதே பரிசுத்தமாகும். (1சாமு 16:7; மாற்கு 7:19-21; ரோமர் 1:18-32; 2கொரி 6:9-11; கலா 5:19-21).

இஸ்ரவேல் புத்திரர் தேவனோடு சரியான ஐக்கியத்தில் இருக்க வேண்டுமென்றால் அவர்கள் சுத்தமானதற்கும் அசுத்தமானதற்கும், பாவத்திற்கும், பரிசுத்தத்திற்கும், சரியானதற்கும், தவறானதற்கும் வித்தியாசம் பண்ண வேண்டும். (எபி 12:14).

பரிசுத்தமில்லாமல் எந்த மனுஷனாலும் கர்த்தரை தரிசிக்க முடியாது. ஆதியிலே ஆதாம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, தன்னை தீட்டுப்படுத்திக்கொண்டார். ஆதாம் தேவமகிமையை இழந்தார். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கிறிஸ்துவோடு ஒப்புரவாகவேண்டும். கிறிஸ்துவானவர் தம்முடைய திருஇரத்தத்தினால் நம்முடைய பாவக்கறைகளையும், தீட்டுக்களையும், அசுத்தங்களையும் கழுவி சுத்தம்பண்ணவேண்டுமென்று, அவருடைய சமுகத்திலே பணிவாய் விண்ணப்பம்பண்ணவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் பாவத்தில் விழுந்து அசுத்தமாயிருந்த காலத்தில், இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தார்கள். "தகப்பன் குறித்த காலம்வரைக்கும் அவன் காரியக்காரருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்கும் கீழ்ப்பட்டிருக்கிறான். அப்படியே நாமும் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம்" (கலா 4:2,3).

கர்த்தர் பரிசுத்தர். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். "உங்களை தீட்டுப்படுத்தாமல், உங்களை பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தமாயிருப்பீர்களாக" (லேவி 11:44) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்மை பரிசுத்தமாக்கிக் கொள்வதற்காகவே, கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை நமக்கு சொல்லியிருக்கிறார். நாம் பரிசுத்தராயிருக்கவேண்டும் என்பதற்காகவே கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். நாம் எவ்வாறு பரிசுத்தராயிருப்பது என்று கற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய பிரமாணம் நமக்கு போதிக்கும்.

கர்த்தருடைய பிள்ளைகள் எல்லா விஷயங்களிலும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். இந்த அதிகாரத்தில் இஸ்ரவேல் ஜனத்தாரின் போஜனவிஷயங்களைக் குறித்து கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லியிருக்கிறார். நாம் போஜனவிஷயத்தில் மாத்திரமல்ல, எல்லா விஷயங்களிலும் பரிசுத்தமாயிருந்து கர்த்தரை தரிசிக்கவேண்டும்.

பன்றியின் மாம்சத்தைப் புசிக்கிறவன் தன்னை தீட்டுப்படுத்துகிறான். பன்றியின் இரத்தத்தை கர்த்தருடைய பலிபீடத்தில் ஊற்றுவது கர்த்தருக்கு விரோதமான பாவம். பன்றியின் மாம்சத்தைப் புசிப்பது, பன்றியின் இரத்தத்தை பலிபீடத்தில் செலுத்துவதற்கு ஒப்பான பாவமாயிருக்கிறது.

"துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது; செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்" (நீதி 15:8).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணங்களை வெளிப்படுத்துகிறார். "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கடமை. அவர்கள் முழுஇருதயத்தோடு கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தம்மைப்பற்றிச் சொல்லும்போது "நான் பரிசுத்தர்" (லேவி 11:44) என்று சொல்லி, "நான் பரிசுத்தர்" (லேவி 11:45) என்று மறுபடியுமாய் சொல்லுகிறார். கர்த்தர் பரிசுத்தராயிருப்பதினால், கர்த்தருடைய ஜனமும் பரிசுத்தராயிருக்கவேண்டும்.

கர்த்தர் பரிசுத்தராயிருப்பதினால், நாமும் பரிசுத்தராயிருந்தால் மாத்திரமே, கர்த்தர் நம்மை ஏற்றுக்கொள்வார். கர்த்தருடைய ஜனமாகிய நாம் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கக்கூடாது. விசுவாசிகள் எல்லோரும் கர்த்தருக்கு பிரியமானவர்களாகவும், அவருக்கு பிரயோஜனமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். கர்த்தர் பரிசுத்தர் என்பதையும், நாமும் பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்பதையும் நமக்கு உபதேசம்பண்ணுவதற்காகவே, கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை நமக்கு சொல்லியிருக்கிறார்.

"நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனிநடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" (1பேது 1:14,15).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்மைப்பற்றிச் சொல்லும்போது, "நான் உங்கள் தேவனாயிருக்கும்படி உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக" (லேவி 11:45) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பெரிய காரியங்களை செய்திருக்கிறார். கர்த்தர் அவர்கள் மத்தியில் அநேக அற்புதங்களையும், அதிசயங்களையும் நடப்பித்திருக்கிறார். ஆகையினால் கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரிடத்திலிருந்து அதிகமாய் எதிர்பார்க்கிறார். கர்த்தர் மற்ற ஜாதியாருக்கு செய்ததைவிட, இஸ்ரவேல் ஜாதியாருக்கு அதிகமாக நன்மைகளை செய்திருக்கிறார். ஆகையினால் கர்த்தர் தம்முடைய நீதியினால் இஸ்ரவேல் ஜாதியாரிடமிருந்து தமக்கு பிரியமான காரியங்களை எதிர்பார்க்கிறார்.

கர்த்தர் தம்முடைய பிரமாணத்தின் மூலமாக சுத்தமானதற்கும் அசுத்தமானதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை சொல்லுகிறார். சுத்தமானதற்கும் அசுத்தமானதற்கும், புசிக்கத்தக்க ஜந்துக்களுக்கும் புசிக்கத்தகாத ஜந்துக்களுக்கும் வித்தியாசம்பண்ணும்பொருட்டு, மிருகத்துக்கும் பறவைகளுக்கும், தண்ணீர்களில் நீந்துகிற சகல ஜீவஜந்துக்களுக்கும், பூமியின்மேல் ஊருகிற சகல பிராணிகளுக்கும் அடுத்த பிரமாணம் இதுவே (லேவி 11:46,47).

கர்த்தர் இந்தப் பிரமாணத்தை மோசேக்கும் ஆரோனுக்கும் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும். கர்த்தருடைய பிரமாணம் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நித்திய பிரமாணமாக சொல்லப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் கீழ் இருக்கிறோம். நாம் எதைப் புசிக்கலாம் என்று கர்த்தர் நமக்கு தெளிவுபடுத்தியிருக்கிறார். கர்த்தர் சுத்தமாக்கினவைகளை நாம் தீட்டாக எண்ணக்கூடாது.

"அப்பொழுது: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று" (அப் 10:15).

இயேசுகிறிஸ்துவினுடைய மரணத்தின் மூலமாக, பழைய பிரமாணம் ஒழிந்துபோயிற்று. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள் பழைய பிரமாணத்திற்கு அடிமைகளல்ல.

"போஜனமானது நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது; என்னத்தினாலெனில், புசிப்பதினால் நமக்கு ஒரு மேன்மையுமில்லை, புசியாதிருப்பதினால் நமக்கு ஒரு குறைவுமில்லை" (1கொரி 8:8).

"ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்லவென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயித்திருக்கிறேன்; ஒரு பொருளைத் தீட்டுள்ளதென்று எண்ணிக் கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு அதுதீட்டுள்ளதாயிருக்கும்" (ரோம 14:14).

"வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" (மத் 15:11) என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நமக்கு உபதேசம் செய்திருக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்மீது பழைய பிரமாணத்தின் நுகம் சுமத்தப்படவில்லை. நாம் கிறிஸ்துவுக்குள் விடுதலை பெற்றிருக்கிறோம். அதற்காக நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும். கர்த்தர் சுத்தம்பண்ணின யாவற்றையும் நாம் ஸ்தோத்திரத்தோடே புசிக்கலாம்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள் பழைய பிரமாணத்திற்கு அடிமைகளாயிராமல், கிறிஸ்துவுக்குள் விடுதலை பெறவேண்டும். விசுவாசத்தில் நிலைத்திருக்கவேண்டும். கிறிஸ்துவோடு சமாதானமாயிருக்கவேண்டும். நம்மிடத்தில் பேராசை இருக்கக்கூடாது. கர்த்தர் நமக்கு கொடுக்கும் போஜனத்தில் திருப்தியடையவேண்டும்.

கர்த்தருடைய கிருபை அவருடைய பிள்ளைகளுக்கு எப்பொழுதும் போதுமானதாயிருக்கும். பேராசை பிடித்தவர்கள் ஒருபோதும் திருப்தியடையமாட்டார்கள். அவர்கள் எதைப் புசித்தாலும் திருப்தியடையாமல், பெருந்தீனி உண்டு, தங்களுடைய சரீரத்தின் ஆரோக்கியத்தைக் கெடுத்துப்போடுவார்கள். நம்முடைய ஆத்துமா சுத்தமாயிருக்க வேண்டும் என்பதும், நம்முடைய சரீரம் ஆரோக்கியமாயிருக்கவேண்டும் என்பதும் கர்த்தருடைய சித்தம்.

சுத்தமானவை, அசுத்தமானவை பற்றிய கர்த்தருடைய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. மிருகங்களில் விரிகுளம்புள்ளதாயிருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும் அசைபோடுகிறதுமானவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம். (லேவி 11:1-3).
2. மற்றவை உங்களுக்கு அசுத்தமாயிருக்கும். (லேவி 11:4-7)

3. இவைகளின் மாம்சத்தைப் புசிக்கவும், இவைகளின் உடல்களைத் தொடவும் வேண்டாம்; இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது. (லேவி 11:8).

4. ஜலத்திலிருக்கிறவைகளில் நீங்கள் புசிக்கத்தக்கது யாதெனில்: கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களிலே சிறகும் செதிளும் உள்ளவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம். (லேவி 11:9).

5. கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களில் நீந்துகிறதும் வாழ்கிறதுமான பிராணிகளில் சிறகும் செதிளும் இல்லாதவைகள் யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக. அவைகள் உங்களுக்கு அருவருப்பாயிருக்கக்கடவது. (லேவி 11:10-12).

6. பறவைகளில் நீங்கள் புசியாமல் அருவருக்கவேண்டியவைகள் (லேவி 11:13-19) ஆகிய வசனங்களில் அட்டவணையாகக் கூறப்பட்டிருக்கிறது.

7. பறக்கிறவைகளில் நாலுகாலால் நடமாடுகிற ஊரும்பிராணிகள் யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக. (லேவி 11:20).

8. பறக்கிறவைகளில் நாலுகாலால் நடமாடுகிற யாவிலும், நீங்கள் புசிக்கத்தக்கது லேவி 11:21-22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

9. பறக்கிறவைகளில் நாலு காலால் நடமாடுகிற மற்ற யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக. (லேவி 11:23).

10. அவைகளாலே தீட்டுப்படுவீர்கள்; அவைகளின் உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப் பட்டிருப்பான். (லேவி 11:24).

11. அவைகளின் உடலைச் சுமந்தவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப் பட்டிருப்பான். (லேவி 11:25).

12. விரிநகங்களுள்ளவைகளாயிருந்தும், இருபிளவான குளம்பில்லாமலும் அசை போடாமலும் இருக்கிற மிருகங்கள் யாவும் உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக; அவைகளைத் தொடுகிறவன் எவனும் தீட்டுப்படுவான். (லேவி 11:26).

13. நாலுகாலால் நடக்கிற சகல ஜீவன்களிலும் தங்கள் உள்ளங்கால்களை ஊன்றி நடக்கிற யாவும் உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக (லேவி 11:27).

14. அவைகளின் உடலைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப் பட்டிருப்பான் (லேவி 11:26-27).

15. அவைகளின் உடலைச் சுமந்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப் பட்டிருப்பான் (லேவி 11:28).

16. தரையில் ஊருகிற பிராணிகளில் உங்களுக்கு அசுத்தமானவைகள் லேவி 11:29-30 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

17. செத்ததைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (லேவி 11:31).

18. அவைகளில் செத்தது ஒன்று யாதொன்றின்மேல் விழுந்தால் அது தீட்டுப்பட்டிருக்கும் (லேவி 11:32).

19. அது மரப்பாத்திரமானாலும், வஸ்திரமானாலும், தோலானாலும், பையானாலும், வேலை செய்கிறதற்கேற்ற ஆயுதமானாலும் சாயங்காலம்மட்டும் தீட்டாயிருக்கும்; அது தண்ணீரில் போடப்படவேண்டும், அப்பொழுது சுத்தமாகும் (லேவி 11:32)

20. அவைகளில் ஒன்று மண்பாண்டத்திற்குள் விழுந்தால், அதற்குள் இருக்கிறவை யாவும் தீட்டுப்பட்டிருக்கும்; அதை உடைத்துப் போடவேண்டும். (லேவி 11:33)

21. புசிக்கத்தக்க போஜன பதார்த்தத்தின்மேல் அந்தத் தண்ணீர் பட்டால், அது தீட்டாகும் (லேவி 11:34)

22. குடிக்கத்தக்க எந்தப் பானமும் அப்படிப்பட்ட பாத்திரத்தினால் தீட்டுப்படும் (லேவி 11:34)

23. அவைகளின் உடலில் யாதொன்று எதின்மேல் விழுதோ, அதுவும் தீட்டுப்படும்; அடுப்பானாலும் மண்தொட்டியானாலும் தகர்க்கப்படுவதாக (லேவி 11:35).

24. ஆனாலும் நீரூற்றும் மிகுந்த ஜலம் உண்டாகிய கிணறும் சுத்தமாயிருக்கும்; அவைகளிலுள்ள உடலைத் தொடுகிறவனோ தீட்டுப்படுவான் (லேவி 11:36).

25. மேற்சொல்லியவைகளின் உடலில் யாதொன்று விதைத்தானியத்தின்மேல் விழுந்தால், அது தீட்டுப்படாது. அந்த உடலில் யாதொன்று தண்ணீர் வார்க்கப்பட்டிருக்கிற விதையின்மேல் விழுந்ததானால், அது உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது. (லேவி 11:37-38).

26. உங்களுக்கு ஆகாரத்துக்கான ஒரு மிருகம் செத்தால், அதின் உடலைத் தொடுகிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (லேவி 11:39).

27. அதின் மாம்சத்தைப் புசித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப் பட்டிருப்பான் (லேவி 11:40).

28. அதின் உடலை எடுத்துப்போனவனும் அதன் வஸ்திரங்களைத் தோய்க்கக் கடவன்; அவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (லேவி 11:40).

29. தரையில் ஊருகிற பிராணிகளெல்லாம் உங்களுக்கு அருவருப்பாயிருக்கக்கடவது; அவை புசிக்கப்படலாகாது (லேவி 11:41-42).

30. தரையில் ஊருகிற சகல பிராணிகளிலும், வயிற்றினால் நகருகிறவைகளையும், நாலுகாலால் நடமாடுகிறவைகளையும், அநேகங் கால்களுள்ளவைகளையும் புசியாதிருப்பீர்களாக; அவைகள் அருவருப்பானவைகள். (லேவி 11:41-42).

31. ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களை அருவருப்பாக்கிக் கொள்ளாமலும், அவைகளால் தீட்டுப்படாமலும் இருப்பீர்களாக (லேவி 11:43-44).

32. தரையில் ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களைத் தீட்டுப்படுத்தாமல் இருப்பீர்களாக (லேவி 11:44-45).

33. உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக.

12 அதிகாரம்

கர்த்தர் இதுவரையிலும் மோசேயினிடத்திலும் ஆரோனிடத்திலும் போஜனம் சம்பந்தமான தம்முடைய பிரமாணத்தை சொன்னார். சுத்தமான போஜனத்திற்கும், அசுத்தமான போஜனத்திற்கும் கர்த்தர் அவர்களுக்கு வித்தியாசம் காண்பித்தார்.

போஜனங்களில் சுத்தமான போஜனம் என்றும், அசுத்தமான போஜனம் என்றும் வித்தியாசம் இருப்பதுபோல, மனுஷருக்குள்ளும் சுத்தமானவர்கள், அசுத்தமானவர்கள் என்னும் வித்தியாசம் இருக்கிறது.

ஸ்திரீகளுக்கு பிள்ளைப்பேறு உண்டாகும்போது அவர்கள் சடாங்காச்சார பிரகாரமாக அசுத்தமாயிருப்பார்கள். ஸ்திரீகள் தீட்டாயிருப்பது பற்றிய பிரமாணத்தை கர்த்தர் இந்த அதிகாரத்தில் சொல்லுகிறார் (லேவி 12:1-5). தீட்டாயிருக்கிற ஸ்திரீ, இந்த அசுத்தத்திலிருந்து தன்னை சுத்திகரித்துக்கொள்வது சம்பந்தமான பிரமாணத்தையும் கர்த்தர் இந்த அதிகாரத்தில் சொல்லுகிறார் (லேவி 12:6-8).

உதிரச்சுத்திகரிப்பு லேவி 12:1-5

லேவி 12:1. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 12:2. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: ஒரு ஸ்திரீ கர்ப்பவதியாகி ஆண்பிள்ளையைப் பெற்றால், அவள் சூதகஸ்திரீ விலக்கமாயிருக்கும் நாட்களுக்குச் சரியாக ஏழுநாள் தீட்டாயிருப்பாள்.

லேவி 12:3. எட்டாம் நாளிலே அந்தப் பிள்ளையினுடைய நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படக்கடவது.

லேவி 12:4. பின்பு அவள் முப்பத்துமூன்றுநாள் தன் உதிரச் சுத்திகரிப்பு நிலையிலே இருந்து, சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறுமளவும் பரிசுத்தமான யாதொரு வஸ்துவைத் தொடவும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் வரவும் கூடாது.

லேவி 12:5. பெண்பிள்ளையைப் பெற்றாளாகில், அவள், இரண்டு வாரம் சூதகஸ்திரீயைப் போலத் தீட்டாயிருந்து, பின்பு அறுபத்தாறுநாள் உதிரச் சுத்திகரிப்பு நிலையிலே இருக்கக்கடவள்.

ஒரு ஸ்திரீ கர்ப்பவதியாகி பிள்ளையைப் பெற்றெடுக்கும்போது அவள் சடங்காச்சார பிரகாரமாக தீட்டாயிருக்கிறாள். ஸ்திரீயானவள் பிள்ளைப் பெற்றெடுக்காமல், அந்தப் பிள்ளையானது ஸ்திரீயின் கர்ப்பத்திலிருக்கும்போதே கலைந்துபோனாலும், அந்த ஸ்திரீ தீட்டாயிருப்பாள் என்று யூதருடைய பாரம்பரியம் சொல்லுகிறது. ஸ்திரீயின் கர்ப்பத்திலிருக்கிற பிள்ளையை, ஆண்பிள்ளை அல்லது பெண்பிள்ளை என்று வித்தியாசம் காணமுடியுமானால், அந்தப் பிள்ளை பிறக்காவிட்டாலும், அல்லது அந்தப் பிள்ளை ஸ்திரீயின் கர்ப்பத்திலே கலைந்துபோனாலும், யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம் அது பிறந்த பிள்ளையைப்போலவே பாவிக்கப்படும்.

ஸ்திரீயானவள் பிள்ளை பெற்றெடுத்தவுடன், ஒரு சில நாட்களுக்கு விலக்கமாயிருக்கவேண்டும். அவள் தன்னுடைய புருஷனை விட்டும், சிநேகிதரை விட்டும் பிரிந்திருக்கவேண்டும். பிள்ளையைப் பெற்றெடுக்கும் ஸ்திரீக்கு மருத்துவ சிகிச்சை கொடுக்கிறவர்களும், அந்த ஸ்திரீயை பராமரிக்கிறவர்களும், சடங்காச்சார பிரகாரமாக தீட்டுப்பட்டிருப்பார்கள்.

ஆகையினால்தான் இஸ்ரவேல் புத்திரரில், ஆண் பிள்ளை பிறக்கும்போது, அந்தப் பிள்ளைக்கு எட்டு நாள் ஆகும் வரையிலும் விருத்தசேதனம் கொடுக்கப்படுவதில்லை. பிள்ளையின் தாயாருக்கு மருத்துவ சிகிச்சை கொடுக்கிறவர்களும், அவளை பராமரிக்கிறவர்களும், பிள்ளை பிறக்கும்போது அவளோடு கூடவே இருக்கிறார்கள். ஆகையினால் தாயானவள் தீட்டுப்பட்டிருப்பதுபோல, அவளோடுகூட இருக்கிறவர்களும் தீட்டுப்பட்டிருப்பார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: ஒரு ஸ்திரீ கர்ப்பவதியாகி ஆண்பிள்ளையைப் பெற்றால், அவள் சூதகஸ்திரீ விலக்கமாயிருக்கும் நாட்களுக்குச் சரியாக ஏழுநாள் தீட்டாயிருப்பாள். எட்டாம் நாளிலே அந்தப் பிள்ளையினுடைய நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படக்கடவது" (லேவி 12:1-3) என்று சொல்லுகிறார்.

ஆண்பிள்ளைக்கு ஏழுநாளும், பெண்பிள்ளைக்கு 14 நாளும் பிள்ளை பெற்றவள் தீட்டாயிருப்பாள் (லேவி 12:2,5). ஆண்பிள்ளையைப் பெற்றவள் முப்பத்துமூன்றுநாள் தன் உதிரச் சுத்திகரிப்பு நிலையிலே இருந்து, சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறுமளவும் பரிசுத்தமான யாதொரு வஸ்துவைத் தொடவும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் வரவும் கூடாது. (லேவி 12:4). பெண்பிள்ளையைப் பெற்றவள் அறுபத்தாறுநாள் உதிரச் சுத்திகரிப்பு நிலையிலே இருக்கக்கடவள். (லேவி 12:5). பெண்பிள்ளையைப் பெற்றவள் அதிகநாட்களுக்கு ஏன் சுத்திகரிப்பு செய்து கொள்ள வேண்டுமென்று வேதாகமத்தில் விளக்கப்படவில்லை.

எட்டாம் நாளிலே அந்தப் பிள்ளையினுடைய நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம்பண்ணப்படப்படவேண்டும். யூதர்கள் ஓய்வுநாளாக இருந்தாலும் எட்டாம் நாளிலே ஆண்பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணுவார்கள். (யோவான் 7:23) ஓய்வுநாள் பிரமாணத்தைவிட விருத்தசேதனம் பண்ணும் பிரமாணம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. விருத்தசேதனம் பண்ணிய ஆண்பிள்ளை தேவனுடைய உடன்படிக்கைக்கு உட்பட்டவனாகிறான்.

தேவனுடைய உடன்படிக்கைக்குத் தான் கீழ்ப்படிந்து நடப்பான் என்பதற்கும், தொடர்ந்து கீழ்ப்படிந்து நடப்பான் என்பதற்கும் விருத்தசேதனம் பண்ணுவது ஓர் அடையாளமாக இருக்கிறது. வியாதிகளிலிருந்து பாதுகாப்பதற்காகவும், விருத்தசேதனம் உதவுகிறது என்று ஒரு கருத்து நிலவுகிறது.

தீட்டான ஸ்திரீயை சுத்திகரிப்பதற்கு அநேக நாட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறது. சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறுமளவும் ஸ்திரீயானவள் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. அவள் பஸ்கா போஜனத்தையும், சமாதான பலிகளையும் புசிக்கக்கூடாது.

பிள்ளையைப் பெற்றெடுத்த ஸ்திரீயானவள், ஆசாரியரின் மனைவியாக இருப்பாள் என்றால், அவள் கர்த்தருக்கு பரிசுத்தமாக படைக்கப்பட்ட எதையும் புசிக்கக்கூடாது.

ஆண்பிள்ளையை பெற்றெடுத்த ஸ்திரீயானவள் முப்பத்துமூன்றுநாள் தன் உதிரச் சுத்திகரிப்பு நிலையிலே இருக்கவேண்டும். சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறுமளவும் அவள் பரிசுத்தமான யாதொரு வஸ்துவைத் தொடவும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் வரவுங்கூடாது (லேவி 12:4).

ஸ்திரீயானவள் பெண்பிள்ளையைப் பெற்றாளாகில், அவள், இரண்டு வாரம் சூதகஸ்திரீயைப் போலத் தீட்டாயிருக்கவேண்டும். பின்பு அவள் அறுபத்தாறுநாள் உதிரச் சுத்திகரிப்பு நிலையிலே இருக்கக்கடவள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 12:5).

நம்முடைய முற்பிதாக்களாகிய ஆதாமும் ஏவாளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்கள் மூலமாக மனுக்குலத்திற்குள்ளே பாவம் பிரவேசித்திருக்கிறது. ஆகையினால் மனுஷரை சுத்திகரிப்பு செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. நம்முடைய முற்பிதாக்கள் பாவத்தில் பிரவேசிக்கவில்லையென்றால், நமக்கு சடங்காச்சாரமான அசுத்தமோ அல்லது தீட்டோ எதுவும் ஏற்பட்டிருக்காது.

ஒரு ஸ்திரீயானவள் பிள்ளையைப் பெற்றெடுப்பது மிகவும் சந்தோஷமான சம்பவம். இதன் மூலமாக குடும்பத்திற்கு மிகுந்த சந்தோஷமும், ஆசீர்வாதமும் உண்டாகிறது. ஆனாலும் ஆதாம் ஏவாள் ஆகியோருடைய பாவத்தினால், பிள்ளையைப் பெற்றெடுத்த ஸ்திரீயானவள் அசுத்தமானவளாகவும், தீட்டானவளாகவும் இருக்கிறாள்.

ஆதாம் ஏவாளுடைய பாவத்தினால் மனுக்குலத்திற்குள்ளே பாவம் பிரவேசித்திருக்கிறது. இது நம்முடைய ஜென்ம பாவம். அவர்கள் பாவம் செய்யவில்லையென்றால், பிள்ளையைப் பெற்றெடுத்த ஸ்திரீயையும், அந்தப் பிள்ளையையும் கழுவி சுத்தம்பண்ணினாலே போதுமானது. பிள்ளையும் அதைப் பெற்றெடுத்த ஸ்திரீயும் தீட்டாயிருக்கமாட்டார்கள்.

கர்த்தர் நம்மை பலுகிப்பெருகுமாறு கட்டளையிட்டிருக்கிறார். ஸ்திரீகள் பிள்ளைகளைப் பெற்றெடுப்பது கர்த்தருக்கு பிரியமானது. ஆனாலும் மனுஷருடைய ஜென்ம பாவத்தினால், பிள்ளையைப் பெற்றெடுக்கிற ஸ்திரீயானவள் தீட்டானவளாயிருக்கிறாள். இந்த தீட்டும் அசுத்தமும் சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது.

பிள்ளையைப் பெற்றெடுத்த ஸ்திரீ விலக்கமானவளாகவும், அசுத்தமானவளாகவும், தீட்டானவளாகவும் இருக்கிறாள். அவள் சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறுமளவும் பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசிக்கக்கூடாது. அவள் கர்த்தருடைய பரிசுத்தமான காரியங்களில் பங்குபெறவும் கூடாது. இவையெல்லாம் மனுஷருடைய ஜென்ம பாவத்தினால் வந்த தீயவிளைவுகள் ஆகும்.

கர்த்தர் மனுக்குலத்தின்மீது பிரியமுள்ளவராகயிருக்கிறார். ஆகையினால் பிள்ளையைப் பெற்றெடுத்த ஸ்திரீயானவள் தீட்டானவளாக இருந்தாலும், அந்த தீட்டை சுத்திகரிப்பதற்கு கர்த்தர் ஒரு உபாயத்தையும் நியமித்திருக்கிறார். ஸ்திரீயின் அசுத்தத்தை சுத்தம்பண்ணுவதற்கு சுத்திகரிப்பின் நாட்களை கர்த்தர் ஏற்படுத்தியிருக்கிறார். இது கர்த்தர் மனுக்குலத்திற்கு காண்பித்திருக்கும் மிகப்பெரிய சிலாக்கியமாகும்.

கர்த்தர் மனுஷருக்கு சுத்திகரிப்பின் உபாயத்தை நியமிக்கவில்லையென்றால், மனுக்குலத்தார் நிரந்தரமாகவே தீட்டானவர்களாக இருப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க முடியாமல், நிரந்தரமாக கர்த்தரை விட்டுப் பிரிந்திருப்பார்கள். கர்த்தர் தமது கிருபையினால் மனுக்குலத்திற்கு சுத்திகரிப்பின் நாட்களை நியமித்து, நம்மை சுத்தம்பண்ணுகிறார்.

சுத்திகரிப்பின் நாட்கள்
லேவி 12:6-8

லேவி 12:6. அவள் ஆண்பிள்ளையையாவது பெண்பிள்ளையையாவது பெற்றதற்காக அவளுடைய சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறினபின்பு, அவள் ஒரு வயதான ஆட்டுக்குட்டியை சர்வாங்க தகனபலியாகவும், ஒரு புறாக்குஞ்சையாவது காட்டுப் புறாவையாவது பாவநிவாரண பலியாகவும், ஆசரிப்புக் கூடாரவாசலில் ஆசாரியனிடத்திற்குக் கொண்டுவரக்கடவள்.

லேவி 12:7. அதை அவன் கர்த்தருடைய சந்நிதியில் பலியிட்டு, அவளுக்காகப் பாவநிவிர்த்தி செய்வானாக; அப்பொழுது அவள் தன் உதிர ஊறலின் தீட்டு நீங்கிச் சுத்தமாவாள். இது ஆண்பிள்ளையையாவது பெண்பிள்ளையையாவது பெற்றவளைக்குறித்த பிரமாணம்.

லேவி 12:8. ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவளுக்குச் சக்தியில்லாதிருந்தால், இரண்டு காட்டுப்புறாக்களையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஒன்றைச் சர்வாங்க தகனபலியாகவும் மற்றொன்றைப் பாவநிவாரணபலியாகவும் கொண்டுவரக்கடவள்; அதினால் ஆசாரியன் அவளுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அவள் சுத்தமாவாள் என்று சொல் என்றார்.

ஆண்பிள்ளையை பெற்றெடுத்த ஸ்திரீ ஏழுநாட்களுக்கு தீட்டாயிருப்பாள். அதன் பின்பு அவள் முப்பத்துமூன்று நாட்கள் தன் உதிர சுத்திகரிப்பு நிலையிலே இருப்பாள். பெண்பிள்ளையை பெற்றெடுத்த ஸ்திரீயானவள் இரண்டு வாரங்களுக்கு அதாவது பதிநான்கு நாட்களுக்கு தீட்டாயிருப்பாள். அதன் பின்பு அவள் அறுபத்து ஆறு நாட்களுக்கு தன் உதிர சுத்திகரிப்பு நிலையிலிருப்பாள்.

ஆண்பிள்ளையை பெற்றெடுத்த ஸ்திரீயைவிட, பெண்பிள்ளையை பெற்றெடுத்த ஸ்திரீயானவளுக்கு, இரண்டு மடங்கு அதிகமாக விலக்கமாயிருக்கும் நாட்களும், சுத்திகரிப்பின் நாட்களும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறுமளவும் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கக்கூடாது. சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறின பின்பு, அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கலாம். அவ்வாறு பிரவேசிக்கும்போது அவர்கள் காணிக்கைகளைக் கொண்டுவரவேண்டும்.

ஸ்திரீயானவள் ஆண்பிள்ளையையாவது பெண்பிள்ளையையாவது பெற்றதற்காக அவளுடைய சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறினபின்பு, அவள் ஒரு வயதான ஆட்டுக்குட்டியை சர்வாங்க தகனபலியாகவும், ஒரு புறாக்குஞ்சையாவது காட்டுப் புறாவையாவது பாவநிவாரண பலியாகவும், ஆசரிப்புக் கூடாரவாசலில் ஆசாரியனிடத்திற்குக் கொண்டுவரக்கடவள் என்று கர்த்தர் சொல்லுகிறார் *(லேவி 12:6)*.

பிள்ளையைப் பெற்றெடுத்த ஸ்திரீயானவள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு சர்வாங்க தகனபலியைக் கொண்டு வரவேண்டும். ஒரு வயதான ஆட்டுக்குட்டி சர்வாங்க தகனபலியாக நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆட்டுக்குட்டியை கொண்டுவர அவளுக்கு சக்தியில்லாதிருந்தால், ஒரு காட்டுப்புறாவையோ அல்லது ஒரு புறாக்குஞ்சையோ சர்வாங்க தகனபலியாக கொண்டு வரலாம்.

பிள்ளைப்பேறு காலத்தில் கர்த்தர் ஸ்திரீயானவளுக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பித்திருக்கிறார். கர்த்தர் தாமே ஸ்திரீயானவளை பிரசவ வேதனையிலிருந்து பாதுகாத்திருக்கிறார். ஸ்திரீயையும் அவளுடைய பிள்ளையையும் கர்த்தர் தாமே பாதுகாப்பாக வேறு பிரித்திருக்கிறார். பிள்ளைப்பேற்றின்போது ஸ்திரீயானவள் அனுபவிக்கும் எல்லா பாடுகளிலும், வேதனைகளிலும் கர்த்தர் தமது கிருபையை அவளுக்கு காண்பித்து, அவளைப் பலப்படுத்தியிருக்கிறார். கர்த்தர் தனக்கு காண்பித்த கிருபைக்கும் இரக்கத்திற்கும் நன்றி சொல்லும் வண்ணமாக, ஸ்திரீயானவள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு சர்வாங்க தகனபலியை கொண்டு வருகிறாள்.

கர்த்தர் தனக்கும் தான் பெற்ற பிள்ளைக்கும் இன்னும் அதிகமான கிருபைகளையும், நன்மைகளையும், இரக்கங்களையும் காண்பிக்கவேண்டுமென்று எதிர்பார்த்து அவள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு சர்வாங்க தகனபலியை கொண்டு வருகிறாள்.

பிள்ளை பிறக்கும்போது அந்தப் பிள்ளையைப் பெற்றெடுத்த ஸ்திரீக்கும், அவளுடைய குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினருக்கும், சிநேகிதருக்கும் மிகுந்த சந்தோஷமுண்டாகிறது. பிறந்த பிள்ளையின் மூலமாக, அதன் தாய்க்கும், குடும்பத்திற்கும் ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. தனக்கு கிடைத்த சந்தோஷத்திற்காக ஸ்திரீயானவள் கர்த்தருக்கு நன்றி சொல்லும் வண்ணமாக, சர்வாங்க தகனபலியை கொண்டு வருகிறாள்.

ஸ்திரீயானவள் சர்வாங்க தகனபலியோடு, பாவநிவாரண பலியையும் கொண்டு வரவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். பிள்ளைப்பேற்றின்போது ஸ்திரீயானவள் வேதனை தாங்கமுடியாமல் மனுஷரை சபித்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் அவள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு பாவநிவாரண பலியையும் கொண்டு வரவேண்டும்.

பாவநிவாரண பலியாக ஒரு புறாக்குஞ்சையாவது, காட்டுப்புறாவையாவது ஆசரிப்புக்கூடாரத்திற்கு கொண்டு வரவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். ஐசுவரியமுள்ளவர்களுக்கும், தரித்திரருக்கும் ஒரே விதமான பாவநிவாரண பலியே நியமிக்கப்பட்டிருக்கிறது. பாவநிவாரணத்தில் ஐசுவரியமுள்ளவர்களுக்கும் தரித்திரருக்கும் வித்தியாசமோ அல்லது வேறுபாடோ இல்லை.

ஐசுவரியவான்களும் தரித்திரரும் இந்த உலகத்தில் வெவ்வேறு நிலமையிலிருக்கலாம். அவர்களுடைய அந்தஸ்திலும், அதிகாரத்திலும், ஐசுவரியத்திலும் வேறுபாடு காணப்படலாம். ஆனால் கர்த்தரிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை. ஆகையினால் கர்த்தர் ஐசுவரியவானுக்கும் ஏழைக்கும் ஒரே மாதிரியான பாவநிவாரண பலியை நியமிக்கிறார்.

பிள்ளைப்பெற்ற ஸ்திரீயானவள் தீட்டாயிருக்கிறாள். அவளுடைய தீட்டு நீங்கி சுத்திகரிக்கப்படுவதற்கு, சுத்திகரிப்பின் நாட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறிய பின்பு, ஸ்திரீயானவள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு பாவநிவாரண பலியை கொண்டு வரவேண்டும்.

ஸ்திரீயானவள் பிள்ளையைப் பெற்றெடுப்பது பாவமான காரியமல்ல. ஆனாலும் பிள்ளை பெற்ற ஸ்திரீயானவள் சடங்காச்சார ரீதியாக தீட்டானவளாயிருக்கிறாள். ஸ்திரீயின் சடங்காச்சார தீட்டு, அவளுடைய நீதி நெறியின் தீட்டுக்கும் அசுத்தத்திற்கும் அடையாளமாயிருக்கிறது.

பிள்ளைப்பெற்ற ஸ்திரீயானவள், தன்னுடைய பாவம் நிவிர்த்தி பண்ணப்படவேண்டும் என்பதற்காகவே, பாவநிவாரண பலியை ஆசரிப்புக்கூடாரத்திற்கு கொண்டு வருகிறாள். அவள் தன் பிள்ளையை பெற்றெடுக்கும்போது, பொறுமையில்லாமல், வேதனை தாங்க முடியாமல், மனுஷரையோ அல்லது கர்த்தரையோ சபித்திருப்பதற்கு வாய்ப்புள்ளது.

ஒரு வேளை அவளுக்கு கர்த்தருடைய சித்தம் இன்னதென்று தெரியாமல், தான் பெற்றெடுக்கும் பிள்ளையைக் குறித்து அதிகமாக ஆசைப்பட்டிருப்பதற்கும் வாய்ப்புள்ளது. கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக சிந்திப்பது பாவம். ஆகையினால் பிள்ளைப்பெற்ற ஸ்திரீயானவள் தன் சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறின பின்பு, சர்வாங்க தகனபலியோடு, பாவநிவாரண பலியையும் ஆசரிப்புக்கூடாரத்திற்கு கொண்டு வரவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கன்னிமரியாளின் வயிற்றிலே உற்பத்தியானார். அவர் பரிசுத்த ஆவியினால் பிறந்தவர். மற்ற மனுஷரிடத்தில் பாவம் இருப்பதுபோல, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் பாவம் எதுவுமில்லை. ஆனாலும் மரியாள் இயேசுகிறிஸ்துவை பெற்றெடுத்த பின்பு, தன்னுடைய சுத்திகரிப்பின் நாட்களை நிறைவேற்றினாள்.

"மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே அவர்களுடைய சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறினபோது, முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதென்னப்படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும், கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி, ஒரு ஜோடு காட்டுப்புறாவையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவும், அவரை எருசலேமுக்குக் கொண்டு போனார்கள்" (லூக் 2:22-24).

இயேசுகிறிஸ்துவின் உலகப்பிரகாரமான பெற்றோர் செல்வந்தர்களல்ல. சர்வாங்க தகனபலியாக செலுத்த ஒரு ஆட்டுக்குட்டியை கொண்டு வர அவர்களுக்கு சக்தியில்லை. ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் பெற்றோர், ஒரு காட்டுப்புறாவையாவது அல்லது ஒரு புறாக்குஞ்சையாவது சர்வாங்க தகனபலியாக செலுத்தவேண்டுமென்று எருசலேமுக்கு வருகிறார்கள்.

நியாயப்பிரமாணத்திற்குட்பட்டவர்களை இரட்சிப்பதற்காக, கிறிஸ்துவானவர் தம்மை நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படுத்துகிறார்.

இயேசு கிறிஸ்துவின் தாயாகிய மரியாள் ஆட்டுக்குட்டியைக் கொண்டுவருவதற்குச் சக்தியில்லாத பரம ஏழையாக இருக்கிறாள். (லூக்கா 2:24) இயேசு கிறிஸ்து நமக்காகத் தரித்திரரானார். அவருடைய தரித்திரத்தினால் நாம் ஐசுவரியவான்களானோம் (மத் 8:20; 2கொரி 8:9).

பிள்ளைப்பெற்ற ஸ்திரீயானவள், சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரண பலியையும் ஆசரிப்புக்கூடார வாசலில் ஆசாரியனிடத்திற்கு கொண்டு வரவேண்டும். அதை அவன் கர்த்தருடைய சந்நிதியில் பலியிட்டு, அவளுக்காகப் பாவநிவிர்த்தி செய்வான். அப்பொழுது அவள் தன் உதிர ஊறலின் தீட்டு நீங்கிச் சுத்தமாவாள். இது ஆண்பிள்ளையையாவது பெண்பிள்ளையையாவது பெற்றவளைக்குறித்த பிரமாணம் (லேவி 12:7).

ஒவ்வொரு முறையும் ஒரு ஸ்திரீ குழந்தையைப் பெற்றெடுக்கும்போது அவள் பாவம் செய்கிறாள் என்பது இதன் பொருளல்ல. பிள்ளைப்பேற்றின்போது, அவளுக்கு உண்டாகும் சரீர வருத்தம் ஆதியிலே ஏவாள் செய்த பாவத்தின் விளைவாக வந்தது. அதற்காகவே பிள்ளைபெற்ற ஸ்திரீ பாவநிவிர்த்தி செய்கிறாள்.

பிள்ளைபேற்றின் போது, தான் சாகாமல் பாதுகாக்கப்பட்டதற்காக அவள் பாவநிவாரண பலியைச் செலுத்துகிறாள். தன்னுடைய ஜென்மபாவத்தை நினைத்து, அவள் தொடர்ந்து பலிகளைச் செலுத்திக் கொண்டிருக்கிறாள். இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்த வரையிலும், அவர்கள் பலிசெலுத்திக் கொண்டிருந்தார்கள் (எபி 10:3). இயேசு கிறிஸ்து நமக்கு இரட்சகராய் இருக்கிறார். நம்முடைய பாவத்திற்குப் பதிலீடாக மரித்தார். ஆகையினால், நம்முடைய பாவம் மன்னிக்கப்படுவதற்கு நாம் இனிமேல் பலிசெலுத்த வேண்டிய அவசியமில்லை. (எபி 10:1-18)

லேவி 11-17 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் சுத்திகரிப்புக்கள் எல்லாம் சடங்குகளாகும். பாவத்திலிருந்து உண்மையான சுத்திகரிப்பு இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தினால் வருகிறது. (ரோமர் 4:1-25; ரோமர் 5:1-11; கலா 3:8-14; எபே 2:1-8; எபி 4:2; எபி 11:1-40; 1பேதுரு 1).

பிள்ளைபெற்றவளுக்கு ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யும்போது அவள் சுத்தமாவாள் என்று கூறப்பட்டிருக்கிறது. பிள்ளைபேற்றின்போது அவளுடைய இரத்தம் அசுத்தமாயிற்று என்பது இதன் பொருளல்ல. உதிரத்தின் ஊறல் ஏற்பட்டதினால் அதற்குரிய சுத்திகரிப்பு தேவையாயிருக்கிறது.

பிள்ளைப்பெற்ற ஸ்திரீயானவளுக்கு ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர சக்தியில்லாதிருந்தால், அவள் இரண்டு காட்டுப்புறாக்களையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஒன்றைச் சர்வாங்க தகனபலியாகவும் மற்றொன்றைப் பாவநிவாரணபலியாகவும் கொண்டுவரலாம்; அதினால் ஆசாரியன் அவளுக்காகப் பாவநிவிர்த்தி செய்ய வேண்டும்; அப்பொழுது அவள் சுத்தமாவாள் (லேவி 12:8).

13 அதிகாரம்

குஷ்டரோகம் சடங்காச்சார ரீதியான அசுத்தமாயிருக்கிறது. கர்த்தர் குஷ்டரோகத்தைப்பற்றிய பிரமாணத்தை விரிவாக சொல்லுகிறார். இந்த அதிகாரத்தில் குஷ்டரோகம் கண்டுபிடிக்கப்படுவது பற்றியும் அடுத்த அதிகாரத்தில் குஷ்டரோகத்தை சுத்தம்பண்ணுவது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

பரிசுத்த வேதாகமத்தில் லேவியருடைய பிரமாணம் அதிகமாய் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா பிரமாணங்களிலும் குஷ்டரோகத்தைப்பற்றிய பிரமாணமே மிக அதிகமாகவும், மிக விரிவாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு மனுஷனுக்கு குஷ்டரோகம் உள்ளதா, இல்லையா என்பதை ஆசாரியன் தீர்மானம்பண்ணவேண்டும். குஷ்டரோகத்திற்கான அடையாளங்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

மனுஷனுடைய சரீரத்தின்மேல் காணப்படும் தடிப்பு, வெள்ளைப்படர் (லேவி 13:1-17). சரீரத்தின்மேல் உண்டாயிருக்கிற புண் (லேவி 13:18-23).

சரீரத்தின்மேல் நெருப்பு பட்டதினாலே வெந்து, அந்த இடத்தில் காணப்படும் சிவப்பான படர், அல்லது வெண்மையான படர் (லேவி 13:24-28). தலையிலாவது தாடியிலாவது காணப்படும் சொறி (லேவி 13:29-37).

சரீரத்தின்மேல் காணப்படும் வெள்ளைப்புள்ளிகள் (லேவி 13:38,39). தலைமயிர் உதிர்ந்த மொட்டை. மொட்டை தலையில் காணப்படும் சிவப்பு கலந்த வெண்மையான படர் (லேவி 13:40-44).

ஆசாரியன் குஷ்டரோகியை தீட்டுள்ளவன் என்று தீர்க்கவேண்டும் (லேவி 13:45,46). ஆட்டுமயிர், வஸ்திரம் ஆகியவற்றில் தோன்றும் குஷ்டம் (லேவி 13:47-59).

குஷ்டரோகம்
லேவி 13:1-17

லேவி 13:1. பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:

லேவி 13:2. மனிதனுடைய சரீரத்தின்மேல் குஷ்டரோகம் போலிருக்கிற ஒரு தடிப்பாவது அசறாவது வெள்ளைப்படராவது உண்டானால், அவன் ஆசாரியனாகிய ஆரோனிடத்திலாகிலும், ஆசாரியராகிய அவன் குமாரரில் ஒருவனிடத்திலாகிலும் கொண்டுவரப்படக்கடவன்.

லேவி 13:3. அப்பொழுது ஆசாரியன் அவன் சரீரத்தின்மேல் இருக்கிற ரோகத்தைப் பார்க்கவேண்டும்; ரோகம் இருக்கும் இடத்தில் மயிர் வெளுத்தும், ரோகமுள்ள இடம் அவனுடைய மற்றச் சரீரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் குழிந்தும் இருந்தால் அது குஷ்டரோகம்; ஆசாரியன் அவனைப் பார்த்தபின்பு, அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்.

லேவி 13:4. அவன் சரீரத்தின்மேல் வெள்ளைப்படர்ந்திருந்தாலும், அவ்விடம் அவனுடைய மற்றத் தோலைப்பார்க்கிலும் அதிக பள்ளமாயிராமலும், அதின் மயிர் வெள்ளையாக மாறாமலும் இருந்தால், ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்து வைத்து,

லேவி 13:5. ஏழாம் நாளில் அவனைப் பார்க்கக்கடவன்; தோலில் ரோகம் அதிகப்படாமல், அவன் பார்வைக்கு ரோகம் நின்றிருந்தால், ஆசாரியன் இரண்டாந்தரம் அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

லேவி 13:6. இரண்டாந்தரம் அவனை ஏழாம்நாளில் பார்க்கக்கடவன்; தோலில் ரோகம் அதிகப்படாமல் சுருங்கியிருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது அசறு; அவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்துச் சுத்தமாயிருப்பானாக.

லேவி 13:7. தன்னைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கிறதற்கு அவன் தன்னை ஆசாரியனுக்குக் காண்பித்த பின்பு, அசறுதோலில் அதிகமாய்ப் படர்ந்திருந்தால், அவன் மறுபடியும் ஆசாரியனுக்குத் தன்னைக் காண்பிக்கக்கடவன்.

லேவி 13:8. அப்பொழுது அசறு தோலிலே படர்ந்தது என்று ஆசாரியன் கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டரோகம்.

லேவி 13:9. குஷ்டரோகம் ஒரு மனிதனுக்கு இருந்தால், அவனை ஆசாரியனிடத்தில் கொண்டுவரவேண்டும்.

லேவி 13:10. அப்பொழுது ஆசாரியன் அவனைப் பார்த்து, தோலிலே வெள்ளையான தடிப்பிருந்து, அது மயிரை வெண்மையாக மாறப்பண்ணிற்றென்றும், அந்தத் தடிப்புள்ள இடத்திலே இரணமாம்சம் உண்டென்றும் கண்டால்,

லேவி 13:11. அது அவன் சரீரத்திலுள்ள நாள்பட்ட குஷ்டம்; அவன் தீட்டுள்ளவன். ஆதலால், ஆசாரியன் அவனை அடைத்து வைக்காமல், தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்.

லேவி 13:12. ஆசாரியன் பார்க்கிற இடங்களெங்கும் தோலிலே குஷ்டம் தோன்றி, அந்த ரோகமுள்ளவனுடைய தலைதொடங்கி அவன் கால்மட்டும் அது தேகமுழுவதையும் மூடியிருக்கக்கண்டால்,

லேவி 13:13. அப்பொழுது ஆசாரியன் பார்த்து, குஷ்டம் அவன் சரீரம் முழுவதையும் மூடியிருந்தால், அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் உடம்பெல்லாம் வெண்மையாய்ப்போனபடியால், அவன் சுத்தமுள்ளவன்.

லேவி 13:14. ஆனாலும், இரணமாம்சம் அவனில் காணப்பட்டால், அவன் தீட்டுள்ளவன்.

லேவி 13:15. ஆகையால், இரணமாம்சத்தை ஆசாரியன் காணும்போது, அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; இரணமாம்சம் தீட்டுள்ளது; அது குஷ்டம்.

லேவி 13:16. அல்லது, இரணமாம்சம் மாறி வெண்மையானால், அவன் ஆசாரியனிடத்துக்கு வரவேண்டும்.

லேவி 13:17. ஆசாரியன் அவனைப் பார்த்து, ரோகமுள்ள இடம் வெண்மையாக மாறினதென்று கண்டால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் சுத்தமுள்ளவன்.

குஷ்டரோகத்தை ஒரு நோய் என்று சொல்லுவதைவிட, அதை ஒரு அசுத்தம் அல்லது தீட்டு என்று சொல்லுவது பொருத்தமாகயிருக்கும். இந்த அதிகாரத்தில் குஷ்டரோகத்தைப்பற்றியும், அது சம்பந்தமாக கர்த்தர் சொல்லும் பிரமாணத்தைப்பற்றியும் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

குஷ்டரோகம் ஒரு வியாதியல்ல. அது ஒரு தீட்டு. ஆகையினால் குஷ்டரோகத்தை கவனிக்கும் பொறுப்பு மருத்துவருக்கு கொடுக்கப்படாமல், ஆசாரியருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து குஷ்டரோகிகளை சுத்தம்பண்ணினார். அவர் குஷ்டரோகிகளை சொஸ்தமாக்கினார் என்று வேதாகமத்தில் சொல்லப்படவில்லை.

குஷ்டரோகத்தினால் யாராவது ஒருவர் மரித்துப்போனார் என்று பரிசுத்தவேதாகமத்தில் எந்த வசனப்பகுதியிலும் சொல்லப்படவில்லை. குஷ்டரோகத்தினால் யாரும் மரிக்கவில்லை. குஷ்டரோகம் பிடித்தவர்கள் மரித்துப்போகாவிட்டாலும், அவர்கள் உயிரோடு அடக்கம்பண்ணப்பட்டவர்களைப் போல, அநேக வேதனைகளையும், பாடுகளையும் அனுபவித்தார்கள்.

குஷ்டரோகமுள்ளவர்கள் ஜனங்கள் மத்தியிலே வாசம்பண்ணக்கூடாது. அவர்கள் தங்கள் உற்றார் உறவினர்களையும், குடும்பத்தினரையும், சிநேகிதரையும் விட்டு பிரிந்து, ஊருக்கு வெளியே தனிமையில் வாசம்பண்ணவேண்டும். குஷ்டரோகமுள்ளவர்கள் உயிரோடிருந்தாலும், அவர்கள் செத்துப்போனவர்களைப்போல, யாரோடும் பேசாமல், பழகாமல் தங்கள் காலத்தை கழிக்கவேண்டும்.

குஷ்டரோகிகள் மற்றவர்களோடு பேசவோ பழகவோ கூடாது. அவர்களுடைய வேதனைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கும். குஷ்டரோகம் முதன்முதலில் எகிப்து தேசத்தில் ஆரம்பமாயிற்று என்றும் அதன்பின்பு அது சீரிய தேசத்திற்கு பரவிற்று என்றும் சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்த இஸ்ரவேல் புத்திரரை விடுதலை செய்து, கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார். அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டபோது தாங்கள் அந்த தேசத்தில் கற்றுக்கொண்ட, பழகின விக்கிரகாராதனை பழக்க வழக்கங்களை தங்களோடு கானான் தேசத்திற்கு கொண்டு வந்தார்கள். இதனால் கர்த்தர் அவர்கள்மீது கோபங்கொண்டு, தம்முடைய நீதியினால் அவர்களை தண்டித்தார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால், எகிப்து தேசத்தில் காணப்படுகிற வியாதிகள் இஸ்ரவேல் புத்திரர்மீதும் வந்தது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வந்தபோது, தங்களோடுகூட குஷ்டரோகத்தையும் கொண்டு வந்தார்கள்.

சீரிய தேசத்து படைத்தளபதியாகிய நாகமான் ஒரு குஷ்டரோகி. "சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான்; அவனைக்கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்; மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான்" (2இராஜா 5:1).

மனுஷனுடைய சரீரத்தின்மேல் காணப்படும் ரோகம் குஷ்டரோகத்திற்கு அடையாளம். எல்லா ரோகங்களும் குஷ்டரோகம் என்று சொல்ல முடியாது. ஒரு சில ரோகங்கள் குஷ்டரோகத்தைப்போல இருக்கும். ஆனால் அவை குஷ்டரோகம் அல்ல. ஒரு ரோகம் குஷ்டமா அல்லது அது குஷ்டமில்லையா என்பதை ஆசாரியனே தீர்மானம்பண்ணவேண்டும்.

ஒரு சிலருடைய சரீரத்தின்மேல் குஷ்டரோகம் போல் இருக்கிற தடிப்பு, அசறு, வெள்ளைப்படர் ஆகியவை இருக்கும். இவை குஷ்டரோகமாகயிராது. ஆகையினால் இப்படிப்பட்ட அடையாளமுள்ளவர்கள், சடங்காச்சார ரீதியாக அசுத்தமானவர்களல்ல. ஆனாலும் இந்த அடையாளங்கள் மனுஷனுக்கு அதிகமான வேதனைகளைக் கொடுக்கும்.

ஒருவனுக்கு குஷ்டமுள்ளதா இல்லையா என்பதை ஆசாரியனே தீர்மானம்பண்ணவேண்டும். ஜனங்கள் குஷ்டரோகிகளைப் பார்க்கும்போது, அவர்களை அருவருப்பாக பார்க்கிறார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பு குஷ்டரோகிகள்மீது வந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பொதுஜனங்களுக்கு குஷ்டரோகத்திற்கும், குஷ்டரோகத்தைப்போல காணப்படுகிற மற்ற ரோகத்திற்கும் வித்தியாசம் தெரியாது. அவர்கள் சரீரத்தில் காணப்படும் ரோகத்தைப் பார்ப்பதற்கே அருவருப்பார்கள்.

சரீரத்தின்மேல் காணப்படும் தடிப்பையும், வெள்ளைப்படரையும், அசறையும் ஆசாரியன் நோக்கிப் பார்த்து, அது குஷ்டமா, இல்லையா என்பதை தீர்மானம்பண்ணவேண்டும். கர்த்தர் இந்த ஊழியத்தை ஆசாரியருடைய கையிலே ஒப்புக்கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய கிருபையினாலே ஆசாரியர்கள் குஷ்டரோகிகளை பகுத்தறிகிறார்கள்.

பாவத்தினால் மனுஷருடைய மனது கறைபடிகிறது. ஒரு சிலருக்கு சரீரத்தில் குஷ்டம் இருக்கும். வேறு சிலருக்கு சரீரத்தில் குஷ்டம் காணப்படாது. ஆனால் அவர்களுடைய ஆத்துமாவில் குஷ்டம் ஏற்பட்டு அது அசுத்தமாயிருக்கும். ஆத்துமாவின் குஷ்டரோகம் மனுஷனுடைய மனச்சாட்சியைக் கெடுத்துப்போடுகிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே நம்மை சுத்திகரிக்க முடியும். இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையின் வல்லமை நம்மை சுத்திகரிக்கும் வல்லமையாயிருக்கிறது.

லேவியருடைய கோத்திரத்திலிருந்து நியமிக்கப்பட்டிருக்கிற ஆசாரியர்கள் குஷ்டரோகிகளை அடையாளம் காண்பார்கள். அவர்களால் குஷ்டரோகத்தை குணப்படுத்த முடியாது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே குஷ்டரோகியை குணப்படுத்த முடியும். நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினால் மனுஷருடைய பாவங்களை அகற்றிப்போட முடியும்.

குஷ்டரோகியை குணப்படுத்துகிற இயேசுகிறிஸ்துவினால், மனுஷருடைய பாவங்களையும் மன்னிக்க முடியும். ஒருவனுக்கு குஷ்டரோகம் இருக்கிறதா, இல்லையா என்பதை மாத்திரமே ஆசாரியரால் கண்டுபிடிக்க முடியும்.

நியாயப்பிரமாணமானது பாவத்தைப்பற்றிய அறிவை நமக்கு வெளிப்படுத்துகிறது. ஒரு காரியம் பாவமானதா அல்லது அது பாவமில்லாததா என்பதை நியாயப்பிரமாணம் தெளிவுபடுத்தும். நியாயப்பிரமாணத்தினால் பாவத்தை மன்னிக்க முடியாது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் குஷ்டரோகியை குணப்படுத்தவும் முடியும். அவரால் மனுஷருடைய பாவங்களை மன்னிக்கவும் முடியும்.

"அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான்" (மத் 8:2).

இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே குஷ்டரோகியை சுத்தமாக்க முடியும். ஆசாரியரால் குஷ்டரோகியை சுத்தமாக்க முடியாது.

நம்முடைய ஆவிக்குரிய குஷ்டரோகத்தை நம்மால் எளிதாக பகுத்தறிய முடியாது. இது சிரமமான காரியம். நம்முடைய ஆத்துமாவின் குஷ்டரோகத்தை கண்டுபிடிப்பது மிகவும் முக்கியமான காரியம். நம்முடைய ஆவிக்குரிய நிலமையை நாம் நிதானித்தறியவேண்டும்.

ஆசாரியன் குஷ்டரோகியை சோதித்து பார்ப்பதுபோல, நாமும் நம்முடைய ஆவிக்குரிய நிலமையை சோதித்து பார்க்கவேண்டும். மனுஷனுடைய சரீரத்தில் காணப்படுகிற தடிப்பையும், அசறையும், வெள்ளைப்படரையும் ஆசாரியன் சந்தேகப்பட்டு சோதித்துப் பார்ப்பான். ஆசாரியரைப்போலவே, நாமும் நம்முடைய ஆத்துமாவில் காணப்படும் தடிப்பையும் அசறையும், வெள்ளைப்படரையும் சந்தேகப்பட்டு சோதித்தறியவேண்டும்.

நம்முடைய சரீரத்தின்மேலும், ஆத்துமாவிலும் தடிப்பு, அசறு, வெள்ளைப்படர் ஆகியவை காணப்படுகிறதா என்பது நமக்கு முக்கியமல்ல. நாம் சுத்தமானவர்களா அல்லது அசுத்தமானவர்களா என்பதே நமக்கு முக்கியம். நம்மிடத்தில் அசுத்தம் காணப்படுமாயில், அந்த அசுத்தத்தை உடனே நீக்கி, நம்மை சுத்திகரிக்கவேண்டும்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "மனிதனுடைய சரீரத்தின்மேல் குஷ்டரோகம்போலிருக்கிற ஒரு தடிப்பாவது அசறாவது வெள்ளைப்படராவது உண்டானால், அவன் ஆசாரியனாகிய ஆரோனிடத்திலாகிலும், ஆசாரியராகிய அவன் குமாரரில் ஒருவனிடத்திலாகிலும் கொண்டுவரப்படக்கடவன்" (லேவி 13:1,2) என்று சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பலவிதமான தோல் வியாதிகளைக் குறிப்பதற்கு, அதை "குஷ்டரோகம்" என்று அழைத்தார்கள். இந்த வியாதி மற்றவருக்கும் படரும் என்பதினால் அதைக் குறித்து மிகுந்த எச்சரிக்கையோடு இருந்தார்கள். "குஷ்டரோகி வஸ்திரம் கிழிந்தவனாயும், தன் தலையை மூடாதவனாயும் இருந்து, அவன் தன் தாடியை மூடிக்கொண்டு, "தீட்டு, தீட்டு" என்று சத்தமிடவேண்டும்" (லேவி 13:45). பிற்காலத்தில் யானைக்கால் வியாதியைக்கூட குஷ்டரோகம் என்று கருதினார்கள்.

குஷ்டரோகம் என்பதற்கு எபிரெய மொழியில் "ட்சாராத்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு அடித்தல் என்று பொருள். கிரேக்க மொழியில் "லெப்ரா" என்னும் வார்த்தை குஷ்டரோகத்தைக் குறிக்கும். குஷ்டரோகத்தினால் தாக்கப்பட்டவன் அல்லது அடிக்கப்பட்டவன் தன்னை ஆசாரியருக்கு முன்பாகக் காண்பிக்க வேண்டும். அவனுக்குக் குஷ்டரோகம் உள்ளதா, இல்லையா என்பதை ஆசாரியன் தீர்மானம் பண்ண வேண்டும்.

குஷ்டரோகத்தை கண்டுபிடிக்கும் முறையைப்பற்றி கர்த்தர் மோசேயினிடத்திலும் ஆரோனிடத்திலும் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. மனிதனுடைய சரீரத்தின்மேல் குஷ்டரோகம் போலிருக்கிற ஒரு தடிப்பாவது அசறாவது வெள்ளைப்படராவது உண்டானால், அவன் ஆசாரியனாகிய ஆரோனிடத்திலாகிலும், ஆசாரியராகிய அவன் குமாரரில் ஒருவனிடத்திலாகிலும் கொண்டுவரப் படக்கடவன் (லேவி 13:2).
2. அப்பொழுது ஆசாரியன் அவன் சரீரத்தின்மேல் இருக்கிற ரோகத்தைப் பார்க்கவேண்டும்; ரோகம் இருக்கும் இடத்தில் மயிர் வெளுத்தும், ரோகமுள்ள இடம் அவனுடைய மற்றச் சரீரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் குழிந்தும் இருந்தால் அது குஷ்டரோகம்; ஆசாரியன் அவனைப் பார்த்தபின்பு, அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன் (லேவி 13:3).

குஷ்டரோகத்தின் அறிகுறிகளைப்பற்றியும் இந்த அதிகாரத்தில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ரோகம் இருக்கும் இடத்தில் மயிர் வெளுத்தும், ரோகமுள்ள இடம் அவனுடைய மற்றச் சரீரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் குழிந்தும் இருந்தால் அது குஷ்டரோகம். (லேவி 13:2,10,14-15).
2. ஒரு தடிப்பாவது அசறாவது வெள்ளைப் படராவது உண்டானால் அது குஷ்டரோகம் (லேவி 13:2; யாத் 4:6; எண் 12:10; 2இராஜா 5:27).
3. ஒரு வெள்ளைத் தடிப்பாவது சிவப்புக்கலந்து ஒரு வெள்ளைப்படராவது உண்டானால் அது குஷ்டம் (லேவி 13:2,19).
4. மற்றத் தோலைப்பார்க்கிலும் குழிந்திருக்கவும், அதின் மயிர் வெள்ளையாக மாறியிருக்கவும் கண்டால், அது புண்ணில் எழும்பின குஷ்டம் (லேவி 3:20-22).
5. ஒருவனுடைய சரீரத்தின்மேல் சிவப்பான படராவது வெண்மையான படராவது உண்டாகி, அந்தப் படரிலே மயிர் வெண்மையாக மாறி, அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் பள்ளமாயிருந்தால், அது வேக்காட்டினால் எழும்பின குஷ்டம். (லேவி 13:24-25).
6. தலையிலாவது தாடியிலாவது மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமும் அதிலே மயிர் பொன் நிறமும் மிருதுவுமாயிருக்கக் கண்டால் தலையிலும் தாடியிலும் உண்டாகிற சொறிகுஷ்டம் (லேவி 13:29-34)
7. மொட்டைத்தலையிலாவது அரை மொட்டைத்தலையிலாவது சிவப்புக் கலந்த வெண்மையான படர் உண்டானால், அது அதில் எழும்புகிற குஷ்டம் (லேவி 13:42-44).

ஒரு மனுஷனுக்கு குஷ்டரோகம் இருக்கிறதா என்பதை சோதித்தறிவதற்கு கர்த்தர் ஒரு சில உபாயங்களை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலோசனைக்கு கீழ்ப்படிந்து, ஒருவனுக்கு குஷ்டரோகமுள்ளதா என்பதை தீர்மானம்பண்ணவேண்டும்.

ஒரு மனுஷனுடைய சரீரத்தின்மேல் வெள்ளைப்படர்ந்திருந்தாலும், அவ்விடம் அவனுடைய மற்றத் தோலைப்பார்க்கிலும் அதிக பள்ளமாயிராமல் போனால், அவன் குஷ்டரோகியாயிராமல், சுத்தமாயிருப்பதற்கு வாய்ப்புள்ளது (லேவி 13:4). ரோகம் இருக்கும் இடத்தில் மயிர் வெளுத்தும், ரோகமுள்ள இடம் அவனுடைய மற்றச் சரீரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் குழிந்தும் இருந்தால் அது குஷ்டரோகம் (லேவி 13:3).

ஒரு மனுஷனுக்கு குஷ்டரோகம் இருக்கிறதா என்பதை கண்டுபிடிப்பது பற்றிய தம்முடைய பிரமாணத்தை கர்த்தர் மோசேக்கும், ஆரோனுக்கும் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. மற்றத் தோலைப்பார்க்கிலும் அதிக பள்ளமாயிராமலும், அதின் மயிர் வெள்ளையாக மாறாமலும் இருந்தால், ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்து வைத்திருப்பான்.

2. ஏழாம் நாளில் அவனைப் பார்க்கக்கடவன்; தோலில் ரோகம் அதிகப்படாமல், அவன் பார்வைக்கு ரோகம் நின்றிருந்தால், ஆசாரியன் இரண்டாந்தரம் அவனை ஏழுநாள் அடைத்துவைத்திருப்பான். (லேவி 13:5).

3. இரண்டாந்தரம் அவனை ஏழாம்நாளில் பார்க்கக்கடவன்; தோலில் ரோகம் அதிகப்படாமல் சுருங்கியிருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன் (லேவி 13:6).

4. அவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்துச் சுத்தமாயிருப்பானாக

5. அசறு தோலிலே படர்ந்தது என்று ஆசாரியன் கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டரோகம் (லேவி 13:8).

நம்மிடத்தில் பாவங்களும், குறைகளும் இருந்தாலும், கர்த்தருடைய பெரிதான கிருபை நமக்கு கிடைக்கும்போது அது நம்முடைய ஆத்துமாவின் ஆழத்திலே பாதிப்பை ஏற்படுத்தாது. குஷ்டரோகியின் ரோகமுள்ள இடம், அவனுடைய மற்ற சரீரத்தைப்பார்க்கிலும் அதிகமாய் குழிந்து இருக்கும். விசுவாசிகளாகிய நமக்கோ கர்த்தருடைய கிருபையினால், நம்முடைய பாவங்களின் பாதிப்பு, நம்முடைய ஆத்துமாவின் ஆழத்திலே பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. நம்முடைய ஆத்துமா பாவத்தினால் அதிகமாய் குழிவிழுந்துபோவதில்லை.

"உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது" (ரோம 7:22,23).

நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்" (ரோம 7:24,25).

நம்மிடத்தில் பாவம் காணப்பட்டாலும், நம்முடைய உள்ளான மனுஷன், கர்த்தருடைய பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கவேண்டும். ஒரு சிலருடைய புறம்பான சரீரம் சுத்தமாயிருக்கும். ஆனாலும் அவர்களுடைய ஆத்துமா அசுத்தமாயிருக்கும். நம்முடைய உள்ளான மனுஷன் பாதிப்படைவது நமக்கு மிகவும் ஆபத்தானது. சரீரத்தின் வெளிக்காயத்தைவிட, உள்காயமே நமக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆசாரியன் மனுஷனுடைய சரீரத்தின் மேலிருக்கிற ரோகத்தைப் பார்க்க வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த மனுஷன் குஷ்டரோகியா, குஷ்டரோகி இல்லையா என்பதை ஆசாரியனே தீர்மானம்பண்ணவேண்டும்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "ஆசாரியன் அவன் சரீரத்தின்மேல் இருக்கிற ரோகத்தைப் பார்க்கவேண்டும்; ரோகம் இருக்கும் இடத்தில் மயிர் வெளுத்தும், ரோகமுள்ள இடம் அவனுடைய மற்றச் சரீரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் குழிந்தும் இருந்தால் அது குஷ்டரோகம்; ஆசாரியன் அவனைப் பார்த்தபின்பு, அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்" (லேவி 13:3) என்று சொல்லுகிறார்.

சரீரத்தின்மேல் இருக்கிற ரோகம் படராமலிருந்தால் அது குஷ்டரோகமல்ல. ஆசாரியன் சரீரத்தின்மேல் காணப்படும் வெள்ளைப்படரை சோதித்துப் பார்க்கவேண்டும். அவன் சரீரத்தின்மேல் வெள்ளைப்படர்ந்திருந்தாலும், அவ்விடம் அவனுடைய மற்றத் தோலைப்பார்க்கிலும் அதிக பள்ளமாயிராமலும், அதின் மயிர் வெள்ளையாக மாறாமலும் இருந்தால், ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்து வைக்கவேண்டும்.

ஆசாரியன் ஏழாம் நாளில் அவனைப் பார்க்கக்கடவன்; தோலில் ரோகம் அதிகப்படாமல், அவன் பார்வைக்கு ரோகம் நின்றிருந்தால், ஆசாரியன் இரண்டாந்தரம் அவனை ஏழுநாள் அடைத்துவைத்து, இரண்டாந்தரம் அவனை ஏழாம்நாளில் பார்க்கக்கடவன்; தோலில் ரோகம் அதிகப்படாமல் சுருங்கியிருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது அசறு; அவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்துச் சுத்தமாயிருப்பானாக என்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 13:4-6).

ஒரு மனிதனுடைய சரீரத்தின்மேல் காணப்படும் அசறு அதிகமாய்ப் படர்ந்திருந்தால், ஆசாரியன் அவனை இன்னும் அதிகமாய் சோதித்துப் பார்க்கவேண்டும்.

தன் சரீரத்தில் அசறுள்ளவன், தன்னைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கிறதற்கு அவன் தன்னை ஆசாரியனுக்குக் காண்பித்த பின்பு, அசறுதோலில் அதிகமாய்ப் படர்ந்திருந்தால், அவன் மறுபடியும் ஆசாரியனுக்குத் தன்னைக் காண்பிக்கக்கடவன். அப்பொழுது அசறு தோலிலே படர்ந்தது என்று ஆசாரியன் கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டரோகம் என்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 13:7,8).

தோலில் ரோகம் அதிகப்படாமல் சுருங்கியிருந்தால், அவன் குஷ்டரோகியல்ல. அந்த ரோகம் குஷ்டரோகமாயிராமல் அசறாகயிருக்கும். மனுஷனுடைய பாவத்தினால் அவனுடைய ஆத்துமா கறைபடுகிறது. பாவம் அதிகரிக்கும்போது அந்த ஆத்துமா முற்றிலுமாய்க் கெட்டுப்போகும். நம்மிடத்தில் பாவம் உண்டா என்பதை நாம் சோதித்துப் பார்க்கவேண்டும். நம்மிடத்தில் பாவம் காணப்படும்போது, அந்தப் பாவம் வளர்ந்து பெரிதாகிவிடாமல் அதை நாம் தடுத்து நிறுத்தவேண்டும்.

நம்முடைய இருதயத்தில் பாவசிந்தனைக்கு இடம் கொடுத்தால், நம்முடைய இருதயம் முழுவதையும் அந்தப் பாவம் நிரப்பிவிடும். நம்முடைய மொத்த மனச்சாட்சியும் கெட்டுப்போகும். பாவத்தை நமக்குள் வளர விடாதபடிக்கு தடுத்து நிறுத்தினால், கறைபட்டிருக்கிற நம்முடைய இருதயத்தை சுத்திகரிப்பதற்கு வாய்ப்புள்ளது. பாவத்தை கண்டுகொள்ளாமல் அப்படியே விட்டுவிட்டால், அந்தப் பாவம் ஒவ்வொரு நாளும் பெரிதாகி, நம்மை மொத்தமாக அழித்துப்போடும்.

குஷ்டரோகம் ஒரு மனிதனுக்கு இருந்தால், அவனை ஆசாரியனிடத்தில் கொண்டுவரவேண்டும். அப்பொழுது ஆசாரியன் அவனைப் பார்த்து, தோலிலே வெள்ளையான தடிப்பிருந்து, அது மயிரை வெண்மையாக மாறப்பண்ணிற்றென்றும், அந்தத் தடிப்புள்ள இடத்திலே இரணமாம்சம் உண்டென்றும் கண்டால், அது அவன் சரீரத்திலுள்ள நாள்பட்ட குஷ்டம்; அவன் தீட்டுள்ளவன். ஆதலால், ஆசாரியன் அவனை அடைத்து வைக்காமல், தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 13:9-11).

மனுஷருக்கு சரீரப்பிரகாரமான குஷ்டரோகம் ஏற்படுவதுபோல, ஆவிக்குரிய குஷ்டரோகமும் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. மனுஷருடைய இருதயத்தில் காணப்படும் பெருமை, அகந்தை, மனமேட்டிமை, சுயமாம்ச பலத்தின்மீது நம்பிக்கை வைப்பது, கர்த்தருடைய வார்த்தை பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்தும்போது அதற்கு கீழ்ப்படியாமல் எதிர்த்து நிற்பது, பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக போராடுவது ஆகியவையெல்லாம் ஆவிக்குரிய குஷ்டரோகத்தின் அடையாளங்களாகும்.

மனுஷனுடைய தோலிலே வெள்ளையான தடிப்பும், அந்த தடிப்புள்ள இடத்திலே இரணமாம்சமும் உண்டாயிருக்குமென்றால் அது நாள்பட்ட குஷ்டம்.

ஆசாரியன் பார்க்கிற இடங்களெங்கும் தோலிலே குஷ்டம் தோன்றி, அந்த ரோகமுள்ளவனுடைய தலைதொடங்கி அவன் கால்மட்டும் அது தேகமுழுவதையும் மூடியிருக்கக்கண்டால், அப்பொழுது ஆசாரியன் பார்த்து, குஷ்டம் அவன் சரீரம் முழுவதையும் மூடியிருந்தால், அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் உடம்பெல்லாம் வெண்மையாய்ப்போனபடியால், அவன் சுத்தமுள்ளவன் (லேவி 13:12,13).

ஒரு மனுஷனுடைய தலை தொடங்கி கால்மட்டும், தோலிலே குஷ்டம் மூடியிருக்குமென்றால், அவனுடைய தோல் பகுதியில் மாத்திரமே குஷ்டம் பிடித்திருக்கிறது. அவனுடைய சரீரத்தின் உள்ளான அவயவங்கள் எதுவும் குஷ்டரோகத்தினால் பாதிப்படையவில்லை. சரீரத்தின் தோலிலே காணப்படும் குஷ்டம் இயற்கையாகவே குணமாகிவிடும். ஆகையினால் ஆசாரியன் அவனை சுத்தமுள்ளவன் என்று தீர்க்கவேண்டும். அவன் உடம்பெல்லாம் குஷ்டம் நீங்கி வெண்மையாய்ப்போயிற்று.

ஒரு மனுஷனுடைய உள்ளான சரீரத்தில் குஷ்டம் இருக்குமென்றால், ஆசாரியன் அதை கவனமாய் கண்டுபிடிக்கவேண்டும். வெளிப்படையான குஷ்டரோகத்தை எளிதாக குணப்படுத்திவிடலாம். சரீரத்திற்குள்ளே மறைவாயிருக்கும் குஷ்டரோகத்தை குணப்படுத்துவது கடினம்.

நம்முடைய பாவங்களை அறிக்கை செய்யாமல் மூடிமறைத்தால், பாவம் மன்னிப்படைவதற்கு வாய்ப்பில்லை. நம்முடைய பாவத்தை வெளிப்படையாக அறிக்கை செய்தால், கர்த்தர் தம்முடைய கிருபையினால் அதை மன்னிப்பார். மாய்மாலக்காரர் தங்கள் பாவங்களை மூடி மறைக்க முயற்சி செய்கிறார்கள். மாய்மாலக்காரர் பாவமன்னிப்பு பெறுவதற்கு வாய்ப்பில்லை. தங்கள் பாவத்தை மூடி மறைக்காமல் அறிக்கை செய்கிறவர்கள் பாவமன்னிப்பு பெறுவதற்கு வாய்ப்புள்ளது.

வேதபாரகரும் பரிசேயரும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு முன்பாக, ஆயக்காரரும் வேசிகளும் அதிலே எளிதாக பிரவேசிக்கிறார்கள். வேதபாரகரும் பரிசேயரும் தங்கள் பாவங்களை மறைத்து பக்தியின் வேஷத்தை தரித்திருக்கிறார்கள். ஆயக்காரரும் வேசிகளுமோ தங்களுடைய பாவங்களை அங்கீகரித்து, அதை கர்த்தருடைய சமுகத்திலே மிகுந்த மனத்தாழ்மையோடு அறிக்கை செய்கிறார்கள். தன் பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ தேவனிடத்திலிருந்து இரக்கம் பெறுவான்.

ஒரு சிலர் தங்களுடைய பாவமான உணர்ச்சிகளை அடக்கி வைக்காமல் திடீரென்று வெளிப்படுத்திவிடுவார்கள். அவர்களுடைய பாவஇச்சைகள் முழுமையாய் வெளிப்படும். வேறு சிலரோ தங்களுடைய பாவமான உணர்ச்சிகளையும், பாவஇச்சைகளையும் வெளிப்படுத்தாமல் தங்களுக்குள்ளே மறைவாக அடைத்து வைத்திருப்பார்கள். வெளிப்படையாக காணப்படும் பாவத்தைவிட, மறைவாக அடைத்து வைக்கப்படும் பாவம் ஆபத்தானது.

மனுஷருடைய குஷ்டரோகமும் மறைவான பாவத்தைப்போல ஆபத்தானது. மனுஷனுடைய சரீரத்தின் தோலிலே வெளியே தெரியாமல், அவனுக்குள்ளே இருக்கும் குஷ்டரோகம் மிகவும் மோசமானது. வெளிப்படையாக தெரியும் குஷ்டரோகமோ சுத்தமாக கூடியது.

நம்மை நாமே நியாயந்தீர்த்துக்கொண்டால், நாம் நியாயந்தீர்க்கப்படமாட்டோம். நம்முடைய சரீரத்தில் குஷ்டம் உண்டு என்பதை கண்டு அதை அங்கீகரித்தால், கர்த்தர் நம்மை சுத்தமாக்குவார். அதுபோலவே நம்மிடத்தில் பாவம் உண்டு என்பதை கண்டு, அதை கர்த்தரிடத்தில் அறிக்கை செய்தால், கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னித்து, நம்மை சுத்திகரிப்பார். நமக்கு கர்த்தருடைய கண்களில் தயவும் கிருபையும் கிடைக்கும்.

சரீரத்தில் ரோகமுள்ளவர்கள் ஆசாரியனிடத்தில் தங்களை காண்பிக்க வேண்டும். ஆசாரியனும் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுத்து விடாமல், அவனுடைய ரோகத்தையும், தடிப்பையும், அசறையும் கவனமாய் ஆராய்ந்து பார்த்து, அவன் குஷ்டமுள்ளவனா, குஷ்டமில்லாதவனா என்பதை தீர்மானம்பண்ணவேண்டும்.

ஒரு மனுஷனிடத்தில் இரணமாம்சம் காணப்பட்டால், அவன் தீட்டுள்ளவன். ஆகையால், இரணமாம்சத்தை ஆசாரியன் காணும்போது, அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; இரணமாம்சம் தீட்டுள்ளது; அது குஷ்டம் (லேவி 13:14,15).

அந்த மனுஷனுடைய இரணமாம்சம் மாறிவெண்மையானால், அவனை ஆசாரியனிடத்துக்கு வரவேண்டும். ஆசாரியன் அவனைப் பார்த்து, ரோகமுள்ள இடம் வெண்மையாக மாறினதென்று கண்டால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் சுத்தமுள்ளவன் (லேவி 13:16,17).

புண்ணின் தழும்பு, சொறி லேவி 13:18-37

லேவி 13:18. சரீரத்தின்மேல் புண் உண்டாயிருந்து ஆறிப்போய்,

லேவி 13:19. அவ்விடத்திலே ஒரு வெள்ளைத் தடிப்பாவது சிவப்புக்கலந்த ஒரு வெள்ளைப்படராவது உண்டானால், அதை ஆசாரியனுக்குக் காண்பிக்கவேண்டும்.

லேவி 13:20. ஆசாரியன் அதைப் பார்த்து, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் குழிந்திருக்கவும், அதின் மயிர் வெள்ளையாக மாறியிருக்கவும் கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கவேண்டும்; அது புண்ணில் எழும்பின குஷ்டம்.

லேவி 13:21. ஆசாரியன் அதைப் பார்த்து, அதில் வெள்ளைமயிர் இல்லை என்றும், அது மற்றத் தோலைப்பார்க்கிலும் குழிந்திராமல் சுருங்கியிருக்கிறது என்றும் கண்டானாகில், அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

லேவி 13:22. அது தோலில் அதிகமாய்ப் படர்ந்திருக்கக்கண்டால், அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டந்தான்.

லேவி 13:23. அந்த வெள்ளைப்படர் அதிகப்படாமல், அவ்வளவில் நின்றிருக்குமாகில், அது புண்ணின் தழும்பாயிருக்கும்; ஆகையால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்.

லேவி 13:24. ஒருவனுடைய சரீரத்தின்மேல் நெருப்புப்பட்டதினாலே வெந்து, அந்த வேக்காடு ஆறிப்போன இடத்திலே சிவப்பான படராவது வெண்மையான படராவது உண்டானால்,

லேவி 13:25. ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; அந்தப் படரிலே மயிர் வெண்மையாக மாறி, அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் பள்ளமாயிருந்தால், அது வேக்காட்டினால் எழும்பின குஷ்டம்; ஆகையால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டரோகந்தான்.

லேவி 13:26. ஆசாரியன் அதைப் பார்க்கிறபோது, படரிலே வெள்ளைமயிர் இல்லை என்றும், அது மற்றத் தோலைப்பார்க்கிலும் குழிந்திராமல், சுருங்கியிருக்கிறது என்றும் கண்டானாகில், அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

லேவி 13:27. ஏழாம்நாளிலே அவனைப் பார்க்கக்கடவன்; அது தோலில் அதிமாய்ப் படர்ந்திருந்தால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டரோகம்.

லேவி 13:28. படரானது தோலில் பெருகாமல், அவ்வளவில் நின்று சுருங்கியிருந்ததாகில், அது சூட்டினால் உண்டான தழும்பு; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது சூட்டினால் வந்த வேக்காடு.

லேவி 13:29. புருஷனுக்காகிலும் ஸ்திரீக்காகிலும் தலையிலாவது தாடியிலாவது ஒரு சொறி உண்டானால்,

லேவி 13:30. ஆசாரியன் அதைப் பார்த்து, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமும் அதிலே மயிர் பொன் நிறமும் மிருதுவுமாயிருக்கக்கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது தலையிலும் தாடியிலும் உண்டாகிற சொறிகுஷ்டம்.

லேவி 13:31. ஆசாரியன் அந்தச் சொறிகுஷ்டத்தைப் பார்க்கும்போது, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமாயிராமலும், அதிலே கறுத்த மயிர் இல்லாமலும் இருக்கக்கண்டால், ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

லேவி 13:32. ஏழாம்நாளில் ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; அந்தச் சொறி இடங்கொள்ளாமலும் அதிலே பொன்நிறமயிர் இல்லாமலும், அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமில்லாமலும் இருந்தால்,

லேவி 13:33. அந்தச் சொறியுள்ள இடந்தவிர, மற்ற யாவையும் அவன் சிரைத்துக்கொள்ளக்கடவன்; பின்பு, ஆசாரியன் இரண்டாந்தரம் அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

லேவி 13:34. ஏழாம்நாளிலே அதைப் பார்க்கக்கடவன்; சொறி தோலில் இடங்கொள்ளாமலும், அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமில்லாமலும் இருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்தபின் சுத்தமாயிருப்பான்.

லேவி 13:35. அவன் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கப்பட்டபின், அந்தச் சொறிதோலில் இடங்கொண்டதானால்,

லேவி 13:36. ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; சொறி தோலில் இடங்கொண்டிருந்தால், அப்பொழுது மயிர் பொன்நிறமா அல்லவா என்று ஆசாரியன் விசாரிக்க வேண்டியதில்லை; அவன் தீட்டுள்ளவனே.

லேவி 13:37. அவன் பார்வைக்கு அந்தச் சொறி நீங்கி, அதில் கறுத்தமயிர் முளைத்ததேயாகில், சொறி சொஸ்தமாயிற்று; அவன் சுத்தமுள்ளவன்; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்.

ஒரு சிலருடைய சரீரத்தில் வெள்ளை தடிப்பு அல்லது சிவப்பு கலந்த வெள்ளைப்படர் உண்டாயிருக்கும். ஆசாரியன் அதையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இது புண்ணின் தழும்பா அல்லது குஷ்டரோகமா என்பதை ஆசாரியனே முடிவு பண்ணவேண்டும்.

சரீரத்தின்மேல் புண் உண்டாயிருந்து ஆறிப்போய், அவ்விடத்திலே ஒரு வெள்ளைத் தடிப்பாவது சிவப்புக்கலந்த ஒரு வெள்ளைப்படராவது உண்டானால், அதை ஆசாரியனுக்குக் காண்பிக்கவேண்டும் (லேவி 13:18,19).

ஆசாரியன் அதைப் பார்த்து, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் குழிந்திருக்கவும், அதின் மயிர் வெள்ளையாக மாறியிருக்கவும் கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கவேண்டும்; அது புண்ணில் எழும்பின குஷ்டம் (லேவி 13:20)

ஆசாரியன் அதைப் பார்த்து, அதில் வெள்ளைமயிர் இல்லை என்றும், அது மற்றத் தோலைப்பார்க்கிலும் குழிந்திராமல் சுருங்கியிருக்கிறது என்றும் கண்டானாகில், அவனை ஏழுநாள் அடைத்துவைத்து, அது தோலில் அதிகமாய்ப் படர்ந்திருக்கக்கண்டால், அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டந்தான் (லேவி 13:21,22).

லேவி 13:2-17 ஆகிய வசனங்களில் குஷ்டரோகத்தின் இரண்டு நிலைமைகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. சரீரத்திலுள்ள நாள்பட்ட குஷ்டம் - தோலிலே வெள்ளையான தடிப்பிருந்து, அது மயிரை வெண்மையாக மாறப் பண்ணியிருக்கும். அந்தத் தடிப்புள்ள இடத்திலே இரணமாம்சம் உண்டாயிருக்கும்(லேவி 13:10-11,14-15).

2. உடம்பெல்லாம் வெண்மையாய்ப்போன குஷ்டம் - தோலிலே குஷ்டம் தோன்றி, அந்த ரோகமுள்ளவனுடைய தலை தொடங்கி அவன் கால்மட்டும் அது தேகமுழுவதையும் மூடியிருக்கும். (லேவி 13:13,16-17).

ஒரு மனுஷனுக்கு குஷ்டரோகம் இருக்கிறதா என்பதை கண்டுபிடிப்பதற்காக, ஆசாரியன் அவனை கவனமாய் சோதித்துப் பார்க்கவேண்டும். குஷ்டரோகம் என்று கண்டுபிடிப்பது பற்றிய தம்முடைய பிரமாணத்தை கர்த்தர் இந்த அதிகாரத்தில் தெளிவாக சொல்லுகிறார்.

1. குஷ்டரோகம் ஒரு மனிதனுக்கு இருந்தால், அவனை ஆசாரியனிடத்தில் கொண்டு வரவேண்டும்.

2. ஆசாரியன் அவனைப் பார்த்து, தோலிலே வெள்ளையான தடிப்பிருந்து, அந்தத் தடிப்புள்ள இடத்திலே இரணமாம்சம் உண்டென்றும் கண்டால், அது அவன் சரீரத்திலுள்ள நாள்பட்ட குஷ்டம்; அவன் தீட்டுள்ளவன். ஆதலால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன் (லேவி 13:10-11).

3. அவன் உடம்பெல்லாம் வெண்மையாய்ப் போனபடியால், அவன் சுத்தமுள்ளவன். (லேவி 13:13).

4. இரணமாம்சம் அவனில் காணப்பட்டால், அவன் தீட்டுள்ளவன் (லேவி 13:14).

5. இரணமாம்சத்தை ஆசாரியன் காணும்போது, அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன் (லேவி 13:15).

6. இரணமாம்சம் மாறிவெண்மையானால், அவன் ஆசாரியனிடத்துக்கு வரவேண்டும் (லேவி 13:16).

7. ஆசாரியன் அவனைப் பார்த்து, ரோகமுள்ள இடம் வெண்மையாக மாறினதென்று கண்டால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் சுத்தமுள்ளவன் (லேவி 13:17).

அந்த வெள்ளைப்படர் அதிகப்படாமல், அவ்வளவில் நின்றிருக்குமாகில், அது புண்ணின் தழும்பாயிருக்கும்; ஆகையால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன் (லேவி 13:23).

தன்னிடத்தில் கொண்டு வரப்பட்ட மனுஷனுக்கு குஷ்டரோகம் இருக்கிறதா என்பதை சோதித்தறிவதற்கு, ஆசாரியன் பல உபாயங்களை கையாளவேண்டும். கர்த்தர் அந்த உபாயங்களைப்பற்றி மோசேக்கும் ஆரோனுக்கும் தெளிவாக சொல்லியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. சரீரத்தின்மேல் புண் உண்டாயிருந்து ஆறிப்போய், அவ்விடத்திலே ஒரு வெள்ளைத் தடிப்பாவது சிவப்புக்கலந்து ஒரு வெள்ளைப்படராவது உண்டானால், அதை ஆசாரியனுக்குக் காண்பிக்க வேண்டும் (லேவி 13:18,19).

2. ஆசாரியன் அதைப் பார்த்து, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் குழிந்திருக்கவும், அதின் மயிர் வெள்ளையாக மாறியிருக்கவும் கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கவேண்டும் (லேவி 13:20).

3. ஆசாரியன் அதைப் பார்த்து, அதில் வெள்ளைமயிர் இல்லை என்றும், அது மற்றத் தோலைப்பார்க்கிலும் குழிந்திராமல் சுருங்கியிருக்கிறது என்றும் கண்டானாகில், அவனை ஏழுநாள் அடைத்துவைத்திருக்க வேண்டும் (லேவி 13:21).

4. ஏழாம் நாளில், அது தோலில் அதிகமாய்ப் படர்ந்திருக்கக்கண்டால், அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டந்தான். (லேவி 13:22).

5. அந்த வெள்ளைப்படர் அதிகப்படாமல், அவ்வளவில் நின்றிருக்குமாகில், அது புண்ணின் தழும்பாயிருக்கும்; ஆகையால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன் (லேவி 13:23).

சரீரத்தின்மேல் புண் ஆறிப்போய், அவ்விடத்தில் வெள்ளைத்தடிப்போ அல்லது சிவப்பு கலந்த வெள்ளைப்படரோ உண்டாகும்போது, அது பழைய புண் ஆறிப்போனதற்கு அடையாளம். அது குஷ்டரோகத்தின் அடையாளமல்ல.

பழைய புண் ஆறிப்போய், அந்த இடத்திலே மறுபடியும் ரோகம் ஏற்படுமானால், அது குஷ்டரோகத்தின் அடையாளமாயிருக்கலாம். அவனுடைய தோலில் வெள்ளைத்தடிப்பு அதிகமாக படருமென்றால், அது குஷ்டத்தின் அடையாளமாகும்.

மனுஷருடைய சரீரத்தில் தீக்காயங்கள் ஏற்படலாம். ஒருவனுடைய சரீரத்தின்மேல் நெருப்புப்பட்டதினாலே வெந்து, அந்த வேக்காடு ஆறிப்போன இடத்திலே சிவப்பான படராவது வெண்மையான படராவது உண்டானால், ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; அந்தப் படரிலே மயிர் வெண்மையாக மாறி, அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் பள்ளமாயிருந்தால், அது வேக்காட்டினால் எழும்பின குஷ்டம்; ஆகையால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டரோகந்தான் (லேவி 13:24,25).

ஆசாரியன் அதைப் பார்க்கிறபோது, படரிலே வெள்ளைமயிர் இல்லை என்றும், அது மற்றத் தோலைப்பார்க்கிலும் குழிந்திராமல், சுருங்கியிருக்கிறது என்றும் கண்டானாகில், அவனை ஏழுநாள் அடைத்துவைத்து, ஏழாம்நாளிலே அவனைப் பார்க்கக்கடவன்; அது தோலில் அதிமாய்ப் படர்ந்திருந்தால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டரோகம் (லேவி 13:26,27).

வேக்காட்டினால் எழும்பின குஷ்டத்தை கண்டுபிடிப்பது பற்றிய தம்முடைய பிரமாணத்தை கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. ஒருவனுடைய சரீரத்தின்மேல் நெருப்புப் பட்டதினாலே வெந்து, அந்த வேக்காடு ஆறிப்போன இடத்திலே சிவப்பான படராவது வெண்மையான படராவது உண்டானால், ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்.

2. அந்தப் படரிலே மயிர் வெண்மையாக மாறி, அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் பள்ளமாயிருந்தால், அது வேக்காட்டினால் எழும்பின குஷ்டம்; ஆகையால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன் (லேவி 13:25).

3. ஆசாரியன் அதைப் பார்க்கிறபோது, படரிலே வெள்ளைமயிர் இல்லை என்றும், அது மற்றத் தோலைப்பார்க்கிலும் குழிந்திராமல், சுருங்கியிருக்கிறது என்றும் கண்டானாகில், அவனை ஏழுநாள் அடைத்துவைத்திருப்பான் (லேவி 13:26).

4. ஏழாம்நாளிலே அவனைப் பார்க்கக் கடவன்; அது தோலில் அதிமாய்ப் படர்ந்திருந்தால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டரோகம் (லேவி 13:27).

5. படரானது தோலில் பெருகாமல், அவ்வளவில் நின்று சுருங்கியிருந்ததாகில், அது சூட்டினால் உண்டான தழும்பு; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது சூட்டினால் வந்த வேக்காடு (லேவி 13:28).

படரானது தோலில் பெருகாமல், அவ்வளவில் நின்று சுருங்கியிருந்ததாகில், அது சூட்டினால் உண்டான தழும்பு; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது சூட்டினால் வந்த வேக்காடு. புருஷனுக்காகிலும் ஸ்திரீக்காகிலும் தலையிலாவது தாடியிலாவது ஒரு சொறி உண்டானால், ஆசாரியன் அதைப் பார்த்து, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமும் அதிலே மயிர் பொன் நிறமும் மிருதுவுமாயிருக்கக்கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது தலையிலும் தாடியிலும் உண்டாகிற சொறிகுஷ்டம் (லேவி 13:28-30).

ஆசாரியன் அந்தச் சொறிகுஷ்டத்தைப் பார்க்கும்போது, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமாயிராமலும், அதிலே கறுத்த மயிர் இல்லாமலும் இருக்கக்கண்டால், ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்துவைத்து, ஏழாம்நாளில் ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; அந்தச் சொறி இடங்கொள்ளாமலும் அதிலே பொன்நிறமயிர் இல்லாமலும், அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமில்லாமலும் இருந்தால், அந்தச் சொறியுள்ள இடந்தவிர, மற்ற யாவையும் அவன் சிரைத்துக்கொள்ளக்கடவன்; பின்பு, ஆசாரியன் இரண்டாந்தரம் அவனை ஏழுநாள் அடைத்துவைத்து, ஏழாம்நாளிலே அதைப் பார்க்கக்கடவன்; சொறி தோலில் இடங்கொள்ளாமலும், அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமில்லாமலும் இருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்தபின் சுத்தமாயிருப்பான் (லேவி 13:31-34).

தலையிலாவது தாடியிலாவது ஒரு சொறி உண்டாகும்போது, அது சொறி குஷ்டமா என்பதை கண்டுபிடிப்பதற்காக, கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை மோசேக்கும் ஆரோனுக்கும் இந்த வசனப்பகுதியில் சொல்லியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. புருஷனுக்காகிலும் ஸ்திரீக்காகிலும் தலையிலாவது தாடியிலாவது ஒரு சொறி உண்டானால், ஆசாரியனிடத்தில் கொண்டு வரக்கடவன்.

2. ஆசாரியன் அதைப் பார்த்து, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமும் அதிலே மயிர் பொன் நிறமும் மிருதுவுமாயிருக்கக்கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அது தலையிலும் தாடியிலும் உண்டாகிற சொறிகுஷ்டம் (லேவி 13:30).

3. ஆசாரியன் அந்தச் சொறிகுஷ்டத்தைப் பார்க்கும்போது, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமாயிராமலும், அதிலே கறுத்த மயிர் இல்லாமலும் இருக்கக்கண்டால், ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்துவைத்திருப்பான் (லேவி 13:31).

4. ஏழாம்நாளில் ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; அந்தச் சொறி இடங்கொள்ளாமலும் அதிலே பொன்நிறமயிர் இல்லாமலும், அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமில்லாமலும் இருந்தால், அந்தச் சொறியுள்ள இடந்தவிர, மற்ற யாவையும் அவன் சிரைத்துக்கொள்ளக்கடவன்; பின்பு, ஆசாரியன் இரண்டாந்தரம் அவனை ஏழுநாள் அடைத்து வைத்திருப்பான் (லேவி 13:32-33).

5. ஏழாம்நாளிலே அதைப் பார்க்கக்கடவன்; சொறி தோலில் இடங்கொள்ளாமலும், அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமில்லாமலும் இருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்தபின் சுத்தமாயிருப்பான் (லேவி 13:34).

6. அவன் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கப்பட்டபின், அந்தச் சொறிதோலில் இடங்கொண்டதானால், ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; சொறி தோலில் இடங்கொண்டிருந்தால், அப்பொழுது மயிர் பொன்நிறமா அல்லவா என்று ஆசாரியன் விசாரிக்க வேண்டியதில்லை; அவன் தீட்டுள்ளவனே (லேவி 13:35-37).

அவன் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கப்பட்டபின், அந்தச் சொறிதோலில் இடங்கொண்டதானால், ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; சொறி தோலில் இடங்கொண்டிருந்தால், அப்பொழுது மயிர் பொன்நிறமா அல்லவா என்று ஆசாரியன் விசாரிக்க வேண்டியதில்லை; அவன் தீட்டுள்ளவனே (லேவி 13:35,36).

வெள்ளைத்தேமல் லேவி 13:38-41

லேவி 13:38. ஒரு புருஷனுக்காகிலும் ஸ்திரீக்காகிலும் அவர்கள் சரீரத்தின்மேல் வெள்ளைப் புள்ளிகள் உண்டாயிருந்தால்,

லேவி 13:39. ஆசாரியன் பார்க்கக்கடவன்; அவர்கள் சரீரத்திலே மங்கின வெள்ளைப் புள்ளிகள் இருந்தால், அது தோலில் எழும்புகிற வெள்ளைத்தேமல்; அவர்கள் சுத்தமுள்ளவர்கள்.

லேவி 13:40. ஒருவனுடைய தலைமயிர் உதிர்ந்து, அவன் மொட்டையானானாலும், அவன் சுத்தமாயிருக்கிறான்.

லேவி 13:41. அவனுடைய முன்னந்தலை மயிர் உதிர்ந்தால், அவன் அரைமொட்டையன்; அவனும் சுத்தமாயிருக்கிறான்.

வெள்ளைத்தேமலும், மொட்டைத்தலையும் குஷ்டரோகத்திற்கு அடையாளமாகாது. ஆசாரியர் வெள்ளைத் தேமலையும், மொட்டைத்தலையையும் பார்த்து, அதை குஷ்டரோகம் என்று தப்பிதமாக தீர்மானம்பண்ணிவிடக்கூடாது.

ஒரு புருஷனுக்காகிலும் ஸ்திரீக்காகிலும் அவர்கள் சரீரத்தின்மேல் வெள்ளைப் புள்ளிகள் உண்டாயிருந்தால், ஆசாரியன் பார்க்கக்கடவன்; அவர்கள் சரீரத்திலே மங்கின வெள்ளைப் புள்ளிகள் இருந்தால், அது தோலில் எழும்புகிற வெள்ளைத்தேமல்; அவர்கள் சுத்தமுள்ளவர்கள் (லேவி 13:38,39).

வெள்ளைத்தேமலைக் கண்டுபிடிப்பது சம்பந்தமான பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஒரு புருஷனுக்காகிலும் ஸ்திரீக்காகிலும் அவர்கள் சரீரத்தின்மேல் வெள்ளைப் புள்ளிகள் உண்டாயிருந்தால், ஆசாரியன் பார்க்கக்கடவன்.

2. அவர்கள் சரீரத்திலே மங்கின வெள்ளைப் புள்ளிகள் இருந்தால், அது தோலில் எழும்புகிற வெள்ளைத்தேமல்; அவர்கள் சுத்தமுள்ளவர்கள் (லேவி 13:39).

ஒருவனுடைய தலைமயிர் உதிர்ந்து, அவன் மொட்டையானாலும், அவன் சுத்தமாயிருக்கிறான். அவனுடைய முன்னந்தலை மயிர் உதிர்ந்தால், அவன் அரைமொட்டையன்; அவனும் சுத்தமாயிருக்கிறான் (லேவி 13:40,41).

குஷ்டரோகமில்லாமல் சுத்தமாயிருக்கிறவனுக்கு சடங்காச்சார ரீதியான சுத்திகரிப்பு தேவையில்லை.

மொட்டைத்தலையில் வெண்மையான படர் லேவி 13:42-44

லேவி 13:42. மொட்டைத்தலையிலாவது அரைமொட்டைத்தலையிலாவது சிவப்புக் கலந்த வெண்மையான படர் உண்டானால், அது அதில் எழும்புகிற குஷ்டம்.

லேவி 13:43. ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; அவனுடைய மொட்டைத்தலையிலாவது அரைமொட்டைத்தலையிலாவது, மற்ற அங்கங்களின்மேல் உண்டாகும் குஷ்டத்தைப்போல, சிவப்புக்கலந்த வெண்மையான தடிப்பு இருக்கக்கண்டால்,

லேவி 13:44. அவன் குஷ்டரோகி, அவன் தீட்டுள்ளவன்; ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் வியாதி அவன் தலையிலே இருக்கிறது.

தலைமயிர் உதிர்ந்து முழுமொட்டையாகவோ அல்லது அரைமொட்டையாகவோ இருப்பது குஷ்டரோகமல்ல. மொட்டைத்தலையிலாவது அரைமொட்டைத்தலையிலாவது சிவப்புக் கலந்த வெண்மையான படர் உண்டானால், அது அதில் எழும்புகிற குஷ்டம் (லேவி 13:42).

மனுஷனுடைய மொட்டைத்தலையோ சிவப்பு கலந்த வெண்மையான தடிப்பு இருக்குமென்றால், அது குஷ்டரோகத்திற்கு அடையாளம். அவன் தீட்டுள்ளவன்.

ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; அவனுடைய மொட்டைத்தலையிலாவது அரைமொட்டைத்தலையிலாவது, மற்ற அங்கங்களின்மேல் உண்டாகும் குஷ்டத்தைப்போல, சிவப்புக்கலந்த வெண்மையான தடிப்பு இருக்கக்கண்டால், அவன் குஷ்டரோகி, அவன் தீட்டுள்ளவன்; ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் வியாதி அவன் தலையிலே இருக்கிறது (லேவி 13:43,44).

மொட்டைத்தலையிலாவது, அரைமொட்டைத்தலையிலாவது எழும்புகிற குஷ்டரோகத்தை கண்டுபிடிப்பது பற்றிய தம்முடைய பிரமாணத்தை கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. மொட்டைத்தலையிலாவது அரைமொட்டைத்தலையிலாவது சிவப்புக் கலந்த வெண்மையான படர் உண்டானால், அது அதில் எழும்புகிற குஷ்டம். ஆசாரியனிடத்தில் கொண்டு வரக்கடவன்.

2. ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; அவனுடைய மொட்டைத்தலையிலாவது அரைமொட்டைத்தலையிலாவது, மற்ற அங்கங்களின்மேல் உண்டாகும் குஷ்டத்தைப்போல, சிவப்புக்கலந்த வெண்மையான தடிப்பு இருக்கக்கண்டால், அவன் குஷ்டரோகி, அவன் தீட்டுள்ளவன்; ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவன் என்று தீர்க்கக்கடவன் (லேவி 13:43-44).

தீட்டு
லேவி 13:45,46

லேவி 13:45. அந்த வியாதி உண்டாயிருக்கிற குஷ்டரோகி வஸ்திரம் கிழிந்தவனாயும், தன் தலையை மூடாதவனாயும் இருந்து, அவன் தன் தாடியை மூடிக்கொண்டு, “தீட்டு, தீட்டு” என்று சத்தமிடவேண்டும்.

லேவி 13:46. அந்த வியாதி அவனில் இருக்கும் நாள்வரைக்கும் தீட்டுள்ளவனாக எண்ணப்படக்கடவன்; அவன் தீட்டுள்ளவனே; ஆகையால், அவன் தனியே குடியிருக்கவேண்டும்; அவன் குடியிருப்பு பாளயத்துக்குப் புறம்பே இருக்கக்கடவது.

மொட்டைத்தலையிலோ அல்லது அரைமொட்டைத்தலையிலோ சிவப்பு கலந்த வெண்மையான தடிப்பு இருக்குமென்றால் அது குஷ்டம். ஆசாரியன் அவனை தீட்டுள்ளவன் என்று தீர்க்கவேண்டும்.

அந்த வியாதி உண்டாயிருக்கிற குஷ்டரோகி வஸ்திரம் கிழிந்தவனாயும், தன் தலையை மூடாதவனாயும் இருந்து, அவன் தன் தாடியை மூடிக்கொண்டு, “தீட்டு, தீட்டு” என்று சத்தமிடவேண்டும் (லேவி 13:45).

அந்த வியாதி அவனில் இருக்கும் நாள்வரைக்கும் தீட்டுள்ளவனாக எண்ணப்படக்கடவன்; அவன் தீட்டுள்ளவனே; ஆகையால், அவன் தனியே குடியிருக்கவேண்டும்; அவன் குடியிருப்பு பாளயத்துக்குப் புறம்பே இருக்கக்கடவது (லேவி 13:46).

ஆசாரியன் அவனை தீட்டுள்ளவன் என்று தீர்க்கும்போது, குஷ்டரோகியும் தன் தலையை மூடாமல், தன்னுடைய தலையிலிருக்கும் சிவப்பு கலந்த வெண்மையான தடிப்பை மற்றவர்களுக்கு காண்பித்து, தன் தாடியை மூடிக்கொண்டு, “தீட்டு தீட்டு” என்று சத்தமிடவேண்டும். குஷ்டரோகி தன்னுடைய தீட்டை மறைக்காமல் வெளிப்படுத்தி, அதை எல்லோருக்கும் முன்பாக அறிக்கை செய்யவேண்டும்.

அவன் "தீட்டு தீட்டு" என்று சத்தமிடும்போது, அவனுடைய துக்கமும், வேதனையும் வெளிப்படுகிறது. துக்கத்தோடு அழுது புலம்புகிறவர்கள் புலம்புவதுபோல, அவன் தன் தாடியை மூடிக்கொண்டு, தீட்டு தீட்டு என்று சத்தமிடவேண்டும்.

குஷ்டரோகி தன்னை தீட்டுள்ளவன் என்று சத்தமிட்டு சொல்லும்போது, அவன் தேவனுடைய வல்லமையான கரத்திற்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறான். ஆசாரியன் தன்னை தீட்டுள்ளவன் என்று தீர்க்கும்போது, குஷ்டரோகி தன்னை சுத்தமானவன் என்று சொல்லி ஆசாரியனுக்கு விரோதமாக விவாதம்பண்ணாமல், தன்னுடைய தீட்டை அங்கீகரிக்கிறான். ஆசாரியனுடைய தீர்ப்புக்கு குஷ்டரோகி கட்டுப்படுகிறான்.

தன் தலையில் குஷ்டரோகமுள்ளவன், தன்னுடைய வஸ்திரத்தைக் கிழித்துக்கொள்ளவேண்டும். அவன் தன் தலையை மூடாதிருக்கவேண்டும். அதே வேளையில் அவன் தன் தாடியை மூடிக்கொள்ளவேண்டும். இவையெல்லாம் வெட்கத்திற்கும், குழப்பத்திற்கும், அவமானத்திற்கும் அடையாளம். தலையில் குஷ்டரோகமுள்ளவன் தன்னுடைய அவமானத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிறான்.

கர்த்தருடைய சமுகத்தில் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்யும்போது, நாம் மிகுந்த மனத்தாழ்மையோடும், பயபக்தியோடும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். நம்முடைய பாவங்களைக் குறித்து நாம் வெட்கப்படவேண்டும். நம்முடைய பாவத்தினிமித்தமாக நம்முடைய இருதயத்தில் அவமானம் நிரம்பியிருக்கவேண்டும். நம்மை நாமே நியாயந்தீர்த்து, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக, அவருடைய கிருபையையும் இரக்கத்தையும் எதிர்பார்க்கவேண்டும்.

தலையில் குஷ்டரோகமுள்ளவன், "தீட்டு தீட்டு" என்று சத்தமிடும்போது, அவன் தன்னுடைய குஷ்டரோகத்தைக் குறித்து மற்றவர்களை எச்சரிக்கிறான். மற்றவர்களுக்கு அருகாமையில் அவன் போகும்போது, அவன் தன்னுடைய குஷ்டரோகத்தை மற்றவர்களுக்கு எச்சரிப்பாகச் சொல்லுகிறான். அவர்களுக்கு அருகாமையில் தான் வருவதையும் அறிவிக்கிறான்.

தலையில் குஷ்டரோகமுள்ளவன் எங்கே போனாலும், அவன் மற்ற ஜனங்களைப் பார்க்கும்போது, "தீட்டு தீட்டு" என்று சத்தமிடவேண்டும். மற்றவர்கள் தூரத்தில் வந்தாலும், குஷ்டரோகி தன்னுடைய தீட்டை சத்தமிட்டு வெளிப்படுத்தவேண்டும். அவன், "தீட்டு தீட்டு" என்று சத்தமிட்டு சொல்லும்போது, "நான் ஒரு குஷ்டரோகி, மற்றவர்கள் என்னைத் தொடாமல் விலகியிருங்கள்" என்னும் அர்த்தத்தில் சொல்லுகிறான்.

தலையில் குஷ்டரோகமுள்ளவன் தீட்டானவன். அவனை மற்றவர்கள் தொடும்போது அல்லது அவன் மற்றவர்களை தொடும்போது, அவனுடைய சடங்காச்சாரமான தீட்டு, மற்றவர்களையும் தொற்றிக்கொள்ளும். குஷ்டரோகியின் தீட்டினால், அவனைத் தொட்டவர்களும் தீட்டாயிருப்பார்கள்.

நியாயப்பிரமாணத்தினால் பாவத்தையும், அசுத்தத்தையும், தீட்டையும் வெளிப்படுத்திக் காண்பிக்க மாத்திரமே முடியும். நியாயப்பிரமாணத்திற்கு தீட்டை சுத்திகரிக்கும் வல்லமையில்லை. நியாயப்பிரமாணம் நம்முடைய பாவத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் நமக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற உதவியையும் வெளிப்படுத்துகிறது.

தலையிலே குஷ்டரோகமுள்ளவன் தீட்டுள்ளவன். அவன் தனியே குடியிருக்கவேண்டும் என்றும், அவன் குடியிருப்பு பாளயத்திற்கு புறம்பே இருக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது வனாந்தரத்திலே பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பு, குஷ்டரோகியானவன் தீட்டுள்ளவனாகயிருப்பதினால், அவன் தான் வாசம்பண்ணுகிற பட்டணத்தையோ அல்லது கிராமத்தையோ அல்லது நகரத்தையோ விட்டு வெளியேறி, பட்டணத்திற்கு புறம்பே தனியே குடியிருக்கவேண்டும். அந்த இடங்களிலே அவனைப்போல மற்ற குஷ்டரோகிகள் மாத்திரமே குடியிருப்பார்கள். குஷ்டரோகி மற்ற குஷ்டரோகிகளோடு சகவாசம் வைத்துக்கொள்ளலாம். அவன் குஷ்டமில்லாமல் சுத்தமாயிருக்கிறவர்களோடு எந்தசகவாசமும் வைத்துக்கொள்ளக்கூடாது.

மொட்டைத்தலையில் குஷ்டம் எழும்பினவனைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. வியாதி உண்டாயிருக்கிற குஷ்டரோகி வஸ்திரம் கிழிந்தவனாய் இருக்கவேண்டும்.

2. தன் தலையை மூடாதவனாய் இருக்கவேண்டும்.

3. அவன் தன் தாடியை மூடிக் கொள்ளவேண்டும்.

4. "தீட்டு, தீட்டு" என்று சத்தமிடவேண்டும்.

5. அந்த வியாதி அவனில் இருக்கும் நாள்வரைக்கும் தீட்டுள்ளவனாக எண்ணப்படக்கடவன்; அவன் தீட்டுள்ளவனே (லேவி 13:46).

6. அவன் தனியே குடியிருக்கவேண்டும்; அவன் குடியிருப்பு பாளயத்துக்குப் புறம்பே இருக்கக்கடவது.

குஷ்டரோகிகள் பாவிகளுக்கு அடையாளமாக இருக்கிறார்கள். மரணமே அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் தண்டனை. தனக்கு குஷ்டரோகம் வந்தபடியினால், அவன் மரித்தவனைப்போல துக்கம் கொண்டாடுகிறான். அவன் உயிரோடு இருந்தும், செத்தவனைப் போலிருக்கிறான். அவன் செய்த பாவத்தின் நிமித்தம் அவனுடைய சரீரம் அழுகிப்போயிற்று. பாவம் செய்தவன் தேவனிடத்தில் வந்து, தன்னுடைய பாவத்தை அறிக்கையிட வேண்டும். தன்னிடத்தில் எந்த நீதியும் இல்லையென்று, தேவனுடைய சமுகத்தில் அங்கிகரிக்க வேண்டும். (சங் 51:5; 2கொரி 5:21; எபே 2:1-8; 1யோவான் 1:9).

குஷ்டரோகி தனியே குடியிருக்கவேண்டும்; அவன் குடியிருப்பு பாளயத்துக்குப் புறம்பே இருக்கவேண்டும். ஆரோக்கியமான மற்ற ஜனங்களோடு குஷ்டரோகிக்கு எந்தவிதமான உறவும், தொடர்பும் இருக்கக்கூடாது. இதனால் அவர்கள் பாளயத்திற்குப் புறம்பே குடியிருக்குமாறு அனுப்பப்பட்டு விடுகிறார்கள்(எண் 5:2-4; எண் 12:10-15).

வஸ்திரத்தில் குஷ்டதோஷம் லேவி 13:47-59

லேவி 13:47. ஆட்டுமயிர் வஸ்திரத்திலாவது, பஞ்சுநூல் வஸ்திரத்திலாவது,

லேவி 13:48. பஞ்சுநூல், அல்லது ஆட்டுமயிரான பாவிலாவது, ஊடையிலாவது, ஒரு தோலிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது குஷ்டதோஷம் தோன்றி,

லேவி 13:49. வஸ்திரத்திலாவது, தோலிலாவது, பாவிலாவது, ஊடையிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது குஷ்டதோஷம் பச்சையாயாவது சிவப்பாயாவது காணப்பட்டால் அது குஷ்டமாயிருக்கும்; அதை ஆசாரியனுக்குக் காண்பிக்க வேண்டும்.

லேவி 13:50. ஆசாரியன் அதைப் பார்த்து, ஏழு நாள் அடைத்துவைத்து,

லேவி 13:51. ஏழாம் நாளிலே அதைப் பார்க்கக் கடவன்; வஸ்திரத்திலாவது, பாவிலாவது, ஊடையிலாவது, தோலிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது அது அதிகப்பட்டிருந்தால், அது அரிக்கிற குஷ்டம்; அது தீட்டாயிருக்கும்.

லேவி 13:52. அந்தத் தோஷம் இருக்கிற ஆட்டுமயிரினாலும் பஞ்சுநூலினாலும் செய்த வஸ்திரத்தையும் பாவையும், ஊடையையும், தோலினால் செய்த எந்தவித வஸ்துவையும் சுட்டெரிக்கக்கடவன்; அது அரிக்கிற குஷ்டம்; ஆகையால் அக்கினியில் சுட்டெரிக்கப்படவேண்டும்.

லேவி 13:53. வஸ்திரத்தின் பாவிலாவது, ஊடையிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது, அந்தத் தோஷம் அதிகப்படவில்லை என்று ஆசாரியன் கண்டால்,

லேவி 13:54. அப்பொழுது ஆசாரியன் அதைக் கழுவச்சொல்லி, இரண்டாந்தரம் ஏழுநாள் அடைத்துவைத்து,

லேவி 13:55. அது கழுவப்பட்டபின்பு, அதைப் பார்க்கக்கடவன்; அந்தத் தோஷம் அதிகப்படாதிருந்தாலும், அது நிறம் மாறாததாயிருந்தால் தீட்டாயிருக்கும்; அக்கினியில் அதைச் சுட்டெரிக்கவேண்டும்; அது அவ்வஸ்திரத்தின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் உருவ அரிக்கும்.

லேவி 13:56. கழுவப்பட்டபின்பு அது குறுகிற்றென்று ஆசாரியன் கண்டானேயாகில், அதை வஸ்திரத்திலாவது, தோலிலாவது, பாவிலாவது, ஊடையிலாவது இராதபடிக்கு எடுத்துப்போடவேண்டும்.

லேவி 13:57. அது இன்னும் வஸ்திரத்திலாவது, பாவிலாவது, ஊடையிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது காணப்பட்டால், அது படருகிற தோஷம்; ஆகையினால் அது உள்ளதை அக்கினியில் சுட்டெரிக்கவேண்டும்.

லேவி 13:58. வஸ்திரத்தின் பாவாவது, ஊடையாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவாவது கழுவப்பட்டபின்பு, அந்தத் தோஷம் அதை விட்டுப் போயிற்றேயானால், இரண்டாந்தரம் கழுவப்படவேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருக்கும்.

லேவி 13:59. ஆட்டுமயிராலாகிலும் பஞ்சுநூலாலாகிலும் நெய்த வஸ்திரத்தையாவது, பாவையாவது, ஊடையையாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவையாவது, சுத்தமென்றாவது தீட்டென்றாவது தீர்க்கிறதற்கு, அதினுடைய குஷ்டதோஷத்துக்கடுத்த பிரமாணம் இதுவே என்றார்.

வஸ்திரத்தில் காணப்படும் குஷ்டதோஷத்தைப்பற்றியும் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வஸ்திரம் ஆட்டுமயிர் வஸ்திரமாகவோ அல்லது பஞ்சுநூல் வஸ்திரமாகவோ இருக்கலாம்.

வஸ்திரத்தில் காணப்படும் குஷ்டதோஷம், சரீரத்தில் காணப்படும் குஷ்டதோஷத்தைப்போல தீட்டானதாகவே கருதப்படுகிறது. வஸ்திரத்தில் குஷ்டதோஷம் காணப்படுமென்றால், அந்த வஸ்திரத்தை அக்கினியில் சுட்டெரிக்கவேண்டும். ஆனாலும் அதை உடனே சுட்டெரித்துப்போடாமல், ஆசாரியன் அதிலே குஷ்டதோஷமுள்ளதா என்பதை சோதித்துப் பார்த்து, உறுதிபண்ணின பின்பு, அதை அக்கினியில் சுட்டெரித்துப்போடவேண்டும்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "ஆட்டுமயிர் வஸ்திரத்திலாவது, பஞ்சுநூல் வஸ்திரத்திலாவது, பஞ்சுநூல், அல்லது ஆட்டுமயிரான பாவிலாவது, ஊடையிலாவது, ஒரு தோலிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது குஷ்டதோஷம் தோன்றி, வஸ்திரத்திலாவது, தோலிலாவது, பாவிலாவது, ஊடையிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது குஷ்டதோஷம் பச்சையாயாவது சிவப்பாயாவது காணப்பட்டால் அது குஷ்டமாயிருக்கும்; அதை ஆசாரியனுக்குக் காண்பிக்க வேண்டும்" (லேவி 13:47-49) என்று சொல்லுகிறார்.

ஆசாரியன் அதைப் பார்த்து, ஏழு நாள் அடைத்துவைத்து, ஏழாம் நாளிலே அதைப் பார்க்கக் கடவன்; வஸ்திரத்திலாவது, பாவிலாவது, ஊடையிலாவது, தோலிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது அது அதிகப்பட்டிருந்தால், அது அரிக்கிற குஷ்டம்; அது தீட்டாயிருக்கும் (லேவி 13:50,51).

அந்தத் தோஷம் இருக்கிற ஆட்டுமயிரினாலும் பஞ்சுநூலினாலும் செய்த வஸ்திரத்தையும் பாவையும், ஊடையையும், தோலினால் செய்த எந்தவித வஸ்துவையும் சுட்டெரிக்கக்கடவன்; அது அரிக்கிற குஷ்டம்; ஆகையால் அக்கினியில் சுட்டெரிக்கப்படவேண்டும் (லேவி 13:52).

வஸ்திரத்தின் பாவிலாவது, ஊடையிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது, அந்தத் தோஷம் அதிகப்படவில்லை என்று ஆசாரியன் கண்டால், அப்பொழுது ஆசாரியன் அதைக் கழுவச்சொல்லி, இரண்டாந்தரம் ஏழுநாள் அடைத்துவைக்கவேண்டும் (லேவி 13:53,54).

அது கழுவப்பட்டபின்பு, அதைப் பார்க்கக்கடவன்; அந்தத் தோஷம் அதிகப்படாதிருந்தாலும், அது நிறம் மாறாததாயிருந்தால் தீட்டாயிருக்கும்; அக்கினியில் அதைச் சுட்டெரிக்கவேண்டும்; அது அவ்வஸ்திரத்தின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் உருவ அரிக்கும் (லேவி 13:55).

கழுவப்பட்டபின்பு அது குறுகிற்றென்று ஆசாரியன் கண்டானேயாகில், அதை வஸ்திரத்திலாவது, தோலிலாவது, பாவிலாவது, ஊடையிலாவது இராதபடிக்கு எடுத்துப்போடவேண்டும். அது இன்னும் வஸ்திரத்திலாவது, பாவிலாவது, ஊடையிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது காணப்பட்டால், அது படருகிற தோஷம்; ஆகையினால் அது உள்ளதை அக்கினியில் சுட்டெரிக்கவேண்டும். (லேவி 13:56,57).

வஸ்திரத்தின் பாவாவது, ஊடையாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவாவது கழுவப்பட்டபின்பு, அந்தத் தோஷம் அதை விட்டுப் போயிற்றேயானால், இரண்டாந்தரம் கழுவப்படவேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருக்கும் (லேவி 13:58).

ஆட்டுமயிராலாகிலும் பஞ்சுநூலாலாகிலும் நெய்த வஸ்திரத்தையாவது, பாவையாவது, ஊடையையாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவையாவது, சுத்தமென்றாவது தீட்டென்றாவது தீர்க்கிறதற்கு, அதினுடைய குஷ்டதோஷத்துக்கடுத்த பிரமாணம் இதுவே என்றார் (லேவி 13:59).

வஸ்திரத்தில் குஷ்டதோஷம் உறுதிபண்ணப்பட்டால் அது அக்கினியிலே சுட்டெரிக்கப்படவேண்டும். வஸ்திரத்தில் குஷ்டதோஷம் இருப்பது சந்தேகமாகயிருக்குமென்றாலோ அல்லது அந்த தோஷம் அதிகப்படாமலிருக்குமென்றாலோ, அந்த வஸ்திரத்தை அக்கினியிலே சுட்டெரிக்கவேண்டியதில்லை. அந்த வஸ்திரத்தை கழுவினால் போதுமானது.

வஸ்திரத்தின் குஷ்டதோஷத்தைப்பற்றியும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் தெளிவுபடுத்துகிறார். அதன் விவரம் வருமாறு :

1. குஷ்டதோஷமுள்ள வஸ்திரத்தை ஆசாரியனிடம் காண்பிக்க வேண்டும். (லேவி 13:47-49).

2. தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது குஷ்டதோஷம் தோன்றி, வஸ்திரத்திலாவது, தோலிலாவது, பாவிலாவது, ஊடையிலாவது, தோலினால் செய்த எந்தவித வஸ்துவிலாவது குஷ்டதோஷம் பச்சையாயாவது சிவப்பாயாவது காணப்பட்டால் அது குஷ்டமாயிருக்கும்; ஆசாரியன் அதைப் பார்த்து, ஏழு நாள் அடைத்துவைத்திருப்பான். (லேவி 13:49-50).

3. ஏழாம் நாளிலே அதைப் பார்க்கக் கடவன்; குஷ்டதோஷமான வஸ்திரத்தில் அது அதிகப்பட்டிருந்தால், அது அரிக்கிற குஷ்டம்; அது தீட்டாயிருக்கும் (லேவி 13:51).

4. குஷ்டதோஷமான வஸ்திரத்தைச் சுட்டெரிக்கக்கடவன் (லேவி 13:52).

5. குஷ்டதோஷமான வஸ்திரத்தில் அந்தத் தோஷம் அதிகப்படவில்லை என்று ஆசாரியன் கண்டால், அப்பொழுது ஆசாரியன் அதைக் கழுவச் சொல்லி, இரண்டாந்தரம் ஏழுநாள் அடைத்து வைத்திருப்பான் (லேவி 13:53-54).

6. பதினான்கு நாட்களுக்கு பின், அது கழுவப்பட்டபின்பு, அதைப் பார்க்கக் கடவன்; அந்தத் தோஷம் அதிகப்படாதிருந்தாலும், அது நிறம் மாறாததாயிருந்தால் தீட்டாயிருக்கும்; அக்கினியில் அதைச் சுட்டெரிக்க வேண்டும்; அது அவ்வஸ்திரத்தின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் உருவ அரிக்கும். (லேவி 13:55).

7. கழுவப்பட்டபின்பு அது குறுகிற்றென்று ஆசாரியன் கண்டானேயாகில், அதைக் குஷ்டதோஷமான வஸ்திரத்தில் இராதபடிக்கு எடுத்துப்போடவேண்டும் (லேவி 13:56).

8. அது இன்னும் குஷ்டதோஷமான வஸ்திரத்தில் காணப்பட்டால், அது படருகிற தோஷம்; ஆகையினால் அது உள்ளதை அக்கினியில் சுட்டெரிக்க வேண்டும் (லேவி 13:57).

9. குஷ்டதோஷமான வஸ்திரம் கழுவப்பட்டபின்பு, அந்தத் தோஷம் அதை விட்டுப் போயிற்றேயானால், இரண்டாந் தரம் கழுவப்படவேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருக்கும் (லேவி 13:58).

வஸ்திரத்தின் குஷ்டதோஷம் அவ்வஸ்திரத்தின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் உருவ அரிக்கும். இந்த வாக்கியத்தில் அரிக்கும் என்பதற்கான எபிரெய வார்த்தை "பேகேதேத்" என்பதாகும். இந்த வார்த்தை "பாகாத்" என்னும் வார்த்தையோடு தொடர்புடையது. பேகேதேத் என்னும் எபிரெய வார்த்தைக்கு உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் அரித்தல் என்றும், பாகாத் என்னும் எபிரெய வார்த்தைக்கு, குழி, கெபி, குகை, பள்ளம் என்றும் பொருள் சொல்லலாம்.

14 அதிகாரம்

ஒருவனுக்கு குஷ்டரோகமுள்ளதா என்பதையும், அவன் சடங்காச்சார பிரகாரமாக அசுத்தமாயிருக்கிறானா என்பதையும் ஆசாரியன் தீர்மானம்பண்ணவேண்டும். ஆசாரியனே குஷ்டரோகியை தீட்டுள்ளவன் என்று நியாயந்தீர்க்கவேண்டும்.

இந்த அதிகாரத்தில் குஷ்டரோகியை சுத்திகரிக்கும் பிரமாணத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இது சடங்காச்சார ரீதியான சுத்திகரிப்பு முறையாகும். ஆசாரியனால் குஷ்டரோகியை சுத்தமாக்க முடியாது. குஷ்டரோகி சுத்தமாகும்போது, ஆசாரியன் அவனை சுத்திகரிக்கலாம்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து ஊழியக்காரர்களுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து விசேஷித்த வல்லமையையும் அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார். அவர்கள் குஷ்டரோகியை குணப்படுத்தி, சுத்தம்பண்ணவேண்டும்.

ஒருவன் குஷ்டம் நீங்கி சுத்தமாயிருக்கிறான் என்பதை ஆசாரியன் அறிவிக்கவேண்டிய விதம் (லேவி 14:1-9). குஷ்டரோகி சுத்தமான பின்பு, எட்டாம் நாளிலே கர்த்தருக்கு செலுத்த வேண்டிய பலிகளைப்பற்றிய விவரம் (லேவி 14:10-32).

வீட்டிலே குஷ்டதோஷத்திற்கான அடையாளங்கள் தென்படும்போது, அந்த வீட்டை பராமரிக்க வேண்டிய விதம் (லேவி 14:33-53). குஷ்டரோகத்திற்கு அடுத்த பொதுவான பிரமாணம் (லேவி 14:54-57).

குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பு
லேவி 14:1-9

லேவி 14:1. பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 14:2. குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின் நாளில் அவனுக்கடுத்த பிரமாணம் என்னவென்றால்: அவன் ஆசாரியனிடத்தில் கொண்டுவரப்பட வேண்டும்.

லேவி 14:3. ஆசாரியன் பாளயத்துக்குப் புறம்பே போய்; குஷ்டரோகியின் குஷ்டவியாதி சொஸ்தமாயிற்று என்று கண்டால்,

லேவி 14:4. சுத்திகரிக்கப்பட வேண்டியவனுக்காக, உயிரோடிருக்கும் சுத்தமான இரண்டு குருவிகளையும், கேதுருக்கட்டையையும், சிவப்பு நூலையும், ஈசோப்பையும் வாங்கிவரக் கட்டளையிடக்கடவன்.

லேவி 14:5. பின்பு, ஆசாரியன் அந்தக் குருவிகளில் ஒன்றை ஒரு மண்பாண்டத்திலுள்ள ஊற்றுநீர்மேல் கொல்லச் சொல்லி,

லேவி 14:6. உயிருள்ள குருவியையும், கேதுருக்கட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும் எடுத்து, இவைகளையும் உயிருள்ள குருவியையும் ஊற்றுநீர்மேல் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலே தோய்த்து,

லேவி 14:7. குஷ்டம் நீங்கச் சுத்திகரிக்கப்படுகிறவன்மேல் ஏழுதரம் தெளித்து, அவனைச் சுத்தம்பண்ணி, உயிருள்ள குருவியை வெளியிலே விட்டுவிடக்கடவன்.

லேவி 14:8. சுத்திகரிக்கப்படுகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தன் மயிர் முழுவதையும் சிரைத்து, தான் சுத்தமாகும்படி ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, பின்பு பாளயத்தில் பிரவேசித்து, தன் கூடாரத்துக்குப் புறம்பே ஏழுநாள் தங்கி,

லேவி 14:9. ஏழாம் நாளிலே தன் தலையையும் தாடியையும் புருவங்களையும் தன்னுடைய மயிர் முழுவதையும் சிரைத்து, தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம்பண்ணவேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருப்பான்.

குஷ்டரோகம் குணப்படுத்த முடியாத வியாதியல்ல. ஆனாலும் ஒரு சிலர் சாகும் வரையிலும் குணமடையாமல், குஷ்டரோகியாகவே மரித்துப்போகிறார்கள். உசியா ராஜாவை இதற்கு உதாரணமாக சொல்லலாம். உசியா மரணமடைந்த நாளிலே, அவர் குஷ்டரோகியாகவே மரித்தார். ஆனாலும் மோசேயின் சகோதரியாகிய மீரியாமின் குஷ்டரோகம் ஏழுநாளில் குணமாயிற்று. ஒருவனுக்கு குஷ்டரோகம் பிடிக்கும்போது, அது காலப்போக்கில் குணமாகும்.

ஒருவனுக்கு குஷ்டரோகமுள்ளதா என்பதை ஆசாரியனே சோதித்துப் பார்த்து தீர்மானம்பண்ணவேண்டும். குஷ்டரோகியை சுத்திகரிப்பதும் ஆசாரியனுடைய வேலை. குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின் நாளில், அவன் ஆசாரியனிடத்தில் கொண்டுவரப்படவேண்டும். கர்த்தர் மேசேயினிடத்தில், குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின் பிரமாணத்தை சொல்லுகிறார் *(லேவி 14:1,2)*.

குஷ்டரோகி பாளயத்திற்கு உள்ளே தங்கக்கூடாது. அவன் பாளயத்திற்கு புறம்பே தங்கியிருக்கவேண்டும். குஷ்டரோகியின் குஷ்டவியாதி சொஸ்தமாயிற்றா என்பதை கண்டுபிடிப்பதற்கு, ஆசாரியன் பாளயத்திற்கு புறம்பே போய், அங்கே தங்கியிருக்கும் குஷ்டரோகியை சோதித்துப் பார்க்கவேண்டும் *(லேவி 14:3)*.

குஷ்டரோகி தரித்திரனாகயிருந்தாலும் கர்த்தர் அவன்மீதும் தம்முடைய இரக்கத்தையும் கிருபையையும் காண்பிக்கிறார். அவன் பாளயத்திற்கு புறம்பே தங்கியிருந்தாலும், ஆசாரியன் அங்கே போய், அவனை சோதித்துப் பார்க்கவேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார்.

குஷ்டரோகமுள்ளவன் பாளயத்திற்குள்ளே தங்கக்கூடாது என்றும், அவன் பாளயத்திற்கு புறம்பே தங்கவேண்டுமென்றும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லியிருக்கிறார். ஆகையினால் குஷ்டரோகியால் பாளயத்திற்குள்ளே வந்து ஆசாரியனை சந்திக்க முடியாது. ஆனாலும் ஆசாரியன் பாளயத்திற்கு புறம்பே போகலாம். அங்கே தங்கியிருக்கும் குஷ்டரோகியை ஆசாரியன் சோதித்துப் பார்க்கலாம்.

"உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்" *(யாக் 5:14)*. இந்த வசனத்திற்கு, "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், ஊழியக்காரர்கள் அவனைப்போய் பார்க்கவேண்டும்" என்றும் பொருள் சொல்லலாம்.

மனுஷனுடைய பாவத்தினால் அவனுக்கு ஆவிக்குரிய குஷ்டரோகம் உண்டாகிறது. ஜனங்கள் குஷ்டரோகியை விட்டு விலகிப்போவதுபோல, விசுவாசிகள் பாவிகளை விட்டு விலகி வேறுபிரிந்து ஜீவிக்கிறார்கள். ஆவிக்குரிய விசுவாசிகளின் மத்தியிலே, பாவிகளுக்கும் துன்மார்க்கருக்கும் இடமில்லை. விசுவாசிகள் பாவிகளை வெறுத்து ஒதுக்கிவிடுவார்கள். பாவிகளுக்கு இதனால் மனவேதனையும் அவமானமும் ஏற்படுகிறது.

குஷ்டரோகிகள் பாளயத்திற்கு புறம்பே ஜனங்களோடு ஐக்கியமில்லாமல் தனிமையிலிருப்பதுபோல, பாவிகளும் விசுவாசிகளோடு ஐக்கியமில்லாமல் தனிமையிலிருக்கிறார்கள். ஆசாரியன் பாளயத்திற்கு புறம்பே போய் குஷ்டரோகியை சந்திக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய பிரமாணத்தை ஆவிக்குரிய குஷ்டரோகிக்கும் பயன்படுத்தலாம். விசுவாசிகள் பாவிகளை வெறுத்து ஒதுக்கிவிடக்கூடாது. அவர்களை பகைவர்களாக பாவிக்கக்கூடாது.

விசுவாசிகள் பாவிகள்மீதும் அன்புகூர்ந்து, அவர்களை சந்தித்து, அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு எடுத்து சொல்லவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் பாவிகளிடத்திலும் அன்பாயிருக்கவேண்டும். அவர்களுக்கும் தங்களுடைய சகோதர சிநேகத்தை வெளிப்படுத்தி காண்பிக்கவேண்டும்.

"ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்" *(2தெச 3:15)*.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் குஷ்டரோகியை சுத்தமாக்கும்போது, ஆசாரியன் அவனை ஒதுக்கி தள்ளிவிடாமல், அவனை சுத்தமுள்ளவன் என்று ஏற்றுக்கொள்கிறான். கர்த்தர் தம்முடைய கிருபையினால் தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்புகிற பாவியை மன்னிக்கிறார். கர்த்தர் அவனை தம்முடைய சமுகத்தில் ஏற்றுக்கொள்கிறார். கர்த்தர் ஒருவனுடைய பாவத்தை மன்னித்து, அவனை ஏற்றுக்கொள்ளும்போது, விசுவாசிகளும் அவனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்புகிற பாவியின்மீது கர்த்தர் அன்பாயிருக்கிறார். மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாகிறது. பாவிகள் மனந்திரும்பும்போது நமக்குள்ளும் சந்தோஷமுண்டாகவேண்டும். நாமும் அவர்கள்மீது அன்புகூர்ந்து, அவர்களை அன்பாய் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கொரிந்து சபையிலே ஒரு சில விசுவாசிகள் சபையைவிட்டு விலக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். இதற்கு அவர்களுடைய பாவங்களும் முரட்டாட்டங்களுமே காரணம். ஆனாலும் அவர்கள் மனந்திரும்பி, ஆவியின் கனிகளை தங்கள் ஜீவியத்தில் வெளிப்படுத்தினபோது, அவர்களை மன்னித்து, அவர்களை மறுபடியும் சபையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று பவுல் ஆலோசனை சொல்லுகிறார்.

"ஆதலால் அவன் அதிக துக்கத்தில் அமிழ்ந்துபோகாதபடிக்கு, நீங்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல்செய்யவேண்டும். அந்தப்படி, உங்கள் அன்பை அவனுக்குக் காண்பிக்கும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" *(2கொரி 2:7,8).*

குஷ்டரோகியின் குஷ்டவியாதி சொஸ்தமாயிற்று என்பதை ஆசாரியன் காணும்போது, அவனை சுத்திகரிப்பதற்கான வேலைகளை ஆசாரியன் மேற்கொள்ளவேண்டும்.

சுத்திகரிக்கப்படவேண்டியவனுக்காக, உயிரோடிருக்கும் சுத்தமான இரண்டு குருவிகளையும், கேதுருக்கட்டையையும், சிவப்பு நூலையும், ஈசோப்பையும் வாங்கிவர ஆசாரியன் கட்டளையிடவேண்டும் *(லேவி 14:4).*

குஷ்டவியாதி சொஸ்தமானவனோ அல்லது அவனுடைய சிநேகிதனோ இரண்டு குருவிகளை கொண்டு வரலாம். வனாந்தரத்தில் பிடிக்கப்படும் குருவிகள் சுத்தமானதாகயிருக்கும். இரண்டு குருவிகளையும் ஆசாரியனிடத்தில் உயிரோடு கொண்டு வரவேண்டும். அந்த குருவிகளோடு கேதுரு கட்டையையும், சிவப்பு நூலையும், ஈசோப்பையும் ஆசாரியனிடத்தில் கொண்டு வரவேண்டும்.

சுத்திகரிக்கப்படுகிறவன்மேல் தெளிப்பதற்காக, இரத்தமும் ஊற்று நீரும் கலக்கப்படுகிறது. இதற்காக, தன்னிடத்தில் கொண்டு வரப்படும் இரண்டு குருவிகளில் ஒன்றை, ஆசாரியன் ஒரு மண்பாண்டத்திலுள்ள ஊற்று நீர் மேல் கொல்லச்சொல்லவேண்டும் *(லேவி 14:5).* அந்த மண்பாண்டத்தில் ஊற்று நீர் இருக்கிறது அந்த நீரிலே கொல்லப்பட்ட குருவியின் இரத்தம் கலக்கிறது. அது தண்ணீரின் நிறத்தை மாற்றுகிறது.

கொல்லப்பட்ட ஒரு குருவி போக இன்னும் ஒரு குருவி உயிரோடிருக்கும். ஆசாரியன் உயிருள்ள குருவியையும், கேதுருக்கட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும் எடுத்து, இவைகளையும் உயிருள்ள குருவியையும் ஊற்றுநீர்மேல் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலே தோய்க்கவேண்டும் *(லேவி 14:6).*

ஆசாரியன் அந்த இரத்தத்தை, குஷ்டம் நீங்கச் சுத்திகரிக்கப்படுகிறவன்மேல் ஏழுதரம் தெளித்து, அவனைச் சுத்தம்பண்ணவேண்டும். அதன் பின்பு உயிருள்ள குருவியை வெளியிலே விட்டுவிடவேண்டும் *(லேவி 14:7).*

கேதுரு கட்டை மிகுந்த பலமுள்ளது. குஷ்டவியாதி சொஸ்தமானதும், அவன் மறுபடியும் கேதுரு கட்டையைப்போல பெலமுள்ளவனாயிருக்கிறான் என்பதற்கு அடையாளமாக, இந்த சுத்திகரிப்பில் கேதுரு கட்டை பயன்படுத்தப்படுகிறது. கேதுரு கட்டை குஷ்டவியாதியை சொஸ்தமாக்காது. குஷ்டவியாதி சொஸ்தமானவன், மறுபடியும் சரீர பலத்தோடிருப்பான் என்பதற்கு கேதுரு கட்டையானது அடையாளமாயிருக்கிறது.

குஷ்டம் நீங்கி சுத்திகரிக்கப்படும்போது, சுத்திகரிப்பிலே சிவப்பு நூல் பயன்படுத்தப்படுகிறது. குஷ்டரோகம் பிடித்தவனுடைய தோல் முழுவதும் வெண்மை நிறத்திலிருக்கும். அவனுடைய சரீரம் பனியைப்போல வெண்மையாயிருக்கும். குஷ்டவியாதி சொஸ்தமாகும்போது, அவனுடைய தோலின் வெண்மை நிறம், சிவப்பு நூலைப்போல நிறம் மாறும் என்பதற்கு சிவப்பு நூல் அடையாளமாகும்.

சுத்திகரிப்பில் ஈசோப்பு பயன்படுத்தப்படுகிறது. குஷ்டரோகியின் சரீரத்திலே இரணமாம்சம் காணப்படுவதினால், அவனுடைய சரீரத்திலிருந்து துர்நாற்றம் வீசும். ஈசோப்பு நறுமணமுள்ளது. குஷ்டவியாதி சொஸ்தமாகும்போது, அவனுடைய சரீரத்திலுள்ள துர்நாற்றம் நீங்கி, மறுபடியும் நறுமணம் வெளிப்படும் என்பதற்கு ஈசோப்பு அடையாளமாகும்.

கேதுருகட்டை அதிக பலமுள்ளது. அது வலுவானது. ஈசோப்போ மென்மையானது. அது பலவீனமானது. குஷ்டவியாதி சொஸ்தமானவனை சுத்திகரிக்கும்போது, பலமுள்ள கேதுரு கட்டையும் பயன்படுத்தப்படுகிறது, பலவீனமான ஈசோப்பும் பயன்படுத்தப்படுகிறது.

"லீபனோனில் இருக்கிற கேதுருமரங்கள் முதற்கொண்டு சுவரில் முளைக்கிற ஈசோப்புப் பூண்டுவரைக்குமுள்ள மரமுதலிய தாபரங்களைக்குறித்தும், மிருகங்கள் பறவைகள் ஊரும்பிராணிகள் மச்சங்கள் ஆகிய இவைகளைக்குறித்தும் வாக்கியங்களைச் சொன்னான்" (1இராஜா 4:33).

ஆசாரியன் குஷ்டம் நீங்கி சுத்திகரிக்கப்படுகிறவன்மேல், கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்தையும் ஊற்று நீரையும் கலந்து ஏழுதரம் தெளித்து, அவனை சுத்தம்பண்ணவேண்டும். ஏழு என்னும் எண் பரிபூரணத்தைக் குறிக்கிறது. சுத்திகரிக்கப்படுகிறவன் மேல், குருவியின் இரத்தம் ஏழுதரம் தெளிக்கப்படும்போது, அவன் பரிபூரணமாக சுத்திகரிக்கப்படுகிறான் என்பதற்கு அது அடையாளம்.

சுத்திகரிப்பு முழுமையாகவும், பூரணமாகவும் நடைபெறவேண்டும். தாவீது தன்னுடைய சுத்திகரிப்பைப்பற்றி கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, "என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்" (சங் 51:2) என்று ஜெபம்பண்ணுகிறார்.

சீரியா ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் குஷ்டரோகியாயிருந்தான். எலிசா அவனிடத்தில் ஆள் அனுப்பி, "நீ போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு, அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய்" என்று சொல்லச் சொன்னார்.

அப்பொழுது நாகமான் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான் (2இராஜா 5:14).

ஆசாரியன் சுத்திகரிக்கப்படுகிறவன்மேல் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்தை ஏழுதரம் தெளித்து, அவனை சுத்தம்பண்ணின பின்பு, உயிருள்ள குருவியை வெளியிலே விட்டுவிடவேண்டும். உயிருள்ள குருவி திறந்த வெளியிலே பறந்துபோய்விடும். பாளயத்திற்கு புறம்பே விலக்கி வைக்கப்பட்டிருந்த குஷ்டரோகி, இப்போது சொஸ்தமாகி சுத்திகரிக்கப்பட்டிருப்பதினால், அவன் மறுபடியும் பாளயத்திற்குள்ளே பிரவேசிக்கலாம் என்பதற்கு இது அடையாளம்.

வெளியிலே விட்டு விடப்படும் குருவி தன்னுடைய இஷ்டத்திற்கு, எங்கு வேண்டுமானாலும் பறந்து போகும். அதுபோலவே குஷ்டம் நீங்க சுத்திகரிக்கப்பட்டவனும், பாளயத்திற்குள்ளே எங்கு வேண்டுமானாலும் பிரவேசிக்கலாம்.

உயிருள்ள குருவியை வெளியிலே விட்டு விடும்போது, அது வானத்தை நோக்கி பறக்கும். வானம் என்பது பரலோகத்திற்கு அடையாளம். அந்தக் குருவியைப்போலவே, குஷ்டம் நீங்கி சுத்திகரிக்கப்பட்டவனும், விடுதலையாகும்போது, வானமாகிய பரலோகத்தை நோக்கிப் பார்த்து, தன்னுடைய பிரயாணத்தை தொடரவேண்டும்.

குஷ்டம் நீங்க சுத்திகரிக்கப்பட்டவனுக்கு இப்போது புதிய வாழ்வு கிடைத்திருக்கிறது. அவன் இதுவரையிலும் பாளயத்திற்கு புறம்பே தன்னுடைய பாடுகளையும், வேதனைகளையும் அனுபவித்து வந்தவன். இப்போதோ அவன் பாளயத்திற்குள்ளே பிரவேசிக்கும் விடுதலையை பெற்றிருக்கிறான். அவனுக்கு புதிய வாழ்வு கிடைத்திருக்கிறது. அவன் இனிமேல் பரலோகத்தின் காரியங்களை நோக்கிப் பார்த்து தன்னுடைய புது வாழ்வை ஜீவிக்கவேண்டும்.

குஷ்டம் நீங்க சுத்திகரிக்கப்பட்டவன் தன்னுடைய பழைய வாழ்வுக்கு அடிமையாயிருக்கக்கூடாது. அவன் கர்த்தருடைய கிருபையினால் புதிய வாழ்வைப் பெற்றிருக்கிறான். அவன் இதுவரையிலும் குஷ்டரோகத்திற்கு அடிமையாயிருந்தவன். கர்த்தர் அவனை குஷ்டரோகத்திலிருந்து விடுவித்து சுத்திகரித்திருக்கிறார். குஷ்டம் நீங்க சுத்திகரிக்கப்பட்டவன் இனிமேல் கர்த்தருக்கு பிரியமானவனாகவும், மனுஷருக்கு பிரயோஜனமானவனாகவும் ஜீவிக்கவேண்டும்.

குஷ்டம் நீங்க சுத்திகரிக்கப்பட்டவன் இந்த உலகத்தில் ஜீவித்தாலும், அவன் இனிமேல் இந்த உலகத்திற்குரியவனல்ல. அவன் பரலோகத்திற்குரியவன். அவன் தேவனுக்குரியவன்.

"எங்கள் ஆத்துமா புழுதிமட்டும் தாழ்ந்திருக்கிறது; எங்கள் வயிறுதரையோடு ஒட்டியிருக்கிறது" (சங் 44:25). இதுவே குஷ்டரோகியின் மனநிலை. குஷ்டம் நீங்க சுத்திகரிக்கப்பட்டவன் இப்படிப்பட்ட துக்கத்திலிருந்தும், மனவேதனையிலிருந்தும் விடுவிக்கப்பட்டிருக்கிறான்.

வெளியிலே விட்டு விடப்பட்ட உயிருள்ள குருவி நம்பிக்கையோடு வானத்திலே சிறகடித்து பறக்கும். அது மிகுந்த சந்தோஷமாயிருக்கும். அதுபோலவே குஷ்டம் நீங்க சுத்திகரிக்கப்பட்டவனுடைய இருதயத்தில் விசுவாசமும், நம்பிக்கையும், பரிசுத்தமான அன்பும், சந்தோஷமும் நிரம்பியிருக்கவேண்டும்.

ஆசாரியன் குஷ்டவியாதி சொஸ்தமானவனை சுத்திகரித்த பின்பு, அவனை சுத்தமானவன் என்று அறிவிக்கவேண்டும். கிறிஸ்து ஒருவனை சுத்தமாக்கும்போது அவன் மெய்யாகவே சுத்தமாகிறான். மனுஷர் நம்மைப்பற்றி என்ன சொன்னாலும், கிறிஸ்து நம்மைப்பற்றி என்ன சொல்லுகிறார் என்பதே நமக்கு பிரதானம். கிறிஸ்து நம்மை சுத்தமானவன் என்று சொல்லும்போது, நாம் மெய்யாகவே சுத்தமாயிருக்கிறோம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாக இருக்கிறார். ஆனாலும் அவர் இந்தப் பூமியிலே தம்முடைய மாம்சத்தில் இருந்த காலத்தில், அவர் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்திருந்தார். ஆகையினால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய தெய்வீக வல்லமையினால் குஷ்டரோகிகளை சுத்தமாக்கினாலும், அவர்களை ஆசாரியரிடத்தில் காண்பிக்குமாறும், நியாயப்பிரமாணத்தின்படி தங்களை சுத்திகரித்துக்கொள்ளுமாறும் கட்டளையிட்டார்.

"இயேசு அவனை நோக்கி: இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு; ஆயினும், அவர்களுக்குச் சாட்சியாக நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார்" (மத் 8:4).

"அவர் அவனை நோக்கி: நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல், போய், உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டபடியே, அவர்களுக்குச் சாட்சியாக பலிசெலுத்து என்று கட்டளையிட்டார்" (லூக் 5:14).

குஷ்டம் நீங்க சுத்திகரிக்கப்பட்டவனை, ஆசாரியன் சுத்தமானவன் என்று அறிவித்த பின்பு, அவன் தன் வஸ்திரங்களை தோய்த்து, மேலும் சில காரியங்களையும் செய்யவேண்டும்.

சுத்திகரிக்கப்படுகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தன் மயிர் முழுவதையும் சிரைத்து, தான் சுத்தமாகும்படி ஜலத்தில் ஸ்நானம்பண்ணவேண்டும் (லேவி 14:8).

அதன்பின்பு அவன் பாளயத்தில் பிரவேசிக்கலாம். ஆனாலும் அவன் தன் கூடாரத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. சுத்திகரிக்கப்படுகிறவன் தன் கூடாரத்துக்குப் புறம்பே ஏழுநாள் தங்கி, ஏழாம் நாளிலே தன் தலையையும் தாடியையும் புருவங்களையும் தன்னுடைய மயிர் முழுவதையும் சிரைத்து, தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம்பண்ணவேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருப்பான் (லேவி 14:9).

குஷ்டம் நீங்க சுத்திகரிக்கப்படுகிறவன்மேல், ஏழுதரம் இரத்தம் தெளிக்கப்பட்ட பின்பும், அவன் மேலும் ஏழுநாள் தன் கூடாரத்திற்கு புறம்பே தங்கியிருக்கவேண்டும். ஆசாரியன் குஷ்டவியாதி சொஸ்தமானவனை சுத்திகரித்தாலும், அவன் பூரணமாக சுத்தமாகவேண்டும். அவனுடைய சரீரத்தில் குஷ்டவியாதிக்கான அடையாளங்கள் ஏதாவது காணப்படுமென்றால், அதுவும் சுத்தமாக்கப்படவேண்டும். குஷ்டம் நீங்க சுத்திகரிக்கப்பட்டவனிடத்தில் எந்தவிதமான அசுத்தமோ தீட்டோ காணப்படக்கூடாது. அவன் முற்றிலுமாய் சுத்தமாயிருக்கவேண்டும்.

குஷ்டரோகிக்காக பாவநிவிர்த்தி லேவி 14:10-20

லேவி 14:10. எட்டாம் நாளிலே அவன் பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு வயதான பழுதற்ற ஒரு பெண்ணாட்டுக்குட்டியையும், போஜனபலிக்காக எண்ணெயிலே பிசைந்த ஒரு மரக்காலில் பத்தில் மூன்று பங்காகிய மெல்லிய மாவையும், ஆழாக்கு எண்ணெயையும் கொண்டுவரக்கடவன்.

லேவி 14:11. சுத்திகரிக்கிற ஆசாரியன் சுத்திகரிக்கப்படும் மனிதனையும் அவ்வஸ்துக்களையும் ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தக்கடவன்.

லேவி 14:12. பின்பு, ஆசாரியன் ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதையும் அந்த ஆழாக்கு எண்ணெயையும் குற்றநிவாரணபலியாகக் கொண்டுவந்து, கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டி,

லேவி 14:13. பாவநிவாரணபலியும் சர்வாங்க தகனபலியும் இடும் பரிசுத்த ஸ்தலத்திலே அந்த ஆட்டுக்குட்டியைக் கொல்லக்கடவன்; குற்றநிவாரணபலி பாவநிவாரணபலியைப்போல ஆசாரியனுக்கு உரியது; அது மகா பரிசுத்தமானது.

லேவி 14:14. அந்த குற்றநிவாரண பலியின் இரத்தத்தில் ஆசாரியன் கொஞ்சம் எடுத்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும் பூசக்கடவன்.

லேவி 14:15. பின்பு, ஆசாரியன் அந்த ஆழாக்கு எண்ணெயிலே கொஞ்சம் தன் இடது கையில் வார்த்து,

லேவி 14:16. தன் இடதுகையிலுள்ள எண்ணெயில் தன் வலதுகையின் விரலைத் தோய்த்து, தன் விரலினால் ஏழுதரம் அந்த எண்ணெயில் எடுத்து, கர்த்தருடைய சந்நிதியில் தெளித்து,

லேவி 14:17. தன் உள்ளங்கையில் இருக்கிற மீதியான எண்ணெயிலே கொஞ்சம் எடுத்து சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும், முந்தப் பூசியிருக்கிற குற்றநிவாரணபலியினுடைய இரத்தத்தின்மேல் பூசி,

லேவி 14:18. தன் உள்ளங்கையில் இருக்கிற மீதியான எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையிலே வார்த்து, கர்த்தருடைய சந்நிதியில் அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்.

லேவி 14:19. ஆசாரியன் பாவநிவாரணபலியையும் செலுத்தி, சுத்திகரிக்கப்படுகிறவனின் தீட்டு நீங்க, அவனுக்குப் பாவநிவிர்த்தி செய்து, பின்பு சர்வாங்க தகனபலியைக் கொன்று,

லேவி 14:20. சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் பலிபீடத்தின்மேல் வைத்து, அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அவன் சுத்தமாயிருப்பான்.

குஷ்டரோகியின் குஷ்டவியாதி சொஸ்தமான பின்பு, அவனை சுத்திகரிப்பதற்கான பிரமாணத்தை கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார். சுத்திகரிக்கிற ஆசாரியன், சுத்திகரிக்கப்படும் மனிதனை, பாளயத்திற்கு புறம்பே ஏழுநாள் தங்கவைக்கவேண்டும்.

அதன் பின்பு, சுத்திகரிக்கப்படும் மனிதன் பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு வயதான பழுதற்ற ஒரு பெண்ணாட்டுக்குட்டியையும், போஜனபலிக்காக எண்ணெயிலே பிசைந்த ஒரு மரக்காலில் பத்தில் மூன்று பங்காகிய மெல்லிய மாவையும், ஆழாக்கு எண்ணெயையும் கொண்டுவரவேண்டும் *(லேவி 14:10)*.

முதல் ஏழுநாளும், சுத்திகரிக்கப்படும் மனிதன் கூடாரத்திற்கு புறம்பே தங்கியிருக்கவேண்டும். அந்த ஏழுநாட்களிலும் அவனுக்கு முதலாவது சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. எட்டாம் நாளிலே சுத்திகரிக்கப்படும் மனிதன், ஆசரிப்புக்கூடார வாசலிலே நிறுத்தப்படுகிறான். அங்கே அவன் கர்த்தருடைய சந்நிதியில் பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்துவதற்காக நிறுத்தப்படுகிறான்.

"சுத்திகரிக்கிற ஆசாரியன் சுத்திகரிக்கப்படும் மனிதனையும் அவ்வஸ்துக்களையும் ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தக்கடவன்" *(லேவி 14:11)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் நம்மீது கிருபையாகவும் இரக்கமாகவும் இருக்கிறார். நாம் கர்த்தருடைய சமுகத்திலே பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தவேண்டும். நம்மையே கர்த்தருக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும்.

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப்பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" *(ரோம 12:1)*.

கர்த்தர் நம்மை நியாயப்பிரமாணத்தின் கட்டுக்களுக்கு விடுவிக்கும்போது, நாம் முதலாவதாக நம்மை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த கர்த்தருக்கு நன்றி சொல்லவேண்டும். கர்த்தர் நம்முடைய வியாதிகளையும், துன்பங்களையும், துக்கங்களையும், வேதனைகளையும் விட்டு நம்மை விடுவிக்கும்போது, முதலாவதாக கர்த்தருக்கு நம்முடைய நன்றியையும், துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கவேண்டும். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளுக்கும், அவர் நமக்கு காண்பித்த கிருபைகளுக்கும் இரக்கங்களுக்கும், நாம் சாட்சியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

சுத்திகரிக்கப்படும் மனிதன், தன்னுடைய குஷ்டவியாதி சொஸ்தமான பின்பு, எட்டாம் நாளிலே, கர்த்தருடைய சந்நிதியில் மூன்று ஆட்டுக்குட்டிகளை கொண்டு வரவேண்டும். அவற்றில் இரண்டு பழுதற்ற ஆட்டுக்குட்டிகள். மற்றொன்று ஒரு வயதான பழுதற்ற ஒரு பெண்ணாட்டுக்குட்டி. இவை தவிர அவன் போஜனபலிக்காக எண்ணெயிலே பிசைந்த ஒரு மரக்காலில் பத்தில் மூன்று பங்காகிய மெல்லிய மாவையும், ஆழாக்கு எண்ணெயையும் கொண்டுவரவேண்டும் (லேவி 14:10).

சுத்திகரிக்கப்படும் மனிதன் கொண்டு வரும் காணிக்கைகள் குற்றநிவாரணபலியாக செலுத்தப்படுவதற்கு கொண்டு வரப்படுகிறது. அவன் கர்த்தருடைய சந்நிதியில் இந்தக் காணிக்கைகளை கொண்டு வரவேண்டும்.

ஆசாரியன் ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதையும் அந்த ஆழாக்கு எண்ணெயையும் குற்றநிவாரணபலியாகக் கொண்டுவந்து, கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டவேண்டும். ஆசாரியன் பாவநிவாரணபலியும் சர்வாங்க தகனபலியும் இடும் பரிசுத்த ஸ்தலத்திலே அந்த ஆட்டுக்குட்டியைக் கொல்லவேண்டும்; குற்றநிவாரணபலி பாவநிவாரண பலியைப்போல ஆசாரியனுக்கு உரியது; அது மகா பரிசுத்தமானது (லேவி 14:12,13).

சுத்திகரிக்கப்படும் மனிதன் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு வெளியிலே நிற்கிறான். ஆசாரியனோ அந்த வாசலுக்குள்ளே நிற்கிறான். குஷ்டவியாதி சொஸ்தமான மனுஷனை சுத்திகரிக்கும் சடங்குகளெல்லாம் ஆசரிப்புக்கூடார வாசலிலே நடைபெறுகிறது. மற்ற இஸ்ரவேல் புத்திரரைப்போலவே, குஷ்டவியாதி சொஸ்தமான மனுஷனும், சுத்திகரிக்கப்பட்ட பின்பு, கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தின் பிரகாரத்திற்குள் மற்ற இஸ்ரவேல் புத்திரைப்போலவே, இவனும் மறுபடியும் பிரவேசிக்கலாம்.

குஷ்டவியாதி சொஸ்தமாகி சுத்திகரிக்கப்பட்டவன், இனிமேல் கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்தில் பிரவேசிப்பதற்கு தடை எதுவுமில்லை. அவன் குஷ்டரோகியாயிருந்தவன். இப்போதோ அவன் தன் குஷ்டவியாதி நீங்கி சொஸ்தமானவன். நியாயப்பிரமாணத்தின்படி அவன் சுத்திகரிக்கப்பட்டவன். அவன் சுத்திகரிக்கப்பட்டவனாகயிருந்தாலும், குஷ்டரோகி என்னும் பழைய பெயர், அவனோடு எப்போதும் இணைந்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. அவன் ஜீவனுள்ள நாளெல்லாம் குஷ்டரோகி என்றே அழைக்கப்படுவான்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சீமோன் என்பவனுடைய குஷ்டரோகத்தை சுத்தமாக்கினார். ஆனாலும் அவன் சுத்தமாக்கப்பட்ட பின்பும், "குஷ்டரோகியாயிருந்த சீமோன்" என்றே அழைக்கப்பட்டான். இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் இருந்தார் (மத் 26:6).

பாவநிவாரண பலியின் இரத்தம் சுத்திகரிக்கப்படும் மனிதன்மீது தெளிக்கப்படுகிறது. அவன்மீது இரத்தம் தெளிக்கப்படுவதுபோலவே, எண்ணெயும் தெளிக்கப்படுகிறது.

அந்த குற்றநிவாரணபலியின் இரத்தத்தில் ஆசாரியன் கொஞ்சம் எடுத்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும் பூசவேண்டும் (லேவி 14:14).

பின்பு, ஆசாரியன் அந்த ஆழாக்கு எண்ணெயிலே கொஞ்சம் தன் இடது கையில் வார்த்து, தன் இடதுகையிலுள்ள எண்ணெயில் தன் வலதுகையின் விரலைத் தோய்த்து, தன் விரலினால் ஏழுதரம் அந்த எண்ணெயில் எடுத்து, கர்த்தருடைய சந்நிதியில் தெளிக்கவேண்டும் (லேவி 14:15,16).

அதன் பின்பு ஆசாரியன் தன் உள்ளங்கையில் இருக்கிற மீதியான எண்ணெயிலே கொஞ்சம் எடுத்து சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும், முந்தப் பூசியிருக்கிற குற்ற நிவாரண பலியினுடைய இரத்தத்தின்மேல் பூசி, தன் உள்ளங்கையில் இருக்கிற மீதியான எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையிலே வார்த்து, கர்த்தருடைய சந்நிதியில் அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யவேண்டும் (லேவி 14:17,18).

சுத்திகரிக்கப்படும் மனிதனுக்காக குற்றநிவாரண பலி செலுத்தப்படுவதுபோல, பாவநிவாரணபலியும், சர்வாங்க தகனபலியும் செலுத்தப்படுகிறது. ஆசாரியன் பாவநிவாரணபலியையும் செலுத்தி, சுத்திகரிக்கப்படுகிறவனின் தீட்டு நீங்க, அவனுக்குப் பாவநிவிர்த்தி செய்து, பின்பு சர்வாங்க தகனபலியைக் கொல்லவேண்டும் (லேவி 14:19).

ஆசாரியன் சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் பலிபீடத்தின்மேல் வைத்து, அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யவேண்டும்; அப்பொழுது அவன் சுத்தமாயிருப்பான் (லேவி 14:20).

சுத்திகரிக்கப்படும் மனிதனுக்காக குற்றநிவாரண பலி செலுத்தப்படும்போதும், பாவநிவாரண பலி செலுத்தப்படும்போதும், சர்வாங்க தகனபலி செலுத்தப்படும்போதும் ஆசாரியன் அவனுக்கு பாவநிவிர்த்தி செய்யவேண்டும். இதனால் சுத்திகரிக்கப்படும் மனிதனுடைய பாவமும், அக்கிரமமும், குற்றமும் அவனை விட்டு நீக்கப்படுகிறது.

சுத்திகரிக்கப்படும் மனிதனுக்கு பாவநிவிர்த்தி செய்யப்படுவதினால், சடங்காச்சார ரீதியாக அவனிடத்தில் காணப்பட்ட அசுத்தமும் தீட்டும் அவனை விட்டு விலக்கப்படுகிறது. அவன் குஷ்டரோகியாயிருந்தபோது தீட்டானவனாக இருந்தபடியினால், அவனால் பரிசுத்தமான காரியங்களில் பங்குபெற முடியவில்லை. பரிசுத்த காரியங்களில் பங்குபெற முடியாதபடிக்கு அவன் தடைபண்ணப்பட்டிருந்தான்.

ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதியில் மூன்று பலிகளை செலுத்துகிறான். அவன் இந்த பலிகளை செலுத்தி கர்த்தருடைய சந்நிதியில் சுத்திகரிக்கப்படும் மனிதனுக்காக பாவநிவிர்த்தி செய்கிறான். அவனுடைய பாவம் நிவிர்த்தி செய்யப்பட்ட பின்பு, அவனும் மற்ற இஸ்ரவேல் புத்திரரைப்போல, தேவனுடைய ஜனமாயிருக்கும் சிலாக்கியத்தை திரும்ப பெற்றுக்கொள்கிறான்.

குஷ்டரோகியின் பாவமும், அக்கிரமமும், குற்றமும் அவனை தேவனிடத்திலிருந்து பிரித்து வைத்திருந்தது. அவன் தேவனை விட்டு விலகியிருந்தான். இப்போதோ அவனுக்கு பாவநிவிர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. அவன் தேவனோடு ஒப்புரவாகி மறுபடியும் ஐக்கியமாயிருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்கிறான்.

சர்வாங்க தகனபலி சுத்திகரிக்கப்படுகிறவனுடைய பாவத்தை நிவிர்த்தி பண்ணுகிறது. அதே வேளையில் அந்த மனுஷன் தேவன் தனக்கு காண்பித்த கிருபையையும், இரக்கத்தையும் சர்வாங்க தகனபலியை செலுத்தி அங்கீகரித்து, கர்த்தருக்கு நன்றி சொல்லுகிறான். கர்த்தருடைய கிருபையே தன்னுடைய குஷ்டரோகத்திலிருந்து தன்னை சுத்தமாக்கிற்று என்பதை சுத்திகரிக்கப்படுகிறவன் அங்கீகரிக்கிறான்.

கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொண்டவர்கள், அவருக்கு நன்றி சொல்லவேண்டும். கர்த்தர் நமக்கு காண்பித்த தயவுக்காக நாம் ஒவ்வொருவரும் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

"இப்படி அவர் சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான். அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு; ஆயினும் நீ போய், ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டிருக்கிறவைகளை அவர்களுக்குச் சாட்சியாகச் செலுத்து என்று கண்டிப்பாய்ச் சொல்லி, உடனே அவனை அனுப்பிவிட்டார்" (மாற் 1:42-44).

குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின் நாளிலே அவனுக்கு அடுத்த பிரமாணத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின் நாளில், அவன் ஆசாரியனிடத்தில் கொண்டுவரப்படவேண்டும். ஆசாரியன் பாளயத்துக்குப் புறம்பே போய், குஷ்டரோகியை காணவேண்டும். (லேவி 14:2-3).

2. குஷ்டரோகியின் குஷ்டவியாதி சொஸ்தமாயிற்று என்று கண்டால், சுத்திகரிக்கப்படவேண்டியவனுக்காக, உயிரோடிருக்கும் சுத்தமான இரண்டு குருவிகளையும், கேதுருக்கட்டையையும், சிவப்பு நூலையும், ஈசோப்பையும் வாங்கிவரக் கட்டளையிடக்கடவன் (லேவி 14:3-4).

3. ஆசாரியன் அந்தக் குருவிகளில் ஒன்றை ஒரு மண்பாண்டத்திலுள்ள ஊற்றுநீர்மேல் கொல்லச் சொல்லக்கடவன் (லேவி 14:5).

4. உயிருள்ள குருவியையும், கேதுருக் கட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும் எடுத்து, இவைகளையும் உயிருள்ள குருவியையும் ஊற்றுநீர்மேல் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலே தோய்த்து, குஷ்டம் நீங்கச் சுத்திகரிக்கப்படுகிறவன்மேல் ஏழுதரம் தெளித்து, அவனைச் சுத்தம்பண்ணி, உயிருள்ள குருவியை வெளியிலே விட்டுவிடக்கடவன் (லேவி 14:6-7).

5. சுத்திகரிக்கப்படுகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தன் மயிர் முழுவதையும் சிரைத்து, தான் சுத்தமாகும்படி ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, பின்பு பாளயத்தில் பிரவேசித்து, தன் கூடாரத்துக்குப் புறம்பே ஏழுநாள் தங்கவேண்டும் (லேவி 14:8).

6. ஏழாம் நாளிலே தன் தலையையும் தாடியையும் புருவங்களையும் தன்னுடைய மயிர் முழுவதையும் சிரைத்து, தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம்பண்ணவேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருப்பான் (லேவி 14:9).

7. எட்டாம் நாளிலே அவன் பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு வயதான பழுதற்ற ஒரு பெண்ணாட்டுக்குட்டியையும், போஜனபலிக்காக எண்ணெயிலே பிசைந்த ஒரு மரக்காலில் பத்தில் மூன்று பங்காகிய மெல்லிய மாவையும், ஆழாக்கு எண்ணெயையும் கொண்டுவரக்கடவன். சுத்திகரிக்கிற ஆசாரியன் சுத்திகரிக்கப்படும் மனிதனையும் அவ்வஸ்துக்களையும் ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தக்கடவன் (லேவி 14:10-11).

8. ஆசாரியன் ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதையும் அந்த ஆழாக்கு எண்ணெயையும் குற்றநிவாரண பலியாகக் கொண்டுவந்து, கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக கொண்டு வரக்கடவன் (லேவி 14:12).

9. பாவநிவாரணபலியும் சர்வாங்க தகனபலியும் இடும் பரிசுத்த ஸ்தலத்திலே அந்த ஆட்டுக்குட்டியைக் கொல்லக்கடவன் (லேவி 14:13; லேவி 1:11).

10. குற்றநிவாரணபலியின் இரத்தத்தில் ஆசாரியன் கொஞ்சம் எடுத்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும்,அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும் பூசக்கடவன் (லேவி 14:14).

11. ஆசாரியன் அந்த ஆழாக்கு எண்ணெயிலே கொஞ்சம் தன் இடது கையில் வார்த்து கொள்ளவேண்டும் (லேவி 14:15).

12. தன் இடதுகையிலுள்ள எண்ணெயில் தன் வலதுகையின் விரலைத் தோய்த்து, தன் விரலினால் ஏழுதரம் அந்த எண்ணெயில் எடுத்து, கர்த்தருடைய சந்நிதியில் தெளிக்கவேண்டும் (லேவி 14:16).

13. தன் உள்ளங்கையில் இருக்கிற மீதியான எண்ணெயிலே கொஞ்சம் எடுத்து சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும், முந்தப் பூசியிருக்கிற குற்ற நிவாரணபலியினுடைய இரத்தத்தின்மேல் பூச வேண்டும் (லேவி 14:17).

14. தன் உள்ளங்கையில் இருக்கிற மீதியான எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையிலே வார்த்து, கர்த்தருடைய சந்நிதியில் அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன் (லேவி 14:18).

15. ஆசாரியன் பாவநிவாரணபலியைச் செலுத்தி, சுத்திகரிக்கப்படுகிறவனின் தீட்டு நீங்க, கர்த்தருடைய சந்நிதியில் அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன். (லேவி 14:18-19).

16. பின்பு சர்வாங்க தகனபலியைக் கொல்லவேண்டும் (லேவி 14:19-20).

17. தகனபலியையும், போஜனபலியாகிய எண்ணெயையும் மாவையும் பலிபீடத்தின்மேல் வைக்கவேண்டும். (லேவி 14:21-22).

18. ஆசாரியன் குஷ்டரோகிக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன். அப்பொழுது குஷ்டரோகி சுத்தமாயிருப்பான்.

குஷ்டரோகியின் குஷ்டவியாதி சொஸ்தமாயிற்று என்று காணும்போது இரண்டு பிரமாணங்கள் நிறைவேற்றப்படவேண்டும். அவையாவன :

1. பாளயத்திற்கு வெளியே செய்யப்பட்டதை நிறைவேற்றவேண்டும் (லேவி 14:3-9).

2. பாளயத்திற்கு உள்ளே ஆசரிப்புக் கூடாரத்தில் செய்யப்பட்டதை நிறைவேற்ற வேண்டும் (லேவி 14:10-32).

"இரண்டு குருவிகள்" என்னும் வார்த்தை காட்டுப்புறாக்களையோ அல்லது புறாக்களையோ குறிக்கும். (லேவி 14:22,30; லேவி 1:14; லேவி 5:7,11; லேவி 15:14; லூக்கா 2:24). இவற்றை பரிசுத்த ஸ்தலத்திற்கு அருகில் கொண்டுவரக்கூடாது. பலிபீடத்தின் மேல் குருவிகளின் மாம்சத்தை வைக்கவும் கூடாது.

கேதுருக்கட்டை, சிவப்பு நூல், ஈசோப்பு ஆகியவை சுத்திகரிப்பில் பயன்படுத்தப்படுகிறது. (யாத் 12:22; எண் 19:6; சங் 51:7; எபி 9:19). சிவப்பு நூலால் உயிருள்ள குருவியையும், ஈசோப்பையும் கேதுருகட்டையில் கட்ட வேண்டும். இதை கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலே தோய்க்க வேண்டும். அதன்பின்பு, உயிருள்ள குருவியை வெளியிலே விட்டுவிட வேண்டும்.

ஊற்றுநீர் என்பது ஊற்றிலிருந்து கொண்டுவரப்பட்ட நீராகவோ அல்லது வெண்கல தொட்டியுள்ள தண்ணீராகவோ இருக்கலாம். கொல்லப்படும் பறவையின் இரத்தம் தண்ணீருள்ள பாத்திரத்தில் வடிய வேண்டும். இரத்தம் கலந்த இந்தத் தண்ணீர் தோஷம் கழிப்பதற்குப் பயன்படுத்தப்படும். (லேவி 14:52). இந்தத் தண்ணீரில் உயிருள்ள குருவியையும், கேதுருகட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும் தோய்க்க வேண்டும். தோய்க்கப்பட்டதைக் குஷ்டம் நீங்கச் சுத்திகரிக்கப்படுகிறவன்மேல் ஏழுதரம் தெளிக்கவேண்டும்.

உயிருள்ள குருவியும், செத்த குருவியும் இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் அடையாளமாகும். மேலும் குஷ்டரோகி தன் சாபத்திலிருந்து விடுதலையாகி, புதிய ஆரோக்கியத்தைப் பெற்றுக் கொண்டான் என்பதற்கும் இது அடையாளமாகும். சாபம் நீங்கி, மீட்கப்பட்டதினால் சுத்தமான குஷ்டரோகிக்கு இப்பொழுது தன் ஜனத்தாரோடும், தேவனோடும் ஐக்கியம் உண்டாயிருக்கிறது.

ஏழு என்னும் எண் நிறைவையும், பரிபூரணத்தையும் குறிக்கும். இயேசு கிறிஸ்துவின் மூலமாகப் பாவம், வியாதி, வேதனை, பாடு ஆகியவை முற்றிலுமாய் நீங்கிப்போகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் ஜலத்தில் கழுவுதல், ஸ்நானம்பண்ணுதல் போன்ற சம்பவங்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு :

1. வீட்டிற்குள் நுழைவதற்கு முன்பாகப் பாதங்களைக் கழுவுதல். (ஆதி 18:4; ஆதி 19:2; ஆதி 24:32; ஆதி 43:24; 1சாமு 25:41; 2சாமு 11:8; 1தீமோ 5:10).
2. கர்த்தருடைய சமுகத்தில் ஆசாரிய ஊழியம் செய்வதற்கு முன்பாக ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுதல். (லேவி 8:6; லேவி 16:4,24,26; யாத் 29:4; யாத் 30:19-21; யாத் 40:31-32).
3. பலிசெலுத்திய பின்பு, ஆசாரியர் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்தல் (லேவி 6:27; லேவி 16:26,28; எண் 19:7-21).
4. பலிசெலுத்தப்படும் மிருகஜீவன்களின் கால்களையும், தொடைகளையும் தண்ணீரினால் கழுவுதல். (லேவி 1:9,13; லேவி 8:21; லேவி 9:14; யாத் 29:17).
5. ஜனங்கள் தேவனை ஆராதனை செய்வதற்குத் தங்களைப் பரிசுத்தப் படுத்துவதற்காகத் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்தல். (யாத் 19:10,14).
6. குஷ்டரோகிகள் பலவிதமான சுத்திகரிப்பு சடங்குகளில் கழுவப்பட்டார்கள் (லேவி 13:54-58; லேவி 14:8-9,47).
7. தீட்டான ஜனங்கள் ஒவ்வொரு முறை தீட்டாகும்போதும் தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்க வேண்டும். (லேவி 11:25-28; லேவி 15:5-27; லேவி 17:15-16).
8. தீட்டான ஜனங்கள் ஒவ்வொரு முறை தீட்டாகும்போதும் தங்கள் சரீரங்களைக் கழுவவேண்டும் (லேவி 14:8-9; லேவி 15:5-27; லேவி 17:15-16; லேவி 22:6; உபா 23:11).
9. பரிசேயர்கள் போஜனம் பண்ணுவதற்கு முன்பாகத் தங்கள் கைகளையும், கால்களையும் கழுவிக்கொள்வார்கள். (மத் 15:2; மாற்கு 7:3-4; லூக்கா 11:38).
10. பரிசேயர்கள் தங்கள் பாத்திரங்களையும் கழுவிச் சுத்திகரிப்பு செய்வார்கள். (மாற்கு 7:4-8; லூக்கா 5:2; எபி 9:10).

குஷ்டரோகி முதல் நாளிலேயே சுத்திகரிக்கப்பட்டு விட்டான். ஏழாம் நாளில் தான் சுத்தமானதை மகிழ்ச்சியோடு அனுபவிக்கிறான். எட்டாம் நாளில் சுத்தமான குஷ்டரோகி பாளயத்திற்குள் வந்து, ஆசரிப்புக் கூடாரத்தில் பலிசெலுத்தலாம். (லேவி 14:10-20).

ஒரு ஆட்டுக்குட்டியை கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டவேண்டும் என்று லேவி 14:12-ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் மட்டுமே முழு ஆட்டுக்குட்டியும் அசைவாட்டும் பலியாக அசைவாட்டப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஆசாரியன் தன் இடதுகையிலுள்ள எண்ணெயில் தன் வலதுகையின் விரலைத் தோய்த்து, கர்த்தருடைய சந்நிதியில் தெளிக்கவேண்டும். இரத்தமும், எண்ணெயும் சுத்திகரிக்கப் படுகிறவனுடைய சரீரத்தின் அங்கங்களில் பூசப்படுகிறது. மீதியான எண்ணெய் அவனுடைய தலையில் வார்க்கப்படுகிறது (லேவி 14:14-18).

குஷ்டரோகிக்காக மூன்று பலிகள் செலுத்தப்படவேண்டும். அவையாவன :

1. பாவநிவாரண பலி (லேவி 14:19)
2. சர்வாங்க தகனபலி (லேவி 14:20)
3. போஜனபலி

ஆசாரியன் அவனுக்கு பாவநிவிர்த்தி செய்த பின்பு அவன் சுத்தமாயிருப்பான் என்று லேவி 14:20-ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் ஆசாரியனிடத்தில் கொண்டுவரப்படுவதற்கு முன்பாகவே சுத்தமாகத்தான் இருக்கிறான். இங்கு சுத்திகரிப்பின் சடங்கு நிறைவேற்றப்பட்ட பின்பு, அவன் சுத்தமானவன் என்று அறிவிக்கப்படுகிறான். இந்தச்சுத்திகரிப்பை இயேசு கிறிஸ்துவும் அங்கீகரித்திருக்கிறார் (மத் 8:1-4).

திராணியற்ற தரித்திரன் லேவி 14:21-32

லேவி 14:21. அவன் இம்மாத்திரம் செய்யத்திராணியற்ற தரித்திரனாயிருந்தால், அவன் தன் பாவநிவிர்த்திக்கென்று அசைவாட்டும் குற்றநிவாரணபலியாக ஒரு ஆட்டுக்குட்டியையும், போஜனபலிக்கு எண்ணெயில் பிசைந்த ஒரு மரக்கால் மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கையும், ஆழாக்கு எண்ணெயையும்,

லேவி 14:22. தன் திராணிக்குத் தக்கபடி இரண்டு காட்டுப்புறாக்களையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஒன்று பாவநிவாரணபலியாகவும், மற்றொன்று சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தும்படி வாங்கி,

லேவி 14:23. தான் சுத்திகரிக்கப்படும்படி எட்டாம் நாளில் ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் ஆசாரியனிடத்துக்குக் கொண்டுவருவானாக.

லேவி 14:24. அப்பொழுது ஆசாரியன் குற்ற நிவாரணபலிக்குரிய ஆட்டுக்குட்டியையும் அந்த ஆழாக்கு எண்ணெயையும் வாங்கி, கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் போஜனபலியாக அசைவாட்டி,

லேவி 14:25. குற்றநிவாரண பலிக்கான அந்த ஆட்டுக்குட்டியைக் கொன்று, குற்றநிவாரணபலியின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும் பூசி,

லேவி 14:26. அந்த எண்ணெயிலே கொஞ்சம் தன் இடதுகையில் வார்த்து,

லேவி 14:27. தன் இடதுகையிலுள்ள எண்ணெயிலே தன் வலதுவிரலைத் தோய்த்து, கர்த்தருடைய சந்நிதியில் ஏழுதரம் தெளித்து,

லேவி 14:28. தன் உள்ளங்கையில் இருக்கிற எண்ணெயில் கொஞ்சம் எடுத்துச் சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும் குற்ற நிவாரணபலியின் இரத்தம் பூசியிருக்கிற இடத்தின்மேல் பூசி,

லேவி 14:29. தன் உள்ளங்கையில் இருக்கிற மற்ற எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையின்மேல் அவனுக்காகக் கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவர்த்தி செய்யும்படி தடவி,

லேவி 14:30. பின்பு, அவன் தன் திராணிக்கும் தகுதிக்கும் தக்கதாய் காட்டுப்புறாக்களையாவது புறாக்குஞ்சுகளையாவது கொண்டுவந்து,

லேவி 14:31. அவைகளில் ஒன்றைப் பாவநிவாரணபலியும், மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியுமாக்கி, போஜனபலியோடே கூடச் செலுத்தி, இப்படியே ஆசாரியன் சுத்திகரிக்கப்படுகிறவனுக்காக, கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்.

லேவி 14:32. தன் சுத்திகரிப்புக்கு வேண்டியவைகளைச் சம்பாதிக்கக்கூடாத குஷ்டரோகியைக் குறித்த பிரமாணம் இதுவே என்றார்.

சுத்திகரிக்கப்படும் மனுஷன் தரித்திரனாகயிருப்பானென்றால், அவனை சுத்திகரிப்பதற்கு கர்த்தர் தம்முடைய விசேஷித்த பிரமாணத்தை சொல்லுகிறார். குஷ்டவியாதி நீங்கி சொஸ்தமாகிறவன் தரித்திரனாகயிருந்தாலும் அவனும் சுத்திகரிக்கப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது. தரித்திரனால் மூன்று ஆட்டுக்குட்டிகளை ஆசாரியனிடத்தில் கொண்டு வருவது என்பது இயலாத காரியம். அவன் இம்மாத்திரம் செய்ய திராணியற்ற தரித்திரனாயிருக்கும்போது, அவனுடைய சுத்திகரிப்புக்கு என்ன செய்யவேண்டுமென்று கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

குஷ்டவியாதி சொஸ்தமாகி, சுத்திகரிக்கப்படுகிறவன் பொதுவாக, மூன்று ஆட்டுக்குட்டிகளையும், எண்ணெயிலே பிசைந்த ஒரு மரக்காலில் பத்தின் மூன்று பங்காகிய மெல்லிய மாவையும் கொண்டு வரவேண்டும். சுத்திகரிக்கப்படுகிறவன் தரித்திரனாகயிருக்கும்போது, மூன்று ஆட்டுக்குட்டிகளுக்கு பதிலாக ஒரு ஆட்டுக்குட்டியையும், மற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளுக்கு பதிலாக இரண்டு காட்டுப்புறாக்களையாவது அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது கொண்டு வரலாம்.

போஜனபலிக்காக எண்ணெயிலே பிசைந்த ஒரு மரக்காலில் பத்தில் மூன்று பங்காகிய மெல்லிய மாவுக்கு பதிலாக, பத்தில் ஒரு பங்கு மாவை கொண்டு வரலாம். எண்ணெயின் அளவில் மாற்றம் எதுவுமில்லை. எல்லோருக்கும் ஆழாக்கு எண்ணெய் நியமிக்கப்பட்டிருக்கிறது.

குஷ்டவியாதி நீங்கி சொஸ்தமானவன், தன்னுடைய சுத்திகரிப்புக்காக, இம்மாத்திரம் செய்யத்திராணியற்ற தரித்திரனாயிருந்தால், அவன் தன் பாவநிவிர்த்திக்கென்று அசைவாட்டும் குற்றநிவாரணபலியாக ஒரு ஆட்டுக்குட்டியையும், போஜனபலிக்கு எண்ணெயில் பிசைந்த ஒரு மரக்கால் மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கையும், ஆழாக்கு எண்ணெயையும், தன் திராணிக்குத் தக்கபடி இரண்டு காட்டுப்புறாக்களையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது கொண்டு வரவேண்டும் (லேவி 14:21,22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இரண்டு காட்டுப்புறாக்களில் ஒன்று அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளில் ஒன்று பாவநிவாரணபலியாகவும், மற்றொன்று சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தப்படவேண்டும்.

சுத்திகரிக்கப்படுகிறவன் தான் சுத்திகரிக்கப்படும்படி எட்டாம் நாளில் ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் ஆசாரியனிடத்துக்குக் கொண்டுவருவானாக (லேவி 14:23).

சுத்திகரிக்கப்படுகிறவன் தரித்திரனாகயிருந்தாலும், அவனும் கர்த்தருடைய சந்நிதியில் நியமிக்கப்பட்ட காணிக்கைகளை கொண்டு வரவேண்டும். அவன் தரித்திரனாகயிருப்பதினால், அவனுக்கு காணிக்கையில் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அவனுக்கு காணிக்கை செலுத்துவதிலிருந்து விலக்கு கொடுக்கப்படவில்லை.

கர்த்தருடைய ஊழியத்தை விசுவாசிகள் எல்லோரும் செய்யவேண்டும். நாம் பணமில்லாத தரித்திரராயிருக்கும்போது, நாம் கர்த்தருடைய ஊழியத்தை செய்யக்கூடாது என்று நினைத்து சும்மாயிருக்கக்கூடாது. கர்த்தர் ஐசுவரியவான்களுக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்தியிருப்பதுபோலவே, தரித்திரருக்கும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் தங்களுடைய திராணிக்குத்தக்கதாக கர்த்தருடைய சந்நிதியிலே காணிக்கையைக் கொண்டு வரவேண்டும். அதுபோலவே விசுவாசிகள் ஒவ்வொருவரும், கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் கிருபைக்கும், வரத்திற்கும், தாலந்துக்கும் தக்கதாக கர்த்தருடைய ஊழியத்தில் பங்குபெறவேண்டும்.

நம்மால் கர்த்தருக்கு காளைகளை பலியாக செலுத்த முடியாவிட்டாலும், நம்முடைய உதடுகளின் காளைகளை பலியாக செலுத்தவேண்டும். கர்த்தருக்கு நம்முடைய இருதயத்தை அற்பணிக்கவேண்டும்.

"இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு; நீ உன் அக்கிரமத்தினால் விழுந்தாய். வார்த்தைகளைக்கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவரை நோக்கி: தேவரீர் எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்; அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம்" (ஓசி 14:1,2).

கர்த்தர் நம்முடைய திராணிக்கு அதிகமாக ஒருபோதும் எதிர்பார்க்கமாட்டார். நம்மால் தமக்கு எதை காணிக்கையாக கொடுக்க முடியும் என்று கர்த்தருக்கு தெரியும். நாம் கர்த்தருக்கு காணிக்கையைக் கொண்டு வரும்போது, மனப்பூர்வமான காணிக்கையைக் கொண்டு வரவேண்டும். நம்முடைய இருதயம் கர்த்தருக்கு முன்பாக சுத்தமாயும், கண்ணியமாயும் இருக்கவேண்டும்.

கர்த்தர் இரண்டு ஆட்டுக்குட்டிகளை அங்கீகரிப்பதுபோல இரண்டு புறாக்குஞ்சுகளையும் அங்கீகரிக்கிறார். நாம் கர்த்தருக்கு ஆட்டுக்குட்டியை செலுத்துகிறோமா அல்லது புறாக்குஞ்சுகளை செலுத்துகிறோமோ என்பது முக்கியமல்ல. நாம் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தர் நம்மிடத்திலிருந்து எதிர்பார்ப்பதை நாம் செலுத்துகிறோமா என்பதே மிகவும் முக்கியமானது.

சுத்திகரிக்கப்படுகிறவன் திராணியற்ற தரித்திரனாகயிருந்தால், அவன் குற்றநிவாரண பலியாக செலுத்துவதற்கு ஒரு ஆட்டுக்குட்டியை ஆசாரியனிடத்தில் கொண்டு வரலாம். அப்பொழுது ஆசாரியன் குற்ற நிவாரணபலிக்குரிய ஆட்டுக்குட்டியையும் அந்த ஆழாக்கு எண்ணெயையும் வாங்கி, கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் போஜனபலியாக அசைவாட்ட வேண்டும் (லேவி 14:24).

ஆசாரியன் குற்றநிவாரண பலிக்கான அந்த ஆட்டுக்குட்டியைக் கொன்று, குற்றநிவாரணபலியின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும் பூசவேண்டும் (லேவி 14:25).

சுத்திகரிக்கப்படுகிறவன் கொண்டு வருகிற ஆழாக்கு எண்ணெயிலே, ஆசாரியன் கொஞ்சம் தன் இடதுகையில் வார்த்து, தன் இடதுகையிலுள்ள எண்ணெயிலே தன் வலதுவிரலைத் தோய்த்து, கர்த்தருடைய சந்நிதியில் ஏழுதரம் தெளிக்கவேண்டும் (லேவி 14:26,27).

அதன் பின்பு ஆசாரியன் தன் உள்ளங்கையில் இருக்கிற எண்ணெயில் கொஞ்சம் எடுத்துச் சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரலிலும், வலதுகாலின் பெருவிரலிலும் குற்ற நிவாரணபலியின் இரத்தம் பூசியிருக்கிற இடத்தின்மேல் பூசவேண்டும் (லேவி 14:28).

அதன்பின்பு ஆசாரியன் தன் உள்ளங்கையில் இருக்கிற மற்ற எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையின்மேல் அவனுக்காகக் கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவர்த்தி செய்யும்படி தடவவேண்டும் (லேவி 14:29).

சுத்திகரிக்கப்படுகிறவன் தன் திராணிக்கும் தகுதிக்கும் தக்கதாய் காட்டுப்புறாக்களையாவது புறாக்குஞ்சுகளையாவது கொண்டுவர வேண்டும். ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவநிவாரணபலியும், மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியுமாக்கி, போஜன பலியோடே கூடச் செலுத்தவேண்டும். (லேவி 14:30,31).

இப்படியே ஆசாரியன் சுத்திகரிக்கப்படுகிறவனுக்காக, கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்யக்கடவன் என்றும், தன் சுத்திகரிப்புக்கு வேண்டியவைகளைச் சம்பாதிக்கக்கூடாத குஷ்டரோகியைக் குறித்த பிரமாணம் இதுவே என்றும் கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

சுத்திகரிக்கப்படும்போது, தரித்திரனும், பணக்காரனும் பலிசெலுத்துவதற்குத் தங்களுடைய காணிக்கையைக் கொண்டுவர வேண்டும். இருவருக்கும் ஒரே எண்ணிக்கையில் பறவைகள், ஒரே அளவான எண்ணெய் ஆகியவை நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், ஏழையானவன் குறைந்த அளவு மாவைக் கொண்டுவந்தால் போதுமானது. மேலும் ஏழையானவன் மூன்று ஆடுகளுக்குப் பதிலாக ஒரு ஆட்டைக் கொண்டுவரலாம்.

ஏழைக்கும், பணக்காரனுக்கும் பலிசெலுத்தப் படும் முழு ஆடுமே கர்த்தருடைய சமுகத்தில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டப்படுகிறது. ஏழையினுடைய ஆட்டிலிருந்து இரத்தம் சிந்தப்பட்ட பின்பு, அந்த ஆடு ஆசாரியனுடைய சேவைக்காக அவனைச் சாரும் (லேவி 14:21-32).

ஐசுவரியவானுடைய இரண்டு குருவிகளில் ஒரு குருவி கொல்லப்படுகிறது. மற்றொரு குருவி உயிரோடு விட்டுவிடப்படுகிறது. ஏழையினுடைய இரண்டு குருவிகளுமே கொல்லப்படுகிறது. ஆடுகளுக்குப் பதிலாகக் குருவி பாவநிவாரண பலியாகவும், சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தப்படுகிறது (லேவி 14:4-7,21-22).

எட்டாம் நாளில் சுத்தமான குஷ்டரோகியின் காணிக்கைகளெல்லாம் ஆசரிப்புக் கூடார வாசலுக்குக் கொண்டுவரப்படும். சுத்திகரிப்பு சடங்குகள் அனைத்தும் நிறைவேறிய பின்பு, அவன் குஷ்டம் நீங்கி, சுத்தமானவன் என்று ஆசாரியரால் அறிவிக்கப்படுவான். (லேவி 14:21-23).

குற்றநிவாரணபலியின் இரத்தம் பூசியிருக்கிற இடத்தின்மேல் எண்ணெய் பூசப்படுகிறது. எண்ணெய் அவனுடைய அதே அவயவங்களில் இரத்தத்தின்மீது பூசப்படுகிறது (லேவி 14:14-17, 25-28).

குஷ்டரோகி தன்னால் முடிந்த ஒரு காணிக்கையைக் கட்டாயம் கொண்டுவர வேண்டும். அவன் ஏழையாக இருந்தாலும், தன்னுடைய காணிக்கையைக் கொண்டுவந்தே ஆகவேண்டும் (லேவி 14:30-31).

குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பிற்குக் காணிக்கையாக எதைக் கொண்டுவர வேண்டும் என்று பிரமாணம் கூறுகிறது. (லேவி 14:14,21). இவற்றைக் குஷ்டரோகியால் சம்பாதிக்க முடியவில்லையென்றால்,அவன் குறைந்தபட்சம் ஒரு ஆட்டுக்குட்டியையும், இரண்டு புறாக்களை அல்லது காட்டுப்புறாக்களையும் கொண்டு வரவேண்டும். (லேவி 14:21-22).

வீட்டுக் குஷ்டம்
லேவி 14:33-53

லேவி 14:33. பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:

லேவி 14:34. நான் உங்களுக்குக் காணியாட்சியாகக் கொடுக்கும் கானான் தேசத்திலே நீங்கள் போய்ச் சேர்ந்தபின்பு, உங்கள் காணியாட்சியான தேசத்தில் ஒரு வீட்டிலே குஷ்டதோஷத்தை நான் வரப்பண்ணினால்,

லேவி 14:35. அந்த வீட்டிற்கு உடையவன் வந்து, வீட்டிலே தோஷம் வந்திருக்கிறதாகக் தோன்றுகிறது என்று ஆசாரியனுக்கு அறிவிக்கக்கடவன்.

லேவி 14:36. அப்பொழுது வீட்டிலுள்ள யாவும் தீட்டுப்படாதபடிக்கு, ஆசாரியன் அந்தத் தோஷத்தைப் பார்க்கப் போகும்முன்னே வீட்டை ஒழித்துவைக்கும்படி சொல்லி, பின்பு வீட்டைப் பார்க்கும்படி போய்,

லேவி 14:37. அந்தத் தோஷம் இருக்கிற இடத்தைப் பார்க்கக்கடவன்; அப்பொழுது வீட்டுச் சுவர்களிலே கொஞ்சம் பச்சையும் கொஞ்சம் சிவப்புமான குழி விழுந்திருந்து, அவைகள் மற்றச் சுவரைப்பார்க்கிலும் பள்ளமாயிருக்கக்கண்டால்,

லேவி 14:38. ஆசாரியன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வாசற்படியிலே வந்து, வீட்டை ஏழுநாள் அடைத்துவைத்து,

லேவி 14:39. ஏழாம்நாளிலே திரும்பப் போய்ப் பார்த்து, தோஷம் வீட்டுச் சுவர்களில் படர்ந்ததென்று கண்டால்,

லேவி 14:40. தோஷம் இருக்கும் அவ்விடத்துக் கல்லுகளைப் பெயர்க்கவும், பட்டணத்துக்குப் புறம்பே அசுத்தமான ஒரு இடத்திலே போடவும் அவன் கட்டளையிட்டு,

லேவி 14:41. வீட்டை உள்ளே சுற்றிலும் செதுக்கச்சொல்லி, செதுக்கிப்போட்ட மண்ணைப் பட்டணத்துக்குப் புறம்பே அசுத்தமான ஒரு இடத்திலே கொட்டவும்,

லேவி 14:42. வேறே கல்லுகளை எடுத்துவந்து, அந்தக் கல்லுகளுக்குப் பதிலாகக் கட்டி, வேறே சாந்தை எடுத்து வீட்டைப் பூசவும் கட்டளையிடுவானாக.

லேவி 14:43. கல்லுகளைப் பெயர்த்து, வீட்டைச் செதுக்கி, நவமாய்ப் பூசினபின்பும், அந்தத் தோஷம் திரும்ப வீட்டில் வந்ததானால்,

லேவி 14:44. ஆசாரியன் போய்ப் பார்க்கக்கடவன்; தோஷம் வீட்டில் படர்ந்ததானால், அது வீட்டை அரிக்கிற குஷ்டம்; அது தீட்டாயிருக்கும்.

லேவி 14:45. ஆகையால் வீடுமுழுவதையும் இடித்து, அதின் கல்லுகளையும், மரங்களையும், அதின் சாந்து எல்லாவற்றையும் பட்டணத்துக்குப் புறம்பே அசுத்தமான இடத்திலே கொண்டுபோகவேண்டும்.

லேவி 14:46. வீடு அடைக்கப்பட்டிருக்கும் நாட்களில் அதற்குள் பிரவேசிக்கிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

லேவி 14:47. அந்த வீட்டிலே படுத்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அந்த வீட்டிலே சாப்பிட்டவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்.

லேவி 14:48. ஆசாரியன் திரும்ப வந்து, வீடு பூசப்பட்டபின்பு வீட்டிலே அந்தத் தோஷம் படரவில்லை என்று கண்டானேயாகில், தோஷம் நிவிர்த்தியானபடியால், ஆசாரியன் அந்த வீட்டைச் சுத்தம் என்று தீர்க்கக்கடவன்.

லேவி 14:49. அப்பொழுது வீட்டிற்குத் தோஷங்கழிக்க, இரண்டு குருவிகளையும், கேதுருக்கட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும் எடுத்து,

லேவி 14:50. ஒரு குருவியை ஒரு மண்பாண்டத்திலுள்ள ஊற்றுநீரின்மேல் கொன்று,

லேவி 14:51. கேதுருக்கட்டையையும், ஈசோப்பையும், சிவப்புநூலையும், உயிருள்ள குருவியையும் எடுத்து, இவைகளைக் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலும் ஊற்று நீரிலும் தோய்த்து, வீட்டின்மேல் ஏழுதரம் தெளித்து,

லேவி 14:52. குருவியின் இரத்தத்தினாலும், ஊற்றுநீரினாலும், உயிருள்ள குருவியினாலும், கேதுருக்கட்டையினாலும், ஈசோப்பினாலும், சிவப்புநூலினாலும் வீட்டிற்குத் தோஷங்கழித்து,

லேவி 14:53. உயிருள்ள குருவியைப் பட்டணத்துக்குப் புறம்பே வெளியிலே விட்டுவிட்டு, இப்படி வீட்டிற்குப் பிராயச்சித்தம் செய்யக்கடவன்; அப்பொழுது அது சுத்தமாயிருக்கும்.

வீட்டிலே உண்டாகும் குஷ்டதோஷத்தைக் குறித்து கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை மோசேக்கும் ஆரோனுக்கும் சொல்லுகிறார். மனுஷனுடைய வஸ்திரத்தில் குஷ்டதோஷம் ஏற்படுவதுபோல வீட்டிலும் குஷ்டதோஷம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "நான் உங்களுக்குக் காணியாட்சியாகக் கொடுக்கும் கானான் தேசத்திலே நீங்கள் போய்ச் சேர்ந்தபின்பு, உங்கள் காணியாட்சியான தேசத்தில் ஒரு வீட்டிலே குஷ்டதோஷத்தை நான் வரப்பண்ணினால்" (லேவி 14:33,34) என்று சொல்லுகிறார்.

கானான் தேசம் இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குத்தத்தமாக கொடுக்கப்பட்ட தேசம். அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். கானான் தேசத்திலுள்ள வீடுகளிலும் குஷ்டதோஷம் வருவதற்கு வாய்ப்புள்ளது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை காணியாட்சியாக கொடுத்தாலும், அவரே அந்த தேசத்திலுள்ள வீடுகளிலே குஷ்டதோஷத்தை வரப்பண்ணுகிறார்.

கானான் தேசம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு காணியாட்சியாக கொடுக்கப்பட்டாலும் அவர்கள் இந்த தேசத்தை ஜெயித்து சுதந்தரிக்கவேண்டும். தேவனுடைய திட்டத்தின் பிரகாரம் கானான் தேசம் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவன் தம்முடைய பிரமாணத்தின் பிரகாரம் கிரியை செய்கிறார். மனுஷன் தான் விதைத்ததை அறுக்கிறான். (கலா 6:7-8). மனுஷனுக்கு வாதைகள் வரும்போது, அந்த வாதைக்கு அவனே காரணமானவனாக இருக்கிறான். தேவன் இடைப்பட்டு, அதை குணப்படுத்தாமல் விட்டுவிடுகிறார். இப்படிப்பட்ட சூழ்நிலைதான், "தேவன் குஷ்டரோகத்தை வரப்பண்ணுவதாகும்". மனுஷருடைய வியாதிகளுக்கும், கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும், மனுஷனே காரணமானவன். (ஏசா 45:7)

"ஒரு வீட்டிலே குஷ்டதோஷம்" என்பது வீட்டின் சுவரிலும், வஸ்திரங்களிலும் காணப்படும் குஷ்டரோகமான குழிகளைக் குறிக்கும். இவை குஷ்டரோகியிடமிருந்து கடந்து வந்தவை.

கர்த்தர் ஒருவனுடைய வீட்டிலே குஷ்டதோஷத்தை வரப்பண்ணும்போது, அந்த வீட்டிற்கு உடையவன் வந்து, வீட்டிலே தோஷம் வந்திருக்கிறதாகக் தோன்றுகிறது என்று ஆசாரியனுக்கு அறிவிக்க வேண்டும் (லேவி 14:35).

வீட்டிலே குஷ்டதோஷம் வந்திருப்பதாக சந்தேகமுண்டானாலே, வீட்டிற்கு உடையவன் அதை ஆசாரியனிடத்தில் அறிவித்துவிடவேண்டும். குஷ்டதோஷத்தை மூடி மறைக்க முயற்சிபண்ணக்கூடாது. அதை ஆசாரியனுக்கு அறிவிக்காமல், வீட்டிற்குள்ளே குஷ்டதோஷத்தை வளர்த்து விடக்கூடாது.

ஒரு வீட்டிலே பாவம் ஆளுகை செய்யும்போது அது அந்த வீட்டிற்கு வாதையாகயிருக்கும். மனுஷனுடைய இருதயத்தில் பாவம் வாசம்பண்ணும்போது, அது அவனுடைய இருதயத்திற்கு வாதையாகயிருக்கும்.

வீட்டிற்கு உடையவன் தன்னுடைய வீட்டிலே தோஷம் வந்திருக்கிறதை பார்த்தவுடனே, அதை ஆசாரியனிடத்தில் அறிவிக்கவேண்டும். கர்த்தரே குஷ்டதோஷத்தை வீட்டிலே வரப்பண்ணுவதாக சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தினிமித்தமாக, அவர்களுடைய வீடுகளிலே குஷ்டதோஷம் வரலாம்.

தன்னுடைய வீட்டிலே குஷ்டதோஷம் வந்திருப்பதை வீட்டிற்கு உடையவன் பார்த்தவுடனே, தன்னுடைய வீட்டாரின் அக்கிரமத்தையும் பாவத்தையும் அகற்றவேண்டும். வீட்டைவிட்டு பாவம் நீங்கவேண்டும். அப்போதுதான் அந்த வீட்டைவிட்டு குஷ்டதோஷம் நீங்கும்.

"நீர் சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பினால், திரும்பக் கட்டப்படுவீர்; அக்கிரமத்தை உமது கூடாரத்துக்குத் தூரமாக்குவீர்" (யோபு 22:23).

தன்னுடைய வீட்டிலே குஷ்டதோஷம் வந்திருக்கிறதாகத் தோன்றுகிறது என்று வீட்டிற்கு உடையவன் ஆசாரியனிடத்தில் அறிவிக்கும்போது, ஆசாரியன் அந்த தோஷத்தைப் பார்க்க, அந்த வீட்டிற்கு போகவேண்டும். அவன் அந்த வீட்டிற்கு போகும் முன்னே, வீட்டிலுள்ள யாவும் தீட்டுப்படாதபடிக்கு, வீட்டை ஒழித்து வைக்கும்படி ஆசாரியன் சொல்லவேண்டும். அதன் பின்பு அந்த ஆசாரியன் தோஷத்தைப் பார்க்கும்படி அந்த வீட்டிற்குப்போகவேண்டும் (லேவி 14:36).

ஆசாரியன் வீட்டைப் பார்க்கும்படி போகும்போது, அவன் அந்தத் தோஷம் இருக்கிற இடத்தைப் பார்க்கவேண்டும். அப்பொழுது வீட்டுச் சுவர்களிலே கொஞ்சம் பச்சையும் கொஞ்சம் சிவப்புமான குழிவிழுந்திருந்து, அவைகள் மற்றச் சுவரைப்பார்க்கிலும் பள்ளமாயிருக்கக்கண்டால், ஆசாரியன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வாசற்படியிலே வந்து, வீட்டை ஏழுநாள் அடைத்துவைக்கவேண்டும் (லேவி 14:37,38).

ஆசாரியன் ஏழாம்நாளிலே அந்த வீட்டிற்குத் திரும்பப் போய்ப் பார்த்து, தோஷம் வீட்டுச் சுவர்களில் படர்ந்ததென்று கண்டால், தோஷம் இருக்கும் அவ்விடத்துக் கல்லுகளைப் பெயர்க்கவும், பட்டணத்துக்குப் புறம்பே அசுத்தமான ஒரு இடத்திலே போடவும் அவன் கட்டளையிடவேண்டும் (லேவி 14:39,40).

தோஷம் இருக்கும் அவ்விடத்து கல்லுகளைப் பெயர்க்கவேண்டும். வீட்டின் சொந்தக்காரன் இதைச் செய்ய வேண்டும். அல்லது அந்த வீட்டிலே குஷ்டதோஷம் இருக்கக்கூடாது என்று விரும்புகிறவன் அவனுக்கு உதவி புரியலாம்.

ஆசாரியன் அந்த வீட்டை உள்ளே சுற்றிலும் செதுக்கச்சொல்லி, செதுக்கிப்போட்ட மண்ணைப் பட்டணத்துக்குப் புறம்பே அசுத்தமான ஒரு இடத்திலே கொட்டவும், வேறே கல்லுகளை எடுத்துவந்து, அந்தக் கல்லுகளுக்குப் பதிலாகக் கட்டி, வேறே சாந்தை எடுத்து வீட்டைப் பூசவும் கட்டளையிட வேண்டும் (லேவி 14:41,42).

கல்லுகளைப் பெயர்த்து, வீட்டைச் செதுக்கி, நவமாய்ப் பூசினபின்பும், அந்தத் தோஷம் திரும்ப வீட்டில் வந்ததானால், ஆசாரியன் அதை மறுபடியும் போய்ப் பார்க்கவேண்டும்; தோஷம் வீட்டில் படர்ந்ததானால், அது வீட்டை அரிக்கிற குஷ்டம்; அது தீட்டாயிருக்கும் (லேவி 14:43,44).

வீட்டிலே குஷ்டதோஷத்திற்கு அடையாளம் காணப்பட்டால், அந்த தோஷம் இருக்கும் இடத்தை மாத்திரம் பெயர்த்துப் போட்டால் போதுமானது. வீட்டில் காணப்படும் குஷ்டதோஷத்திற்கான அடையாளங்களை, பட்டணத்திற்கு புறம்பே அசுத்தமான ஒரு இடத்திலே கொட்டவேண்டும்.

வீட்டின் தோஷத்திற்கான அடையாளத்தை அகற்றின பின்பும், அந்த வீட்டிலே குஷ்டதோஷம் படர்ந்தால், அந்த வீடு முழுவதையும் இடித்துப் போடவேண்டும். அந்த வீடுமுழுவதையும் இடித்து, அதின் கல்லுகளையும், மரங்களையும், அதின் சாந்து எல்லாவற்றையும் பட்டணத்துக்குப் புறம்பே அசுத்தமான இடத்திலே கொண்டுபோகவேண்டும் (லேவி 14:45).

ஆசாரியனே வீடு முழுவதையும் இடிக்க வேண்டும். லேவி 14:36-42 ஆகிய வசனங்களில் மூலஎபிரெய பாஷையில் "அவர்கள்" என்னும் பிரதிப்பெயர்ச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"வீடு அடைக்கப்பட்டிருக்கும் நாட்களில் அதற்குள் பிரவேசிக்கிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். அந்த வீட்டிலே படுத்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அந்த வீட்டிலே சாப்பிட்டவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்" (லேவி 14:46,47) என்று கர்த்தர் சொல்லுகிறார். வீடு குஷ்டதோஷமாக இருக்கும்போது, அதிலே பிரவேசிக்கிற எவனும் தீட்டாயிருப்பான்.

ஆசாரியன் திரும்ப வந்து, வீடு பூசப்பட்டபின்பு வீட்டிலே அந்தத் தோஷம் படரவில்லை என்று கண்டானேயாகில், தோஷம் நிவிர்த்தியானபடியால், ஆசாரியன் அந்த வீட்டைச் சுத்தம் என்று தீர்க்கக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 14:48).

"வீடு பூசப்பட்டபின்பு" என்னும் வாக்கியத்திற்கு வீட்டை இரண்டாம் முறையாகச் சோதித்துப் பார்த்து, வீட்டின் குஷ்டதோஷமான பகுதிகளெல்லாம் இடிக்கப்பட்ட பின்பு என்று பொருள் சொல்லலாம் (லேவி 14:48).

தோஷம் நிவிர்த்தியான வீட்டிற்கு தோஷம் கழிக்கவேண்டும். கர்த்தர் அந்த வீட்டிற்கு தோஷம் கழிப்பதற்கான பிரமாணத்தை மோசேக்கும் ஆரோனுக்கும் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "அப்பொழுது வீட்டிற்குத் தோஷங்கழிக்க, இரண்டு குருவிகளையும், கேதுருக்கட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும் எடுத்து, ஒரு குருவியை ஒரு மண்பாண்டத்திலுள்ள ஊற்றுநீரின்மேல் கொன்று போடவேண்டும்" என்று சொல்லுகிறார் (லேவி 14:49,50).

வீட்டினுடைய குஷ்டதோஷம் சுத்தமான பின்பு, அதற்கு தோஷம் கழித்து சுத்திகரிக்கவேண்டும். சுத்தமான குஷ்டரோகிகளைச் சுத்திகரிப்பு செய்வதுபோலவே குஷ்டதோஷவீட்டிற்கும் தோஷங்கழிக்க வேண்டும். (லேவி 14:49-53 = லேவி 14:21-32).

பலிகளோ, பாவநிவாரணமோ குஷ்டரோகத்தைச் சுத்தமாக்குவதில்லை. இவை சுத்திகரிப்பின் சடங்குகள். இது இயேசுகிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பு வரும் என்பதை அங்கிகரிக்கும் நிகழ்ச்சி.

"அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுயஇஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" (ரோமர் 8:20-21).

இரண்டு குருவிகள் என்பது இரண்டு புறாக்கள் அல்லது இரண்டு காட்டுப்புறாக்களைக் குறிக்கும் (லேவி 14:49=லேவி 14:22)

கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலும் ஊற்று நீரிலும் தோய்த்து, வீட்டின்மேல் ஏழுதரம் தெளிக்கவேண்டும். இது வீடுமுழுவதும் தெளிக்கப்படவில்லை. குஷ்டதோஷம் கண்ட பகுதியில்மட்டும் தெளிக்கப்படுகிறது. இது சுத்தமான குஷ்டரோகியின் மீது தண்ணீரையும், இரத்தத்தையும் தெளிப்பது போல உள்ளது. (லேவி 14:7,51).

வீட்டிற்கு தோஷம் கழிப்பதில் ஆறு பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றது. அவையாவன :

1. கொல்லப்பட்ட குருவின் இரத்தம்.
2. இரத்தம் கலந்த தண்ணீர்
3. உயிருள்ள குருவி
4. கேதுருமரம்
5. ஈசோப்பு
6. சிவப்புநூல்

உயிருள்ள குருவியைப் பட்டணத்துக்குப் புறம்பே வெளியிலே விட்டுவிடவேண்டும். சுத்தமான குஷ்டரோகியைச் சுத்திகரித்ததுபோலவே இங்கும், உயிருள்ள குருவி வெளியிலே விட்டுவிடப்படுகிறது. இது மனுஷனுக்கும், அவனுடைய வீட்டிற்கும் குஷ்டத்தின் மூலமாக வரும் சகல வாதைகளிலிருந்தும் உண்டாகும் விடுதலைக்கு அடையாளமாகும். (லேவி 14:7,53).

ஆசாரியன் கேதுருக்கட்டையையும், ஈசோப்பையும், சிவப்புநூலையும், உயிருள்ள குருவியையும் எடுத்து, இவைகளைக் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலும் ஊற்று நீரிலும் தோய்த்து, வீட்டின்மேல் ஏழுதரம் தெளிக்கவேண்டும் (லேவி 14:51) என்றும்,

ஆசாரியன் குருவியின் இரத்தத்தினாலும், ஊற்றுநீரினாலும், உயிருள்ள குருவியினாலும், கேதுருக்கட்டையினாலும், ஈசோப்பினாலும், சிவப்புநூலினாலும் வீட்டிற்குத் தோஷங்கழிக்கவேண்டும் (லேவி 14:52) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியன் உயிருள்ள குருவியைப் பட்டணத்துக்குப் புறம்பே வெளியிலே விட்டுவிட்டு, இப்படி வீட்டிற்குப் பிராயச்சித்தம் செய்யக்கடவன் என்றும், அப்பொழுது அது சுத்தமாயிருக்கும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 14:53).

வீட்டிற்கு தோஷம் கழிக்கிற பிரமாணமும், குஷ்டதோஷம் நீங்கி சொஸ்தமானவனை சுத்திகரிக்கிற பிரமாணமும் ஒன்றுபோலிருக்கிறது. நம்முடைய குடும்பத்தில் எங்கு அசுத்தம் காணப்பட்டாலும், அதை உடனே அகற்றிப்போடுவதற்கு கவனம் செலுத்தவேண்டும். நாமும் நம்முடைய வீட்டாரும் கர்த்தரை ஆராதிக்கவேண்டியவர்கள். நமக்குள்ளோ, நம்முடைய வீட்டிற்குள்ளோ பாவமோ, அசுத்தமோ, தீட்டோ காணப்படக்கூடாது.

"அப்பொழுது யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடேகூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி: உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்" (ஆதி 35:2) என்று சொன்னார். நாம் குடியிருக்கிற வீட்டை சுத்தமாக வைத்திருப்பது மிகவும் அவசியம்.

சகல்வித குஷ்டரோகம்
லேவி 14:54-57

லேவி 14:54. இது சகல்வித குஷ்டரோகத்துக்கும், சொறிக்கும்,

லேவி 14:55. வஸ்திரக் குஷ்டத்துக்கும், வீட்டுக் குஷ்டத்துக்கும்,

லேவி 14:56. தடிப்புக்கும், அசறுக்கும், வெள்ளைப் படருக்கும் அடுத்த பிரமாணம்.

லேவி 14:57. குஷ்டம் எப்பொழுது தீட்டுள்ளது என்றும், எப்பொழுது தீட்டில்லாதது என்றும் தெரிவிப்பதற்குக் குஷ்டரோகத்துக்கு அடுத்த பிரமாணம் இதுவே என்றார்.

குஷ்டரோகத்தைப்பற்றிய தம்முடைய பிரமாணத்திற்கு முடிவுரையாக கர்த்தர் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய இஸ்ரவேல் புத்திரரை தமது கிருபையினால் பாதுகாத்து பராமரிக்கிறார்.

சீரிய தேசத்து படைத்தளபதியாகிய நாகமான் தன்னுடைய குஷ்டரோகத்திலிருந்து சுத்தமாக்கப்பட்டான். ஆனாலும், எலிசா நாகமானை ஆசாரியனிடத்தில் போய் காண்பிக்க சொல்லவில்லை. நாகமான் யோர்தான் நதியில் ஏழுதரம் முங்கி சுத்தமானாலும், அவனுக்கு கர்த்தர் சொன்ன சுத்திகரிப்பின் பிரமாணம் நியமிக்கப்படவில்லை.

விசுவாசிகளாகிய நமக்குள்ளே ஆவிக்குரிய குஷ்டரோகம் வருவதற்கு வாய்ப்புள்ளது. பாவம் நம்மை ஆளுகை செய்யக்கூடாது. பாவசிந்தனைகளும், பாவமான கிரியைகளும் நம்மைத் தீட்டுப்படுத்தும். நாம் கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு தகுதியுள்ளவர்களாகயிருக்கவேண்டும். கர்த்தர் பரிசுத்தர். அவருடைய பிள்ளைகளாகிய நாமும் பரிசுத்தமாயிருக்கவேண்டும்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "இது சகலவித குஷ்டரோகத்துக்கும், சொறிக்கும், வஸ்திரக் குஷ்டத்துக்கும், வீட்டுக் குஷ்டத்துக்கும், தடிப்புக்கும், அசறுக்கும், வெள்ளைப் படருக்கும் அடுத்த பிரமாணம். குஷ்டம் எப்பொழுது தீட்டுள்ளது என்றும், எப்பொழுது தீட்டில்லாதது என்றும் தெரிவிப்பதற்குக் குஷ்டரோகத்துக்கு அடுத்த பிரமாணம் இதுவே" (லேவி 14:54-57) என்று சொல்லுகிறார்.

இந்த வசனப்பகுதியில் ஏழுவிதமான குஷ்டங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன :

1. குஷ்டரோகம்
2. சொறி
3. தடிப்பு
4. அசறு
5. வஸ்திரக் குஷ்டம்
6. வீட்டுக் குஷ்டம்
7. வெள்ளைப் படர்

15 அதிகாரம்

ஒரு மனுஷனுடைய சரீரத்தில் குஷ்டரோகம் காணப்படும்போது, அவன் சடங்காச்சார பிரகாரமாக அசுத்தமானவனாகவும் தீட்டானவனாகவும் இருக்கிறான். அதுபோலவே மனுஷனுடைய சரீரத்தில் காணப்படும் ஒரு சில இயற்கையான காரியங்களும் அவனுக்கு அசுத்தமானதாகவும் தீட்டானதாகவும் கருதப்படுகிறது.

மனுஷனுக்கு பிரமியத்தினால் உண்டாகும் தீட்டு (லேவி 15:1-18). சூதகஸ்திரீ தன் சரீரத்திலுள்ள ஊறலினிமித்தம் தீட்டுப்பட்டிருக்கிறாள் (லேவி 15:19-33).

பிரமியம்
லேவி 15:1-15

லேவி 15:1. பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:

லேவி 15:2. நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: ஒருவனுக்குப் பிரமியம் உண்டானால், அவன் தன் பிரமியத்தினாலே தீட்டானவன்.

லேவி 15:3. அவனுடைய மாம்சத்திலுள்ள பிரமியம் ஊறிக்கொண்டிருந்தாலும், அவன் பிரமியம் அடைபட்டிருந்தாலும், அதினால் அவனுக்குத் தீட்டுண்டாகும்.

லேவி 15:4. பிரமியமுள்ளவன் படுக்கிற எந்தப் படுக்கையும் தீட்டாகும்; அவன் எதின்மேல் உட்காருகிறானோ அதுவும் தீட்டாகும்.

லேவி 15:5. அவன் படுக்கையைத் தொடுகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகக்கடவன்; சாயங்காலம்மட்டும் அவன் தீட்டுப்பட்டிருப்பானாக.

லேவி 15:6. பிரமியம் உள்ளவன் உட்கார்ந்ததின் மேல் உட்காருகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

லேவி 15:7. பிரமியம் உள்ளவனின் சரீரத்தைத்தொடுகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

லேவி 15:8. பிரமியம் உள்ளவன் சுத்தமாயிருக்கிற ஒருவன்மேல் துப்பினால், இவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

லேவி 15:9. பிரமியம் உள்ளவன் ஏறும் எந்தச் சேணமும் தீட்டாயிருக்கும்.

லேவி 15:10. அவனுக்குக் கீழிருந்த எதையாகிலும் தொடுகிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதை எடுத்துக் கொண்டு போகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

லேவி 15:11. பிரமியம் உள்ளவன் தன் கைகளைத் தண்ணீரினால் கழுவாமல் ஒருவனைத் தொட்டால், இவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

லேவி 15:12. பிரமியம் உள்ளவன் தொட்ட மண்பாண்டம் உடைக்கப்படவும், மரச்சாமான் எல்லாம் தண்ணீரினால் கழுவப்படவும் வேண்டும்.

லேவி 15:13. பிரமியம் உள்ளவன் தன் பிரமியம் நீங்கிச் சுத்தமானால், தன் சுத்திகரிப்புக்கென்று ஏழுநாள் எண்ணிக்கொண்டிருந்து, தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தன் தேகத்தை ஊற்றுநீரில் கழுவக்கடவன்; அப்பொழுது சுத்தமாயிருப்பான்.

லேவி 15:14. எட்டாம்நாளிலே, அவன் இரண்டு காட்டுப் புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, ஆசாரியனிடத்தில் கொடுக்கக்கடவன்.

லேவி 15:15. ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவநிவாரணபலியும் மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியுமாக்கி, அவனுக்காகக் கர்த்தருடைய சந்நிதியில் அவன் பிரமியத்தினிமித்தம் பாவநிவிர்த்தி செய்ய வேண்டும்.

மனுஷனுக்கு பிரமியம் உண்டாகும்போது, அவன் தன் பிரமியத்தினால் தீட்டானவன். இது சடங்காச்சார ரீதியான தீட்டு. வியாதியின் நிமித்தமாக மனுஷனுடைய மாம்சத்தில் பிரமியம் ஊறுகிறது. பாவத்தினால் வியாதியும் வியாதியினால் மரணமும் மனுஷனுக்கு வருகிறது. பாவத்தின் சம்பளம் மரணம்.

பிரமியத்தினால் உண்டாகும் தீட்டைப்பற்றி கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: ஒருவனுக்குப் பிரமியம் உண்டானால், அவன் தன் பிரமியத்தினாலே தீட்டானவன். அவனுடைய மாம்சத்திலுள்ள பிரமியம் ஊறிக்கொண்டிருந்தாலும், அவன் பிரமியம் அடைபட்டிருந்தாலும், அதினால் அவனுக்குக் தீட்டுண்டாகும்" (லேவி 15:1-3) என்று சொல்லுகிறார்.

எபிரெய மொழியில் பிரமியம் என்னும் வார்த்தைக்கு "ஜூப்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு ஒழுகுதல், ஓடுதல், வடிதல் என்று பலவிதமாகப் பொருள் கூறலாம். கானான் தேசம் பாலும், தேனும் ஓடுகிற பூமி. இங்கு "ஓடுகிற" என்பதற்கு இந்த எபிரெய வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (லேவி 20:24; யாத் 3:8,17)

லேவி 15:2 ஆவது வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் "ஜூப்" என்னும் வார்த்தை சரீரத்தின் அசுத்தத்தைக் குறிக்கும். செப்துவஜிந்த் பதிப்பில் ஆண்களுக்கும் (லேவி 15:2-15), பெண்களுக்கும் (லேவி 15:19-30) வரும் பால்வினை நோயை குறிப்பதாக இந்த வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

பூர்வகாலத்தில் விக்கிரகாராதனையும், வேசித்தனமும் ஒன்றாகக் கலந்திருந்தது. புறஜாதி மார்க்க வழிபாடுகளில் மனுஷர் மத்தியிலே இதுபோன்று பால்வினை நோய்கள் தாராளமாகக் காணப்பட்டன. ஜூப் என்னும் எபிரெய வார்த்தைக்கு இணையாக "ஜோப்" என்னும் வார்த்தையும் அதே பொருளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

பிரமியம் உண்டானவன் ஆசரிப்புக்கூடாரத்திற்கு அருகாமையில் வரக்கூடாது. அவன் மற்ற மனுஷரை விட்டு விலகியே இருக்கவேண்டும். பிரமியம் உண்டானவன் தீட்டாயிருப்பதினால் அவனையும், அவனுடைய வஸ்துக்களையும் தொடுகிறவர்களும் தீட்டானவர்களாயிருப்பார்கள்.

பிரமியமுள்ளவன் படுக்கிற எந்தப் படுக்கையும் தீட்டாகும்; அவன் எதின்மேல் உட்காருகிறானோ அதுவும் தீட்டாகும். அவன் படுக்கையைத் தொடுகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகக்கடவன்; சாயங்காலம்மட்டும் அவன் தீட்டுப்பட்டிருப்பான் (லேவி 15:4,5).

பிரமியம் உள்ளவன் உட்கார்ந்ததின் மேல் உட்காருகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். பிரமியம் உள்ளவனின் சரீரத்தைத்தொடுகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (லேவி 15:6,7).

பிரமியம் உள்ளவன் சுத்தமாயிருக்கிற ஒருவன்மேல் துப்பினால், இவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். பிரமியம் உள்ளவன் ஏறும் எந்தச் சேணமும் தீட்டாயிருக்கும் (லேவி 15:8,9).

கிழக்கு தேசத்தில் ஒருவர்மீது துப்புதல் அந்த நபரை அவமதிக்கக்கூடிய செயலாகும். (எண் 12:14; உபா 25:9; யோபு 30:10; ஏசா 50:6; மத் 26:67).

பிரமியமுள்ளவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். சூரியன் அஸ்தமனமாகும்வரையிலும் சுத்திகரிப்பின் பிரமாணத்தின் பிரகாரம் அவன் தீட்டானவனாகவே கருதப்படுகிறான். அவன் தீட்டுப்பட்டிருக்கும் காலத்தில் எந்தப் பலியும் செலுத்தக்கூடாது.

லேவி 15:9-ஆவது வசனத்தில் "தீட்டாயிருக்கும்" என்று சொல்லப்பட்டிருக்கும் வாக்கியம், செப்துவஜிந்த் பதிப்பில், "சாயங்கால மட்டும் தீட்டாயிருக்கும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பிரமியமுள்ளவனுக்குக் கீழிருந்த எதையாகிலும் தொடுகிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதை எடுத்துக் கொண்டு போகிறவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (லேவி 15:10).

பிரமியம் உள்ளவன் தன் கைகளைத் தண்ணீரினால் கழுவாமல் ஒருவனைத் தொட்டால், இவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். பிரமியம் உள்ளவன் தொட்ட மண்பாண்டம் உடைக்கப்படவும், மரச்சாமான் எல்லாம் தண்ணீரினால் கழுவப்படவும் வேண்டும் (லேவி 15:11,12).

மண்பாண்டத்திலுள்ள மெல்லிய துவாரங்களில் அசுத்தங்களும், கிருமிகளும் தங்கியிருக்கும். ஆகையினால் இவை உடைக்கப்பட வேண்டும். வெண்கலப் பாத்திரங்களையும், மரச்சாமான்களையும் உடைக்க வேண்டியதில்லை. இவற்றைக் கழுவினால் போதுமானது. இவற்றில் மெல்லிய துவாரங்கள் இல்லை. ஆகையினால் இதில் கிருமிகள் தங்கியிருக்காது. இதில் இருக்கும் கிருமிகளும் கழுவினால் போய்விடும்.

பிரமியமுண்டானவன் தன் பிரமியத்தினால் தீட்டானவன். அவனைத் தொடுகிறவனும் தீட்டுப்படுகிறான். பிரமியம் உண்டானவனுடைய தீட்டு மற்றவர்களுக்கும் பரவுகிறது. அதுபோலவே ஒருவனுடைய பாவம் மற்றவர்களுக்கும் பரவும் வாய்ப்புள்ளது. ஆகையினால் நாம் துன்மார்க்கருடைய பாவங்களைக் குறித்து மிகவும் எச்சரிப்பாயிருக்கவேண்டும். அவர்களுடைய பாவங்களினாலும், அசுத்தங்களினாலும் நாம் கறைபடாதபடிக்கு, நம்மை பரிசுத்தமாக காத்துக்கொள்ளவேண்டும்.

பிரமியமுள்ளவன் பிரமியம் நீங்கி சுத்தமாவதற்கு வாய்ப்புள்ளது. ஆனாலும் அவன் சுத்திகரிக்கும் பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து பலிகளை செலுத்த வேண்டியது அவசியமாயிருக்கிறது.

பிரமியம் உள்ளவன் தன் பிரமியம் நீங்கிச் சுத்தமானால், தன் சுத்திகரிப்புக்கென்று ஏழுநாள் எண்ணிக்கொண்டிருந்து, தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தன் தேகத்தை ஊற்றுநீரில் கழுவக்கடவன்; அப்பொழுது அவன் சுத்தமாயிருப்பான் (லேவி 15:13).

கிருமிகள் வேகமாகப் பரவக்கூடியவை. ஆகையினால் பிரமியம் உள்ளவன் தன் தேகத்தை ஓடுகிற ஊற்றுநீரில் கழுவவேண்டும். தேங்கியிருக்கும் தண்ணீரில் கழுவக்கூடாது. பூர்வகாலத்திலேயும், இதுபோன்ற மருத்துவ சம்பந்தமான ஞானத்தைக் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுத்திருக்கிறார்.

பாக்டீரியாக்களைப் பற்றி கண்டுபிடிக்கப்படுவதற்கு ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பாகவே தேவனுடைய தெய்வீக ஞானத்தினால் மோசே பாக்டீரியாக்களைப் பற்றியும், அவற்றினால் வரக்கூடிய வியாதிகளைப் பற்றியும் அறிந்திருந்தார். மனுஷர் ஆரோக்கியமாக இருப்பதற்குத் தேவையான பிரமாணங்களை மோசே தேவஅருளினால் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுக்கிறார். இதனால் அக்காலத்தில் மற்ற தேசத்து ஜனங்களைவிட இஸ்ரவேல் ஜனத்தார் சரீர ஆரோக்கியத்தோடு இருந்தார்கள்.

பிரமியமுள்ளவன் தன் பிரமியம் நீங்கி சுத்தமான எட்டாம்நாளிலே, இரண்டு காட்டுப் புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, ஆசாரியனிடத்தில் கொடுக்கவேண்டும் (லேவி 15:14).

ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவநிவாரணபலியும் மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியுமாக்கி, அவனுக்காகக் கர்த்தருடைய சந்நிதியில் அவன் பிரமியத்தினிமித்தம் பாவநிவிர்த்தி செய்ய வேண்டும் (லேவி 15:15).

பிரமியமுள்ளவன் தன் பிரமியம் நீங்கி சுத்தமாகும்போது அவன் தன் தேகத்தை ஊற்று நீரில் கழுவவேண்டும். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு இயேசுகிறிஸ்துவின் இரத்தமே ஊற்று நீராயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.

கிறிஸ்துவின் இரத்தம் நம்மீது தெளிக்கப்படும்போது நம்முடைய ஆத்துமாவின் பாவம் நம்மை விட்டு அகற்றப்படுகிறது. நாம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறோம். அது மாத்திரமல்ல அவருடைய கிருபையினால் நாம் பரிசுத்தமும் ஆக்கப்படுகிறோம்.

கர்த்தர் இந்த அதிகாரத்தில் தீட்டுள்ளவர்களைப்பற்றியும், தீட்டானவைகளைப்பற்றியும் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. ஒருவனுக்குப் பிரமியம் உண்டானால், அவன் தன் பிரமியத்தினாலே தீட்டானவன். அவனுடைய மாம்சத்திலுள்ள பிரமியம் ஊறிக் கொண்டிருந்தாலும், அவன் பிரமியம் அடைபட்டிருந்தாலும், அதினால் அவனுக்குத் தீட்டுண்டாகும். (லேவி 15:2-3)

2. பிரமியமுள்ளவன் படுக்கிற எந்தப் படுக்கையும் தீட்டாகும் (லேவி 15:4)

3. பிரமியமுள்ளவன் எதின்மேல் உட்காருகிறானோ அதுவும் தீட்டாகும்.

4. பிரமியமுள்ளவன் படுக்கையைத் தொடுகிறவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. (லேவி 15:5)

5. பிரமியம் உள்ளவன் உட்கார்ந்ததின் மேல் உட்காருகிறவன் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக (லேவி 15:6)

6. பிரமியம் உள்ளவனின் சரீரத்தைத் தொடுகிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. (லேவி 15:7)

7. பிரமியம் உள்ளவன் சுத்தமாயிருக்கிற ஒருவன்மேல் துப்பினால், அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக. (லேவி 15:8)

8. பிரமியம் உள்ளவன் ஏறும் எந்தச் சேணமும் தீட்டாயிருக்கும் (லேவி 15:9).

9. பிரமியம் உள்ளவனுக்குக் கீழிருந்த எதையாகிலும் தொடுகிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (லேவி 15:10)

10. தீட்டானவற்றை எடுத்துக் கொண்டு போகிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக

11. பிரமியம் உள்ளவன் தன் கைகளைத் தண்ணீரினால் கழுவாமல் ஒருவனைத் தொட்டால், அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக (லேவி 15:11)

12. பிரமியம் உள்ளவன் தொட்ட மண்பாண்டம் தீட்டாயிருக்கும். (லேவி 15:12)

மாம்சத்திலுள்ள பிரமியம் ஊறிக் கொண்டிருந்தாலும், அவன் பிரமியம் அடைபட்டிருந்தாலும் அவன் தீட்டானவன். இப்படிப்பட்ட பிரச்சனையுள்ள மனுஷன் சரீரப்பிரகாரமாகவும், சுத்திகரிப்பின் பிரகாரமாகவும் சுத்தமாகும் வரையிலும், அவன் தீட்டானவனாகவே கருதப்படுகிறான். (லேவி 15:13-15)

பிரமியமுள்ளவன் படுக்கிற எந்தப் படுக்கையும் தீட்டாகும். இதுபோன்ற தீட்டுள்ளவர்கள் தனிமைப்படுத்த வேண்டும். (லேவி 15:4-12).

தன் சரீரத்தில் தண்ணீரில் மூழ்கி, ஸ்நானம்பண்ணி தன் வஸ்திரங்களை தோய்க்கவேண்டிய தீட்டுகளைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பிரமியம் உள்ளவன் படுக்கையைத் தொடுகிறவன். (லேவி 15:5)

2. பிரமியம் உள்ளவன் உட்கார்ந்ததின் மேல் உட்காருகிறவன். (லேவி 15:6)

3. பிரமியம் உள்ளவனின் சரீரத்தைத் தொடுகிறவன். (லேவி 15:7)

4. பிரமியம் உள்ளவன் சுத்தமாயிருக்கிற ஒருவன்மேல் துப்பினால் அவன். (லேவி 15:8)

5. பிரமியம் உள்ளவன் ஏறும் எந்தச் சேணத்தையும் தொடுகிறவன். (லேவி 15:9)

6. பிரமியம் உள்ளவனுக்குக் கீழிருந்த எதையாகிலும் தொடுகிறவன் அதை எடுத்துக் கொண்டு போகிறவன். (லேவி 15:10)

7. பிரமியம் உள்ளவன் தன் கைகளைத் தண்ணீரினால் கழுவாமல் ஒருவனைத் தொட்டால் அவன். (லேவி 15:11)

8. பிரமியம் உள்ளவன் தன் பிரமியம் நீங்கிச் சுத்தமானால், தன் சுத்திகரிப்புக்கென்று ஏழுநாள் எண்ணிக்கொண்டிருந்தது, தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தன் தேகத்தை ஊற்றுநீரில் கழுவக்கடவன் (லேவி 15:13-15)

9. ஒருவனிலிருந்து இந்திரியம் கழிந்ததுண்டானால், அவன் தண்ணீரில் முழுகவேண்டும் (லேவி 15:16-17)

10. இந்திரியம் கழிந்தவனோடே ஸ்திரீ படுத்துக்கொண்டிருந்தால், இருவரும் தண்ணீரில் முழுகக்கடவன் (லேவி 15:18)

11. சூதகஸ்திரீயை தொடுகிறவன் எவனும் தண்ணீரில் முழுகக்கடவன் (லேவி 15:19)

12. சூதகஸ்திரீயின் படுக்கையைத் தொடுகிறவன். (லேவி 15:21)

13. சூதகஸ்திரீயின் உட்கார்ந்த மணையைத் தொடுகிறவன் (லேவி 15:22-27)

14. தீட்டுப்படுத்துகிற யாதொரு ஊரும் பிராணியையாகிலும் தொட்டவன். (லேவி 22:6)

15. ஆகாரத்துக்கான ஒரு மிருகம் செத்தால் அதின் மாம்சத்தைப் புசித்தவன் (லேவி 11:40)

16. விரிநகங்களுள்ளவைகளாயிருந்தும், இருபிளவான குளம்பில்லாமலும் அசைபோடாமலும் இருக்கிற மிருகங்களின் உடலைச் சுமந்தவனும், நாலுகாலால் நடக்கிற சகல ஜீவன்களிலும் தங்கள் உள்ளங்கால்களை ஊன்றி நடக்கிறவைகளின் உடலைச் சுமந்தவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன் (லேவி 11:25-28)

17. ஆசாரியன், குஷ்டரோகமுள்ளவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கப்பட்டபின்பு, அவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்த பின் சுத்தமாயிருப்பான். (லேவி 13:6,34; லேவி 14:8-9)

18. தோஷமுள்ள வீடு அடைக்கப்பட்டிருக்கும் நாட்களில் அதற்குள் பிரவேசிக்கிறவனும் அந்த வீட்டிலே படுத்தவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன் (லேவி 14:47)

19. போகவிடப்படும் போக்காடாகிய வெள்ளாட்டுக்கடாவைக் கொண்டு போய் விட்டவன், தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, பின்பு பாளயத்துக்குள் வருவானாக (லேவி 16:26)

20. ஒரு பலிகளைச் சுட்டெரித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, பின்பு பாளயத்துக்குள் வருவானாக (லேவி 16:28; எண் 19:5-8).

21. தானாய் இறந்துபோனதையாவது, பீறுண்டதையாவது, புசித்தவன் எவனும், அவன் சுதேசியானாலும் பரதேசியானாலும், தன்வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகக்கடவன் (லேவி 17:15).

22. பலியிடப்படும் மிருகஜீவனின் சாம்பலைச் சுமந்தவன். (எண் 19:10).

23. செத்துப்போனவனுடைய பிரேதத்தைத் தொட்டவன் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான். அவன் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தீட்டுக்கழிக்கும் ஜலத்தினால் தன்னைச் சுத்திகரிக்கக்கடவன் (எண் 19:11-21).

24. யுத்தத்திற்கு பிறகு ஏழாம் நாளில் வஸ்திரங்களை தோய்க்கவேண்டும் (எண் 31:24).

25. சாயங்காலத்திலே தீட்டுப்பட்டவன் ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, சூரியன் அஸ்தமிக்கும்போது பாளயத்திற்குள் வரக்கடவன் (உபா 23:11)

ஒருவன் சுத்தமானவன் என்று அறிவிக்கப்படுவதற்கு முன்பாக, அவன் மூன்று காரியங்களை செய்யவேண்டும். அவையாவன :

1. தன் வஸ்திரங்களைத் தோய்க்க வேண்டும். (லேவி 15:5-11)
2. தன் சரீரத்தைத் தண்ணீரில் முழுகி ஸ்நானம் பண்ண வேண்டும்.
3. சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பவனாக இருக்க வேண்டும்.

இந்திரியம்

லேவி 15:16-18

லேவி 15:16. ஒருவனிலிருந்து இந்திரியம் கழிந்ததுண்டானால், அவன் தண்ணீரில் முழுகவேண்டும்; சாயங்காலம்மட்டும் அவன் தீட்டுப்பட்டிருப்பானாக.

லேவி 15:17. கழிந்த இந்திரியம் பட்ட வஸ்திரமும் தோலும் தண்ணீரினால் கழுவப்பட்டு, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பதாக.

லேவி 15:18. இந்திரியம் கழிந்தவனோடே ஸ்திரீ படுத்துக்கொண்டிருந்தால், இருவரும் தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பார்களாக.

ஒருவனிலிருந்து இந்திரியம் கழியும்போது அவனும் தீட்டுப்படுகிறான். அவனையோ அவனுடைய வஸ்திரத்தையோ தொடுகிறவர்களும் தீட்டுப்படுகிறார்கள்.

ஒருவனிலிருந்து இந்திரியம் கழிந்ததுண்டானால், அவன் தண்ணீரில் முழுகவேண்டும்; சாயங்காலம்மட்டும் அவன் தீட்டுப்பட்டிருப்பான் (லேவி 15:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கழிந்த இந்திரியம் பட்ட வஸ்திரமும் தோலும் தண்ணீரினால் கழுவப்பட்டு, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருக்கவேண்டும். இந்திரியம் கழிந்தவனோடே ஸ்திரீ படுத்துக்கொண்டிருந்தால், இருவரும் தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பார்கள் (லேவி 15:17,18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சூதகஸ்திரீ
லேவி 15:19-33

லேவி 15:19. சூதகஸ்திரீ தன் சரீரத்திலுள்ள உதிர ஊறலினிமித்தம் ஏழுநாள் தன் விலக்கத்தில் இருக்கக்கடவள்; அவளைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

லேவி 15:20. அவள் விலக்கலாயிருக்கையில், எதின்மேல் படுத்துக்கொள்ளுகிறாளோ, எதின்மேல் உட்காருகிறாளோ அதெல்லாம் தீட்டாயிருக்கும்.

லேவி 15:21. அவள் படுக்கையைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

லேவி 15:22. அவள் உட்கார்ந்த மணையைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

லேவி 15:23. அவள் படுக்கையின்மேலாகிலும், அவள் உட்கார்ந்த மணையின்மேலாகிலும் இருந்த எதையாகிலும் தொட்டவன், சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

லேவி 15:24. ஒருவன் அவளோடே படுத்துக் கொண்டதும், அவள் தீட்டு அவன்மேல் பட்டதுமுண்டானால், அவன் ஏழுநாள் தீட்டாயிருப்பானாக; அவன் படுக்கிற படுக்கையும் தீட்டுப்படும்.

லேவி 15:25. ஒரு ஸ்திரீ விலகியிருக்கவேண்டிய காலம் அல்லாமல் அவளுடைய உதிரம் அநேகநாள் ஊறிக்கொண்டிருந்தால், அல்லது அந்தக் காலத்துக்கு மிஞ்சி அது கண்டிருக்கும் நாளெல்லாம் ஊறிக் கொண்டிருந்தால், தன் விலக்கத்தின் நாட்களிலிருந்ததுபோல அவள் தீட்டாயிருப்பாளாக.

லேவி 15:26. அந்த நாட்களெல்லாம் அவள் படுக்கும் எந்தப் படுக்கையும், அவள் விலக்கத்தின் படுக்கையைப்போல, அவளுக்குத் தீட்டாயிருக்கும்; அவள் உட்கார்ந்த மணையும், அவளுடைய விலக்கத்தின் தீட்டைப்போலவே தீட்டாயிருக்கும்.

லேவி 15:27. அப்படிப்பட்டவைகளைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

லேவி 15:28. அவள் தன் உதிர ஊறல் நின்று சுத்தமானபோது, அவள் ஏழுநாள் எண்ணிக் கொள்வாளாக; அதின்பின்பு சுத்தமாயிருப்பாள்.

லேவி 15:29. எட்டாம்நாளிலே இரண்டு காட்டுப் புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஆசரிப்புக் கூடாரவாசலில் ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கடவள்.

லேவி 15:30. ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவநிவாரணபலியும், மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியுமாக்கி, அவளுக்காகக் கர்த்தருடைய சந்நிதியில் அவளுடைய உதிர ஊறலினிமித்தம் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்.

லேவி 15:31. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நடுவே இருக்கிற என்னுடைய வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி, தங்கள் தீட்டுகளால் சாகாதபடிக்கு, இப்படி நீங்கள் அவர்கள் தீட்டுகளுக்கு அவர்களை விலக்கிவைக்கக் கடவீர்கள்.

லேவி 15:32. பிரமியமுள்ளவனுக்கும், இந்திரியக் கழிவினாலே தீட்டானவனுக்கும்,

லேவி 15:33. சூதக பலவீனமுள்ளவளுக்கும், பிரமியமுள்ள ஸ்திரீ புருஷருக்கும், தீட்டாயிருக்கிறவளோடே படுத்துக் கொண்டவனுக்கும் ஏற்ற பிரமாணம் இதுவே என்றார்.

சூதகஸ்திரீயானவள் தன் சரீரத்திலுள்ள உதிர ஊறலினிமித்தம் தீட்டுப்படுகிறாள். ஒரு ஸ்திரீ விலகியிருக்கவேண்டிய காலம் அல்லாமல் அவளுடைய உதிரம் அநேகநாள் ஊறிக்கொண்டிருந்தால், அல்லது அந்தக் காலத்துக்கு மிஞ்சி அது கண்டிருக்கும் நாளெல்லாம் ஊறிக் கொண்டிருந்தால், தன் விலக்கத்தின் நாட்களிலிருந்ததுபோல அவள் தீட்டாயிருப்பாள் (லேவி 15:25).

சூதகஸ்திரீ தீட்டானவளாயிருப்பதினால் அவளையோ அல்லது அவளுடைய வஸ்துக்களையோ தொடுகிறவர்களும் தீட்டானவர்களாயிருப்பார்கள். சூதகஸ்திரீ தீட்டாயிருக்கும் நாட்களெல்லாம் அவள் படுக்கும் எந்தப் படுக்கையும், அவள் விலக்கத்தின் படுக்கையைப்போல, அவளுக்குத் தீட்டாயிருக்கும்; அவள் உட்கார்ந்த மணையும், அவளுடைய விலக்கத்தின் தீட்டைப்போலவே தீட்டாயிருக்கும். அப்படிப்பட்டவைகளைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (லேவி 15:26,27).

சூதகஸ்திரீ தன் சரீரத்திலுள்ள உதிர ஊறலினிமித்தம் ஏழுநாள் தன் விலக்கத்தில் இருக்கவேண்டும்; அவளைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். அவள் விலக்கலாயிருக்கையில், எதின்மேல் படுத்துக்கொள்ளுகிறாளோ, எதின்மேல் உட்காருகிறாளோ அதெல்லாம் தீட்டாயிருக்கும் (லேவி 15:19,20).

சூதகஸ்திரீயின் படுக்கையைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருக்க வேண்டும். அதுபோலவே அவள் உட்கார்ந்த மணையைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (லேவி 15:21,22).

சூதகஸ்திரீயின் படுக்கையின் மேலாகிலும், அவள் உட்கார்ந்த மணையின்மேலாகிலும் இருந்த எதையாகிலும் தொட்டவன், சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான். ஒருவன் அவளோடே படுத்துக் கொண்டதும், அவள் தீட்டு அவன்மேல் பட்டதுமுண்டானால், அவன் ஏழுநாள் தீட்டாயிருப்பான்; அவன் படுக்கிற படுக்கையும் தீட்டுப்படும் (லேவி 15:23,24).

உதிரத்தின் ஊறல் வியாதியினாலோ, சூதகத்தினாலோ அல்லது வேறு ஏதாவது காரணத்தினாலோ அவள் படுக்கையின் மேலாகிலும், அவள் உட்கார்ந்த மணையின் மேலாகிலும் படுவதற்கு வாய்ப்புள்ளது.

"ஒருவன் அவளோடே படுத்துக் கொண்டதும்" என்று லேவி 15:24-ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருப்பது பாலுறவு அல்ல. சூதகஸ்திரீயோடே பாலுறவு கொள்கிறவனுக்கும், அந்த ஸ்திரீக்கும் மரணதண்டனை விதிக்கப்படும் (லேவி 20:18; லேவி 18:19; எசே 18:6). செப்துவஜிந்த் பதிப்பில் "ஒருவன் அவளருகில் படுத்துக் கொண்டிருந்தால்" என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. லேவி 15:18 ஆவது வசனத்தில் "இந்திரியம் கழிந்தவனோடே ஸ்திரீ படுத்துக் கொண்டிருந்தால்" என்னும் வாக்கியத்திற்கும் இதன் அடிப்படையிலேயே பொருள்கூற வேண்டும்.

சூதகஸ்திரீயின் உதிர ஊறல் நின்றுபோகும்போது அவள் சரீரப்பிரகாரமாக சுத்தமாகிறாள். ஆனாலும் உதிர ஊறல் நின்றவுடனே அவள் சடங்காச்சாரப் பிரகாரமாக சுத்தமாவதில்லை. அவளுடைய உதிர ஊறல் நின்றுபோயிற்றா என்பதை உறுதிபண்ணவேண்டும். அதற்காக அவள் தன் உதிர ஊறல் நின்று சுத்தமானபோது, அவள் ஏழுநாள் எண்ணிக்கொள்ள வேண்டும்; அதின்பின்பு அவள் சுத்தமாயிருப்பாள் (லேவி 15:28).

உதிர ஊறல் நின்று சுத்தமானவள் பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் கர்த்தருடைய சந்நிதியில் காணிக்கைகளைக் கொண்டு வந்து தன்னை சுத்திகரிப்பு செய்யவேண்டும். அவள் எட்டாம்நாளிலே இரண்டு காட்டுப் புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஆசரிப்புக் கூடாரவாசலில் ஆசாரியனிடத்தில் கொண்டுவர வேண்டும் (லேவி 15:29).

ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவநிவாரணபலியும், மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியுமாக்கி, அவளுக்காகக் கர்த்தருடைய சந்நிதியில் அவளுடைய உதிர ஊறலினிமித்தம் பாவநிவிர்த்தி செய்யக்கடவன் (லேவி 15:30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சூதகஸ்திரீயின் உதிர ஊறல் பற்றிய பிரமாணம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. சூதகஸ்திரீ தன் சரீரத்திலுள்ள உதிர ஊறலினிமித்தம் ஏழுநாள் தன் விலக்கத்தில் இருக்கக்கடவள்.

2. அவளைத் தொடுகிறவன் எவனும் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

3. அவள் விலக்கலாயிருக்கையில், எதின்மேல் படுத்துக்கொள்ளுகிறாளோ, அதெல்லாம் தீட்டாயிருக்கும் (லேவி 15:20).

4. எதின்மேல் உட்காருகிறாளோ, அதெல்லாம் தீட்டாயிருக்கும்.

5. அவள் படுக்கையைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக (லேவி 15:21).

6. அவள் உட்கார்ந்த மணையைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக (லேவி 15:22).

7. ஒருவன் அவளோடே படுத்துக் கொண்டதும், அவள் தீட்டு அவன்மேல் பட்டதுமுண்டானால், அவன் ஏழுநாள் தீட்டாயிருப்பானாக (லேவி 15:24).

8. ஒரு ஸ்திரீ விலகியிருக்கவேண்டிய காலம் அல்லாமல் அவளுடைய உதிரம் அநேகநாள் ஊறிக்கொண்டிருந்தால், அல்லது அந்தக் காலத்துக்கு மிஞ்சி அது கண்டிருக்கும் நாளெல்லாம் ஊறிக் கொண்டிருந்தால், தன் விலக்கத்தின் நாட்களிலிருந்ததுபோல அவள் தீட்டாயிருப்பாளாக (லேவி 15:25).

9. அந்த நாட்களெல்லாம் அவள் படுக்கும் எந்தப் படுக்கையும், அவள் விலக்கத்தின் படுக்கையைப்போல, அவளுக்குத் தீட்டாயிருக்கும் (லேவி 15:26).

10. அவள் உட்கார்ந்த மணையும், அவளுடைய விலக்கத்தின் தீட்டைப் போலவே தீட்டாயிருக்கும்.

11. அப்படிப்பட்டவைகளைத் தொடுகிறவன் எவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக (லேவி 15:27).

12. அவள் தன் உதிர ஊறல் நின்று சுத்தமானபோது, அவள் ஏழுநாள் எண்ணிக் கொள்வாளாக; அதின்பின்பு சுத்தமாயிருப்பாள் (லேவி 15:28).

13. எட்டாம்நாளிலே இரண்டு காட்டுப் புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஆசரிப்புக் கூடாரவாசலில் ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கடவள் (லேவி 15:29).

14. ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவநிவாரணபலியும், மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியுமாக்கி, அவளுக்காகக் கர்த்தருடைய சந்நிதியில் அவளுடைய உதிர ஊறலினிமித்தம் பாவநிவிர்த்தி செய்யக்கடவன் (லேவி 15:30).

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாக பரிசுத்தம்பண்ணப்படுகிறார்கள். கர்த்தர் பரிசுத்தர். ஆகையினால் கர்த்தருடைய ஜனமும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். இஸ்ரவேல் தேசம் பரிசுத்தமான தேசம். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ராஜ்யத்தில் ஆசாரியர்களாயிருந்து அவரை சேவிக்கவேண்டும்.

கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் உண்மையோடும் பரிசுத்தத்தோடும் அவரை ஆராதிக்கவேண்டும். அவர்கள் தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். பரிசுத்தமே கர்த்தருடைய ஆலயத்திற்கு அழகாயிருக்கிறது. பரிசுத்தத்தைக் காத்துக்கொள்கிறவர்கள் பாவத்தின் அசுத்தங்களுக்கு விலகியிருக்கவேண்டும்.

கர்த்தருடைய ஜனம் பாவத்தினால் தங்களை கறைபடுத்திவிடாதபடி பாவத்திற்கும், அசுத்தத்திற்கும், தீட்டுக்கும் விலகி ஜீவிக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் தீட்டாயிருக்கும்போது, கர்த்தருடைய பிரமாணத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம், பலிகளை செலுத்தி, தங்களை சுத்திகரித்துக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரை சுத்திகரிக்கும் பிரமாணத்தில் ஆசரிப்புக்கூடாரத்தைப்பற்றியும் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அது கர்த்தருடைய வாசஸ்தலம். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கியிருக்கிறது. அசுத்தமானவர்களும் தீட்டானவர்களும் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை கனம்பண்ணுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் அசுத்தமுள்ளவன் எவனும் கர்த்தருடைய சந்நிதியில் பிரவேசிக்கக்கூடாது என்று தடைபண்ணப்பட்டிருக்கிறார்கள். கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தை மனுஷர் தீட்டுப்படுத்திவிடக்கூடாது. தீட்டுப்பட்டவர்கள் கர்த்தருடைய சந்நிதிக்கு தூரமாய் விலகியிருக்கவேண்டும். அவர்கள் மிகுந்த நடுக்கத்தோடும் பயத்தோடும் கர்த்தரை ஆராதிக்கவேண்டும். தீட்டுள்ளவர்களுக்கு கர்த்தருடைய சந்நிதியில் பிரவேசிப்பதற்கு அனுமதியில்லை.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரமாணத்திற்கு அடிமைப்பட்டவர்களல்ல. அதன் நுகம் நம்மை விட்டு நீக்கப்பட்டிருக்கிறது. பாவம் மாத்திரமே நம்மை தீட்டுப்படுத்துகிறது. பாவத்தை தவிர வேறு எதுவும் நம்மை அசுத்தப்படுத்துவதில்லை. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய கிருபாசனத்தண்டையில் தைரியமாய்க் கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

தற்காலத்து விசுவாசிகளாகிய நாம், சபையிலே கர்த்தருடைய பந்தியில் விசுவாசத்தோடும், பயபக்தியோடும் பங்குபெறுகிறோம். பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரமாணத்தின்படி, சமாதானபலியை புசிக்க முடியாதவர்கள்கூட, புதிய ஏற்பாட்டுக்காலத்திலே, கர்த்தருடைய பந்தியிலே பங்குபெறுகிறார்கள். பரிசுத்தமே நமக்கு பெலன்.

நம்முடைய இருதயம் விசுவாசத்தினால் சுத்திகரிக்கப்படவேண்டும். இருதயத்தில் சுத்தமில்லாமல் நம்மால் தேவனை தரிசிக்க முடியாது. மெய்யான பரிசுத்தமே நம்முடைய சந்தோஷத்திற்கு ஆதாரம். பழைய ஏற்பாட்டுக்காலத்து ஜனங்கள் பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் தங்களை சுத்தம்பண்ணினார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைக்கவேண்டும். கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்தம்பண்ணும்.

கர்த்தருடைய வாசஸ்தலம் இஸ்ரவேல் புத்திரர் தங்கியிருக்கிற பாளயத்திற்கு நடுவே இருக்கிறது. அவர்கள் தம்முடைய வாசஸ்தலத்தை தீட்டுப்படுத்தக்கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார். "இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நடுவே இருக்கிற என்னுடைய வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி, தங்கள் தீட்டுகளால் சாகாதபடிக்கு, இப்படி நீங்கள் அவர்கள் தீட்டுகளுக்கு அவர்களை விலக்கிவைக்கக் கடவீர்கள்" *(லேவி 15:31)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சரீர ஆரோக்கியம் சம்பந்தமான பிரமாணம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் கடினமாகக் கடைபிடிக்கப்பட்டு வந்தது. ஒருவருக்கு வந்த வியாதி அடுத்தவருக்கு வர வாய்ப்பிருப்பதினால், தீட்டுப்பட்டிருக்கிறவர்கள் மற்ற ஜனத்தாரிடமிருந்து விலக்கி வைக்கப்பட்டார்கள். தொற்றுநோய் உள்ளவர்கள் அவர்களுக்குரிய தனிமைப்படுத்தப்பட்ட ஸ்தலங்களில் ஜீவித்தார்கள்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "பிரமியமுள்ளவனுக்கும், இந்திரியக் கழிவினாலே தீட்டானவனுக்கும், சூதக பலவீனமுள்ளவளுக்கும், பிரமியமுள்ள ஸ்திரீ புருஷருக்கும், தீட்டாயிருக்கிறவளோடே படுத்துக் கொண்டவனுக்கும் ஏற்ற பிரமாணம் இதுவே"*(லேவி 15:32,33)* என்று சொல்லுகிறார்.

லேவி 15-ஆவது அதிகாரத்தில் கர்த்தர் ஐந்து பிரமாணங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். அவையாவன :

1. ஒருவனுக்குப் பிரமியம் உண்டாதல் *(லேவி 15:2-15,32-33)*

2. ஒருவனிலிருந்து இந்திரியம் கழிதல் *(லேவி 15:16-18,32-33)*

3. பாலுறவு *(லேவி 15:18)*

4. சூதகஸ்திரீயின் உதிர ஊறல் *(லேவி 15:19-33)*

5. ஒருவன் சூதகஸ்திரீயோடே படுத்துக் கொள்ளுதல் *(லேவி 15:24,32-33)*

16 அதிகாரம்

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பாவநிவாரண நாளை நியமனம் பண்ணுகிறார். அவர்கள் ஒவ்வொரு வருஷமும் தங்களுக்காக கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவாரண பலியை செலுத்தவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சடங்காச்சார பிரமாணங்களை சொல்லுகிறார். அந்தப் பிரமாணங்களில், பாவநிவாரண பலியைப்பற்றிய பிரமாணமானது, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷப்பிரமாணத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

"இரண்டாங்கூடாரத்திலே பிரதான ஆசாரியன்மாத்திரம் வருஷத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்" (எபி 9:7).

இஸ்ரவேல் தேசத்தார் எல்லோரும் கர்த்தருடைய சந்நிதியில் ஒவ்வொரு வருஷமும் கூடிவந்து, தங்களுடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக, பாவநிவாரண பலியை செலுத்தவேண்டும். பிரதான ஆசாரியன் இஸ்ரவேல் ஜனத்தார் அனைவருக்காக, கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவாரண பலியை செலுத்தவேண்டும்.

பாவநிவாரண நாளின்போது, பிரதான ஆசாரியன் பலிசெலுத்தாமல் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசிக்கக்கூடாது (லேவி 16:1,2). பிரதானஆசாரியன் பாவநிவாரண பலியையும், சர்வாங்க தகனபலியையும் செலுத்திய பின்பு, பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கவேண்டும் (லேவி 16:3).

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்போது, பரிசுத்தமான சணல் நூல் சட்டையை தரித்துக்கொள்ளவேண்டும் (லேவி 16:4). ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் முன்பாக ஒரு காளையை பாவநிவாரண பலியாகவும், ஒரு ஆட்டுக்கடாவை சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தவேண்டும்.

ஆரோன் தனக்காகவும், தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு பாவநிவாரண பலியின் காளையை செலுத்தவேண்டும். மேலும் ஆரோன் இரண்டு வெள்ளாட்டுக்கடாவில் ஒரு வெள்ளாட்டுக்கடாவை பாவநிவாரணபலியாக சேரப்பண்ணவேண்டும் (லேவி 16:6-11). ஆரோன் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் முன்பாக, தன்னுடைய பாவநிவாரணத்திற்காக செலுத்தப்பட்ட காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து செல்லவேண்டும் (லேவி 16:12-14).

இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரின் பாவநிவாரண பலியாக இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும், அவர்களுடைய சர்வாங்க தகனபலியாக ஒரு ஆட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (லேவி 16:5,7-9). வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தை கிருபாசனத்தின்மேலும், அதற்கு முன்பாகவும் தெளிக்கவேண்டும் (லேவி 16:15-17). அதன் பின்பு காளையின் இரத்தத்திலும், வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து பலிபீடத்து கொம்புகளின்மேல் சுற்றிலும் பூசவேண்டும் (லேவி 16:18,19).

இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களில் ஒரு கடா போக்காடாக விடப்படுகிறது (லேவி 16:10). இஸ்ரவேல் புத்திரருடைய எல்லா பாவங்களையும், சகல மீறுதல்களையும், போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி அதை வனாந்தரத்திற்கு அனுப்பிவிடவேண்டும் (லேவி 16:20-22). போக்காட்டை வனாந்தரத்தில் கொண்டு போய் விட்டவன் சடங்காச்சார பிரகாரமாக அசுத்தமானவன் (லேவி 16:26).

ஆரோன் தன் சர்வாங்க தகனபலியையும், ஜனங்களின் சர்வாங்க தகனபலியையும் செலுத்தவேண்டும். அவன் பாவநிவாரண பலியின் கொழுப்பை பலிபீடத்தின்மேல் தகனிக்கவேண்டும். பாவநிவாரண பலியாகிய காளையையும், வெள்ளாட்டுக்கடாவையும் பாளயத்திற்கு புறம்பே அக்கினியிலே சுட்டெரிக்கவேண்டும் (லேவி 16:23-25,27,28).

பாவநிவாரண நாளின்போது இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்கள் சுத்திகரிக்கப்படும்படி, அவர்களுக்காக பாவநிவிர்த்தி செய்யப்படுகிறது. அந்த நாள் அவர்களுக்கு விசேஷித்த ஓய்வுநாளாயிருக்க வேண்டும். இது நித்திய கட்டளை என்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 16:29-34).

பரிசுத்த ஸ்தலத்திக்குள் பிரவேசிக்க வேண்டிய விதம் லேவி 16:1-4

லேவி 16:1. ஆரோனின் இரண்டு குமாரர் கர்த்தருடைய சந்நிதியிலே சேர்ந்து மரித்துப் போனபின்பு, கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 16:2. கிருபாசனத்தின்மேல் ஒரு மேகத்தில் நான் காணப்படுவேன்; ஆதலால் உன் சகோதரனாகிய ஆரோன் சாகாதபடி, பரிசுத்த ஸ்தலத்திலே திரைக்கு உட்புறத்திலிருக்கிற பெட்டியின்மேலுள்ள கிருபாசன மூடிக்கு முன்பாகச் சகல வேளையிலும் வரவேண்டாம் என்று அவனுக்குச் சொல்.

லேவி 16:3. ஆரோன் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கவேண்டிய விதமாவது: அவன் ஒரு காளையைப் பாவநிவாரணபலியாகவும், ஒரு ஆட்டுக்கடாவைச் சர்வாங்க தகனபலியாகவும் செலுத்திப் பிரவேசிக்கவேண்டும்.

லேவி 16:4. அவன் பரிசுத்தமான சணல்நூல் சட்டையைத் தரித்து, தன் அரைக்குச் சணல்நூல் ஜல்லடத்தைப் போட்டு, சணல்நூல் இடைக்கச்சையைக் கட்டி, சணல்நூல் பாகையைத் தரித்துக் கொண்டிருக்க வேண்டும்; அவைகள் பரிசுத்த வஸ்திரங்கள்; அவன் ஜலத்திலே ஸ்நானம் பண்ணி, அவைகளைத் தரித்துக்கொண்டு,

கர்த்தர் பாவநிவாரண நாளின் பிரமாணத்தை மோசேக்கு சொல்லுகிறார். அவர் இந்தப் பிரமாணத்தை சொல்லும் காலம் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆரோனின் இரண்டு குமாரர் கர்த்தருடைய சந்நிதியிலே சேர்ந்து மரித்துப் போனபின்பு, கர்த்தர் மோசேயை நோக்கி, பாவநிவாரண நாளின் பிரமாணத்தை சொல்லுகிறார் (லேவி 16:1).

ஆரோனின் இரண்டு குமாரரும் செத்துப்போன சம்பவம் லேவி 10:1,2 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

"பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்" (லேவி 10:1,2).

தன்னுடைய இரண்டு குமாரரின் பாவங்களும், மீறுதல்களும், தன்னுடைய குடும்பத்தை பாதிக்குமோ என்னும் பயம் ஆரோனுடைய மனதிலே ஏற்பட்டிருக்கிறது. கர்த்தர் ஆரோனுடைய பயத்தை நீக்கிப்போட விரும்புகிறார். தன்னுடைய குடும்பத்திற்கு எவ்வாறு பாவநிவாரணம் பண்ணுவது என்று கர்த்தர் ஆரோனுக்கு, மோசேயின் மூலமாக தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார்.

நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் செத்துப்போன சம்பவம் ஆசாரியர் எல்லோருடைய மனதிலும் பயத்தை உண்டுபண்ணிற்று. கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசிக்கிறவர்கள் மிகுந்த பயத்தோடும், பக்தியோடும் பிரவேசிக்கவேண்டும் என்று எச்சரிக்கப்படுகிறார்கள்.

பிரதான ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க வேண்டிய விதத்தைப்பற்றி கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகாபரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையே ஒரு திரைச்சீலை தொங்கவிடப்பட்டிருக்கிறது. திரைசீலைக்குள்ளே மகாபரிசுத்த ஸ்தலமுள்ளது. அங்கே கர்த்தருடைய உடன்படிக்கைபெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இது அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளம்.

கர்த்தருடைய மகிமை கேரூபின்களுக்கு நடுவில் வாசம்பண்ணுகிறது. அவருடைய ஷேக்கைனா மகிமை மகாபரிசுத்த ஸ்தலத்திலே, கேரூபின்களுக்கு நடுவே தங்கியிருக்கிறது.

மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே, பிரதான ஆசாரியனை தவிர வேறு யாரும் பிரவேசிக்கக்கூடாது. பிரதான ஆசாரியனும் வருஷத்திற்கு ஒரு தரம் மாத்திரமே மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கலாம். இஸ்ரவேல் ஜனத்தார் பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரமாணத்திற்குட்பட்டவர்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குட்பட்டவர்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ கர்த்தருடைய கிருபாசனத்தண்டையில் தைரியமாய்க் கிட்டிச்சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

"ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்" *(எபி 10:19-22).*

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், பிரதான ஆசாரியனாகிய ஆரோன் மிகுந்த நடுக்கத்தோடும், பயத்தோடும், உயிர் பிழைப்போமா என்னும் சந்தேகத்தோடும் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசித்தான். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ, கர்த்தருடைய கிருபாசனத்தண்டையில் தைரியமாய்க் கிட்டிச்சேருகிறோம்.

"ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" *(எபி 4:16).*

ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திலே திரைக்கு உட்புறத்திலிருக்கிற பெட்டியின் மேலுள்ள கிருபாசன மூடிக்கு முன்பாக சகலவேளையிலும் வரக்கூடாது. அவ்வாறு வந்தால் அவன் செத்துப்போவான் *(லேவி 16:2).* பரிசுத்த ஸ்தலம் மனுஷருடைய கைகளினால் செய்யப்பட்டது. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ, மனுஷருடைய கைகளால் செய்யப்படாத பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே எப்போதும் கிட்டிச்சேருகிற சிலாக்கியம் பெற்றிருக்கிறோம்.

கர்த்தர் மோசேயினிடத்தில் பேசும்போது, ஆரோனை "உன் சகோதரன்" என்று சொல்லுகிறார். வேதாகமத்தில் பத்து வசனங்களில் ஆரோன் மோசேயின் சகோதரர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறார். (லேவி 16:2; யாத் 4:14; யாத் 7:1-2; யாத் 28:1,2,4,41; எண் 20:8; எண் 27:13; உபா 32:50).

இந்த வாக்கியத்தில் பரிசுத்த ஸ்தலம் என்பது மகா பரிசுத்த ஸ்தலத்தைக் குறிக்கும். (யாத் 26:33-34). பொதுவாக பரிசுத்த ஸ்தலம் என்பது ஆசரிப்புக் கூடாரத்தின் முதலாவது பகுதியையே குறிக்கும். ஆனால் இந்த வாக்கியத்தில் இது மகா பரிசுத்த ஸ்தலத்தைக் குறிக்கிறது. (யாத் 28:35,43; யாத் 29:30-31; யாத் 31:11; யாத் 35:19; யாத் 38:24; யாத் 39:1,41)

"திரைக்கு உட்புறம்" என்பது உடன்படிக்கைப் பெட்டி இருக்கும் மகா பரிசுத்த ஸ்தலம். (லேவி 16:2,12,15; யாத் 26:33; எண் 18:7; எபி 6:19).

"ஆரோன் சாகாதபடி" என்று கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை சொல்லுகிறார். பிரதான ஆசாரியனோ அல்லது மற்ற ஆசாரியரோ வருஷத்திற்கு ஒருமுறை மட்டுமே மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல முடியும். மீறினால் அவர்களுக்கு மரணம் நிச்சயம். (லேவி 16:2,34). இந்த அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் செய்திகள் அனைத்தும் எபி 9:7-12,24-26 ஆகிய வசனங்களுக்கு அடையாளமாகும்.

"கிருபாசனத்தின்மேல் ஒரு மேகத்தில் நான் காணப்படுவேன்" என்பது தேவனுடைய வாக்குத்தத்தம். கிருபாசனத்தின் மீது தேவன் காணப்படுவார். அங்கிருந்து இஸ்ரவேல் ஜனத்தாரோடு பேசுவார். (லேவி 16:2; யாத் 25:22). அவருடைய மகிமைப் பிரகாசத்தை மேகம் மூடியிருக்கும்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வரும்போது, நமக்கு மரணமுண்டாவதில்லை. நமக்கு ஜீவன் உண்டாகிறது. நாம் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வராவிட்டால்தான் நமக்கு மரணமுண்டாகும். கர்த்தருடைய சமுகத்தை விட்டு விலகி பிரிந்திருக்கிறவர்கள், ஆவிக்குரிய ஜீவனில்லாமல், ஆவிக்குரிய ரீதியாக மரித்துப்போவார்கள்.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கவேண்டிய விதத்தைப்பற்றி கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். பிரதான ஆசாரியன் மாத்திரமே பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கவேண்டும். அதுவும் வருஷத்திற்கு ஒரு தரம் மாத்திரமே பிரவேசிக்கலாம். பாவநிவாரண நாளின்போது, பிரதான ஆசாரியன் மாத்திரம், பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கலாம். அவன் ஒரு காளையைப் பாவநிவாரணபலியாகவும், ஒரு ஆட்டுக்கடாவைச் சர்வாங்கதகனபலியாகவும் செலுத்திப் பிரவேசிக்கவேண்டும் (லேவி 16:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பிரதான ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்போது, அவன் பிரதான ஆசாரியனுக்குரிய வஸ்திரம் தரித்திருக்கக்கூடாது. சாதாரண ஆசாரியனுக்குரிய பொதுவான வஸ்திரத்தை மாத்திரமே அவன் தரித்துக்கொள்ள வேண்டும். அவனுடைய மார்பில் ஏபோத்தோ, விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட வஸ்திரமோ தரித்திருக்கக்கூடாது.

பிரதான ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசிக்கும்போது, பரிசுத்தமான சணல்நூல் சட்டையைத் தரித்திருக்கவேண்டும். அவன் தன் அரைக்குச் சணல்நூல் ஜல்லடத்தைப் போட்டு, சணல்நூல் இடைக்கச்சையைக் கட்டி, சணல்நூல் பாகையைத் தரித்துக் கொண்டிருக்க வேண்டும்; அவைகள் பரிசுத்த வஸ்திரங்கள்; அவன் ஜலத்திலே ஸ்நானம் பண்ணி, அவைகளைத் தரித்துக்கொள்ளவேண்டும் (லேவி 16:4).

பரிசுத்த வஸ்திரங்களில் நான்கு முக்கிய பாகங்கள் உள்ளன. அவையாவன :

1. சணல்நூல் சட்டை
2. சணல்நூல் ஜல்லடம்
3. சணல்நூல் இடைக்கச்சை
4. சணல்நூல் பாகை

பிரதான ஆசாரியன் இரண்டு வேளைகளில் ஜலத்திலே ஸ்நானம்பண்ணுகிறான். அவையாவன :

1. பரிசுத்த வஸ்திரங்களைத் தரித்துக் கொள்ளும் முன்பாக.
2. பாவநிவாரண பலியைச் செலுத்திய பின்பு (லேவி 16:23-24).

சணல் நூல் வஸ்திரம் சாதாரண ஆசாரியர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பொதுவான வஸ்திரமாகும். பாவநிவாரண நாளின்போது இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக தங்களை தாழ்த்தவேண்டும். அவர்களுடைய பாவநிவாரண நாளானது. அவர்களுக்கு தாழ்மையின் நாளாகயிருக்கிறது. மனத்தாழ்மையிலிருக்கிறவர்களுக்கு அலங்காரமான வஸ்திரம் தேவைப்படாது. சாதாரணமான வஸ்திரமே போதுமானது.

பிரதான ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்போது, சாதாரண சணல் நூல் சட்டையை தரித்திருந்தாலும், அவன் பரிசுத்தமான சணல்நூல் சட்டையை தரித்திருக்கவேண்டும். பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறவன் பரிசுத்தமான வஸ்திரம் தரித்திருக்கவேண்டும்.

பாவநிவாரண நாளைப்பற்றிய பிரமாணம் இந்த அதிகாரத்தில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. உன் சகோதரனாகிய ஆரோன் சாகாதபடி, பரிசுத்த ஸ்தலத்திலே திரைக்கு உட்புறத்திலிருக்கிற பெட்டியின்மேலுள்ள கிருபாசன மூடிக்கு முன்பாகச் சகல வேளையிலும் வரவேண்டாம் என்று அவனுக்குச் சொல் (லேவி 16:2,29).

2. ஆரோன் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கவேண்டிய விதமாவது: அவன் தனக்காகவும், தன் வீட்டாருக்காவும் பாவநிவிர்த்தி செய்யும்படி, தன்னுடைய பாவநிவாரணத்துக்கான ஒரு காளையைப் பாவநிவாரணபலியாகவும், ஒரு ஆட்டுக்கடாவைச் சர்வாங்க தகனபலியாகவும் செலுத்திப் பிரவேசிக்கவேண்டும் (லேவி 16:3,11).

3. ஆரோன் பரிசுத்தமான சணல்நூல் சட்டையைத் தரித்து, தன் அரைக்குச் சணல்நூல் ஜல்லடத்தைப் போட்டு, சணல்நூல் இடைக்கச்சையைக் கட்டி, சணல்நூல் பாகையைத் தரித்துக் கொண்டிருக்க வேண்டும். (லேவி 16:4).

4. ஆரோன் ஜலத்திலே ஸ்நானம் பண்ணி, அவைகளைத் தரித்துக்கொள்ள வேண்டும்.

5. இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்திலே, பாவநிவாரணபலியாக இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும், சர்வாங்க தகனபலியாக ஒரு ஆட்டுக்கடாவையும் வாங்க வேண்டும். (லேவி 16:5).

6. ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு, தன்னுடைய பாவநிவாரண பலியின் காளையைக் கொண்டு வரவேண்டும். (லேவி 16:6,11).

7. ஆரோன் இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களையும் கொண்டுவந்து, ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்த வேண்டும் (லேவி 16:7).

8. இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையுங் குறித்துக் கர்த்தருக்கென்று ஒரு சீட்டும், போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக் கடாவுக்கென்று ஒரு சீட்டும் போட வேண்டும் (லேவி 16:8).

9. கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவைப் பாவநிவாரண பலியாகச் செலுத்தவேண்டும் (லேவி 16:9).

10. போக்காடாக விடப்படச் சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவை, அதைக் கொண்டு பாவநிவிர்த்தி உண்டாக்கவும் அதைப் போக்காடாக வனாந்தரத்திலே போகவிடவும், கர்த்தருடைய சந்நிதியில் உயிரோடே நிறுத்தவேண்டும் (லேவி 16:10).

11. கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின்மேலுள்ள நெருப்புத்தணலினால் தூபகலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்துக்கொள்ள வேண்டும் (லேவி 16:12).

12. பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாகக் கொண்டு வந்து, கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின் மேல் தூபவர்க்கத்தைப் போடக்கடவன் (லேவி 16:12-13).

13. காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தின்மேல் தெளித்து, மேலும் கிருபாசனத்துக்கு முன்பாகவும் ஏழுதரம் தன் விரலினால் தெளிக்க வேண்டும். (லேவி 16:14).

14. ஜனத்தினுடைய பாவநிவாரண பலியான வெள்ளாட்டுக்கடாவை அவன் கொன்று, அதின் இரத்தத்தைத் திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து, காளையின் இரத்தத்தைத் தெளித்தது போல, அதின் இரத்தத்தையும் கிருபாசனத்தின்மேலும் அதற்கு முன்பாகவும் தெளிக்க வேண்டும் (லேவி 16:15).

15. இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும், பரிசுத்த ஸ்தலத்திற்காகப் பிராயச் சித்தஞ்செய்து, அவர்களிடத்தில் அவர்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்புக் கூடாரத்திற்காகவும் அப்படியே செய்யக்கடவன் (லேவி 16:16).

16. பாவநிவிர்த்தி செய்யும்படி அவன் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் இஸ்ரவேல் சபையால் அனைவருக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, வெளியே வருமளவும் ஆசரிப்புக் கூடாரத்தில் ஒருவரும் இருக்கலாகாது (லேவி 16:17).

17. ஆரோன், கர்த்தருடைய சந்நிதியில் இருக்கிற பலிபீடத்தண்டை வந்து, அதற்காக பிராயச்சித்தஞ்செய்து, காளையின் இரத்தத்திலும் வெள்ளாட்டுக் கடாவின் இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, பலி பீடத்துக் கொம்புகளின் மேல் சுற்றிலும் பூச வேண்டும் (லேவி 16:18-20).

18. ஆரோன் இப்படிப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் பிராயச்சித்தஞ்செய்து தீர்ந்தபின்பு, உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவைச் சேரப்பண்ண வேண்டும் (லேவி 16:20).

19. வெள்ளாட்டுக்கடாவின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பி விட வேண்டும். (லேவி 16:21).

20. அந்த வெள்ளாட்டுக்கடா அவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் தன்மேல் சுமந்துகொண்டு, குடியில்லாத தேசத்துக்குப் போவதாக; அவன் அந்த வெள்ளாட்டுக்கடாவை வனாந்தரத்திலே போகவிடவேண்டும். (லேவி 16:22).

21. ஆரோன் ஆசரிப்புக் கூடாரத்துக்குள் வந்து, தான் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும்போது, உடுத்தியிருந்த சணல்நூல் வஸ்திரங்களைக் களைந்து, அங்கே வைத்துவிடவேண்டும் (லேவி 16:23).

22. பரிசுத்த இடத்திலே ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, தன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, வெளியே வந்து, தன் சர்வாங்க தகனபலியையும் ஜனங்களின் சர்வாங்க தகனபலியையும் இட்டு, தனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்யவேண்டும் (லேவி 16:3,5,24).

23. பாவநிவாரணபலியின் கொழுப்பைப் பலிபீடத்தின்மேல் தகனிக்கவேண்டும். (லேவி 16:25).

24. போகவிடப்படும் போக்காடாகிய வெள்ளாட்டுக்கடாவைக் கொண்டு போய் விட்டவன், தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, பின்பு பாளயத்துக்குள் வரவேண்டும். (லேவி 16:26).

25. பாவநிவிர்த்திக்கென்று பரிசுத்த ஸ்தலத்துக்குள் இரத்தம் கொண்டுவரப் பட்ட பாவநிவாரண பலியாகிய காளையையும், பாவ நிவாரணபலியாகிய வெள்ளாட்டுக்கடாவையும், பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய், அவைகளின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் அக்கினியிலே சுட்டெரிக்க வேண்டும். (லேவி 16:27).

26. அவைகளைச் சுட்டெரித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, பின்பு பாளயத்துக்குள் வரவேண்டும். (லேவி 16:28).

27. ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே, சுதேசியானாலும் உங்களுக்குள் தங்கும் பரதேசியானாலும், தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துவதுமன்றி, ஒரு வேலையும் செய்யாமல் இருக்கவேண்டும் (லேவி 16:29-30).

28. ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே, சுதேசியானாலும் உங்களுக்குள் தங்கும் பரதேசியானாலும், தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துவது மன்றி, ஒரு வேலையும் செய்யாமல் இருக்கவேண்டும்; இது உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது. (லேவி 16:29).

29. உங்களுக்கு அது விசேஷித்த ஓய்வு நாள்; அதிலே உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தக்கடவீர்கள் (லேவி 16:31).

30. உங்களுக்கு அது விசேஷித்த ஓய்வு நாள்; இது நித்திய கட்டளை.

31. அபிஷேகம் பெற்றவனும், தன் தகப்பன் பட்டத்திற்கு வந்து ஆசாரிய ஊழியஞ்செய்யப் பிரதிஷ்டைபண்ணப் பட்டவனுமாகிய ஆசாரியனே பாவ நிவிர்த்தி செய்யக்கடவன். அவன் பரிசுத்த வஸ்திரங்களாகிய சணல்நூல் வஸ்திரங்களை உடுத்திக் கொள்ள வேண்டும் (லேவி 16:32).

32. பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் பிராயச் சித்தஞ்செய்து, ஆசாரியருக்காகவும் சபையின் சகல ஜனங்களுக்காகவும் பாவ நிவிர்த்தி செய்யக்கடவன் (லேவி 16:33).

33. வருஷத்தில் ஒருமுறை இஸ்ரவேல் புத்திரருக்காக, அவர்களுடைய சகல பாவங்களுக்கும் பாவநிவிர்த்தி செய்வது, உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது (லேவி 16:34).

ஆரோனுக்காக பாவநிவாரண பலி லேவி 16:5-14

லேவி 16:5. இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்திலே, பாவநிவாரணபலியாக இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும், சர்வாங்க தகனபலியாக ஒரு ஆட்டுக்கடாவையும் வாங்கக்கடவன்.

லேவி 16:6. பின்பு ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு, தன்னுடைய பாவநிவாரண பலியின் காளையைச் சேரப்பண்ணி,

லேவி 16:7. அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் கொண்டுவந்து, ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி,

லேவி 16:8. அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையுங்குறித்துக் கர்த்தருக்கென்று ஒரு சீட்டும், போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவுக்கென்று ஒரு சீட்டும் போட்டு,

லேவி 16:9. கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவைப் பாவநிவாரணபலியாகச் சேரப்பண்ணி,

லேவி 16:10. போக்காடாக விடப்படச் சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவை, அதைக் கொண்டு பாவநிவிர்த்தி உண்டாக்கவும் அதைப் போக்காடாக வனாந்தரத்திலே போகவிடவும், கர்த்தருடைய சந்நிதியில் உயிரோடே நிறுத்தி;

லேவி 16:11. பின்பு ஆரோன் தனக்காகவும், தன் வீட்டாருக்காவும் பாவநிவிர்த்தி செய்யும்படி, தன்னுடைய பாவநிவாரணத்துக்கான காளையைக் கொண்டு வந்து, அதைக் கொன்று,

லேவி 16:12. கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலி பீடத்தின்மேலுள்ள நெருப்புத்தணலினால் தூபகலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாகக் கொண்டு வந்து,

லேவி 16:13. தான் சாகாதபடிக்குத் தூபமேகமானது சாட்சிப் பெட்டியின்மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடத்தக்கதாக, கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின் மேல் தூபவர்க்கத்தைப் போடக்கடவன்.

லேவி 16:14. பின்பு காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தின்மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்துக் கிருபாசனத்துக்கு முன்பாக ஏழுதரம் தன் விரலினால் தெளிக்கக் கடவன்.

பாவநிவாரண நாளுக்கு, ஏழுநாள் முன்பதாகவே, பிரதான ஆசாரியன் தேவாலயத்தில் அவனுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் அறையிலே வந்து தங்கியிருப்பான் என்று யூதருடைய சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். அவன் பாவநிவாரண நாளுக்காக தன்னை ஆயத்தம்பண்ணுகிறான். இந்த ஏழு நாட்களிலும் பிரதான ஆசாரியன், சாதாரண ஆசாரியர்கள் செய்யவேண்டிய எல்லா வேலைகளையும் செய்வான்.

பிரதான ஆசாரியன் அதிகாலை வேளையிலே தன்னைக் கழுவி சுத்தம்பண்ணவேண்டும். ஆசாரியனுக்குரிய வஸ்திரத்தை அவன் தரித்துக்கொள்ள வேண்டும். அதன்பின்பு அவன் மறுபடியுமாக தன் கைகளையும் கால்களையும் கழுவி சுத்தம்பண்ணவேண்டும். கர்த்தருடைய சந்நிதியில் காலைவேளையிலே செலுத்தவேண்டிய பலியையும் பிரதான ஆசாரியனே செலுத்தவேண்டும்.

பிரதான ஆசாரியன் அதிகாலை வேளையில் கர்த்தருடைய சந்நிதியில் பலிசெலுத்திய பின்பு, பலிபீடத்தின் மேலுள்ள நெருப்பு தண்டினால் தூபகலசத்தை நிரப்பவேண்டும். அவன் கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின்மேல் தூபவர்க்கத்தைப் போடவேண்டும். ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள விளக்குகள் அணைந்துபோகாதபடி, அவற்றிலே எண்ணெய் ஊற்றி, திரிகளை எரிய வைக்கவேண்டும். அன்றாடம் செலுத்த வேண்டிய பலிகளை தவிர, நியமிக்கப்பட்ட விசேஷித்த பலிகளையும் பிரதான ஆசாரியனே செலுத்தவேண்டும்.

பிரதான ஆசாரியன் பாவநிவாரண நாளின்போது, பிரதான ஆசாரியனுக்குரிய வஸ்திரத்தை தரித்துக்கொள்ளாமல், சாதாரண ஆசாரியனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற சணல்நூல் சட்டையை தரித்துக்கொள்ளவேண்டும். அவன் பிரதான ஆசாரியனின் விசேஷித்த வஸ்திரத்தை கழற்றிப்போட்டுவிட்டு, தன்னை தண்ணீரிலே கழுவி சுத்தம்பண்ணிவிட்டு, பரிசுத்தமான சணல்நூல் சட்டையை தரித்துக்கொள்ளவேண்டும்.

பின்பு பிரதான ஆசாரியனாகிய ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு, தன்னுடைய பாவநிவாரண பலியின் காளையைச் சேரப்பண்ணவேண்டும் (லேவி 16:6).

ஆரோன் இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்திலே, பாவநிவாரணபலியாக இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும், சர்வாங்க தகனபலியாக ஒரு ஆட்டுக்கடாவையும் வாங்கவேண்டும் (லேவி 16:5).

அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையுங்குறித்துக் கர்த்தருக்கென்று ஒரு சீட்டும், போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவுக்கென்று ஒரு சீட்டும் போடவேண்டும். கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவைப் பாவநிவாரணபலியாகச் சேரப்பண்ணவேண்டும் (லேவி 16:8,9).

இரண்டு வெள்ளாட்டுக்குட்டிகளில், ஒரு வெள்ளாட்டுக்குட்டி, இஸ்ரவேல் புத்திரருக்காக பாவநிவாரண பலியாக செலுத்தப்படவேண்டும். இரண்டு வெள்ளாடுகளில் ஒன்று கொல்லப்பட வேண்டும். இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களினிமித்தமாக, கர்த்தருடைய நீதி வெளிப்படுகிறது என்பதற்கு அடையாளமாக, இரண்டு வெள்ளாடுகளில் ஒரு வெள்ளாடு கொல்லப்படுகிறது.

மற்றொரு வெள்ளாடு போக்காடாக வெளியே விடப்படுகிறது. தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அவர்கள் தங்களுக்கு வரவேண்டிய தண்டனைக்கு தப்பித்து ஜீவனோடிருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக, போக்காடு வனாந்தரத்திலே உயிரோடு விடப்படுகிறது.

ஆரோன் இஸ்ரவேல் புத்திராகிய சபையாரிடத்தில் பாவநிவாரண பலியாக இரண்டு வெள்ளாடுகளையும் வாங்கவேண்டும். அந்த இரண்டு வெள்ளாடுகளும் ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தப்படவேண்டும்.

அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையுங்குறித்துக் கர்த்தருக்கென்று ஒரு சீட்டும், போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவுக்கென்று ஒரு சீட்டும் போடப்படவேண்டும் (லேவி 16:8).

போக்காடாக விடப்படச் சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவை, அதைக் கொண்டு பாவநிவிர்த்தி உண்டாக்கவும் அதைப் போக்காடாக வனாந்தரத்திலே போகவிடவும், கர்த்தருடைய சந்நிதியில் உயிரோடே நிறுத்தவேண்டும் (லேவி 16:10).

லேவி 16-ஆவது அதிகாரத்தில் "இரண்டு" என்னும் வார்த்தை ஒரு சில விசேஷமான சம்பவங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த சம்பவங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஆரோன், ஒரு காளையைப் பாவநிவாரண பலியாகவும், ஒரு ஆட்டுக்கடாவைச் சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தவேண்டும் (லேவி 16:3).

2. பலிசெலுத்த ஆயத்தம் பண்ண வேண்டிய காரியங்கள் ஜலத்திலே ஸ்நானம் பண்ணி, பரிசுத்தமான வஸ்திரங்களை தரித்துக் கொள்ள வேண்டும் (லேவி 16:4)

3. இரண்டு வகையான பலிகள் - பாவநிவாரணபலி, சர்வாங்க தகனபலி (லேவி 16:3,5,11).

4. இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்திலே, பாவநிவாரணபலியாக இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களை வாங்க வேண்டும். (லேவி 16:5)

5. இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்திலே, பாவநிவாரணபலியாக வெள்ளாட்டுக் கடாக்களையும், சர்வாங்க தகனபலியாக ஆட்டுக்கடாவும் வாங்க வேண்டும். (லேவி 16:5)

6. ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தி செய்ய வேண்டும். (லேவி 16:6)

7. பாவநிவிர்த்திச் செய்வதற்காக இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களைக் கொண்டுவர வேண்டும் (லேவி 16:7-10).

8. பிரதான ஆசாரியன் ஜலத்தில் ஸ்நானம்பண்ணுதல். (லேவி 16:4,23-24).

9. வெள்ளாட்டுக்கடாக்களின் இரண்டு விதமான முடிவுகள். (லேவி 16:9-10,15)

10. தூபகலசத்தில் போடப்படும் தூபவர்க்கங்கள் (லேவி 16:12-13).

11. ஆரோனுடைய காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கிருபாசனத்தின் மேலும், கிருபாசனத்துக்கு முன்பாகவும் தெளிக்கவேண்டும். (லேவி 16:14).

12. ஜனத்தினுடைய பாவநிவாரண பலியான வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தைக் கிருபாசனத்தின்மேலும் அதற்கு முன்பாகவும் தெளிக்கவேண்டும் (லேவி 16:15).

13. மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் சம்பவங்கள். (லேவி 16:14-15)

14. இரத்தம் தெளிக்கப்படுவதன் நோக்கங்கள் - இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும் காளையின் இரத்தத்தைத் தெளிக்க வேண்டும் (லேவி 16:15-16).

15. கர்த்தருடைய சந்நிதியில் இரத்தம் பூசப்படும் இடங்கள். (லேவி 16:18-19)

16. உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைக்க வேண்டும் (லேவி 16:21)

17. கர்த்தருக்கு முன்பாக சகல அக்கிரமங்களையும், சகல மீறுதல்களையும் அறிக்கையிடவேண்டும் (லேவி 16:21)

18. இரண்டு முக்கியமான செய்கைகள் - அக்கிரமங்களையும் பாவங்களினாலும் உண்டான மீறுதல்களையும் வெள்ளாட்டுக் கடாவினுடைய தலையின் மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பி விடவேண்டும். (லேவி 16:21-22)

19. பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களை உடுத்தும் வேளைகள். (லேவி 16:4, 23-24)

20. பலிசெலுத்தும் சமயங்கள். (லேவி 16:6,15,24)

21. பாவநிவாரண பலியைச் சுட்டெரிக்கும் இடங்கள். (லேவி 16:25, 27)

22. இரண்டு உதவியாளர்கள் - போக்காட்டைக் கொண்டுபோய் விடுகிறவன். (லேவி 16:26) தகனபலியைச் சுட்டெரிக்கிறவன். (லேவி 16:28)

23. இரண்டு உதவியாளரின் சுத்திகரிப்புக்கள் - போக்காடாகிய வெள்ளாட்டுக்கடாவைக் கொண்டு போய் விட்டவனும் பாவ நிவாரண பலியாகிய வெள்ளாட்டுத் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் அக்கினியிலே சுட்டெரித்தவனும் ஜலத்திலே ஸ்நானம் பண்ணவேண்டும். *(லேவி 16:26,28)*

24. சுதேசியானாலும் உங்களுக்குள் தங்கும் பரதேசியானாலும் செய்ய வேண்டிய இரண்டு காரியங்கள். தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துவதுமன்றி, ஒரு வேலையும் செய்யாமல் இருக்கவேண்டும் *(லேவி 16:29,31)*.

இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் குறித்து சீட்டுப்போடப்படுகிறது. ஊரீம், தும்மீம் ஆகியவற்றால் சீட்டுப்போடப்படும். இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களுக்கு நடுவில் ஆசாரியன் நின்றுகொண்டு, சீட்டுப்போட்டு எந்த வெள்ளாட்டுக்கடாவைப் பலிசெலுத்த வேண்டும் என்றும், எந்த வெள்ளாட்டுக்கடாவைப் போக்காடாக விட்டுவிடவேண்டுமென்றும் முடிவு பண்ணுவான்.

யூதருடைய பாரம்பரியத்தின் பிரகாரம் இவ்விரண்டு வெள்ளாட்டுக்கடாக்களும் ஒரே நிறம், ஒரே அளவு, ஒரே மதிப்புடையவையாக இருக்கும். பிரதான ஆசாரியன் இவ்விரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் கர்த்தருடைய சமுகத்தில் அர்ப்பணித்து, பின்பு சீட்டுப் போடுகிறான். அதன் அடிப்படையில் எந்த ஆட்டைப் பலியிட வேண்டுமென்றும், எந்த ஆட்டைப் போக்காடாக விட்டுவிட வேண்டுமென்றும் தீர்மானம் பண்ணுகிறான். *(லேவி 16:8-10,15-22)*.

"போக்காடு" என்பதற்கான எபிரெய வார்த்தை "ஆஜஜேல்" என்பதாகும். இதில் இரண்டு எபிரெய வார்த்தைகள் உள்ளன. அவையாவன: 1. "ஏஜ்" ஆடு 2. ஆஜல் போகவிடுதல் *(லேவி 16:8,10,26)* என்பதாகும்.

ஒரு சிலர் போக்காடு பற்றி தவறான உபதேசம் பண்ணுகிறார்கள். அதுபற்றி சொல்லப்படும் ஒரு சில தவறான உபதேசங்களின் விவரம் வருமாறு :

1. ஆஜஜேல் என்பது பிசாசைக் குறிக்கும்.

2. இது வனாந்தரத்திலுள்ள ஒரு பிசாசின் பெயர். இந்த ஆடு ஆஜஜேல் என்னும் பிசாசிற்குப் பலியிடப்படுகிறது.

3. தேவன் மனுஷருடைய பாவங்களைச் சாத்தான்மீது சுமத்துகிறார். அவன்மீது எல்லாப் பாவங்களும் சுமத்தப்படுவதால் பாவங்களுக்குத் தண்டனையாக அவன் கொல்லப்படுவான்.

4. ஆஜஜேல் என்பது யெகோவாவிற்கு விரோதியான ஒரு நபர். இந்த ஆடு அவருக்காக அனுப்பப்படுகிறது.

5. போக்காடு ஆஜஜேலுக்கு அனுப்பப் படுகிறது. ஆகையினால் இந்த ஆட்டின் பெயர் போக்காடு என்று பொருள்படும் ஆஜஜேல் அல்ல.

6. ஆஜஜேல் எல்லாத் தீமையையும் குறிக்கும்.

7. ஆஜஜேல் எல்லாப் பயங்கரங்களுக்கும் அடையாளம்.

8. பாவத்திற்கு அதிபதியானவனைக் கர்த்தர் அங்கிகரித்து அவனுக்கு ஒரு ஆட்டைப் பலியாக அனுப்புகிறார். இதனால் அவனுடைய வேண்டுகோள் நிறைவேறுகிறது.

9. ஆடு போக்காடாக விட்டுவிடப்படுவது மார்க்கத்திலுள்ள மாயையான காரியங்களுக்கு அடையாளம்.

10. ஆஜஜேல் என்பது வனாந்தரத்திலுள்ள ஒரு இடம். போக்காடு இந்த இடத்திற்கு அழைத்து வரப்பட்டு, அங்கு உயிரோடு விட்டுவிடப்படுகிறது.

பாவத்திற்கு ஒரே பாவநிவாரணம் இயேசு கிறிஸ்துவின் மூலமாகச் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு வெள்ளாட்டுக்கடாக்களும் கிறிஸ்துவின் பாவநிவாரணத்திற்கு அடையாளமாகும். பலியிடப்பட்ட ஆடு இயேசுகிறிஸ்துவின் மரணத்திற்கும், உயிரோடு விடப்பட்ட போக்காடு இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும் அடையாளமாகும். இரண்டு குருவிகள் காணிக்கையாகக் கொண்டு வரப்படும்போதும், அங்கு இந்த வியாக்கியானமே கூறப்படுகிறது. (லேவி 14:4-8,50-53). ஒரு குருவி பலியிடப்படுகிறது. மற்றொரு குருவி காட்டுவழியில் உயிரோடு விட்டுவிடப்படுகிறது.

போக்காடு வனாந்தரத்தில் உயிரோடு விட்டுவிடப்படும்பொழுது பாவநிவாரணம் பூரணமாகிறது.

"வெள்ளாட்டுக்கடாவைப் பாவநிவாரணபலியாகச் சேரப்பண்ணி" என்னும் வாக்கியம், ஒரு பாவமும் அறியாத இயேசு கிறிஸ்து நமக்காக பாவமானார் என்பதை இந்த வாக்கியம் அடையாளமாக விளக்குகிறது (2கொரி 5:21).

பாவங்களுக்கு நிவிர்த்தி பண்ணுவதற்காகப் போக்காடு கொல்லப்படவில்லை. போக்காட்டின் மூலமாக பாவநிவாரணம் பூர்த்தியாகிறது. பாவங்கள் எடுத்துப் போடப்படுகிறது. இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின் மூலமாகப் பாவங்கள் அகன்றுபோகிறது என்பதற்கு இந்த வாக்கியம் அடையாளமாகும் (ரோமர் 4:25; 2கொரி 15:1-23; 1பேதுரு 3:21).

இஸ்ரவேல் புத்திரர் இப்பொழுது வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். ஆகையினால் வனாந்தரத்தில் போக்காடு விடப்படுகிறது. இவர்கள் கானான் தேசத்தில் குடியேறிய பின்பு, போக்காடு எருசலேமிற்கு வெளியே குடியில்லாத பகுதியில் உயிரோடு அனுப்பப்படும். கானான் தேசத்தில் ஆஜஜேல் என்னும் பெயரில் எந்த இடமும் இல்லை.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக வெள்ளாடு பாவநிவாரண பலியாக செலுத்தப்படுகிறது. அந்த ஆடுகளின் வாசனை வித்தியாசமாயிருக்கும் என்றும், அவை மனுஷருடைய பாவத்திற்கு அடையாளம் என்றும் யூதமார்க்கத்து ரபீமார்கள் சொல்லுகிறார்கள்.

போக்காடாக விடப்பட சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவை வனாந்தரத்திலே உயிரோடு போகவிட்ட பின்பு, ஆரோன் தனக்காகவும், தன் வீட்டாருக்காவும் பாவநிவிர்த்தி செய்யும்படி, தன்னுடைய பாவநிவாரணத்துக்கான காளையைக் கொண்டு வந்து, அதைக் கொல்லவேண்டும் (லேவி 16:11).

அதன்பின்பு ஆரோன் கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின்மேலுள்ள நெருப்புத்தணலினால் தூபகலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாகக் கொண்டு வந்து, தான் சாகாதபடிக்குத் தூபமேகமானது சாட்சிப் பெட்டியின்மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடத்தக்கதாக, கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின் மேல் தூபவர்க்கத்தைப் போடவேண்டும் (லேவி 16:12,13).

வெண்கல பலிபீடத்தில் பாவநிவாரண பலி செலுத்தப்படும். அந்தப் பலிபீடத்திலுள்ள அக்கினி மட்டுமே அங்கிகரிப்பட்டிருக்கிறது. தூபகரண்டிகளிலும், பொன்பீடத்திலும் தூபவர்க்கங்களை எரிப்பதற்கு இந்த அக்கினி மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். மற்ற அக்கினிகளெல்லாம் அந்நிய அக்கினியாக கருதப்படும். (லேவி 9:24; லேவி 10:1).

"பலிபீடம்" என்னும் வார்த்தை, அக்கினி எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும். வெண்கல பலிபீடத்தை குறிக்கிறது (லேவி 6:9,12-13).

"திரைக்கு உட்புறம்" என்பது மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு உள்ளே இருக்கும் பகுதியாகும் (யாத் 26:33).

வெண்கல பலிபீடத்திலிருந்து அக்கினி எடுக்கப்படுகிறது. (லேவி 16:12). தூபவர்க்கம் ஜெபத்திற்கு அடையாளம். தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக தூபவர்க்கம் மேல்நோக்கி செல்வதுபோல ஜெபமும் பரலோகத்தை நோக்கி செல்கிறது (வெளி 5:8).

தூபமேகமானது சாட்சிப் பெட்டியின்மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடுகிறது. தூபகலசம் கிருபாசனத்தின்மீது வைக்கப் பட்டிருக்கலாம். கிருபாசனம் சாட்சிப் பெட்டிக்கு மூடியாக இருக்கும். பாவநிவாரண பலியின் இரத்தத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஆசாரியன் வெளியே போயிருக்கும் பொழுது, தூபமேகம் சாட்சிப்பெட்டியை மூடியிருக்கும். ஆசாரியன் பாவநிவாரண பலியின் இரத்தத்தைக் கிருபாசனத்தின் கிழக்கு பகுதியில் வைத்து, அதற்கு முன்பாக ஏழுதரம் தெளிப்பார். (லேவி 16:13-14). ஆசாரியர் தனக்காகவும், தன் வீட்டாருக்காகவும் தெளிக்கிறார். (லேவி 16:6,13-14).

ஆரோன் கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின்மேல் தூபவர்க்கத்தைப் போட்ட பின்பே, அவன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கவேண்டும். ஆரோன் நெருப்புத்தண்டுகளை, மகாபரிசுத்த ஸ்தலத்தில் தரையிலே தெளித்து, அதன்மீது சுகந்த தூபவர்க்கத்தை போடுவான் என்று யூதமார்க்கத்து ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். மகாபரிசுத்த ஸ்தலத்தில், கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின்மேல் தூபவர்க்கத்தைப் போட்டவுடன், பரிசுத்த ஸ்தலம் முழுவதும் தூபவர்க்கத்தின் புகையினால் மூடியிருக்கும். தூபமேகமானது சாட்சிப்பெட்டியின்மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடியிருக்கும்.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன், மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசிக்கும்போது, வாசல் வழியாய் பிரவேசியாமல், பக்க வழியாய் பிரவேசிப்பான் என்று யூதமார்க்கத்து வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். தேவனுடைய ஷேக்கைனா மகிமை சாட்சிப்பெட்டியின்மீது தங்கியிருக்கிறது. ஆரோன் கர்த்தருடைய மகிமையை தன் கண்களால் பார்க்காமல், மகாபரிசுத்த ஸ்தலத்தின் பக்கவழியாக பிரவேசிக்கிறான். அவன் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியேறும்போது, சாட்சிப்பெட்டியைப் பார்க்காமல், பின்புறமாக திரும்பி வெளியேறுவான் என்றும் யூதமார்க்கத்து பண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசித்த பின்பு, ஒரு சிறிய ஜெபத்தை ஏறெடுத்து அதன் பின்பு அவன் தன்னை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வெளிப்படுத்திக் காண்பிப்பான் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

அதன் பின்பு ஆரோன் காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தின்மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்துக் கிருபாசனத்துக்கு முன்பாக ஏழுதரம் தன் விரலினால் தெளிப்பான் (லேவி 16:14).

பாவநிவாரணத்திற்கான காளை பலிபீடத்தின்மேல் கொல்லப்படுகிறது. பலிபீடம் பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே இருக்கிறது. ஆரோன் பலிபீடத்திலே சிந்தியிருக்கிற காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, மறுபடியுமாக பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசிப்பான். அப்போது தூபமேகமானது, பரிசுத்த ஸ்தலத்திலுள்ள சாட்சிப்பெட்டியின் மேலிருக்கும் கிருபாசனத்தை மூடியிருக்கும். ஆரோன் ஏற்கெனவே கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின்மேல் தூபவர்க்கத்தைப் போட்டிருக்கிறான்.

ஆரோன் பாவநிவாரணத்திற்கான காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, மறுபடியும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, தன் விரலினால் கிருபாசனத்தின்மேல் தெளிப்பான். கிருபாசனத்தின் மேல்பகுதியில் காளையின் இரத்தத்தை தன் விரலினால் ஒரு தரமும், அதன் பின்பு அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, கிருபாசனத்தின் கீழ்ப்பகுதியில் ஏழுதரமும் தன் விரலினால் தெளிப்பான்.

ஜனத்தினுடைய பாவநிவாரணபலி லேவி 16:15-19

லேவி 16:15. பின்பு ஜனத்தினுடைய பாவநிவாரணபலியான வெள்ளாட்டுக்கடாவை அவன் கொன்று, அதின் இரத்தத்தைத் திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து, காளையின் இரத்தத்தைத் தெளித்தது போல, அதின் இரத்தத்தையும் கிருபாசனத்தின்மேலும் அதற்கு முன்பாகவும் தெளித்து,

லேவி 16:16. இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும், பரிசுத்தஸ்தலத்திற்காகப் பிராயச்சித்தஞ் செய்து, அவர்களிடத்தில் அவர்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்புக் கூடாரத்திற்காகவும் அப்படியே செய்யக்கடவன்.

லேவி 16:17. பாவநிவிர்த்தி செய்யும்படி அவன் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் இஸ்ரவேல் சபையார் அனைவருக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, வெளியே வருமளவும் ஆசரிப்புக் கூடாரத்தில் ஒருவரும் இருக்கலாகாது.

லேவி 16:18. பின்பு அவன் கர்த்தருடைய சந்நிதியில் இருக்கிற பலிபீடத்தண்டை வந்து, அதற்காக பிராயச்சித்தஞ்செய்து, காளையின் இரத்தத்திலும் வெள்ளாட்டுக் கடாவின் இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்துக் கொம்புகளின் மேல் சுற்றிலும் பூசி,

லேவி 16:19. தன் விரலினால் அந்த இரத்தத்தில் எடுத்து, ஏழுதரம் அதின்மேல் தெளித்து, அதை இஸ்ரவேல் புத்திரரின் தீட்டுகள் நீங்கச் சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்தக்கடவன்.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் காளையின் இரத்தத்தை தன் விரலினால் கிருபாசனத்தின்மேல் தெளிக்கவேண்டும். அதன் பின்பு அவன் செய்ய வேண்டிய காரியங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிரதான ஆசாரியன் ஜனத்தினுடைய பாவநிவாரணபலியான வெள்ளாட்டுக்கடாவை கொல்லவேண்டும். அதன் பின்பு அவன் மூன்றாம் முறையாக மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தை திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து, காளையின் இரத்தத்தைத் தெளித்தது போல, அதின் இரத்தத்தையும் கிருபாசனத்தின்மேலும் அதற்கு முன்பாகவும் தெளிக்கவேண்டும் (லேவி 16:15).

ஆசாரியன் தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும் பாவநிவாரணம் செய்த பின்பு, ஜனங்களுக்காகவும் பாவநிவாரணம் பண்ணுகிறான் (லேவி 16:15-17).

பிரதான ஆசாரியன் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தை கிருபாசனத்தின்மேலும், அதற்கு முன்பாகவும் தெளித்து, பரிசுத்த ஸ்தலத்திற்காக பிரயாச்சித்தம் செய்யவேண்டும் (லேவி 16:16). இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும், பரிசுத்த ஸ்தலத்திற்காகப் பிராயச்சித்தஞ் செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப் பிராயச்சித்தம் செய்யப்படுகிறது. அதுபோலவே பிரதான ஆசாரியனுக்கும் அவனுடைய குடும்பத்தாருக்கும் பிராயச்சித்தம் செய்யப்படுகிறது. இவர்களிடத்தில் தீட்டுக்களும், மீறுதல்களும் உள்ளன. இதற்காக இவர்கள் பாவநிவாரண பலியின் இரத்தத்தைச் செலுத்த வேண்டும். மீறுதல்களைப் பொறுத்தளவில் தேவன் ஆசாரியரையும், சாதாரண ஜனங்களையும் ஒன்றுபோலவே பாவிக்கிறார். பாவநிவாரண பலியின் இரத்தம் எல்லா பாவங்களையும் நிவிர்த்தி பண்ணுவதற்குப் போதுமானதாக இருக்கிறது (லேவி 16:6; லேவி 17:11; எபி 5:1-4; எபி 9:22).

மகா பரிசுத்த ஸ்தலத்திற்குப் பிராயச்சித்தம் செய்வதுபோலவே, பொன் பலிபீடத்திற்கும் பரிசுத்த ஸ்தலத்திற்கும் பிராயச்சித்தம் பண்ண வேண்டும். திரைக்கு உள்ளேயிருக்கும் சாட்சிப்பெட்டியில் இரத்தம் தெளிக்கப்பட்டதுபோல பொன்பலிபீடத்தின்மீதும் இரத்தம் தெளிக்கப்படவேண்டும் (லேவி 16:12-14,16).

ஆசரிப்புக்கூடாரம் இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளுக்குள்ளே இருக்கிறது. அவர்களுடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும், ஆசரிப்புக்கூடாரத்திற்காக பிரயாச்சித்தம் செய்வதும் அவசியமாயிருக்கிறது.

பிரதான ஆசாரியன், பரிசுத்த ஸ்தலத்திற்காக பிரயாச்சித்தம் செய்ததுபோல, அவர்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்புக் கூடாரத்திற்காகவும் அப்படியே பிரயாச்சித்தம் செய்யவேண்டும்.

பிரதான ஆசாரியன் ஜனத்தினுடைய பாவநிவாரணபலியான வெள்ளாட்டுக்கடாவை கொன்று, அதின் இரத்தத்தை கிருபாசனத்தின்மேலும், அதற்கு முன்பாகவும் தெளிக்கும்போது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஒப்புரவாகுகிறார். கர்த்தர் அவர்களோடு தொடர்ந்து ஒப்புரவாகவேண்டும்.

இதற்காக பிரதான ஆசாரியனாகிய ஆரோன், மகாபரிசுத்த ஸ்தலத்திற்காக பிரயாச்சித்தம் செய்ததுபோல, ஆசரிப்புக்கூடாரத்தின் வெளிப்பிரகாரத்திற்காகவும் பிரயாச்சித்தம் செய்கிறார். ஏனெனில் ஆசரிப்புக்கூடாரம் இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிறது. அவர்களுடைய இருதயம் சுத்திகரிக்கப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது என்பதை கர்த்தர் இந்தப் பிரமாணத்தின் மூலமாக தெளிவுபடுத்துகிறார்.

அதன் பின்பு பிரதான ஆசாரியனாகிய ஆரோன் கர்த்தருடைய சந்நிதியில் இருக்கிற பலிபீடத்தண்டை வந்து, அதற்காக பிராயச்சித்தஞ்செய்யவேண்டும். காளையின் இரத்தத்திலும் வெள்ளாட்டுக் கடாவின் இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்துக் கொம்புகளின் மேல் சுற்றிலும் பூசவேண்டும். ஆரோன் தன் விரலினால் அந்த இரத்தத்தில் எடுத்து, ஏழுதரம் அதின்மேல் தெளிக்கவேண்டும். அவன் அதை இஸ்ரவேல் புத்திரரின் தீட்டுகள் நீங்கச் சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்தவேண்டும் (லேவி 16:18,19).

மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும், பரிசுத்த ஸ்தலத்திற்கும் பிராயச்சித்தம் செய்த பின்பு, பிரதான ஆசாரியன் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு வெளியே வரவேண்டும். (லேவி 16:12-16) அங்கு வெளிப்பிராகாரத்தில் இருக்கும் வெண்கல பலிபீடத்திற்காகப் பிராயச்சித்தம் பண்ண வேண்டும். (லேவி 16:18-19).

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் பலிபீடத்து கொம்புகளின்மேல் காளையின் இரத்தத்தையும், வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தையும் பூசுகிறான்.

பாவநிவிர்த்தி செய்யும்படி ஆரோன் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் இஸ்ரவேல் சபையார் அனைவருக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, வெளியே வருமளவும் ஆசரிப்புக் கூடாரத்தில் ஒருவரும் இருக்கலாகாது (லேவி 16:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரதான ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யும்போது ஆசரிப்புக் கூடாரத்திற்குள் ஒருவரும் இருக்கக்கூடாது. தேவனுக்கும், மனுஷருக்கும் முன்பாகப் பிரதான ஆசாரியன் மத்தியஸ்தனாகவும் செயல்பட முடியாது. ஏனெனில் பிரதான ஆசாரியனும் தீட்டும் மீறுதல்களும் உள்ளவனாக இருக்கிறான். இவனுக்கே பாவநிவிர்த்தி தேவைப்படுகிறது.

இயேசுகிறிஸ்து ஒருவரே நம்முடைய நித்திய பிரதான ஆசாரியர். கிறிஸ்துவானவர் பிரதான ஆசாரியரின் ஊழியத்தை அவர் பரலோகத்தின் தேவாலயத்தில் நிறைவேற்றி வருகிறார் (எபி 4:14-16; எபி 5:1-14; எபி 6:20; எபி 7:11-17,24-28; எபி 8:1-13; எபி 9:1-28; எபி 10:1-18). மனுஷனுக்கும், தேவனுக்கும் நடுவில் இயேசு கிறிஸ்து மட்டுமே மத்தியஸ்தராக இருக்கிறார் (1தீமோ 2:4-6; எபி 9:24). இயேசு கிறிஸ்து தம்மை ஏற்கெனவே பலியாக ஒப்புக் கொடுத்து விட்டார். ஆகையினால் இனிமேல் யாரும் கிறிஸ்துவை மறுபடியும் பலியாகச் செலுத்த முடியாது (எபி 7:27; எபி 9:26-28; 1பேதுரு 3:18)

போக்காடு
லேவி 16:20-28

லேவி 16:20. அவன் இப்படிப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் பிராயச்சித்தஞ்செய்து தீர்ந்தபின்பு, உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவைச் சேரப்பண்ணி,

லேவி 16:21. அதின் தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தி, அதை அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பிவிடக்கடவன்.

லேவி 16:22. அந்த வெள்ளாட்டுக்கடா அவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் தன்மேல் சுமந்துகொண்டு, குடியில்லாத தேசத்துக்குப் போவதாக; அவன் அந்த வெள்ளாட்டுக்கடாவை வனாந்தரத்திலே போகவிடக்கடவன்.

லேவி 16:23. ஆரோன் ஆசரிப்புக் கூடாரத்துக்குள் வந்து, தான் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும்போது, உடுத்தியிருந்த சணல்நூல் வஸ்திரங்களைக் களைந்து, அங்கே வைத்துவிட்டு,

லேவி 16:24. பரிசுத்த இடத்திலே ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, தன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, வெளியே வந்து, தன் சர்வாங்க தகனபலியையும் ஜனங்களின் சர்வாங்க தகனபலியையும் இட்டு, தனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்து,

லேவி 16:25. பாவநிவாரணபலியின் கொழுப்பைப் பலிபீடத்தின்மேல் தகனிக்கக்கடவன்.

லேவி 16:26. போகவிடப்படும் போக்காடாகிய வெள்ளாட்டுக்கடாவைக் கொண்டு போய் விட்டவன், தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, பின்பு பாளயத்துக்குள் வருவானாக.

லேவி 16:27. பாவநிவிர்த்திக்கென்று பரிசுத்தஸ்தலத்துக்குள் இரத்தம் கொண்டுவரப்பட்ட பாவநிவாரணபலியாகிய காளையையும், பாவநிவாரணபலியாகிய வெள்ளாட்டுக்கடாவையும், பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய், அவைகளின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் அக்கினியிலே சுட்டெரிக்கக்கடவர்கள்.

லேவி 16:28. அவைகளைச் சுட்டெரித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, பின்பு பாளயத்துக்குள் வருவானாக.

பிரதான ஆசாரியன் பாவநிவாரண பலிகளை செலுத்தி அதன் இரத்தத்தை கிருபாசனத்தின்மீது தெளித்து, பரிசுத்த ஸ்தலத்திற்கும், ஆசரிப்புக்கூடாரத்திற்கும், பலிபீடத்திற்கும் பிரயாச்சித்தம் செய்கிறான். அதன் பின்பு அவன் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கை செய்யவேண்டும். அதற்காக உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவை பிரதான ஆசாரியன் தன்னிடத்தில் சேரப்பண்ணுகிறான் (லேவி 16:20).

ஆசரிப்புக்கூடாரத்தில், மூன்று இடங்களில் பிராயச்சித்தம் செய்யப்படுகிறது. அந்த இடங்களின் விவரம் வருமாறு :

1. மகா பரிசுத்த ஸ்தலம் (லேவி 16:12-16,20)
2. பரிசுத்த ஸ்தலம் (லேவி 16:16,20)
3. வெண்கல பலிபீடம் (லேவி 16:18,20)

பிராயச்சித்தம் செய்தபின்பு, பிரதான ஆசாரியன் உயிரோடு இருக்கிற வெள்ளாட்டுக்கடாவைக் கொண்டுவர வேண்டும். அது இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை வனாந்தரத்திற்கு எடுத்துச் செல்வதற்கு அடையாளமாகப் போக்காடாக விட்டுவிடப்படும். இவ்வாறாக மகாபாவநிவாரண நாளின் கிரியைகள் நிறைவு பெறுகின்றன.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் தன் இரண்டு கைகளையும் வைத்து இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களையெல்லாம் அறிக்கை செய்கிறான்.

உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைக்கிறான். ஆரோன் அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்துகிறான் (லேவி 16:21).

பாவநிவாரண சடங்குகளில், பிரதான ஆசாரியன் நான்கு காரியங்களை செய்யவேண்டும். அவையாவன :

1. உயிரோடிருக்கிறவெள்ளாட்டுக்கடாவைக் கொண்டுவரவேண்டும்.

2. அதின் தலையின்மேல் பிரதான ஆசாரியன் தன் இரண்டு கைகளையும் வைக்க வேண்டும். (லேவி 16:21).

3. அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகலஅக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட வேண்டும்.

4. உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவை அதற்கான ஆள்வசமாய் வனாந்தரத்துக்கு அனுப்பிவிடவேண்டும்(லேவி 16:21-22).

பாவநிவாரண சடங்கிற்கு இந்த வசனத்தில் மட்டுமே பிரதான ஆசாரியன் தன் இரண்டு கைகளையும் ஆட்டுக்கடாவினுடைய தலையின்மேல் வைக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது (லேவி 16:21-22).

போக்காடை வனாந்தரத்திற்கு அனுப்பி விடுவதற்கு ஒரு ஆள் விசேஷமாய் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த ஆளுக்கான எபிரெய வார்த்தை "இட்டி" என்பதாகும். இதற்கு குறிப்பிட்ட வேளைக்காகக் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட நபர் என்று பொருள். (1நாளா 7:11; 1நாளா 12:8; யோபு 34:18). ஒரு வருஷத்திற்கு முன்பாகவே இந்த ஆளைத் தெரிந்தெடுத்து விடுவார்கள் என்று யூதருடைய பாரம்பரிய வரலாறு கூறுகிறது.

பலியாக செலுத்தப்படும் மிருகத்தினுடைய தலையின்மீது எப்போதெல்லாம் கைகள் வைக்கப்படுகிறதோ, அப்போதெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களை அறிக்கை பண்ணுவது வழக்கம். இஸ்ரவேல் ஜனத்தார் பாவநிவாரண பலிகளை செலுத்தும்போது, தங்களுடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து, தங்களுடையபாவங்களையும், மீறுதல்களையும், அக்கிரமங்களையும் அறிக்கை செய்வார்கள். தங்களுடைய பாவங்களுக்காக மிகவும் மனம் வருந்துவார்கள்.

பிற்காலத்தில் இஸ்ரவேல் புத்திரரின் மார்க்க ஈடுபாடு குறைந்துபோயிற்று. அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுக்கவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களை அறிக்கை செய்யும்போது கூட, தங்களுடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து பாவஅறிக்கை செய்யாமல், ஏற்கெனவே எழுதப்பட்டிருந்த பாவஅறிக்கையின் பிரமாணத்தை வாசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தங்களுடைய பாவத்தை அறிக்கை பண்ணுவதும் முன்னோர்களின் பாரம்பரிய சடங்காக மாறிவிட்டது.

ஆரோன் பிரதான ஆசாரியனாக இருந்தகாலத்தில், இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய சகல பாவங்களையும், அக்கிரமங்களையும், சகல மீறுதல்களையும், தங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து, மெய்யாகவே அறிக்கை செய்கிறார்கள். ஆரோன் இஸ்ரவேல் ஜனத்தாருடைய சகல பாவங்களையும் அறிக்கை செய்து, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்துகிறான்.

அதன் பின்பு அந்த வெள்ளாட்டுக்கடாவானது, அதற்கான ஆள் வசமாய் வனாந்தரத்திற்கு அனுப்பி விடப்படுகிறது. அந்த வனாந்தரம் குடியில்லாத தேசமாகும். அந்த வெள்ளாட்டுக்கடா அவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் தன்மேல் சுமந்துகொண்டு, குடியில்லாத தேசத்துக்குப் போகிறது (லேவி 16:22). இதன் மூலமாக இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களிலிருந்து முழுவதுமாக மீட்டுக்கொள்ளப்படுகிறார்கள். போக்காடாக விடப்பட்ட வெள்ளாட்டுக்கடா இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமங்களையெல்லாம் தன்மேல் சுமந்து கொண்டு போகிறது.

இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் அடையாளமாக இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழாமல் மரித்தவராகவே இருந்துவிட்டால், அவருடைய பிராயச்சித்தக் கிரியை வீணானதாக இருக்கும். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலமாகப் பாவ நிவாரணம் நிறைவேறிற்று.

"குடியில்லாத தேசம்" என்பது ஜனங்கள் குடியிருக்காத பகுதி. இயேசு கிறிஸ்து தம்முடைய உயிர்த்தெழுதலில் மனுஷருடைய பாவத்தைக் கிழக்குக்கும், மேற்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரத்திற்கு அகற்றிவிட்டார். இனிமேல் அவர் நம்முடைய பாவங்களை நினைவுகூருவதில்லை (சங் 103:12; எபி 10:17).

"வனாந்தரம்" என்பதற்கான எபிரெய வார்த்தை "மித்பார்" என்பதாகும். இதற்கு மேய்ச்சல் நிலம் என்று பொருள். இது காடுபோன்ற வனாந்தரமல்ல. இது ஒரு வயல்வெளியின் நிலம். உயிருள்ள வெள்ளாட்டுக்கடா போக்காடாக மேய்ச்சல் நிலத்திற்குள் விடப்படுகிறது. தனக்கு விருப்பமான இடத்திற்கு அந்தப் போக்காடு இனிமேல் போகலாம்.

பிற்காலத்திலே யூதர்கள், உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவை வனாந்தரத்திற்கு போக்காடாக விடும் வைபவத்தில் ஒரு சில பாரம்பரியமான பழக்கங்களையும் சேர்த்துக்கொண்டார்கள்.

பிற்காலத்து யூதர்கள் போக்கடாக விடப்படும் ஆட்டினுடைய கொம்பில் ஒரு சிவப்பு நூலையும், தேவாலயத்தின் வாசலிலே ஒரு சிவப்பு நூலையும் கட்டுவது வழக்கம். அல்லது, போக்காடாக விடப்பட்ட ஆடு வனாந்தரத்திலே போனபோது எங்கே காணாமல் போயிற்றோ அந்த இடத்திலே ஒரு சிவப்பு நூலையும் கட்டுவது வழக்கம்.

சிவப்பு நிற நூல் வெண்மை நிறத்திற்கு மாறும் என்று பிற்காலத்து யூதர்கள் நம்பினார்கள். இரத்த சிவப்பான அவர்களுடைய பாவம் நிவிர்த்தி பண்ணப்பட்டு, அவர்கள் பஞ்சைப்போல வெண்மையான நிறத்தில் சுத்தமாயிருக்கிறார்கள் என்பதற்கு இது அடையாளம்.

"வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்" (ஏசா 1:18).

யூதருடைய பிற்காலத்து சரித்திரத்திலே ரோமாபுரியார் எருசலேமை அழித்துப்போட்டார்கள். எருசலேம் அழிக்கப்படுவதற்கு, நாற்பது வருஷங்களுக்கு முன்பிருந்து, போக்காடாக விடப்பட்ட ஆட்டுக்கடாவினுடைய கொம்பில் கட்டப்பட்ட இரத்தாம்பர சிவப்பு நூலும், தேவாலயத்தின் வாசலிலே கட்டப்பட்ட இரத்தாம்பர சிவப்பு நூலும் வெண்மையான நிறமாக மாறவில்லை என்று யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது.

யூதர்களுடைய பாவங்களும், மீறுதல்களும், அக்கிரமங்களும் இக்காலத்தில் மிகுதியாயிற்று என்பதும், அவை நிவிர்த்தி பண்ணப்படவில்லை என்பதும் இதன் பொருளாகும். யூதர்களும் கர்த்தருடைய சமுகத்திலே தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்யவில்லை. தங்கள் பாவத்தை மறைக்கிறவர்கள் வாழ்வடையமாட்டார்கள். அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவர்களோ கர்த்தருடைய சமுகத்திலிருந்து இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன், உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவை வனாந்தரத்திலே போகவிடப்பட்ட பின்பு, அவன் ஆசரிப்புக் கூடாரத்துக்குள் வந்து, தான் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும்போது, உடுத்தியிருந்த சணல்நூல் வஸ்திரங்களைக் களைந்து, அங்கே வைத்துவிடவேண்டும் (லேவி 16:23).

ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்தில் ஆசாரியரின் வஸ்திரங்களை வைப்பதற்கும், மாற்று வஸ்திரம் தரிப்பதற்கும் ஒரு தனி அறை இருந்திருக்கலாம்.

பிரதான ஆசாரியன் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசித்தபோது உடுத்தியிருந்த சணல் நூல் வஸ்திரங்களை, அவனோ அல்லது மற்ற ஆசாரியர்களோ ஒருபோதும் உடுத்துவதில்லை என்று யூதருடைய சரித்திரம் சொல்லுகிறது. அவர்கள் ஒவ்வொரு வருஷமும் பாவநிவாரண நாளின்போது, பிரதான ஆசாரியனுக்கு சணல் நூல் வஸ்திரங்களை தைத்து கொடுப்பார்கள் என்றும், அவன் அந்த வஸ்திரங்களை உடுத்தி பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பான் என்றும் யூதருடைய சரித்திரம் சொல்லுகிறது.

பிரதான ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்போது தான் உடுத்தியிருந்த சணல் நூல் வஸ்திரங்களை ஆசரிப்புக்கூடாரத்திற்குள்ளே கொண்டு வந்து வைக்கவேண்டும். அதன் பின்பு அவன் பரிசுத்த இடத்திலே ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, தன் வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளவேண்டும் (லேவி 16:24). பிரதான ஆசாரியன் இப்போது, அவனுக்கென்று நியமிக்கப்பட்டிருக்கிற, பிரதான ஆசாரியனுக்குரிய வஸ்திரத்தை உடுத்திக்கொள்கிறான்.

பிரதான ஆசாரியன் தன்னுடைய வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே வந்து, தன் சர்வாங்க தகனபலியையும் ஜனங்களின் சர்வாங்க தகனபலியையும் இட்டு, தனக்காகவும் ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்யவேண்டும் (லேவி 16:24). நம்முடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படும்போது, நாம் கர்த்தரை கனம்பண்ணி மகிமைப்படுத்த வேண்டும்.

உயிருள்ள வெள்ளாட்டுக்கடா பாளயத்தைவிட்டுப் போக்காடாக அனுப்பப்பட்டபின்பு, பிரதான ஆசாரியன் ஜலத்தில் ஸ்நானம் பண்ணுகிறான். இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களை ஆரோன் தன் இரண்டு கைகளாலும், போக்காட்டின் தலையின்மீது வைத்து விட்டான். (லேவி 16:23-25). ஆரோனுக்கு இதனால் சுத்திகரிப்பு தேவைப்படுகிறது. பாவத்தோடு தொடர்புள்ள எதுவும் அசுத்தமாயிருக்கும். அது சுத்திகரிக்கப்படவேண்டும்.

"பரிசுத்த இடம்" என்பது மகா பரிசுத்த ஸ்தலத்தையோ அல்லது பரிசுத்த ஸ்தலத்தையோ குறிக்காது. பிராகாரத்திலுள்ள ஓரிடத்தை மட்டுமே இந்த வார்த்தை குறிக்கும். இங்கு தண்ணீர் நிரப்பப்பட்டிருக்கும் வெண்கல தொட்டி உள்ளது. இதில் ஆசாரியர் தங்களுடைய கால்களையும், கைகளையும் கழுவிக் கொள்வார்கள். (யாத் 30:18-21).

மகா பாவநிவாரண நாளில் இரண்டு சர்வாங்க தகனபலிகள் பலியிடப்படுகின்றன. இவை தவிர, அன்றாட பலிகளும் பரிசுத்த ஸ்தலத்தில் பலியிடப்படும்.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் தன்னுடைய சர்வாங்க தகனபலியையும், ஜனங்களின் சர்வாங்க தகனபலியையும் செலுத்துகிறான். பிரதான ஆசாரியனுடைய பாவங்களும், இஸ்ரவேல் ஜனங்களுடைய பாவங்களும் நிவிர்த்தி பண்ணப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. பிரதான ஆசாரியன் காளையையும், வெள்ளாட்டுக்கடாவையும் பலியாக செலுத்திய பின்பு, அவைகளை பாளயத்திற்கு புறம்பே கொண்டு போகவேண்டும். அவைகளின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் பாளயத்திற்கு புறம்பே சுட்டெரிக்கவேண்டும்.

நம்முடைய பாவங்களுக்கு உண்மையாய் மனந்திரும்பி, அவற்றை கர்த்தருடைய சமுகத்தில் அறிக்கை செய்யும்போது, நம்முடைய பாவங்கள் நம்மை விட்டு அகற்றப்படுகிறது. கர்த்தர் தமது கிருபையினால் நம்முடைய பாவங்களை முற்றிலுமாய் நிவிர்த்தி பண்ணுகிறார். நிவிர்த்தி பண்ணப்பட்ட பாவங்கள் மறுபடியுமாய் நம்மைக் குற்றப்படுத்துவதில்லை. நம்முடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்பட்டதினால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நமக்கு விரோதமாக எழும்பாது.

"பாவநிவிர்த்திக்கென்று பரிசுத்த ஸ்தலத்துக்குள் இரத்தம் கொண்டுவரப்பட்ட பாவநிவாரணபலியாகிய காளையையும், பாவநிவாரணபலியாகிய வெள்ளாட்டுக்கடாவையும், பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய், அவைகளின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் அக்கினியிலே சுட்டெரிக்கக்கடவர்கள். அவைகளைச் சுட்டெரித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, பின்பு பாளயத்துக்குள் வருவானாக" (லேவி 16:27,28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மிருகஜீவனின் கொழுப்பு வெண்கல பலிபீடத்தின்மேல் தகனிக்கப்படும். மாம்சம், தோல், ஆகிய மற்ற பொருட்கள் பாளயத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சுட்டெரிக்கப்படும். (லேவி 16:25,27). பாளயத்திற்குப் புறம்பே இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்ததற்கு இது அடையாளமாகும் (எபி 13:11-13).

போக்காடாக விடப்பட்ட வெள்ளாட்டுக்கடாவை வனாந்தரத்திற்கு அழைத்துக்கொண்டு போனவனும், பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்ட காளையையும் வெள்ளாட்டுக்கடாவையும் பாளயத்திற்கு புறம்பே அக்கினியிலே சுட்டெரித்தவனும் சடங்காச்சார பிரகாரமாக அசுத்தமானவர்களாகவும் தீட்டானவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தங்களை சுத்திகரிக்காமல் பாளயத்திற்குள்ளே பிரவேசிக்கக்கூடாது. தங்களை சுத்திகரிக்கும் வண்ணமாக அவர்கள் தங்கள் வஸ்திரங்களை தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, அதன் பின்பு அவர்கள் பாளயத்திற்குள்ளே வரவேண்டும். பாவத்தினால் வரும் அசுத்தத்திற்கும், தீட்டுக்கும் இது அடையாளமாயிருக்கிறது.

போகவிடப்படும் போக்காடாகிய வெள்ளாட்டுக்கடாவைக் கொண்டு போய் விட்டவனும் பாவத்தோடு தன்னைத் தொடர்புபடுத்திக் கொண்டதினால் தீட்டுப்பட்டவனாக இருக்கிறான். ஆகையினால் பாளயத்திற்குள் திரும்புவதற்கு முன்பாக இவனும் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம்பண்ண வேண்டும்.

பிரதான ஆசாரியன் இவையெல்லாவற்றையும் செய்து முடித்த பின்பு, மறுபடியுமாக பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசித்து, கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின்மேலுள்ள நெருப்புத்தணலினால் தூபகலசத்தை நிரப்பவேண்டும்.

அதன் பின்பு பிரதான ஆசாரியன் மிகுந்த சந்தோஷத்தோடு பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியேறி தன்னுடைய வீட்டிற்குப்போகலாம். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற ஆசாரிய ஊழியத்தை பிரதான ஆசாரியன் செய்து முடித்திருக்கிறான். கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது, அவன் செத்துப்போகாமல் உயிரோடு பிழைத்திருக்கிறான். ஆகையினால் பிரதான ஆசாரியன் தனக்கு நியமிக்கப்பட்ட ஆசாரிய ஊழியத்தை செய்து முடித்த பின்பு, தான் செத்துப்போகாமல் உயிரோடிருப்பதை நினைத்து, மிகுந்த சந்தோஷமாய் தன்னுடைய வீட்டிற்கு திரும்பிப்போகிறான்.

விசேஷித்த ஒய்வுநாள்
லேவி 16:29-34

லேவி 16:29. ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே, சுதேசியானாலும் உங்களுக்குள் தங்கும் பரதேசியானாலும், தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துவதுமன்றி, ஒரு வேலையும் செய்யாமல் இருக்கவேண்டும்; இது உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது.

லேவி 16:30. கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் பாவமெல்லாம் நீங்கிச் சுத்திகரிக்கப்படும்படி, அந்நாளில் உங்களைச் சுத்திகரிக்கும் பொருட்டு, உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும்.

லேவி 16:31. உங்களுக்கு அது விசேஷித்த ஒய்வு நாள்; அதிலே உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தக்கடவீர்கள்; இது நித்திய கட்டளை.

லேவி 16:32. அபிஷேகம் பெற்றவனும், தன் தகப்பன் பட்டத்திற்கு வந்து ஆசாரிய ஊழியஞ்செய்யப் பிரதிஷ்டைபண்ணப்பட்டவனுமாகிய ஆசாரியனே பாவநிவிர்த்தி செய்யக்கடவன். அவன் பரிசுத்த வஸ்திரங்களாகிய சணல்நூல் வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு,

லேவி 16:33. பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் பிராயச்சித்தஞ்செய்து, ஆசாரியருக்காகவும் சபையின் சகல ஜனங்களுக்காகவும் பாவ நிவிர்த்தி செய்யக்கடவன்.

லேவி 16:34. இப்படி வருஷத்தில் ஒருமுறை இஸ்ரவேல் புத்திரருக்காக, அவர்களுடைய சகல பாவங்களுக்கும் பாவநிவிர்த்தி செய்வது, உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது என்று சொல் என்றார். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே ஆரோன் செய்தான்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு விசேஷித்த ஒய்வுநாளை நியமனம்பண்ணுகிறார். ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே, சுதேசியானாலும் உங்களுக்குள் தங்கும் பரதேசியானாலும், தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துவதுமன்றி, ஒரு வேலையும் செய்யாமல் இருக்கவேண்டும்; இது உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது *(லேவி 16:29)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோனின் சிறையிருப்பு வரையிலும் இந்தக் கட்டளை ஆசரிக்கப்பட்டு வந்தது. அதன் பின்பு, கி.பி. 70 ஆம் ஆண்டில் எருசலேம் அழிக்கப்படும் வரையிலும் இந்தக் கட்டளையை மறுபடியுமாக ஆசரித்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்குக் கீழ்ப்படியாமல், கலகம் பண்ணியதினால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வந்தது. தேவன் அவர்களோடு பண்ணிய உடன்படிக்கையை நிறைவேற்றாமல் விட்டுவிடுகிறார் *(லேவி 16:29-34)*.

"ஏழாம் மாதம் பத்தாம் தேதி" என்பது அக்டோபர் மாதம் பத்தாம் தேதியைக் குறிக்கும்.

"தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப் படுத்துவது" என்னும் வாக்கியத்திற்கு உபவாசம் பண்ணுவது என்று பொருள். *(லேவி 16:29,31; லேவி 23:27,32; எண் 29:7; சங் 35:13; சங் 69:10; ஏசா 38:3,5,10)*.

"ஒரு வேலையும் செய்யாமல் இருக்கவேண்டும்" என்னும் வாக்கியம் ஐந்து இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. *(லேவி 16:29; லேவி 23:3,28,31; எண் 29:7)*.

"உங்களுக்குள் தங்கும் பரதேசிகள்" என்பது இஸ்ரவேல் தேசத்திற்குள் தங்கியிருக்கும் புறஜாதியார்களைக் குறிக்கும் *(லேவி 16:29)*.

இஸ்ரவேல் ஜனத்தார் ஒவ்வொரு வருஷமும், ஏழாம் மாதம் பத்தாந்தேதியிலே பரிசுத்தமான ஒய்வுநாளை ஆசரிக்கவேண்டும். அந்த நாள் அவர்களுடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படும் நாளாயிருக்கிறது. இந்தப் பரிசுத்த நாளிலே இஸ்ரவேல் ஜனத்தார் நிறைவேற்றவேண்டிய கடமைகளைப்பற்றியும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஏழாம் மாதம் பத்தாந்தேதியிலே ஒரு வேலையும் செய்யாமலிருக்கவேண்டும். அது அவர்களுக்கு விசேஷித்த ஓய்வுநாள் (லேவி 16:3).

இஸ்ரவேல் புத்திரர் விசேஷித்த ஓய்வுநாளிலே தங்கள் ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்தவேண்டும் (லேவி 16:29,31). சரீரப்பிரகாரமான சந்தோஷங்களுக்கும், களியாட்டுக்களுக்கும் அவர்கள் விசேஷித்த ஓய்வுநாளிலே விலகியிருக்கவேண்டும். தங்களுடைய பாவங்கள், அக்கிரமங்கள், மீறுதல்கள் ஆகியவற்றின் நிமித்தமாக, இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்தி, தங்களுடைய பாவங்களின் நிமித்தமாக துக்கப்படவேண்டும்.

உங்களுக்கு அது விசேஷித்த ஓய்வு நாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இது வார ஓய்வுநாள் அல்ல. இது வருஷத்திற்கு ஒருதரம் ஆசரிக்கப்படும் விசேஷித்த ஓய்வுநாள். இந்த நாளில் இஸ்ரவேல் புத்திரர்கள் ஓய்வெடுத்து உபவாசம்பண்ணி, பாவநிவாரணம் செய்ய வேண்டும். அக்டோபர் மாதம் பத்தாம் தேதியில் இந்த விசேஷித்த ஓய்வுநாள் ஆசரிக்கப்படும். இது எந்தக் கிழமையிலும் வரலாம்.

பரிசுத்தமான ஓய்வுநாளிலே, வியாதியஸ்தர்கள், பிள்ளைகள் ஆகியோரை தவிர, மற்ற இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், போஜனபதார்த்தங்களை விலக்கி உபவாசம்பண்ணவேண்டும். இந்த நாளிலே ஸ்திரீகள் பொன்னாபரணங்களை அணிந்து தங்களை அலங்கரிக்கமாட்டார்கள்.

இந்தக் கட்டளை இஸ்ரவேல் புத்திரருக்கு நித்திய கட்டளையாயிருக்க வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 16:29,34). இஸ்ரவேல் ஜனத்தார் வருஷத்தில் ஒருமுறை ஏழாம் மாதம் பத்தாந்தேதியிலே தங்கள் ஆத்துமாக்களை தாழ்த்தி, ஒரு வேலையும் செய்யாமல் ஓய்ந்திருக்கவேண்டும். இது ஒவ்வொரு வருஷமும், இதே நாளிலே நிறைவேற்ற வேண்டிய கடமை.

பிரதான ஆசாரியன் பாவநிவாரண நாளிலே தன்னுடைய பாவத்தையும், இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவத்தையும் நிவிர்த்தி பண்ணுவதற்காக பாவநிவாரண பலிகளை செலுத்தவேண்டும். பாவநிவாரண பலி ஒவ்வொரு வருஷமும் செலுத்தப்படுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ ஒருதரம் மாத்திரமே தம்மை பலியாக ஒப்புக்கொடுத்தார்.

"இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான். இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார்" (எபி 10:10-13).

இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதே, எல்லோருடைய பாவங்களையும் மொத்தமாய் நிவிர்த்தி பண்ணுவதற்கு போதுமானதாயிருக்கிறது. அவருடைய சரீரம் மறுபடியும் மறுபடியுமாக பலியிடப்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

கர்த்தர் பாவநிவாரண பலியின் பிரமாணத்தை மோசேக்கு சொல்லுகிறார். இந்தப் பிரமாணத்தில் இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சுவிசேஷத்தின் மூலமாக மனுக்குலத்திற்கு இரண்டு சிலாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவையாவன : 1. நம்முடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படுவது. 2. நமக்கு தேவனுடைய சமுகத்திலே கிட்டிச்சேருகிற சிலாக்கியம் கிடைத்திருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, கல்வாரி சிலுவையில் தம்மையே பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. கிறிஸ்துவானவர் தம்முடைய பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்து, நமக்காக எப்போதும் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். இதன் மூலமாக, நாம் தேவனுடைய சமுகத்திலே கிட்டிச் சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

கிறிஸ்துவானவர் நம்முடைய பாவத்தையும், அக்கிரமத்தையும், மீறுதலையும் நிவிர்த்தி செய்திருக்கிறார். இதனால் பாவத்தினால் ஏற்படும் குற்றவுணர்வுகளுக்கு நாம் நீங்கலாயிருக்கிறோம். கிறிஸ்துவானவரே பாவநிவாரணத்தை உண்டுபண்ணினவர். அவரே தம்மை பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தவர்.

"அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும் படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது" *(எபி 2:17)*.

பிரதான ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யும்போது, அவனோடுகூட ஒருவரும் ஆசரிப்புக்கூடாரத்தில் இருக்கக்கூடாது. "பாவநிவிர்த்தி செய்யும்படி அவன் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் இஸ்ரவேல் சபையார் அனைவருக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, வெளியே வருமளவும் ஆசரிப்புக் கூடாரத்தில் ஒருவரும் இருக்கலாகாது" (லேவி 16:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பிரதான ஆசாரியன் மாத்திரம் தனியாக பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும், இஸ்ரவேல் சபையார் அனைவருக்காகவும் பாவநிவிர்த்தி செய்யவேண்டும். பரிசுத்த ஸ்தலத்திலே பிரதான ஆசாரியனுக்கு உதவிசெய்ய வேறு ஒருவரும் இருக்கமாட்டார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், திராட்சரசஆலையை தனியாய் மிதிக்கிறவராக நகரத்திற்கு புறம்பே, கல்வாரி சிலுவையில் தனியாய் பாடுபட்டார். அவர் மாத்திரமே மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக, தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணும் ஊழியத்தில் இயேசுகிறிஸ்துவுக்கு யாரும் உதவிசெய்யவில்லை.

"நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன்; ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை; நான் என் கோபத்திலே அவர்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை நசுக்கிப்போட்டேன்; அதினால் அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்களின்மேல் தெறித்தது, என் உடுப்பையெல்லாம் கறைப்படுத்திக்கொண்டேன்" *(ஏசா 63:3)*.

கெத்செமனே தோட்டத்தில் போர்ச்சேவகர்கள் இயேசுகிறிஸ்துவைப் பிடித்தபோது, அவருடைய சீஷர்கள் எல்லோரும் அவரை விட்டு ஓடிப்போய்விட்டார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய பாடுகளை அனுபவிப்பதற்கு தனிமையில் விடப்பட்டார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள், அவரோடுகூட சிலுவையில் அறையப்பட்டிருந்தால், கிறிஸ்துவானவருடைய பாவநிவிர்த்தியின் ஊழியத்தில், அவருடைய சீஷர்களுக்கும் பங்கு இருந்திருக்கும். ஆனால் கிறிஸ்துவின் சீஷர்கள் யாரும் அவரோடுகூட சிலுவையில் அறையப்படவில்லை.

பிரதான ஆசாரியன் இஸ்ரவேல் சபையாருக்காக மாத்திரம் பாவநிவிர்த்தி செய்கிறான். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் புறஜாதியாருக்கு பாவநிவிர்த்தி நியமிக்கப்படவில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார். அவர் உலக இரட்சகர். கிறிஸ்துவானவர் எல்லா ஜனங்களின் பாவங்களையும் நிவிர்த்தி பண்ணுவதற்காக, கல்வாரி சிலுவையிலே பாவநிவாரண பலியாக மரித்தார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் யூதருடைய பாவங்களும், மற்ற எல்லா ஜாதியாருடைய பாவங்களும் மன்னிக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவுக்குள்ளே யூதர் என்றும், புறஜாதியார் என்றும் வித்தியாசமில்லை. தேவனிடத்தில் பட்சபாதமில்லை.

கிறிஸ்துவானவரே நம்மை பிதாவாகிய தேவனோடு ஒப்புரவாக்குகிறவர். அவரே நம்முடைய மீட்பாகவும், ஒப்புரவாதலாகவும் இருக்கிறார்.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு முன்பாக, தனக்காகவும் பாவநிவிர்த்தி செய்யவேண்டும். ஆரோன் பிரதான ஆசாரியனாக இருந்தாலும், அவன் இஸ்ரவேல் புத்திரருக்காக பாவநிவிர்த்தியின் பலியை செலுத்தினாலும், அவனிடத்திலும் பாவமும், மீறுதலும், அக்கிரமமும் இருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலோ ஒரு பாவமும் இல்லை. அவர் பாவம் அறியாதவர். ஆகையினால் இயேசுகிறிஸ்துவின் பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்கு, பாவநிவாரண பலி எதுவும் செலுத்தப்படவேண்டியதில்லை. பாவமில்லாத இயேசுகிறிஸ்துவுக்கு, பாவநிவாரணம் தேவையில்லை.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார். அவரே பாவங்களை நிவிர்த்தி பண்ணும் பாவநிவாரண பலியாகவும் இருக்கிறார். கிறிஸ்துவானவரே நம்மை தேவனோடு ஒப்புரவாக்குகிறார். இயேசுகிறிஸ்துவின் ஊழியம் ஒப்புரவாதலின் ஊழியமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவநிவாரணத்திற்காக இரண்டு வெள்ளாட்டுக்கடாக்கள் கொண்டு வரப்படுகிறது. ஒரு வெள்ளாட்டுக்கடா பாவநிவாரண பலியாக செலுத்தப்படுகிறது. உயிரோடிருக்கிற மற்றொரு வெள்ளாட்டுக்கடா போக்காடாக விடப்படுகிறது.

பாவநிவாரண பலியாக செலுத்தப்படும் வெள்ளாட்டுக்கடா, இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. அவர் மனுஷருடைய பாவங்களுக்காக கல்வாரி சிலுவையிலே பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்டார்.

போக்காடாக விடப்பட்ட வெள்ளாட்டுக்கடாவும் இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. நம்முடைய கர்த்தாகிய இயேசுகிறிஸ்து, கல்வாரி சிலுவையிலே மரித்து, மூன்றாம் நாளிலே உயிரோடு எழும்பினார். நம்மை நீதிமானாக்குவதற்காக கிறிஸ்துவானவர் உயிரோடு எழும்பினார்.

பிரதான ஆசாரியன் உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல், தன் இரண்டு கைகளையும் வைத்து, இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும், பாவங்களையும், மீறுதல்களையும் அறிக்கை செய்வான். இதனால் இஸ்ரவேல் ஜனத்தாருடைய எல்லா பாவங்களும் முழுமையாக நிவிர்த்தி பண்ணப்படும். அவர்களுக்கு பூரணமான பாவநிவாரணம் உண்டாகும்.

இஸ்ரவேல் புத்திரர் பாவங்களையும், மீறுதல்களையும், அக்கிரமங்களையும் பண்ணியதினால் அவர்கள் குடியில்லாத தேசத்திற்கு போகவேண்டியவர்கள். அவர்கள் தண்டனைக்கு பாத்திரவான்கள். ஆனாலும், போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவின்மீது அவர்களுடைய பாவங்கள் சுமத்தப்பட்டிருப்பதினால், அவர்கள் தங்களுக்கு வரும் தண்டனைக்கு தப்பித்துக்கொள்கிறார்கள். போக்காடு அவர்களுடைய பாவங்களை சுமக்கிறது.

பிதாவாகிய தேவன் மனுக்குலத்தின் பாவங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மீது சுமத்தியிருக்கிறார். கர்த்தரோ நம் எல்லோருடைய அக்கிரமத்தையும் இயேசுகிறிஸ்துவின்மீது விழப்பண்ணினார்.

"நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (ஏசா 53:6).

நம்முடைய பாவங்களின் நிமித்தமாக நமக்கு தண்டனை கொடுக்கப்படவேண்டும். ஆனால் கிறிஸ்துவானவர் நம்முடைய பாவங்களை தம்மீது ஏற்றுக்கொண்டதினால், நமக்கு கொடுக்கப்படவேண்டிய தண்டனைகள், இயேசுகிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1பேது 2:24).

உயிரோடிருக்கிற வெள்ளாட்டுக்கடா இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமங்களையெல்லாம் சுமந்து கொண்டு, குடியில்லாத தேசத்திற்கு போகும். தேவஆட்டுக்குட்டியாகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தின் பாவங்களை தம்மீது சுமந்து கொண்டு போனார்.

"மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி" என்றார் (யோவா 1:29).

கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிக்கும்போது, அவற்றை முற்றிலுமாக மன்னித்து விடுகிறார். கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னித்த பின்பு, அதை அவர் நினைவுகூருவதில்லை. மறந்துவிடுகிறார். கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னித்து அவற்றை எவ்வாறு மறந்துவிடுகிறார் என்று ஒரு சில வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

"ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எபி 8:12).

"இதோ, சமாதானத்துக்குப் பதிலாக மகா கசப்பு வந்திருந்தது, தேவரீரோ என் ஆத்துமாவை நேசித்து அழிவின் குழிக்கு விலக்கினீர்; என் பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டீர்" (ஏசா 38:17).

"அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்; நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்" (மீகா 7:19).

"மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்" (சங் 103:12).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையிலே மரித்து, மூன்றாம் நாளிலே உயிரோடு எழுந்து, அதன் பின்பு பரமேறிப்போனார். கிறிஸ்துவானவர் இப்பொழுது பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்து நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பது, கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்த பின்பு பரலோகத்திலே பிரவேசிப்பதற்கு அடையாளமாயிருக்கிறது.

எபிரெயருக்கு நிருபம் எழுதின ஆசிரியர் இந்த சத்தியத்தை தெளிவாக விளக்கியிருக்கிறார்.

"இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங்கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள்.

இரண்டாங்கூடாரத்திலே பிரதான ஆசாரியன்மாத்திரம் வருஷத்திற்கு ஒருதரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தைத் தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான்.

அதினாலே, முதலாங்கூடாரம் நிற்குமளவும் பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார்.

அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம்.

இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல.

கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" (எபி 9:6-12).

பரலோகமே மகாபரிசுத்த ஸ்தலமாயிருக்கிறது. மகா பரிசுத்த ஸ்தலம் என்பது ஒரு கட்டிடமல்ல. அது கர்த்தருடைய பரிசுத்தமான பிரசன்னமும், அவருடைய மகிமையும் தங்கியிருக்கிற ஸ்தலம். நாம் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே விசுவாசத்தோடும், ஜெபத்தோடும், நம்பிக்கையோடும் பிரவேசிக்கவேண்டும். நம்முடைய மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக, நாம் கர்த்தருடைய சந்நிதியில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய சந்நிதியில் பிரவேசிக்கும் சிலாக்கியம் கிடைக்கவில்லை. புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு கர்த்தருடைய கிருபையினால் இந்த சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்து, இஸ்ரவேல் ஜனத்தாருக்கு, இந்த சத்தியமும் தெளிவாக விளக்கப்படவில்லை. நமக்கோ சுவிசேஷத்தின் மூலமாக இந்த சத்தியம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு பிரதான ஆசாரியராயிருக்கிறார். அவர் கல்வாரி சிலுவையில் மரித்து, மூன்றாம் நாளில் உயிரோடு எழும்பி, பரமேறிப்போனபோது பரலோகத்திலே பிரவேசித்தார். அவர் ஒரு தரம் மாத்திரமே பரமேறினார்.

பிரதான ஆசாரியன் மகாபரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கும்போது, காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தத்தோடு பிரவேசித்தான். நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சொந்த இரத்தத்தினாலே பரலோகத்திலே பிரவேசித்தார்.

"வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" (எபி 9:12).

பிரதான ஆசாரியனாகிய ஆரோன், காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தத்தோடு மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, அந்த இரத்தத்தை கிருபாசனத்தின்மேல் தெளித்தான். நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சொந்த இரத்தத்தோடு மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, தம்முடைய இரத்தத்தை கிருபாசனத்தின்மேல் தெளித்தார்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தம், வெள்ளாட்டுக்கடா இளங்காளை ஆகியவற்றின் இரத்தத்தைவிட அதிக மேன்மையானது. வெள்ளாட்டுக்கடா இளங்காளை ஆகியவற்றின் இரத்தத்தைவிட இயேசுகிறிஸ்துவின் இரத்தம் அதிக நன்மையான காரியங்களை பேசும்.

"அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" (எபி 9:13,14).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கிறார். "அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன்" (வெளி 5:6).

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின் மேலுள்ள நெருப்புத்தணலினால் தூபகலசத்தை நிரப்பி பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாகக் கொண்டு வருகிறான். தான் சாகாதபடிக்குத் தூபமேகமானது சாட்சிப் பெட்டியின்மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடத்தக்கதாக, கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின்மேல் தூபவர்க்கத்தைப் போடுகிறான் (லேவி 16:12,13).

நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து பிதாவின் சமுகத்திலே நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். பிரதான ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதியில் தூபவர்க்கம் போடுவது, நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து, பிதாவின் சமுகத்திலே நமக்காக பரிந்து பேசுவதற்கு அடையாளமாயிருக்கிறது.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, முதலாவதாக தனக்காகவும், அதன் பின்பு தன் வீட்டாருக்காகவும், அதன் பின்பு இஸ்ரவேல் சபையார் அனைவருக்காகவும் பாவநிவிர்த்தி செய்கிறான் (லேவி 16:17).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிதாவின் சமுகத்திலே ஏறெடுத்த ஜெபம் யோவா 17 –ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கு, விசுவாசமும் மனந்திரும்புதலும் அவசியமாயிருக்கிறது. ஆரோன் இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களை, வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேல் சுமத்தினான். நாமும் நம்முடைய பாவங்களை இயேசுகிறிஸ்துவின் சமூகத்தில் அறிக்கை செய்து, அவற்றை அவருடைய பாதபடியில் சமர்ப்பிக்கவேண்டும். நம்முடைய நீதிக்கு கிறிஸ்துவானவரே ஆண்டவராயிருக்கிறார் என்று அவர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும். நம்முடைய பாவங்களை மன்னித்து, அதை நிவிர்த்தி பண்ணுவதற்கு, நம்முடைய பாவநிவாரண பலியாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தமே போதுமானதாயிருக்கிறது என்பதை நாம் முழுஇருதயத்தோடு நம்பவேண்டும்.

நம்முடைய மனந்திரும்புதல் மூலமாக, நம்முடைய ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்தவேண்டும். எப்போதாவது ஒரு தரம் நம்முடைய சரீரத்தின் இச்சைகளுக்கு விலகி, உபவாசம்பண்ணி, பரிசுத்தமாய் ஜீவித்தால் போதுமானதாயிருக்காது. நம்முடைய பாவங்களினிமித்தமாக, நம்முடைய ஆத்துமாவை நாம் எப்போதுமே தாழ்மைப்படுத்தவேண்டும். நம்முடைய சரீரத்தின் இச்சைகளை சிலுவையில் அறைந்து, நம்முடைய சுயத்தை வெறுத்து, கிறிஸ்துவுக்கு பிரியமானவர்களாய் ஜீவிக்கவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே, சுதேசியானாலும் உங்களுக்குள் தங்கும் பரதேசியானாலும், தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துவதுமன்றி, ஒரு வேலையும் செய்யாமல் இருக்கவேண்டும்; இது உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது" (லேவி 16:29) என்றும்,

"கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் பாவமெல்லாம் நீங்கிச் சுத்திகரிக்கப்படும்படி, அந்நாளில் உங்களைச் சுத்திகரிக்கும் பொருட்டு, உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும். உங்களுக்கு அது விசேஷித்த ஓய்வு நாள்; அதிலே உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தக்கடவீர்கள்; இது நித்திய கட்டளை" (லேவி 16:30,31) என்றும்,

அபிஷேகம் பெற்றவனும், தன் தகப்பன் பட்டத்திற்கு வந்து ஆசாரிய ஊழியஞ்செய்யப் பிரதிஷ்டைபண்ணப்பட்டவனுமாகிய ஆசாரியனே பாவநிவிர்த்தி செய்யக்கடவன். அவன் பரிசுத்த வஸ்திரங்களாகிய சணல்நூல் வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு, பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் பிராயச்சித்தஞ்செய்து, ஆசாரியருக்காகவும் சபையின் சகல ஜனங்களுக்காகவும் பாவ நிவிர்த்தி செய்யக்கடவன் (லேவி 16:32,33) என்றும்

இப்படி வருஷத்தில் ஒருமுறை இஸ்ரவேல் புத்திரருக்காக, அவர்களுடைய சகல பாவங்களுக்கும் பாவநிவிர்த்தி செய்வது, உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது என்று சொல்'' என்றும் (லேவி 16:34) சொல்லுகிறார். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே ஆரோன் செய்கிறார்.

17 அதிகாரம்

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தர் சொன்ன பாவநிவாரண பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். அந்தப் பிரமாணத்தைக் கனம்பண்ணும் வண்ணமாக கர்த்தர் இந்த அதிகாரத்தில் மேலும் சில காரியங்களை சொல்லுகிறார்.

ஆசாரியர் மாத்திரமே பலிகளை செலுத்தவேண்டும். செலுத்தப்படும் பலியை ஆசரிப்புக்கூடார வாசலாகிய கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு முன்பாக மாத்திரமே செலுத்தவேண்டும். இந்தப் பிரமாணத்திற்கு கீழ்ப்படியாதவன் தன் ஜனத்திலிராமல் அறுப்புண்டு போவான் (லேவி 17:1-9).

இஸ்ரவேல் புத்திரர் மிருகத்தின் இரத்தத்தைப் புசிக்கக்கூடாது. அதைப் புசிக்கிறவன் தன் ஜனத்திலிராதபடிக்கு அறுப்புண்டு போவான் (லேவி 17:10-16)

பலி செலுத்துகிற ஸ்தலம் லேவி 17:1-9

லேவி 17:1. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 17:2. நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொல்லவேண்டியதாவது: கர்த்தர் கட்டளையிடுகிறது என்னவென்றால்:

லேவி 17:3. இஸ்ரவேல் குடும்பத்தாரில் எவனாகிலும் மாட்டையாவது செம்மறியாட்டையாவது வெள்ளாட்டையாவது ஆசரிப்புக் கூடாரவாசலாகிய கர்த்தருடைய வாசஸ்தலத்துக்கு முன்பாக, கர்த்தருக்குச் செலுத்தும்படி கொண்டுவராமல்,

லேவி 17:5. ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் வெளியிலே பலியிடுகிற தங்கள் பலிகளை, ஆசரிப்புக் கூடாரவாசலில் ஆசாரியனிடத்தில் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, அங்கே அவைகளைக் கர்த்தருக்குச் சமாதானபலிகளாகச் செலுத்தக்கடவர்கள்.

லேவி 17:6. அங்கே ஆசாரியன் இரத்தத்தை ஆசரிப்புக் கூடாரவாசலிலிருக்கிற கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் தெளித்து, கொழுப்பைக் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகத் தகனிக்கக்கடவன்.

லேவி 17:7. தாங்கள் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுகிற பேய்களுக்குத் தங்கள் பலிகளை இனிச் செலுத்தாதிருப்பார்களாக; இது அவர்கள் தலைமுறைதோறும் அவர்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது.

லேவி 17:8. மேலும் நீ அவர்களை நோக்கி: இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியர்களிலும் எவனாகிலும் சர்வாங்க தகனபலி முதலானவைகளையிட்டு,

லேவி 17:9. அதை ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருக்குச் செலுத்தும்படி கொண்டு வராவிட்டால், அவன் தன் ஜனத்தில் இராமல் அறுப்புண்டு போவான் என்று சொல்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பலிகளை கர்த்தருடைய சந்நிதியில் மாத்திரமே செலுத்தவேண்டும். அவர்கள் தங்கள் பலிகளை ஆசரிப்புக்கூடார வாசலில் ஆசாரியனிடத்தில் கொண்டு வந்து கொடுக்கவேண்டும். கர்த்தருடைய பலிபீடத்தில் மாத்திரமே பலிகளை செலுத்தவேண்டும். மற்ற இடங்களில் பலி செலுத்துவது கர்த்தருடைய பிரமாணத்தை மீறுகிற பாவமாகும்.

பூர்வகாலங்களில் இஸ்ரவேல் புத்திரர் யார் வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் பலிபீடங்களை கட்டிக்கொள்ளலாம். அவர்கள் தங்களுக்கு இஷ்டமான பிரகாரம் அந்தப் பலிபீடங்களில் கர்த்தருக்கு பலிகளை செலுத்தலாம். கர்த்தர் பாவநிவாரணம் பற்றிய தம்முடைய பிரமாணத்தை சொல்லுவதற்கு முன்பாக, இஸ்ரவேல் புத்திரருக்கு பலிபீடம் கட்டுவதற்கும், அதிலே பலிசெலுத்துவதற்கும் அனுமதி கொடுத்திருந்தார்.

ஆனால் இப்போதோ அவர்கள் ஆசரிப்புக்கூடார வாசலாகிய கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு முன்பாக மாத்திரமே பலிகளை செலுத்தவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பலிகளை தாங்களாகவே செலுத்தக்கூடாது. அவர்கள் தங்கள் பலிகளை ஆசரிப்புக்கூடார வாசலில் ஆசாரியனிடத்தில் கொண்டு வரவேண்டும். ஆசாரியர் மாத்திரமே பலிகளை செலுத்தவேண்டும்.

பூர்வகாலங்களில் இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு இஷ்டமான இடங்களில் பலிபீடங்களை கட்டுவதும், பலிகளை செலுத்துவதும் விக்கிரகாராதனையோடு தொடர்புடையதாக இருந்தது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலே பல வருஷங்களாக அடிமைகளாகயிருந்தார்கள். எகிப்தியர்கள் பேய்களுக்கும், விக்கிரகங்களுக்கும் தங்கள் இஷ்டப்படி பலிகளை செலுத்தினார்கள். பேய்களுக்கு செலுத்தப்படும் பலி முறைமைகளை இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்த போது கற்றுக்கொண்டார்கள்.

கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் புத்திரரை விடுவித்து, கானான் தேசத்திற்கு நேராக வழிநடத்துகிறார். கர்த்தர் அவர்கள் மத்தியிலே அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்திருக்கிறார். கர்த்தருடைய பலத்த கிரியைகள் அவர்களுக்கு முன்பாக பிரத்தியட்சமாக வெளிப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக தம்மை பிரத்தியட்சமாக வெளிப்படுத்திக் காண்பித்திருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களில் சிலர், தாங்கள் எகிப்து தேசத்தில் கற்றுக்கொண்ட விக்கிரகாராதனை முறைமைகளை இப்போதும் பயன்படுத்துகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரில் சிலர் தங்களுக்கு இஷ்டமான இடங்களில் கர்த்தருக்கு பலிபீடம் கட்டி, அதிலே அவருக்கு பலிகளை செலுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு சொந்த ஜனமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பரிசுத்த சந்ததியாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களை பின்பற்றக்கூடாது. விக்கிரகங்களை ஆராதிக்கவும் கூடாது. விக்கிரகங்களுக்கு பலிகளை செலுத்தவும் கூடாது.

"தாங்கள் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுகிற பேய்களுக்குத் தங்கள் பலிகளை இனிச் செலுத்தாதிருப்பார்களாக; இது அவர்கள் தலைமுறைதோறும் அவர்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக் கடவது" (லேவி 17:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பேய்களைப் பின்பற்றுகிறவர்கள் அவைகளை சோரமார்க்கமாய் பின்பற்றுகிறார்கள். புறஜாதியாருடைய பலிகள் பேய்களுக்கே செலுத்தப்படுகிறது. இந்த வாக்கியத்தில் பேய்கள் என்பதற்கான எபிரெய வார்த்தை "சாயீர்" என்பதாகும். இதற்கு ரோமம் மிகுந்த ஆடு என்று பொருள். பழைய ஏற்பாட்டில் பிசாசைக் குறிப்பதற்கு "ஷெட்" என்னும் மற்றொரு எபிரெய வார்த்தையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

சீனாய் வனாந்தரத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பாக எகிப்திலிருந்து விடுதலை பெற்று வந்த முதல் வருஷத்திற்குள்ளேயே. இஸ்ரவேல் ஜனங்கள் சோரமார்க்கத்தைப் பின்பற்றி பாவம் செய்கிறார்கள். புறஜாதிகளின் விக்கிரகங்களையும், பேய்களையும் ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேலருடைய இந்தப் பாவத்தினால் பல யுத்தங்களில் அவர்கள் தோல்வி அடைந்தார்கள். பாபிலோனிய சிறையிருப்பிலும், அசீரியருடைய சிறையிருப்பிலும் இஸ்ரவேலர்கள் தங்களுடைய விக்கிரகாராதனையின் நிமித்தம் அடிமைத்தனத்தில் அடைக்கப்பட்டிருந்தார்கள் (2இராஜா 17,25).

கர்த்தருக்கு பலிசெலுத்துகிறவர்கள், தங்கள் பலிகளை ஆசரிப்புக்கூடார வாசலிலுள்ள பலிபீடத்தில் மாத்திரமே செலுத்த வேண்டும் என்பது தற்காலிகமான கட்டளையல்ல. அது அவர்களுக்கு நித்திய கட்டளையாக நியமிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பலிபீடத்தை தவிர வேறு எங்கும் பலிகளை செலுத்தக்கூடாது. கர்த்தருடைய பலிபீடத்தில் மாத்திரமே, பலியாக செலுத்தப்படும் மிருகங்களை கொல்லவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் தங்கள் பலிகளை ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளியிலே செலுத்தினார்கள். "ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் வெளியிலே பலியிடுகிற தங்கள் பலிகளை, ஆசரிப்புக் கூடாரவாசலில் ஆசாரியனிடத்தில் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, அங்கே அவைகளைக் கர்த்தருக்குச் சமாதானபலிகளாகச் செலுத்தக்கடவர்கள்" (லேவி 17:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளியிலே பலியிட்டபோது, அந்தப் பலிகளை கர்த்தருக்கு பலியிடாமல், விக்கிரகங்களுக்கு பலியிட்டார்கள். அவர்கள் கர்த்தருடைய ஜனம். அவர்கள் இனிமேல் விக்கிரகங்களுக்கு பலியிடக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பலிகளை ஆசரிப்புக்கூடாரவாசலில் ஆசாரியனிடத்தில் கொண்டு வரவேண்டும். ஆசாரியன் அந்த பலிகளை கர்த்தருடைய சந்நிதியில் கர்த்தருக்கு சமாதான பலிகளாக செலுத்தவேண்டும்.

ஆசரிப்புக்கூடார வாசலில், கர்த்தருடைய பலிபீடத்தில் செலுத்தப்படாத பலிகளெல்லாம் கர்த்தருடைய பிரமாணத்தை மீறுகிற காரியமாகவே இருக்கிறது. பலிபீடத்தில் செலுத்தப்படாமல், வேறு இடங்களில் செலுத்தப்படும் பலிகள், கர்த்தருடைய பார்வையில் மிகப்பெரிய பாவமாயிருக்கிறது.

"பாளயத்துக்குள்ளேயாகிலும் பாளயத்துக்குப் புறம்பேயாகிலும் அதைக் கொன்றால், அது அந்த மனிதனுக்கு இரத்தப்பழியாக எண்ணப்படும். அந்த மனிதன் இரத்தம் சிந்தினபடியால், தன் ஜனத்தில் இராமல் அறுப்புண்டு போவான்" (லேவி 17:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவனைத் தவிர புறஜாதி தெய்வங்களுக்கு இரத்தம் சிந்திப் பலிசெலுத்துவது பாவமான காரியம். இதற்கு மரணதண்டனை விதிக்கப்படுகிறது. எல்லாப் பலிகளுமே கர்த்தருடைய வாசஸ்தலத்துக்கு முன்பாகவே செலுத்தப்பட வேண்டும். இந்த வாக்கியமும், உபா 12:15,21 ஆகிய வசனங்களும் முரண்படவில்லை.

விக்கிரகங்களுக்கு பலியிடுவது விக்கிரகாராதனை மாத்திரமல்ல அவ்வாறு பலியிடுகிற மனிதனுக்கு அது இரத்தப்பழியாக எண்ணப்படும். விக்கிரகங்களுக்கு பலியிடுவது கொலைசெய்கிற குற்றத்திற்கு சமமானது.

"மாட்டை வெட்டுகிறவன் மனுஷனைக் கொல்லுகிறவனாகவும், ஆட்டைப் பலியிடுகிறவன் நாயைக் கழுத்தறுக்கிறவனாகவும், காணிக்கையைப் படைக்கிறவன் பன்றி இரத்தத்தைப் படைக்கிறவனாகவும், தூபங்காட்டுகிறவன் விக்கிரகத்தை ஸ்தோத்திரிக்கிறவனாகவும் இருக்கிறான்; இவர்கள் தங்கள் வழிகளையே தெரிந்துகொள்ளுகிறார்கள்; இவர்களுடைய ஆத்துமா தங்கள் அருவருப்புக்களின்மேல் விருப்பமாயிருக்கிறது" (ஏசா 66:3).

கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் பலியிடுவது இரத்தப்பழியாக எண்ணப்படுகிறது. அவ்வாறு பலியிடுகிற மனிதன் இரத்தம் சிந்துகிறான். அவன் கொலைப்பாதனாயிருக்கிறான். கர்த்தர் அவனுக்கு கடினமான தண்டனை கொடுக்கிறார். அந்த மனிதன் இரத்தம் சிந்தினபடியால், தன் ஜனத்திலிராமல் அறுப்புண்டு போவான் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பலிகளை எவ்வாறு செலுத்தவேண்டுமென்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொல்லவேண்டியதாவது" (லேவி 17:1,2) என்று சொல்லி கர்த்தர் கட்டளையிடுகிறார்.

இஸ்ரவேல் குடும்பத்தாரில் எவனாகிலும் மாட்டையாவது செம்மறியாட்டையாவது வெள்ளாட்டையாவது ஆசரிப்புக் கூடாரவாசலாகிய கர்த்தருடைய வாசஸ்தலத்துக்குமுன்பாக, கர்த்தருக்குச் செலுத்தும்படி கொண்டுவராமல், பாளயத்துக்குள்ளேயாகிலும் பாளயத்துக்குப் புறம்பேயாகிலும் அதைக் கொன்றால், அது அந்த மனிதனுக்கு இரத்தப்பழியாக எண்ணப்படும் (லேவி 17:3,4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிகிறார்கள். அவர்கள் கர்த்தர்மீது பக்திவைராக்கியமாயிருக்கிறார்கள். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரில், இரண்டரை கோத்திரத்தார், யோர்தானுக்கு அக்கரையிலே ஒரு பலிபீடம் கட்டினார்கள். இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் அதைக் கேள்விப்பட்டு, அவர்கள்மீது யுத்தம்பண்ண புறப்பட்டுப்போனார்கள்.

"கானான்தேசத்தில் இருக்கிற யோர்தானின் எல்லைகளுக்கு வந்தபோது, ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரும், அங்கே யோர்தானின் ஓரத்திலே பார்வைக்குப் பெரிதான ஒரு பீடத்தைக் கட்டினார்கள். ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரும் கானான் தேசத்துக்கு எதிரே இஸ்ரவேல் புத்திரருக்கு அடுத்த யோர்தானின் எல்லைகளில் ஒரு பீடத்தைக் கட்டினார்கள் என்று இஸ்ரவேல் புத்திரர் கேள்விப்பட்டார்கள். அவர்கள் அதைக் கேள்விப்பட்டபோது, இஸ்ரவேல் புத்திரரின் சபையாரெல்லாரும் அவர்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணும்படி சீலோவிலே கூடினார்கள்" (யோசு 22:10-12).

இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்திலே, அவர்களுக்கு கர்த்தர்மீதுள்ள பக்தி வைராக்கியம் குறைந்து போயிற்று. அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு முற்றிலுமாய் கீழ்ப்படியாமல், தங்களுடைய சுயஇஷ்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

கானான் தேசத்திலே பல இடங்களில் விக்கிரகங்களும், விக்கிரகங்களுக்கு பலிபீடங்களும், மேடைகளும் காணப்பட்டது. இஸ்ரவேல் தேசத்தின் ராஜாக்களில் பலர் கர்த்தர்மீது பக்திவைராக்கியமாயிருந்து விக்கிரகங்களை உடைத்துப்போட்டார்கள். அவர்களுடைய காலத்தில்கூட மேடைகள் அகற்றப்படாமலும், அழிக்கப்படாமலும் இருந்தது.

இஸ்ரவேல் தேசத்தில் விக்கிரகாராதனை முற்றிலுமாய் ஒழிக்கப்படவில்லை. அங்கே மேடைகளும், தோப்பு விக்கிரகங்களும் இருந்தது. பிற்காலத்தில் இவை இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே விக்கிரகாராதனை பிரவேசிப்பதற்கு வழிவகுத்து கொடுத்தது.

இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களுக்கு பலிகளை செலுத்தக்கூடாது என்றும், அவர்கள் கர்த்தருக்கு மாத்திரமே பலிகளை செலுத்த வேண்டும் என்றும், அவர்கள் தங்களுடைய பலிகளை ஆசரிப்புக்கூடார வாசலில் ஆசரியனிடத்தில் கொண்டு வந்து கொடுக்கவேண்டும் என்றும், அவர்கள் செலுத்தும் பலிகள் ஆசரிப்புக்கூடார வாசலிலுள்ள பலிபீடத்தில் மாத்திரமே செலுத்தப்படவேண்டும் என்றும் கர்த்தர் நித்திய கட்டளையாக சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ அவர்களை நோக்கி: இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியர்களிலும் எவனாகிலும் சர்வாங்க தகனபலி முதலானவைகளையிட்டு, அதை ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருக்குச் செலுத்தும்படி கொண்டு வராவிட்டால், அவன் தன் ஜனத்தில் இராமல் அறுப்புண்டு போவான் என்று சொல்" (லேவி 17:8,9) என்று சொல்லுகிறார்.

கர்த்தருக்கு பலிகளை செலுத்தும் பிரமாணத்தின் மூலமாக, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமும், ஆவிக்குரிய போதனைகளைக் கற்றுக்கொள்ளலாம். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள் கர்த்தருக்கு மிருகங்களை பலியிடவில்லை. நாம் ஆவிக்குரிய பலிகளை செலுத்துகிறோம். ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்றும், அங்கு மாத்திரமே நாம் கர்த்தருக்கு ஸ்தோத்திரபலிகளை ஏறெடுக்கவேண்டும் என்றும் எந்தவிதமான நியதிகளும் நமக்கு கொடுக்கப்படவில்லை.

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே நம்முடைய பலிகளை செலுத்துவதற்கு பலிபீடங்களும் இல்லை. பழைய ஏற்பாட்டுக் காலத்து தேவாலயமும் இப்போது இல்லை. ஒரு குறிப்பிட்ட இடத்தில் மாத்திரமே கர்த்தரை ஆராதிக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் நம்மைக் கட்டுப்படுத்தவுமில்லை.

ஆனாலும் கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் ஒருமனதோடும், ஒரே இருதயத்தோடும் அவரை ஆராதிக்க வேண்டும். விசுவாசிகளாகிய நாம் ஆவியின் ஒற்றுமையைக் காத்துக்கொள்ளவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு பலிபீடமாயிருக்கிறார். அவரே நம்முடைய மெய்யான ஆசரிப்புக்கூடாரமாகவும் இருக்கிறார்.

"பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு" (எபி 8:2).

"நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதற்குரியவைகளை புசிக்கிறதற்குக் கூடாரத்தில் ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை" (எபி 13:10).

பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக தம்மை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். பிதாவானவர் தம்முடைய குமாரன் மூலமாக நம் மத்தியிலே வாசம்பண்ணுகிறார். நாம் தேவனுக்கு ஏறெடுக்கும் பலிகள் எல்லாமே, இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே அங்கீகரிக்கப்படுகிறது.

"ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1பேது 2:5).

இரத்தம் புசிக்கவேண்டாம் லேவி 17:10-16

லேவி 17:10. இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் உங்களுக்குள் தங்கும் அந்நியர்களிலும் எவனாகிலும் இரத்தம் என்னப்பட்டதைப் புசித்தால், இரத்தத்தைப் புசித்த அவனுக்கு விரோதமாக நான் என் முகத்தைத் திருப்பி, அவன் தன் ஜனத்தில் இராதபடிக்கு அவனை அறுப்புண்டுபோகப்பண்ணுவேன்.

லேவி 17:11. மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே.

லேவி 17:12. அதினிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்க வேண்டாம், உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்க வேண்டாம் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்.

லேவி 17:13. இஸ்ரவேல் புத்திரரிலும் உங்களுக்குள் தங்குகிற அந்நியர்களிலும் எவனாகிலும் புசிக்கத்தக்க ஒரு மிருகத்தையாவது ஒரு பட்சியையாவது வேட்டையாடிப் பிடித்தால்,அவன் அதின் இரத்தத்தைச் சிந்தப்பண்ணி, மண்ணினால் அதை மூடக்கடவன்.

லேவி 17:14. சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது; இரத்தம் ஜீவனுக்குச் சமானம்; ஆகையால் எந்த மாம்சத்தின் இரத்தத்தையும் புசிக்கவேண்டாம்; சகல மாம்சத்தின் உயிரும் அதின் இரத்தந்தானே; அதைப் புசிக்கிற எவனும் அறுப்புண்டுபோவான் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்.

லேவி 17:15. தானாய் இறந்து போனதையாவது, பீறுண்டதையாவது, புசித்தவன் எவனும், அவன் சுதேசியானாலும் பரதேசியானாலும், தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பானாக; பின்பு சுத்தமாயிருப்பான்.

லேவி 17:16. அவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்காமலும், ஸ்நானம் பண்ணாமலும் இருந்தால், தன் அக்கிரமத்தைச் சுமப்பான் என்று சொல் என்றார்.

இரத்தம் புசிப்பதற்கு விரோதமாக கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார். இந்தப் பிரமாணம் ஏற்கெனவே சொல்லப்பட்டு, இங்கு மறுபடியுமாய் உறுதிபண்ணப்படுகிறது.

"கொழுப்பையாவது இரத்தத்தையாவது நீங்கள் புசிக்கலாகாது; இது உங்கள் வாசஸ்தலங்கள் எங்கும் உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும்" (லேவி 3:17).

"உங்கள் வாசஸ்தலங்களில் எங்கும் யாதொரு பறவையின் இரத்தத்தையாவது, யாதொரு மிருகத்தின் இரத்தத்தையாவது புசிக்கலாகாது" (லேவி 7:26).

இந்தப் பிரமாணம் நோவாவின் காலத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. "மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்" (ஆதி 9:4).

இஸ்ரவேல் புத்திரர் இரத்தம் புசிக்கக்கூடாது என்று கர்த்தர் இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். அவர்கள் ஏன் இரத்தத்தைப் புசிக்கக்கூடாது என்பதற்கான காரணத்தையும் கர்த்தர் இங்கு தெளிவுபடுத்துகிறார்.

"மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. அதினிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்க வேண்டாம், உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்க வேண்டாம் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்" (லேவி 17:11,12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்னும் இந்தக் காரணத்திற்காகத்தான் இரத்தம் புசிப்பது தடைபண்ணப்பட்டிருக்கிறது. இது மிகப்பெரிய பாவம். (லேவி 17:11,14). புதிய ஏற்பாட்டிலும் இரத்தம் புசிப்பது தடைபண்ணப்பட்டிருக்கிறது (அப் 15:20, 28-29).

இந்தப் பிரமாணத்தை மீறுகிறவர்களுக்கு கர்த்தர் கடினமான தண்டனையைக் கொடுக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் உங்களுக்குள் தங்கும் அந்நியர்களிலும் எவனாகிலும் இரத்தம் என்னப்பட்டதைப் புசித்தால், இரத்தத்தைப் புசித்த அவனுக்கு விரோதமாக நான் என் முகத்தைத் திருப்பி, அவன் தன் ஜனத்தில் இராதபடிக்கு அவனை அறுப்புண்டுபோகப்பண்ணுவேன்" (லேவி 17:10) என்று சொல்லுகிறார்.

ஆத்துமாவிற்காக பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிறவன் மரணத்திற்கு பாத்திரவானாயிருக்கிறான். ஆகையினால் பலியாக செலுத்தப்படும் மிருகம் கொல்லப்படவேண்டும். மாம்சத்தின் உயிர் இரத்தத்திலிருக்கிறது. இரத்தமே ஜனங்களுடைய ஆத்துமாக்களுக்காக பாவநிவிர்த்தி செய்கிறது.

ஒரு மனுஷன் மிருகத்தைக் கொல்லும்போது, அதன் இரத்தத்தைப் புசிக்காமல், அதை முழுவதுமாக கீழே சிந்திவிடவேண்டும். "இஸ்ரவேல் புத்திரரிலும் உங்களுக்குள் தங்குகிற அந்நியர்களிலும் எவனாகிலும் புசிக்கத்தக்க ஒரு மிருகத்தையாவது ஒரு பட்சியையாவது வேட்டையாடிப் பிடித்தால், அவன் அதின் இரத்தத்தைச் சிந்தப்பண்ணி, மண்ணினால் அதை மூடக்கடவன்" (லேவி 17:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பலியாக செலுத்தப்படும் மிருகத்தின் இரத்தத்தை பலிபீடத்தின்மீது தெளிக்கவேண்டும் அல்லது பூசவேண்டும் அல்லது ஊற்றவேண்டும். "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே" (லேவி 17:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபி 9:22).

ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் இரத்தத்தைப் புசிக்கக்கூடாது. "சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது; இரத்தம் ஜீவனுக்குச் சமானம்; ஆகையால் எந்த மாம்சத்தின் இரத்தத்தையும் புசிக்கவேண்டாம்; சகல மாம்சத்தின் உயிரும் அதின் இரத்தந்தானே; அதைப் புசிக்கிற எவனும் அறுப்புண்டுபோவான் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்" (லேவி 17:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரே பாவநிவாரண பலியின் பிரமாணத்தைநியமித்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் இரத்தத்தைப் புசிக்கக்கூடாது என்று கட்டளையிட்டு, கர்த்தர் பாவநிவாரண பலியின் பிரமாணத்தை கனம்பண்ணுகிறார்.

பாவநிவாரண பலியின் பிரமாணம் சடங்காச்சார பிரகாரமானது என்றும், புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளை இந்தப் பிரமாணம் கட்டுப்படுத்தாது என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே நம்முடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுகிறது. காளை வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தம், கிறிஸ்துவின் இரத்தத்திற்கு அடையாளமாக மாத்திரமே இருக்கிறது. ஆகையினால் இரத்தத்தைப் புசிப்பதினால் தவறு ஒன்றுமில்லை என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், மிருகங்களின் இரத்தம் நம்முடைய ஆத்துமாக்களுக்காக பாவநிவிர்த்தி செய்யாதபடியினால், அந்த இரத்தத்தை நம்முடைய சரீர ஆரோக்கியத்திற்காக புசிக்கலாம் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

மிருகங்களின் இரத்தத்தைப் புசிக்கும் விஷயத்தில் வேதபண்டிதர்களுக்கிடையே கருத்து வேறுபாடு உள்ளது. அமெரிக்க தேசத்தைச் சேர்ந்த கர்த்தருடைய பிள்ளைகள் மிருகங்களின் இரத்தத்தைப் புசிப்பதில்லை. ஐரோப்பிய தேசங்களை சேர்ந்த கர்த்தருடைய பிள்ளைகள் மிருகங்களின் இரத்தத்தைப் புசிக்கிறார்கள்.

முறையாக பலியிடப்படாத மிருகங்களைப் புசிப்பதற்கு விரோதமான பிரமாணத்தையும் கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "தானாய் இறந்துபோனதையாவது, பீறுண்டதையாவது, புசித்தவன் எவனும், அவன் சுதேசியானாலும் பரதேசியானாலும், தன் வஸ்திரங்களைத் தோய்த்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பானாக; பின்பு சுத்தமாயிருப்பான். அவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்காமலும், ஸ்நானம் பண்ணாமலும் இருந்தால், தன் அக்கிரமத்தைச் சுமப்பான் என்று சொல்" (லேவி 17:15,16) என்று சொல்லுகிறார்.

18 அதிகாரம்

இஸ்ரவேல் ஜனத்தார் புறஜாதியாருடைய செய்கையின்படி செய்யக்கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 19:1-5). விபசாரத்திற்கு விரோதமான பிரமாணம் (லேவி 19:6-18). மிருகத்தைப் புணருவது, விக்கிரகாராதனை ஆகியவற்றிற்கு விரோதமான பிரமாணம் (லேவி 19:19-23). கானான் தேசத்தார் அருவருப்பான காரியங்களை செய்து தங்களை தீட்டுப்படுத்தினதினால் அவர்கள் அழிந்துபோனார்கள் (லேவி 19:24-30).

கர்த்தருடைய நியமங்களும் கட்டளைகளும் லேவி 18:1-5

லேவி 18:1. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 18:2. நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

லேவி 18:3. நீங்கள் குடியிருந்த எகிப்துதேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும், நான் உங்களை அழைத்துப் போகிற கானான் தேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும், அவர்களுடைய முறைமைகளின்படி நடவாமலும்,

லேவி 18:4. என்னுடைய நியாயங்களின்படி செய்து, என்னுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

லேவி 18:5. ஆகையால் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்; நான் கர்த்தர்.

கர்த்தர் இதுவரையிலும் சடங்காச்சார ரீதியான பிரமாணங்களையும், சுத்திகரிப்பு முறைகளையும் சொன்னார். இப்போதோ கர்த்தர் நீதிநெறி பிரமாணங்களைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் சொல்லப்பட்ட சடங்காச்சார பிரமாணங்கள், புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு அடையாளங்களாகயிருக்கிறது. ஆனாலும், பழைய ஏற்பாட்டுக்காலத்தில் சொல்லப்பட்ட நீதிநெறி பிரமாணங்கள், புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமும் கீழ்ப்படியவேண்டிய பிரமாணங்களாயிருக்கிறது.

சடங்காச்சார பிரமாணங்கள் நமக்கு அடையாளம். நீதிநெறி பிரமாணங்களோ நாம் கைக்கொள்ள வேண்டிய கட்டளைகளாயும், நியாயங்களாயும் இருக்கிறது.

கர்த்தரே இந்தப் பிரமாணத்தை சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கட்டளைகளையும் நியாயங்களையும் கொடுக்கும் அதிகாரம் கர்த்தருக்குள்ளது. ஏனென்றால், கர்த்தர் அவர்கள் தேவனாயிருக்கிறார். கர்த்தர் தம்மைப்பற்றிச் சொல்லும்போது, "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 18:2) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக அதிகாரத்தினால் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய நியாயங்களையும், கட்டளைகளையும் சொல்லுகிறார். "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" என்னும் வாக்கியம் இந்த அதிகாரத்தில் மூன்று இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (லேவி 18:2,4,30).

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலே இருந்தார்கள். எகிப்து தேசம் விக்கிரகாராதனை நிரம்பிய தேசம். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, கானான் தேசத்திற்கு வழிநடத்தி கொண்டு போகிறார்.

கானான் தேசமும் விக்கிரகாராதனை நிரம்பிய தேசம். அங்கே அசுத்தமான அருவருப்புக்கள் ஏராளமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பரிசுத்தமான ஜாதியார். அவர்கள் புறஜாதியாரின் பழக்க வழக்கங்களை பின்பற்றி, தங்களை அசுத்தம்பண்ணிக்கொள்ளக்கூடாது.

கர்த்தர் தம்முடைய நியாயங்களையும் கட்டளைகளையும் மோசேயினிடத்தில் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்ல வேண்டியது என்னவென்றால்" *(லேவி 18:1,2)* என்று சொல்லி தம்முடைய நீதிநெறி பிரமாணங்களை சொல்ல ஆரம்பிக்கிறார்.

"நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். நீங்கள் குடியிருந்த எகிப்துதேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும், நான் உங்களை அழைத்துப் போகிற கானான் தேசத்தாருடைய செய்கையின்படி செய்யாமலும், அவர்களுடைய முறைமைகளின்படி நடவாமலும், என்னுடைய நியாயங்களின்படி செய்து, என்னுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" *(லேவி 18:3,4)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தாங்கள் குடியிருந்த எகிப்து தேசத்தின் விக்கிரகாராதனையினால் தங்களை தீட்டுப்படுத்திக் கொள்ளக்கூடாது. கர்த்தர் அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார். அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அதே வேளையில் அந்த தேசம் விக்கிரகாரதனை நிரம்பிய தேசம்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அந்த தேசத்தின் விக்கிரகாராதனையினாலும், அசுத்தங்களினாலும், அருவருப்புக்களினாலும் தங்களை தீட்டுப்படுத்திக்கொள்ளக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் தமக்கு பரிசுத்த ஜாதியாயிருக்கவேண்டும் என்று கர்த்தர் அவர்களுக்கு தெளிவுபடுத்துகிறார். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாகவே, கானான் தேசத்தின் விக்கிரகாராதனையைப்பற்றியும், அருவருப்புக்களைப்பற்றியும் அவர்களுக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் புறஜாதியாருடைய செய்கையின்படியும், முறைமையின்படியும் செய்யாமலிருந்தால் மாத்திரம் போதாது. அவர்கள் கர்த்தருடைய நியாயங்களின்படியும் செய்யவேண்டும். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொண்டு நடக்கவும் வேண்டும்.

எல்லோரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள். தன்னிடத்தில் பாவமில்லை என்று யாராலும் சொல்ல முடியாது. பாவமே இல்லாத பரிபூரணமான பரிசுத்த மனுஷன் ஒருவனுமில்லை. ஆனாலும் நம்முடைய ஜீவியத்திலே நாம் கர்த்தருடைய நியாயங்களின்படி செய்ய வேண்டும். அவருடைய கட்டளைகளை உண்மையாய்க் கைக்கொண்டு நடக்கவேண்டும்.

நம்முடைய ஜீவியத்தில் பரிபூரணமான பரிசுத்தம் காணப்படாவிட்டாலும், நாம் கர்த்தருடைய கட்டளைகளை உண்மையாய்க் கைக்கொண்டு நடக்கும்போது, நம்முடைய மனதிலே ஆறுதலும் சந்தோஷமும் உண்டாகும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆறுதலையும் சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றால், கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பதை தவிர வேறு வழி எதுவுமில்லை.

"ஆகையால் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்; நான் கர்த்தர்" *(லேவி 18:5)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"மோசே நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியைக்குறித்து: இவைகளைச் செய்கிறமனுஷன் இவைகளால் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறான்" *(ரோம 10:5).*

"நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான்" *(கலா 3:12).*

நியாயப்பிரமாணத்தை செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான் என்பது சத்தியமான வார்த்தை. ஆனாலும் ஒருவராலும் நியாயப்பிரமாணத்திலே பிழைக்க முடியாது. நியாயப்பிரமாணத்தினால் ஜீவிப்பது என்பது வேறு, நியாயப்பிரமாணத்திலே ஜீவிப்பது என்பது வேறு. நியாயப்பிரமாணம் நமக்கு ஜீவனைக் கொடுக்காது. ஏனென்றால் யாராலும் நியாயப்பிரமாணத்திற்கு பரிபூரணமாய்க் கீழ்ப்படிய முடியாது. எந்த ஒரு மனுஷனாலும் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை முழுமையாய்க் கைக்கொள்ள முடியாது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் நியாயப்பிரமாணத்தை சார்ந்து ஜீவியாமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை சார்ந்து ஜீவிக்கவேண்டும். நம்முடைய சுயகிரியைகளினால் வரும் நீதியின்மீது நாம் சார்ந்திராமல், இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையின்மீது சார்ந்திருக்கவேண்டும்.

"நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள் நியாயப்பிரமாணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா? இதை எனக்குச் சொல்லுங்கள். ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது; ஒருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன், ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன்" *(கலா 4:21,22).*

விபசாரம் செய்யாதிருப்பாயாக லேவி 18:6-18

லேவி 18:6. ஒருவனும் தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியை நிர்வாணமாக்கும்படி அவளைச் சேரலாகாது; நான் கர்த்தர்.

லேவி 18:7. உன் தகப்பனையாவது உன் தாயையாவது நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தாயானவள்; அவளை நிர்வாணமாக்கலாகாது.

லேவி 18:8. உன் தகப்பனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது; அது உன் தகப்பனுடைய நிர்வாணம்.

லேவி 18:9. உன் தகப்பனுக்காவது உன் தாய்க்காவது வீட்டிலாகிலும் புறத்திலாகிலும் பிறந்த குமாரத்தியாகிய உன் சகோதரியை நிர்வாணமாக்கலாகாது.

லேவி 18:10. உன் குமாரனுடைய மகளையாவது உன் குமாரத்தியினுடைய மகளையாவது நிர்வாணமாக்கலாகாது; அது உன்னுடைய நிர்வாணம்.

லேவி 18:11. உன் தகப்பனுடைய மனைவியினிடத்தில் உன் தகப்பனுக்குப் பிறந்த குமாரத்தியை நிர்வாணமாக்கலாகாது; அவள் உனக்குச் சகோதரி.

லேவி 18:12. உன் தகப்பனுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தகப்பனுக்கு நெருங்கின இனமானவள்.

லேவி 18:13. உன் தாயினுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தாய்க்கு நெருங்கின இனமானவள்.

லேவி 18:14. உன் தகப்பனுடைய சகோதரனை நிர்வாணமாக்கலாகாது; அவன் மனைவியைச் சேராயாக; அவள் உன் தகப்பனுடைய சகோதரி.

லேவி 18:15. உன் மருமகளை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் குமாரனுக்கு மனைவி, அவளை நிர்வாணமாக்கலாகாது.

லேவி 18:16. உன் சகோதரனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது; அது உன் சகோதரனுடைய நிர்வாணம்.

லேவி 18:17. ஒரு ஸ்திரீயையும் அவள் மகளையும் நிர்வாணமாக்கலாகாது; அவளுடைய குமாரரின் மகளையும் அவளுடைய குமாரத்தியின் மகளையும் நிர்வாணமாக்கும்படி விவாகம்பண்ணலாகாது; இவர்கள் அவளுக்கு நெருங்கின இனமானவர்கள்; அது முறைகேடு.

லேவி 18:18. உன் மனைவி உயிரோடிருக்கையில், அவளுக்கு உபத்திரவமாக அவள் சகோதரியையும் நிர்வாணமாக்கும்பொருட்டு அவளை விவாகம்பண்ணலாகாது.

பத்துக்கட்டளைகளில் ஏழாவது கட்டளையாக "விபசாரம் செய்யாதிருப்பாயாக" என்னும் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லும் பிரமாணம், ஏழாவது கட்டளையோடு தொடர்புடையது. "ஒருவனும் தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியை நிர்வாணமாக்கும்படி அவளைச் சேரலாகாது; நான் கர்த்தர்" (லேவி 18:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியை நிர்வாணமாக்குவது பற்றிய பிரமாணத்தை கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். யாரெல்லாம் நெருங்கிய இனத்தாளாயிருக்கிறாள் என்னும் விவரம் வருமாறு :

1. தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தி (லேவி 18:6)
2. தகப்பன் (லேவி 18:7; ஆதி 19:31-38)
3. தாய் (லேவி 18:7).
4. தகப்பனுடைய மனைவி (லேவி 18:8; லேவி 20:11; உபா 27:20; ஆதி 35:22; 2சாமு 16:20-23; 1இராஜா 2:17; 2கொரி 5:1-5)
5. சகோதரி (லேவி 18:9)
6. தகப்பனுடைய குமாரத்தி (லேவி 18:9; ஆதி 20:12; 2சாமு 13:12,16,20; எசே 22:11)
7. தாயினுடைய குமாரத்தி (லேவி 18:9)
8. குமாரனுடைய மகள் (லேவி 18:10)
9. குமாரத்தியினுடைய மகள் (லேவி 18:10)
10. தகப்பனுடைய மனைவியினிடத்தில் உன் தகப்பனுக்குப் பிறந்த குமாரத்தி (லேவி 18:11)
11. தகப்பனுடைய சகோதரி (லேவி 18:12; யாத் 6:20)
12. தாயினுடைய சகோதரி (லேவி 18:13)
13. தகப்பனுடைய சகோதரன் (லேவி 18:14)
14. தகப்பனுடைய சகோதரனுடைய மனைவி (லேவி 18:14)
15. மருமகள் (லேவி 18:15)
16. சகோதரனுடைய மனைவி (லேவி 18:16). தன் சகோதரன் சந்தானமில்லாமல் மரித்துப் போனால், அவன் மனைவியை விவாகம்பண்ணி, அவளுக்குப் புத்திர சந்தானம் கொடுக்கலாம். (உபா 25:5; மத் 22:24-30)
17. ஒரு ஸ்திரீயையும், அவள் மகளையும் (லேவி 18:17)
18. ஒரு ஸ்திரீயையும், அவளுடைய குமாரரின் மகளையும் (லேவி 18:17)
19. ஒரு ஸ்திரீயையும், அவள் குமாரத்தியின் மகளையும் (லேவி 18:17)
20. உன் மனைவியையும், அவளுடைய சகோதரியையும் (லேவி 18:18). யாக்கோபிற்கு ராகேல், லேயாள் ஆகியோரைத் திருமணம் செய்ததால் பலபிரச்சனைகள் வந்தன. (ஆதி 29:15-30:24)

நெருங்கிய உறவுக்காரரை திருமணம் செய்வதை கர்த்தர் தம்முடைய பிரமாணத்தின் மூலமாக தடைபண்ணுகிறார். விவாகம் பரிசுத்தமானது. விவாகமஞ்சம் தேவனுடைய தெய்வீக நியமம். குடும்ப வாழ்க்கை பரிசுத்தமானதாகவும் கண்ணியமானதாகவும் இருக்கவேண்டும். திருமண வாழ்க்கையில் இணைக்கப்பட்ட தம்பதியினர் பரிசுத்தமான சந்ததியை பெற்றெடுக்கவேண்டும்.

மனுஷருக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசமுள்ளது. மனுஷர் மிருகங்களைவிட பல விஷயங்களில் மேன்மையானவர்கள். மனுஷர் கண்ணியமும் ஒழுக்கமுமுள்ளவர்கள். மிருகங்களுக்கு இடையே திருமணம் நடைபெறுவதில்லை. அவை தங்கள் இஷ்டம்போல ஜீவித்து இனவிருத்தி செய்யும். கர்த்தரோ மனுஷருக்கு விவாக மஞ்சத்தை நியமனம் செய்திருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக அதிகாரத்தினால் மனுஷர் மத்தியிலே விவாக உறவுகளையும், பாலுறவுகளையும் கட்டுப்படுத்தி ஆளுகை செய்கிறார். மனுபுத்திரர் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது, அவர்களுக்கு ஆறுதலும், சமாதானமும், சரீர ஆரோக்கியமும் உண்டாகும்.

திருமணத்தின் மூலமாக கணவனும் மனைவியும் ஒரே மாம்சமாக இணைக்கப்படுகிறார்கள். அவர்கள் இருவரும் இயற்கையின் ரீதியாக ஒரே சரீரமுள்ளவர்களல்ல. கணவனுக்கும் மனைவிக்கும் வெவ்வேறு சரீரமுள்ளது. அவ்விரண்டு சரீரங்களும் திருமணத்தின் மூலமாக ஒரே சரீரமாக இணைக்கப்படுகிறது. இயற்கையின் பிரமாணத்தினால் இணைக்க முடியாத இரண்டு சரீரங்களை, கர்த்தர் விவாக பிரமாணத்தின் மூலமாக, ஒரே சரீரமாக இணைக்கிறார்.

திருமணத்தின் மூலமாக கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளும், வேற்றுமைகளும், உயர்வு தாழ்வுகளும் அகற்றப்பட்டு, அவர்கள் இருவரும் சமமான நிலமையிலே இணைக்கப்படுகிறார்கள். திருமணமாவதற்கு முன்பாக புருஷனும் ஸ்திரீயும் எஜமானனாகவும், வேலைக்காரியாகவும் இருந்திருக்கலாம். அவர்கள் இருவரும் ஐசுவரியமுள்ளவனாகவும், தரித்திரமுள்ளவளாகவும் இருந்திருக்கலாம். அவர்களுடைய சமுதாய அந்தஸ்து, பொருளாதார நிலை ஆகியவற்றில் எப்படிப்பட்ட வித்தியாசம் இருந்தாலும், திருமணத்திற்கு பின்பு அவர்கள் இருவரும் சமநிலையிலுள்ள தம்பதிகளாக இணைக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

இரத்த சம்பந்தமுள்ள நெருங்கிய உறவினருக்கிடையே திருமணம் செய்து கொள்வதை கர்த்தர் தடைபண்ணுகிறார்.

உன் தகப்பனையாவது உன் தாயையாவது நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தாயானவள்; அவளை நிர்வாணமாக்கலாகாது என்றும், உன் தகப்பனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது; அது உன் தகப்பனுடைய நிர்வாணம் என்றும் (லேவி 18:7,8) கர்த்தர் சொல்லுகிறார்.

உன் தகப்பனுக்காவது உன் தாய்க்காவது வீட்டிலாகிலும் புறத்திலாகிலும் பிறந்த குமாரத்தியாகிய உன் சகோதரியை நிர்வாணமாக்கலாகாது. உன் குமாரனுடைய மகளையாவது உன் குமாரத்தியினுடைய மகளையாவது நிர்வாணமாக்கலாகாது; அது உன்னுடைய நிர்வாணம் (லேவி 18:9,10) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த வசனத்தில் "நிர்வாணமாக்கலாகாது" என்னும் வாக்கியத்திற்கு நெருங்கிய உறவுக்கார ஸ்திரீயைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்பது பொருளாகும் (லேவி 18:6-19)

உன் தகப்பனுடைய மனைவியினிடத்தில் உன் தகப்பனுக்குப் பிறந்த குமாரத்தியை நிர்வாணமாக்கலாகாது; அவள் உனக்குச் சகோதரி. உன் தகப்பனுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தகப்பனுக்கு நெருங்கின இனமானவள் (லேவி 18:11,12) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தன் தகப்பனுக்கு பிறந்த குமாரத்தியை நிர்வாணமாக்கலாகாது ஆபிரகாமின் காலத்தில் இந்தப் பிரமாணம் கொடுக்கப்படவில்லை. இது அக்காலத்திலேயே அமுலில் இருந்ததானால் ஆபிரகாம் சாராளைத் திருமணம் செய்திருக்கமாட்டார். (ஆதி 20:12).

உன் தாயினுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தாய்க்கு நெருங்கின இனமானவள். உன் தகப்பனுடைய சகோதரனை நிர்வாணமாக்கலாகாது; அவன் மனைவியைச் சேராயாக; அவள் உன் தகப்பனுடைய சகோதரி (லேவி 18:13,14) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

உன் மருமகளை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் குமாரனுக்கு மனைவி, அவளை நிர்வாணமாக்கலாகாது. உன் சகோதரனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது; அது உன் சகோதரனுடைய நிர்வாணம் (லேவி 18:15,16) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஒரு ஸ்திரீயையும் அவள் மகளையும் நிர்வாணமாக்கலாகாது; அவளுடைய குமாரரின் மகளையும் அவளுடைய குமாரத்தியின் மகளையும் நிர்வாணமாக்கும்படி விவாகம்பண்ணலாகாது; இவர்கள் அவளுக்கு நெருங்கின இனமானவர்கள்; அது முறைகேடு. உன் மனைவி உயிரோடிருக்கையில், அவளுக்கு உபத்திரவமாக அவள் சகோதரியையும் நிர்வாணமாக்கும்பொருட்டு அவளை விவாகம்பண்ணலாகாது (லேவி 18:17,18) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

யாக்கோபின் காலத்தில் இந்தப் பிரமாணம் இருந்திருந்தால் அவர் தன் சகோதர உறவுமுறையிலான ஸ்திரீகளைத் திருமணம் செய்திருக்கமாட்டார் (ஆதி 29:16-31).

இரத்தம் சம்பந்தமுள்ள நெருங்கிய உறவினரிடையே தாம்பத்திய உறவு இருந்தால், அவர்களுக்கு பிறக்கும் பிள்ளைகள் ஆரோக்கியமாயிருக்காது என்றும், அவை அங்கவீனமாயிருப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது என்றும் மருத்துவர்கள் சொல்லுகிறார்கள்.

திருமண விஷயத்திலே கர்த்தர் சொல்லியிருக்கிற பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், அதை மீறி விவாகம்பண்ணுகிறவர்களின் மனதிலே குற்றவுணர்வு உண்டாகும். பாவத்தினால் குற்றவுணர்வு உண்டானவர்கள் கர்த்தரோடு சமாதானமாகவும், ஐக்கியமாகவும் இருக்க முடியாது.

நெருங்கிய உறவினரிடையே விவாக சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்வது கர்த்தருடைய பிரமாணத்தை மீறுகிற செயல். இது கர்த்தருடைய பார்வையில் அசுத்தமானதாகவும், அருவருப்பானதாகவும் இருக்கிறது. கர்த்தர் தடைபண்ணியிருக்கிறதை மனுஷன் விலக்கவேண்டும்.

"என்னுடைய நியாயங்களின்படி செய்து, என்னுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 18:4) என்று கர்த்தர் சொல்லுகிறார். பலிசெலுத்துவதைவிட கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதே உத்தமம்.

இரத்த சம்பந்தமான நெருங்கிய உறவினரிடையே விவாக சம்பந்தம் நடைபெறுவதை கர்த்தர் தடைபண்ணுகிறார். கர்த்தர் அதை தடைபண்ணுவதற்கான காரணத்தையும் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

"உன் சகோதரனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது; அது உன் சகோதரனுடைய நிர்வாணம்" (லேவி 18:16) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம், ஒருவன் புத்திர சந்தானமில்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரனோ அல்லது நெருங்கிய உறவினனோ, அவனுடைய விதவை மனைவியை விவாகம் செய்து, அவனுக்கு புத்திர சந்தானம் உண்டுபண்ணவேண்டும்.

"சகோதரர் ஒன்றாய்க் குடியிருக்கும் போது, அவர்களில் ஒருவன் புத்திரசந்தானமில்லாமல் மரித்தால், மரித்தவனுடைய மனைவி புறத்திலிருக்கிற அந்நியனுக்கு மனைவியாகக்கூடாது; அவளுடைய புருஷனின் சகோதரன் அவளைத் தனக்கு மனைவியாகக் கொண்டு, அவளிடத்தில் சேர்ந்து, புருஷனுடைய சகோதரன் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்" (உபா 25:5).

கர்த்தர் இந்த வசனப்பகுதியில் இரண்டு விதமான விவாக பிரமாணங்களை சொல்லியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார், தங்களுடைய சமுதாய சூழ்நிலைகளுக்கேற்ற பிரகாரம், கர்த்தருடைய பிரமாணங்களில் ஒரு பிரமாணத்தை தேர்ந்தெடுத்து, கர்த்தருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் கைக்கொண்டு ஜீவிக்கிறார்கள்.

அருவருப்புக்கள்
லேவி 18:19-30

லேவி 18:19. ஸ்திரீயானவள் சூதகத்தால் விலக்கத்திலிருக்கையில், அவளை நிர்வாணமாக்க அவளோடே சேராதே.

லேவி 18:20. பிறனுடைய மனைவியோடே சேரும்படி சயனித்து, அவளால் உன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளவேண்டாம்.

லேவி 18:21. நீ உன் சந்ததியில் யாரையாகிலும் மோளேகுக்கென்று தீக்கடக்கும்படி இடங்கொடாதே; உன் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதே; நான் கர்த்தர்.

லேவி 18:22. பெண்ணோடு சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம் பண்ணவேண்டாம்; அது அருவருப்பானது.

லேவி 18:23. யாதொரு மிருகத்தோடும் நீ புணர்ச்சிசெய்து, அதினாலே உன்னைத் தீட்டுப்படுத்தவேண்டாம்; ஸ்திரீயானவள் மிருகத்தோடே புணரும்படி அதற்கு முன்பாக நிற்கலாகாது; அது அருவருப்பான தாறுமாறு.

லேவி 18:24. இவைகளில் ஒன்றினாலும் உங்களைத் தீட்டுப்படுத்தாதிருங்கள்; நான் உங்கள் முன்னின்று துரத்திவிடுகிற ஜாதிகள் இவைகளெல்லாவற்றினாலும் தங்களைத் தீட்டுப்படுத்தியிருக்கிறார்கள்; தேசமும் தீட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

லேவி 18:25. ஆகையால் அதின் அக்கிரமத்தை விசாரிப்பேன்; தேசம் தன் குடிகளைக் கக்கிப்போடும்.

லேவி 18:26. இந்த அருவருப்புகளையெல்லாம் உங்களுக்குமுன் இருந்த அந்த தேசத்தின் மனிதர் செய்ததினாலே தேசம் தீட்டாயிற்று.

லேவி 18:27. இப்பொழுதும் உங்களுக்கு முன் இருந்த ஜாதிகளை தேசம் கக்கிப்போட்டதுபோல, நீங்கள் அதைத் தீட்டுப்படுத்தும்போது அது உங்களையும் கக்கிப் போடாதபடிக்கு,

லேவி 18:28. நீங்கள் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொண்டு, தேசத்திலே பிறந்தவனானாலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியனானாலும் இந்த அருவருப்புகளில் ஒன்றையும் செய்ய வேண்டாம்.

லேவி 18:29. இப்படிப்பட்ட அருவருப்பானவைகளில் யாதொன்றை யாராவது செய்தால், செய்த அந்த ஆத்துமாக்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவார்கள்.

லேவி 18:30. ஆகையால் உங்களுக்குமுன் செய்யப்பட்ட அருவருப்பான முறைமைகளில் யாதொன்றை நீங்கள் செய்து, அவைகளால் உங்களைத் தீட்டுப்படுத்திக்கொள்ளாதபடிக்கு என் கட்டளையைக் கைக்கொள்ளுங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார்.

கர்த்தர் விவாக சம்பந்தமான பிரமாணத்தை சொல்லுகிறார். விவாகம்பண்ணியவர்களும் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, ஆரோக்கியமான சூழ்நிலையில் தாம்பத்திய உறவை வைத்துக்கொள்ளவேண்டும். "ஸ்திரீயானவள் சூதகத்தால் விலக்கத்திலிருக்கையில், அவளை நிர்வாணமாக்க அவளோடே சேராதே" (லேவி 18:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் இரத்த சம்பந்தமான நெருங்கிய உறவினரிடையே விவாக சம்பந்தம் பண்ணக்கூடாது. அவர்கள் நெருங்கிய உறவுக்காரராய் இல்லாவிட்டாலும், கர்த்தருடைய பிரமாணத்தின்படியே, தாம்பத்திய உறவை வைத்துக்கொள்ளவேண்டும். "பிறனுடைய மனைவியோடே சேரும்படி சயனித்து, அவளால் உன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளவேண்டாம்" *(லேவி 18:20)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிரமாணம் விக்கிரகாராதனைக்கு விரோதமாக சொல்லப்பட்டிருக்கிறது. பூர்வகாலத்தில் புறஜாதியார் மோளேகு என்னும் விக்கிரகத்தை ஆராதித்து, அந்த விக்கிரகத்திற்கு தங்களுடைய பிள்ளைகளை உயிரோடு அக்கினியினிலே தகனித்து பலிசெலுத்தினார்கள்.

"நீ உன் சந்ததியில் யாரையாகிலும் மோளேகுக்கென்று தீக்கடக்கும்படி இடங்கொடாதே; உன் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதே; நான் கர்த்தர்" *(லேவி 18:21)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

புறஜாதியார் மோளேகு என்னும் விக்கிரகத்தை சூரியனுக்கு அடையாளமாக பாவித்து ஆராதனை செய்தார்கள். சூரியன் இந்த உலகத்திலே மிகப்பெரிய அக்கினியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும், மோளேகு அந்த அக்கினிக்கு அடையாளமாயிருக்கிறது என்றும் புறஜாதியார் நம்பினார்கள். மோளேகுக்கு பலிசெலுத்துவதற்காக புறஜாதியார், தங்கள் பிள்ளைகளை அக்கினியிலே தகனித்தார்கள்.

மோளேகுக்கென்று ஒரு பிள்ளையை அக்கினியில் தகனிக்கும்போது, தங்களுடைய மற்ற பிள்ளைகள் ஆசீர்வாதமாயிருக்கும் என்பது புறஜாதியாரின் நம்பிக்கை. கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரருடைய சந்ததியில் யாரையாகிலும் மோளேக்குகென்று தீக்கடக்கும்படி இடம் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறார்.

ஜனங்கள் தேவனைப் பற்றிய தரிசனத்தை இழந்து போகிறார்கள். சந்திரனையும், சூரியனையும், நட்சத்திரங்களையும், பிசாசுகளையும், விக்கிரகங்களையும் ஆராதிக்கிறார்கள். அவர்களுடைய ஆராதனைகளில் ஆபாசங்களும் கலந்துவிடுகிறது. தங்களுடைய குமாரரையும், குமாரத்திகளையும் விக்கிரகங்களுக்குப் பலியாக அக்கினியில் சுட்டெரிக்கிறார்கள்.

பூர்வகாலங்களில் புறஜாதி மார்க்கத்து ஆராதனைகளில் தங்களுடைய தெய்வங்களுக்கு மனுஷருடைய இரத்தங்களைப் பலிசெலுத்தினார்கள். மோளேகு என்பதற்கு இராஜா என்று பொருள். இது அம்மோன் புத்திரரின் முக்கியமான தெய்வமாகும்.

எகிப்து தேசத்தில் மோளேகை அமூன், அமூன்ரா என்னும் தெய்வங்களாக வழிபட்டார்கள். இதற்கு தெய்வங்களின் ராஜா என்று பொருள். இந்த தெய்வம் வெண்கலத்தினால் செய்யப்பட்ட சிலை. இது எப்போதும் தன் கையை விரித்தவாறு நீட்டிக் கொண்டிருக்கும். இந்த வெண்கல சிலைக்குள் எப்பொழுதும் அக்கினி எரிந்து கொண்டிருக்கும். விரிக்கப்பட்டிருக்கும் வெண்கல கை சூடாக இருக்கும்.

மோளேகிற்குப் பிள்ளைகளைப் பலியிடுகிறவர்கள் அந்தக் குழந்தைகளைச் சூடான வெண்கலக்கைகளில் வைத்து விடுவார்கள். குழந்தைகள் பொசுங்கி செத்துப்போகும். ஆகாஸ் இராஜா மோளேகிற்கு பலிசெலுத்தினான் என்று வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது *(2இராஜா 16:3,19-20; 2நாளா 28:3)*.

"நான் கர்த்தர்" என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நிய தெய்வங்களைப்பற்றி கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எடுத்துக் கூறும்போது, தம்மை மெய்யான தேவனாகத் தமது ஜனங்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்.

கர்த்தருடைய பார்வையில் ஓரினச்சேர்க்கை, மிருகத்தோடு புணர்ச்சி செய்வது ஆகியவையெல்லாம் அருவருப்பாயிருக்கிறது. இவை இயற்கையான சம்யோகமல்ல. மனுஷர் தங்களுடைய காமஇச்சைகளுக்கு அடிமைப்பட்டு, இதுபோன்ற அருவருப்பான காரியங்களை செய்கிறார்கள்.

"பெண்ணோடு சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம் பண்ணவேண்டாம்; அது அருவருப்பானது. யாதொரு மிருகத்தோடும் நீ புணர்ச்சிசெய்து, அதினாலே உன்னைத் தீட்டுப்படுத்த வேண்டாம்; ஸ்திரீயானவள் மிருகத்தோடே புணரும்படி அதற்கு முன்பாக நிற்கலாகாது; அது அருவருப்பான தாறுமாறு" (லேவி 18:22,23) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாவிகள் தங்களுடைய பாவமான காரியங்களினால் தங்களைத் தீட்டுப்படுத்திக்கொள்கிறார்கள். தீட்டான பாவமெல்லாம் அருவருப்பான தாறுமாறாயிருக்கிறது. எல்லா பாவங்களும் நம்முடைய மனச்சாட்சியை தீட்டுப்படுத்துகிறது. இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற பாவங்கள் நம்மைத் தீட்டுப்படுத்துவதோடு, அவை அருவருப்பான தாறுமாறாகவும் இருக்கிறது.

ஓரினச்சேர்க்கை அருவருப்பானது. இது பாவமான கிரியை. வேதாகமத்தில் இந்தப் பாவத்திற்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது (லேவி 18:22,26-29; லேவி 20:13; ரோமர் 1:18-32). லேவி 18:19-23 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஏழு பாவங்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது (லேவி 18:24-29).

இப்படிப்பட்ட அருவருப்பானவைகளில் யாதொன்றை யாராவது செய்தால், செய்த அந்த ஆத்துமாக்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவார்கள் (லேவி 18:29) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த வசனத்தில் "யாராவது" என்னும் வாக்கியம் இஸ்ரவேல் புத்திரரையும், புறஜாதியாரையும் குறிக்கும். கிருபைப் பிரமாணம் இவர்களை நியாயத்தீர்ப்பிலிருந்து தப்புவிக்காது. மீறுகிறவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படும்.

மாம்சத்தின் இச்சைகள் ஆத்துமாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறது. நம்முடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு நாம் இடங்கொடுத்து, பாவமான காரியங்களை செய்யும்போது கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் நம்மை விட்டு விலகிப்போகும். நம்முடைய ஆத்துமாவும் அழிந்துபோகும். கானானியர்கள் இதுபோன்ற தாறுமாறான அருவருப்புக்களை செய்து தங்களை தீட்டுப்படுத்திக் கொண்டார்கள்.

"இவைகளில் ஒன்றினாலும் உங்களைத் தீட்டுப்படுத்தாதிருங்கள்; நான் உங்கள் முன்னின்று துரத்திவிடுகிற ஜாதிகள் இவைகளெல்லாவற்றினாலும் தங்களைத் தீட்டுப்படுத்தியிருக்கிறார்கள்; தேசமும் தீட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது" (லேவி 18:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கானான் தேசத்தார் அருவருப்பான பாவங்களை செய்து அழிந்துபோனார்கள். கர்த்தர் அவர்களுடைய அக்கிரமத்தை விசாரித்தார். கானான் தேசம் அக்கிரமமும் அருவருப்பும் செய்த தன் குடிகளை கக்கிப்போட்டது (லேவி 18:25). கானானியர்கள் தங்கள் அக்கிரமத்தினால் அழிந்துபோனார்கள்.

இந்த அருவருப்புகளையெல்லாம் உங்களுக்குமுன் இருந்த அந்த தேசத்தின் மனிதர் செய்ததினாலே தேசம் தீட்டாயிற்று. இப்பொழுதும் உங்களுக்கு முன் இருந்த ஜாதிகளை தேசம் கக்கிப்போட்டதுபோல, நீங்கள் அதைத் தீட்டுப்படுத்தும்போது அது உங்களையும் கக்கிப் போடாதபடிக்கு, நீங்கள் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொண்டு, தேசத்திலே பிறந்தவனானாலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியனானாலும் இந்த அருவருப்புகளில் ஒன்றையும் செய்ய வேண்டாம் (லேவி 18:26-28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் ஒரு சில பாவங்களுக்கு மரணதண்டனை கொடுக்கிறார். அப்படிப்பட்ட பாவங்களின் விவரம் வருமாறு :

1. நெருங்கிய உறவினரைத் திருமணம் செய்வது அல்லது அவர்களோடு விபசாரம் பண்ணுவது (லேவி 18:6-18,24-30)

2. சூதகஸ்திரீயோடு உடலுறவு கொள்வது. (லேவி 18:19)

3. வேசித்தனம் (லேவி 18:20; யாத் 20:14)

4. விக்கிரகாராதனை (லேவி 18:21; யாத் 20:4)

5. தேவதூஷணம் (லேவி 18:21;யாத் 20:7)

6. ஓரினச்சேர்க்கை (லேவி 18:22; லேவி 20:13)

7. மிருகங்களோடு புணர்வது (லேவி 18:23; யாத் 22:19)

கானான் தேசத்திலுள்ள எல்லா புறஜாதியாரும் இந்தப் பாவங்களைச் செய்தார்கள். (லேவி 18:24,27-29) கானான் தேசத்தாருடைய பாவங்களுக்காக அவர்கள் அழிக்கப்பட்டார்கள். அவர்களுடைய கானான் தேசம் இஸ்ரவேல் புத்திரருக்குக் காணியாட்சியாகக் கொடுக்கப்பட்டது. (லேவி 18:24-30).

"உங்களுக்கு முன் இருந்த ஜாதிகளை தேசம் கக்கிப்போட்டதுபோல, நீங்கள் அதை தீட்டுப்படுத்தும்போது தேசம் உங்களையும் கசக்கிப்போடும்" (லேவி 18:27) என்று கர்த்தர் சொல்லுகிறார். பின்வாங்கிப்போன கிறிஸ்தவ விசுவாசிகளைக் குறிப்பதற்கு இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (வெளி 3:16, லேவி 18:28; லேவி 20:22; லேவி 25:27).

கக்கிப்போடுதல் என்பதற்கான எபிரெய வார்த்தை "கோவ்" என்பதாகும். ஏற்கெனவே வயிற்றுக்குள் போனதைத்தான் கக்கிப்போடமுடியும். புறஜாதியார் கக்கிப்போடப் படுவதற்கு முன்பாக அவர்கள்மீதும், தேவனுடைய அனுக்கிரகம் இருந்தது (ரோமர் 1:21-32)

இஸ்ரவேல் ஜனங்கள் புறஜாதியாரின் பழக்கவழக்கங்களைத் தொடர்ந்து கைக்கொண்டால் அவர்களும் கக்கிப்போடப் படுவார்கள். (லேவி 18:28-30) தேவன் பட்சபாதம் இல்லாதவர். தமக்கு எதிராகப் பாவம் செய்கிறவர்களுடைய பெயரைத் தேவன் தமது ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவார். (யாத் 32:32-33). நியாயப்பிரமாணத்தின்படியும், கிருபைப் பிரமாணத்தின்படியும் இதுவே சத்தியமாக இருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் பின்மாற்றம் அடைந்து கானானியர் செய்த பாவங்களைச் செய்தால், தேவன் அவர்களை அகற்றிப்போடுவார். ராஜாக்களுடைய காலங்களில் இஸ்ரவேல் தேசம் அவர்களுடைய பாவங்களின் நிமித்தமாகச் சபிக்கப்பட்டிருந்தது. பாபிலோனிய சிறையிருப்பிற்கு இஸ்ரவேல் புத்திரர்கள் அடிமைகளாகச் சென்றார்கள். (2இராஜா 25)

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணி இயேசு கிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்தபோது, தேசங்கள் மத்தியிலே அவர்கள் சிதறடிக்கப்பட்டார்கள். பல நூற்றாண்டுகளாக இஸ்ரவேல் புத்திரர் தேசங்களில் சிதறடிக்கப்பட்டவர்களாகவே இருந்தார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணத்தை சொல்லும்போது அதன் முடிவுரையாக, "என் கட்டளையைக் கைக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறார். "ஆகையால் உங்களுக்குமுன் செய்யப்பட்ட அருவருப்பான முறைமைகளில் யாதொன்றை நீங்கள் செய்து, அவைகளால் உங்களைத் தீட்டுப்படுத்திக்கொள்ளாதபடிக்கு என் கட்டளையைக் கைக்கொள்ளுங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 18:30) என்று சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும்.

அருவருப்பான முறைமைகளில் யாதொன்றையும் நாம் செய்யாதவாறு கர்த்தருடைய கிருபையே நம்மைப் பாதுகாக்கவேண்டும். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் நம்முடைய சுயபலத்தை சார்ந்து ஜீவியாமல், கர்த்தருடைய கிருபையை சார்ந்து ஜீவிக்கவேண்டும்.

அருவருப்பான காரியங்கள் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்னும் அவசியமில்லை. ஒன்றைச் செய்தாலே போதும். அதற்குரிய தண்டனை கிடைத்துவிடும் (ரோமர் 2:17-29; யாக் 2:9-10). குற்றவாளிகள்கூட எல்லாக்குற்றங்களையும் செய்ய வேண்டுமென்னும் அவசியமில்லை. ஒரு குற்றத்தைச் செய்தாலே அதற்குரிய தண்டனை நிச்சயம் கிடைக்கும். (கலா 5:19-21; ரோமர் 1:21-32).

மனுஷரை தீட்டுப்படுத்தும் காரியங்களைப்பற்றி வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பொல்லாத சிந்தனைகள் (2கொரி 10:4, மத் 15:18)
2. விபசாரங்கள் (மத் 5:32)
3. வேசித்தனங்கள் (மத் 5:32)
4. கொலைபாதகங்கள்
5. களவுகள் (யாத் 20:15)
6. பொருளாசைகள் (லூக்கா 12:15)
7. துஷ்டத்தனங்கள் (சங் 1:4; சங் 35:26, சங் 36:1; சங் 50:16)
8. கபடு (சங் 119:118)
9. காமவிகாரம் (கலா 5:19)
10. வன்கண் (நீதி 23:6-7; நீதி 27:20; பிர 1:8; மத் 6:22-23, 1யோவான் 2:16)
11. தூஷணம் (யாத் 20:7)
12. பெருமை (சங் 101:5)
13. மதிகேடு (சங் 14:1, மாற்கு 7:21, 2கொரி 11:1, 2கொரி 11:17,21)

கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும்.

19 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் பிரமாணங்களை கர்த்தர் யூதருக்கு மாத்திரம் விசேஷமாக சொல்லுகிறார். யூதர்கள் கர்த்தருக்கு செலுத்தவேண்டிய சமாதானபலியைப்பற்றிய பிரமாணம் (லேவி 19:5-8). அவர்கள் தேசத்தின் பயிரை அறுப்பது சம்பந்தமான பிரமாணம் (லேவி 19:9,10).

மிருகஜீவன்கள், விதைகள், வஸ்திரங்கள் ஆகியவற்றில் கலப்பு இருக்கக்கூடாது (லேவி 19:19). கனிகளை தருகிற மரங்களைப்பற்றிய பிரமாணம் (லேவி 19:23-25). மூடநம்பிக்கைகளுக்கு விரோதமான பிரமாணம் (லேவி 19:26-28).

கர்த்தர் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் சொன்ன இந்தப் பிரமாணங்கள் புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமும் கைக்கொள்ள வேண்டிய பிரமாணங்களாயிருக்கிறது. இவையெல்லாமே கர்த்தர் சொன்ன பத்துக்கட்டளைகளோடு தொடர்புடையவை.

இந்த அதிகாரத்தில் "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" என்னும் வாக்கியம் பதினைந்து தரம் சொல்லப்பட்டிருக்கிறது. பத்துக்கட்டளைகளில் முதல் பகுதி, "நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" என்னும் சத்தியத்தை விளக்குகிறது. அதன் இரண்டாவது பகுதி பிறனிலும் அன்புகூருவாயாக என்னும் சத்தியத்தை விளக்குகிறது (லேவி 19:18).

"எனக்கு பிறன் யார்" என்னும் கேள்விக்கு இந்த அதிகாரத்தில் பதில் சொல்லப்பட்டிருக்கிறது (லேவி 19:33,34). கர்த்தர் சொன்ன பத்துக்கட்டளைகள் ஒவ்வொன்றும், இந்த அதிகாரத்திலும் விளக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" என்பதே முதலாம் கட்டளையின் விளக்கமாகும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு சில காரியங்களை தடைபண்ணுகிறார். அவர்கள் குறிகேட்கக்கூடாது. நாள் பார்க்கக்கூடாது (லேவி 19:26). அவர்கள் அஞ்சனம் பார்க்கக்கூடாது (லேவி 19:31). குறிகேட்கிறவர்களும் அஞ்சனம் பார்க்கிறவர்களும் தங்களுக்கு பிசாசை தெய்வமாக்குகிறார்கள்.

இரண்டாவது கட்டளை விக்கிரகாராதனைக்கு விரோதமானது. கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் விக்கிரகாராதனையை தடைபண்ணுகிறார் (லேவி 19:4). கர்த்தருடைய நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்கக்கூடாது (லேவி 19:12). இஸ்ரவேல் புத்திரர் ஓய்வு நாட்களை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும் (லேவி 19:3,30).

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கும் (லேவி 19:3), முதிர்வயதுள்ளவர்களுக்கும் (லேவி 19:32). மரியாதை கொடுக்கவேண்டும். பிறரை பகைக்கக்கூடாது. மற்றவர்களை பழிக்கு பழி வாங்கக்கூடாது பிறர்மீது பொறாமை கொள்ளக்கூடாது (லேவி 19:17,18).

விபசாரத்திற்கு விரோதமான பிரமாணம் (லேவி 19:20-22). வேசித்தனத்திற்கு விரோதமான பிரமாணம் (லேவி 19:29). நியாயவிசாரணையில் அநியாயம் செய்யக்கூடாது (லேவி 19:15). களவு செய்யக்கூடாது (லேவி 19:11). பிறரை ஒடுக்கக்கூடாது, கொள்ளையிடக்கூடாது (லேவி 19:13). அளவிலும், நிறையிலும், படியிலும் அநியாயம் செய்யக்கூடாது (லேவி 19:35).

ஒருவருக்கொருவர் பொய்சொல்லக் கூடாது (லேவி 19:13). பிறரை நிந்திக்கக்கூடாது (லேவி 19:14). ஜனங்களுக்குள்ளே கோள்சொல்லித் திரியக்கூடாது (லேவி 19:16). சகோதரனை தன் உள்ளத்தில் பகைக்கக்கூடாது. இது பத்தாவது கற்பனையின் விளக்கமாகும் (லேவி 19:17).

"என்னுடைய கட்டளைகள் யாவையும், என்னுடைய நியாயங்கள் யாவையும் கைக்கொண்டு அவைகளின்படி நடக்கக்கடவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 19:37). கர்த்தர் சொல்லுகிற பிரமாணங்களெல்லாம் புரிந்துகொள்வதற்கு எளிதானது. இவற்றை நம்முடைய அனுதின ஜீவியத்தில் மிகுந்த ஜாக்கிரதையோடு கைக்கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய பிரமாணங்கள் லேவி 19:1-10

லேவி 19:1. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 19:2. நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்.

லேவி 19:3. உங்களில் அவனவன் தன்தன் தாய்க்கும் தன்தன் தகப்பனுக்கும் பயந்திருக்கவும், என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவும் கடவீர்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

லேவி 19:4. விக்கிரகங்களை நாடாமலும், வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்காமலும் இருப்பீர்களாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

லேவி 19:5. நீங்கள் சமாதானபலியைக் கர்த்தருக்குச் செலுத்தினால், அதை மனோற்சாகமாய்ச் செலுத்துங்கள்.

லேவி 19:6. நீங்கள் அதைச் செலுத்துகிற நாளிலும் மறுநாளிலும் அதைப் புசிக்க வேண்டும்; மூன்றாம் நாள்மட்டும் மீதியானது அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது.

லேவி 19:7. மூன்றாம் நாளில் அதில் ஏதாகிலும் புசிக்கப்பட்டால் அருவருப்பாயிருக்கும்; அது அங்கிகரிக்கப்படமாட்டாது.

லேவி 19:8. அதைப் புசிக்கிறவன் கர்த்தருக்குப் பரிசுத்தமானதைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினபடியால் அவன் தன் அக்கிரமத்தைச் சுமந்து, தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்.

லேவி 19:9. நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும்போது, உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும்,

லேவி 19:10. உன் திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்லவேண்டிய தம்முடைய பிரமாணங்களை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். இந்த அதிகாரத்தில் கர்த்தர் பல பிரமாணங்களை சொல்லுகிறார். இவற்றில் ஒரு சில பிரமாணங்கள் இதற்கு முன்பு ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணங்களை மறந்துவிடாமல் நினைவுகூரவேண்டும் என்பதற்காக, அவை இங்கு மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால்" (லேவி 19:1,2) என்று சொல்லி தம்முடைய பிரமாணத்தை சொல்ல ஆரம்பிக்கிறார்.

கர்த்தர் பரிசுத்தர். இஸ்ரவேல் புத்திரரும் பரிசுத்தமான ஜனமாயிருக்க வேண்டும். "உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (லேவி 19:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் பழைய ஏற்பாட்டில் சொன்ன இந்தப் பிரமாணம், புதியஏற்பாட்டுக்காலத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நமக்கு சொல்லுகிற பிரமாணமாயிருக்கிறது.

"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" (1பேது 1:15,16).

பழைய ஏற்பாட்டுக்காலத்து இஸ்ரவேல் ஜனத்தார் அடையாளங்களினால் பரிசுத்தமாக்கப்பட்டார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்படுகிறோம்.

"என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்" (லேவி 20:8).

"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப்பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவா 17:17).

"அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" (தீத் 2:14).

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டும். "உங்களில் அவனவன் தன்தன் தாய்க்கும் தன்தன் தகப்பனுக்கும் பயந்திருக்கக்கடவன்" (லேவி 19:3) என்று கர்த்தர் சொல்லுகிறார். "பயந்திருப்பது" என்னும் வார்த்தைக்கு உள்ளத்திலே பக்தியோடும், வெளியிலே மரியாதையோடும் இருப்பது என்று பொருள்.

பெற்றோர் தங்களுக்கு சொல்லும் நியாயமான கட்டளைகளுக்கு பிள்ளைகள் கீழ்ப்படியவேண்டும். பிள்ளைகள் தங்கள் பெற்றோரை கனம்பண்ணி, அவர்களுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, அவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கவேண்டும். பிள்ளைகள் தங்கள் பெற்றோரை ஒருபோதும் துக்கப்படுத்தக்கூடாது.

யூதருடைய பிள்ளைகள், தங்கள் பெற்றோரின் வழியிலே குறிக்கிடமாட்டார்கள். தங்கள் பெற்றோர் வரும்போது பிள்ளைகள் அவர்களுக்கு முன்பாக நிற்கமாட்டார்கள். தங்கள் பெற்றோர் அமரும் ஆசனங்களில் யூதருடைய பிள்ளைகள் அமரவும் மாட்டார்கள்.

யூதருடைய பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் பெயரைச் சொல்லி கூப்பிடமாட்டார்கள். பெற்றோர் உயிரோடிருந்தாலும், அவர்கள் மரித்துப்போனாலும் அவர்களுடைய பெயரைச் சொல்லுவது பிள்ளைகளுக்கு வழக்கமல்ல. யூதருடைய பிள்ளைகள் தங்கள் பெற்றோரை, "அப்பா" என்றோ, "ஐயா" என்றோ அழைப்பார்கள்.

பிள்ளைகள் பெரியவர்களாக வளர்ந்த பின்பும், அவர்களும் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணவேண்டும். தாங்கள் வளர்ந்து பெரியவர்களாகயிருப்பதினால், தங்களுடைய பெற்றோரின் வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டியதில்லை என்று எந்தப் பிள்ளையும் நினைக்கக்கூடாது. பிள்ளைகள் ஞானிகளாகயிருந்தாலும், படித்தவர்களாகயிருந்தாலும், ஐசுவரியவான்களாகயிருந்தாலும், பதவியிலும் அந்தஸ்திலும் உயர்ந்த நிலையிலிருந்தாலும் அவர்களும் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணவேண்டும்.

கர்த்தர் இந்த வசனத்தில், "அவனவன் தன் தன் தாய்க்கும், தன் தன் தகப்பனுக்கும் பயந்திருக்கவேண்டும்" என்று சொல்லுகிறார். தாய்க்கு முதலாவதாக முக்கியத்துவம் கொடுக்கிறார். யூதமார்க்கத்தில் பொதுவாக தகப்பனுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். தாய்க்கு பிரதான முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால் கர்த்தரோ இந்த வசனத்தில் தாயை கனம்பண்ணி, அவளை முதலாவதாக சொல்லுகிறார். பிள்ளைகள் தங்கள் தாய்க்கும் தகப்பனுக்கும் ஒன்றுபோல முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதே இந்த வசனத்தின் விளக்கம்.

"என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவும் கடவீர்கள்" (லேவி 19:3) என்று கர்த்தர் சொல்லுகிறார். பிள்ளைகள் தங்கள் பெற்றோரை கனம்பண்ணவேண்டுமென்று கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார்.

பெற்றோர் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, தங்கள் பிள்ளைகளை ஆவிக்குரிய ரீதியாக நல்ல பிள்ளைகளாக வளர்க்கவேண்டும். கர்த்தரை கனம்பண்ணவும், கர்த்தரிடத்தில் பக்தியாயிருக்கவும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கவேண்டும். அதிலும் விசேஷமாக கர்த்தருடைய ஓய்வுநாளை ஆசரிப்பதற்கு பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம்.

பெற்றோருக்கு கீழ்ப்படியாத பிள்ளைகளும், கர்த்தருடைய ஓய்வுநாட்களை பரிசுத்தமாய் ஆசரிக்காத பிள்ளைகளும் சீக்கிரமாய்க் கெட்டுப்போவார்கள். அவர்களுடைய வாழ்க்கை சீரழிந்துபோகும். நம்முடைய ஜீவியத்தில் நாம் கர்த்தரை கனம்பண்ணவில்லையென்றால், நமக்கு கர்த்தருடைய கிருபையும் இரக்கமும், அநுக்கிரகமும் கிடைக்காது. தங்கள் பிள்ளைகள் செழித்திருக்கவேண்டுமென்றால், பெற்றோர் அவர்களுக்கு கர்த்தருடைய கட்டளைகளை உபதேசம்பண்ணி, அந்த கட்டளைகளைக் கைக்கொள்ள அவர்களை வழிநடத்தவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டும். இதற்கான காரணத்தையும் கர்த்தர் இங்கு சொல்லுகிறார். "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 19:3). இதுவே கர்த்தர் சொல்லுகிற காரியம். கர்த்தர் ஓய்வுநாளுக்கும் தேவனாயிருக்கிறார். கர்த்தர் அவர்களுடைய பெற்றோருக்கும் தேவனாயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவர்கள் மற்ற விக்கிரகங்களையோ, வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களையோ ஆராதிக்கக்கூடாது.

"விக்கிரகங்களை நாடாமலும், வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்காமலும் இருப்பீர்களாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 19:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விக்கிரகங்களுக்கு வல்லமையில்லை. அவற்றிற்கு ஜீவனில்லை. விக்கிரகங்கள் தெய்வங்களல்ல. நாம் கர்த்தருடைய கைகளின் கிரியைகளாயிருக்கிறோம். நாம் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டியவர்கள். நாம் மனுஷருடைய கைகளினால் செய்யப்பட்ட விக்கிரகங்களை ஆராதித்து, நம்மை தீட்டுப்படுத்திக்கொள்ளக்கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தார் சமாதான பலியை செலுத்த வேண்டிய விதம் பற்றி கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்,

"நீங்கள் சமாதானபலியைக் கர்த்தருக்குச் செலுத்தினால், அதை மனோற்சாகமாய்ச் செலுத்துங்கள்" (லேவி 19:5) என்றும்,

நீங்கள் அதைச் செலுத்துகிற நாளிலும் மறுநாளிலும் அதைப் புசிக்க வேண்டும்; மூன்றாம் நாள்மட்டும் மீதியானது அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது. மூன்றாம் நாளில் அதில் ஏதாகிலும் புசிக்கப்பட்டால் அருவருப்பாயிருக்கும்; அது அங்கிகரிக்கப்படமாட்டாது (லேவி 19:6,7) என்றும்,

"அதைப் புசிக்கிறவன் கர்த்தருக்குப் பரிசுத்தமானதைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினபடியால் அவன் தன் அக்கிரமத்தைச் சுமந்து, தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்" (லேவி 19:8) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்

தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் யார்மீதும் கட்டாயமாகத் திணிக்கப்படுவதில்லை. அதை ஒவ்வொருவரும் சுயாதீனமாகத் தீர்மானம் பண்ணிக் கொள்ளலாம். அதுபோலவே கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்துவதும் கட்டாயமாக அல்ல. அதை மனோற்சாகமாகவே செலுத்தவேண்டும். (யோவான் 3:16; வெளி 22:17).

"மூன்றாம் நாள்மட்டும் மீதியானது அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது" என்று கர்த்தர் சொல்லுகிறார். பலியாகசெலுத்தப்படுவது தேவனுடைய பாவமில்லாத, பரிசுத்தமான, கறைதிரையற்ற, பிழையற்ற, குமாரனுக்கு அடையாளமாக இருக்கிறது. ஆகையினால் கெட்டுப்போனதைத் தேவனுக்குப் பலியாகச் செலுத்தக்கூடாது. கெட்டுப்போன போஜனத்தைப் புசிக்கக்கூடாது. அது அருவருப்பானது. அங்கீகரிக்கப்படமாட்டாது. அதைச் சுட்டெரித்துவிடவேண்டும். அதைப் புசிக்கிறவன் கர்த்தருக்குப் பரிசுத்தமானதைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினபடியால் அவன் தன் அக்கிரமத்தைச் சுமந்து, தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான். (லேவி 19:7-8).

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தேசத்தின் பயிரை அறுக்க வேண்டிய விதம் பற்றியும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

"நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும்போது, உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், உன் திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 19:9,10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வயலிலே பயிரை அறுக்கும்போது, அந்த வயலின் ஓரத்தில் இருக்கிற பயிரை அறுக்காமல் விட்டுவிடவேண்டும். அது எளியவனுக்கும் பரதேசிக்கும் உரியது. மொத்த விளைச்சலில் அறுபதில் ஒரு பங்கு அறுக்காமல் விட்டுவிடப்படும் என்று யூதமார்க்கத்து சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

நிலத்தின் பயிரின் ஒரு பகுதியை அறுக்காமல் விட்டுவிடுவதுபோல, திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமல் விட்டுவிடவேண்டும். இதுவும் எளியவனுக்கும் பரதேசிக்கும் உரியது.

பயிரை அறுப்பது பற்றிய பிரமாணத்தை கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்கக்கூடாது.

2. சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்கக் கூடாது.

3. திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்கக்கூடாது. (லேவி 19:10).

4. திராட்சத்தோட்டத்திலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்கக்கூடாது.

5. சிந்திக்கிடக்கிற பழங்களை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடவேண்டும்.

தேவன் தரித்திரரையும் பராமரிக்கிறார். உதாரத்துவ குணமுடையவர்கள் தங்களுடைய தேவைக்குப்போக மீதியானதை அறுக்காமல் விட்டுவிடுகிறார்கள். அவை எளியவனுக்கும், பரதேசிக்கும் உதவியாக இருக்கும். இதன் வாயிலாக ஐசுவரியவானுக்கும், எளியவனுக்கும் இடையே அன்பு பெருகும்.

கர்த்தர் இந்த அதிகாரத்தில் குடும்ப பிரமாணங்களையும், மார்க்க பிரமாணங்களையும் சொல்லுகிறார். அவற்றின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்ல வேண்டியது என்னவென்றால்: நீங்கள் பரிசுத்தராயிருங்கள்.

2. தன்தன் தாய்க்கும் தன்தன் தகப்பனுக்கும் பயந்திருக்கவேண்டும் (லேவி 19:3).

3. என் ஓய்வுநாட்களை ஆசரிக்கக்கடவீர்கள்.

4. விக்கிரகங்களை நாடாமல் இருங்கள் (லேவி 19:4).

5. வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்காமல் இருப்பீர்களாக

6. நீங்கள் சமாதானபலியைக் கர்த்தருக்குச் செலுத்தினால், அதை மனோற்சாகமாய்ச் செலுத்துங்கள் (லேவி 19:5).

7. சமாதானபலிகளைச் செலுத்துகிற நாளிலும் மறுநாளிலும் அதைப் புசிக்க வேண்டும்; மூன்றாம் நாளில் அதில் ஏதாகிலும் புசிக்கப்பட்டால் அருவருப்பாயிருக்கும் (லேவி 19:6-7).

8. மூன்றாம் நாள்மட்டும் மீதியானது அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது (லேவி 19:6).

9. மூன்றாம் நாளில் சமாதானபலிகளில் ஏதாகிலும் புசிக்கப்பட்டால், அதைப் புசிக்கிறவன் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். (லேவி 19:7-8)

கர்த்தருடைய போதனைகள் லேவி 19:11-18

லேவி 19:11. நீங்கள் களவுசெய்யாமலும், வஞ்சனைபண்ணாமலும், ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள்.

லேவி 19:12. என் நாமத்தைக் கொண்டு பொய்யாணையிடுகிறதினால், உங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர்.

லேவி 19:13. பிறனை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலும் இருப்பாயாக; கூலிக்காரனுடையகூலி விடியற்காலம்மட்டும் உன்னிடத்தில் இருக்கலாகாது.

லேவி 19:14. செவிடனை நிந்தியாமலும், குருடனுக்கு முன்னே தடுக்கலை வையாமலும், உன் தேவனுக்குப் பயந்திருப்பாயாக; நான் கர்த்தர்.

லேவி 19:15. நியாயவிசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள்; சிறியவனுக்கு முகதாட்சிணியம் செய்யாமலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும், நீதியாகப் பிறனுக்கு நியாயந்தீர்ப்பாயாக.

லேவி 19:16. உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள்சொல்லித் திரியாயாக; பிறனுடைய இரத்தப்பழிக்கு உட்பட வேண்டாம்; நான் கர்த்தர்.

லேவி 19:17. உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக; பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்து கொள்ள வேண்டும்.

லேவி 19:18. பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமைகொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக; நான் கர்த்தர்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய வார்த்தையிலும் செய்கையிலும் உண்மையுள்ளவர்களாயும், கண்ணியமுள்ளவர்களாயும் இருக்கவேண்டும். விசுவாசிகளாகிய நாம் இந்தப் பிரபஞ்சத்தில், கர்த்தருக்கு பிரியமானவர்களாகவும், ஜனங்களுக்கு பிரயோஜனமானவர்களாகவும் ஜீவிக்கவேண்டும். நம்முடைய வார்த்தையும் செய்கையும் கர்த்தரை கனம்பண்ணவேண்டும்.

"நீங்கள் களவுசெய்யாமலும், வஞ்சனைபண்ணாமலும், ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள்" (லேவி 19:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நாம் மிகப்பெரிய ஐசுவரியவான்களாயிராமல், பொருளாதார ரீதியாக நடுத்தர குடும்பத்தாராயிருக்கலாம். நம்மிடத்தில் எவ்வளவு ஐசுவரியம் இருந்தாலும், அது நேர்மையாகவும், உண்மையாகவும் சம்பாதித்ததாக இருக்கவேண்டும். அநியாயமாய் சம்பாதித்த ஐசுவரியம் நிலைத்திருக்காது. பிறரை வஞ்சித்து சம்பாதித்த ஐசுவரியம் நமக்கு மெய்யான ஆசீர்வாதமாயிருக்காது.

கர்த்தருடைய ஜனமாகிய நாம் அவருடைய நாமத்தை கனம்பண்ணி மகிமைப்படுத்தவேண்டும். கர்த்தருடைய நாமம் பரிசுத்தமானது. "என் நாமத்தைக் கொண்டு பொய்யாணையிடுகிறதினால், உங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர்" (லேவி 19:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவனுடைய நாமத்தை அவசரப்பட்டு ஆணையிடக்கூடாது. பொய்யை மெய்யாக்குவதற்காகத் தேவனுடைய நாமத்தை வீணாகப் பயன்படுத்தக்கூடாது.

நாம் பிறருடைய உரிமைகளில் தேவையில்லாமல் தலையிடக்கூடாது. நமக்கு நியாயமாக சொந்தமானதை மாத்திரமே நாம் அனுபவிக்கவேண்டும். பிறருக்குரியதை நாம் அபகரிக்க முயற்சி பண்ணக்கூடாது. பிறரை வஞ்சிக்கக்கூடாது. நம்மிடத்தில் வேலை செய்கிறவர்களுக்கு நியாயமான கூலி கொடுக்கவேண்டும். அதையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் கொடுத்துவிடவேண்டும். கூலிக்காரனுடைய சம்பளத்தை அபகரிப்பது கர்த்தருக்கு விரோதமான பாவம்.

"பிறனை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலும் இருப்பாயாக; கூலிக்காரனுடைய கூலி விடியற்காலம்மட்டும் உன்னிடத்தில் இருக்கலாகாது" *(லேவி 19:13)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கூலிக்காரன் அன்றாடம் வேலைசெய்து, தன்னுடைய குடும்பத்தைப் பராமரிக்கிறான். ஆகையினால் அவன் செய்த வேலைக்குரிய கூலியை உடனடியாகத் தாமதம் பண்ணாமல் கொடுத்துவிட வேண்டும். *(லேவி 19:13; உபா 24:14-15; எரே 22:13; மல் 3:5; யாக் 5:4).*

ஒரு சிலர் சமுதாயத்தில் தரித்திரராகவும், செல்வாக்கு இல்லாதவர்களாகவும், வீரமில்லாத கோழைகளாகவும் இருப்பார்கள். அவர்களால் தங்களுக்கு தாங்களே உதவி செய்து கொள்ளமுடியாது. நாம் அப்படிப்பட்டவர்களுடைய பாதுகாப்புக்கு இடையூறாக இருக்கக்கூடாது. அவர்களை அச்சுறுத்தும் வண்ணமாக பேசவோ, செயல்படவோ கூடாது.

"செவிடனை நிந்தியாமலும், குருடனுக்கு முன்னே தடுக்கலை வையாமலும், உன் தேவனுக்குப் பயந்திருப்பாயாக; நான் கர்த்தர்" *(லேவி 19:14)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவன் தரித்திரனுக்கும், கூலிக்காரனுக்கும் கரிசனை உடையவர். அதே வேளையிலே அவர் ஊனமுற்றோரிடத்திலும் அன்போடும் கரிசனையோடும் இருக்கிறார். செவிடனுக்குக் காதுகேட்கவில்லை என்பதற்காக அவனைச் சபித்துவிடக்கூடாது. குருடனுக்குப் பார்வை தெரியாது என்பதற்காக அவனை நிந்திக்கக் கூடாது. அவர்களால் எதிர்த்து நிற்க முடியாது. அவர்களுடைய பலவீனத்தை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. *(லேவி 19:9-19).*

நாம் நம்மை நேசிப்பதுபோல பிறரையும் நேசிக்க வேண்டும். *(லேவி 19:18).* ஒவ்வொரு இஸ்ரவேலனும் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்பது தேவனுடைய சித்தம்.

செவிடன் என்னும் வார்த்தை இயற்கையாகவே கேட்கும் திறமையை இழந்தவர்களையும், நாம் பேசுவதை கேட்க முடியாமல் தூரத்திலிருக்கிறவர்களையும் குறிக்கும். நாம் தூரத்திலிருக்கிறவர்களுக்கு விரோதமாக கோள் சொல்லக்கூடாது. அவர்களுக்கு விரோதமாக நாம் பேசும் நிந்தையான பேச்சுக்களை அவர்கள் கேட்கமாட்டார்கள் என்று நினைத்து, நமக்கு இஷ்டமானதை நாம் பேசக்கூடாது. நம்முடைய வார்த்தையில் உண்மையிருக்கவேண்டும்.

பார்வையில்லாத குருடருக்கு நாம் உதவி செய்யவேண்டும். அவர்களுடைய பாதுகாப்புக்கு நாம் துணையாயிருக்கவேண்டும். நாம் பிறருக்கு உபகாரம் பண்ணாவிட்டாலும், உபத்திரவம் பண்ணாமலிருக்கவேண்டும். குருடனுக்கு முன்னே தடுக்கலை வைக்கக்கூடாது. ஏற்கெனவே கஷ்டத்திலும், வேதனையிலும் இருக்கிறவர்களுக்கு, நாம் அதிகமான கஷ்டத்தையும், வேதனையையும் கொடுக்கக்கூடாது.

நாம் குருடருக்கு உதவி செய்யவேண்டும். குருடனுக்கு முன்பாக தடுக்கல் வைக்கப்பட்டிருந்தால், நாம் அந்தக் கல்லை அவனுடைய பாதையிலிருந்து எடுத்து அப்புறப்படுத்த வேண்டும்.

யூதர்கள் பொதுவாக குருடனுக்கு முன்னே தடுக்கலை வைக்கமாட்டார்கள். யூதர்கள் மாத்திரமல்ல, மனிதாபிமானமுள்ள யாரும் இப்படிப்பட்ட தீயசெயலை செய்யமாட்டார்கள். ஆகையினால், "குருடனுக்கு முன்னே தடுக்கலை வைக்காதிருப்பாயாக" என்னும் வாக்கியம் அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

இந்த வாக்கியத்திற்கு பேதைகளை ஏமாற்றக்கூடாது என்றும், ஒன்றும் தெரியாத கள்ளம்கபடமில்லாதவர்களை மோசம் போக்கக்கூடாது என்றும் பொருள். பிறருக்கு தீயஆலோசனைகளை சொல்லி அவர்களை வஞ்சித்து விடக்கூடாது. ஒரு சிலர் எளிதில் ஏமாந்துவிடுவார்கள். அப்படிப்பட்டவர்களை நம்முடைய சுயஆதாயத்திற்காக ஏமாற்றக்கூடாது.

நியாயாதிபதிகள் நியாயவிசாரணையில் எவ்வாறு வழக்குகளை நியாயந்தீர்க்கவேண்டுமென்று கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார்.

"நியாயவிசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள்; சிறியவனுக்கு முகதாட்சிணியம் செய்யாமலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும், நீதியாகப் பிறனுக்கு நியாயந்தீர்ப்பாயாக" (லேவி 19:15).

கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. அவர் நீதிபரர். நியாயவிசாரணை செய்கிறவர்களும் பட்சபாதமில்லாமல், நீதியாய் வழக்குகளை விசாரிக்கவேண்டும். "வியாச்சியத்திலே தரித்திரனுடைய முகத்தைப் பாராயாக" (யாத் 23:3).

தரித்திரனாயிருக்கிறவன் குற்றம் செய்யும்போது, அவன் தரித்திரன் என்பதற்காக அவனுக்கு இரக்கம் காண்பிக்கக்கூடாது. குற்றம் செய்தவன் யாராகயிருந்தாலும் தண்டிக்கப்படவேண்டும். அதுபோலவே குற்றம் செய்யாதவன் நிரபராதி என்று நியாயந்தீர்க்கவேண்டும்.

பூர்வகாலத்தில் புறஜாதியார் மத்தியிலே ஐசுவரியவானுக்கு ஒரு நீதியும், தரித்திரனுக்கு வேறொரு நீதியும் இருந்தது. ஆனால் யூதருடைய நீதிமன்றங்களிலே தரித்திரனுக்கும் ஐசுவரியவானுக்கும் ஒரே சட்டமே கொடுக்கப்பட்டிருக்கிறது. குற்றவாளி கூண்டிலே ஐசுவரியவானும் தரித்திரனும் நிற்கவேண்டும். அதிலே அமருவதற்கு ஒருவனுக்கும் அனுமதியில்லை.

"என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக்கொள்ளாதிருப்பீர்களாக" (யாக் 2:1)

ஏனெனில், பொன்மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருக்கிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது, மினுக்குள்ள வஸ்திரந்தரித்தவனைக் கண்ணோக்கி: நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும்; தரித்திரனைப் பார்த்து: நீ அங்கே நில்லு, அல்லது இங்கே என் பாதபடியண்டையிலே உட்காரு என்றும் நீங்கள் சொன்னால், உங்களுக்குள்ளே பேதகம்பண்ணி, தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர்களல்லவா?" (யாக் 2:1-4).

மற்றவர்களுடைய நற்பெயருக்கு நாம் களங்கம் ஏற்படுத்தக்கூடாது. நம்முடைய பொதுவான சம்பாஷணைகளில் பிறருக்கு விரோதமாக கோள் சொல்லக்கூடாது. "உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள்சொல்லித் திரியாயாக; பிறனுடைய இரத்தப்பழிக்கு உட்பட வேண்டாம்; நான் கர்த்தர்" (லேவி 19:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒருவனுக்கு எதிராகப் பொய்ச்சாட்சி கூறுவதினாலோ அல்லது ஒருவனுக்கு மரண உபாதை வரும்போது அவனுக்கு உதவி புரியாமல், சும்மாயிருப்பதினாலோ ஒருவன் மரித்துப்போனால், அவனுடைய இரத்தப்பழிக்கு அந்த நபர் உட்பட வேண்டும்.

கோள் சொல்லுகிறவர்கள் உண்மையை திரித்து பேசுவார்கள். அவர்கள் ஒரு வீட்டாரைப்பற்றிய செய்தியை சேகரித்து, அந்த செய்தியோடு தங்களுடைய சொந்த கற்பனைகளைச் சேர்த்துக்கொண்டு, மற்ற வீட்டாரிடத்தில் அவர்களைப்பற்றி கோள் சொல்லுவார்கள்.

பொருட்களை வாங்கி விற்கிறவர்கள் தரகு வேலைகளை பார்க்கிறவர்கள். அதுபோலவே கோள் சொல்லுகிறவர்கள் ஒரு செய்தியை மற்றவர்களுக்கு சொல்லி, அவர்களிடத்திலிருந்து வேறொரு செய்தியை பெற்றுக்கொள்கிற தரகர்களாயிருக்கிறார்கள். தரகருக்கு ஆதாயமே குறிக்கோள். கோள் சொல்லுகிறவர்களுக்கு சுயஆதாயமே குறிக்கோள்.

பரிசுத்த வேதாகமம் கோள் சொல்லுகிறவர்களுக்கு விரோதமாக எச்சரிக்கிறது.

"புறங்கூறித்திரிகிறவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான்; ஆவியில் உண்மையுள்ளவனோ காரியத்தை அடக்குகிறான்" (நீதி 11:13).

"தூற்றிக்கொண்டு திரிகிறவன் இரகசியங்களை வெளிப்படுத்துவான்; ஆதலால் தன் உதடுகளினால் அலப்புகிறவனோடே கலவாதே" (நீதி 20:19).

"நீங்கள் அவனவன் தன் தன் சிநேகிதனுக்கு எச்சரிக்கையாயிருங்கள், எந்தச் சகோதரனையும் நம்பாதிருங்கள்; எந்தச் சகோதரனும் மோசம்பண்ணுகிறான், எந்தச் சிநேகிதனும் தூற்றித்திரிகிறான். அவர்கள் மெய்யைப் பேசாமல் ஒவ்வொருவரும் தமக்கடுத்தவனை ஏய்க்கிறார்கள்; பொய்யைப்பேசத் தங்கள் நாவைப் பழக்குகிறார்கள், அக்கிரமஞ்செய்ய உழைக்கிறார்கள்" (எரே 9:4,5).

"இரத்தஞ்சிந்தும்படிக்கு அபாண்டம் பேசுகிறவர்கள் உன்னிடத்தில் இருக்கிறார்கள்; மலைகளின்மேல் சாப்பிடுகிறவர்களும் உன்னிடத்தில் இருக்கிறார்கள்; முறைகேடு செய்கிறவர்கள் உன் நடுவில் இருக்கிறார்கள்" (எசே 22:9).

ஒரு சிலர் பொதுவான சம்பாஷணையில் பிறருக்கு விரோதமாக கோள் சொல்லுவது போல, வேறு சிலர் வழக்குகளில் சாட்சி சொல்லும்போது பிறருக்கு விரோதமாக பொய்யான காரியங்களை சொல்லுவார்கள். "பிறனுடைய இரத்தப்பழிக்கு உட்பட வேண்டாம்; நான் கர்த்தர்" (லேவி 19:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

குற்றம் சாட்டப்பட்டவன் குற்றம் செய்யாத நிரபராதியாகயிருந்தாலும், கோள் சொல்லுகிறவர்கள் அவனுக்கு விரோதமாக பொய்ச்சாட்சிகளை சொல்லி, அவனை குற்றவாளியாக உறுதிபண்ணுவார்கள். இப்படிப்பட்டவர்கள் அவனுடைய இரத்தப்பழிக்கு உடன்படுகிறவர்கள். இவர்கள் குற்றமில்லாத இரத்தத்தை சிந்துகிறார்கள்.

"மரணத்துக்கு ஒப்பிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப் போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் விடுவி. அதை அறியோம் என்பாயாகில், இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியாரோ? அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத்தக்கதாகப் பலனளியாரோ?" (நீதி 24:11,12).

நாம் எல்லோரிடத்திலும் அன்பாயிருக்கவேண்டும். நம்முடைய சத்துருக்களையும் நாம் சிநேகிக்கவேண்டும். மற்றவர்கள் தப்பு செய்யும்போது, நாம் அதைப் பார்த்தும் சும்மாயிருந்து விடக்கூடாது. அவர்களுக்கு அன்பான வார்த்தைகளை சொல்லி அவர்களைக் கடிந்துகொள்ளவேண்டும்.

"உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக; பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்து கொள்ள வேண்டும்" (லேவி 19:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மற்றவர்கள் பாவம் செய்வதற்கு அவர்களை உற்சாகப்படுத்தாமல் கண்டித்து திருத்த வேண்டும். (1தீமோ 5:20; 2தீமோ 4:2; தீத்து 1:13; தீத்து 2:15)

பரிசுத்த வேதாகமத்தில் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றியும், விசுவாசிகளைப்பற்றியும் சொல்லப்பட்டிருப்பதுபோல, பிறரைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பிறனுடைய பொருள்களைக் கேட்டு வாங்குவார்கள் (யாத் 3:22).
2. அயல்வீட்டுக்காரர்களுடன் பங்கிட்டுக் கொள்ளுவார்கள் (யாத் 12:4).
3. பிறனுக்கு விரோதமாகப் பொய்சாட்சிச்சாட்சி சொல்லாதிருப்பாயாக (யாத் 20:16)
4. ஒருவன் பிறனுக்கு விரோதமாகச் சதிமோசஞ்செய்து அவனைக் கொன்று போட்டால் அவனை பலிபீடத்திலிருந்தும் பிடித்துக்கொண்டு கொலைச்செய்ய வேண்டும் (யாத் 21:14)
5. பிறனுடைய சொத்துக்களின் மேல் விருப்பம் வைக்கக்கூடாது (யாத் 22:7-14).
6. ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமல் இருங்கள் (லேவி 6:2-7; லேவி 19:11).
7. பிறனை ஒடுக்குதல் கூடாது (லேவி 19:13)
8. பிறனைக் கொள்ளையிடாமல் இருப்பாயாக (லேவி 19:13)
9. நியாயமாக நியாயவிசாரணை செய்யுங்கள் (லேவி 19:15).
10. ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள்சொல்லித் திரியவேண்டாம் (லேவி 19:16).
11. பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்து கொள்ள வேண்டும் (லேவி 19:17).
12. உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக (லேவி 19:18)
13. கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல் என்னும் அடிப்படையில் தண்டனை. (லேவி 24:19-20)
14. பிறனுக்கு எதையாகிலும் விற்றாலும் அவனிடத்தில் எதையாகிலும் கொண்டாலும் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யக்கூடாது (லேவி 25:14-15).
15. முற்பகையின்றிக் கைப்பிசகாய் பிறனைக் கொன்றவன், தப்பியோடிப்போய்ப் பிழைத்திருப்பானாக (உபா 4:42; உபா 19:4-11)
16. பிறனுடைய விளைச்சலில் அரிவாளை இடலாகாது (உபா 23:25)
17. ஒளிப்பிடத்திலே பிறனைக் கொன்றவன் சபிக்கப்பட்டவன் (உபா 27:24).
18. உத்தமனாய் நடந்து நீதியை நடப்பிக்கிறவன், தன் அயலானுக்குத் தீங்கு செய்யாமலும், அவன் மேல் சொல்லப்படுகிற நிந்தையான பேச்சு எடுக்காமலும் இருக்கிறான் (சங் 15:1-3)
19. பிறனை இரகசியமாய் அவதூறு பண்ணுகிறவன் சங்கரிக்கப்படுவான் (சங் 101:5).
20. உன்னிடத்தில் பொருள் இருக்கும்போது உன் அயலானை நோக்கி, நீபோய்த் திரும்பவா நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே (நீதி 3:28).
21. உன்னிடத்தில் வாசம் பண்ணுகிற உன் அயலானுக்கு விரோதமாக தீங்கு செய்யாதே (நீதி 3:29)
22. மதிகெட்டவன் பிறனை அவமதிக்கிறான் (நீதி 11:12)
23. தரித்திரன் தனக்கடுத்தவனாலும் பகைக்கப்படுகிறான் (நீதி 14:20; நீதி 19:4)
24. நியாயமின்றிப் பிறனுக்கு விரோதமாய்ச் சாட்சியாக ஏற்படாதே (நீதி 24:28)
25. உன் அயலான் உன்னை வெட்கப் படுத்தும்போது நீ என்ன செய்யலாம் என்று திகைக்காதே (நீதி 25:8)

26. உன் அயலானோடே மாத்திரம் உன் வியாஜ்யத்தைக் குறித்து வழக்காடு (நீதி 25:9)

27. விளையாட்டுக்காகக்கூட பிறனை வஞ்சிக்காதே (நீதி 26:19).

28. உன் சிநேகிதனையும் அயலானையும் விட்டுவிடாதே, ஆபத்துக்காலத்தில் அவனே உதவுவான் (நீதி 27:10)

29. கிறிஸ்துவும், பிறனும் (மத் 5:43; மத் 19:19; மத் 22:39; லூக்கா 10:29-36)

30. பவுலும் பிறனும் (ரோமர் 13:10; ரோமர் 15:2; எபே 4:25)

மற்றவர்கள் நமக்கு விரோதமாக தீங்கு செய்து, நமக்கு சேதாரம் ஏற்படுத்தும்போது, நாம் அதைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்க வேண்டியதில்லை. அவர்கள் நமக்கு விரோதமாக செய்த தப்பிதத்தை அன்பான வார்த்தைகளினால் சொல்லி, அவர்களுக்கு உணர்த்தவேண்டும்.

பிறர் நமக்கு விரோதமாக செய்யும் தப்பிதங்களை அவர்களுக்கு உணர்த்துவது நல்லது. அவ்வாறு உணர்த்தாமல், நம்முடைய மனதிற்குள்ளேயே அவர்களுக்கு விரோதமாக கோபத்தை அடைத்து வைக்கக்கூடாது. அந்தக் கோபம் பின்பு பொறாமையாக மாறும். பொறாமை எலும்புருக்கி.

மற்றவர்கள் நமக்கு விரோதமாக தீங்கு செய்யும்போது, நாம் அவர்களோடு சண்டை போடக்கூடாது. நாம் சமாதானம் பண்ணுகிறவர்கள். நாம் எல்லோரோடும் சமாதானமாயிருப்பதற்கு பிரயாசப்படவேண்டும். நமக்கு விரோதமாய் தீங்கு செய்தவர்களிடத்தில் அன்பாய்ப்பேசி, அவர்களுடைய தப்பிதங்களை அவர்களுக்கு உணர்த்துவது நல்லது.

நமக்கு விரோதமாக தீங்கு செய்தவர்கள்மீது பாவம் சுமரும். பாவத்தின் சம்பளம் மரணம். அவர்களுடைய பாவத்தைக் குறித்து நாம் அவர்களுக்கு கடிந்து கொள்ளவில்லையென்றால், அவர்கள் தங்களுடைய பாவத்தை உணரமாட்டார்கள். தாங்கள் செய்த பாவத்திற்கு மனம் வருந்தமாட்டார்கள். தங்கள் பாவத்தை அறிக்கை செய்யமாட்டார்கள். பாவத்தை மறைக்கிறவர்கள் வாழ்வடையமாட்டார்கள். அவற்றை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவர்களோ தேவனுடைய சமுகத்திலே இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

நமக்கு விரோதமாகத் தீங்கு செய்தவர்களும் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்னும் நல்ல நோக்கத்திலே, நாம் அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு கடிந்து சொல்லவேண்டும்.

"உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக" (லூக் 17:3).

மனுஷனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவன், கர்த்தருக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறான். நாம் பாவத்தை சிநேகிக்கக்கூடாது. ஆனாலும் நாம் பாவிகளை சிநேகிக்கவேண்டும். பாவிகள்மீதும் நாம் அன்புகூர்ந்து, அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு கண்டித்து உணர்த்தவேண்டும். சகோதர சிநேகத்தோடு ஒருவரையொருவர் கடிந்துகொண்டு புத்திசொல்லுவது மிகவும் நல்லது. கடிந்துகொள்வதற்கு அன்பே ஆதாரமாயும், பிரதானமாயும் இருக்கவேண்டும். கோபத்தினால் கடிந்துகொள்வது சண்டை போடுவதற்கு சமம். அன்பினால் கடிந்துகொள்வது ஊழியம் செய்வதற்கு சமம்.

"நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப் போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன்" (சங் 141:5).

நாம் நம்மிடத்தில் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூரவேண்டும். இது கர்த்தருடைய பிரதான கற்பனை. "பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமைகொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக; நான் கர்த்தர்" (லேவி 19:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்மிடத்திலுள்ள கோபம், பொறாமை ஆகியவற்றை களைந்துபோட்டு, நாம் சகோதர சிநேகத்தை தரித்துக்கொள்ளவேண்டும். நாம் பிறருக்கு தீங்கு செய்யாதவர்களாய் மாத்திரமல்ல, பிறருக்கு நன்மை செய்கிறவர்களாயும் இருக்கவேண்டும். அதுபோலவே நாம் பிறர்மீது பொறாமை கொள்ளாதவர்களாய் மாத்திரமல்ல, அவர்கள்மீது அன்பு கூருகிறவர்களாயும் இருக்கவேண்டும்.

"நீ உன்னில் அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக" என்று கர்த்தர் சொல்லுகிறார். நமக்கு எதுவெல்லாம் தேவை என்று நாம் நினைக்கிறோமோ அதுவெல்லாம் மற்றவர்களுக்கும் தேவை என்று நினைக்கவேண்டும். நம்முடைய சுயநலத்தை மாத்திரம் நாம் பார்க்காமல், மற்றவர்களுடைய நலத்தையும் நாம் பார்க்கவேண்டும்.

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்" (மத் 7:12).

"உங்களைப்போல நானும் பேசக்கூடும்; நான் இருக்கும் நிலைமையில் நீங்கள் இருந்தால், நான் உங்களுக்கு விரோதமாக வார்த்தைளைக் கோத்து, உங்களுக்கு எதிரே என் தலையைத் துலுக்கவுங்கூடும். ஆனாலும் நான் என் வாயினால் உங்களுக்குத் திடன்சொல்லுவேன், என் உதடுகளின் அசைவு உங்கள் துக்கத்தை ஆற்றும்" (யோபு 16:4,5).

மற்றவர்களுக்கு நன்மை செய்யும் வண்ணமாய், நம்முடைய சுயஆசைகளை வெறுக்கவேண்டும். "நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும் படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்" (1கொரி 9:19) என்றும்,

"யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப் போலவும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவுமானேன்" (1கொரி 9:20) என்றும்,

"நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலவுமானேன். அப்படியிருந்தும், நான் தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக் குள்ளானவனாயிருக்கிறேன்" (1கொரி 9:21) என்றும்,

"பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன். சுவிசேஷத்தில் நான் உடன் பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தம் இப்படிச் செய்கிறேன்" (1கொரி 9:22,23) என்றும் அப்போஸ்தலர் பவுல் சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரமாணத்தை விட புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷம் அதிக வல்லமையுள்ளது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்காக தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். நாமும் மற்றவர்களுக்காக நம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கவேண்டும் என்பது கிறிஸ்துவின் உபதேசம்.

"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1யோவா 3:16).

நாம் நம்மில் அன்புகூருவதுபோல மாத்திரமல்ல, நாம் நம்மில் அன்புகூருவதைவிட அதிகமாகவும் பிறனிடத்தில் அன்புகூரவேண்டும். இதுவே இயேசுகிறிஸ்துவின் அடிப்படை உபதேசம்.

கர்த்தர் இந்த அதிகாரத்தில் சமுதாய பிரமாணங்களையும், மார்க்க பிரமாணங்களையும் பற்றிச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. களவுசெய்யாமல் இருங்கள் (லேவி 19:11; யாத் 20:15).

2. வஞ்சனைபண்ணாமல் இருங்கள் (லேவி 19:11; யாத் 20:16).

3. பொய் சொல்லாமல் இருங்கள் (லேவி 19:11; யாத் 20:16).

4. என் (தேவனுடைய) நாமத்தைக் கொண்டு பொய்யாணையிடாதிருங்கள் (லேவி 19:12).

5. தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமல் இருங்கள்.

6. பிறனை ஒடுக்காமல் இருங்கள் (லேவி 19:13).

7. பிறனை கொள்ளையிடாமல் இருங்கள்.

8. கூலிக்காரனுடைய கூலியைத் தினந்தோறும் கொடுத்துவிடுங்கள்.

9. செவிடனை நிந்தியாமல் இருங்கள் (லேவி 19:14).

10. குருடனுக்கு முன்னே தடுக்கலை வைக்காதீர்கள்.

11. தேவனுக்குப் பயந்திருங்கள்.

12. நியாயவிசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள் (லேவி 19:15).

13. சிறியவனுக்கு முகதாட்சிணியம் செய்யாதிருங்கள்.

14. பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமல் இருங்கள்.

15. நீதியாகப் பிறனுக்கு நியாயந்தீர்ப்பாயாக

16. கோள்சொல்லித் திரியாதிருங்கள் (லேவி 19:16).

17. பிறனுடைய இரத்தப்பழிக்கு உட்பட வேண்டாம்.

18. உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக (லேவி 19:17).

19. பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்து கொள்ள வேண்டும்.

20. பழிக்குப்பழி வாங்காதிருங்கள் (லேவி 19:18).

21. உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாதிருங்கள்.

22. உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக.

23. என் கட்டளைகளைக் கைக்கொள்வீர்களாக (லேவி 19:19).

24. உன் மிருகஜீவன்களை வேறு ஜாதியோடே பொலியவிடாயாக.

25. உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளைக் கலந்து விதையாயாக.

26. சணல் நூலும் கம்பளிநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதிருப்பாயாக.

கர்த்தருடைய கட்டளை
லேவி 19:19-29

லேவி 19:19. என் கட்டளைகளைக் கைக்கொள்வீர்களாக; உன் மிருகஜீவன்களை வேறு ஜாதியோடே பொலியவிடாயாக; உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளைக் கலந்து விதையாயாக; சணல் நூலும் கம்பளிநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதிருப்பாயாக.

லேவி 19:20. ஒருவனுக்கு அடிமையானவள் ஒரு புருஷனுக்கு நியமிக்கப்பட்டவளாயிருந்து, முற்றிலும் மீட்கப்படாமலும் தன்னிச்சையாய் விடப்படாமலுமிருக்க, அவளோடே ஒருவன் சம்யோகமாய்ச் சயனம்பண்ணினால், அவர்கள் கொலை செய்யப்படாமல், அடிக்கப்பட வேண்டும்; அவள் சுயாதீனமுள்ளவள் அல்ல.

லேவி 19:21. அவன் தன் குற்றநிவாரணபலியாய் ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் ஒரு ஆட்டுக்கடாவைக் கொண்டுவரக்கடவன்.

லேவி 19:22. அதினாலே ஆசாரியன் அவன் செய்த பாவத்தினிமித்தம் அவனுக்காகக் கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அவன் செய்த பாவம் அவனுக்கு மன்னிக்கப்படும்.

லேவி 19:23. நீங்கள் அந்த தேசத்தில் வந்து, புசிக்கத்தக்க கனிகளைத் தருகிற பலவிதமரங்களை நாட்டினபின்பு, அவைகளின் கனிகளை விருத்தசேதனமில்லாதவைகளென்று எண்ணுவீர்களாக; மூன்று வருஷம் அது புசிக்கப்படாமல், விருத்தசேதனமில்லாததாய் உங்களுக்கு எண்ணப்படவேண்டும்.

லேவி 19:24. பின்பு நாலாம் வருஷத்திலே அவைகளின் கனிகளெல்லாம் கர்த்தருக்குத் துதிசெலுத்துகிறதற்கேற்ற பரிசுத்தமாயிருக்கும்.

லேவி 19:25. ஐந்தாம் வருஷத்திலே அவைகளின் கனிகளைப் புசிக்கலாம்; இப்படி அவைகளின் பலன் உங்களுக்குப் பெருகும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

லேவி 19:26. யாதொன்றையும் இரத்தத்துடன் புசிக்கவேண்டாம். குறிகேளாமலும், நாள்பாராமலும் இருப்பீர்களாக.

லேவி 19:27. உங்கள் தலைமயிரைச் சுற்றி ஒதுக்காமலும், தாடியின் ஓரங்களைக் கத்தரிக்காமலும்,

லேவி 19:28. செத்தவனுக்காக உங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்ளாமலும், அடையாளமான எழுத்துக்களை உங்கள்மேல் குத்திக் கொள்ளாமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர்.

லேவி 19:29. தேசத்தார் வேசித்தனம்பண்ணி தேசமெங்கும் முறைகேடான பாவம் நிறையாதபடிக்கு உன் குமாரத்தியை வேசித்தனம்பண்ண விடுகிறதினாலே பரிசுத்தக் குலைச்சலாக்காயாக.

ஆதியிலே தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டுமிருகங்களையும், ஜாதிஜாதியான நாட்டுமிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார் (ஆதி 1:25). இது இயற்கையின் பிரமாணம். கர்த்தர் இந்தப் பிரமாணத்தை மாற்ற விரும்பவில்லை. ஆகையினால், "மிருகஜீவன்களை வேறு ஜாதியோடே பொலிய விடாயாக" (லேவி 19:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"என் கட்டளைகளைக் கைக்கொள்வீர்களாக" என்னும் வாக்கியம் தேவனுடைய நியாயங்கள், கற்பனைகள், பிரமாணங்கள் ஆகியவற்றை குறிக்கிறது.

ஒவ்வொரு மிருகஜீவனும் அதனதன் ஜாதியில் பலுகிப் பெருகவேண்டும். ஒரு மிருகஜீவனை வேறொரு ஜாதியோடே கலக்கக்கூடாது. கர்த்தர் நியமனம்பண்ணின இயற்கையின் பிரமாணத்தை மனுஷன் மாற்றக்கூடாது. கர்த்தர் தம்முடைய தெய்வீக ஞானத்தினால், இந்தப் பிரமாணத்தை நியமனம் செய்திருக்கிறார். கர்த்தருடைய தெய்வீக ஞானமும், அவருடைய தெய்வீக திட்டமும், சித்தமும் சகல ஜீவராசிகளுக்கும் நன்மையானது என்று நாம் நம்பவேண்டும்.

கர்த்தருடைய தெய்வீக திட்டமும் அவருடைய கிரியையும் நமக்கு போதுமானது என்னும் திருப்தியோடிருக்கவேண்டும். நம்முடைய சுயஞானத்தையும், சுயபுத்தியையும் நாம் பயன்படுத்தி, மிருகஜீவன்களிலே இராட்சத மிருகஜீவன்களை உண்டாக்கவேண்டுமென்று பேராசைப்படக்கூடாது.

"என் கட்டளைகளைக் கைக்கொள்வீர்களாக; உன் மிருகஜீவன்களை வேறு ஜாதியோடே பொலியவிடாயாக; உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளைக் கலந்து விதையாயாக; சணல் நூலும் கம்பளிநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதிருப்பாயாக" (லேவி 19:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோசேயின் ஆகமங்களில் ஒரு சில காரியங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறது அதன் விவரம் வருமாறு :

1. தங்கள் தங்கள் ஜாதிப்புல் (ஆதி 1:11-12)
2. தங்கள் தங்கள் ஜாதி விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகள் (ஆதி 1:11-12)
3. தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்கள் (ஆதி 1:11-12)
4. மகா மச்சங்கள், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர் வாழும் ஜந்துக்கள் (ஆதி 1:21)
5. சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகள் (ஆதி 1:21; ஆதி 6:20; ஆதி 8:19)
6. ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்கள் ஊரும் பிராணிகள், காட்டு மிருகங்கள் (ஆதி 1:24; ஆதி 6:19)
7. ஜாதிஜாதியான நாட்டுமிருகங்கள் (ஆதி 1:24-25; ஆதி 6:20)
8. ஜாதியான ஊரும் பிராணிகள் (ஆதி 1:24; ஆதி 6:20; ஆதி 8:19)
9. ஜாதிஜாதியான காட்டுமிருகங்கள் (ஆதி 1:24; ஆதி 8:19)
10. தேவனுடைய சாயலாகவும் தேவனுடைய ரூபத்தின் படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன் (ஆதி 1:26-28; ஆதி 5:1-3; ஆதி 9:6; யாக் 3:9)
11. ஜாதிகளுடைய தீவுகள், அவனவன் பாஷையின்படியேயும், அவரவர்கள் கோத்திரத்தின்படியேயும், ஜாதியின் படியேயும், வேறுவேறு தேசங்களாய்ப் பகுக்கப்பட்டன. (ஆதி 10:5)
12. இவர்கள் தங்கள் தேசங்களிலும், தங்கள் ஜாதிகளிலுமுள்ள தங்கள் வம்சங்களின் படியேயும், தங்கள் பாஷைகளின் படியேயும் காமுடைய சந்ததியார் (ஆதி 10:20)
13. இவர்களே தங்கள் தேசங்களிலும், தங்கள் ஜாதிகளிலுமுள்ள தங்கள் வம்சங்களின் படியேயும், தங்கள் பாஷைகளின் படியேயும் சேமுடைய சந்ததியார் (ஆதி 10:31)
14. தங்கள் ஜாதிகளிலுள்ள தங்களுடைய சந்ததிகளின்படியே நோவாவுடைய குமாரரின் வம்சங்கள் இவைகளே; ஜலப்பிரளயத்துக்குப் பின்பு இவர்களால் பூமியிலே ஜாதிகள் பிரிந்தன (ஆதி 10:32)
15. பின்னும் அவர்கள்: நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள் (ஆதி 11:4).
16. கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார்; அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள் (ஆதி 11:8-9)
17. கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன் என்றார் (ஆதி 12:7)
18. அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பேதள்ளும் (ஆதி 21:9-16)
19. நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்ளாமல்; நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண்கொள்வேன் என்று, வானத்துக்குத் தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக் கொடுக்கும்படிக்கு, நீ உன் கையை என் தொடையின் கீழ் வை என்றான் (ஆதி 24:3-4).

20. ஆபிரகாமுக்கு இருந்த மறுமனையாட்டிகளின் பிள்ளைகளுக்கோ ஆபிரகாம் நன் கொடைகளைக் கொடுத்து, தான் உயிரோடிருக்கும்போதே அவர்களைத் தன் குமாரனாகிய ஈசாக்கைவிட்டுக் கிழக்கேபோகக் கீழ்தேசத்துக்கு அனுப்பிவிட்டான் (ஆதி 25:6)

21. சாராளுடைய வயிற்றில் பிறந்த பிள்ளைகள் மூலமாக இரண்டு சந்ததியார் தோன்றினார்கள். அவர்கள் பிரிக்கப்பட்டார்கள் (ஆதி 36; ஆதி 46)

22. ஏசா நாற்பது வயதானபோது, ஏத்தியனான பெயேரியினுடைய குமாரத்தியாகிய யூதீத்தையும், ஏத்தியனான ஏலோனுடைய குமாரத்தியாகிய பஸ்மாத்தையும் விவாகம் பண்ணினான். அவர்கள் ஈசாக்குக்கும் ரெபேக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள் (ஆதி 26:34,35)

23. ஈசாக்கு யாக்கோபை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளாமல், எழுந்து புறப்பட்டுப், பதான் அராமிலிருக்கிற உன் தாயினுடைய தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப் போய், அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளுக்குள் பெண்கொள் என்று அவனுக்குக் கட்டளையிட்டான் (ஆதி 28:1-2).

24. கலப்பு மணத்தை நாடியதால், ஒரு புறஜாதி பட்டணம் அழிந்தது (ஆதி 34)

25. ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள் (யாத் 23:31-33; உபா 7:3-6; எண் 23:9)

26. இஸ்ரவேலர் எகிப்திலிருந்த 215 வருஷ காலத்தில், அவர்கள் எகிப்தியரோடு எந்த சம்பந்தமும் பண்ணவில்லை. (ஆதி 47:6; யாத் 8:22-23; யாத் 9:26; யாத் 11:7)

27. உன் மிருகஜீவன்களை வேறு ஜாதியோடே பொலியவிடாயாக (லேவி 19:19)

28. உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளைக் கலந்து விதையாயாக (லேவி 19:19; உபா 22:9)

29. சணல் நூலும் கம்பளிநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதிருப்பாயாக. ஆட்டுமயிரும் பஞ்சுநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்திக் கொள்ளாயாக (லேவி 19:19; உபா 22:11).

30. மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக (உபா 22:10)

31. உன்னதமானவர் ஜாதிகளுக்குச் சுதந்தரங்களைப் பங்கிட்டு, ஆதாமின் புத்திரரை வெவ்வேறாய்ப் பிரித்த காலத்தில், இஸ்ரவேல் புத்திரருடைய தொகைக்குத்தக்கதாய், சர்வஜனங்களின் எல்லைகளைத் திட்டம் பண்ணினார். (உபா 32:8-9). (அப் 17:26)

"மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்" என்று அப்போஸ்தலர் 17:26 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருந்தாலும் "சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது (தானி 7:13-14) என்று தானியேல் தீர்க்கதரிசி கூறியிருக்கிறார்.

தங்களுடைய சொந்த பூமியில் வாசம் பண்ணுவதற்காக இஸ்ரவேல் தேசத்தார் சகல ஜாதிகளிலிருந்தும் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் (ஏசா 11:10-12; எசே 37; எசே 47-48; மத் 24:31). மற்ற தேசத்தார் கர்த்தருடைய தீர்மானத்தின் பிரகாரம் அவரவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குத் திரும்புவார்கள். கிறிஸ்துவும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் அவர்களை நித்திய காலமாக ஆளுகை செய்வார்கள்.

புறஜாதியார் தங்களுடைய விக்கிரகாராதனையிலே சணல் நூலும் கம்பளி நூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்துகிறார்கள். கர்த்தருடைய ஜனம் புறஜாதியாருக்கு ஒத்த வேஷம் தரிக்கக்கூடாது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். பரிசுத்தமே நமக்கு மெய்யான அலங்காரம்.

புறஜாதியாரில் குறிசொல்லுகிறவர்களும், அஞ்சனம் பார்க்கிறவர்களும் விநோதமான வஸ்திரங்களை உடுத்தியிருப்பார்கள். அதுபோன்ற வஸ்திரங்கள் நமக்கு தேவையில்லை. கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற வஸ்திரங்களே போதுமானது. நம்முடைய வஸ்திரம் எளிமையானதாக யிருந்தாலும் அது சுத்தமானதாகயிருக்க வேண்டும். புறஜாதியாரின் வஸ்திரமோ பல்வேறு நிறங்களிலிருக்கும். ஆனால் அவை சுத்தமில்லாமல் அசுத்தமாயிருக்கும். இஸ்ரவேல் புத்திரர் எளிமையாயும் சுத்தமாயும் இருக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம்.

கர்த்தர் விபசாரம் பண்ணுகிறவனுக்கு விரோதமாக தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார். "ஒருவனுக்கு அடிமையானவள் ஒரு புருஷனுக்கு நியமிக்கப்பட்டவளாயிருந்து, முற்றிலும் மீட்கப்படாமலும் தன்னிச்சையாய் விடப்படாமலுமிருக்க, அவளோடே ஒருவன் சம்யோகமாய்ச் சயனம்பண்ணினால், அவர்கள் கொலை செய்யப்படாமல், அடிக்கப்படவேண்டும்; அவள் சுயாதீனமுள்ளவள் அல்ல" (லேவி 19:20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் விவாக மஞ்சத்தைக் கனம்பண்ணுகிறார். ஒரு ஸ்திரீயானவள் ஒரு புருஷனுக்கு நியமிக்கப்படும் போதே, அவர்களுடைய விவாக சம்பந்தம் ஆரம்பித்துவிடுகிறது. ஆனால் இந்த வசனத்தில் அடிமையானவளும், அவளுடைய எஜமானும் முறையில்லாமல் சம்யோகமாய் சயனம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய பிரமாணத்தின்படி அவர்கள் கொல்லப்படவேண்டும். ஆனால் கர்த்தர் இந்த வசனத்தில் அவர்களுக்கு விசேஷித்த சலுகை காண்பிக்கிறார். அவர்கள் கொலை செய்யப்படாமல் அடிக்கப்படவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

தன் எஜமானனோடு சம்யோகமாய் சயனம்பண்ணினவள் சுயாதீனமுள்ளவளல்ல. அவள் அடிமையானவள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சுயாதீனமுள்ளவளுக்கும், அடிமையானவளுக்கும் வெவ்வேறு பிரமாணங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"அதைக்குறித்து வேதம் என்ன சொல்லுகிறது: அடிமையானவளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை; ஆகையால் அடிமையானவளையும், அவளுடைய மகனையும் புறம்பே தள்ளு என்று சொல்லுகிறது. இப்படியிருக்க, சகோதரரே, நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல், சுயாதீனமுள்ளவர்களுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம்" (கலா 4:30,31).

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தில் அடிமையானவளுக்கும் சுயாதீனமுள்ளவளுக்கும் வித்தியாசம் காண்பிக்கப்படவில்லை. இரண்டுபேருமே ஒன்றுபோல பாவிக்கப்படுகிறார்கள். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை.

"அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும், விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை புறஜாதியானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்" (கொலோ 3:11).

எஜமான் தனக்கு அடிமையானவளோடே சம்யோகமாய் சயனம்பண்ணினால், அவள் வேறொரு புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்தால், அவர்கள் இருவரும் அடிக்கப்படவேண்டுமென்று கர்த்தருடைய பிரமாணம் சொல்லுகிறது. அவர்கள் கொலைசெய்யப்படவேண்டியதில்லை.

"அவன் தன் குற்றநிவாரணபலியாய் ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் ஒரு ஆட்டுக்கடாவைக் கொண்டுவரக்கடவன். அதினாலே ஆசாரியன் அவன் செய்த பாவத்தினிமித்தம் அவனுக்காகக் கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அவன் செய்த பாவம் அவனுக்கு மன்னிக்கப்படும்" (லேவி 19:21,22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அடிமையோடு சம்யோகமாய் சயனம்பண்ணுதல் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஒருவனுக்கு அடிமையானவள் ஒரு புருஷனுக்கு நியமிக்கப்பட்டவளாயிருந்து, முற்றிலும் மீட்கப்படாமலும் தன்னிச்சையாய் விடப்படாமலுமிருக்க, அவளோடே ஒருவன் சம்யோகமாய்ச் சயனம்பண்ணினால், அவர்கள் கொலை செய்யப்படாமல், அடிக்கப்படவேண்டும்.

2. அடிமையானவளும் தண்டிக்கப்பட வேண்டும்.

3. கன்னிகையான ஒரு பெண் ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், மற்றொருவன் அவளை ஊருக்குள்ளே கண்டு, அவளோடே சயனித்தால், இருவரையும் அந்தப் பட்டணத்து வாசலுக்குமுன் கொண்டுபோய், அவர்கள்மேல் கல்லெறிந்து கொல்லக் கடவீர்கள் (உபா 22:23-24)

4. அவன் தன் குற்றநிவாரணபலியாய் ஆசரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் ஒரு ஆட்டுக்கடாவைக் கொண்டுவரக்கடவன் (லேவி 19:21).

5. ஆசாரியன் அவன் செய்த பாவத்தினிமித்தம் அவனுக்காகக் கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்யக் கடவன்; அப்பொழுது அவன் செய்த பாவம் அவனுக்கு மன்னிக்கப்படும் (லேவி 19:22).

கானான் தேசத்தில் வளருகிற கனிதரும் மரங்களைப்பற்றியும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். "நீங்கள் அந்த தேசத்தில் வந்து, புசிக்கத்தக்க கனிகளைத் தருகிற பலவிதமரங்களை நாட்டினபின்பு, அவைகளின் கனிகளை விருத்தசேதனமில்லாதவைகளென்று எண்ணுவீர்களாக; மூன்று வருஷம் அது புசிக்கப்படாமல், விருத்தசேதனமில்லாததாய் உங்களுக்கு எண்ணப்படவேண்டும்" (லேவி 19:23) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் வந்த பின்பு, கனிகளைத் தருகிற பலவித மரங்களை நாட்டுவார்கள். அவை ஒரு வருஷத்திலோ அல்லது இரண்டு வருஷத்திலோ கனிகளை தரலாம். அவர்கள் மூன்று வருஷம் வரையிலும் அந்த மரங்களின் கனிகளை புசிக்கக்கூடாது. அவை அவர்களுக்கு விருத்தசேதனமில்லாத கனிகளாய் எண்ணப்படவேண்டும்.

மரங்கள் கனிகளை தரும்போது, முதல் மூன்று வருஷங்களுக்கு, அந்தக் கனிகளை பறிக்கவேண்டும். ஆனால் அவர்கள் அதைப் புசிக்கக்கூடாது. அந்தக் கனிகளை கர்த்தருக்கு முதற்கனிகளாக செலுத்தவும் கூடாது. முதல் மூன்று வருஷங்களில் பழுக்கிற கனிகள் கர்த்தருக்கும், மனுஷருக்கும் பிரயோஜனமற்றது.

நான்காம் வருஷத்தில், மரங்களில் கிடைக்கிற கனிகள் பரிசுத்தமானது. அந்தக் கனிகளை கர்த்தருக்கு முதற்கனிகளாக செலுத்தலாம். "பின்பு நாலாம் வருஷத்திலே அவைகளின் கனிகளெல்லாம் கர்த்தருக்குத் துதிசெலுத்துகிறதற்கேற்ற பரிசுத்தமாயிருக்கும்" (லேவி 19:24) என்று கர்த்தர் சொல்லுகிறார். நான்காம் வருஷத்திலே, கர்த்தருக்கு செலுத்தப்பட்ட கனிகளை, ஆசாரியரும் பரிசுத்த ஸ்தலத்திலே புசிக்கலாம்.

இஸ்ரவேல் புத்திரர் ஐந்தாம் வருஷத்திலே அந்த மரங்களின் கனிகளை புசிக்கலாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். "இப்படி அவைகளின் பலன் உங்களுக்குப் பெருகும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 19:25) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கனிகளை தருகிற பலவித மரங்களைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. கனிகளைத் தருகிற பலவிதமரங்களை நாட்டினபின்பு, மூன்று வருஷம் அவைகளின் கனிகளை விருத்த சேதனமில்லாதவைகளென்று எண்ணுவீர்களாக.

2. இந்த மூன்று வருஷங்களும் அந்த கனிகளைப் புசிக்காதிருங்கள்.

3. நாலாம் வருஷத்திலே அவைகளின் கனிகளெல்லாம் கர்த்தருக்குத் துதி செலுத்துகிறதற்கேற்ற பரிசுத்தமாயிருக்கும் (லேவி 19:24).

4. ஐந்தாம் வருஷத்திலே அவைகளின் கனிகளைப் புசிக்கலாம்; இப்படி அவைகளின் பலன் உங்களுக்குப் பெருகும் (லேவி 19:25).

"விருத்தசேதனமில்லாத கனிகள்" என்னும் வார்த்தைக்கு, பறிக்கப்படாத கனிகள் என்பது பொருளாகும். (லேவி 19:23-25).

மனுஷரில் தலைப்பிள்ளைகள், மிருகங்களின் தலையீற்றுகள், மரங்களின் முதற்கனிகள் ஆகியவை கர்த்தருக்குத் துதிசெலுத்துகிறதற்கேற்ற பரிசுத்தமாயிருக்கும். ஆசாரியர் இவற்றைப் பரிசுத்த ஊழியங்களுக்குப் பயன்படுத்துகிறபடியினால், இவை பரிசுத்தமானவை என்று அழைக்கப்படுகிறது.

கர்த்தருடைய சந்நிதியிலே மிருகஜீவன்களை காணிக்கையாக கொண்டு வரும்போது, அவை பிறந்து குறைந்தது எட்டு நாட்களாவாது நிறைவேறியிருக்கவேண்டும். பிறந்து எட்டு நாட்கள் ஆகாத மிருகஜீவன்களை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தக்கூடாது. இஸ்ரவேல் புத்திரரில் ஆண்பிள்ளை பிறக்கும்போது, அந்தப் பிள்ளை பிறந்து எட்டு நாட்களுக்கு பின்பே, அதற்கு விருத்தசேதனம்பண்ணப்பட வேண்டும்.

"ஒரு கன்றாவது செம்மறியாட்டுக் குட்டியாவது வெள்ளாட்டுக்குட்டியாவது பிறந்தால், அது ஏழுநாள் தன் தாயினிடத்தில் இருக்கக்கடவது; எட்டாம் நாள்முதல் அது கர்த்தருக்குத் தகனபலியாக அங்கிகரிக்கப்படும்" (லேவி 22:27).

மரங்களின் கனிகள் கர்த்தருக்கே உரியது. மரங்களின் முதற்கனிகளை கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வரவேண்டும். ஆனால் அந்த மரங்களின் கனிகளை முதல் மூன்று வருஷங்களுக்கு, கர்த்தருக்கு காணிக்கையாக படைக்கக்கூடாது. அதை மனுஷரும் புசிக்கக்கூடாது. பிறந்து ஏழு நாட்களேயான ஆட்டுக்குட்டியையும் கன்றுக்குட்டியையும் கர்த்தருக்கு பலிசெலுத்தக்கூடாது. அதுபோல முதல் மூன்று வருஷங்களில் கிடைத்த கனிகளை கர்த்தருக்கு காணிக்கையாக படைக்கக்கூடாது.

ஆட்டுக்குட்டியும், கன்றுக்குட்டியும் ஏழுநாளளவும் தன் தாயினிடத்தில் இருக்கவேண்டும். இது கர்த்தருடைய பிரமாணம். ஆட்டுக்குட்டியும் கன்றுக்குட்டியும் பிறந்து எட்டு நாட்களுக்கு பின்பே அவை கர்த்தருடைய பலிபீடத்திலே சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படவேண்டும். அப்போதுதான் அந்த மிருகஜீவன்கள் கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தப்பட தகுதி பெறுகிறது.

தமக்கு செலுத்தப்படும் எல்லா பலிகளையும் கர்த்தர் அங்கீகரிப்பதில்லை. எது தகுதியானதோ அதை மாத்திரமே கர்த்தர் அங்கீகரிக்கிறார். முதல் மூன்று வருஷத்திலே பழுத்த பழங்கள் கர்த்தருக்கு படைக்கப்படவில்லை. ஆகையினால் அவை விருத்தசேதனம்பண்ணப்படாத கனிகள். பிறந்து எட்டு நாட்கள்கூட ஆகாத மிருகஜீவன்கள் எந்த பயன்பாட்டிற்கும் தகுதியானதல்ல. அதுபோலவே முதல் மூன்று வருஷங்களில் பழுத்த பழங்கள் எந்த ஒரு உபயோகத்திற்கும் பிரயோஜனமற்றவை.

புறஜாதியாரின் மார்க்க பழக்க வழக்கங்களுக்கு விரோதமாக கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார். "யாதொன்றையும் இரத்தத்துடன் புசிக்கவேண்டாம். குறிகேளாமலும், நாள்பாராமலும் இருப்பீர்களாக. உங்கள் தலைமயிரைச் சுற்றி ஒதுக்காமலும், தாடியின் ஓரங்களைக் கத்தரிக்காமலும், செத்தவனுக்காக உங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்ளாமலும், அடையாளமான எழுத்துக்களை உங்கள்மேல் குத்திக் கொள்ளாமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர்" (லேவி 19:26-28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சமுதாய பிரமாணங்களைப்பற்றியும், மார்க்கப் பிரமாணங்களைப்பற்றியும் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. யாதொன்றையும் இரத்தத்துடன் புசிக்க வேண்டாம்.

2. குறிகேளாமல் இருங்கள்.

3. நாள் பார்க்காமல் இருங்கள்.

4. உங்கள் தலைமயிரைச் சுற்றி ஒதுக்காமல் இருங்கள் (லேவி 19:27).

5. தாடியின் ஓரங்களைக் கத்தரிக்காமல் இருங்கள்.

6. செத்தவனுக்காக உங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்ளாதிருங்கள் (லேவி 19:28).

7. அடையாளமான எழுத்துக்களை உங்கள்மேல் குத்திக் கொள்ளாமல் இருப்பீர்களாக.

8. உன் குமாரத்தியை வேசித்தனம்பண்ண விடாதேயுங்கள் (லேவி 19:29)

9. என் ஓய்வுநாட்களை ஆசரியுங்கள் (லேவி 19:30).

10. என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தியாயிருப்பீர்களாக.

11. அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடாதேயுங்கள் (லேவி 19:31).

12. குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள்.

13. நரைத்தவனுக்கு முன்பாக எழுந்திருங்கள் (லேவி 19:32).

14. முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம் பண்ணுங்கள்.

15. உன் தேவனுக்குப் பயப்படுவாயாக.

16. யாதொரு அந்நியன் உங்கள் தேசத்தில் உங்களோடே தங்கினால், அவனைச் சிறுமைப்படுத்தவேண்டாம் (லேவி 19:33).

17. உங்களிடத்தில் வாசம்பண்ணுகிற அந்நியனைச் சுதேசிபோல எண்ணுங்கள் (லேவி 19:34).

18. உங்களில் அன்புகூருகிறதுபோல அவனிலும் அன்புகூருவீர்களாக.

19. நியாயவிசாரணையில் நியாயமாக இருப்பீர்களாக (லேவி 19:35).

20. அளவிலும், நிறையிலும், படியிலும் அநியாயம் செய்யாதிருப்பீர்களாக. சுமுத்திரையான தராசும், சுமுத்திரையான நிறைகல்லும், சுமுத்திரையான மரக்காலும், சுமுத்திரையான படியும் உங்களுக்கு இருக்க வேண்டும் (லேவி 19:35-36).

புறஜாதியார் மிருகத்தின் மாம்சத்தை இரத்தத்தோடே புசிக்கிறார்கள். அவர்கள் மிருகங்களை விக்கிரகங்களுக்கு பலி செலுத்தும்போது, அதன் இரத்தத்தை பாத்திரத்தில் பிடித்து அதை பானம்பண்ணுகிறார்கள். இது பேய்களுக்குரிய ஆராதனை. இஸ்ரவேல் புத்திரரோ யாதொன்றையும் இரத்தத்துடன் புசிக்கக்கூடாது.

கர்த்தருக்கு மிருகங்கள் பலியாக செலுத்தப்படுகிறது. அதன் இரத்தம் கர்த்தருடைய பலிபீடத்தின்மீது தெளிக்கப்படவேண்டும். மீதியாய் உள்ள இரத்தம் பலிபீடத்தின் அடியிலே ஊற்றப்படவேண்டும். இதுவே கர்த்தருடைய பிரமாணம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு மிருகங்களை பலிசெலுத்திவிட்டு, அதன் இரத்தத்தைப் பாத்திரத்தில் பிடித்து, அதைக் குடித்து விடக்கூடாது. இரத்தம் குடிப்பது புறஜாதியாரின் விக்கிரகாராதனை.

இஸ்ரவேல் புத்திரர் குறிகேளாமலும் நாள் பாராமலும் இருக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். புறஜாதியார் ஒரு சில நாட்களை மற்ற நாட்களைவிட ராசியானது என்றும், அதிர்ஷ்டமானது என்றும் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு நாளிலும் ஒரு சில நேரங்களை நல்ல நேரம் என்றும், கெட்ட நேரம் என்றும் வெவ்வேறாக பிரிக்கிறார்கள். அஞ்சனம் பார்ப்பது, குறிசொல்லுவது, ஜோசியம் பார்ப்பது ஆகியவையெல்லாம் மனுஷருடைய கண்டுபிடிப்புக்கள். இவை விக்கிரகாராதனையின் ஒரு பகுதி. எகிப்து தேசத்திலே இதுபோன்ற பழக்க வழக்கங்கள் மிகவும் அதிகமாயிருந்தது.

எகிப்தியரின் ஆசாரியர்களும், மந்திரவாதிகளும் குறிசொன்னார்கள், நாள் பார்த்தார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணத்தை சொல்லியிருக்கிறார். கர்த்தருடைய தெய்வீக ஆலோசனையே அவர்களுக்கு போதுமானது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஆலோசனைகளையும், பிரமாணங்களையும் தள்ளிவிட்டு, பிசாசுகளிடத்தில் ஆலோசனை கேட்க போகக்கூடாது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிசாசின் கிரியைகளை அழிப்பதற்காக இந்தப் பூமியிலே தேவகுமாரனாக வெளிப்பட்டார். கர்த்தரை ஆராதிக்கிற பிள்ளைகள் குறிகேட்பதும், நாள் பார்ப்பதும் நல்லதல்ல.

"உங்கள் தலைமயிரைச் சுற்றி ஒதுக்காமலும், தாடியின் ஓரங்களைக் கத்தரிக்காமலும், இருப்பீர்களாக" (லேவி 19:27) என்று கர்த்தர் சொல்லுகிறார். புறஜாதியார் வானராக்கினிகளை தங்கள் தெய்வங்களாக ஆராதிக்கிறார்கள். வானத்திலுள்ள சுடர்கள் எல்லாமே கர்த்தருடைய சிருஷ்டிகள். புறஜாதியாரோ வானத்திலுள்ள கிரகங்களை தங்கள் தெய்வங்களாக ஆராதிக்கிறார்கள். அந்தக் கிரகங்களின் வடிவத்தைப்போலவே தங்கள் தலைமயிரை சுற்றி ஒதுக்கிக்கொள்கிறார்கள். இதுவும் விக்கிரகாராதனையின் ஒரு பகுதியே. இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே இப்படிப்பட்ட மதியீனமான விக்கிரகாராதனை காணப்படக்கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விக்கிரகாராதனையில் இவை பொதுவான பழக்கங்களாகும். விக்கிரகங்களுக்குத் தங்களை அர்ப்பணித்ததற்கு அடையாளமாகப் புறஜாதியார் தங்கள் தலைமயிரைச் சுற்றி ஒதுக்குகிறார்கள். தாடியின் ஓரங்களைக் கத்தரிக்கிறார்கள். எபிரெயர்கள் புறஜாதியாரின் பாரம்பரியப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர்கள் அந்நிய தேசத்தாரைப் போல விக்கிரகாராதனைக்காரர் அல்ல. இஸ்ரவேலர் மெய்யான தேவனை ஆராதிக்கிறவர்கள்.

"செத்தவனுக்காக உங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்ளாமலும், அடையாளமான எழுத்துக்களை உங்கள்மேல் குத்திக் கொள்ளாமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர்" (லேவி 19:28) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

புறஜாதியார் விக்கிரகங்களை ஆராதிக்கும்போதும், துக்கம் அனுசரிக்கும் போது இப்படிப்பட்ட பலாத்காரமான செய்கைகளைச் செய்கிறார்கள். தலையிலுள்ள தங்கள் முடிகளைப் பிடுங்குதல், சரீரத்தைக் கீறிக்கொள்ளுதல், கத்தியினால் குத்திக் கொள்ளுதல் ஆகியவை விக்கிரகாராதனையில் காணப்படும் சில பழக்கங்களாகும் (உபா 14:1; எரே 48:37).

விக்கிரகங்களின் அடையாளங்களைக் கைகளிலும், நெற்றியிலும், சரீரத்தின் பிறபகுதிகளிலும் வரையும் வழக்கம் விக்கிரகாராதனையில் காணப்படுகிறது. தேவன் மனுஷருடைய சரீரத்தைத் தம்முடைய சாயலாகவும், தம்முடைய ரூபத்தின் பிரகாரமாகவும் சிருஷ்டித்திருக்கிறார். மனுஷன் இதை அசுசிப்படுத்தக்கூடாது.

செத்தவனுக்காக துக்கம் கொண்டாடும்போதும், புறஜாதியார் விக்கிரகாராதனையின் பழக்கங்களை பின்பற்றுகிறார்கள். செத்தவனுக்காக தங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்கிறார்கள். விக்கிரகங்களை தங்கள் தெய்வங்கள் என்று சொல்லுகிற புறஜாதியார், செத்துப்போனவர்களையும் தெய்வங்களாக பாவிக்கிறார்கள். விக்கிரகங்களுக்கு முன்பாக தங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்வதுபோல, செத்தவனுக்காகவும் தங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்கிறார்கள். இதுபோன்ற விக்கிரகாராதனை பழக்க வழக்கங்கள் இஸ்ரவேல் புத்திரரிடம் காணப்படக்கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையிலே நமக்காக மரித்தார். நம்முடைய பாவத்தைப் போக்குவதற்காக கிறிஸ்துவானவர் தம்முடைய சொந்த இரத்தத்தையே மீட்பின் கிரயமாக செலுத்தினார். கிறிஸ்துவின் பாடுகளும், அவருடைய சிலுவை மரணமும், நம்மை மரணத்தின் அடிமைத்தனத்திற்கு விடுதலை பண்ணியிருக்கிறது. கிறிஸ்துவானவர் மரித்து உயிரோடு எழும்பியதினால், நாமும் உயிரோடு எழும்புவோம் என்னும் நம்பிக்கை நமக்கு உண்டு. இது நம்முடைய ஆனந்த பாக்கிய நம்பிக்கை.

புறஜாதியாருக்கோ தங்கள் ஜீவனைக் குறித்து நம்பிக்கையில்லை. தங்களுடைய சரீர மரணத்தோடு சகலமும் முடிந்துபோயிற்று என்று. அவர்கள் நம்பிக்கையில்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் மரித்தவர்களுக்காக நம்பிக்கையில்லாமல் துக்கிப்பதுபோல, நம்பிக்கையுள்ளவர்களாகிய நாமும் துக்கிக்கக்கூடாது. விசுவாசிகளாகிய நமக்கு கிறிஸ்து ஜீவனாயிருக்கிறார். சாவு நமக்கு ஆதாயமாயிருக்கிறது.

புறஜாதியார் தங்களுடைய விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக வேசித்தனம் பண்ணுகிறார்கள். தங்கள் குமாரத்திகளையும் வேசித்தனம் பண்ண விடுகிறார்கள். "தேசத்தார் வேசித்தனம்பண்ணி தேசமெங்கும் முறைகேடான பாவம் நிறையாதபடிக்கு உன் குமாரத்தியை வேசித்தனம்பண்ண விடுகிறதினாலே பரிசுத்தக் குலைச்சலாக்காயாக" *(லேவி 19:29)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் குமாரத்திகளை வேசித்தனம் பண்ணுவதற்கு விடக்கூடாது. ஒருசில கலாச்சாரங்களில் திருமணத்திற்கு முன்பாக தங்களுடைய குமாரத்திகளை வேசித்தனத்தில் பயன்படுத்தும் வழக்கம் காணப்படுகிறது. அதனால் சம்பாதிக்கும் பணத்தை அவர்களுடைய விக்கிரகங்களுக்கு அர்ப்பணிக்கிறார்கள்.

கர்த்தர் வேசித்தனத்தை தடைபண்ணுகிறார். கர்த்தருடைய பிரமாணம் வேசித்தன பாவத்திற்கும், விபசார பாவத்திற்கும் எதிராக பேசுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகாராதனைக்காருடைய பாவழக்க வழக்கங்களோடு ஒத்துப்போகக்கூடாது. கர்த்தருடைய ஜனம் புறஜாதியாரின் பாவங்களுக்கு பங்காளிகளாகயிருக்கக் கூடாது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். கர்த்தர் பரிசுத்தர். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரரும் பரிசுத்தராயிருக்கவேண்டும்.

கர்த்தருடைய நியாயங்கள் லேவி 19:30-37

லேவி 19:30. என் ஓய்வுநாட்களை ஆசரித்து, என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தியாயிருப்பீர்களாக; நான் கர்த்தர்.

லேவி 19:31. அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடி, குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள்; அவர்களாலே தீட்டுப்படவேண்டாம்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

லேவி 19:32. நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம் பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக; நான் கர்த்தர்.

லேவி 19:33. யாதொரு அந்நியன் உங்கள் தேசத்தில் உங்களோடே தங்கினால், அவனைச் சிறுமைப்படுத்தவேண்டாம்.

லேவி 19:34. உங்களிடத்தில் வாசம்பண்ணுகிற அந்நியனைச் சுதேசிபோல எண்ணி, நீங்கள் உங்களில் அன்புகூருகிறதுபோல அவனிலும் அன்புகூருவீர்களாக; நீங்களும் எகிப்துதேசத்தில் அந்நியராயிருந்தீர்களே; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

லேவி 19:35. நியாயவிசாரணையிலும், அளவிலும், நிறையிலும், படியிலும் அநியாயம் செய்யாதிருப்பீர்களாக.

லேவி 19:36. சுமுத்திரையான தராசும், சுமுத்திரையான நிறைகல்லும், சுமுத்திரையான மரக்காலும், சுமுத்திரையான படியும் உங்களுக்கு இருக்க வேண்டும்; நான் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர்.

லேவி 19:37. ஆகையால் என்னுடைய கட்டளைகள் யாவையும் என்னுடைய நியாயங்கள் யாவையும் கைக்கொண்டு, அவைகளின்படி நடக்கக்கடவீர்கள்; நான் கர்த்தர் என்று சொல் என்றார்.

கர்த்தர் ஓய்வுநாளை பரிசுத்தம்பண்ணியிருக்கிறார். கர்த்தரை ஆராதிப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கிற நாளையும் ஸ்தலத்தையும் நாமும் பரிசுத்தம்பண்ணவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவரை கனம்பண்ணவேண்டும்.

"என் ஓய்வுநாட்களை ஆசரித்து, என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தியாயிருப்பீர்களாக; நான் கர்த்தர்" (லேவி 19:30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஓய்வுநாட்களை ஆசரிப்பதும், கர்த்தரை ஆராதிப்பதும், அடிக்கடி கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில் ஜனங்கள் இதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இதை மறந்து விட்டால் இஸ்ரவேல் புத்திரருக்குப் பலவிதமான சோதனைகள் வரலாம்.

புதியஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு ஆசரிப்புக்கூடாரமோ அல்லது பழைய ஏற்பாட்டுக்காலத்து தேவாலயமோ இல்லை. கர்த்தர் சர்வவியாபகராயிருக்கிறார். எங்கே இரண்டுபேர் மூன்றுபேர், கர்த்தருடைய நாமத்தினால் கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே கர்த்தர் இருக்கிறார். கர்த்தருடைய பிரசன்னம் நம்மத்தியிலே இருக்கிறது.

"அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடி, குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள்; அவர்களாலே தீட்டுப்படவேண்டாம்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 19:31) என்று கர்த்தர் சொல்லுகிறார். குறிசொல்லுகிறவர்களை தேடி நாம் ஏமாந்துபோகக்கூடாது. அவர்கள் மாயையான வார்த்தைகளை சொல்லுவார்கள். அவர்களுடைய வார்த்தையில் உண்மையிருக்காது. அஞ்சனம் பார்க்கிறவர்களும் குறிசொல்லுகிறவர்களும் பொய்யான மாயையை உண்மையான சம்பவம் போல பேசுவார்கள். கர்த்தருடைய ஜனத்தார் அவர்களாலே தீட்டுப்படக்கூடாது.

அஞ்சனம் பார்ப்பது பிசாசின் கிரியையாகும். பிசாசுகள் மரித்தவர்களைப் போல பாசாங்கு செய்து, ஜனங்களுக்குக் குறிசொல்லும். (1தீமோ 4:1-7). 1சாமு 28 ஆம் அதிகாரத்தில் சாமுவேல் சவுலுக்குத் தோன்றியதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனாலும் 1நாளா 10:13 ஆவது வசனத்தில் அஞ்சனம் பார்க்கிற ஆவி சாமுவேலைப்போல வெளிப்பட்டதாகத் தெரிகிறது. அப் 16:16 ஆவது வசனத்தில் குறிசொல்ல ஏவுகிற ஆவியையுடைய ஒரு சிறிய பிள்ளையைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இவையெல்லாமே தேவனுடைய பிரமாணத்திற்கு எதிரானவை. தேவனால் மட்டுமே மறைபொருளான இரகசியங்களை வெளிப்படுத்த முடியும். பிசாசுகளும் தந்திரம் பண்ணி, தங்களாலும் மறைபொருளை வெளிப்படுத்த முடியும் என்று நடித்து ஜனங்களை வஞ்சிக்கின்றன (லூக்கா 12:29).

"நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம் பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக; நான் கர்த்தர்" (லேவி 19:32) என்று கர்த்தர் சொல்லுகிறார். சிறுவர்கள் முதிர்வயதுள்ளவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கவேண்டும்.

கர்த்தர் முதிர்வயதுள்ளவர்களுக்கு நல்ல சரீர ஆரோக்கியத்தையும் நீடிய ஆயுசையும் கொடுத்து, அவர்களை ஆசீர்வதித்து கனம்பண்ணியிருக்கிறார். கர்த்தர் கனம்பண்ணியவர்களை நாமும் கனம்பண்ணவேண்டும். முதிர்வயதுள்ளவர்கள் நம்முடைய இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரவான்களாயிருக்கிறார்கள்.

வாலிபர்கள் முதிர்வயதுள்ளவர்களின் ஆலோசனைகளை கேட்கவேண்டும். அவர்கள் மூலமாக நமக்கு நல்ல ஆலோசனைகளும், ஆறுதலான வார்த்தைகளும் கிடைக்கும்.

"ஆதலால் பரகெயேலின் குமாரன் எலிகூ என்னும் பூசியன் பிரதியுத்தரமாக: நான் இளவயதுள்ளவன்; நீங்களோ விருத்தாப்பியர்; ஆகையால் நான் அஞ்சி, என் அபிப்பிராயத்தை உங்களுக்கு முன்பாக வெளிப்படுத்தப் பயந்திருந்தேன். முதியோர் பேசமட்டும், வயதுசென்றவர்கள் ஞானத்தை அறிவிக்கட்டும் என்றிருந்தேன்" (யோபு 32:6,7).

இயேசுகிறிஸ்துவின் உபதேசம் நமக்கு கண்ணியமான பழக்க வழக்கங்களை கற்றுக்கொடுக்கிறது. நாம் யாருக்கு கனத்தையும், மதிப்பையும் மரியாதையும் கொடுக்கவேண்டுமோ, அவர்களுக்கு அவற்றை கொடுப்பதற்கு நாம் கடன்பட்டவர்களாயிருப்போம்.

இஸ்ரவேல் ஜனத்தார் அந்நியருக்கும் ஆதரவாயிருக்கவேண்டும். அவர்கள்மீது அன்பையும் கரிசனையையும் காண்பிக்கவேண்டும்.

"யாதொரு அந்நியன் உங்கள் தேசத்தில் உங்களோடே தங்கினால், அவனைச் சிறுமைப்படுத்தவேண்டாம். உங்களிடத்தில் வாசம்பண்ணுகிற அந்நியனைச் சுதேசிபோல எண்ணி, நீங்கள் உங்களில் அன்புகூருகிறதுபோல அவனிலும் அன்புகூருவீர்களாக; நீங்களும் எகிப்துதேசத்தில் அந்நியராயிருந்தீர்களே; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 19:33,34) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் அந்நியர் பற்றிய தம்முடைய பிரமாணத்தை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. அந்நியரைச் சிறுமைப்படுத்தாதீர்கள்.
2. உங்களிடத்தில் வாசம்பண்ணுகிற அந்நியனைச் சுதேசிபோல எண்ணாமல், உங்களுடன் பிறந்தவன் போல எண்ணுங்கள் (லேவி 19:34).
3. உங்களில் அன்புகூருகிறதுபோல அவனிலும் அன்புகூருவீர்களாக.

பஞ்சாகமம் புஸ்தகத்தில் "நீங்கள் அந்நியராயிருந்தீர்களே" என்று நான்கு இடங்களில் கூறப்பட்டிருக்கிறது (லேவி 19:34; யாத் 22:21; யாத் 23:9; உபா 10:19).

நம்மில் நாம் அன்புகூருகிறதுபோல பிறனிலும் அன்பு கூரவேண்டும். அதுபோலவே இஸ்ரவேல் புத்திரர் தங்களிடத்தில் அன்புகூருவதுபோல அந்நியரிடத்திலும் அன்புகூரவேண்டும். அவர்கள் அந்நியரையும் தங்கள் சொந்த ஜனத்தைப்போல பாவித்து அவர்களுக்கு ஆதரவாயிருக்கவேண்டும்.

கர்த்தர் அந்நியரையும் நேசிக்கிறார். அவர் விதவைகளுக்கும் திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஆதரவாயிருக்கிறார்.

"பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார்; அவர் திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார்; துன்மார்க்கரின் வழியையோ கவிழ்த்துப்போடுகிறார்" (சங் 146:9).

கர்த்தர் சர்வசிருஷ்டிகர். அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு பிதாவாயிருப்பதுபோல, எல்லா ஜாதியாருக்கும் பொதுவான பிதாவாயிருக்கிறார். அந்நியருக்கும் கர்த்தரே தேவனாயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரும் எகிப்து தேசத்திலே அந்நியராயிருந்தார்கள். அப்போது கர்த்தர் அவர்களுக்கு ஆதரவாயிருந்தார். இப்போது புறஜாதியார் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அந்நியராயிருக்கிறார்கள். கர்த்தர் எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் புத்திரர்மீது அன்புகூர்ந்ததுபோல, இப்போது இஸ்ரவேல் புத்திரர் தங்களிடத்தில் வாசம்பண்ணுகிற அந்நியரிடத்திலும் அன்புகூரவேண்டும்.

"நியாயவிசாரணையிலும், அளவிலும், நிறையிலும், படியிலும் அநியாயம் செய்யாதிருப்பீர்களாக. சுமுத்திரையான தராசும், சுமுத்திரையான நிறைகல்லும், சுமுத்திரையான மரக்காலும், சுமுத்திரையான படியும் உங்களுக்கு இருக்க வேண்டும்; நான் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 19:35,36) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஜனத்தார் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்களுடைய வார்த்தையிலும் செய்கையிலும் உண்மையும் கண்ணியமும் காணப்படவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் மற்றவர்களுக்கு அநியாயம் செய்யக்கூடாது. அவர்கள் யாரையும் வஞ்சிக்ககூடாது. கர்த்தருடைய ஜனத்தார் உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லாததென்றும் சொல்லவேண்டும்.

"ஆகையால் என்னுடைய கட்டளைகள் யாவையும் என்னுடைய நியாயங்கள் யாவையும் கைக்கொண்டு, அவைகளின்படி நடக்கக்கடவீர்கள்; நான் கர்த்தர்" (லேவி 19:37) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய கட்டளைகளையும் பிரமாணங்களையும் மோசேக்கு சொல்லுகிறார். மோசே கர்த்தருடைய வார்த்தைகள் எல்லாவற்றையும் இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்லவேண்டும்.

20 அதிகாரம்

மரணதண்டனை கொடுக்கப்படும் பாவங்களைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மோளேகுக்கு தங்களுடைய பிள்ளைகளை பலியாக கொடுப்பது (லேவி 20:1-5). அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும் பின்தொடர்ந்து சோரம்போவது (லேவி 20:6,27).

தன் பெற்றோரை சபிக்கிறவன் (லேவி 20:9). விபசாரம் (லேவி 20:10). தன் தகப்பன் மனைவியோடே, அல்லது தன் மருமகளோடே அல்லது சயனிக்கக்கூடாத நெருங்கிய உறவினரோடே சயனிப்பது (லேவி 20:11,12,14,17,19-21).

ஆணும்பெண்ணும் சம்யோகம்பண்ணும் இயற்கையான முறைமைக்கு விரோதமாக சம்யோகம்பண்ணுவது (லேவி 20:13,15,16,18). பரிசுத்தமாயிருக்கவேண்டும் என்னும் பொதுவான கட்டளைகள் (லேவி 20:7,8,22-26).

மரணதண்டனை
லேவி 20:1-9

லேவி 20:1. கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 20:2. பின்னும் நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் புத்திரரிலும் இஸ்ரவேலில் வாசம்பண்ணுகிற அந்நியர்களிலும் எவனாகிலும் தன் சந்ததியில் ஒரு பிள்ளையை மோளேகுக்குக் கொடுத்தால், அவன் கொலைசெய்யப்பட வேண்டும்; தேசத்தின் ஜனங்கள் அவன்மேல் கல்லெறியவேண்டும்.

லேவி 20:3. அவன் என் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி, என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கும் படிக்கு, தன் சந்ததியில், ஒரு பிள்ளையை மோளேகுக்குக் கொடுத்ததினாலே, நான் அப்படிப்பட்டவனுக்கு விரோதமாக எதிர்த்து நின்று, அவனைத் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகப்பண்ணுவேன்.

லேவி 20:4. அவன் தன் சந்ததியில் ஒரு பிள்ளையை மோளேகுக்குக் கொடுக்கும்போது, தேசத்தின் ஜனங்கள் அவனைக் கொலைசெய்யாதபடிக்குக் கண்சாடையாயிருந்தால்,

லேவி 20:5. நான் அந்த மனிதனுக்கும் அவன் குடும்பத்துக்கும் விரோதமாக எதிர்த்து நின்று, அவனையும், அவன் பிறகே மோளேகை விபசாரமார்க்கமாய்ப் பின்பற்றின யாவரையும், தங்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகப்பண்ணுவேன்.

லேவி 20:6. அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் பின்தொடர்ந்து சோரம்போக எந்த ஆத்துமா அவர்களை நாடுகிறானோ, அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக எதிர்த்துநின்று, அவனைத் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோகப்பண்ணுவேன்.

லேவி 20:7. ஆதலால் நீங்கள் உங்களைப் பரிசுத்தப்படுத்திப் பரிசுத்தராயிருங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

லேவி 20:8. என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

லேவி 20:9. தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிற எவனும் கொலைசெய்யப்படக்கடவன்; அவன் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தான், அவன் இரத்தப்பழி அவன்மேல் இருப்பதாக.

கர்த்தர் மூன்றுவிதமான பாவங்களுக்கு தம்முடைய பிரமாணத்திலே மரணதண்டனை கொடுக்கிறார். அவையாவன :

1. மோளேகுக்கு தங்கள் பிள்ளையை பலியாக கொடுப்பது.

2. தன் பெற்றோரை சபிப்பது.

3. அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் பின்தொடர்ந்து சோரம்போவது.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை மோளேகுக்கு பலியாக செலுத்தி, அவர்களுக்கு தீங்கு செய்கிறார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகள்மீது அன்பாயும் கரிசனையாயும் இருக்கவேண்டும். பெற்றோர் அவர்களைக் கொன்று போடுவதற்கு முயற்சி செய்யக்கூடாது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "பின்னும் நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் புத்திரரிலும் இஸ்ரவேலில் வாசம்பண்ணுகிற அந்நியர்களிலும் எவனாகிலும் தன் சந்ததியில் ஒரு பிள்ளையை மோளேகுக்குக் கொடுத்தால், அவன் கொலைசெய்யப்படவேண்டும்; தேசத்தின் ஜனங்கள் அவன்மேல் கல்லெறியவேண்டும்" என்றும்,

"அவன் என் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி, என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கும்படிக்கு, தன் சந்ததியில், ஒரு பிள்ளையை மோளேகுக்குக் கொடுத்ததினாலே, நான் அப்படிப்பட்டவனுக்கு விரோதமாக எதிர்த்து நின்று, அவனைத் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகப்பண்ணுவேன்" *(லேவி 20:1-3)* என்றும் சொல்லுகிறார்.

ஒருவன் தன்னுடைய பிள்ளையை மோளேகுக்கு கொடுக்கும்போது, அவனை எச்சரித்தால் மாத்திரம் போதாது என்றும், அவன் கொலைசெய்யப்படவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். ஒரு கொலைபாதகனுக்கு கொடுக்கப்படும் தண்டனை அவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. தேசத்தின் ஜனங்கள் அவன்மேல் கல்லெறிய வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒருவன் மேல் கல்லெறிந்து கொல்லுவது, யூதர் மத்தியிலே கொடுக்கப்படும் மிகவும் பயங்கரமான மரணதண்டனையாகும். தேவனுடைய கரம் நீதியுள்ளது. அவர் பாவத்திற்கும் அக்கிரமத்திற்கும் விரோதமாக தம்முடைய நீதியான கரத்தை நீட்டுகிறார். தன் பிள்ளையை மோளேகுக்கு கொடுக்கிறவனுக்கு விரோதமாக கர்த்தர் எதிர்த்து நிற்கிறார்.

கர்த்தர் தண்டனை கொடுக்குமாறு சொல்லும்போது, சில சமயங்களில் ஜனங்கள் அந்தத் தண்டனையை நிறைவேற்ற தவறிவிடுவார்கள். ஒருவேளை தண்டனைக்குரியவன் அவர்களுடைய சிநேகிதனாகவோ அல்லது உறவினனாகவோ இருக்கலாம். ஆனாலும் மோளேகுக்கு தன் பிள்ளையைக் கொடுத்தவனை தண்டித்தே ஆகவேண்டுமென்று கர்த்தர் தீர்மானமாக சொல்லுகிறார்.

அவன் தன் சந்ததியில் ஒரு பிள்ளையை மோளேகுக்குக் கொடுக்கும்போது, தேசத்தின் ஜனங்கள் அவனைக் கொலைசெய்யாதபடிக்குக் கண்சாடையாயிருந்தால், கர்த்தர் அந்த மனிதனுக்கும் அவன் குடும்பத்துக்கும் விரோதமாக எதிர்த்து நின்று, அவனையும், அவன் பிறகே மோளேகை விபசாரமார்க்கமாய்ப் பின்பற்றின யாவரையும், தங்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகப்பண்ணுவார் *(லேவி 20:4,5)*.

தன் பிள்ளையை மோளேகுக்குக் கொடுத்தவனைக் கொலை பண்ணவேண்டும். அவனைக் கொலைசெய்யாதபடிக்குக் கண்சாடையாயிருந்தால், கண்சாடையாயிருந்தவனும் கொலை பண்ணப்படவேண்டும் *(லேவி 20:4-5)*.

ஒருவனுடைய பாவம் அவனுடைய குடும்பம் முழுவதையும் பாதிக்கிறது. ஆகையினால் ஜனங்கள் தேவனுடைய கட்டளைகளுக்குப் பயந்து கீழ்ப்படிய வேண்டும்.

மோளேகுக்கு ஆராதனை செய்யும்பொழுது, புருஷரும், ஸ்திரீகளும் விபசாரம்பண்ணுவதை ஆராதனையின் ஒரு அம்சமாக நிறைவேற்றுகிறார்கள்.

மோளேகுக்கு தன் பிள்ளையை கொடுத்தவன் தண்டிக்கப்படவேண்டும். இஸ்ரவேலின் நியாயாதிபதிகள் அவனுடைய குற்றத்தை விசாரிக்கவேண்டும். ஒருவனுடைய குற்றம் இரண்டு பேருடைய சாட்சியினால் உறுதிபண்ணப்படும். சில சமயங்களில், சரியான சாட்சியில்லாததினால், குற்றவாளியை குற்றமற்றவன் என்று தீர்த்துவிடுவதற்கு வாய்ப்புள்ளது.

ஒருவன் தன் பிள்ளையை மோளேகுக்கு கொடுக்கும்போது, இஸ்ரவேல் ஜனங்கள் அவன்மேல் கல்லெறிந்து அவனைக் கொல்லவேண்டும். இது கர்த்தருடைய பிரமாணம். தேசத்தின் ஜனங்கள் அவனைக் கொலைசெய்யாதபடிக்கு கண்சாடையாயிருந்துவிடலாம். அவனுக்கு விரோதமாக ஒருவரும் சாட்சி சொல்ல வராமல் போகலாம். சரியான சாட்சி இல்லையென்றால் குற்றம் நிரூபிக்கப்படாது. நியாயாதிபதி குற்றவாளியை தண்டிக்கவும் முடியாது.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் கர்த்தரே குற்றவாளியை தண்டிக்கிறார். தன் பிள்ளையை மோளேகுக்கு கொடுத்தவனுக்கும், அவன் குடும்பத்தாருக்கும் விரோதமாக கர்த்தர் எதிர்த்து நிற்கிறார். மோளேகை விபசார மார்க்கமாய் பின்பற்றிப்போன யாவரையும் தங்கள் ஜனத்திலிராதபடிக்கு கர்த்தர் அவர்களை அறுப்புண்டு போகப்பண்ணுகிறார். பாவத்தின் சம்பளம் மரணம். கர்த்தர் தண்டிக்கும்போது அந்தத் தண்டனைக்கு யாரும் தப்பிக்க முடியாது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது. அதுவே முடிவானது.

அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் பின்தொடர்ந்து சோரம்போக எந்த ஆத்துமா அவர்களை நாடுகிறானோ, அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக எதிர்த்துநின்று, அவனைத் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோகப்பண்ணுவேன் (லேவி 20:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் பின்தொடர்ந்து அவர்களை நாடுகிறவர்களைக் கர்த்தர் தங்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோகப்பண்ணுவார் (லேவி 20:27).

அஞ்சனம் பார்ப்பதும் குறிசொல்லுகிறவர்களை விசாரிப்பதும் பிசாசின் கிரியைகள். இந்தப் பாவமான கிரியைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறவர்கள், தங்களைத் தாங்களே தீட்டுப்படுத்திக்கொள்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்குகிறார்கள்.

பிசாசு ஒரு பொய்யன். அவன் மனுக்குலத்திற்கு சத்துருவாயிருக்கிறான். பொய்யனிடத்தில் யோசனை கேட்கிறவர்களும், தங்கள் பகைவனிடத்தில் ஆலோசனை கேட்கிறவர்களும் மதியீனவர்கள். பிசாசை பின்பற்றி, அவனை விசாரிக்கிறவர்களும் ஞானமில்லாத காரியங்களை செய்கிறார்கள்.

அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் நாடிப்போகிறவர்கள் சோரம்போகிறார்கள். இவை சாத்தானின் ஆழங்களாகயிருக்கிறது. கர்த்தர் அவனுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார். அவன் தன் ஜனத்திலிராதபடிக்கு, அவனை அறுப்புண்டு போகப்பண்ணுவதாக கர்த்தர் சொல்லுகிறார்.

தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிற எவனும் கொலைசெய்யப்படக்கடவன்; அவன் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தான், அவன் இரத்தப்பழி அவன்மேல் இருப்பதாக (லேவி 20:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் நியாயாதிபதிகள் கர்த்தரை மகிமைப்படுத்தவேண்டியவர்கள். அவர்கள் மனுஷர் மத்தியிலே சாமாதானம் ஏற்படுத்துகிறவர்கள். ஒருவன் தன்னுடைய தகப்பனையாவது, தன் தாயையாவது சபிக்கும்போது, அவன் தன் பெற்றோரை தூஷிக்கிறான். பெற்றோரைக் கனம்பண்ணாதவர்களை நியாயாதிபதிகள் தண்டிக்கவேண்டும்.

பெற்றோரை சபிக்கிறவர்கள் அவர்களுடைய ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கமாட்டார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கர்த்தருடைய வார்த்தைகளையும், கற்பனைகளையும், பிரமாணங்களையும் உபதேசம்பண்ணும்போது, பிள்ளைகள் அவர்களுடைய உபதேசத்திற்கு செவிகொடுக்கமாட்டார்கள். பெற்றோருக்கு கீழ்ப்படியாத பிள்ளைகள் கர்த்தருக்கும் கீழ்ப்படியமாட்டார்கள். தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணாதவர்கள், கர்த்தரையும் கனம்பண்ணமாட்டார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணத்தை சொல்லும்போது, "நீங்கள் உங்களைப் பரிசுத்தப்படுத்திப் பரிசுத்தராயிருங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்" *(லேவி 20:7,8)* என்று சொல்லுகிறார்.

மனுஷன் தன்னைத் தேவனுக்காகப் பரிசுத்தம் செய்து அர்ப்பணிக்கிறான். *(லேவி 20:7)* தேவன் அவனை அங்கீகரித்து அவனை மன்னித்து, அவனைச் சுத்திகரித்து சத்தியத்தினாலும் *(யோவான் 17:19)* விசுவாசத்தினாலும் *(அப் 26:18)*. அவனைப் பரிசுத்தமாக்குகிறார்.

நம்முடைய எண்ணங்களிலும், நோக்கங்களிலும், வார்த்தைகளிலும், செய்கைகளிலும் நாம் பரிசுத்தமாயிருக்க வேண்டும். "நீங்கள் உங்களை பரிசுத்தப்படுத்தி பரிசுத்தராயிருங்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய வார்த்தைகளிலும், செய்கைகளிலும் நாம் கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொண்டு அதன் பிரகாரம் நடக்கவேண்டும். நாம் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். "என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மரம் நல்லதாகயிருந்தால் அதன் கனியும் நல்லதாகயிருக்கும். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடக்கும்போது, அவர்கள் தங்களை பரிசுத்தப்படுத்துகிறார்கள். அவர்கள் பரிசுத்தராயிருப்பார்கள். பரிசுத்தமாயிருக்கிறவர்களுடைய வார்த்தைகளும் செய்கைகளும் பரிசுத்தமாயிருக்கும்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஏன் தங்களை பரிசுத்தப்படுத்தி, பரிசுத்தராயிருக்கவேண்டும் என்பதற்கான காரணத்தையும் கர்த்தர் சொல்லுகிறார். "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" என்பது கர்த்தர் சொல்லுகிற முதலாவது காரணம். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தராயிருக்க வேண்டும். கர்த்தர் பரிசுத்தர்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பரிசுத்தமான ஜனங்கள். இந்த உலகத்தார் மத்தியிலே, இஸ்ரவேல் ஜனத்தார், பரிசுத்தமான கர்த்தருக்கு, பிரதிநிதிகளாயிருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் பரிசுத்தராயிருக்கவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். பரிசுத்தமே கர்த்தருடைய வாசஸ்தலமாகயிருக்கிறது. கர்த்தருடைய வீட்டார் அனைவரும் பரிசுத்தராயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தராயிருக்க வேண்டும். கர்த்தர் இதற்கான காரணத்தை சொல்லும்போது, "நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர்" என்று இரண்டாவது காரணத்தை சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய பிரமாணங்கள் மூலமாகவும், கட்டளைகள் மூலமாகவும், விசேஷித்த கிருபைகள், விசேஷித்த சிலாக்கியங்கள் மூலமாகவும் பரிசுத்தமாக்குகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மற்ற ஜாதியாரிடத்திலிருந்து வேறுபிரித்திருக்கிறார். அவர்கள்மீது தம்முடைய விசேஷித்த கிருபையையும், சிலாக்கியத்தையும் காண்பித்து, அவர்களை தம்முடைய சொந்த ஜனமாக அங்கீகரித்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்காக வேறுபிரிக்கப்பட்ட பரிசுத்த ஜனமாயிருக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய வார்த்தைகளையும் பிரமாணங்களையும் கொடுத்திருக்கிறார். இவையெல்லாம் அவர்களை பரிசுத்தமாக்குகிற உபாயங்களாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தைகளையும், பிரமாணங்களையும் போதிக்கிறார்.

கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி கொலைசெய்யப்பட வேண்டியவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. தன் சந்ததியில் ஒரு பிள்ளையை மோளேகுக்குக் கொடுப்பவர்கள் (லேவி 20:2-3)
2. விக்கிரகாராதனைக்குப் பிள்ளைக் கொடுப்பவர்களைக் கொலைசெய்யாத படிக்கு கண்சாடையாயிருப்பவர்கள். (லேவி 20:4-5)
3. அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் பின்தொடர்கிறவர்கள் (லேவி 20:6; லேவி 20:27)
4. தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிறவன் (லேவி 20:9)
5. பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தவன் (லேவி 20:10)
6. தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன் (லேவி 20:11)
7. தன் மருமகளோடே சயனித்தவன் (லேவி 20:12)
8. ஒருவன் ஆணோடே சம்யோகம் பண்ணினால் கொலைசெய்யப்படக்கடவன் (லேவி 20:13)
9. ஒரு ஸ்திரீயையும் அவள் தாயையும் விவாகம் பண்ணினவன் (லேவி 20:14)
10. ஒருவன் மிருகத்தோடே புணர்கிறவன் (லேவி 20:15)
11. ஒரு ஸ்திரீ மிருகத்தோடே சேர்ந்து சயனித்தால், ஸ்திரீயானவளும் அந்த மிருகமும்கொலைச் செய்யப்படவேண்டும் (லேவி 20:16)
12. தன் சகோதரியைச் சேர்த்துக் கொண்டவன். (லேவி 20:17)
13. சூதகஸ்திரீயோடே சயனித்தவன் (லேவி 20:18)
14. தன் தாயினுடைய சகோதரியை நிர்வாணமாக்கினவன் (லேவி 20:19)
15. தன் தகப்பனுடைய சகோதரியை நிர்வாணமாக்கினவன் (லேவி 20:19)
16. தன் தகப்பனின் சகோதரனுடைய மனைவியோடே சயனித்தவன் (லேவி 20:20)
17. தன் சகோதரன் மனைவியை விவாகம் பண்ணினவன் (லேவி 20:21)
18. குறிசொல்லுகிறவர்கள் (லேவி 20:27; லேவி 20:6)

விபசாரம்
லேவி 20:10-21

லேவி 20:10. ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தால், பிறன் மனைவியோடே விபசாரம் செய்த அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலை செய்யப்படக்கடவர்கள்.

லேவி 20:11. தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன் தன் தகப்பனை நிர்வாணமாக்கினபடியால், இருவரும் கொலைசெய்யப்படக்கடவர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக.

லேவி 20:12. ஒருவன் தன் மருமகளோடே சயனித்தால், இருவரும் கொலைசெய்யப்படக்கடவர்கள்; அருவருப்பான தாறுமாறு பண்ணினார்கள்; அவர்கள் இரத்தப் பழி அவர்கள்மேல் இருப்பதாக.

லேவி 20:13. ஒருவன் பெண்ணோடே சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம்பண்ணினால், அருவருப்பான காரியம் செய்த அவ்விருவரும் கொலைசெய்யப்படக்கடவர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக.

லேவி 20:14. ஒருவன் ஒரு ஸ்திரீயையும் அவள் தாயையும் படைத்தால், அது முறைகேடு; இவ்வித முறைகேடு உங்களுக்குள் இராதபடிக்கு, அவனையும் அவர்களையும் அக்கினியில் சுட்டெரிக்க வேண்டும்.

லேவி 20:15. ஒருவன் மிருகத்தோடே புணர்ந்தால், அவன் கொலைசெய்யப்படக் கடவன்; அந்த மிருகத்தையும் கொல்லக்கடவீர்கள்.

லேவி 20:16. ஒரு ஸ்திரீ யாதொரு மிருகத்தோடே சேர்ந்து சயனித்தால், அந்த ஸ்திரீயையும் அந்த மிருகத்தையும் கொல்லக்கடவாய்; இரு ஜீவனும் கொலைசெய்யப்பட வேண்டும்; அவைகளின் இரத்தப்பழி அவைகளின் மேல் இருப்பதாக.

லேவி 20:17. ஒருவன் தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது குமாரத்தியாயிருக்கிற தன் சகோதரியைச் சேர்த்துக் கொண்டு, அவன் அவளுடைய நிர்வாணத்தையும், அவள் அவனுடைய நிர்வாணத்தையும் பார்த்தால், அது பாதகம்; அவர்கள் தங்கள் ஜனங்களின் கண்களுக்கு முன்பாக அறுப்புண்டு போகக் கடவர்கள்; அவன் தன் சகோதரியை நிர்வாணப்படுத்தினான்; அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

லேவி 20:18. ஒருவன் சூதகஸ்திரீயோடே சயனித்து, அவளை நிர்வாணமாக்கினால், அவன் அவளுடைய உதிர ஊற்றைத் திறந்து, அவளும் தன் உதிர ஊற்றை வெளிப்படுத்தினபடியால், இருவரும் தங்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோக வேண்டும்.

லேவி 20:19. உன் தாயினுடைய சகோதரியையும் உன் தகப்பனுடைய சகோதரியையும் நிர்வாணமாக்காயாக, அப்படிப்பட்டவன் தன் நெருங்கிய இனத்தை அவமானமாக்கினான்; அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்.

லேவி 20:20. ஒருவன் தன் தகப்பனின் சகோதரனுடைய மனைவியோடே சயனித்தால், அவன் தன் தகப்பனின் சகோதரனை நிர்வாணமாக்கினான்; அவர்கள் தங்கள் பாவத்தைச் சுமப்பார்கள், சந்தானமில்லாமல் சாவார்கள்.

லேவி 20:21. ஒருவன் தன் சகோதரன் மனைவியை விவாகம்பண்ணினால், அது அசுத்தம்; தன் சகோதரனை நிர்வாணமாக்கினான், அவர்கள் சந்தானமற்றிருப்பார்கள்.

கர்த்தர் விபசார பாவத்திற்கு விரோதமாக தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார். கர்த்தருடைய பார்வையிலே விபசாரம் பண்ணுவது மிகவும் மோசமான பாவமாயிருக்கிறது. "ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபசாரம் செய்தால், பிறன் மனைவியோடே விபசாரம் செய்த அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலை செய்யப்படக்கடவர்கள்" (லேவி 20:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விபசார பாவத்தை விபசாரனும், விபசாரியும் சேர்ந்து செய்கிறார்கள். கர்த்தர் அவர்கள் இருவருக்கும் சேர்ந்து தண்டனை கொடுக்கிறார். விபசாரனும் விபசாரியும் கொலைசெய்யப்பட வேண்டும் என்பதே கர்த்தருடைய பிரமாணம். பாவத்தில் பங்காளிகளாகயிருக்கிற அனைவருக்கும் தண்டனை கொடுக்கப்படுகிறது. ஒரே பாவத்தை இருவர் சேர்ந்து செய்யும்போது, கர்த்தர் ஒருவனை பாவி என்றும், மற்றொருவனை நிரபராதி என்றும் நியாயந்தீர்ப்பதில்லை. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது. அவரிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை.

விவாகமஞ்சம் கர்த்தருக்கு கனமுள்ளது. விவாகம்பண்ணுகிறவர்கள் பரிசுத்தமான சந்ததியை பெற்றெடுக்கவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு விவாகம்பண்ணுவது சம்பந்தமான பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். இந்தப் பிரமாணத்தை மீறி பாவம் செய்கிறவர்கள், தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றி விபசாரம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் அவர்களுக்கு தண்டனை கொடுக்கிறார்.

தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன் தன் தகப்பனை நிர்வாணமாக்கினபடியால், இருவரும் கொலைசெய்யப்படக்கடவர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக (லேவி 20:11) என்றும்,

ஒருவன் தன் மருமகளோடே சயனித்தால், இருவரும் கொலைசெய்யப்படக்கடவர்கள்; அருவருப்பான தாறுமாறு பண்ணினார்கள்; அவர்கள் இரத்தப் பழி அவர்கள்மேல் இருப்பதாக (லேவி 20:12) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

தன் தகப்பன் மனைவியோடே சயனித்த ஒரு சிலரைப்பற்றி வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ரூபன் (ஆதி 35:22; ஆதி 49:4; 1நாளா 5:1)
2. அப்சலோம் (2சாமு 16:19-22)
3. கொரிந்துவிலுள்ள ஒரு கிறிஸ்தவன் (2கொரி 5:1)

ஒருவன் பெண்ணோடே சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம்பண்ணினால், அருவருப்பான காரியம் செய்த அவ்விருவரும் கொலைசெய்யப்படக்கடவர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக (லேவி 20:13) என்றும்,

ஒருவன் ஒரு ஸ்திரீயையும் அவள் தாயையும் படைத்தால், அது முறைகேடு; இவ்வித முறைகேடு உங்களுக்குள் இராதபடிக்கு, அவனையும் அவர்களையும் அக்கினியில் சுட்டெரிக்க வேண்டும் (லேவி 20:14) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஒருவன் தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது குமாரத்தியாயிருக்கிற தன் சகோதரியைச் சேர்த்துக் கொண்டு, அவன் அவளுடைய நிர்வாணத்தையும், அவள் அவனுடைய நிர்வாணத்தையும் பார்த்தால், அது பாதகம்; அவர்கள் தங்கள் ஜனங்களின் கண்களுக்கு முன்பாக அறுப்புண்டு போகக் கடவர்கள்; அவன் தன் சகோதரியை நிர்வாணப்படுத்தினான்; அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான் (லேவி 20:17) என்றும்,

உன் தாயினுடைய சகோதரியையும் உன் தகப்பனுடைய சகோதரியையும் நிர்வாணமாக்காயாக, அப்படிப்பட்டவன் தன் நெருங்கிய இனத்தை அவமானமாக்கினான்; அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள் (லேவி 20:19) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

சகோதரியும், சகோதரனும் உடலுறவில் ஈடுபடுவது பாவம். இதற்கு மரண தண்டனை கொடுக்கப்படுகிறது (லேவி 20:17; லேவி 18:6,9).

கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமாக சம்யோகம்பண்ணுகிறவர்கள் சந்தானமில்லாமல் சாவார்கள்.

ஒருவன் தன் தகப்பனின் சகோதரனுடைய மனைவியோடே சயனித்தால், அவன் தன் தகப்பனின் சகோதரனை நிர்வாணமாக்கினான்; அவர்கள் தங்கள் பாவத்தைச் சுமப்பார்கள், சந்தானமில்லாமல் சாவார்கள் (லேவி 20:20) என்றும்,

ஒருவன் தன் சகோதரன் மனைவியை விவாகம் பண்ணினால், அது அசுத்தம்; தன் சகோதரனை நிர்வாணமாக்கினான், அவர்கள் சந்தானமற்றிருப்பார்கள் (லேவி 20:21) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

சந்தானமில்லாமல் சாவார்கள் என்பது மரண தண்டனைக்கு மாற்றுப் பெயராகும். (லேவி 20:10,11,12, 14,17,18).

சகோதரன் புத்திர சந்தானமில்லாமல் மரித்துப் போனால் அவனுடைய மனைவியை விவாகம் பண்ணலாம் (உபா 25:5; மத் 22:24-30).

விவாகமஞ்சம் பரிசுத்தமானது. தங்களை விவாக சம்பந்தத்தில் இணைத்துக்கொள்கிறவர்கள் பரிசுத்தமான சந்ததியைப் பெற்றெடுக்கவேண்டும். அவர்கள் சம்யோகம்பண்ணுவதும் சுத்தமாயிருக்கவேண்டும். அசுத்தமான சூழ்நிலைகளில் சம்யோகம்பண்ணுவதை கர்த்தர் தடைபண்ணுகிறார்.

ஒருவன் சூதகஸ்திரீயோடே சயனித்து, அவளை நிர்வாணமாக்கினால், அவன் அவளுடைய உதிர ஊற்றைத் திறந்து, அவளும் தன் உதிர ஊற்றை வெளிப்படுத்தினபடியால், இருவரும் தங்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோக வேண்டும் (லேவி 20:18) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தப் பாவத்திற்கு இரண்டு பேருக்குமே மரண தண்டனை கொடுக்கப்படுகிறது. (லேவி 18:19)

விவாகமஞ்சத்தில் தங்களை இணைத்துக்கொண்டவர்கள் தங்களுக்குள்ளே சம்யோகம்பண்ணலாம். கர்த்தர் சொல்லியிருக்கிற விவாக சம்பந்தமான பிரமாணங்களை ஒருவரும் மீறக்கூடாது. ஆணோடே பெண் சம்யோகம்பண்ணுவது இயற்கையின் பிரமாணம். இயற்கையின் பிரமாணத்தைமீறி சம்யோகம்பண்ணுகிறவர்களுக்கு விரோதமாக கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார்.

ஒருவன் மிருகத்தோடே புணர்ந்தால், அவன் கொலைசெய்யப்படக் கடவன்; அந்த மிருகத்தையும் கொல்லக்கடவீர்கள் (லேவி 20:15) என்றும், ஒரு ஸ்திரீ யாதொரு மிருகத்தோடே சேர்ந்து சயனித்தால், அந்த ஸ்திரீயையும் அந்த மிருகத்தையும் கொல்லக்கடவாய்; இரு ஜீவனும் கொலைசெய்யப்பட வேண்டும்; அவைகளின் இரத்தப்பழி அவைகளின் மேல் இருப்பதாக (லேவி 20:16) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

புறஜாதி மார்க்கங்களில் ஸ்திரீகள் மத்தியிலும், புருஷர் மத்தியிலும் மிருகத்தோடு புணரும் பழக்கம் இருந்தது. இந்தப் பாவத்திற்காகவும், மேலும் பல முறைகேடுகளுக்காகவும் கானானியர் அழிக்கப்பட்டார்கள் (லேவி 18:19-25; லேவி 20:22-24).

புருஷருக்கும், ஸ்திரீக்கும் ஏற்படும் உடலுறவின் மூலமாக அவர்கள் ஒரே மாம்சமாகிறார்கள். (2கொரி 6:15-18). மனுஷன் தேவனுடைய சாயலாகவும், அவருடைய ரூபமாகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறவன். அவன் மிருகத்தோடே புணரும்போது, தேவனுடைய சாயலை மிருகத்தின் சாயலோடு ஒரே மாம்சமாக்கி விடுகிறான். தன்னைச் சிருஷ்டித்தவரை அவமதிக்கிறான்.

மிருகத்தோடு புணருகிறவர்களும், அந்த மிருகமும் கொல்லப்படவேண்டும். அவர்களுடைய மரணத்திற்கு அவர்களே காரணம். தேவன் காரணமல்ல.

கர்த்தருடைய கட்டளைகளும் நியாயங்களும் லேவி 20:22-27

லேவி 20:22. ஆகையால் நீங்கள் குடியிருப்பதற்காக நான் உங்களைக் கொண்டுபோகிற தேசம் உங்களைக் கக்கிப்போடாதபடிக்கு, நீங்கள் என் கட்டளைகள் யாவையும் என்னுடைய நியாயங்கள் யாவையும் கைக்கொண்டு நடவுங்கள்.

லேவி 20:23. நான் உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடுகிற ஜனத்தினுடைய வழிபாடுகளில் நடவாதிருங்கள்; அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் செய்தபடியால் நான் அவர்களை அரோசித்தேன்.

லேவி 20:24. நீங்கள் அவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பீர்கள் என்று உங்களோடே சொன்னேன்; பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்பேன்; உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்த உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே.

லேவி 20:25. ஆகையால் சுத்தமான மிருகங்களுக்கும் அசுத்தமான மிருகங்களுக்கும், சுத்தமான பறவைகளுக்கும் அசுத்தமான பறவைகளுக்கும் நீங்கள் வித்தியாசம் பண்ணி, நான் உங்களுக்குத் தீட்டாக எண்ணச் சொல்லி விலக்கின மிருகங்களாலும் பறவைகளாலும் தரையிலே ஊருகிற யாதொரு பிராணிகளாலும் உங்களை அருவருப்பாக்காதிருப்பீர்களாக.

லேவி 20:26. கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்.

லேவி 20:27. அஞ்சனம்பார்க்கிறவர்களும் குறிசொல்லுகிறவர்களுமாயிருக்கிற புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கொலைசெய்யப்பட வேண்டும்; அவர்கள் மேல் கல்லெறிவார்களாக; அவர்கள் இரத்தப்பழி அவர்கள் மேல் இருக்கக்கடவது என்று சொல் என்றார்.

அஞ்சனம் பார்க்கிறவர்களுக்கும் குறிசொல்லுகிறவர்களுக்கும் விரோதமான பிரமாணத்தை கர்த்தர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். கர்த்தர் அந்தப் பிரமாணத்தை இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

"அஞ்சனம்பார்க்கிறவர்களும் குறிசொல்லுகிறவர்களுமாயிருக்கிற புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கொலைசெய்யப்படவேண்டும்; அவர்கள் மேல் கல்லெறிவார்களாக; அவர்கள் இரத்தப்பழி அவர்கள் மேல் இருக்கக்கடவது" (லேவி 20:27) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் இந்தப் பிரமாணத்தை மோசேயினிடத்தில் சொல்லுகிறார். மோசே கர்த்தருடைய பிரமாணத்தை இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் சொல்லவேண்டும்.

பிசாசோடும், அவனுடைய கிரியைகளோடும் தொடர்பு வைத்திருக்கிறவர்கள், பிசாசோடு உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். இதன் மூலமாக அவர்கள் மரணத்தோடும் உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். அவர்கள்மீது இரத்தப்பழி இருக்கும். அவர்கள் கல்லெறிந்து கொல்லப்படுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாயிருக்கிறார்கள். கர்த்தர் பரிசுத்தர். ஆகையினால் அவர்களும் பரிசுத்தராயிருக்கவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாக கொடுத்திருக்கிறார்.

கானான் தேசத்திலே புறஜாதி ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனையினிமித்தமாக கானான் தேசம் அவர்களை கக்கிப்போட்டது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொண்டு நடக்கவேண்டும். இல்லையென்றால் கானான் தேசம் புறஜாதி ஜனங்களை கக்கிப்போட்டதுபோல, இஸ்ரவேல் ஜனங்களையும் கக்கிப்போடும்.

ஆகையால் நீங்கள் குடியிருப்பதற்காக நான் உங்களைக் கொண்டுபோகிற தேசம் உங்களைக் கக்கிப்போடாதபடிக்கு, நீங்கள் என் கட்டளைகள் யாவையும் என்னுடைய நியாயங்கள் யாவையும் கைக்கொண்டு நடவுங்கள் (லேவி 20:22) என்றும்,

நான் உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடுகிற ஜனத்தினுடைய வழிபாடுகளில் நடவாதிருங்கள்; அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் செய்தபடியால் நான் அவர்களை அரோசித்தேன் (லேவி 20:23) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை மற்ற ஜாதிகளிடத்திலிருந்து வேறுபிரித்து, அவர்களை தமக்கு சொந்த ஜனமாக பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு விசேஷித்த மேன்மைகளையும், சிலாக்கியங்களையும் கட்டளையிட்டிருக்கிறார்.

"நீங்கள் அவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பீர்கள் என்று உங்களோடே சொன்னேன்; பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்பேன்; உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்த உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே" *(லேவி 20:24)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பாதுகாப்பிலிருக்கிறவர்கள். அவர்கள் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை கனம்பண்ணி மகிமைப்படுத்த வேண்டியவர்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை கனம்பண்ணும்போது, அவர்களுக்கு சில கடமைகளையும் கொடுக்கிறார். கர்த்தர் அவர்களுக்கு விசேஷித்த சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் கொடுத்திருப்பதினால், அவர் அவர்களிடத்திலிருந்து விசேஷித்த காரியங்களை எதிர்பார்க்கிறார். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் கடமைகளை இஸ்ரவேல் புத்திரர் நிறைவேற்றவேண்டும்.

கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்றபரிசுத்தவான்களாயிருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன் *(லேவி 20:26)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திலே குடியிருக்கப்போகிறார்கள். கர்த்தர் அவர்களை கானான் தேசத்திற்கு கொண்டு போகிறார். அவர்கள் கானான் தேசத்திற்கு போனபின்பும், கர்த்தருடைய கட்டளைகள் யாவையும், அவருடைய நியாயங்கள் யாவையும் கைக்கொண்டு நடக்கவேண்டும்.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். கர்த்தர் அந்த தேசத்தை அவர்களுக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். அந்த தேசத்திலே அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொண்டு நடந்தால்தான், அந்த தேசம் அவர்களுக்கு ஆசீர்வாதமாகயிருக்கும். அப்போதுதான் அந்த தேசத்தில் அவர்களுக்கு சந்தோஷமும், ஆறுதலும், சமாதானமும் இருக்கும்.

கானான் தேசத்தில் விக்கிரகங்களும் விக்கிராகாராதனைகளும் நிரம்பியிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை, கானான் தேசத்தாரிடமிருந்து பிரித்தெடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகங்களுக்கும் விக்கிராகாராதனைகளுக்கும் விலகி, பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். "கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆகையால் சுத்தமான மிருகங்களுக்கும் அசுத்தமான மிருகங்களுக்கும், சுத்தமான பறவைகளுக்கும் அசுத்தமான பறவைகளுக்கும் நீங்கள் வித்தியாசம் பண்ணி, நான் உங்களுக்குத் தீட்டாக எண்ணச் சொல்லி விலக்கின மிருகங்களாலும் பறவைகளாலும் தரையிலே ஊருகிற யாதொரு பிராணிகளாலும் உங்களை அருவருப்பாக்காதிருப்பீர்களாக *(லேவி 20:25)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சுத்தமான மிருகங்கள், அசுத்தமான மிருகங்கள் ஆகியவற்றின் அட்டவணை லேவி 11, உபா 14 ஆகிய அதிகாரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கானான் தேசம் பாலும் தேனும் நிரம்பிய தேசமாயிருப்பதுபோல, அது விக்கிரகங்களும், விக்கிராகாராதனைகளும், அஞ்சனம்பார்ப்பதும், குறிசொல்லுவதும் நிரம்பிய தேசமாயிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை குடியிருப்பதற்காக கானான் தேசத்திற்கு கொண்டு போகிறார். அந்த தேசம் அவர்களைக் கக்கிப்போடாதபடிக்கு, அவர்கள் கர்த்தருடைய கட்டளைகள் யாவையும் கர்த்தருடைய நியாயங்கள் யாவையும் கைக்கொண்டு நடக்கவேண்டும்.

கானான் தேசத்தில் இருந்தவர்கள் பாவம் செய்தபடியினால், அவர்கள் அங்கிருந்து துரத்திவிடப்பட்டார்கள். இஸ்ரவேல் புத்திரரும் கானான் தேசத்திற்குப் போனபின்பு, அங்கு பாவம் செய்தால், அவர்களும் அங்கிருந்து துரத்திவிடப்படுவார்கள். அந்தத் தேசம் அவர்களைக் கக்கிப்போடும். இந்த வாக்கியம் 2இராஜா 17,25 ஆகிய அதிகாரங்களில் நிறைவேறிற்று.

21 அதிகாரம்

ஆசாரியர்கள் தாங்கள் செய்யும் ஆசாரிய ஊழியத்தின் கண்ணியத்தையும் மேன்மையையும் காத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் கர்த்தர் தடைபண்ணியிருக்கிற காரியங்களினால் தங்களை தீட்டுப்படுத்திக்கொள்ளாமல், மிகவும் எச்சரிப்பாயும் கவனமாயும், பரிசுத்தமாயும் ஜீவிக்கவேண்டும்.

ஆசாரியர்கள் இறந்துபோனவர்களுக்காக தங்களை தீட்டுப்படுத்தக்கூடாது. கர்த்தர் ஆசாரியருடைய விவாகங்களைப்பற்றியும், அவர்களுடைய பிள்ளைகளின் விவாகங்களைப்பற்றியும் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார் (லேவி 21:1-9).

மற்ற ஆசாரியர்களைவிட பிரதான ஆசாரியன் மிகவும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். கர்த்தர் பிரதான ஆசாரியனுக்கு விசேஷமான கட்டுப்பாடுகளை சொல்லுகிறார் (லேவி 21:10-15).

ஆசாரியருடைய சந்ததியாருக்குள்ளே அங்கவீனமுள்ளவன், தலைமுறைதோறும் தேவனுடைய அப்பத்தை செலுத்தும்படி சேரலாகாது (லேவி 21:16-24).

ஆசாரியரின் பரிசுத்தம் லேவி 21:1-9

லேவி 21:1. பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களில் ஒருவனும் தன் ஜனத்தாரில் இறந்து போன யாதொருவருக்காகத் தங்களைத் தீட்டுப்படுத்தலாகாதென்று அவர்களோடே சொல்.

லேவி 21:2. தன் தாயும், தன் தகப்பனும், தன் குமாரனும், தன் குமாரத்தியும், தன் சகோதரனும்,

லேவி 21:3. புருஷனுக்கு வாழ்க்கைப்படாமல் தன்னிடத்திலிருக்கிற கன்னியாஸ்திரீயான தன் சகோதரியுமாகிய தனக்கு நெருங்கின இனமான இவர்களுடைய சாவுக்காகத் தீட்டுப்படலாம்.

லேவி 21:4. தன் ஜனத்தாரில் பெரியவனாகிய அவன் வேறொருவருக்காகவும் தன்னைப் பரிசுத்தக்குலைச்சலாக்கித் தீட்டுப்படுத்தலாகாது.

லேவி 21:5. அவர்கள் தங்கள் தலையை மொட்டையடிக்காமலும், தங்கள் தாடியின் ஓரங்களைச் சிரைத்துப்போடாமலும், தங்கள் தேகத்தைக் கீறிக்கொள்ளாமலும் இருப்பார்களாக.

லேவி 21:6. தங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமல் அவருக்கேற்ற பரிசுத்தராயிருப்பார்களாக; அவர்கள் கர்த்தரின் தகனபலிகளையும் தங்கள் தேவனுடைய அப்பத்தையும் செலுத்துகிறவர்களாதலால் பரிசுத்தராயிருக்கவேண்டும்.

லேவி 21:7. அவர்கள் தங்கள் தேவனுக்குப் பரிசுத்தமானவர்கள், ஆகையால் வேசியையாகிலும் கற்புக்குலைந்தவளையாகிலும் விவாகம் பண்ணார்களாக; தன் புருஷனாலே தள்ளப்பட்ட ஸ்திரீயையும் விவாகம் பண்ணார்களாக.

லேவி 21:8. அவன் தேவனுடைய அப்பத்தைச் செலுத்துகிறபடியால் நீ அவனைப் பரிசுத்தப்படுத்த வேண்டும்; உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியால், அவனும் உனக்கு முன்பாகப் பரிசுத்தனாயிருப்பானாக.

லேவி 21:9. ஆசாரியனுடைய குமாரத்தி, வேசித்தனம் பண்ணி, தன்னைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினால், அவள் தன் தகப்பனையும் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறாள்; அவள் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக் கடவள்.

ஆசாரியர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு பரிசுத்தமானதற்கும், அசுத்தமானதற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை போதிக்கவேண்டும்.

"பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும், தீட்டுள்ளதற்கும் தீட்டில்லாததற்கும், வித்தியாசம்பண்ணும் படிக்கும், கர்த்தர் மோசேயைக்கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்ன சகலபிரமாணங்களையும் அவர்களுக்குப் போதிக்கும்படிக்கும், இது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும்" (லேவி 10:10,11).

ஆசாரியர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு உபதேசம் பண்ணின பிரமாணங்களை, தங்களுடைய ஜீவியத்திலேயும் கடைப்பிடிக்கவேண்டும். அவர்கள் சத்தியத்தைப் போதிக்கிறவர்களாய் மாத்திரம் இருக்கக்கூடாது. அவர்கள் சத்தியத்தின் பிரகாரம் ஜீவிக்கிறவர்களாயும் இருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரில் சாதாரண ஜனங்களைவிட, ஆசாரியர்களே கர்த்தருடைய சமுகத்தில் மிகவும் அருகாமையில் பிரவேசிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பரிசுத்தமான காரியங்களில் தங்களை அதிகமாய் ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் ஆசாரியர்களிடத்தில் அதிகமான பரிசுத்தத்தை எதிர்பார்க்கிறார். அவர்கள் தீட்டான காரியங்களிலிருந்து விலகியிருக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு அருகாமையில் இருக்கிறவர்கள், பாவங்களையும், அசுத்தங்களையும், தீட்டுக்களையும் விட்டு தூரமாய் விலகிப்போகவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் இறந்துபோனவர்களுக்காக துக்கம் கொண்டாடுவார்கள். சாதாரண ஜனங்களைப்போல ஆசாரியர்கள் மரித்துப்போனவர்களுக்காக துக்கம் கொண்டாடக்கூடாது.

"கூடாரத்தில் ஒரு மனிதன் செத்தால், அதற்கடுத்த நியமமாவது: அந்தக் கூடாரத்தில் பிரவேசிக்கிற யாவரும் கூடாரத்தில் இருக்கிற யாவரும் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பார்கள்" (எண் 19:14).

மரித்துப்போனவர்களுடைய பிரேதம் இருக்கும் இடத்தைச் சுற்றிலும், ஆறு அடி தூரத்திலுள்ள அனைத்து இடமும் தீட்டான இடம் என்று யூதர்களுடைய சடங்காச்சாரம் சொல்லுகிறது. ஆசாரியர்கள் பிரேதத்திற்கு அருகாமையில் வரக்கூடாது. அவர்கள் பிரேதத்திற்கு அருகாமையில் வந்தாலோ அல்லது அந்தப் பிரேதத்தைத் தொட்டாலோ அவர்கள் ஏழுநாட்களுக்கு தீட்டாயிருப்பார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களில் ஒருவனும் தன் ஜனத்தாரில் இறந்து போன யாதொருவருக்காகத் தங்களைத் தீட்டுப்படுத்தலாகாதென்று அவர்களோடே சொல்" (லேவி 21:1) என்றும்,

தன் தாயும், தன் தகப்பனும், தன் குமாரனும், தன் குமாரத்தியும், தன் சகோதரனும், புருஷனுக்கு வாழ்க்கைப்படாமல் தன்னிடத்திலிருக்கிற கன்னியாஸ்திரீயான தன் சகோதரியுமாகிய தனக்கு நெருங்கின இனமான இவர்களுடைய சாவுக்காக ஆசாரியன் தீட்டுப்படலாம் (லேவி 21:2,3) என்றும் சொல்லுகிறார்.

தன்னுடைய நெருங்கின இனத்தாரின் சாவுக்காக ஆசாரியர் தீட்டுப்படலாம். அவர்கள் தன் ஜனத்தாரில் இறந்துபோன வேறு யாதொருவருக்காகவும் தங்களைத் தீட்டுப்படுத்தலாகாது. "தன் ஜனத்தாரில் பெரியவனாகிய அவன் வேறொருவருக்காகவும் தன்னைப் பரிசுத்தக்குலைச்சலாக்கித் தீட்டுப்படுத்தலாகாது" (லேவி 21:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

புறஜாதியார் இறந்தவர்களுக்காக தங்கள் தலையை மொட்டையடிப்பார்கள். அவர்கள் தங்கள் தாடியின் ஓரங்களை சிறைத்துப்போடுவார்கள். மேலும் அவர்கள் தங்கள் தேகத்தை கீறிக்கொள்வார்கள். இஸ்ரவேலின் ஆசாரியர்கள், புறஜாதியாருடைய பழக்க வழக்கங்களை பின்பற்றக்கூடாது.

ஆசாரியர்கள், தங்கள் தலையை மொட்டையடிக்காமலும், தங்கள் தாடியின் ஓரங்களைச் சிரைத்துப்போடாமலும், தங்கள் தேகத்தைக் கீறிக்கொள்ளாமலும் இருப்பார்களாக (லேவி 21:5) என்று கர்த்தர் சொல்லுகிறார். புறஜாதியார் செத்துப்போன மனுஷரை தெய்வங்களாக பாவிக்கிறார்கள். விக்கிரகங்களுக்கு இரத்தப்பலி செலுத்துவதுபோல, அவர்கள் செத்துப்போனவர்களுக்காக, தங்கள் தேசத்தைக் கீறிக்கொண்டு இரத்தம் சிந்துவார்கள்.

சாதாரண மனுஷருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகளே ஆசாரியருக்கும் கூறப்பட்டிருக்கிறது. தேவனுடைய பிரமாணத்திற்கு ஆசாரியரும் கீழ்ப்படிய வேண்டும். ஆசாரியருக்கு எந்த விதமான விசேஷித்த விதிவிலக்கும் கொடுக்கப்படவில்லை. (லேவி 19:27-28)

செத்துப்போனவர்களுக்காக தங்கள் தேகத்தைக் கீறிக்கொண்டு, இரத்தம் சிந்தும்போது, செத்துப்போனவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் என்பது புறஜாதியாரின் நம்பிக்கை. விக்கிரக தெய்வங்களுடைய கோபத்தினால் அந்த மனுஷனுக்கு சாவு உண்டாயிற்று என்றும், மனுஷருடைய இரத்தத்தை சிந்துவதன் மூலமாக, விக்கிரகங்களின் கோபம் தணியும் என்றும் புறஜாதியார் நம்புகிறார்கள்.

ஆசாரியர்கள் கர்த்தருடைய தகனபலிகளையும், தங்கள் தேவனுடைய அப்பத்தையும் செலுத்துகிறவர்கள். ஆசாரியரின் ஊழியம் கர்த்தருக்கு செய்யப்படும் பரிசுத்தமான ஊழியமாகும். கர்த்தர் பரிசுத்தர். ஆசாரியரின் ஊழியமும் பரிசுத்தமானது. ஆகையினால் ஆசாரியர்கள் தங்கள் தேவனுடைய நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்காமல் அவருக்கேற்ற பரிசுத்தராயிருக்கவேண்டும் (லேவி 21:6).

தம்முடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்குவது பற்றி தேவன் 13 இடங்களில் கூறியிருக்கிறார் (லேவி 21:6; லேவி 22:2,32; லேவி 18:21; லேவி 19:12; லேவி 20:3; எசே 36:20-23; ஆமோ 2:7; மல் 1:12). தேவனுடைய நாமத்தைத் தூஷித்தல், அவமதித்தல், பக்தியில்லாதிருத்தல் ஆகியவை பாவமான செயல்களாகும் (ஆமோ 2:7).

ஆசாரியர்கள் பரிசுத்தமான ஜீவியத்திலும், கர்த்தரை ஆராதிப்பதிலும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு எடுத்துக்காட்டாகவும், முன்மாதிரியாகவும் இருக்கவேண்டும். தங்களுடைய நெருங்கிய இனமான ஒருவர் செத்துப்போகும்போது, ஆசாரியர் அளவுக்கு அதிகமாக தங்களுடைய துக்கத்தை வெளிப்படுத்தக்கூடாது. செத்துப்போனவர் தனக்கு எவ்வளவு அதிகமான நெருங்கிய உறவினராகயிருந்தாலும், ஆசாரியருடைய துக்கத்தில் கட்டுப்பாடு இருக்கவேண்டும். அவர் தன்னுடைய துக்கத்தை அடக்கிக்கொண்டு, மிகவும் நிதானமாக தன் துக்கத்தை வெளிப்படுத்தவேண்டும்.

ஆசாரியருடைய விவாக சம்பந்தத்தைப்பற்றியும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் தேவனுக்குப் பரிசுத்தமானவர்கள், ஆகையால் வேசியையாகிலும் கற்புக்குலைந்தவளையாகிலும் விவாகம் பண்ணார்களாக; தன் புருஷனாலே தள்ளப்பட்ட ஸ்திரீயையும் விவாகம் பண்ணக்கூடாது (லேவி 21:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியர் விவாகம் பண்ணக்கூடாதவர்களைப்பற்றிய விவரம் வருமாறு:

1. வேசி (லேவி 21:7; லேவி 21:13-14)
2. கற்புக்குலைந்தவள்
3. புருஷனாலே தள்ளப்பட்ட ஸ்திரீ (உபா 24:1-4).

கறையில்லாத, மாசில்லாத, கற்புள்ள ஸ்திரீகளை மாத்திரமே ஆசாரியர்கள் விவாகம்பண்ணவேண்டும். ஆசாரியன் தேவனுடைய அப்பத்தைச் செலுத்துகிறபடியால் நீ அவனைப் பரிசுத்தப்படுத்த வேண்டும் என்று கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார். உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியால், அவனும் உனக்கு முன்பாகப் பரிசுத்தனாயிருப்பானாக (லேவி 21:8) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

மோசே எல்லா ஆசாரியரையும் பரிசுத்தப்படுத்த வேண்டும். ஆரோனையும், அவனுடைய குமாரரையும் பரிசுத்தப்படுத்த வேண்டும். ஆசாரியரைத் தேவனுக்காக வேறுபிரித்து சுத்திகரிப்பு செய்து, பிரதிஷ்டை பண்ணுவது மோசேயின் வேலை. ஆனால் கர்த்தர் மட்டுமே ஆசாரியரைப் பாவத்திலிருந்து சுத்திகரிக்க முடியும். இந்த வசனத்தில் பரிசுத்தப்படுத்துதல் என்பது பாவத்திலிருந்து சுத்திகரிப்பதைக் குறிப்பிடவில்லை. இது தேவனுடைய பரிசுத்தமான காரியத்திற்காக வேறுபிரிக்கப்படுவதைக் குறிக்கும். இங்கு பாவம் இல்லையென்றாலும், பரிசுத்தப்படுத்தப்படுதல் அவசியமாயிருக்கிறது.

ஆசாரியர்கள் கர்த்தருடைய சமுகத்திலே பரிசுத்தராயிருப்பதுபோல, அவர்களுடைய பிள்ளைகளும் பரிசுத்தராயிருக்கவேண்டும். ஆசாரியனுடைய குமாரத்தி, வேசித்தனம் பண்ணி, தன்னைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினால், அவள் தன் தகப்பனையும் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறாள்; அவள் அக்கினியிலே சுட்டெரிக்கப்பட வேண்டும் (லேவி 21:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியனுடைய குமாரத்தி, வேசித்தனம் பண்ணினால், அவள் தன் தகப்பனையும் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறாள்.

அவள் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக் கடவள் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் அவள் உயிருடன் எரிக்கப்பட வேண்டியதில்லை. அவள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். அவளுடைய சரீரத்தை அக்கினியிலே சுட்டெரிக்க வேண்டும். ஆகானுக்கு இதுபோன்ற தண்டனை கொடுக்கப்பட்டது. (யோசு 7:25).

ஆசாரியனுடைய குமாரத்தி அதிக சிலாக்கியமுள்ளவள். அவளுக்கு பரிசுத்தமான காரியங்களை புசிக்கும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் மற்ற ஸ்திரீகளைவிட ஆசாரியனுடைய குமாரத்திக்கு, கர்த்தருடைய பிரமாணத்தைப்பற்றி அதிகமாய்ப் போதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் அவள் தன்னை பரிசுத்தக்குலைச்சலாக்கக்கூடாது. ஆசாரியனைப்போலவே, ஆசாரியனுடைய குமாரத்தியும் பரிசுத்தமானவளாயிருக்க வேண்டும்.

ஆசாரியரின் குடும்பத்தார் இஸ்ரவேலின் மற்ற குடும்பத்தாருக்கு முன்மாதிரியாகவும், சாட்சியாகவும் ஜீவிக்கவேண்டும். ஆகையினால் ஆசாரியனுடைய குமாரத்தி வேசித்தனம்பண்ணும்போது, அவள் தன்னை மாத்திரமல்ல, தன்னுடைய தகப்பனையும் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகையினால் வேசித்தனம் பண்ணினவள் அக்கினியிலே சுட்டெரிக்கப்படவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் ஆசாரியருக்காக சொல்லும் பிரமாணத்தின் பொதுவான விவரம் வருமாறு:

1. தன் சகோதரியுமாகிய தனக்கு நெருங்கின இனமான இவர்களுடைய சாவுக்காகத் தீட்டுப்படலாமே தவிர தன் ஜனத்தாரில் இறந்து போன யாதொருவருக்காகத் தங்களைத் தீட்டுப்படுத்தக் கூடாது(லேவி 21:1-4).

2. ஆசாரியர்கள் தங்கள் தலையை மொட்டையடிக்கக் கூடாது (லேவி 21:5).

3. தங்கள் தாடியின் ஓரங்களைச் சிரைத்துப்போடக்கூடாது.

4. தங்கள் தேகத்தைக் கீறிக்கொள்ளக் கூடாது.

5. தேவனுக்கென்று பரிசுத்தராயிருக்க வேண்டும் (லேவி 21:6,8).

6. தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கக் கூடாது.

7. வேசியையாகிலும் கற்புக் குலைந்தவளையாகிலும் விவாகம் பண்ணக்கூடாது. தன் புருஷனாலே தள்ளப்பட்ட ஸ்திரீயையும் விவாகம் பண்ணாமல் இருக்கவேண்டும் (லேவி 21:7).

8. உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியால், எல்லா ஆசாரியரையும் பரிசுத்தப்படுத்த வேண்டும். (லேவி 21:8).

9. ஆசாரியனுடைய குமாரத்தி, வேசித்தனம் பண்ணி, தன்னைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினால், அவள் தன் தகப்பனையும் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறாள்; அவள் அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவள் (லேவி 21:9).

தனக்கு நெருங்கின இனமானவர்களுடைய சாவுக்காக ஆசாரியன் தீட்டுப்படலாம். அவர்களின் விவரம் வருமாறு :

1. தாய் (லேவி 21:2)

2. தகப்பன்

3. மகன்

4. குமாரத்தி

5. சகோதரன்

6. கன்னியாஸ்திரீயான சகோதரி (லேவி 21:3)

ஆசாரியருக்கு சொல்லப்பட்டிருக்கும் பொதுவான கட்டளைகளின் விவரம் வருமாறு :

1. ஒரு ஆசாரியன் தன்னைத்தானே பரிசுத்தக் குலைச்சலாக்கித் தீட்டுப்படுத்தலாகாது (லேவி 21:4).

2. தங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமல் இருக்கவேண்டும் (லேவி 21:6; லேவி 18:21; லேவி 19:12; லேவி 20:3; லேவி 22:2,32).

3. கற்புகுலைந்த ஸ்திரீயை எந்தவொரு ஆசாரியனும்விவாகம் பண்ணக்கூடாது (லேவி 21:7,14).

4. தன் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமல் இருக்கவேண்டும். (லேவி 21:12,23; எசே 23:39; எசே 25:3).

5. கர்த்தருக்குப் படைக்கிற பரிசுத்தமானவைகளைப் பரிசுத்தக் குலைச்சலாக்கக்கூடாது (லேவி 22:15; லேவி 22:9; எசே 22:26).

பரிசுத்த வேதாகமத்தில் பரிசுத்தக்குலைச்சலுக்கு ஒரு சில எடுத்துக்காட்டுக்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் ஓய்வுநாட்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினார்கள். (நெகே 13:17; எசே 22:8,26; எசே 23:38).

2. தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும் தேவனைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினார்கள்(எரே 23:11-15; எசே 22:25-26).

3. சிதேக்கியா இஸ்ரவேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதி என்று அழைக்கப்பட்டான்(எசே 21:25).

4. பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குதல். (எசே 25:3).

5. தேவனுடைய பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குதல் (எசே 36:20-23; ஆமோ 2:7; மல் 1:12).

6. தேவனுடைய பரிசுத்தத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குதல் (மல் 2:11).

7. பரிசுத்த உடன்படிக்கையைப் பரிசுத்தக் குலைச்சலாக்குதல். (மல் 2:10).

8. லூசிபர் பாவம்செய்த போது ஆகாதவன் என்று தள்ளப்பட்டான். (எசே 28:16).

9. ஆசாரியர் தேவாலயத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினார்கள் (மத் 12:5; அப் 24:6).

10. ஏசா சீர்கெட்டவனாக இருந்தான். (எபி 12:16).

ஆசாரியன் தன் இருதயத்தில் பின்வாங்கிப்போகும்போதும், துன்மார்க்கமான காரியங்களைச் செய்யும் போதும், அவன் தன்னைத்தானே பரிசுத்தக் குலைச்சலாக்கிக் கொள்கிறான். தேவனுக்கடுத்த காரியங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக ஆசாரியன் உலகப் பிரகாரமான காரியங்களில் கவனம் செலுத்தி, தன்னைத் தீட்டுப்படுத்துகிறான்.

பிரதான ஆசாரியனின் பரிசுத்தம் லேவி 21:10-15

லேவி 21:10. தன் சகோதரருக்குள்ளே பிரதான ஆசாரியனாக தன் சிரசில் அபிஷேக தைலம் வார்க்கப்பட்டவனும், அவனுக்குரிய வஸ்திரங்களைத் தரிக்கும்படி பிரதிஷ்டை பண்ணப்பட்டவனுமாயிருக்கிறவன் எவனோ, அவன் தன் பாகையை எடுக்காமலும், தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்ளாமலும்,

லேவி 21:11. பிரேதம் கிடக்கும் இடத்தில் போகாமலும், தன் தகப்பனுக்காகவும் தன் தாய்க்காகவும் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாமலும்,

லேவி 21:12. பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படாமலும், தன் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும் இருப்பானாக; அவனுடைய தேவனின் அபிஷேக தைலம் என்னும் கிரீடம் அவன்மேல் இருக்கிறதே; நான் கர்த்தர்.

லேவி 21:13. கன்னிகையாயிருக்கிற பெண்ணை அவன் விவாகம் பண்ண வேண்டும்.

லேவி 21:14. விதவையையானாலும் தள்ளப்பட்டவளையானாலும் கற்புகுலைந்தவளையானாலும் வேசியையானாலும் விவாகம் பண்ணாமல், தன் ஜனங்களுக்குள்ளே ஒரு கன்னிகையை விவாகம் பண்ணக்கடவன்.

லேவி 21:15. அவன் தன் வித்தைத் தன் ஜனங்களுக்குள்ளே பரிசுத்தக் குலைச்சலாக்காமல் இருப்பானாக; நான் அவனைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்று சொல் என்றார்.

கர்த்தர் சாதாரண ஜனங்களிடமிருந்து எதிர்பார்க்கும் பரிசுத்தத்தைவிட, ஆசாரியரிடமிருந்து அதிகமான பரிசுத்தத்தை எதிர்பார்க்கிறார். அதுபோலவே கர்த்தர் சாதாரண ஆசாரியரிடமிருந்து எதிர்பார்க்கும் பரிசுத்தத்தை விட, பிரதான ஆசாரியனிடமிருந்து அதிகமான பரிசுத்தத்தை எதிர்பார்க்கிறார். ஏனென்றால் பிரதான ஆசாரியனுடைய சிரசில் அபிஷேக தைலம் வார்க்கப்பட்டிருக்கிறது. பிரதான ஆசாரியன் தனக்குரிய விசேஷித்த வஸ்திரங்களை தரிக்கும்படி பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிறான்.

ஆகையினால் பிரதான ஆசாரியன் தன் பாகையை எடுக்காமலும், தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்ளாமலும், பிரேதம் கிடக்கும் இடத்தில் போகாமலும், தன் தகப்பனுக்காகவும் தன் தாய்க்காகவும் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாமலும், பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படாமலும், தன் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும் இருப்பானாக (லேவி 21:10-12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பிரதான ஆசாரியன் ஆசாரிய ஊழியம் செய்வதற்காகப் பரிசுத்த ஸ்தலத்தில் எப்பொழுதும் தங்கியிருக்கவேண்டும். அவன் எந்தக் காரணத்தைக் கொண்டும், ஆசரிப்புக்கூடார பணிவிடையிலிருந்து வெளியேறக்கூடாது (லேவி 21:10-12).

பிரதான ஆசாரியரையும், மற்ற ஆசாரியரையும் அபிஷேகம் பண்ணி, பிரதிஷ்டை பண்ணும்போது ஒருசில வேறுபாடுகள் காணப்படுகிறது. பிரதான ஆசாரியனுடைய சிரசில் அபிஷேக தைலம் வார்க்கப்படுகிறது. (லேவி 21:10; லேவி 8:12; சங் 133). மற்ற ஆசாரியரைவிட பிரதான ஆசாரியருக்கு விசேஷித்த வஸ்திரங்கள் தரிப்பிக்கப்படும். (யாத் 28). பிரதான ஆசாரியன் தேவனுடைய பிரதிநிதி. ராஜாவைப்போல விசேஷித்த அதிகாரம் உள்ளவன். தேவனுடைய பிரதான தீர்க்கதரிசி. பிரதான ஆசாரியனுடைய ஊழியம் கிறிஸ்துவின் ஊழியத்திற்கு அடையாளமாகும். அவனுடைய பரிசுத்தப்பட்டம் அவனுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் தேவனுடைய அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது.

பிரதான ஆசாரியன் தன் பாகையை எடுக்காமலும், தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்ளாமலும் இருக்கவேண்டும். பாகையை எடுப்பது, வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்வது ஆகியவை துக்கப்படுவதற்கு அடையாளம். பிரதான ஆசாரியன் துக்கப்படக்கூடாது.

பிரதான ஆசாரியனுடைய சிரசில் வார்க்கப்பட்டிருக்கிற அபிஷேக தைலம், அவன்மேல் வைக்கப்பட்டிருக்கிற கிரீடமாயிருக்கிறது. "அவனுடைய தேவனின் அபிஷேக தைலம் என்னும் கிரீடம் அவன்மேல் இருக்கிறதே; நான் கர்த்தர்" (லேவி 21:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விசுவாசிகளாகிய நமக்கு, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் மகிமையின் கிரீடமாகவும், அலங்காரமான பாகையாகவும் இருக்கிறது. பிரதான ஆசாரியன் சாதாரண ஆசாரியர்களை விட விசேஷமானவன். ஆகையினால் அவன் பிரேதம் கிடக்கும் இடத்தில் போகாமலும், தன் தகப்பனுக்காகவும் தன் தாய்க்காகவும் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாமலும் இருக்கவேண்டும் (லேவி 21:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பிரதான ஆசாரியன் தகப்பனுக்காகவும் தன் தாய்க்காகவும் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளக்கூடாது. சாதாரண ஆசாரியர் இவர்களுக்காகத் துக்கப்படலாம். ஆனால் பிரதான ஆசாரியன் இவர்களுக்காக துக்கப்படக்கூடாது (லேவி 21:1-2).

தேவனுக்கும், ஜனத்திற்கும் நடுவில் இரவும், பகலும் எந்நேரமும் பிரதான ஆசாரியன் ஆசாரிய ஊழியம் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும்.

நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து மரித்தோரின் சரீரங்களை தொட்டார். அவர் லாசருவின் கல்லறைக்குப்போனார். யவீருவின் மரித்துப்போன குமாரத்தியினுடைய கையைப் பிடித்து தூக்கிவிட்டார். விதவையின் குமாரன் ஒருவன் மரித்துப்போனபோது, கிறிஸ்துவனாவர் அவனுடைய பாடையைத் தொட்டார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மரணத்தின் கோரத்தையும், அதன் சாபத்தையும் அழிப்பதற்காக இந்தப் பூமிக்கு வந்தார். அவர் தம்முடைய சிலுவை மரணத்தின் மூலமாக, மரணத்தின் வல்லமையை முறித்தார். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் மரித்தோரின் சரீரத்தைத் தொடுவதினால், நாம் தீட்டுப்படுவதில்லை.

பிரதான ஆசாரியனுக்கு கர்த்தர் விவாக சம்பந்தமான பிரமாணத்தையும் சொல்லுகிறார். பிரதான ஆசாரியன் கன்னிகையாயிருக்கிற பெண்ணை விவாகம்பண்ணவேண்டும். அவன் விதவையையானாலும் தள்ளப்பட்டவளையானாலும் கற்புகுலைந்தவளையானாலும் வேசியையானாலும் விவாகம் பண்ணாமல், தன் ஜனங்களுக்குள்ளே ஒரு கன்னிகையை விவாகம் பண்ணவேண்டும் (லேவி 21:13,14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விவாக சம்பந்தத்தில் பிரதான ஆசாரியனுக்கும், மற்ற ஆசாரியருக்கும் வித்தியாசம் இருக்கவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். சாதாரண ஆசாரியர்கள் ஒரு விதவையை விவாகம்பண்ணலாம். ஆனால் பிரதான ஆசாரியனோ விதவையை விவாகம்பண்ணக்கூடாது. கர்த்தர் பிரதான ஆசாரியனிடத்திலிருந்து அதிகமான பரிசுத்தத்தை எதிர்பார்க்கிறார்.

பிரதான ஆசாரியன் தன் வித்தைத் தன் ஜனங்களுக்குள்ளே பரிசுத்தக் குலைச்சலாக்கக்கூடாது ; "நான் அவனைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்" (லேவி 21:15) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொல்லும் பிரமாணத்தை மோசே ஆரோனோடும், அவன் குமாரரோடும், இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொல்லவேண்டும்.

கர்த்தர் பிரதான ஆசாரியனின் விவாகம் பற்றிய பிரமாணத்தை சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு:

1. கன்னிகையாயிருக்கிற பெண்ணை விவாகம் பண்ணவேண்டும்.
2. தன் ஜனங்களுக்குள்ளே விவாகம் பண்ணவேண்டும் (லேவி 21:14).
3. விதவையை விவாகம் பண்ணக்கூடாது.
4. தன் புருஷனாலே தள்ளப்பட்ட ஸ்திரீயையும் விவாகம்பண்ணக்கூடாது.
5. கற்புக்குலைந்த ஸ்திரீயை விவாகம் பண்ணக்கூடாது.
6. வேசியை விவாகம் பண்ணக்கூடாது.

சாதாரண ஆசாரியர்கள் விதவைகளைத் திருமணம் செய்து கொள்ளலாம். (லேவி 21:7,14). எல்லா ஆசாரியருக்கும் தள்ளப்பட்டவளை விவாகம் பண்ணுவது தடைபண்ணப்பட்டிருக்கிறது. தள்ளப்பட்டவள் ஆசாரியரைத் தவிர, மற்றவர்களைத் திருமணம் செய்து கொள்ளலாம் (உபா 24:1-4).

எந்த ஆசாரியரும் வேசியைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. அவள் தன் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆசாரியர் அவளைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. ஆசாரிய ஊழியம் மிகவும் பரிசுத்தமானது. ஆசாரியர்கள் தங்கள் ஊழியத்திற்கு ஏற்றாற்போல் ஜீவிக்கவேண்டும்.

ஆசாரியன் மற்ற கோத்திரத்திலிருந்து தனக்கு மனைவியைத் தெரிந்தெடுக்கலாம். ஆனாலும் அவள் இஸ்ரவேல் ஸ்திரீயாக இருக்க வேண்டும்.

பிரதான ஆசாரியன், தன்னுடைய குமாரருக்கு பரிசுத்தமான விவாகம்பண்ணியிருக்கவேண்டும். அவனுடைய குமாரர்கள் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பரிசுத்தக்குலைச்சலாயிருக்கக் கூடாது. ஊழியக்காரர்களுடைய பிள்ளைகள் அவிசுவாசிகளை விவாகம் செய்து, தேவனுடைய பரிசுத்தமான நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்கக்கூடாது.

ஆசாரியன் கற்பு குலைந்தவளைத் திருமணம் செய்து தன்னுடைய வித்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கக்கூடாது. ஆசாரியனுடைய மனைவி அவனுடைய ஆசாரிய ஊழியத்தில் உதவியாயிருக்க வேண்டும். ஜனங்களும், அவளை அங்கீகரிக்க வேண்டும்.

கர்த்தர் பிரதான ஆசாரியனுக்குரிய பிரமாணத்தை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. பிரதான ஆசாரியனாக தன் சிரசில் அபிஷேக தைலம் வார்க்கப்பட்டவன் எவனோ, அவன் தன் பாகையை எடுக்காமலும், தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்ளாமலும் இருக்க வேண்டும்.
2. பிரேதம் கிடக்கும் இடத்தில் போகாமலும், தன் தகப்பனுக்காகவும் தன் தாய்க்காகவும் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாமலும் இருக்கவேண்டும் (லேவி 21:11).
3. பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படாமலும், தன் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும் இருக்க வேண்டும். (லேவி 21:12).
4. கன்னிகையாயிருக்கிற பெண்ணை அவன் விவாகம்பண்ணவேண்டும் (லேவி 21:13) விதவையையானாலும் தள்ளப் பட்டவளையானாலும் கற்பு குலைந்தவளையானாலும் வேசியையானாலும் விவாகம் பண்ணக்கூடாது (லேவி 21:14).
5. தன் ஜனங்களுக்குள்ளே ஒரு கன்னிகையை விவாகம் பண்ண வேண்டும். அந்நிய ஸ்திரீயை விவாகம் பண்ணக்கூடாது.

6. அவன் தன் வித்தைத் தன் ஜனங்களுக்குள்ளே பரிசுத்தக் குலைச்சலாக்காமல் இருக்கவேண்டும். (லேவி 21:15).

அங்கவீனம்
லேவி 21:16-24

லேவி 21:16. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 21:17. நீ ஆரோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: உன் சந்ததியாருக்குள்ளே அங்கவீனமுள்ளவன் தலைமுறைதோறும் தேவனுடைய அப்பத்தைச் செலுத்தும்படி சேரலாகாது.

லேவி 21:18. அங்கவீனமுள்ள ஒருவனும் அணுகலாகாது; குருடனானாலும், சப்பாணியானாலும், குறுகின அல்லது நீண்ட அவயமுள்ளவனானாலும்,

லேவி 21:19. காலொடிந்தவனானாலும், கையொடிந்தவனானாலும்,

லேவி 21:20. கூனனானாலும், குள்ளனானாலும், பூவிழுந்த கண்ணனானாலும், சொறியனானாலும், அசறுள்ளவனானாலும், விதை நசுங்கினவனானாலும் அணுகலாகாது.

லேவி 21:21. ஆசாரியனாகிய ஆரோனின் சந்ததியாரில் அங்கவீனமுள்ள ஒருவனும் கர்த்தரின் தகனபலிகளைச்செலுத்தச் சேரலாகாது; அவன் அங்கவீனமுள்ளவனாகையால், அவன் தேவனுடைய அப்பத்தைச் செலுத்தச் சேரலாகாது.

லேவி 21:22. அவன் தன் தேவனுடைய அப்பமாகிய மகா பரிசுத்தமானவைகளிலும் மற்ற பரிசுத்தமானவைகளிலும் புசிக்கலாம்.

லேவி 21:23. ஆனாலும் அவன் அங்கவீனமுள்ளவனாகையால், அவன் என் பரிசுத்த ஸ்தலங்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடிக்குத் திரைக்குள்ளே போகாமலும் பலி பீடத்தண்டையில் சேராமலும் இருப்பானாக; நான் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்று சொல் என்றார்.

லேவி 21:24. மோசே இவைகளை ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னான்.

ஆசாரிய ஊழியம் ஆரோனுடைய குடும்பத்தாருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆரோனுடைய சந்ததியாரில், ஆண்பிள்ளைகள் எல்லோருமே ஆசாரிய ஊழியம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆசாரிய ஊழியம் தலைமுறை தலைமுறையாக வருவதினால், ஆரோனின் சந்ததியாரில் யாராவது ஒருவர், ஏதாவது ஒரு தலைமுறையில், அங்கவீனமாய் பிறப்பதற்கு வாய்ப்புள்ளது.

ஆரோனுடைய சந்ததியாருக்குள்ளே அங்கவீனமுள்ளவன் தலைமுறைதோறும் தேவனுடைய அப்பத்தைச் செலுத்தும்படி சேரலாகாது (லேவி 21:17) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் அவன் தன் தேவனுடைய அப்பமாகிய மகா பரிசுத்தமானவைகளிலும் மற்ற பரிசுத்தமானவைகளிலும் புசிக்கலாம் (லேவி 21:22) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பாவநிவாரண பலிகளின் மாம்சம், சமுகத்தப்பம் ஆகியவை மகாபரிசுத்தமானவைகள். தசமபாகங்கள், முதற்கனிகள், சமாதானபலிகள் ஆகியவை பரிசுத்தமானவைகள். அங்கவீனமுள்ள ஒருவன், தேவனுடைய அப்பத்தை செலுத்தும்படி, மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. ஆனாலும் அவன் தேவனுடைய அப்பத்தைப் புசிப்பதில் தடை எதுவுமில்லை.

அங்கவீனமாகயிருக்கிறவனால் யாதொரு வேலையும் செய்ய முடியாது. அவனால் தன்னுடைய ஆகாரத்தை வேலை செய்து சம்பாதிக்கவும் முடியாது. அங்கவீனமாயிருக்கிறவன் தனக்குத்தானே உதவி செய்துகொள்ள திராணியற்றவன். கர்த்தர் அங்கவீனமாயிருக்கிறவனை பட்டினியாக இருக்குமாறு விட்டுவிடவில்லை. அவனையும் போஷித்து பராமரிக்கிறார்.

அங்கவீனமாகயிருக்கிறவன் பலிபீடத்திலே ஊழியம் செய்யக்கூடாது. மற்ற ஆசாரியர்கள் தூபபீடத்திலே தூபம் ஏற்றும்போது, அங்கவீனமாகயிருக்கிறவன் அவர்களுக்கு உதவி செய்யவும் கூடாது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஆரோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: உன் சந்ததியாருக்குள்ளே அங்கவீனமுள்ளவன் தலைமுறைதோறும் தேவனுடைய அப்பத்தைச் செலுத்தும்படி சேரலாகாது" (லேவி 21:17) என்றும்,

"ஆசாரியனாகிய ஆரோனின் சந்ததியாரில் அங்கவீனமுள்ள ஒருவனும் கர்த்தரின் தகனபலிகளைச் செலுத்தச் சேரலாகாது; அவன் அங்கவீனமுள்ளவனாகையால், அவன் தேவனுடைய அப்பத்தைச் செலுத்தச் சேரலாகாது" (லேவி 21:21) என்றும்,

"ஆனாலும் அவன் அங்கவீனமுள்ளவனாகையால், அவன் என் பரிசுத்த ஸ்தலங்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடிக்குத் திரைக்குள்ளே போகாமலும் பலிபீடத்தண்டையில் சேராமலும் இருப்பானாக; நான் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்று சொல்" (லேவி 21:23) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய வாசஸ்தலத்தை பரிசுத்தம்பண்ணுகிறார். தம்முடைய மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே, அங்கவீனமுள்ள ஒருவனும் அணுகலாகாது; குருடனானாலும், சப்பாணியானாலும், குறுகின அல்லது நீண்ட அவயமுள்ளவனானாலும், காலொடிந்தவனானாலும், கையொடிந்தவனானாலும், கூனனானாலும், குள்ளனானாலும், பூவிழுந்த கண்ணனானாலும், சொறியனானாலும், அசறுள்ளவனானாலும், விதை நசுங்கினவனானாலும் அணுகலாகாது" (லேவி 21:18-20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியரின் சரீரப்பிரகாரமான தகுதிகளைப்பற்றி கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. அங்கவீனமுள்ளவனாக இருக்கக் கூடாது. (லேவி 21:17-18,21). இயேசு கிறிஸ்து குற்றமில்லாதவராக மாசற்றவராக இருந்தார். (1பேதுரு 1:19). சபையும் கிறிஸ்துவிற்கு முன்பாக மாசற்றதாக இருக்க வேண்டும். (எபே 5:27).

2. குருடனாக இருக்கக்கூடாது. (லேவி 21:18). ஆசாரியரும், பலி செலுத்தப்படும் மிருகஜீவன்களும் குருடாக இருக்கக்கூடாது. (லேவி 22:22; உபா 15:21).

3. சப்பாணியாக இருக்கக்கூடாது. (லேவி 21:18; உபா 15:21; மல் 1:8,13).

4. குறுகின அவயவம் உள்ளவனாக இருக்கக்கூடாது. (லேவி 21:18).

5. நீண்ட அவயவம் உள்ளவனாக இருக்கக்கூடாது.

6. காலொடிந்தவனாக இருக்கக்கூடாது. (லேவி 21:19).

7. கையொடிந்தவனாக இருக்கக்கூடாது. (லேவி 21:19).

8. கூனனாக இருக்கக்கூடாது. (லேவி 21:20).

9. குள்ளனாக இருக்கக்கூடாது. (லேவி 21:20).

10. பூவிழுந்த கண்ணனாக இருக்கக்கூடாது. (லேவி 21:20).

11. சொறியனாக இருக்கக்கூடாது. (லேவி 21:20).

12. அசறுள்ளவனாகவும், விதை நசுங்கினவனாகவும் இருக்கக்கூடாது. (லேவி 21:20).

அங்கவீனமுள்ள ஒருவனும் கர்த்தரின் தகனபலிகளைச் செலுத்தச் சேரலாகாது. இயேசு கிறிஸ்து மாசற்றவர். அதுபோல ஆசாரியரும் மாசற்றவராக இருக்கவேண்டும். ஆரோனுடைய குடும்பத்தில் அங்கவீனமுள்ளவன் தேவனுடைய அப்பமாகிய மகா பரிசுத்தமானவைகளிலும் மற்ற பரிசுத்தமானவைகளிலும் புசிக்கலாம்.

தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திற்குள் அங்கவீனமுள்ளவர்கள் பிரவேசிக்கும்போது அது பரிசுத்தக் குலைச்சலாக்கப்படுகிறது. ஆகையினால் அங்கவீனமுள்ளவர்கள் தேவனுடைய ஆசரிப்புக்கூடார பணிவிடைகளில் பங்குபெறக் கூடாது. (லேவி 21:16-23).

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் எல்லோருமே கர்த்தருடைய ஊழியத்தை செய்யலாம். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் விசுவாசிகளில் அங்கவீனமுள்ளவர்களும் கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு, தடை எதுவுமில்லை. விசுவாசிகள் எல்லோருமே கர்த்தருக்கு ஆவிக்குரிய பலிகளை செலுத்தவேண்டும். நம்மிடத்தில் அங்கவீனம் இருந்தாலும், கர்த்தருக்கு ஆவிக்கேற்ற பலிகளை செலுத்த, கர்த்தர் நம்மை அனுமதித்திருக்கிறார். இதற்காக நாம் கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும்.

ஒரு சிலருடைய சரீரம் அங்கவீனமாகயிருந்தாலும், அவர்களுடைய ஆத்துமா ஆரோக்கியமானதாகவும், அழகானதாகவும் பரிசுத்தமானதாகவும் இருக்கும். கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். நாம் கர்த்தரை பரிசுத்தத்தோடு ஆராதிக்கவேண்டும்.

பாவம் நம்மை ஆளுகை செய்யக்கூடாது. பாவிகளுடைய மனதும், துன்மார்க்கருடைய இருதயமும் ஆரோக்கியமாயிருக்காது. அவர்கள் சரீரப்பிரகாரமாக ஆரோக்கியமாயிருந்தாலும், அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக அங்கவீனராகவும், தீட்டானவர்களாகவும் இருக்கிறார்கள். பரிசுத்தமில்லாதவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்யக்கூடாது.

இருதயத்தில் பரிசுத்தமில்லாதவர்கள் ஆவிக்குரிய குருடராகவும், ஆவிக்குரிய கூனர்களாகவும், ஆவிக்குரிய சப்பாணிகளாகவும் இருக்கிறார்கள். ஒரு குருடனால் மற்றொரு குருடனுக்கு வழிகாட்ட முடியாது. ஒருவன் ஆவிக்குரிய ரீதியாக அங்கவீனமுள்ளவனாயிருக்கும்போது, அவனால் மற்றவர்களுக்கு ஆவிக்குரிய ரீதியாக உதவி செய்ய முடியாது. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் சரீரப்பிரகாரமான அங்கவீனத்தைவிட, ஆவிக்குரிய அங்கவீனத்திற்கு கர்த்தர் முக்கியத்துவம் கொடுக்கிறார்.

22 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் ஆசாரியரைப்பற்றியும், பலிகளைப்பற்றியும் கர்த்தருடைய பிரமாணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை கனம்பண்ணுகிறார். அவர் அதன் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்கிறார்.

ஆசாரியர் அசுத்தமாயிருக்கும்போது பரிசுத்த வஸ்துக்களை புசிக்கக்கூடாது (லேவி 22:1-9). அந்நியன் ஒருவனும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது (லேவி 22:10-13). ஒருவன் அறியாமல் பரிசுத்தமானதில் புசித்தது உண்டானால், அவன் அதிலே ஐந்தில் ஒரு பங்கு அதிகமாய்க் கூட்டி, பரிசுத்தமானவைகளோடும்கூட ஆசாரியனுக்கு கொடுக்கவேண்டும் (லேவி 22:14-16).

பலிகளாக செலுத்தப்படும் மிருகங்கள் பழுதற்றதாக இருக்கவேண்டும் (லேவி 22:17-25). அந்த மிருகம் ஏழுநாள் தன் தாயினிடத்தில் இருக்கவேண்டும். எட்டாம் நாள் முதல் அது கர்த்தருக்கு தகனபலியாக அங்கீகரிக்கப்படும் (லேவி 22:26-29). கர்த்தருக்கு செலுத்தப்படும் ஸ்தோத்திரபலி, அந்த நாளிலேயே புசிக்கப்படவேண்டும் (லேவி 22:29-33).

பரிசுத்த வஸ்துக்கள்
லேவி 22:1-9

லேவி 22:1. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 22:2. இஸ்ரவேல் புத்திரர் எனக்கென்று நியமித்துச் செலுத்துகிற பரிசுத்த வஸ்துக்களைக் குறித்து ஆரோனும் அவன் குமாரரும் என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்று அவர்களோடே சொல்; நான் கர்த்தர்.

லேவி 22:3. அன்றியும் நீ அவர்களை நோக்கி: உங்கள் தலைமுறைகளிலுள்ள சந்ததியாரில் எவனாகிலும் தான் தீட்டுப்பட்டிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு நியமித்துச் செலுத்துகிற பரிசுத்தமானவைகளண்டையில் சேர்ந்தால், அந்த ஆத்துமா என் சந்நிதியில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் என்று சொல்; நான் கர்த்தர்.

லேவி 22:4. ஆரோனின் சந்ததியாரில் எவன் குஷ்டரோகியோ, எவன் பிரமியமுள்ளவனோ, அவன் சுத்தமாகும்மட்டும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது; பிணத்தினாலே தீட்டானவைகளில் எதையாகிலும் தொட்டவனும், இந்திரியங்கழிந்தவனும்,

லேவி 22:5. தீட்டுப்படுத்துகிற யாதொரு ஊரும் பிராணியையாகிலும் தீட்டுள்ள மனிதனையாகிலும் தொட்டவனும்,

லேவி 22:6. சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அவன் ஜலத்தில் ஸ்நானம் பண்ணும் வரைக்கும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது.

லேவி 22:7. சூரியன் அஸ்தமித்தபின்பு சுத்தமாயிருப்பான்; அதன்பின்பு அவன் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாம். அது அவனுடைய ஆகாரம்.

லேவி 22:8. தானாய்ச் செத்ததையும் பீறுண்டதையும் அவன் புசிக்கிறதினாலே தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது; நான் கர்த்தர்.

லேவி 22:9. ஆகையால் பரிசுத்தமானதை அவர்கள் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறதினாலே, பாவம் சுமந்து அதினிமித்தம் சாகாதபடிக்கு, என் கட்டளையைக் காக்கக்கடவர்கள்; நான் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

ஆசாரியரில் அங்கவீனமாயிருக்கிறவர்கள் கர்த்தருடைய பரிசுத்தஸ்தலத்து ஊழியங்களிலே பங்கு பெறக்கூடாது. ஆனாலும் அவர்கள் பரிசுத்தமானவைகளை புசிக்கலாம். அங்கவீனமான ஆசாரியர்கள் கர்த்தருக்கு பலிகளை செலுத்தக்கூடாது. ஆனாலும் அவர்கள் சும்மாயிருப்பதற்கு அனுமதியில்லை.

கர்த்தருக்கு தகனபலிகளை செலுத்த ஏராளமான விறகுகள் தேவைப்படும். அந்த விறகுகளில் சில புழு பூச்சிகள் அரித்ததாகயிருக்கும். அப்படிப்பட்ட விறகுகளை சர்வாங்க தகனபலியாக செலுத்த பயன்படுத்தக்கூடாது. அங்கவீனமான ஆசாரியர்கள், விறகு கட்டைகள் அடுக்கி வைக்கப்படும் இடத்தில் அமர்ந்து, புழு பூச்சிகள் அரித்த விறகு கட்டைகளை தனியே பிரித்தெடுத்து அப்புறப்படுத்தவேண்டும். இதன் மூலமாக அங்கவீனமான ஆசாரியருக்கும், ஆசரிப்புக்கூடாரத்திலே அவர்களால் செய்ய முடிந்த வேலைகள் கொடுக்கப்படுகிறது.

ஒருவனுக்கு குஷ்டரோகம் பிடித்திருக்கிறதா என்பதை ஆசாரியனே தீர்மானம்பண்ணவேண்டும். இதைத் தீர்மானம்பண்ணுவதற்கும் அங்கவீனமான ஆசாரியர்கள் பயன்படுத்தப்பட்டார்கள் என்றும் யூதமார்க்கத்து வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

அங்கவீனமாக இருக்கிற ஆசாரியன் பரிசுத்தமானவைகளை புசிக்கலாம். ஆனால் தீட்டுப்பட்டிருக்கிற ஆசாரியன் பரிசுத்தமானவைகளை புசிக்கக்கூடாது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரர் எனக்கென்று நியமித்துச் செலுத்துகிற பரிசுத்த வஸ்துக்களைக் குறித்து ஆரோனும் அவன் குமாரரும் என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்று அவர்களோடே சொல்; நான் கர்த்தர்" (லேவி 22:1,2) என்றும்,

"அன்றியும் நீ அவர்களை நோக்கி: உங்கள் தலைமுறைகளிலுள்ள சந்ததியாரில் எவனாகிலும் தான் தீட்டுப்பட்டிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு நியமித்துச் செலுத்துகிற பரிசுத்தமானவைகளண்டையில் சேர்ந்தால், அந்த ஆத்துமா என் சந்நிதியில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் என்று சொல்; நான் கர்த்தர்' (லேவி 22:3) என்றும் சொல்லுகிறார்.

பரிசுத்த வஸ்துக்களைக்குறித்து ஆரோனும், அவன் குமாரரும் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். அவர்கள் தேவனுடைய பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கக்கூடாது (லேவி 22:2-9). தேவனையும் அவருடைய வார்த்தையையும் கனப்படுத்த வேண்டும். புறக்கணித்துவிடக்கூடாது. தம்முடைய பிரமாணத்திற்கு எதிர்த்து நின்று, தமக்கு ஊழியம் செய்வதைத் தேவன் அங்கீகரிப்பதில்லை.

தீட்டுப்பட்டிருக்கிற ஆசாரியன், தன்னுடைய சொந்த தீர்மானத்தினால் தீட்டுப்பட்டிருப்பான். ஒருவன் அங்கவீனமாயிருப்பதற்கு அவன் காரணமல்ல. அது பிறப்பில் உண்டான குறைபாடு. ஆனாலும் ஒருவன் தீட்டுப்பட்டிருப்பதற்கு அவனுடைய கவனக்குறைவே காரணம். தீட்டுப்பட்டவன் தன்னுடைய தீட்டு தன்னை விட்டு நீங்கும் வரையிலும், அவன் பரிசுத்தமானதை புசிக்கக்கூடாது.

அவன் சூரியன் அஸ்தமித்தபின்பு சுத்தமாயிருப்பான்; அதன்பின்பு அவன் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாம். அது அவனுடைய ஆகாரம் லேவி 22:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனின் சந்ததியாரில் எவன் குஷ்டரோகியோ, எவன் பிரமியமுள்ளவனோ, அவன் சுத்தமாகும்மட்டும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது; பிணத்தினாலே தீட்டானவைகளில் எதையாகிலும் தொட்டவனும், இந்திரியங்கழிந்தவனும், தீட்டுப்படுத்துகிற யாதொரு ஊரும் பிராணியையாகிலும் தீட்டுள்ள மனிதனையாகிலும் தொட்டவனும், சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அவன் ஜலத்தில் ஸ்நானம் பண்ணும் வரைக்கும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது" (லேவி 22:4-6) என்று சொல்லுகிறார்.

தானாய்ச் செத்ததையும் பீறுண்டதையும் அவன் புசிக்கிறதினாலே தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது; நான் கர்த்தர் (லேவி 22:8) என்றும்,

ஆகையால் பரிசுத்தமானதை அவர்கள் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறதினாலே, பாவம் சுமந்து அதினிமித்தம் சாகாதபடிக்கு, என் கட்டளையைக் காக்கக்கடவர்கள்; நான் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் (லேவி 22:9) என்றும், கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியர் தங்களுடைய பரிசுத்தத்தைக் கவனமாய்க் காத்துக்கொள்ளவேண்டும். தங்களைத் தீட்டுப்படுத்தும் எல்லா காரியங்களுக்கும் அவர்கள் விலகியிருக்கவேண்டும். ஆசாரியர்கள் இந்தப் பிரமாணங்களை கைக்கொள்ளும்போது, இஸ்ரவேல் புத்திரரும் பரிசுத்தமான வஸ்துக்களில் பயபக்தியாயிருப்பார்கள்.

ஆசாரியர் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள் ஆசாரிய ஊழியம் கனமுள்ளது. அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை பரிசுத்தமாய் செய்யவேண்டும். ஆசாரிய ஊழியம் ஆசீர்வாதமானது. ஆனாலும் தவறு செய்கிற ஆசாரியர்களுக்கு கர்த்தர் தண்டனை கொடுக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் எனக்கென்று நியமித்துச் செலுத்துகிற பரிசுத்த வஸ்துக்களிலிருந்து தகுதியில்லாமல் இருக்கும்போது ஆரோனும் அவன் குமாரரும் அதிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்று அவர்களோடே சொல்.

2. என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

3. உங்கள் தலைமுறைகளிலுள்ள சந்ததியாரில் எவனாகிலும் தான் தீட்டுப்பட்டிருக்கும் போது, பரிசுத்தமானவைகளண்டையில் சேர்ந்தால், அந்த ஆத்துமா என் சந்நிதியில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் (லேவி 22:3).

4. ஆரோனின் சந்ததியாரில் எவன் குஷ்டரோகியோ, எவன் பிரமியமுள்ளவனோ, அவன் சுத்தமாகும் மட்டும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது (லேவி 22:4).

5. தீட்டுப்படுத்துகிற யாதொரு ஊரும் பிராணியையாகிலும் தீட்டுள்ள மனிதனையாகிலும் தொட்டவனும், சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அவன் ஜலத்தில் ஸ்நானம் பண்ணும் வரைக்கும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது (லேவி 22:4-7).

6. தானாய்ச் செத்ததையும் பீறுண்டதையும் அவன் புசிக்கிறதினாலே தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது (லேவி 22:8).

7. ஆரோனும் அவனுடைய சந்ததியாரும் பரிசுத்தமானதை அவர்கள் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறதினாலே, பாவம் சுமந்து அதினிமித்தம் சாகாதபடிக்கு, என் கட்டளையைக் காக்கக்கடவர்கள் (லேவி 22:9).

ஆரோனின் குமாரரோ அல்லது இஸ்ரவேல் தேசத்தாரோ யாரும் குஷ்டரோகியாக இருக்க வேண்டிய அவசியமில்லை.தேவனுடையஉடன்படிக்கையின் பிரகாரம் தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு வியாதி வராது. தேவன் மாராவில் இஸ்ரவேல் புத்திரரோடு குணமாக்கும் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். இதன் வாயிலாக இஸ்ரவேல் புத்திரருக்குச் சரீரச் சுகமும், நித்திய ஆரோக்கியமும் உண்டாகும். (யாத் 15:26).

இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது அவர் அவர்கள் நடுவில் இருந்து, வியாதியை எடுத்துப் போடுவார். (யாத் 23:25). பாவத்தின் விளைவினால் வியாதி வருகிறது. (லேவி 26; உபா 28). இஸ்ரவேலின் கோத்திரத்தாரில் அங்கவீனமானவன் ஒருவனும் இருப்பதில்லை. தேவன் எல்லோரையும் குணப்படுத்தியிருக்கிறார். (சங் 105:37; சங் 107:20). இஸ்ரவேலருக்கு ஒரு பரிபூரண ஆரம்பம் உண்டாயிற்று. எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படும்போது அவர்கள் ஆரோக்கியத்தோடு இருந்தார்கள். தேவனுக்கு எதிராக அவர்கள் கலகம்பண்ணும் வரையிலும் அவர்கள் மத்தியில் ஆரோக்கியம் இருந்தது.

லேவி 13-15 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் வியாதிகளைப் பற்றிய பிரமாணமும், குஷ்டரோகங்களும், மற்ற வியாதிகளும் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணிய பின்பு, அவர்களுடைய பாவங்களுக்குத் தண்டனையாக வந்தது. அவர்கள் பாவம் செய்தபோது கூட அவர்கள் மனந்திரும்பினால், அவர்களைக் குணப்படுத்துவதாகத் தேவன் வாக்குப்பண்ணியிருக்கிறார். *(சங் 34:9-10; சங் 84:11; சங் 91:1-12; சங் 103:3; ஏசா 58).*

மேசியா இஸ்ரவேலை மீட்பதற்கு வரும்போது, அவர் தேசத்தை இரட்சிப்பார். சரீர ஆரோக்கியத்தைத் தேடி, தம்மிடத்தில் வருகிற அனைவரையும் அவர் குணப்படுத்துவார். இயேசு கிறிஸ்து எல்லோரையும் குணப்படுத்தினார் என்று 23 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது (மத் 13:58). தேவன் இஸ்ரவேலைப் புதுப்பிக்க விரும்புகிறார். மோசேயின் நாளைப்போல அவர்களுக்கு ஒரு புதிய துவக்கத்தைத் தரவிரும்புகிறார். உபா 18 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனத்தைப்போல, கர்த்தர் மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசியைத் தமது ஜனங்களுக்கு அனுப்பியிருக்கிறார்.

பரிசுத்தமானவைகளை புசிக்கலாகாதவர்கள் லேவி 22:10-16

லேவி 22:10. அந்நியன் ஒருவனும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது; ஆசாரியன் வீட்டில் தங்கியிருக்கிறவனும் கூலிவேலை செய்கிறவனும் பரிசுத்தமானதில் புசிக்கலாகாது.

லேவி 22:11. ஆசாரியனால் பணத்துக்குக் கொள்ளப்பட்டவனும், அவன் வீட்டிலே பிறந்தவனும் அவனுடைய ஆகாரத்தில் புசிக்கலாம்.

லேவி 22:12. ஆசாரியனுடைய குமாரத்தி அந்நியனுக்கு வாழ்க்கைப் பட்டால், அவள் பரிசுத்தமானவைகளின் படைப்பிலே புசிக்கலாகாது.

லேவி 22:13. விதவையாய்ப்போன, அல்லது தள்ளப்பட்டவளான ஆசாரியனுடைய குமாரத்தி பிள்ளையில்லாதிருந்து, தன் தகப்பன் வீட்டில் தன்னுடைய இளவயதில் இருந்ததுபோல திரும்பவந்து இருந்தாளேயாகில், அவள் தன் தகப்பன் ஆகாரத்தில் புசிக்கலாம்; அந்நியனாகிய ஒருவனும் அதில் புசிக்கலாகாது.

லேவி 22:14. ஒருவன் அறியாமல் பரிசுத்தமானதில் புசித்ததுண்டானால், அவன் அதிலே ஐந்தில் ஒரு பங்கு அதிகமாய்க் கூட்டி பரிசுத்தமானவைகளோடுங்கூட ஆசாரியனுக்குக் கொடுக்கக் கடவன்.

லேவி 22:15. அவர்கள் கர்த்தருக்குப் படைக்கிற இஸ்ரவேல் புத்திரருடைய பரிசுத்தமானவைகளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும்,

லேவி 22:16. அவைகளைப் புசிக்கிறதினால் அவர்கள்மேல் குற்றமான அக்கிரமத்தைச் சுமரப்பண்ணாமலும் இருப்பார்களாக; நான் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்று சொல் என்றார்.

ஆசாரியரும் அவருடைய குடும்பத்தாரும் பரிசுத்தமானவைகளை புசிக்கலாம். அந்நியன் ஒருவனும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது என்றும், ஆசாரியன் வீட்டில் தங்கியிருக்கிறவனும் கூலிவேலை செய்கிறவனும் பரிசுத்தமானதில் புசிக்கலாகாது (லேவி 22:10) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியர்கள் பரிசுத்தமானவைகளை பரிசுத்தக்குலைச்சலாக்கக்கூடாது. அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தார்மீது அக்கிரமத்தை சுமரப்பண்ணக்கூடாது. பரிசுத்தமானவைகளை புசிக்கும் விஷயத்தில் ஆசாரியர்கள் மிகவும் கவனமாயிருக்கவேண்டும்.

ஆசாரியர்கள் கர்த்தருக்குப் படைக்கிற இஸ்ரவேல் புத்திரருடைய பரிசுத்தமானவைகளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும், அவைகளைப் புசிக்கிறதினால் அவர்கள்மேல் குற்றமான அக்கிரமத்தைச் சுமரப்பண்ணாமலும் இருப்பார்களாக; நான் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர் என்று சொல் (லேவி 22:15,16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பரிசுத்தமானதில் ஒருவன் புசிக்கக்கூடாது என்னும் பிரமாணம் இருக்கும் போது, அவன் அதைப் புசிப்பானானால், அவன் பரிசுத்தமானவைகளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறான். ஆசாரியன் பரிசுத்தமாக இருக்க வேண்டும். பரிசுத்தமான காரியங்களைப் பாதுகாக்க வேண்டும். பரிசுத்தக் குலைச்சலாக்குதல் ஒரு மீறுதலான பாவம். (லேவி 22:16).

விசுவாசிகளாகிய நாம் நம்மீது குற்றமான அக்கிரமத்தை சுமரப்பண்ணாமலிருக்கவேண்டும். அதே வேளையில் மற்றவர்கள் தங்கள்மீது குற்றமான அக்கிரமத்தை சுமத்தும்போது, அதை நாம் தடைபண்ணவும் வேண்டும். நாமும் பாவம் செய்யக்கூடாது. மற்றவர்களையும் பாவம் செய்ய அனுமதிக்கக்கூடாது. ஆசாரியருக்கு இவ்விரண்டு பொறுப்புக்களும் உள்ளது.

ஆசாரியரும் அவருடைய குடும்பத்தாரும் பரிசுத்தமானவைகளை புசிக்கலாம். எல்லோரும் தங்களை ஆசாரியரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லக்கூடாது. யாரெல்லாம் ஆசாரியரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், யாரெல்லாம் ஆசாரியரின் குடும்பத்தை சேராதவர்கள் என்றும் கர்த்தர் இங்கு தெளிவாக சொல்லுகிறார்.

அந்நியன் ஒருவனும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது; ஆசாரியன் வீட்டில் தங்கியிருக்கிறவனும் கூலிவேலை செய்கிறவனும் பரிசுத்தமானதில் புசிக்கலாகாது (லேவி 22:10). அந்நிய ஆசாரியனுடைய வீட்டிலே தங்கியிருந்தாலும், அவனுடைய வீட்டிலே கூலிவேலை செய்தாலும், அவன் ஆசாரியனின் குடும்பத்தைச் சேர்ந்தவனல்ல. ஆகையினால் பரிசுத்தமானவைகளை புசிப்பதற்கு அவனுக்கு அனுமதியில்லை.

ஆசாரியனால் பணத்துக்குக் கொள்ளப்பட்டவனும், அவன்வீட்டிலே பிறந்தவனும் பரிசுத்தமானவைகளை புசிக்கலாம் (லேவி 22:11).

பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாதவர்களைப்பற்றி கர்த்தர் சொல்லுகிறார். அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. அந்நியன்
2. ஆசாரியன் வீட்டில் தங்கியிருக்கிறவன்
3. கூலிவேலை செய்கிறவன்
4. அந்நியனுக்கு வாழ்க்கைப்பட்ட ஆசாரியனுடைய குமாரத்தி (லேவி 22:10-12).

பரிசுத்தமானவைகளில் புசிப்பது பற்றிய பிரமாணத்தையும் கர்த்தர் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. அந்நியன் ஒருவனும் பரிசுத்தமானவைகளில் புசிக்கலாகாது (லேவி 22:10,13).
2. ஆசாரியன் வீட்டில் தங்கியிருக்கிறவன் பரிசுத்தமானதில் புசிக்கலாகாது (லேவி 22:10).
3. கூலிவேலை செய்கிறவனும் பரிசுத்தமானதில் புசிக்கலாகாது.
4. ஆசாரியனால் பணத்துக்குக் கொள்ளப் பட்டவன் ஆசாரியனுடைய ஆகாரத்தில் புசிக்கலாம் (லேவி 22:11).
5. ஆசாரியனுடைய குமாரத்தி அந்நியனுக்கு வாழ்க்கைப்பட்டால், அவள் பரிசுத்தமானவைகளின் படைப்பிலே புசிக்கலாகாது (லேவி 22:12).
6. விதவையாய்ப்போன, அல்லது தள்ளப்பட்டவளான ஆசாரியனுடைய குமாரத்தி பிள்ளையில்லாதிருந்து, தன் தகப்பன் வீட்டில் தன்னுடைய இளவயதில் இருந்ததுபோல திரும்பவந்து இருந்தாளேயாகில், அவள் தன் தகப்பன் ஆகாரத்தில் புசிக்கலாம் (லேவி 22:13).

7. ஒருவன் அறியாமல் பரிசுத்தமானதில் புசித்ததுண்டானால், அவன் அதிலே ஐந்தில் ஒரு பங்கு அதிகமாய்க் கூட்டி பரிசுத்தமானவைகளோடுங்கூட ஆசாரியனுக்குக் கொடுக்கவேண்டும். (லேவி 22:14-16).

ஆசாரியரின் குடும்பத்திலுள்ள ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் வித்தியாசமுள்ளது. ஆசாரியரின் ஆண்பிள்ளைகள் பரிசுத்தமானவைகளை புசிப்பதற்கு தடையில்லை. ஆனால் பெண்பிள்ளைகளுக்கு கர்த்தர் ஒரு சில கட்டுப்பாடுகளை சொல்லுகிறார்.

ஆசாரியனுடைய குமாரத்தி அந்நியனுக்கு வாழ்க்கைப் பட்டால், அவள் பரிசுத்தமானவைகளின் படைப்பிலே புசிக்கலாகாது (லேவி 22:12) என்றும்,

விதவையாய்ப்போன, அல்லது தள்ளப்பட்டவளான ஆசாரியனுடைய குமாரத்தி பிள்ளையில்லாதிருந்து, தன் தகப்பன் வீட்டில் தன்னுடைய இளவயதில் இருந்ததுபோல திரும்பவந்து இருந்தாளேயாகில், அவள் தன் தகப்பன் ஆகாரத்தில் புசிக்கலாம்; அந்நியனாகிய ஒருவனும் அதில் புசிக்கலாகாது (லேவி 22:13) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பாவமில்லாமலும், அசுத்தமில்லாமலும் இருக்கிற போதிலும் விதவையாய் போவதற்கும் தள்ளப்படுவதற்கும் வாய்ப்புள்ளது. மறுபடியும் அவர்கள் விவாகம் பண்ணிக் கொள்வது உபா 24:1-4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

அவள் விதவையாய் போனவளானாலும், தள்ளப்பட்டவளானாலும் அவள் தன் தகப்பன் ஆகாரத்தில் புசிக்கலாம். அவளுடைய பிள்ளைக்கு ஆசாரியத்துவ ஊழியத்தில் பங்கில்லை. தனக்கு ஆதரவாக அவள் வேறு ஏதாவது ஒரு வேலையைத் தேடிக்கொள்ளவேண்டும்.

ஒருவன் அறியாமையில் பரிசுத்தமானதை புசித்தால், அவன் மீட்பின் கிரயத்தை செலுத்தவேண்டும். அவன் அறிந்தே அதைப் புசித்திருந்தால் அவனுக்கு மீட்பு இல்லை. ஒருவன் அறியாமல் பரிசுத்தமானதில் புசித்ததுண்டானால், அவன் அதிலே ஐந்தில் ஒரு பங்கு அதிகமாய்க் கூட்டி பரிசுத்தமானவைகளோடுங்கூட ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவன் (லேவி 22:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பரிசுத்தமானவைகளை புசிக்கும் விஷயத்தில் சூழ்நிலைகளையும் பார்க்கவேண்டும். தாவீதும் அவரோடுகூட இருந்த மனுஷரும் பரிசுத்தமான சமுகத்தப்பங்களை புசித்தார்கள்.

"அப்பொழுது கர்த்தருடைய சந்நிதியிலிருந்து எடுக்கப்பட்ட சமுகத்தப்பங்களைத்தவிர, வேறே அப்பம் அங்கே இராதபடியினால் ஆசாரியன் அவனுக்குப் பரிசுத்த அப்பத்தைக் கொடுத்தான்; அவைகள் எடுக்கப்படுகிற நாளிலே அதற்குப் பதிலாகச் சூடான அப்பம் வைக்கப்படும்" (1சாமு 21:6).

தாவீது சமுகத்தப்பங்களை புசித்ததை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நியாயப்படுத்துகிறார். அவர் தாவீதைக் குற்றப்படுத்தவில்லை. தாம் தாவீதின் கிரியைகளை நியாயப்படுத்துவதற்கான காரணத்தையும் கிறிஸ்துவானவர் சொல்லுகிறார்.

"அதற்கு அவர்: தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா? அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர் தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைத் தானும் தன்னோடிருந்தவர்களும் புசித்தார்களே" (மத் 12:3,4).

"பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று அறிந்தீர்களானால், குற்றமில்லாதவர்களை நீங்கள் குற்றப்படுத்தமாட்டீர்கள்" (மத் 12:7).

சடங்காச்சார பிரமாணங்களைவிட நீதிநெறி பிரமாணங்களே மிகவும் முக்கியமானது.

காணிக்கைகள்
லேவி 22:17-33

லேவி 22:17. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 22:18. நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் இஸ்ரவேலில் தங்குகிற அந்நியர்களிலும் தங்களுடைய பொருத்தனைகளின்படியாகிலும் உற்சாகத்தின்படியாகிலும் சர்வாங்க தகனபலிகளாகக் கர்த்தருக்குத் தங்கள் காணிக்கையை எவர்கள் செலுத்தப்போகிறார்களோ,

லேவி 22:19. அவர்கள் தங்கள் மனதின்படியே மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் பழுதற்ற ஒரு ஆணைப் பிடித்துவந்து செலுத்துவார்களாக.

லேவி 22:20. பழுதுள்ள ஒன்றையும் செலுத்தவேண்டாம்; அது உங்கள் நிமித்தம் அங்கிகரிக்கப்படுவதில்லை.

லேவி 22:21. ஒருவன் விசேஷித்த பொருத்தனையாயாவது, உற்சாகமாயாவது, கர்த்தருக்கு மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் சமாதானபலிகளைச் செலுத்தப்போனால், அது அங்கிகரிக்கப்படும்படி, ஒரு பழுதுமில்லாமல் உத்தமமாயிருக்கவேண்டும்.

லேவி 22:22. குருடு, நெரிசல், முடம், கழலை, சொறி, புண் முதலிய பழுதுள்ளவைகளை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமலும், அவைகளாலே கர்த்தருக்குப் பலி பீடத்தின்மேல் தகனபலியிடாமலும் இருப்பீர்களாக.

லேவி 22:23. நீண்ட அல்லது குறுகின அவயவமுள்ள மாட்டையும் ஆட்டையும் நீ உற்சாகபலியாக இடலாம்; பொருத்தனைக்காக அது அங்கிகரிக்கப்படமாட்டாது.

லேவி 22:24. விதை நசுங்கினதையும் நொறுங்கினதையும் காயம்பட்டதையும் விதை அறுக்கப்பட்டதையும் நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமலும், அவைகளை உங்கள் தேசத்திலே பலி யிடாமலும் இருப்பீர்களாக.

லேவி 22:25. அந்நிய புத்திரன் கையிலும் இப்படிப்பட்டதை வாங்கி, தேவனுக்கு அப்பமாகச் செலுத்தீர்களாக; அவைகளின் கேடும் பழுதும் அவைகளில் இருக்கிறது; அவைகள் உங்களுக்காக அங்கிகரிக்கப்படுவதில்லை என்று சொல் என்றார்.

லேவி 22:26. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 22:27. ஒரு கன்றாவது செம்மறியாட்டுக் குட்டியாவது வெள்ளாட்டுக்குட்டியாவது பிறந்தால், அது ஏழுநாள் தன் தாயினிடத்தில் இருக்கக்கடவது; எட்டாம் நாள்முதல் அது கர்த்தருக்குத் தகனபலியாக அங்கிகரிக்கப்படும்.

லேவி 22:28. பசுவையும் அதின் கன்றையும், ஆட்டையும் அதின் குட்டியையும் ஒரே நாளில் கொல்லவேண்டாம்.

லேவி 22:29. கர்த்தருக்கு ஸ்தோத்திர பலியைச் செலுத்துவீர்களானால் மனப்பூர்வமாய் அதைச் செலுத்துவீர்களாக.

லேவி 22:30. அந்நாளிலேதான் அது புசிக்கப்படவேண்டும்; விடியற்காலம்மட்டும் நீங்கள் அதில் ஒன்றும் மீதியாக வைக்கவேண்டாம்; நான் கர்த்தர்.

லேவி 22:31. நீங்கள் என் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யக்கடவீர்கள்; நான் கர்த்தர்.

லேவி 22:32. என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காதிருப்பீர்களாக; நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே பரிசுத்தர் என்று மதிக்கப்படுவேன்; நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

லேவி 22:33. நான் உங்களுக்கு தேவனாயிருப்பதற்காக, உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினேன்; நான் கர்த்தர் என்று சொல் என்றார்.

தமக்கு செலுத்தப்படும் காணிக்கைகளைப்பற்றிய பிரமாணத்தை கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். கர்த்தருக்கு செலுத்தப்படும் காணிக்கைகளெல்லாம் பழுதற்றதாகயிருக்கவேண்டும். பழுதுள்ள காணிக்கைகள் அங்கீகரிக்கப்படுவதில்லை.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் இஸ்ரவேலில் தங்குகிற அந்நியர்களிலும் தங்களுடைய பொருத்தனைகளின்படியாகிலும் உற்சாகத்தின் படியாகிலும் சர்வாங்க தகனபலிகளாகக் கர்த்தருக்குத் தங்கள் காணிக்கையை எவர்கள் செலுத்தப் போகிறார்களோ, அவர்கள் தங்கள் மனதின்படியே மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் பழுதற்ற ஒரு ஆணைப் பிடித்துவந்து செலுத்துவார்களாக" என்றும், "பழுதுள்ள ஒன்றையும் செலுத்தவேண்டாம்; அது உங்கள்நிமித்தம் அங்கிகரிக்கப்படுவதில்லை" (லேவி 22:17-20) என்றும் சொல்லுகிறார்.

பொருத்தனைகளின்படி செலுத்தப்படும் காணிக்கைகளுக்கும் உற்சாகத்தின்படி செலுத்தப்படும் காணிக்கைகளுக்கும் கர்த்தர் வித்தியாசம் சொல்லுகிறார்.

ஒருவன் விசேஷித்த பொருத்தனையாயாவது, உற்சாகமாயாவது, கர்த்தருக்கு மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் சமாதானபலிகளைச் செலுத்தப்போனால், அது அங்கிகரிக்கப்படும்படி, ஒரு பழுதுமில்லாமல் உத்தமமாயிருக்கவேண்டும் (லேவி 22:21) என்றும்,

குருடு, நெரிசல், முடம், கழலை, சொறி, புண் முதலிய பழுதுள்ளவைகளை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமலும், அவைகளாலே கர்த்தருக்குப் பலிபீடத்தின்மேல் தகனபலியிடாமலும் இருப்பீர்களாக (லேவி 22:22) என்றும்,

நீண்ட அல்லது குறுகின அவயவமுள்ள மாட்டையும் ஆட்டையும் நீ உற்சாகபலியாக இடலாம்; பொருத்தனைக்காக அது அங்கிகரிக்கப்படமாட்டாது (லேவி 22:23) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பலிகளில் அங்கீகரிக்கப்படாத பழுதுகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. குருடு
2. நெரிசல்
3. முடம்
4. கழலை
5. சொறி
6. புண்

ஒருவன் கர்த்தருடைய சந்நிதியில் காணிக்கையைக் கொண்டு வரும் முன்பாக, அதை நன்றாய் சோதித்துப் பார்க்கவேண்டும். காணிக்கையாக செலுத்த கொண்டு வரப்படும் மிருகத்திலே பழுது ஒன்றுமில்லை என்பதை உறுதிபண்ணிக்கொள்ளவேண்டும்.

புறஜாதி ஜனங்கள் எப்படிப்பட்ட மிருகத்தை வேண்டுமானாலும் காணிக்கையாக செலுத்துவார்கள். அவர்கள் பழுதில்லாததை தங்கள் சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொள்வார்கள். பழுதுள்ள மிருகங்களை விக்கிரகங்களுக்கு காணிக்கையாக செலுத்துவார்கள். இது ஒரு மாய்மாலம்.

இஸ்ரவேல் புத்திரரிடத்திலே மாய்மாலம் இருக்கக்கூடாது. அவர்கள் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு பழுதில்லாத மிருகத்தையே காணிக்கையாக செலுத்தவேண்டும் என்பதை புறஜாதியாரும் அறிந்திருந்தார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கர்த்தருக்கு ஆவிக்குரிய பலிகளை செலுத்துகிறோம். நம்மிடத்திலுள்ள முதன்மையானதையும், மேன்மையானதையும் கர்த்தருக்கு பலியாக செலுத்தவேண்டும். கர்த்தர்மீது நாம் வைத்திருக்கும் பக்தியும், விசுவாசமும் அனலுள்ளதாயிருக்கவேண்டும். அது அனலுமில்லாமல் குளிருமில்லாமல் வெதுவெதுப்பாயிருக்கக்கூடாது. இப்படிப்பட்ட விசுவாசம் பழுதுள்ள விசுவாசம்.

நாம் கர்த்தரை ஆராதிக்கும்போது ஒருமனப்பட்டு, இருதயத்தின் ஆழத்திலிருந்து அவருக்கு நன்றி சொல்லி அவரை ஆராதிக்கவேண்டும். நம்முடைய முழுஇருதயத்தோடும், முழுமனதோடும், முழுபெலத்தோடும் கர்த்தரிடத்தில் அன்புகூரவேண்டும். இதில் ஏதாவது அறையும் குறையுமாக இருக்குமென்றால், நம்முடைய ஆராதனை பழுதுள்ள ஆராதனையாகவே இருக்கும். நாம் கர்த்தருக்கு செலுத்துகிற ஆவிக்குரிய பலிகளும் குருடு, நெரிசல், முடம், கழலை, சொறி, புண் முதலிய பழுதுள்ளவைகளைப்போல மாசுள்ளதாகவே இருக்கும்.

நம்முடைய ஆராதனை பழுதுள்ளதாகவே இருக்குமென்றால் கர்த்தர் அதை அங்கீகரிக்கமாட்டார். "பழுதுள்ள ஒன்றையும் செலுத்தவேண்டாம்; அது உங்கள்நிமித்தம் அங்கீகரிக்கப்படுவதில்லை" (லேவி 22:20).

விதை நசுங்கினதையும் நொறுங்கினதையும் காயம்பட்டதையும் விதை அறுக்கப்பட்டதையும் நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமலும், அவைகளை உங்கள் தேசத்திலே பலியிடாமலும் இருப்பீர்களாக (லேவி 22:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அந்நிய புத்திரன் கையிலும் இப்படிப்பட்டதை வாங்கி, தேவனுக்கு அப்பமாகச் செலுத்தீர்களாக; அவைகளின் கேடும் பழுதும் அவைகளில் இருக்கிறது; அவைகள் உங்களுக்காக அங்கிகரிக்கப்படுவதில்லை" (லேவி 22:25) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொல்லும் இந்தப் பிரமாணத்தை மோசே ஆரோனோடும், அவருடைய குமாரரோடும், இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொல்லவேண்டும்.

கர்த்தருக்கு பலியாக செலுத்தப்படும் எந்த மிருகமும், பிறந்து எட்டு நாள் சென்றிருக்கவேண்டும். ஒரு கன்றாவது செம்மறியாட்டுக் குட்டியாவது வெள்ளாட்டுக்குட்டியாவது பிறந்தால், அது ஏழுநாள் தன் தாயினிடத்தில் இருக்கக்கடவது; எட்டாம் நாள்முதல் அது கர்த்தருக்குத் தகனபலியாக அங்கிகரிக்கப்படும் (லேவி 22:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் முதல் ஈற்றை கர்த்தருக்கென்று பொருத்தனைபண்ணினாலும், அதை எட்டு நாள் முடிந்த பின்பே கர்த்தருடைய சந்நிதிக்கு பலியிடுமாறு கொண்டு வரவேண்டும்.

"உன் மாடுகளிலும் உன் ஆடுகளிலும் அப்படியே செய்வாயாக; குட்டியானது ஏழுநாள் தன் தாயோடே இருக்கட்டும்; எட்டாம் நாளிலே அதை எனக்குச் செலுத்துவாயாக" (யாத் 22:30).

பிறந்து எட்டுநாள்கூட ஆகாத மிருகம் புசிப்பதற்கு சுவையாயிராது. இஸ்ரவேல் புத்திரர் எட்டுநாள் முழுமையாக நிறைவேறாத மிருகத்தை புசிக்கமாட்டார்கள். மனுஷருடைய பந்தியிலே தகுதியில்லாத மிருகம், கர்த்தருடைய பந்தியிலும் தகுதியாயிராது. தங்களுக்கு சுவையாயிராது என்று ஒதுக்கி தள்ளும் மிருகத்தை, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பலிசெலுத்த கொண்டு வரக்கூடாது.

பசுவையும் அதின் கன்றையும், ஆட்டையும் அதின் குட்டியையும் ஒரே நாளில் கொல்லவேண்டாம் (லேவி 22:28) என்று கர்த்தர் சொல்லுகிறார். இரண்டு ஜீவனையும் ஒரே நாளிலே பலிபீடத்திலும் கொல்லக்கூடாது. இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளிலும் கொல்லக்கூடாது. ஒரே நாளிலே இரண்டு சந்ததிகள் அழிந்துபோவது கர்த்தருடைய சித்தமல்ல. இரண்டு ஜீவன்களில் ஒன்று செத்துப்போவதை கர்த்தர் அனுமதிக்கிறார்.

"பசுவையும் அதின் கன்றையும், ஆட்டையும் அதின் குட்டியையும் ஒரே நாளில் கொல்லவேண்டாம்" என்னும் வாக்கியம் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் இடையேயுள்ள பரிசுத்தமான உறவை விளக்குகிறது.

கர்த்தருக்கு ஸ்தோத்திரபலியைச் செலுத்துவீர்களானால் மனப்பூர்வமாய் அதைச் செலுத்தவேண்டும் என்றும், அந்நாளிலேதான் அது புசிக்கப்படவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 22:29,30). விடியற்காலம்மட்டும் நீங்கள் அதில் ஒன்றும் மீதியாக வைக்கவேண்டாம்; நான் கர்த்தர் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இந்தப் பிரமாணம் இதற்கு முன்பு ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

"சமாதானபலியாகிய ஸ்தோத்திரபலியின் மாம்சமானது செலுத்தப்பட்ட அன்றைத்தினமே புசிக்கப்படவேண்டும்; அதில் ஒன்றும் விடியற்காலமட்டும் வைக்கப்படலாகாது" (லேவி 7:15).

"நீங்கள் அதைச் செலுத்துகிற நாளிலும் மறுநாளிலும் அதைப் புசிக்க வேண்டும்; மூன்றாம் நாள்மட்டும் மீதியானது அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவது. மூன்றாம் நாளில் அதில் ஏதாகிலும் புசிக்கப்பட்டால் அருவருப்பாயிருக்கும்; அது அங்கிகரிக்கப்படமாட்டாது" (லேவி 19:6,7).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளவேண்டும். அவர்கள் அவைகளின்படி செய்யவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்கக்கூடாது. இது கர்த்தர் சொல்லுகிற பொதுவான பிரமாணம். இந்தப் பிரமாணத்தோடு இந்த அதிகாரம் நிறைவு பெறுகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, " நீங்கள் என் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யக்கடவீர்கள்; நான் கர்த்தர். என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காதிருப்பீர்களாக; நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே பரிசுத்தர் என்று மதிக்கப்படுவேன்; நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர். நான் உங்களுக்கு தேவனாயிருப்பதற்காக, உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினேன்; நான் கர்த்தர் என்று சொல்" (லேவி 22:31-33) என்று சொல்லுகிறார்.

23 அதிகாரம்

கர்த்தர் இதுவரையிலும் பரிசுத்தமான மனுஷரைப்பற்றியும், பரிசுத்தமான வஸ்துக்களைப்பற்றியும், பரிசுத்தமான ஸ்தலங்களைப்பற்றியும் தம்முடைய பிரமாணங்களை சொன்னார். கர்த்தர் இந்த அதிகாரத்தில் பரிசுத்தமான காலங்களை நியமனம் பண்ணுகிறார்.

ஓய்வுநாளின் வாரப்பண்டிகை (லேவி 23:3). வருஷாந்திர பண்டிகைகள். பஸ்கா பண்டிகையும், புளிப்பில்லா அப்பப்பண்டிகையும் (லேவி 23:4-8). இந்தப் பண்டிகையின் போது அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டு வரவேண்டும் (லேவி 23:9-14).

பெந்தெகொஸ்தே பண்டிகை (லேவி 23:15-22). ஏழாம் மாதத்தின் விசேஷம். ஏழாம் மாதம் முதலாம் தேதி எக்காள சத்தத்தால் ஞாபகக்குறியாக கொண்டாடுகிற பண்டிகை (லேவி 23:23-25). ஏழாம் மாதம் பத்தாந்தேதி பாவநிவிர்த்தி செய்யும் நாள் (லேவி 23:26-32). ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகை (லேவி 23:33-44).

கர்த்தருடைய பண்டிகை நாட்கள் லேவி 23:1,2

லேவி 23:1. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 23:2. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: சபைகூடிவந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்களாவன:

கர்த்தர் நியமித்திருக்கிற பரிசுத்தமான நாட்களைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: சபைகூடிவந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்களாவன" (லேவி 23:1,2) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஒரு நாளை பரிசுத்தமாய் நியமிக்கும்போது, அந்த நாள் பரிசுத்த நாளாகிறது. அவரே நாட்களுக்கும் காலங்களுக்கும் கர்த்தராயிருக்கிறார். கர்த்தர் காலங்களை உண்டாக்கினபோது, ஒரு நாளை மற்ற நாளிலிருந்து பரிசுத்தப்படுத்தி, அதை ஆசீர்வதித்திருக்கிறார்.

"தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" (ஆதி 2:3).

மனுஷன் தன்னுடைய விருப்பத்தின் பிரகாரமும், சவுகரியத்தின் பிரகாரமும் ஒரு நாளை நல்ல நாளாக்குகிறான். மனுஷனால் அதை மாத்திரமே செய்ய முடியும். கர்த்தரோ ஒரு நாளை பரிசுத்த நாளாக ஆக்குகிறார்.

"ஆதலால் அலங்கமில்லாத ஊர்களில் குடியிருக்கிற நாட்டுப்புறத்தாரான யூதர்கள் ஆதார் மாதத்தின் பதினாலாந்தேதியைச் சந்தோஷமும், விருந்துண்கிற பூரிப்புமான நாளும், ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்புகிற நாளுமாக்கினார்கள்" (எஸ் 9:19).

கர்த்தர் பரிசுத்தமான நாட்களை "பண்டிகை நாட்கள்" என்று சொல்லுகிறார். பாவநிவாரண நாளானது ஒரு பண்டிகை நாளாகும். பண்டிகை நாட்கள் பொதுவாக மகிழ்ந்து களிகூருவதற்கும், சந்தோஷமாயிருப்பதற்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் அந்தப் பரிசுத்தமான நாட்கள், பண்டிகை நாட்கள் என்று அழைக்கப்படுகிறது.

"சபை கூடிவந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தப் பண்டிகை நாட்கள், "கர்த்தருடைய பண்டிகை நாட்கள்" என்று அழைக்கப்படுகிறது. கர்த்தர் இந்தப் பரிசுத்த நாட்களை, "என்னுடைய பண்டிகை நாட்கள்" என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய பண்டிகை நாட்களை மோசே இஸ்ரவேல் புத்திரர் எல்லோரோடும் சொல்லவேண்டும். இந்தப் பண்டிகை நாட்களை ஆசாரியர் மாத்திரம் ஆசரிக்கிறார்கள் என்று இல்லாமல், இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இதை பரிசுத்த நாட்களாக ஆசரிக்கிறார்கள். கர்த்தருடைய பண்டிகை நாட்கள் ஆசாரியருக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் பரிசுத்த நாட்களாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பண்டிகை நாட்களிலே சபையாகக் கூடிவரவேண்டும். அந்தப் பண்டிகை நாட்களை பரிசுத்த நாட்களாக ஆசரிக்கவேண்டும். பண்டிகை நாட்கள் பரிசுத்தமானது. பண்டிகை நாட்களிலே ஆசரிக்கப்படும் ஒவ்வொரு காரியமும் பரிசுத்தமானதாயிருக்கவேண்டும்.

கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாள்
லேவி 23:3

லேவி 23:3. ஆறுநாளும் வேலைசெய்யவேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள், அதில் ஒரு வேலையும் செய்யவேண்டாம்; அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக.

ஓய்வுநாள் பிரமாணத்தைப்பற்றி கர்த்தர் இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். வருஷாந்தர பண்டிகைகள் மிகவும் விசேஷமானது. அந்தப் பண்டிகை நாட்களின்போது இஸ்ரவேல் ஜனத்தாரின் ஆண்மக்கள் எல்லோரும் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு கூடிவருவார்கள்.

கர்த்தருடைய வருஷாந்தர பண்டிகை நாட்கள் விசேஷமான பரிசுத்த நாளாகயிருந்தாலும், வாரத்தின் ஓய்வுநாளும் கர்த்தருக்கு பரிசுத்தமான நாளாயிருக்கிறது.

ஆறுநாளும் வேலைசெய்யவேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள், அதில் ஒரு வேலையும் செய்யவேண்டாம்; அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக (லேவி 23:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

புதிய ஏற்பாட்டு ஓய்வுநாளிலே விசுவாசிகள் எல்லோரும் சபையாகக் கூடிவரவேண்டும். பரிசுத்தமான சபை கூடிவரும் நாளே, பரிசுத்தமான ஓய்வுநாள் ஆகும். வாரத்தின் முதலாம் நாளிலே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களையெல்லாம் ஒன்றாய்க் கூடிவரச்செய்தார். இதுவே சபை கூடிவரும் சம்பவமாகும். ஒவ்வொரு வாரமும், வாரத்தின் முதல் நாளிலே, கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷர்களை சபையாகக் கூட்டிச்சேர்த்தார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் சபை கூடி வரும் நாளை பரிசுத்தம்பண்ணவேண்டும். விசுவாசிகள் சபையாகக் கூடிவருவதை அசட்டைபண்ணிவிடக்கூடாது. ஓய்வுநாளுக்கும், மற்ற நாட்களுக்கும் இடையே உள்ள வித்தியாசங்களை நாமும், நம்முடைய குடும்பத்தாரும் அறிந்திருக்கவேண்டும்.

பரிசுத்தவேதாகமத்தில் கர்த்தருடைய பண்டிகைகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு :

1. வாராந்திர ஓய்வுநாள் பண்டிகை (லேவி 23:2-3)
2. வருஷாந்திர பஸ்கா பண்டிகை (லேவி 23:4-5)
3. வருஷாந்திர புளிப்பில்லா அப்பப்பண்டிகை (லேவி 23:6-8)

4. வருஷாந்திர முதற்பலன்களின் பண்டிகை (லேவி 23:9-14)

5. வருஷாந்திர பெந்தெகொஸ்தே பண்டிகை (லேவி 23:15-21)

6. வருஷாந்திர எக்காளங்களின் பண்டிகை (லேவி 23:23-25)

7. வருஷாந்திர பாவநிவாரண பண்டிகை (லேவி 23:26-32)

8. வருஷாந்திர கூடாரப் பண்டிகை (லேவி 23:33-34)

இஸ்ரவேலின் எல்லா ஆண்மக்களும் கூடிச்சேரவேண்டிய வருஷாந்தர பண்டிகைகளாக மூன்று பண்டிகைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பஸ்கா, புளிப்பில்லா அப்பம், முதற்பலன்கள் ஆகியவற்றின் பண்டிகைகளை ஒரே காலத்தில் ஒரேவேளையில் ஆசரிப்பது வழக்கம். (யாத் 12; யாத் 23:14-17).

2. பெந்தெகொஸ்தே பண்டிகை (லேவி 23:15-21; யாத் 23:16)

3. கூடாரப்பண்டிகை (லேவி 23:33-44; யாத் 23:16; யாத் 34:18-22).

இந்தப் பண்டிகைக்கு முன்பாக எக்காளப்பண்டிகை, பாவநிவாரண நாள் ஆகிய இரண்டு பண்டிகைகளை இஸ்ரவேல் புத்திரர் ஆசரித்தார்கள். பதினைந்து நாட்களுக்கு முன்பாகவே இஸ்ரவேல் புத்திரர் கூடிச்சேருவார்கள். இவ்விரண்டு பண்டிகைகளிலும் இஸ்ரவேலின் எல்லா ஆண்மக்களும் கூடிசேரவேண்டும். (லேவி 23:23-44; 2நாளா 8:13).

கர்த்தருடைய பண்டிகைகளை தவிர, யூதருடைய மற்ற பண்டிகை நாட்களைப்பற்றியும் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. தேசம் கர்த்தருக்கென்று ஓய்வு கொண்டாடுவது. (லேவி 25)

2. மாதப்பிறப்பின் பண்டிகை (1நாளா 23:31; 2நாளா 2:4; 2நாளா 8:13; 2நாளா 31:3; எஸ்றா 3:5; நெகே 10:33; ஏசா 1:13-14; ஏசா 2:11; கொலோ 2:14-17)

3. பூரிம் பண்டிகை - ஆமானிடமிருந்து விடுதலை பெற்றதற்காகக் கொண்டாடப்படுகிறது. (எஸ் 9)

4. தேவாலய பிரதிஷ்டை பண்டிகை (யோவான் 10:22). இதற்கு விளக்குகளின் பண்டிகை என்னும் மறுபெயரும் உண்டு.

பஸ்கா பண்டிகை
லேவி 23:4-8

லேவி 23:4. சபைகூடிவந்து பரிசுத்தமாய் ஆசரிக்கும்படி, நீங்கள் குறித்தகாலத்தில் கூறவேண்டிய கர்த்தரின் பண்டிகைகளாவன:

லேவி 23:5. முதலாம் மாதம் பதினாலாம் தேதி அந்திநேரமாகிற வேளையிலே கர்த்தரின் பஸ்கா பண்டிகையும்,

லேவி 23:6. அந்த மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லா அப்பப்பண்டிகையுமாய் இருக்கும்; ஏழுநாள் புளிப்பில்லா அப்பங்களைப் புசிக்க வேண்டும்.

லேவி 23:7. முதலாம் நாள் உங்களுக்குப் பரிசுத்தமான சபைகூடுதல்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.

லேவி 23:8. ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலியிட வேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்தமான சபைகூடுதல்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது என்று சொல் என்றார்.

இந்த வசனத்தில் பண்டிகை நாட்களானது, "கர்த்தரின் பண்டிகைகள்" என்று மறுபடியுமாய் சொல்லப்பட்டிருக்கிறது. "சபைகூடிவந்து பரிசுத்தமாய் ஆசரிக்கும்படி, நீங்கள் குறித்தகாலத்தில் கூறவேண்டிய கர்த்தரின் பண்டிகைகளாவன" *(லேவி 23:4)* என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தரே பண்டிகை நாட்களை நியமித்திருக்கிறார். ஆகையினால் இந்த நாட்கள் கர்த்தருடைய பண்டிகைநாட்கள் என்று அழைக்கப்படுகிறது.

பொதுவாக பண்டிகை நாட்கள் சந்தோஷம் மிகுந்த நாட்களாகயிருக்கும். வாரத்தின் ஓய்வுநாள் சந்தோஷமான நாள். இஸ்ரவேல் ஜனத்தார் ஒவ்வொரு வருஷமும் ஆசரிக்கும் பண்டிகை நாட்கள் எல்லாமே சந்தோஷமான நாட்களாகவே இருக்கிறது. ஆனால் பாவநிவாரண நாள் சந்தோஷமான நாளாயிருக்காது. அது துக்கப்படுகிற நாள். பாவநிவாரண நாளை தவிர, கர்த்தரின் மற்ற பண்டிகை நாட்கள் எல்லாமே சந்தோஷமான நாட்களாகும்.

கர்த்தருடைய பண்டிகை நாட்களிலே நாம் எவ்வாறு சந்தோஷமாயிருக்கவேண்டும் என்றும் கர்த்தர் நமக்கு போதிக்கிறார். பண்டிகை நாட்களிலே கர்த்தரை துதித்து, அவரை நன்றியுள்ள இருதயத்தோடு ஆராதிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் ஏழுநாள் புளிப்பில்லா அப்பங்களை புசிக்கவேண்டும். அவர்கள் ஏழுநாளும் கர்த்தருக்கு தகனபலியிடவேண்டும். ஏழாம்நாள் பரிசுத்தமான சபை கூடுதல்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "முதலாம் மாதம் பதினாலாம் தேதி அந்திநேரமாகிற வேளையிலே கர்த்தரின் பஸ்கா பண்டிகையும், அந்த மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லா அப்பப்பண்டிகையுமாய் இருக்கும்; ஏழுநாள் புளிப்பில்லா அப்பங்களைப் புசிக்கவேண்டும்" *(லேவி 23:5,6)* என்றும்,

"முதலாம் நாள் உங்களுக்குப் பரிசுத்தமான சபைகூடுதல்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேண்டாம். ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலியிட வேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்தமான சபைகூடுதல்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது என்று சொல்" *(லேவி 23:7,8)* என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு முதலாம் நாள் பரிசுத்தமான சபை கூடும் நாள். அந்த நாளிலே அவர்கள் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது. ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காள சத்தத்தால் ஞாபகுறியாக கொண்டாடுகிற பண்டிகை. ஏழாம் மாதம் பத்தாந்தேதி இஸ்ரவேல் புத்திரருக்கு பாவநிவிர்த்தி செய்யும் நாள். ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகை.

பாவநிவாரண நாளின்போது இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்காக துக்கப்படவேண்டும். இது பரிசுத்தமான துக்கம். அவர்கள் ஆறுநாட்களுக்கு பரிசுத்தமான சந்தோஷத்திலிருந்து, ஏழாம் நாளில் பரிசுத்தமான துக்கத்தை ஆசரிக்கவேண்டும்.

புளிப்பில்லா அப்பப்பண்டிகை பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. முதலாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லா அப்பப் பண்டிகையாக ஆசரிக்கவேண்டும் *(லேவி 23:6)*.

2. அப்பப்பண்டிகையின் ஏழுநாட்களிலும் புளிப்பில்லா அப்பங்களைப் புசிக்க வேண்டும்.

3. அப்பப்பண்டிகையின் முதலாம் நாள் உங்களுக்குப் பரிசுத்தமான சபைகூடுதல் *(லேவி 23:7)*.

4. அப்பப்பண்டிகையின் முதலாம் நாளிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது.

5. ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலியிட வேண்டும் (லேவி 23:8).

6. ஏழாம்நாள் பரிசுத்தமான சபைகூடுதல்.

7. ஏழாம் நாளில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது.

அறுப்பின் முதற்பலனாகிய பண்டிகை லேவி 23:9-14

லேவி 23:9. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 23:10. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச்சேர்ந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது, உங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கடவீர்கள்.

லேவி 23:11. உங்களுக்காக அது அங்கிகரிக்கப்படும்படி, ஆசாரியன் அந்தக் கதிர்க்கட்டை ஓய்வுநாளுக்கு மறுநாளில் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்ட வேண்டும்.

லேவி 23:12. நீங்கள் அந்தக் கதிர்க்கட்டை அசைவாட்டும் நாளில் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியையும்,

லேவி 23:13. கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவாகிய போஜனபலியையும், திராட்சபழரசத்திலே காற்படியாகிய பானபலியையும் செலுத்தக்கடவீர்கள்.

லேவி 23:14. உங்கள் தேவனுக்குக் காணிக்கையை நீங்கள் கொண்டுவரும் அந்நாள் மட்டும், அப்பமும் வாட்டிய கதிரும் பச்சைக்கதிரும் புசியீர்களாக; இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்ல வேண்டிய நித்திய கட்டளை.

கர்த்தர் பஸ்கா பண்டிகையின் பிரமாணத்தை இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். முதலாம் மாதம் பதினாலாம் தேதி அந்திநேரமாகிற வேளையிலே கர்த்தரின் பஸ்கா பண்டிகை பரிசுத்ததமாய் ஆசரிக்கப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்ட நாளை நினைவுகூரும் வண்ணமாக பஸ்கா ஆசரிக்கப்படுகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் தலைச்சன் பிள்ளைகளுக்கும், எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளுக்கும் வித்தியாசம் காண்பித்து, தம்முடைய கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருடைய தலைச்சன் பிள்ளைகளை பாதுகாத்தார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மறக்கவில்லை. கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் அவர்களுக்கு காண்பித்தார் என்பதற்கு அடையாளமாக பஸ்கா பண்டிகை ஆசரிக்கப்படுகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச்சேர்ந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது, உங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கடவீர்கள்" (லேவி 23:9,10) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஆசாரியனிடத்தில் கொண்டுவருகிற கதிர்க்கட்டை கர்த்தர் அங்கீகரிக்கவேண்டும். "உங்களுக்காக அது அங்கிகரிக்கப்படும்படி, ஆசாரியன் அந்தக் கதிர்க்கட்டை ஓய்வுநாளுக்கு மறுநாளில் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்ட வேண்டும்" (லேவி 23:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியன் அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டை கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டுகிறான். பரலோகத்திலுள்ள தேவனுக்கு இந்தக் கதிர்க்கட்டு காணிக்கையாக சமர்ப்பிக்கப்படுகிறது என்பதற்கு அடையாளமாக, ஆசாரியன் இந்தக் கதிர்க்கட்டை அசைவாட்டுகிறான்.

கர்த்தரே விளைச்சலை கொடுக்கிறவர். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திலே முன்மாரியையும், பின்மாரியையும் கொடுத்து, தானியங்களை வளரச் செய்திருக்கிறார். தங்களுடைய எல்லா ஆசீர்வாதங்களுக்கும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரையே சார்ந்திருக்கிறார்கள். இதற்கு அடையாளமாக ஆசாரியன் கதிர்க்கட்டை கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டுகிறான்.

நிலத்திலே தானியம் வளரும்போது சத்துருக்கள் அதை திருடிச் செல்லவில்லை. வெட்டுக்கிளிகள் அதைத் தின்றுபோடவில்லை. கர்த்தர் நிலத்தின் தானியங்களை இஸ்ரவேல் ஜனத்திற்காக பாதுகாத்து, பராமரித்து கொடுத்திருக்கிறார்.

கர்த்தர் தங்களுக்கு காண்பித்த சகல நன்மைகளுக்காகவும் இஸ்ரவேல் ஜனத்தார் அவருக்கு நன்றி சொல்லுகிறார்கள். அவர்கள் கானான் தேசத்தில் போய்ச் சேர்ந்த பின்பு, அந்த தேசத்தில் வெள்ளாண்மையை அறுக்கும்போது, தங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். ஆசாரியன் அந்தக் கதிர்க்கட்டை, ஓய்வு நாளுக்கு மறுநாளில் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டுகிறான்.

அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டு கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டப்படும்போது, இஸ்ரவேல் புத்திரருடைய மொத்த கதிர்க்கட்டுக்களையும், கர்த்தர் பரிசுத்தம் பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்கு வந்து, தங்கள் அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டை கர்த்தருடைய சந்நிதியில் படைத்தபோது, வானத்திலிருந்து மன்னா பெய்வது அன்றையதினத்தில் நின்றுபோயிற்று. இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திலே மன்னாவை புசிக்காமல், தேசத்தின் வெள்ளாண்மையை அறுத்து, அதன் தானியத்தைப் புசிக்கிறார்கள்.

"பஸ்காவின் மறுநாளாகிய அன்றையதினம் அவர்கள் தேசத்தினுடைய தானியத்தாலாகிய புளிப்பில்லாத அப்பங்களையும் சுட்ட கதிர்களையும் புசித்தார்கள். அவர்கள் தேசத்தின் தானியத்திலே புசித்த மறுநாளிலே மன்னா பெய்யாமல் ஒழிந்தது; அதுமுதல் இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னா இல்லாமற்போய், அவர்கள் கானான் தேசத்துப் பலனை அந்த வருஷத்தில்தானே புசித்தார்கள்" *(யோசு 5:11,12)*.

கானான் தேசத்திலே இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வெள்ளாண்மையை அறுக்கிறார்கள். கர்த்தர் அந்த அறுவடையை அங்கீகரிக்கவேண்டும். அவர் வெள்ளாண்மையை ஆசீர்வதிக்கவேண்டும். கர்த்தர் அதை அங்கீகரிக்கும் வண்ணமாக, ஆசாரியன், முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை, ஓய்வுநாளுக்கு மறுநாளில் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டுகிறான்.

மறுவருஷத்திலும் கர்த்தர் கானான் தேசத்தின் வெள்ளாண்மையை ஆசீர்வதிப்பார் என்று இஸ்ரவேல் ஜனத்தார் நம்பிக்கையோடிருக்கிறார்கள். தங்களுடைய நம்பிக்கைக்கு அடையாளமாக அவர்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டு வருகிறார்கள். தங்களுக்கு இனிமேல் வானத்திலிருந்து மன்னா பெய்யவேண்டியதில்லை என்றும், கானான் தேசத்தின் வெள்ளாண்மையே தங்களுடைய போஜனத்திற்கு போதுமானது என்றும் இஸ்ரவேல் ஜனத்தார் நம்புகிறார்கள்.

அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையில் மரித்து, மூன்றாம் நாளிலே உயிரோடு எழுந்தார். "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதல்பலனானார்" *(1கொரி 15:20)*.

இஸ்ரவேல் புத்திரர் அந்தக் கதிர்க்கட்டை அசைவாட்டும் நாளில் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியையும், கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவாகிய போஜனபலியையும், திராட்சபழரசத்திலே காற்படியாகிய பானபலியையும் செலுத்தவேண்டும் (லேவி 23:12,13).

இஸ்ரவேல் புத்திரர் விளைச்சலில் முதற்பலனைக் கர்த்தருக்குக் காணிக்கையாகச் செலுத்தவேண்டும். இது முதலாவது பிரமாணத்தை நிறைவேற்றும். (மத் 22:37-38). இஸ்ரவேல் புத்திரருக்கு அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் அசைவாட்டும் பலியாகக் கொடுக்க வேண்டும் என்னும் பிரமாணம் கூறப்பட்டிருக்கிறது. (லேவி 23:10,17,20; லேவி 2:12-14; யாத் 23:16-19; யாத் 34:22,26; எண் 18:12; எண் 28:26; உபா 26:10) இந்தக் காணிக்கை செலுத்துபவருக்கு விசேஷித்த ஆசீர்வாதங்கள் உண்டு. (நீதி 3:9-10). முதற்கனிகளைக் காணிக்கையாகச் செலுத்துவது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு அடையாளம். (2கொரி 15:2-23).

நாம் ஒவ்வொரு காரியத்தை செய்யும்போதும், அந்தக் காரியத்தை தேவனோடு செய்ய ஆரம்பிக்கவேண்டும். நாம் ஒவ்வொரு நாளிலும் நம்முடைய வேலைகளை செய்ய ஆரம்பிக்கும் முன்பாக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். நம்முடைய ஜீவியத்தை கர்த்தரோடு ஆரம்பம் பண்ணவேண்டும். நாம் ஒவ்வொரு முறை போஜனம்பண்ணும்போதும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்பண்ணி, புசிக்கவேண்டும். முதலாவதாக நாம் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டும்.

உங்கள் தேவனுக்குக் காணிக்கையை நீங்கள் கொண்டுவரும் அந்நாள் மட்டும், அப்பமும் வாட்டிய கதிரும் பச்சைக்கதிரும் புசியீர்களாக; இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்ல வேண்டிய நித்திய கட்டளை (லேவி 23:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

முதற்பலன்களின் பண்டிகை பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. வெள்ளாண்மையை அறுக்கும்போது, உங்கள் அறுப்பின் முதற் பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டுவரவேண்டும்.

2. உங்களுக்காக அறுப்பின் முதற் பலன் அங்கிகரிக்கப்படும்படி, அதைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்ட வேண்டும் (லேவி 23:11).

3. ஆசாரியன் அந்தக் கதிர்க்கட்டை ஓய்வுநாளுக்கு மறுநாளில் அசைவாட்ட வேண்டும்.

4. கதிர்க்கட்டை அசைவாட்டும் நாளில் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக் குட்டியைக் கொண்டு வரவேண்டும் (லேவி 23:12).

5. தகனபலியாக கொண்டுவரப்பட்ட ஆட்டுக்குட்டியுடன் சுகந்த வாசனையான தகனபலியாக ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவாகிய போஜனபலியையும் கொண்டு வரவேண்டும் (லேவி 23:13).

6. திராட்சபழரசத்திலே காற்படியாகிய பானபலியையும் செலுத்த வேண்டும்.

7. உங்கள் தேவனுக்குக் காணிக்கையை நீங்கள் கொண்டுவரும் அந்நாள் மட்டும், அப்பமும் வாட்டிய கதிரும் பச்சைக்கதிரும் புசிக்கக்கூடாது. (லேவி 23:14).

8. இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்ல வேண்டிய நித்திய கட்டளை.

முதற்பலன்களின் பண்டிகையில் செலுத்தப்படும் காணிக்கைகளின் விவரம் வருமாறு :

1. ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டி

2. மெல்லிய மாவு

3. கோதுமை

4. திராட்சைப்பழரசம்.

5. எண்ணெய்

பெந்தெகொஸ்தே பண்டிகை லேவி 23:15-22

லேவி 23:15. நீங்கள் அசைவாட்டும் கதிர்க்கட்டைக் கொண்டுவரும் ஓய்வுநாளுக்கு மறுநாள் முதற்கொண்டு எண்ணத்துவக்கி, ஏழுவாரங்கள் நிறைவேறினபின்பு,

லேவி 23:16. ஏழாம் ஓய்வுநாளுக்கு மறுநாளாகிய ஐம்பதாம் நாள்மட்டும் எண்ணி, கர்த்தருக்குப் புதிய போஜனபலியைச் செலுத்தக்கடவீர்கள்.

லேவி 23:17. நீங்கள் ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே புளிப்பாகப் பாகம்பண்ணப்பட்ட அசைவாட்டும் காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்களை உங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டுவந்து,

லேவி 23:18. அப்பத்தோடே கூடக் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக அவைகளுக்கு அடுத்த போஜனபலியையும், பானபலிகளையும் செலுத்தி,

லேவி 23:19. வெள்ளாடுகளில் ஒரு கடாவைப் பாவநிவாரணபலியாகவும், ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைச் சமாதான பலியாகவும் இடக்கடவீர்கள்.

லேவி 23:20. அவைகளை ஆசாரியன் முதற்பலனாகிய அப்பத்தோடும் இரண்டு ஆட்டுக்குட்டிகளோடுங்கூட கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டக்கடவன்; கர்த்தருக்குப் பரிசுத்தமாகிய அவைகள் ஆசாரியனுடையவைகளாகும்.

லேவி 23:21. அந்த நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்த நாள் என்று கூறவேண்டும்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது; இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை.

லேவி 23:22. உங்கள் தேசத்தின் வெள்ளாண்மையை நீங்கள் அறுக்கையில், வயலின் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும் அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிடவேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார்.

பெந்தெகொஸ்தே பண்டிகையானது வாரங்களின் பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. "ஏழு வாரங்களை எண்ணுவாயாக; அறுப்பு அறுக்கத்தொடங்கும் காலமுதல் நீ அந்த ஏழு வாரங்களையும் எண்ண வேண்டும். அவைகள் முடிந்தபோது வாரங்களின் பண்டிகையை உன் தேவனாகிய கர்த்தருக்கு என்று ஆசரிக்கவேண்டும்" (உபா 16:9,10).

பெந்தெகொஸ்தே பண்டிகை பஸ்கா பண்டிகைக்கு ஐம்பது நாட்களுக்கு பின்பு அல்லது ஏழு வாரங்களுக்கு பின்பு வருகிறது. "நீங்கள் அசைவாட்டும் கதிர்க்கட்டைக் கொண்டுவரும் ஓய்வுநாளுக்கு மறுநாள் முதற்கொண்டு எண்ணத்துவக்கி, ஏழுவாரங்கள் நிறைவேறினபின்பு, ஏழாம் ஓய்வுநாளுக்கு மறுநாளாகிய ஐம்பதாம் நாள்மட்டும் எண்ணி, கர்த்தருக்குப் புதிய போஜனபலியைச் செலுத்தக்கடவீர்கள்" (லேவி 23:15,16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏழாம் ஓய்வுநாளுக்கு மறுநாள் என்பது முதற்கனிகளின் பண்டிகையிலிருந்து 50 ஆம் நாள் (லேவி 23:6,11,15). கிரேக்க மொழியில் "ஐம்பது" என்னும் எண்ணைக் குறிப்பதற்கு "பெந்தெகொஸ்தே" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

புதிய போஜனபலி என்பது ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே புளிப்பாகப் பாகம்பண்ணப்பட்ட இரண்டு அப்பங்கள் (லேவி 23:17). எல்லாப் போஜனபலிகளும் ஆசாரியரிடம் கொடுக்கப்பட வேண்டும். (லேவி 2:8).

பெந்தெகொஸ்தே பண்டிகையானது அறுப்புக்கால பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. "நீ வயலில் விதைத்த உன் பயிர்வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக" (யாத் 23:16).

கர்த்தருடைய சந்நிதியில் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை கொண்டு வரும்போது, அது அறுப்புக்காலத்திற்கு ஆரம்பமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் தங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை படைத்த பின்பு அவர்கள் தேசத்தின் வெள்ளாண்மையை அறுவடை செய்யலாம். பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது அறுவடை காலம் நிறைவுபெறுகிறது.

பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது இஸ்ரவேல் புத்திரர் ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே புளிப்பாகப் பாகம்பண்ணப்பட்ட அசைவாட்டும் காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்களை தங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டுவரவேண்டும் (லேவி 23:17).

இஸ்ரவேல் புத்திரர் இரண்டு அப்பங்களை தங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கென்று முதற்பலனாக கொண்டு வரவேண்டும். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் இரண்டு அப்பங்களை ஆசாரியரிடம் கொண்டு வரவேண்டும் என்பது இதன் பொருளல்ல. இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்கும் பொதுவானதாக அவர்களுடைய வாசஸ்தலங்களிலிருந்து செய்யப்பட்ட இரண்டு அப்பங்களைக் கொண்டு வந்து, ஆசாரியரிடம் கொடுக்க வேண்டும்.

போஜனபலிகள் அனைத்தும் ஆசாரியரையே சாரும். அவர்கள் செய்யும் ஆசாரிய ஊழியத்திற்காக இது கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கும் பங்குவீதம். (லேவி 2:2-3,8-10, 14-16).

அசைவாட்டும் காணிக்கையானது "ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவிலே புளிப்பாக பாகம்பண்ணப்பட்டிருக்கவேண்டும்" இவ்வளவு மாவினால் சுடப்படும் அப்பம் அளவில் பெரியதாக இருக்கும். எபிரெயருடைய வரலாற்றின் பிரகாரம் இந்த அப்பம் 28 அங்குல நீளமும், 16 அங்குல அகலமும், 7 அங்குலம் கனமும் உள்ளதாக இருக்கும். (லேவி 23:17).

பலிபீடத்தில் புளிப்பிடப்பட்ட எந்த அப்பமும் தகனிக்கப்படுவதில்லை (லேவி 2:11) ஆகையினால், இங்கு செலுத்தப்படும் புளிப்பாகப் பாகம்பண்ணப்பட்ட அப்பங்கள் சர்வாங்க தகனபலியாகச் செலுத்தப்படுவதற்கு அல்ல. கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கும் விளைச்சலிலிருந்து உச்சிதமான பொருளை ஜனங்கள் கர்த்தருக்கு ஸ்தோத்திர காணிக்கையாகச் செலுத்துகிறார்கள். அந்த வருஷத்தில் கர்த்தருடைய கிருபையினால் விளைச்சல் நன்றாக இருந்தது என்பதை அங்கிகரித்து ஜனங்கள் ஸ்தோத்திரப் பலிகளைச் செலுத்துகிறார்கள்.

முதற்பலன்கள் என்பது கோதுமை அறுவடையின் முதற்பலனைக் குறிக்கும். (லேவி 23:17).

பஸ்கா பண்டிகையின்போது இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லாத அப்பத்தை புசித்தார்கள். பெந்தெகொஸ்தே பண்டிகையின்போதோ அவர்கள் புளிப்பாக பாகம்பண்ணப்பட்ட அப்பங்களை கர்த்தருக்கென்று கொண்டு வருகிறார்கள். கர்த்தர் தங்களுடைய அன்றாட போஜனத்திற்கு ஆதரவாயிருக்கிறார் என்பதையும், கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளையும் நினைவுகூர்ந்து, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு புளிப்பாக பாகம்பண்ணப்பட்ட அப்பங்களை காணிக்கையாக கொண்டு வருகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் அந்த அப்பத்தோடேகூடக் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக அவைகளுக்கு அடுத்த போஜனபலியையும், பானபலிகளையும் செலுத்தவேண்டும் (லேவி 23:18).

ஒவ்வொரு மிருகஜீவனைப் பலிசெலுத்தும்போதும் அதோடு சேர்ந்து அதற்குரிய மெல்லிய மாவையும், எண்ணெயையும், திராட்சரசத்தையும் சேர்த்து நியமிக்கப்பட்ட அளவின் பிரகாரம் காணிக்கையாகச் செலுத்தவேண்டும் (எண் 15:3-10).

இஸ்ரவேல் புத்திரர் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை அசைவாட்டும் நாளிலே, கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக ஒரு வயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியை செலுத்தவேண்டும் (லேவி 23:12). அவர்கள் கர்த்தருக்கு புளிப்பாக பாகம்பண்ணபட்ட அப்பத்தை சர்வாங்க தகனபலியாக செலுத்தும்போது, ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும் சுகந்தவாசனையான தகனபலியாக செலுத்தவேண்டும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே அவர்களுடைய அறுவடையின் தேவனாகயிருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு ஆசீர்வாதமான அறுவடையைக் கொடுத்ததற்காக, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனபலிகளை செலுத்தி, அவரை கனம்பண்ணுகிறார்கள்.

அப்பத்தோடே செலுத்தப்படும் பலிகளோடு, அவர்கள் வெள்ளாடுகளில் ஒரு கடாவை பாவநிவாரண பலியாக செலுத்துகிறார்கள். இவை தவிர அவர்கள் ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளையும் சமாதான பலிகளாக செலுத்துகிறார்கள் (லேவி 23:19). தாங்கள் அறுவடை செய்திருக்கிற தானியக்கதிர்கள்மீது கர்த்தருடைய ஆசீர்வாதம் தங்கியிருக்கவேண்டும் என்று பணிவாய் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். தங்கள் விண்ணப்பத்தை உறுதிபண்ணும் வண்ணமாய் அவர்கள் ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளை சமாதான பலிகளாக செலுத்துகிறார்கள்.

பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது, 13 மிருகஜீவன்கள் பலியாகச் செலுத்தப் படுகின்றன. அவற்றில் ஒன்று பாவநிவாரண பலியாகச் செலுத்தப்படுகிறது. (லேவி 23:19; எபி 10:3) பத்து மிருகஜீவன்கள் சர்வாங்க தகனபலிகளாகவும், (லேவி 23:18); இரண்டு மிருகஜீவன்கள் சமாதான பலிகளாகவும், (லேவி 23:19) செலுத்தப்படுகின்றன. இவை தவிர, அன்றாட பலிகளும், அந்தி சந்தி பலிகளும் செலுத்தப்படும்.

இரண்டு ஆட்டுக்குட்டிகள் அப்பம், மாவு, எண்ணெய், திராட்சரசம் ஆகியவற்றோடு அசைவாட்டும் பலியாகச் செலுத்தப்படுகிறது. (லேவி 23:18,20). யூதருடைய பாரம்பரியத்தின் பிரகாரம், இவ்விரண்டு ஆட்டுக்குட்டிகளும் பலிசெலுத்தப் படுவதற்கு முன்பாக உயிரோடு அசைவாட்டப்படும். பல சமயங்களில் ஆட்டுக்குட்டிகளைப் பலிசெலுத்திய பின்பு, ஆசாரியர்கள் அவற்றின் துண்டங்களை எடுத்து, தங்கள் கைகளில் பிடித்து அசைவாட்டுவார்கள் (யாத் 29:24-27).

அவைகளை ஆசாரியன் முதற்பலனாகிய அப்பத்தோடும் இரண்டு ஆட்டுக்குட்டிகளோடுங்கூட கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டக்கடவன்; கர்த்தருக்குப் பரிசுத்தமாகிய அவைகள் ஆசாரியனுடையவைகளாகும் (லேவி 23:20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அந்த நாள் இஸ்ரவேல் புத்திரருக்கு சபை கூடும் பரிசுத்தநாளாயிருக்கவேண்டும். இந்தப் பரிசுத்த நாளிலே இஸ்ரவேல் சபையார் எல்லோரும் ஒன்றாய்க்கூடி கர்த்தருடைய பரிசுத்த சமுகத்திலே பிரவேசிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை தரிசிக்க வந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் பரிசுத்த ஸ்தலத்திற்கு வரும்போது, அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்கிறார்கள்.

அந்த நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்த நாள் என்று கூறவேண்டும்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது; இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை *(லேவி 23:21)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சாதாரணமான ஓய்வுநாட்களோடு பெந்தெகொஸ்தே நாள் ஒரு விசேஷித்த ஓய்வுநாளாகச் சேர்க்கப்படுகிறது. இதனால் ஒவ்வொரு வருஷமும் ஓய்வுநாளின் கிழமை மாற்றமடையும்.

கர்த்தர் புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிப்பதற்கு ஏழுநாட்களை நியமனம் செய்திருக்கிறார். ஆனால் பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிப்பதற்கு கர்த்தர் ஒரு நாளை மாத்திரமே நியமனம் செய்திருக்கிறார். பெந்தெகொஸ்தே பண்டிகை காலம் இஸ்ரவேல் புத்திரருக்கு அறுவடையின் காலமாகும். இந்தக் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் தங்களுடைய வெள்ளாண்மையை சுறுசுறுப்பாய் அறுவடை செய்யவேண்டும். அவர்கள் ஒரு நாள் மாத்திரம் பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரித்தால் போதுமானது. ஒரே நாளில் பண்டிகையை ஆசரித்து முடித்து விட்டு, அவர்கள் தங்களுடைய வெள்ளாண்மையை அறுப்பதற்கு, தங்கள் நிலங்களுக்கு விரைந்து திரும்பிப் போகவேண்டும்.

பெந்தெகொஸ்தே பண்டிகையானது, கர்த்தர் சீனாய் மலையிலே மோசேக்கு தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்த நாளின் நினைவுகூருதலாகவும் இருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட ஐம்பதாவது நாளில், கர்த்தர் சீனாய் மலையிலே மோசேக்கு தம்முடைய கட்டளைகளைக் கொடுத்தார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே பெந்தெகொஸ்தே நாளின்போது, மேலறையில் ஒருமனப்பட்டு கூடியிருந்த அப்போஸ்தலர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். அப்போது பெந்தெகொஸ்தே பண்டிகையானது பரிபூரணமாயிற்று. இந்த நாளிலே விசுவாசத்தின் பிரமாணம் கொடுக்கப்பட்டது.

"பெந்தெகோஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" *(அப் 2:1-4).*

பெந்தெகொஸ்தே பண்டிகை பஸ்கா பண்டிகை ஆசரிக்கப்பட்டு ஐம்பது நாட்களுக்கு பின்பு வரும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு பஸ்கா ஆட்டுக்குட்டியாகயிருக்கிறார். கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையில் அறையப்பட்டு, அவர் நமக்காக தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த நாளுக்கு, ஐம்பது நாட்களுக்கு பின்பு, பெந்தெகொஸ்தே பண்டிகை நாள் வருகிறது. அந்த நாளிலே அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்.

பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேசத்தின் வெள்ளாண்மையை எவ்வாறு அறுக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் தேசத்தின் வெள்ளாண்மையை அறுக்கையில், வயலின் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும் அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிடவேண்டும் *(லேவி 23:22).*

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வெள்ளாண்மையை அறுப்பது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. வயலின் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும் அறுக்க வேண்டாம்.

2. சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்கக் கூடாது.

3. எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிடவேண்டும்.

பெந்தெகொஸ்தே பண்டிகை இஸ்ரவேல் புத்திரருக்கு சந்தோஷமான பண்டிகை. அந்தப் பண்டிகை நாளின்போது தரித்திரரும் சந்தோஷமாயிருக்கவேண்டும். தங்கள் நிலத்திலே அறுவடை செய்கிறவர்கள் தரித்திரரையும் நினைவுகூர்ந்து, அவர்களுக்கு உதாரத்துவமாய் உதவி செய்யவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி பெந்தெகொஸ்தே பண்டிகையின் பிரமாணத்தை சொல்லும்போது, "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல்" என்று சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொன்னதை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும். மோசே கர்த்தருடைய பண்டிகைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு தெரிவிக்கிறார் (லேவி 23:44).

பெந்தெகொஸ்தே பண்டிகை பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஓய்வுநாளுக்கு மறுநாள் முதற்கொண்டு எண்ணத்துவக்கி, ஏழுவாரங்கள் நிறைவேறின பின்பு நீங்கள் அசைவாட்டும் கதிர்க்கட்டைக் கொண்டு வாருங்கள் (லேவி 23:15)

2. ஏழாம் ஓய்வுநாளுக்கு மறுநாளாகிய ஐம்பதாம் நாள் பண்டிகை (லேவி 23:16).

3. ஐம்பதாம் நாள்மட்டும் எண்ணி, கர்த்தருக்குப் புதிய போஜனபலியைச் செலுத்த வேண்டும்.

4. மெல்லிய மாவிலே புளிப்பாகப் பாகம் பண்ணப்பட்ட அசைவாட்டும் காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்களை உங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டுவாருங்கள் (லேவி 23:17).

5. அப்பத்தோடேகூடக் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும் செலுத்த வேண்டும் (லேவி 23:18).

6. கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக அவைகளுக்கு அடுத்த போஜனபலியையும், பானபலிகளையும் செலுத்தவேண்டும்.

7. வெள்ளாடுகளில் ஒரு கடாவைப் பாவநிவாரணபலியாகவும், ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைச் சமாதான பலியாகவும் இடவேண்டும். (லேவி 23:19).

8. ஆசாரியன் முதற்பலனாகிய அப்பத்தோடும் இரண்டு ஆட்டுக்குட்டிகளோடுங்கூட கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டவேண்டும் (லேவி 23:20).

9. கர்த்தருக்குப் பரிசுத்தமாகிய அவைகள் ஆசாரியனுடையவைகளாகும்.

10. அந்த நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்த நாள் என்று கூறவேண்டும் (லேவி 23:21).

11. பரிசுத்த நாளிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

12. இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்ல வேண்டிய நித்திய கட்டளை.

ஓய்வுநாளுக்கு மறுநாள் என்பது ஆபிப் அல்லது நிசான் மாதம் பதினாறாம் தேதியைக் குறிக்கும். இது ஏப்ரல்மாதம் ஆகும் (லேவி 23:11,15). ஏழுவாரங்கள் என்பது முதற்கனிகளின் பண்டிகைக்கு 49 நாட்களுக்குப் பின்பு வரும் நாட்களாகும் (லேவி 23:6,11,15). ஓய்வுநாளைக் குறிப்பதற்கு வாரம் என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது (லேவி 25:8; மத் 28:1).

பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மறுபெயர்களின் விவரம் வருமாறு :

1. பெந்தெகொஸ்தே என்னும் நாள் (அப் 2:1; அப் 20:16)

2. அறுப்புக்கால பண்டிகை (யாத் 23:16)

3. வாரங்களின் பண்டிகை (யாத் 34:22; உபா 16:10)

4. முதற்பலன்களைச் செலுத்தும் பண்டிகை நாள் (எண் 28:26)

பெந்தெகொஸ்தே நாளில் செலுத்தப்படும் பலிகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டு பங்காகிய மெல்லிய மாவு.

2. ஏழு ஆட்டுக்குட்டிகள்

3. ஒரு காளை

4. இரண்டு ஆட்டுக்கடாக்கள்

5. வெள்ளாடுகளில் ஒரு கடா.

6. ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகள்

7. ஒவ்வொரு ஆட்டுக்குட்டியுடனும், ஒரு வெள்ளாடுகளில் ஒரு கடாவுடனும், ஒரு மரக்காலில் பத்தில் ஒரு பங்கு மெல்லிய மாவு. (எண் 15:3-5)

8. ஒவ்வொரு ஆட்டுக்குட்டியுடனும், ஒரு வெள்ளாடுகளில் ஒரு கடாவுடனும், காற்படி எண்ணெய்.

9. ஒவ்வொரு ஆட்டுக்குட்டியுடனும், ஒரு வெள்ளாடுகளில் ஒரு கடாவுடனும், பானபலியாக காற்படி திராட்சரசம்.

10. காளையோடு பத்தில் மூன்று பங்கான மெல்லிய மாவு. (எண் 15:8-10)

11. காளையோடு அரைப்படி எண்ணெய்.

12. காளையோடு பானபலியாக அரைப்படி திராட்சரசம்.

13. ஒவ்வொரு ஆட்டுக்கடாவுக்கும் பத்தில் இரண்டு பங்கான மெல்லிய மாவு. (எண் 15:6-7)

14. ஒவ்வொரு ஆட்டுக்கடாவுக்கும் ஒரு படியில் மூன்றில் ஒரு பங்காகிய எண்ணெய்

15. ஒவ்வொரு ஆட்டுக்கடாவுக்கும் பானபலியாக ஒரு படியில் மூன்றில் ஒரு பங்கு திராட்சரசம்.

எக்காளங்களின் பண்டிகை
லேவி 23:23-25

லேவி 23:23. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 23:24. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்களுக்கு ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காளச் சத்தத்தால் ஞாபகக்குறியாகக் கொண்டாடுகிற பண்டிகை என்கிற சபை கூடும் பரிசுத்த ஓய்வுநாளாய் இருப்பதாக.

லேவி 23:25. அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யாமல், கர்த்தருக்குத் தகனபலி செலுத்தவேண்டும் என்று சொல் என்றார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு எக்காளங்களின் பண்டிகையை நியமனம் செய்கிறார். இந்தப் பண்டிகை ஏழாம் மாதம் முதலாம் தேதியில் கொண்டாடப்படுகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்களுக்கு ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காளச் சத்தத்தால் ஞாபகக்குறியாகக் கொண்டாடுகிற பண்டிகை என்கிற சபை கூடும் பரிசுத்த ஓய்வுநாளாய் இருப்பதாக" (லேவி 23:23,24) என்று சொல்லுகிறார்.

யூதர்கள் ஏழாம் மாதத்தை திஸ்ரி என்று அழைத்தார்கள். பிற்காலத்தில் இது "ஏத்தானீம்" என்று அழைக்கப்பட்டது. (1இராஜா 8:2) யூதருடைய ஏழாம் மாதம் அக்டோபர் மாதத்திற்குச் சமமாக இருக்கும். (லேவி 23:24,27,34,39,41).

எக்காளங்களைப் பற்றிய விளக்கம் எண் 10:1-10 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலரின் பாளயம் அனைத்திலும் எக்காளச்சத்தம் தொனிக்கப்படாது. ஆசரிப்புக்கூடாரத்தில் பலிகள் செலுத்தப்படும்போது மட்டுமே எக்காளம் தொனிக்கப்படும்.

எக்காளங்களின் பண்டிகை எக்காள சத்தத்தால் ஞாபககுறியாக கொண்டாடுகிற பண்டிகையாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் மாதப்பிறப்பின்போது எக்காளங்களை ஊதுவார்கள். இது ஒவ்வொரு மாதமும் ஊதப்படும். "மாதப்பிறப்பிலும், நியமித்தகாலத்திலும், நம்முடைய பண்டிகைநாட்களிலும், எக்காளம் ஊதுங்கள்" (சங் 81:3).

ஏழாம் மாதத்தினுடைய மாதப்பிறப்பின்போது, அவர்கள் சாதாரணமாக எக்காளங்களை ஊதுவதைவிட மிகுந்த பரிசுத்தத்தோடு, மிகவும் விசேஷமாக ஊதுவார்கள். ஏழாம் மாதம் மாதப்பிறப்பின்போது அதிகாலையிலே சூரியன் உதிக்கும்போது எக்காளங்களை ஊத ஆரம்பிப்பார்கள். அந்த எக்காளங்கள் மாலையிலே சூரியன் அஸ்தமனமாகும் நேரம் வரையிலும் தொடர்ந்து ஊதப்படும்.

எக்காளங்களின் பண்டிகையானது ஞாபககுறியாக கொண்டாடப்படும் பண்டிகையாகயிருக்கிறது. கர்த்தர் சீனாய் மலையிலே மோசேயினிடத்தில் தம்முடைய கட்டளைகளைக் கொடுத்தபோது எக்காளங்கள் ஊதப்பட்டது. ஒருவேளை அந்த எக்காளத்திற்கு அடையாளமாக, எக்காளங்களின் பண்டிகையின்போது, எக்காள சத்தமானது ஞாபககுறியாக ஊதப்படுகிறது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கட்டளைகளை மறந்துவிடக்கூடாது.

எக்காளங்களின் பண்டிகைக்கு ஆவிக்குரிய முக்கியத்துவம் இருப்பதாகவும் யூதமார்க்கத்து வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். யூதருடைய மாதத்தின் ஆரம்பத்திலே எக்காளம் ஊதப்படுகிறது. அவர்களில் காணப்படுகிற ஆவிக்குரிய சோம்பல் தனத்தை உதறிவிட்டு, உற்சாகமாய் எழுந்திருப்பதற்கு எக்காள சத்தம் உதவி செய்யும். மேலும் அவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய நிலமையை ஆராய்ந்து பார்ப்பதற்கும், தங்களுடைய வழிகளை ஆராய்ந்து பார்ப்பதற்கும், தங்களிடத்தில் காணப்படும் தப்பிதங்களை திருத்திக்கொள்வதற்கும் எக்காள சத்தம் உதவியாயிருக்கும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

பாவநிவிர்த்தி நாளானது, எக்காளங்களின் பண்டிகைக்கு ஒன்பது நாட்களுக்கு பின்பு வருகிறது. ஏழாம் மாதம் பத்தாந்தேதி இஸ்ரவேல் புத்திரருக்கு பாவநிவிர்த்தி செய்யும் நாளும், சபை கூடும் பரிசுத்த நாளும் ஆகும். ஏழாம் மாதம் முதல் தேதியிலே எக்காளங்கள் ஊதப்படும்போது, இஸ்ரவேல் புத்திரர் அந்த மாதம் பத்தாந்தேதியிலே தங்களுக்கு பாவநிவிர்த்தி செய்யும் நாளுக்காக தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள். தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள்.

எக்காளங்களின் பண்டிகை சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு அடையாளமாயிருக்கிறது. சுவிசேஷ பிரசங்கத்தின் மூலமாக மனுஷருடைய ஆத்துமாக்களுக்கு சந்தோஷத்தின் தொனி முழங்கப்படுகிறது. அவர்கள் கர்த்தரை சேவிக்கவேண்டும் என்றும், அவர்கள் கர்த்தருக்காக ஆவிக்குரிய பண்டிகைகளை ஆசரிக்கவேண்டும் என்றும் சுவிசேஷ பிரசங்கத்தின் மூலமாக அவர்களுக்கு எடுத்து சொல்லப்படுகிறது.

எக்காளங்களின் பண்டிகை நாளிலே இஸ்ரவேல் புத்திரர் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யாமல், கர்த்தருக்குத் தகனபலி செலுத்தவேண்டும் (லேவி 23:25).

பலிகளில் எதைச் செலுத்த வேண்டும் என்று கூறப்படவில்லை. ஆனாலும் எண் 29:1-6 ஆகிய வசனங்களில் ஒரு இளங்காளை, ஒரு கடா, ஏழு ஆட்டுக்குட்டிகள், வெள்ளாடுகளில் ஒரு கடா, ஆகிய பத்து மிருகஜீவன்களும் அத்துடன் மற்ற பலிகளும் செலுத்தப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

எக்காளங்களின் பண்டிகை பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. உங்களுக்கு ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காளச் சத்தத்தால் ஞாபகக்குறியாகக் கொண்டாடுகிற பண்டிகை என்கிற சபை கூடும் பரிசுத்த ஒய்வுநாளாய் இருப்பதாக.

2. அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது. *(லேவி 23:25).*

3. அந்த நாளில் கர்த்தருக்குத் தகனபலி செலுத்தவேண்டும்.

பாவநிவர்த்தி செய்யும் நாளின் பண்டிகை லேவி 23:26-32

லேவி 23:26. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 23:27. அந்த ஏழாம் மாதம் பத்தாந்தேதி உங்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபைகூடும் பரிசுத்தநாளுமாயிருப்பதாக; அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள்.

லேவி 23:28. அந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும் பாவநிவாரண நாளாயிருக்கிறபடியால், அதிலே யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.

லேவி 23:29. அந்நாளிலே தன்னைத் தாழ்மைப்படுத்தாத எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்.

லேவி 23:30. அந்நாளிலே ஒரு ஆத்துமா யாதொரு வேலையைச் செய்தால், அந்த ஆத்துமாவை அதன் ஜனத்தின் நடுவிலே வைக்காமல் அழிப்பேன்.

லேவி 23:31. அதில் நீங்கள் எந்த வேலையும் செய்யாதிருப்பது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை.

லேவி 23:32. அது உங்களுக்கு விசேஷித்த ஒய்வுநாள்; அதில் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்த வேண்டும்; அந்த மாதத்தின் ஒன்பதாந்தேதி சாயங்காலம் துவக்கி, மறுநாள் சாயங்காலம்மட்டும் உங்கள் ஒய்வை ஆசரிக்கக்கடவீர்கள் என்றார்.

பாவநிவாரண நாளின் பிரமாணம் இங்கு மறுபடியுமாக சொல்லப்படுகிறது. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இது மிகவும் முக்கியமான பிரமாணமாகும். பாவநிவாரண நாள் ஜனங்களுடைய ஆத்துமாவோடு தொடர்புடையது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "அந்த ஏழாம் மாதம் பத்தாந்தேதி உங்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபைகூடும் பரிசுத்தநாளுமாயிருப்பதாக; அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள்" *(லேவி 23:26,27)* என்று சொல்லுகிறார்.

தகனபலியாக எதைச் செலுத்த வேண்டுமென்று இங்கு கூறப்படவில்லை. எண் 29:7-11 ஆகிய வசனங்களில் ஒரு இளங்காளை, ஒரு கடா, ஏழு ஆட்டுக்குட்டிகள், வெள்ளாடுகளில் ஒரு கடா ஆகியவற்றை மற்ற பலிகளோடு சேர்த்து பாவநிவாரண பலியாகச் செலுத்த வேண்டும். லேவி 16 ஆம் அதிகாரத்தில் பாவநிவாரண நாளில் செலுத்தப்பட வேண்டிய விசேஷித்த பலிகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

பாவநிவாரண நாளின்போது இஸ்ரவேல் புத்திரர் யாதொரு வேலையும் செய்யக்கூடாது. அந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும் பாவநிவாரண நாளாயிருக்கிறபடியால், அதிலே யாதொரு வேலையும் செய்யவேண்டாம் (லேவி 23:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலில் ஒவ்வொரு நாளும் பாவநிவிர்த்தி செய்வதற்காகப் பலிசெலுத்தப்படும். ஆனாலும் இந்த நாள் ஒரு விசேஷித்த நாள். வருஷத்தில் இந்த ஒரு நாளில் மட்டுமே பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, தனக்காகவும், எல்லா ஜனங்களுடைய எல்லாப் பாவங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்ய முடியும். (லேவி 23:28; லேவி 16:2-17; எபி 9:1-10).

பாவநிவாரண நாளின்போது, இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களை நினைவுகூர்ந்து, கர்த்தருடைய சமுகத்திலே மன்னிப்பு கேட்கவேண்டும். அவர்கள் பாவநிவாரண நாளில் உலகப்பிரகாரமான வேலைகளை செய்தால், அவர்கள் தங்கள் வேலைகளிலேயே கவனமாயிருப்பார்கள். தங்கள் பாவங்கள் நிவிர்த்திபண்ணப்படவேண்டும் என்பதை மறந்துவிடுவார்கள்.

பாவநிவாரண நாளானது, தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் தங்களுக்காக பாவநிவிர்த்தி செய்யப்படும் பாவநிவாரண நாளாகும். இது வேலை செய்கிற நாளல்ல. உலகப்பிரகாரமான கவலைகள், அன்றாட வேலைகளைப்பற்றிய கவலைகள் ஆகியவற்றையெல்லாம் மறந்துவிட்டு பாவநிவிர்த்தி செய்யப்படுவதில் இஸ்ரவேல் ஜனத்தார் கவனம் செலுத்தவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் பாவநிவாரண நாளிலே தங்கள் ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்தவேண்டும். "நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள்" (லேவி 23:27) என்றும், "அந்நாளிலே தன்னைத் தாழ்மைப்படுத்தாத எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்" (லேவி 23:29) என்றும், "அதில் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தவேண்டும்" (லேவி 23:32) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பாவநிவாரண நாளின்போது இஸ்ரவேல் புத்திரர் போஜனம்பண்ணாமல் உபவாசம்பண்ணி தங்கள் சரீரங்களையும் ஒடுக்கவேண்டும்.

அந்நாளிலே ஒரு ஆத்துமா யாதொரு வேலையைச் செய்தால், அந்த ஆத்துமாவை அதன் ஜனத்தின் நடுவிலே வைக்காமல் அழிப்பேன். அதில் நீங்கள் எந்த வேலையும் செய்யாதிருப்பது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை (லேவி 23:30,31) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாவநிவாரண நாள் இஸ்ரவேல் புத்திரருக்கு விசேஷித்த ஓய்வுநாளாயிருக்கிறது. அந்த நாளில் அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்துவதோடு, அந்த மாதத்தின் ஒன்பதாந்தேதி சாயங்காலம் துவக்கி, மறுநாள் சாயங்காலம்மட்டும் தங்கள் ஓய்வை ஆசரிக்கவேண்டும் (லேவி 23:32).

"உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்த வேண்டும்" என்னும் வாக்கியத்திற்கு உபவாசம் பண்ண வேண்டும் என்பது பொருளாகும் (சங் 35:13; சங் 69:10; ஏசா 58:1-6).

பாவநிவாரண நாள் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஏழாம் மாதம் பத்தாந்தேதி உங்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யும் நாள்.

2. அது உங்களுக்கு சபைகூடும் பரிசுத்தநாளாயிருக்க வேண்டும்.

3. பாவ நிவர்த்தி செய்யும் நாளில் நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப் படுத்துங்கள் (லேவி 23:27,32).

4. கர்த்தருக்குத் தகனபலி செலுத்த வேண்டும்.

5. பாவநிவிர்த்தி செய்யப்படும் பாவநிவாரண நாளாயிருக்கிறபடியால், அதிலே யாதொரு வேலையும் செய்யவேண்டாம் (லேவி 23:28,31).

6. அந்நாளிலே தன்னைத் தாழ்மைப்படுத்தாத எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் (லேவி 23:29).

7. அந்நாளிலே ஒரு ஆத்துமா யாதொரு வேலையைச் செய்தால், அந்த ஆத்துமாவை அதன் ஜனத்தின் நடுவிலே வைக்காமல் கர்த்தர் அழிப்பார் (லேவி 23:30).

8. இது உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை (லேவி 23:31).

9. அது உங்களுக்கு விசேஷித்த ஓய்வுநாள் (லேவி 23:32).

10. அந்த மாதத்தின் ஒன்பதாந்தேதி சாயங்காலம் துவக்கி, மறுநாள் சாயங்காலம்மட்டும் உங்கள் ஓய்வை ஆசரிக்கவேண்டும்.

கூடாரங்களின் பண்டிகை
லேவி 23:33-44

லேவி 23:33. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 23:34. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகையாயிருப்பதாக.

லேவி 23:35. முதலாம் நாள் சபைகூடும் பரிசுத்த நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

லேவி 23:36. ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள்; எட்டாம் நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்; அதிலே கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள்; அது ஆசரிக்கப்படும் நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.

லேவி 23:37. நீங்கள் கர்த்தருடைய ஓய்வுநாட்களில் செலுத்துவதும் தவிர, நீங்கள் கர்த்தருக்குப் படைக்கிற உங்கள் எல்லாக் காணிக்கைகளும் பொருத்தனைகளும் உற்சாகபலிகளும் தவிர,

லேவி 23:38. நீங்கள் அந்தந்த நாளுக்குத்தக்கதாய்க் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலி, போஜனபலி, இரத்தபலி, பானபலி முதலானவைகளைச் செலுத்தும்படி சபைகூடிவந்து, பரிசுத்தமாய் ஆசரிப்பதற்காக நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகைகள் இவைகளே.

லேவி 23:39. நிலத்தின் பலனை நீங்கள் சேர்த்துவைக்கும் ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் கர்த்தருக்குப் பண்டிகையை ஏழுநாள் ஆசரிக்கக்கடவீர்கள்; முதலாம் நாளிலும் ஓய்வு; எட்டாம் நாளிலும் ஓய்வு.

லேவி 23:40. முதல் நாளிலே அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும் பேரீச்சின் ஓலைகளையும் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருங்கள்.

லேவி 23:41. வருஷந்தோறும் ஏழுநாள் கர்த்தருக்கு இந்தப் பண்டிகையை ஆசரிக்கக்கடவீர்கள்; இது உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை; ஏழாம் மாதத்தில் அதை ஆசரிக்கவேண்டும்.

லேவி 23:42. நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினதை உங்கள் சந்ததியார் அறியும்படிக்கு,

லேவி 23:43. ஏழுநாள் கூடாரங்களில் குடியிருக்கக்கடவீர்கள்; இஸ்ரவேலில் பிறந்தவர்கள் எல்லாரும் கூடாரங்களில் வாசம் பண்ணவேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார்.

லேவி 23:44. அப்படியே மோசே கர்த்தருடைய பண்டிகைகளை இஸ்ரவேல் புத்திரருக்குத் தெரிவித்தான்.

இஸ்ரவேல் சபையாருக்கு மூன்று பண்டிகைகள் மிகவும் விசேஷமானது. அந்தப் பண்டிகைகளின்போது இஸ்ரவேல் ஜனத்தாரில் ஆண்மக்கள் எல்லோரும் பங்குபெறவேண்டும் என்பது கர்த்தருடைய பிரமாணம். அப்படிப்பட்ட மூன்று பிரதான பண்டிகைகளில் கூடாரங்களின் பண்டிகையும் ஒன்று.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகையாயிருப்பதாக" (லேவி 23:33,34) என்று சொல்லுகிறார்.

பஸ்கா பண்டிகை, புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஆகியவற்றைப் போலவே கூடாரங்களின் பண்டிகையும் பதினைந்தாம் தேதி ஆரம்பமாகிறது. இக்காலத்தில் எல்லாக் கனிகளும், திராட்சைப்பழங்களும், தானிய வகைகளும் அறுவடை செய்யப்பட்டிருக்கும். (யாத் 23:16).

பாவநிவாரண நாள் ஏழாம் மாதம் பத்தாந்தேதி ஆசரிக்கப்படுகிறது. கூடாரங்களின் பண்டிகை ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழு நாளளவும் ஆசரிக்கப்படுகிறது. பாவநிவாரண நாளுக்கு ஐந்து நாட்களுக்கு பின்பு, கூடாரங்களின் பண்டிகை ஆரம்பமாகிறது.

பாவநிவாரண நாளின்போது, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், அந்தப் பண்டிகையை ஆசரிக்க வேண்டும் என்னும் கட்டாயமில்லை. ஆனாலும் பக்தியுள்ள யூதர்கள், பாவநிவாரண நாளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கூடாரங்களின் பண்டிகை ஆரம்பமாவதற்கு முன்பாகவே கர்த்தருடைய சந்நிதியில் வந்து தங்களுடைய பாவங்களை நிவிர்த்தி செய்துகொள்வார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பாவநிவாரண நாளின்போது தங்களுடைய ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்துவார்கள். அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்தும்போது, கூடாரங்களின் பண்டிகையை சந்தோஷமாய் ஆசரிப்பதற்கு அவர்களை ஆயத்தம்பண்ணுகிறது.

நம்முடைய பாவங்களினிமித்தமாக நாம் எந்த அளவுக்கு அதிகமாக துக்கப்படுகிறோமோ, அந்த அளவுக்கு நமக்கு பரிசுத்த ஆவியானவரின் ஆறுதல் கிடைக்கும்.

கூடாரங்களின் பண்டிகை எட்டு நாட்களுக்கு ஆசரிக்கப்படுகிறது. ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழு நாளளவும் கூடாரப்பண்டிகை கர்த்தருக்கு ஆசரிக்கப்படுகிறது. இந்த எட்டு நாட்களில் முதல் நாளும் கடைசி நாளும் பரிசுத்த ஓய்வுநாட்களாக ஆசரிக்கப்படும். முதலாம் நாள் சபைகூடும் பரிசுத்த நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (லேவி 23:35) என்று கர்த்தர் சொல்லுகிறார். முதலாம் நாளிலும் எட்டாம் நாளிலும் ஓய்வு (லேவி 23:39).

பண்டிகையின் முதலாவது நாளில் தேவையில்லாத வேலைகளைச் செய்யக்கூடாது. பண்டிகைக் காலத்தில் தங்கியிருப்பதற்காக இஸ்ரவேல் புத்திரர்கள் கூடாரங்களைப் போடவேண்டும் (லேவி 23:39-40) கூடாரப்பண்டிகையின்போது, இஸ்ரவேல் ஜனத்தார் கூடாரங்களைப் போட்டு அதில் தங்கியிருக்க வேண்டும். கூடாரங்களைப் போடுவதும் ஒரு வேலைதான். ஆகையினால், ஓய்வுநாளில் எந்த வேலையும் செய்யக்கூடாது என்று கூறும் உபதேசம் தவறானது. அத்தியாவசியமான வேலைகளை ஓய்வுநாளில் செய்துகொள்ளலாம்.

முதலாம் நாளிலும் ஓய்வு; எட்டாம் நாளிலும் ஓய்வு. எட்டு நாட்களில் இரண்டு ஓய்வுநாட்கள் வருகிறது. ஆகையினால் எல்லா வருஷத்திலும் ஒரே கிழமையில் ஓய்வுநாள் வரும் என்று கூற இயலாது. ஒவ்வொரு வருஷமும் ஓய்வுநாளின் கிழமை மாற்றமடைந்திருக்கும் (லேவி 23:34,36,39).

இஸ்ரவேல் புத்திரர், கூடாரப்பண்டிகையின் முதல் நாளிலே அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும் பேரீச்சின் ஓலைகளையும் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து, தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருக்கவேண்டும் (லேவி 23:40).

முதல் நாள் என்பது எட்டு நாட்களில் முதலாவது ஓய்வுநாளாகும். இந்த நாளில் இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குக் கூடாரங்களைப் போடவேண்டும். (லேவி 23:39-40). முதல் நாளில் கூடாரம் போடும் வேலை நடைபெறுவதினால் இரண்டாம் நாளில்தான் கூடாரப்பண்டிகையின் காரியங்கள் நடைபெறுகின்றன. கூடாரங்களைப் போடும் முதல் ஓய்வுநாளுக்கும், கடைசி ஓய்வுநாளுக்கும் இடையில் ஆறு நாட்கள் உள்ளன (லேவி 23:36-39; எண் 29:35; நெகே 8:18).

தங்கும் கூடாரங்களில் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் விவரம் வருமாறு :

1. அலங்காரமான விருட்சங்களின் கனிகள்
2. பேரீச்சின் ஓலைகள்.
3. தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகள்.
4. ஆற்றலரிகள்.

இஸ்ரவேல் புத்திரர் வருஷந்தோறும் ஏழுநாள் கர்த்தருக்கு இந்தப் பண்டிகையை ஆசரிக்க வேண்டும். ஏழுநாட்கள் என்பது கூடாரப் பண்டிகையின் இரண்டாம் நாளில் ஆரம்பமாகி, எட்டாம் நாளில் முடிவு பெற்றிருக்கலாம். லேவி 23:41-42 ஆகிய வசனங்களின் பிரகாரம், இஸ்ரவேல் புத்திரர்கள் ஏழுநாட்களுக்குக் கூடாரங்களில் குடியிருக்க வேண்டும். முதல் நாள் முழுவதும் அவர்கள் கூடாரம் போடும் வேலைகளைச் செய்வதினால் மீதமுள்ள ஏழுநாட்களில் அவர்கள் கூடாரங்களில் தங்கியிருக்க வேண்டும்.

"நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினதை உங்கள் சந்ததியார் அறியும்படிக்கு, ஏழுநாள் கூடாரங்களில் குடியிருக்கக்கடவீர்கள்; இஸ்ரவேலில் பிறந்தவர்கள் எல்லாரும் கூடாரங்களில் வாசம் பண்ணவேண்டும்" (லேவி 23:42,43) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து கர்த்தர் புறப்படப்பண்ணினபோது, அவர் அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப் பண்ணினார். இதை அவர்களுடைய சந்ததியார் அறிய வேண்டும். இஸ்ரவேல் புத்திரரின் அனுபவங்களை நினைவுகூரும் விதமாக கூடாரப்பண்டிகை ஆசரிக்கப்படுகிறது. (சக 14:16-21).

கூடாரப்பண்டிகையின்போது யூதர்கள் கர்த்தரைத் துதித்து கீதங்களை பாடி, சந்தோஷமாய் நடனமாடுவது வழக்கம். கூடாரப்பண்டிகை காலத்தின்போது யூதர்கள் பாரம்பரிய இசைக்கருவிகளை இசைத்து கர்த்தரை துதித்துப் பாடுவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்பட பண்ணினபோது அவர்களை கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினார். தாங்கள் கூடாரங்களில் குடியிருந்ததை நினைவுகூரும் வண்ணமாக இஸ்ரவேல் ஜனத்தார் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கிறார்கள்.

கூடாரப்பண்டிகையானது சேர்ப்புக்கால பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. "நீ வயலில் விதைத்த உன் பயிர்வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக" (யாத் 23:16).

இஸ்ரவேல் புத்திரர் கூடாரங்களின் பண்டிகையை எட்டு நாட்களுக்கு ஆசரிக்கவேண்டும். முதலாம் நாள் சபைகூடும் பரிசுத்த நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (லேவி 23:35).

அவர்கள் ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலி செலுத்த வேண்டும்; எட்டாம் நாள் அவர்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்; அதிலே அவர்கள் கர்த்தருக்குத் தகனபலி செலுத்த வேண்டும்; அது ஆசரிக்கப்படும் நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது (லேவி 23:36).

பண்டிகையின் ஒவ்வொரு நாளிலும் தகனபலியாக எத்தனை மிருகஜீவன்கள் பலியிடப்பட்டன என்று கூறப்படவில்லை. எண் 29:12-40 ஆகிய வசனங்களில் ஒரு அட்டவணை கொடுக்கப் பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் 199 மிருகஜீவன்களை கூடாரப் பண்டிகையில் பலியாகச் செலுத்தினார்கள். அவற்றின் விவரமாவது:

1. காளைகள் - 71
2. ஆட்டுக்கடாக்கள் - 15
3. ஆட்டுக்குட்டிகள் - 105
4. வெள்ளாடுகளின் கடாக்கள் - 8

எட்டாம் நாள் அவர்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள் கூடாரப்பண்டிகை ஏழு நாட்களுக்கு ஆசரிக்கப்படும். இது அதோடு சேர்க்கப்படும் கூடுதலான விசேஷித்த நாள். இது ஒரு விசேஷித்த ஓய்வுநாள். சபை கூடிவரும் நாள். (லேவி 23:36,39; எண் 29:35) இந்தப் பண்டிகையும், அந்தெந்த வருஷங்களில் எல்லாப் பண்டிகைகளும் இந்த எட்டாம் நாளில் முடிவு பெறுகிறது. இந்த நாளில் ஆசாரியர்கள் விசேஷித்த பலிகளைச் செலுத்துவார்கள். (எண் 29:12-38). இயேசுகிறிஸ்து இந்த நாளில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை வாக்குப்பண்ணினார் (யோவான் 7:37-39).

பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாள் என்பது பண்டிகையின் எட்டாவது நாள் ஆகும். இந்த நாளில் இஸ்ரவேல் ஜனங்களுக்காக பலிகள் செலுத்தப்படும். முதல் ஏழு நாட்களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் மற்ற தேசங்களுக்காகப் பலிகளைச் செலுத்துவார்கள் (லேவி 23:34-36).

எட்டாவது நாளில் இஸ்ரவேல் ஜனங்களுக்காகப் பலிகள் செலுத்தப் படுவதினால் தேவாலயத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஏராளமானோர் கூடி வந்திருப்பார்கள். இந்தப் பிரதான நாளில் ஆசாரியரில் ஒருவர் சீலோவாம் குளத்திலிருந்து பொற்குடத்தில் தண்ணீர் கொண்டு வருவார். காலை வேளையிலே, பலி செலுத்தப்படும் பொழுது, பலிபீடத்தின்மீது சீலோவாம் தண்ணீரைத் திராட்சரசத்தோடு கலந்து, ஊற்றுவார். அப்போது இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் சந்தோஷமாகக் கர்த்தரைப் பாடித் துதிப்பார்கள்.

இப்பேர்ப்பட்ட சமயத்தில்தான் இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தைக் கூறுகிறார். இது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்கும் தீர்க்கதரிசனம். ஒவ்வொரு விசுவாசிக்கும் இந்த ஆசீர்வாதம் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருக்கிறது. பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (யோவான் 7:37-39).

இஸ்ரவேல் புத்திரர் யாதொரு வேலையும் செய்யக்கூடாத நாட்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. வாரஓய்வுநாட்கள். (லேவி 23:3; யாத் 20:8-11)
2. விசேஷித்த ஓய்வுநாட்களும், உபவாச நாட்களும் (லேவி 23:6-8,34-36)
3. பெந்தெகொஸ்தே நாள். (லேவி 23:21)
4. எக்காளங்களின் பண்டிகை நாள். (லேவி 23:25)
5. மகா பாவநிவாரண பண்டிகை நாள் (லேவி 23:27-32)

"நீங்கள் கர்த்தருடைய ஓய்வுநாட்களில் செலுத்துவதும் தவிர, நீங்கள் கர்த்தருக்குப் படைக்கிற உங்கள் எல்லாக் காணிக்கைகளும் பொருத்தனைகளும் உற்சாகபலிகளும் தவிர, நீங்கள் அந்தந்த நாளுக்குத்தக்கதாய்க் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலி, போஜனபலி, இரத்தபலி, பானபலி முதலானவைகளைச் செலுத்தும்படி சபைகூடிவந்து, பரிசுத்தமாய் ஆசரிப்பதற்காக நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகைகள் இவைகளே" *(லேவி 23:37,38)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கவேண்டிய காலத்தையும் கர்த்தர் தெளிவுபடுத்துகிறார். "நிலத்தின் பலனை நீங்கள் சேர்த்துவைக்கும் ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் கர்த்தருக்குப் பண்டிகையை ஏழுநாள் ஆசரிக்கக்கடவீர்கள்; முதலாம் நாளிலும் ஓய்வு; எட்டாம் நாளிலும் ஓய்வு" *(லேவி 23:39)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் பண்டிகை நாட்களிலே கர்த்தருக்கு காணிக்கைகளையும், பொருத்தனைகளையும் உற்சாக பலிகளையும் செலுத்தவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஏராளமான பண்டிகைகளை நியமனம் செய்யவில்லை. கர்த்தர் ஒரு சில குறிப்பிட்ட பண்டிகைகளை மாத்திரமே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நியமனம் செய்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பண்டிகை நாட்களிலே உற்சாக பலிகளை தாராளமாய் செலுத்தவேண்டும்.

கர்த்தருக்கு பலிகளை செலுத்துவது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பாரமானதாகவோ, தங்களால் தாங்க முடியாத அளவுக்கு அதிக கிரயம் செலுத்தக்கூடியதாகவோ இருக்காதவாறு கர்த்தர் பார்த்துக்கொள்கிறார். கர்த்தருடைய நியமனம் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமானது.

கர்த்தருடைய பண்டிகைகள் அனைத்திற்கும் ஆவிக்குரிய முக்கியத்துவம் உள்ளது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு மறுபடியும் வந்து தம்முடைய ஜனங்களையெல்லாம் சேர்த்துக்கொள்வார். அது கடைசியான சேர்ப்புக்கால பண்டிகையாகயிருக்கும். அந்தப் பண்டிகை நாள் விசுவாசிகள் அனைவருக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் நாளாகயிருக்கும்.

கூடாரங்களின் பண்டிகையைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப் பண்டிகையாயிருப்பதாக *(லேவி 23:34)*.

2. முதலாம் நாள் சபைகூடும் பரிசுத்த நாள் *(லேவி 23:35)*.

3. அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது.

4. ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலி செலுத்தவேண்டும். *(லேவி 23:36)*.

5. எட்டாம் நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்.

6. கர்த்தருக்குத் தகனபலி செலுத்த வேண்டும்.

7. எட்டாம் நாளாகிய பரிசுத்த நாளிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேனண்டாம்.

8. முதலாம் நாளிலும் ஓய்வு; எட்டாம் நாளிலும் ஓய்வு *(லேவி 23:39)*.

9. ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் கர்த்தருக்குப் பண்டிகையை ஏழுநாள் ஆசரிக்க வேண்டும். அந்த ஏழுநாள் கூடாரங்களில் குடியிருக்கவேண்டும். *(லேவி 23:40-42)*.

10. உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருங்கள் *(லேவி 23:40-41)*.

11. இது உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை *(லேவி 23:41-43)*.

24 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் குத்துவிளக்கையும், பரிசுத்தமான மேஜையையும் பற்றிய கர்த்தருடைய பிரமாணம் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது (லேவி 24:1-9).

தேவதூஷணத்திற்கு விரோதமான பிரமாணம். தேவதூஷணம் சொன்னவன் காவல் படுத்தப்பட்டு, குற்றம் விசாரிக்கப்பட்டு, அவனை குற்றவாளி என்று தீர்த்து சபையார் எல்லோரும் அவனைக் கல்லெறியவேண்டும் (லேவி 24:10-14,23).

கர்த்தர் தேவனை தூஷிக்கிறவனுக்கு விரோதமாக தம்முடைய பிரமாணத்தை உறுதிபண்ணுகிறார் (லேவி 24:15,16). கர்த்தர் சொல்லும் மேலும் சில பிரமாணங்கள் (லேவி 24:17-22).

குத்துவிளக்கு
லேவி 24:1-4

லேவி 24:1. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 24:2. குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும்படி அதற்காக இடித்துப்பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை இஸ்ரவேல் புத்திரர் உன்னிடத்தில் கொண்டுவரும்படி அவர்களுக்குக் கட்டளையிடு.

லேவி 24:3. ஆசரிப்புக் கூடாரத்தில் சாட்சிசந்நிதியின் திரைக்கு வெளிப்புறமாக ஆரோன் அதை எப்பொழுதும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம்மட்டும் கர்த்தருடைய சந்நிதியில் எரியும்படி ஏற்றக்கடவன்; இது உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை.

லேவி 24:4. அவன் எப்பொழுதும் கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான குத்துவிளக்கின்மேல் இருக்கிற விளக்குகளை எரியவைக்கக்கடவன்.

கர்த்தருடைய ஆலயத்தில் குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கவேண்டும். அதற்காக இஸ்ரவேல் புத்திரர் இடித்து பிழிந்த எண்ணெயை கொண்டு வரவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும்படி அதற்காக இடித்துப்பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை இஸ்ரவேல் புத்திரர் உன்னிடத்தில் கொண்டுவரும்படி அவர்களுக்குக் கட்டளையிடு" (லேவி 24:1,2) என்று சொல்லுகிறார்.

குத்துவிளக்கில் இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. இந்த எண்ணெய் மிகவும் சுத்தமானது. ஒருவேளை குத்துவிளக்கில் பயன்படுத்தப்படும் தெளிவான எண்ணெய், இரண்டுமுறை இடித்து பிழிந்ததாகயிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய சபைக்கு எரிகிற குத்துவிளக்கைப்போல இருக்கிறார்கள். கர்த்தருடைய ஆலயத்திலே குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்களும் சபையிலே எப்பொழுதும் எரிந்து கொண்டு, பிரகாசமான வெளிச்சத்தைக் கொடுக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரே குத்துவிளக்குக்கு எண்ணெயைக் கொண்டு வருகிறார்கள். அதுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்திலே, சபையின் விசுவாசிகளே, ஊழியக்காரர்களை பராமரிக்கவேண்டும்.

விளக்கிலே போதுமான அளவு எண்ணெய் ஊற்றப்படவில்லையென்றால் அந்தக் குத்துவிளக்கு பிரகாசமாக எரியாது. அதுபோலவே ஊழியக்காரர்களை நல்ல முறையில் பராமரிக்கவில்லையென்றால் அவர்களாலும் சரியாக ஊழியம் செய்ய முடியாது.

கர்த்தர் குத்து விளக்கைப்பற்றிய பிரமாணத்தில் ஆசாரியனுக்கு பொறுப்பு கொடுப்பதுபோல, இஸ்ரவேல் புத்திரருக்கும் பொறுப்பு கொடுக்கிறார். அதுபோலவே புதிய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் பொறுப்பு ஊழியக்காரர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆசாரியர்கள் குத்துவிளக்குக்கு எண்ணெய் ஊற்றி, திரிகளை ஏற்றி, அந்த விளக்கை சாயங்காலம் தொடங்கி விடியற்காலம் மட்டும், கர்த்தருடைய சந்நிதியில் எரியும்படி ஏற்றவேண்டும். விளக்கு அணைந்துபோகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். குத்துவிளக்கை சுத்தம்பண்ணுவது, அது எப்பொழுதும் எரிவதற்கு தேவையான எண்ணெயை அதிலே ஊற்றுவது ஆகியவையெல்லாம் ஆசாரியருடைய பணிவிடைகளாகும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆசரிப்புக் கூடாரத்தில் சாட்சி சந்நிதியின் திரைக்கு வெளிப்புறமாக ஆரோன் அதை எப்பொழுதும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம்மட்டும் கர்த்தருடைய சந்நிதியில் எரியும்படி ஏற்றக்கடவன்; இது உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை. அவன் எப்பொழுதும் கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான குத்துவிளக்கின்மேல் இருக்கிற விளக்குகளை எரியவைக்கக்கடவன்" *(லேவி 24:3,4)* என்று சொல்லுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஜீவவார்த்தையை பிரகாசமாக எரியச்செய்யவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் ஜீவவார்த்தையாகயிருக்கிறது. ஊழியக்காரர்கள் புதிய விளக்குகளை ஏற்றக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் மாத்திரமே போதுமானது.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சுவிசேஷ வார்த்தையை ஜனங்களுக்கு பிரசங்கம்பண்ணவேண்டும். அவர்கள் வார்த்தைக்கு வியாக்கியானம் சொல்லி ஜனங்களுக்கு சத்தியத்தை தெளிவுபடுத்தவேண்டும். அப்போதுதான் சுவிசேஷத்தின் விளக்கு பிரகாசமாகவும், தெளிவாகவும் எரியும். அது அணைந்துபோகாமலிருக்கும்.

பரிசுத்தமான மேஜை
லேவி 24:5-9

லேவி 24:5. அன்றியும் நீ மெல்லிய மாவை எடுத்து, அதைப் பன்னிரண்டு அப்பங்களாகச் சுடுவாயாக; ஒவ்வொரு அப்பம் மரக்காலிலே பத்தில் இரண்டுபங்கு மாவினால் செய்யப்படவேண்டும்.

லேவி 24:6. அவைகளை நீ கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான மேஜையின்மேல் இரண்டு அடுக்காக, ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு அப்பம் இருக்கும்படியாக வைத்து,

லேவி 24:7. ஒவ்வொரு அடுக்கினிடத்தில் சுத்தமான தூபவர்க்கம் போடக்கடவாய்; அது அப்பத்தோடிருந்து, ஞாபகக்குறியாகக் கர்த்தருக்கேற்ற தகனபலியாயிருக்கும்.

லேவி 24:8. அப்பத்தை நித்திய உடன்படிக்கையாக இஸ்ரவேல் புத்திரர் கையிலே வாங்கி, ஓய்வுநாள்தோறும் கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கக்கடவன்.

லேவி 24:9. அது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; அதைப் பரிசுத்த இடத்திலே புசிக்கக்கடவர்கள்; நித்திய கட்டளையாக கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளில் அது அவனுக்கு மகா பரிசுத்தமாயிருக்கும் என்றார்.

கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான மேஜை எப்பொழுதும் விரிக்கப்பட்டிருக்க வேண்டும். கர்த்தர் ஏற்கெனவே பரிசுத்தமான மேஜையைப்பற்றி தம்முடைய பிரமாணத்தை சொல்லியிருக்கிறார். "மேஜையின்மேல் நித்தமும் என் சந்நிதியில் சமுகத்தப்பங்களை வைக்கக்கடவாய்" *(யாத் 25:30)*.

இஸ்ரவேல் புத்திரர் பன்னிரண்டு கோத்திரங்களாகயிருக்கிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒவ்வொரு அப்பம் வீதமாக, பரிசுத்த மேஜையின்மேல் பன்னிரண்டு அப்பங்கள் வைக்கப்பட வேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ மெல்லிய மாவை எடுத்து, அதைப் பன்னிரண்டு அப்பங்களாகச் சுடுவாயாக; ஒவ்வொரு அப்பம் மரக்காலிலே பத்தில் இரண்டுபங்கு மாவினால் செய்யப்படவேண்டும்" (லேவி 24:5) என்றும்,

"அவைகளை நீ கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான மேஜையின்மேல் இரண்டு அடுக்காக, ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு அப்பம் இருக்கும்படியாக வைக்கவேண்டும்" (லேவி 24:6) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் சரித்திரத்திலே, சமஸ்த இஸ்ரவேலாகயிருந்த தேசம், வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டாகப் பிரிந்தது. இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் தாவீதின் வீட்டாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, வடக்கு இஸ்ரவேல் தேசமாக பிரிந்துபோனார்கள்.

கர்த்தருடைய ஆலயம் தெற்கு யூதாதேசத்திலே இருந்தது. அந்த தேசத்திலே இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்தார் மாத்திரமே இருந்தார்கள். சமஸ்த இஸ்ரவேல் தேசம், வடக்கு, தெற்கு என்று இரண்டு தேசங்களாக பிரிந்த பின்பும், கர்த்தருடைய சந்நிதியில் பரிசுத்தமான மேஜையின்மேல் பன்னிரண்டு அப்பங்கள் வைக்கப்பட்டிருந்தது.

"அவர்கள் தினந்தோறும் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளையும் சுகந்த வாசனையான தூபத்தையும் செலுத்தி, காலையிலும் மாலையிலும் பரிசுத்தமான மேஜையின்மேல் சமுகத்தப்பங்களை அடுக்கிவைக்கிறதையும், பொன் குத்துவிளக்கையும் அதின் விளக்குகளைச் சாயங்காலந்தோறும் ஏற்றுகிறதையும் விசாரிக்கிறார்கள்; நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தரின் காவலைக் காக்கிறோம்; நீங்களோ அவரை விட்டு விலகினீர்கள்" (2நாளா 13:11).

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் கலகம்பண்ணி வடக்கு இஸ்ரவேல் தேசமாக பிரிந்துபோனாலும், அவர்களில் பக்தியுள்ளவர்கள் சிலர் தெற்கு யூதாதேசத்திலேயே தங்கினார்கள். எருசலேமிலே தேவாலயம் இருப்பதினால், அவர்கள் வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கு போகாமல், தெற்கு தேசத்திலேயே தங்கியிருக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்து அவரைத் தொழுதுகொண்டார்கள்.

பத்துக்கோத்திரத்தாரில், தெற்கு தேசத்திலே தங்கியிருக்கிற மீதமான ஜனங்களை ஆசீர்வதிக்கும் வண்ணமாக, தம்முடைய சந்நிதியில், பரிசுத்தமான மேஜையின்மேல், அவர்களுக்கும் அப்பங்களை வைக்குமாறு கர்த்தர் கட்டளையிடுகிறார்.

பரிசுத்தமான மேஜையின்மேல் பன்னிரண்டு அப்பங்கள் வைக்கப்படுகிறது. அவை இரண்டு அடுக்காக, ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு அப்பம் இருக்கும்படியாக வைக்கப்படுகிறது. ஒவ்வொரு அடுக்கினிடத்தில் சுத்தமான தூபவர்க்கம் போடப்படுகிறது. தூபவர்க்கம் பொற்பீடத்தின்மேல் போடப்படும்.

பரிசுத்தமான மேஜையின்மேல் வைக்கப்பட்ட அப்பம் அகற்றப்படும்போது, அவை ஆசாரியருக்கு கொடுக்கப்படும். அந்த அப்பம் ஆரோனையும் அவருடைய குமாரரையும் சேரும். அவர்கள் அந்த அப்பங்களை பரிசுத்த இடத்திலே புசிக்கவேண்டும். அப்பொழுது பொன்பலிபீடத்தின்மேல் தூபவர்க்கம் போடப்படும். இந்த தூபவர்க்கம் பரிசுத்த அப்பங்களுக்கு பதிலாக, ஞாபககுறியாயிருக்கும். அது அப்பத்தோடிருந்து ஞாபககுறியாக, கர்த்தருக்கேற்ற தகனபலியாயிருக்கும் (லேவி 24:7).

ஒவ்வொரு ஓய்வுநாளிலும், பரிசுத்தமான மேஜையின்மேல் வைக்கப்பட்டிருந்த அப்பங்கள் எடுக்கப்பட்டு, அதன்மேல் புதிய அப்பங்கள் அடுக்கி வைக்கப்படும்.

அப்பத்தை இஸ்ரவேல் புத்திரர் கையிலே நித்திய உடன்படிக்கையாக வாங்கவேண்டும். அது ஒய்வுநாள்தோறும் கர்த்தருடைய சந்நிதியில் அடுக்கிவைக்கப்பட வேண்டும் (லேவி 24:8).

பரிசுத்தமான மேஜையின்மேல் அடுக்கி வைக்கப்படும் அப்பம் ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; அதைப் பரிசுத்த இடத்திலே புசிக்கக்கடவர்கள்; நித்திய கட்டளையாக கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளில் அது அவனுக்கு மகா பரிசுத்தமாயிருக்கும் (லேவி 24:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பரிசுத்தமான மேஜையின்மேல் ஒய்வுநாள் தோறும் புதிய அப்பம் அடுக்கி வைக்கப்படுகிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஒவ்வொரு ஒய்வுநாளிலும், கர்த்தருடைய செய்தியை பிரசங்கம்பண்ணும்போது, சபையாருக்கு புதிய அப்பங்களை பிட்டுக்கொடுக்கவேண்டும். ஒரே செய்தியையே திரும்ப திரும்ப பிரசங்கம்பண்ணாமல், புதிய செய்தியை பிரசங்கம்பண்ணவேண்டும்.

ஊழியக்காரர்கள் சுவிசேஷ வார்த்தைக்கு வியாக்கியானங்களையும் விளக்கங்களையும் சொல்லவேண்டும். அப்பத்தை ஆயத்தம்பண்ணுவதுபோல, ஊழியக்காரர்கள் பிரசங்கச்செய்தியை ஆயத்தம்பண்ணவேண்டும். வேதவசனங்களை நன்றாய் வாசித்து, அதன் சத்தியத்தை கருத்தாய் தியானம்பண்ண வேண்டும். அப்போதுதான் ஊழியக்காரர்களால் சபையின் விசுவாசிகளுக்கு புதிய அப்பத்தைப் படைக்க முடியும்.

"நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது" (2தீமோ 4:1).

"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு" (2தீமோ 4:2).

ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும் (2தீமோ 4:3,4).

நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று (2தீமோ 4:5).

பன்னிரண்டு அப்பங்களும் இரண்டு அடுக்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அடுக்கிலும் ஆறு அப்பங்கள் ஒன்றின்மீது ஒன்றாக அடுக்கப்பட்டிருக்கிறது.

ஒய்வுநாள்தோறும் சமுகத்தப்பங்கள் மாற்றப்படும். அகற்றப்படும் அப்பங்கள் ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; அவர்கள் அதைப் பரிசுத்த இடத்திலே புசிக்கவேண்டும். கர்த்தருக்கு இடப்படும் தகனபலிகளில் அது அவனுக்கு மகா பரிசுத்தமாயிருக்கும் (லேவி 24:8-9).

விளக்குகள் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்க வேண்டும். அதுபோலவே தேவனுடைய சமுகத்தில் மேஜையின்மீது அப்பங்கள் எப்பொழுதும் இருக்க வேண்டும். (லேவி 24:2,3,4,8-9). இது நித்திய உடன்படிக்கை.

தேவதூஷணம்
லேவி 24:10-16

லேவி 24:10. அக்காலத்திலே இஸ்ரவேல் ஜாதியான ஸ்திரீக்கும் எகிப்திய புருஷனுக்கும் பிறந்த புத்திரனாகிய ஒருவன் இஸ்ரவேல் புத்திரரோடே கூடப் புறப்பட்டு வந்திருந்தான்; இவனும் இஸ்ரவேலனாகிய ஒரு மனிதனும் பாளயத்திலே சண்டைபண்ணினார்கள்.

லேவி 24:11. அப்பொழுது இஸ்ரவேல் ஜாதியான அந்த ஸ்திரீயின் மகன் கர்த்தரின் நாமத்தை நிந்தித்துத் தூஷித்தான். அவனை மோசேயினிடத்தில் கொண்டு வந்தார்கள். அவன் தாயின்பேர் செலோமித்; அவள் தாண் கோத்திரத்தானாகிய திப்ரியின் குமாரத்தி.

லேவி 24:12. கர்த்தரின் வாக்கினாலே தங்களுக்கு உத்தரவு வருமட்டும், அவனைக் காவல்படுத்தினார்கள்.

லேவி 24:13. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 24:14. தூஷித்தவனைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோ; கேட்டவர்கள் எல்லாரும் தங்கள் கைகளை அவன் தலையின்மேல் வைப்பார்களாக; பின்பு சபையார் எல்லாரும் அவனைக் கல்லெறியக்கடவர்கள்.

லேவி 24:15. மேலும் நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: எவனாகிலும் தன் தேவனைத் தூஷித்தால், அவன் தன் பாவத்தைச் சுமப்பான்.

லேவி 24:16. கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் கொலைசெய்யப்பட வேண்டும்; சபையார் எல்லாரும் அவனைக் கல்லெறியவேண்டும்; பரதேசியானாலும் சுதேசியானாலும் கர்த்தரின் நாமத்தைத் தூஷிக்கிறவன் கொலைசெய்யப்பட வேண்டும்.

மனுஷருடைய தீயபழக்க வழக்கங்களினால் நல்ல சட்டங்கள் இயற்றப்படுகிறது. ஒருவன் குற்றம் செய்வதினால், அந்தக் குற்றத்திற்கு விரோதமான சட்டம் இயற்றப்படுகிறது.

இந்த வசனப்பகுதியில் ஒருவன் கர்த்தரின் நாமத்தை நிந்தித்து தூஷிக்கிறான். இவனுடைய பெயர் சொல்லப்படவில்லை. ஆனாலும் இவன் செய்த தப்பிதத்தினால், தேவனுடைய நாமத்தை நிந்தித்து தூஷிப்பதற்கு விரோதமான பிரமாணத்தை கர்த்தர் சொல்லுகிறார்.

தேவனுடைய நாமத்தை நிந்தித்து தூஷித்தவனுடைய தாயார் இஸ்ரவேல் ஜாதியை சேர்ந்தவள். அவளுடைய பெயர் செலோமித். அவள் தாண் கோத்திரத்தானாகிய திப்ரியின் குமாரத்தி. தேவனை தூஷித்தவனுடைய தந்தை எகிப்து தேசத்தை சேர்ந்தவன்.

அக்காலத்திலே இஸ்ரவேல் ஜாதியான ஸ்திரீக்கும் எகிப்திய புருஷனுக்கும் பிறந்த புத்திரனாகிய ஒருவன் இஸ்ரவேல் புத்திரரோடேகூடப் புறப்பட்டு வந்திருந்தான்; இவனும் இஸ்ரவேலனாகிய ஒரு மனிதனும் பாளயத்திலே சண்டைபண்ணுகிறார்கள் (லேவி 24:10).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டபோது, அவர்களுக்குள் கலப்பு திருமணம் செய்து கொண்டவர்களும் இருந்தார்கள்(யாத் 12:38; எண் 11:4) மோசேயும் மீதியானிய ஸ்திரீயைத் திருமணம் செய்திருந்தார் (யாத் 3:1; எண் 12:1). சிறையிருப்பிற்குப் பின்பு, புறஜாதி விவாகம் பண்ணியவர்கள் இஸ்ரவேல் கோத்திரத்திலிருந்து வேறுபிரிக்கப்பட்டார்கள். (நெகே 13:3).

வனாந்தரத்தில் இவர்கள் சண்டைபண்ணிக்கொண்டிருந்ததுபோல, எகிப்திலே இரண்டு இஸ்ரவேலர்கள் சண்டைபண்ணிக்கொண்டிருந்தார்கள்

(யாத் 2:11-13).

அப்பொழுது இஸ்ரவேல் ஜாதியான அந்த ஸ்திரீயின் மகன் கர்த்தரின் நாமத்தை நிந்தித்துத் தூஷிக்கிறான். இஸ்ரவேல் புத்திரர் அவனை மோசேயினிடத்தில் கொண்டு வருகிறார்கள். அவன் தாயின்பேர் செலோமித்; அவள் தாண் கோத்திரத்தானாகிய திப்ரியின் குமாரத்தி (லேவி 24:11).

கர்த்தரின் நாமத்தைத் தூஷித்த மனுஷன் இஸ்ரவேலனாகிய ஒருவனோடு சண்டை போடுகிறான். இந்த சண்டைக்கான காரணத்தை தெளிவுபடுத்தும் வண்ணமாக, அவனுடைய பெற்றோரின் பூர்வீகத்தைப்பற்றி இந்தவசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த மனுஷனுடைய தாயார் தாண் கோத்திரத்தைச் சேர்ந்தவள். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருக்கிற போது, ஒவ்வொரு கோத்திரத்தாரும் அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற இடங்களிலே பாளயம் போடுகிறார்கள். இந்த மனுஷன், தன் தாயாரின் கூடாரத்திற்கு அருகாமையில், தாண் கோத்திரத்தார் கூடாரம் போட்டிருக்கிற இடத்தில், தன்னுடைய கூடாரத்தைப் போட முயற்சிபண்ணுகிறான்.

அதை தாண் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் தடைபண்ணுகிறார்கள். அவனுடைய தந்தை எகிப்தியனாகயிருப்பதினால், அவனுக்கு தாண் கோத்திரத்தார் மத்தியிலே கூடாரம் போட அனுமதியில்லை என்று சொல்லுகிறார்கள். இதனால் இந்த மனுஷனும், தாண் கோத்திரத்தைச் சேர்ந்த இஸ்ரவேலனாகிய ஒரு மனிதனும் பாளயத்திலே சண்டைபண்ணுகிறார்கள். இந்தச் செய்தி யூதருடைய பாரம்பரிய சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

செலோமித்தின் குமாரன் தன்னை இஸ்ரவேலனாக பாவிக்கக்கூடாது. அவன் தன்னை அந்நியனாகவே பாவித்துக்கொள்ள வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் புறஜாதியாரை விவாகம்பண்ணக்கூடாது. ஆனால் இவனோ இஸ்ரவேல் ஸ்திரீக்கும், எகிப்திய புருஷனுக்கும் பிறந்தவன். இவன் அந்நியருக்காக நியமிக்கப்பட்டிருக்கிற இடத்திலே கூடாரம் போடவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் ஜாதியாருக்குள் விவாகம்பண்ணாமல், வேற்று ஜாதியாரோடு விவாகம்பண்ணினால் எப்படிப்பட்ட பிரச்சனைகள் வரும் என்பதை தெளிவுபடுத்துவதற்காக, இந்த வசனப்பகுதியில், அவனுடைய பெற்றோரின் பூர்வீகத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த மனுஷனும் இஸ்ரவேலனாகிய ஒரு மனுஷனும் பாளயத்திலே சண்டைபண்ணும்போது இவன் கர்த்தரின் நாமத்தை நிந்தித்து தூஷிக்கிறான். கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கும் அந்நிய புத்திரருக்கும் வித்தியாசம்பண்ணியிருக்கிறார். இது தேவனுடைய தெய்வீகநியமனம்.ஆனால் இந்த மனுஷனோ கர்த்தருடைய நியமத்தையும், பிரமாணத்தையும் அங்கீகரிக்கவில்லை.

இவன் அந்நிய புத்திரர் சம்பந்தமான பிரமாணத்தையும், அந்தப் பிரமாணத்தை இயற்றிய கர்த்தரையும் நிந்தித்து தூஷிக்கிறான். இவன் கர்த்தரை நேரடியாக தூஷித்தானா அல்லது தன்னோடு சண்டைபண்ணின இஸ்ரவேல் புத்திரன் மூலமாக கர்த்தருடைய நாமத்தை நிந்தித்து தூஷித்தானா என்பது தெரியவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நாமத்தை நிந்தித்து தூஷித்த மனுஷனை மோசேயினிடத்தில் கொண்டு வருகிறார்கள். மோசே அவசரப்பட்டு அவனை உடனே தண்டித்துவிடவில்லை. மோசே அந்த மனுஷனை காவல்படுத்துகிறார். கர்த்தரின் வாக்கினாலே தங்களுக்கு உத்தரவு வருமட்டும், இஸ்ரவேல் புத்திரர் அவனைக் காவல்படுத்துகிறார்கள் (லேவி 24:12).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் சித்தத்தை அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். கர்த்தரிடத்தில் விசாரித்து முடிவுபண்ண வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அந்த மனுஷன் கர்த்தரின் நாமத்தை நிந்தித்து தூஷித்திருக்கிறான். அவனுக்கு நியாயாதிபதியின் கையினாலே மரணதண்டனை கொடுக்கவேண்டுமா அல்லது கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு அவனை விட்டுவிடலாமா என்பதை இஸ்ரவேல் புத்திரர் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, "தூஷித்தவனைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோ; கேட்டவர்கள் எல்லாரும் தங்கள் கைகளை அவன் தலையின்மேல் வைப்பார்களாக; பின்பு சபையார் எல்லாரும் அவனைக் கல்லெறியக்கடவர்கள்" (லேவி 24:13,14) என்று சொல்லுகிறார்.

கர்த்தரின் நாமத்தை நிந்தித்து தூஷித்த மனுஷனுக்கு வானத்திற்கும் பூமிக்கும் நியாயாதிபதியாகயிருக்கிற கர்த்தருடைய சமுகத்திலிருந்து நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படுகிறது. கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அவன்மேல் கல்லெறிந்து அவனைக் கொன்றுபோடுகிறார்கள்.

இந்த சம்பவத்திலிருந்து, கர்த்தர் ஒரு பிரமாணத்தை சொல்லுகிறார். கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவனுக்கு எப்படிப்பட்ட தண்டனை கொடுக்கப்படவேண்டும் என்று கர்த்தர் நியமனம்பண்ணுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "மேலும் நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: எவனாகிலும் தன் தேவனைத் தூஷித்தால், அவன் தன் பாவத்தைச் சுமப்பான். கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் கொலைசெய்யப்படவேண்டும்; சபையார் எல்லாரும் அவனைக் கல்லெறியவேண்டும்; பரதேசியானாலும் சுதேசியானாலும் கர்த்தரின் நாமத்தைத் தூஷிக்கிறவன் கொலைசெய்யப்படவேண்டும்" (லேவி 24:15,16) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் நியாயாதிபதிகள் கர்த்தருடைய நாமத்தின்மீது பக்திவைராக்கியமாயிருக்கவேண்டும். கர்த்தரின் நாமத்தை தூஷிக்கிறவனுக்கு விரோதமாக, கர்த்தருடைய பிரமாணத்தின்படி தீர்ப்பு சொல்லவேண்டும். தேவதூஷணம் சொல்லுகிறவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய ஆளுகைக்கு விரோதமாகவும் எதிர்த்து நிற்கிறார்கள். இவர்கள் மூலமாக இஸ்ரவேல் சபையார் மத்தியிலே குழப்பமும் சண்டையும் ஏற்படும்.

இஸ்ரவேலின் நியாயாதிபதிகள் ஜனங்கள் மத்தியிலே அமைதியையும் சமாதானத்தையும் நிலைநிறுத்தவேண்டும். மனுஷர் மத்தியிலே குழப்பத்தை உண்டுபண்ணுகிறவர்களை கண்டுபிடித்து, அவர்களுக்கு கர்த்தருடைய பிரமாணத்தின்படி தண்டனை கொடுத்து, சபையார் மத்தியிலே அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் கொலைசெய்யப்படவேண்டும்; சபையார் எல்லாரும் அவனைக் கல்லெறியவேண்டும்; பரதேசியானாலும் சுதேசியானாலும் கர்த்தரின் நாமத்தைத் தூஷிக்கிறவன் கொலைசெய்யப்படவேண்டும்" (லேவி 24:16) என்று சொல்லுகிறார்.

அப்படியே, தூஷித்தவனைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய், அவனைக் கல்லெறியும்படி மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லுகிறார்; கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே இஸ்ரவேல் புத்திரர் செய்கிறார்கள் (லேவி 24:23). தேவதூஷணம் சொன்னவனுக்கு முதன் முறையாக இவ்வாறு தண்டனை கொடுக்கப்படுகிறது (யாத் 17:4, 20:7).

கர்த்தருடைய கட்டளைகள் லேவி 24:17-23

லேவி 24:17. ஒரு மனிதனைக் கொல்லுகிறவன் எவனோ அவன் கொலைசெய்யப்படவேண்டும்.

லேவி 24:18. மிருகத்தைக் கொன்றவன் மிருகத்துக்கு மிருகம் கொடுக்கக்கடவன்.

லேவி 24:19. ஒருவன் பிறனை ஊனப்படுத்தினால், அவன் செய்தபடியே அவனுக்கும் செய்யப்படக்கடவது.

லேவி 24:20. நொறுக்குதலுக்கு நொறுக்குதல், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்; அவன் ஒரு மனிதனை ஊனப்படுத்தினதுபோல அவனும் ஊனப்படுத்தப்படவேண்டும்.

லேவி 24:21. மிருகத்தைக் கொன்றவன் பதில் கொடுக்கவேண்டும்; மனிதனைக் கொன்றவனோ கொலைசெய்யப்படக்கடவன்.

லேவி 24:22. உங்களில் பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே நியாயம் இருக்கவேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார்.

லேவி 24:23. அப்படியே, தூஷித்தவனைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய், அவனைக் கல்லெறியும்படி மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னான்; கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.

கர்த்தர் ஏற்கெனவே சொன்ன பிரமாணங்கள் இந்த அதிகாரத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு மனிதனைக் கொல்லுகிறவன் எவனோ அவன் கொலைசெய்யப்படவேண்டும் (லேவி 24:17) என்றும், மிருகத்தைக் கொன்றவன் பதில் கொடுக்கவேண்டும்; மனிதனைக் கொன்றவனோ கொலைசெய்யப்படக்கடவன் (லேவி 24:21) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பிறனை ஊனப்படுத்துகிறவனுக்கும் கர்த்தர் தண்டனை கொடுக்கிறார். ஒருவன் பிறனை ஊனப்படுத்தினால், அவன் செய்தபடியே அவனுக்கும் செய்யப்படக்கடவது. நொறுக்குதலுக்கு நொறுக்குதல், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்; அவன் ஒரு மனிதனை ஊனப்படுத்தினதுபோல அவனும் ஊனப்படுத்தப்படவேண்டும் (லேவி 24:19,20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்தப் பிரமாணம் இதற்கு முன்பு ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. "அவன் திருடின மாடாவது கழுதையாவது ஆடாவது உயிருடனே அவன் கையில் கண்டுபிடிக்கப்பட்டால், இரட்டிப்பாய் அவன் கொடுக்கவேண்டும். ஒருவன் பிறனுடைய வயலிலாவது திராட்சத்தோட்டத்திலாவது தன் மிருகஜீவனை மேயவிட்டால், அவன் தன் சுயவயலிலும் திராட்சத்தோட்டத்திலுமுள்ள பலனில் உத்தமமானதை எடுத்து, பதில் செலுத்தக்கடவன்" (யாத் 22:4,5).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் குற்றவாளிகளுக்கு இது போன்ற கடுமையான தண்டனை தேவைப்பட்டது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ கிருபையின் காலத்திலிருக்கிறோம். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இதுபோன்ற கடுமையான தண்டனை தேவையில்லை என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். அவர் நமக்கு தம்முடைய புதிய பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார்.

"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு" (மத் 5:38,39).

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கடுமையான தண்டனைகள் அகற்றப்பட்டாலும், இக்காலத்திலும் நியாயாதிபதிகள் தங்கள் கடமைகளை செய்யவேண்டும். மனுஷர் மத்தியிலே அமைதியையும், சமாதானத்தையும், நீதியையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு நியாயாதிபதிகளிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

மற்றவர்களுடைய மிருகஜீவன்களுக்கு வேண்டுமென்றே சேதத்தை ஏற்படுத்தினவன், அதற்குரிய நஷ்டஈடு கொடுக்கவேண்டும்.

மிருகத்தைக் கொன்றவன் மிருகத்துக்கு மிருகம் கொடுக்கக்கடவன் (லேவி 24:18) என்றும், மிருகத்தைக் கொன்றவன் பதில் கொடுக்கவேண்டும் (லேவி 24:21) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. இஸ்ரவேல் தேசத்திலுள்ள பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே நியாயம் இருக்கவேண்டும் (லேவி 24:22) என்று கர்த்தர் சொல்லுகிறார். பரதேசியை யாரும் அநியாயமாய்த் துன்பப்படுத்தக்கூடாது. நியாயப்பிரமாணத்தின் மூலமாக பரதேசிக்கும் நியாயம் கிடைக்கவேண்டும். குற்றம் செய்தவனுக்கு தண்டனையும், நிரபராதிக்கு விடுதலையும் கிடைக்கவேண்டும்.

நீதிக்கும் நியாயப்பிரமாணத்திற்கும் முன்பாக, மனுஷரை குற்றவாளி என்றும் நிரபராதி என்றும் மாத்திரமே வேறுபிரிக்கவேண்டும். அவர்களை சுதேசி என்றும், பரதேசி என்றும் வேறுபிரிக்கக்கூடாது.

25 அதிகாரம்

கர்த்தர் இந்த அதிகாரத்தில் கானான் தேசத்தைப்பற்றியும், தேசத்தின் நிலங்களைப்பற்றியும் தம்முடைய பிரமாணங்களை சொல்லுகிறார். தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலினாலும், அவருடைய தெய்வீக சித்தத்தினாலும் இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை சுதந்தரித்துக்கொள்கிறார்கள். ஆகையினால் அவர்கள் அந்த தேசத்தை தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஆளுகை செய்யவேண்டும்.

யூதருடைய மார்க்க ஆராதனையைப்போல கானான் தேசத்தை ஆளுகை செய்வதும் கர்த்தருக்கு சித்தமான பிரகாரம் நடைபெறவேண்டும். ஆசரிப்புக்கூடாரம் கர்த்தருடைய பரிசுத்த வாசஸ்தலம். கானான் தேசம் அவருடைய பரிசுத்த தேசம்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே போய் சேர்ந்திருக்கும் நாளிலிருந்து, ஒவ்வொரு ஏழாவது வருஷமும் அவர்களுக்கு ஒய்வு வருஷமாயிருக்கவேண்டும். ஏழாம் வருஷத்திலே அவர்கள் தங்கள் வயலை விதைக்காமலும், தங்கள் திராட்சத்தோட்டத்தை கிளைக்கழிக்காமலும், இருக்கவேண்டும் (லேவி 25:1-7).

இஸ்ரவேல் புத்திரருக்கு ஒவ்வொரு ஐம்பதாவது வருஷமும் யூபிலி வருஷமாயிருக்கவேண்டும். இந்த வருஷத்திலே கானான் தேசத்தின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறப்படவேண்டும். இஸ்ரவேல் புத்திரருடைய கடன்களெல்லாம் யூபிலி வருஷத்திலே மன்னிக்கப்படும். யூபிலி வருஷங்களின் தொகைகேற்ப நிலங்களுக்கு கிரயம் நிர்ணயிக்கப்படும் (லேவி 25:8-17). கானான் தேசத்திலுள்ள நிலங்களை விற்பது, மீட்பது சம்பந்தமான பிரமாணம் (லேவி 25:23-28).

மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள வீட்டை விற்பது, மீட்டுக்கொள்வது சம்பந்தமான பிரமாணம். லேவியரின் காணியாட்சியாகிய பட்டணங்களிலுள்ள வீடுகளை மீட்டுக்கொள்வது சம்பந்தமான பிரமாணம் (லேவி 25:29-34).

யூபிலி வருஷத்தில் வேலைக்காரர்களும், அடிமைகளும் விடுதலைபண்ணப்படவேண்டும். கடன்பட்ட தரித்திரனை ஆதரிக்கவேண்டும் (லேவி 25:35-38). இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் தரித்திரனாகி அவன் மற்றொரு இஸ்ரவேல் புத்திரனுக்கு விலைப்பட்டுப்போனால் அவனைப்பற்றிய பிரமாணம் (லேவி 25:39-46). இஸ்ரவேல் புத்திரர் பரதேசிக்கோ அல்லது அந்நியனுக்கோ விலைப்பட்டுப்போனால் அவனைப்பற்றிய பிரமாணம் (லேவி 25:47-55).

ஒய்வு வருஷம்
லேவி 25:1-7

லேவி 25:1. கர்த்தர் சீனாய்மலையில் மோசேயை நோக்கி:

லேவி 25:2. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திலே நீங்கள் போய்ச் சேர்ந்திருக்கும்போது, தேசம் கர்த்தருக்குக்கென்று ஒய்வு கொண்டாடவேண்டும்.

லேவி 25:3. ஆறுவருஷம் உன் வயலை விதைத்து, உன் திராட்சத்தோட்டத்தைக் கிளைகழித்து, அதின் பலனைச் சேர்ப்பாயாக.

லேவி 25:4. ஏழாம் வருஷத்திலோ, கர்த்தருக்கென்று ஒய்ந்திருக்கும் ஒய்வு தேசத்திற்கு இருக்கவேண்டும்; அதில் உன் வயலை விதைக்காமலும், உன் திராட்சத்தோட்டத்தைக் கிளைகழிக்காமலும்,

லேவி 25:5. தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளைக்கழிக்காதே விட்ட திராட்சச்செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பாயாக; தேசத்துக்கு அது ஓய்வு வருஷமாயிருக்கக்கடவது.

லேவி 25:6. தேசத்தின் ஓய்விலே பயிராகிறது உங்களுக்கு ஆகாரமாயிருப்பதாக; உன் வேலைக்காரனுக்கும், உன் வேலைக்காரிக்கும், உன் கூலிக்காரனுக்கும், உன்னிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும்,

லேவி 25:7. உன் நாட்டு மிருகத்துக்கும், உன் தேசத்தில் இருக்கிற காட்டு மிருகத்துக்கும் அதில் விளைந்திருப்பதெல்லாம் ஆகாரமாயிருப்பதாக.

மோசேயின் நியாயப்பிரமாணம் ஓய்வுநாளுக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது. ஒவ்வொரு வாரமும் ஏழாவது நாள் ஓய்வுநாளாகும். கர்த்தர் ஓய்வுநாளை கனம்பண்ணியிருக்கிறார். வாரத்தின் ஓய்வுநாளைப்போல, கர்த்தர் ஓய்வு வருஷத்தையும் நியமனம்பண்ணுகிறார்.

கர்த்தர் சீனாய்மலையில் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திலே நீங்கள் போய்ச் சேர்ந்திருக்கும்போது, தேசம் கர்த்தருக்குக்கென்று ஓய்வு கொண்டாடவேண்டும்" (லேவி 25:1,2) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஆறுவருஷம் தங்கள் வயலை விதைத்து, தங்கள் திராட்சத்தோட்டத்தைக் கிளைகழித்து, அதின் பலனைச் சேர்க்கவேண்டும். ஏழாம் வருஷத்திலோ, கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத்திற்கு இருக்கவேண்டும்; அதில் அவர்கள் தங்கள் வயலை விதைக்காமலும், தங்கள் திராட்சத்தோட்டத்தைக் கிளைகழிக்காமலும் இருக்கவேண்டும் (லேவி 25:3,4).

இஸ்ரவேல் புத்திரருக்கு ஓய்வு வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஆரம்பமாகும். இது தேசத்திலே அறுவடை முடிவு பெறுகிற மாதம். யூதருடைய நாள் காட்டியின் பிரகாரமாக, ஏழாம் மாதத்தில் ஓய்வு வருஷம் ஆரம்பமாகிறது.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சேர்ப்பின் பண்டிகை முடிவு பெற்றவுடன் விதை விதைக்கும் காலம் ஆரம்பமாகும். ஓய்வு வருஷத்தின்போது, இஸ்ரவேல் புத்திரர் சேர்ப்பின் பண்டிகையை ஆசரித்த பின்பு, தங்கள் வயலிலே விதை விதைக்கக்கூடாது. அவர்கள் வசந்த காலத்திலே திராட்சத்தோட்டத்தை கிளைகழிக்கவும் கூடாது.

வயலில் விதை விதைக்கவில்லையென்றால் அறுவடை இருக்காது. திராட்சத்தோட்டத்தை கிளைகழிக்கவில்லையென்றால் திராட்சப்பழங்களும் பழுக்காது. இஸ்ரவேல் புத்திரர் ஓய்வு வருஷத்திலே தானிய அறுவடையையும், திராட்சப்பழம் பறிப்பதையும் எதிர்பார்க்கமாட்டார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் வயலிலே விதை விதைக்காவிட்டாலும், அது தானாய் விளைந்த பயிராகும். "தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளைக்கழிக்காதே விட்ட திராட்சச்செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பாயாக; தேசத்துக்கு அது ஓய்வு வருஷமாயிருக்கக்கடவது" (லேவி 25:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"கிளைக்கழிக்காதே விட்ட திராட்சச்செடி" என்பதற்கு நசரேய திராட்சைச்செடி என்னும் மாற்றுப் பெயரும் உள்ளது. நசரேயருடைய தலைமயிர் சவரகன் கத்தி படாமல் வளர்ந்திருக்கும். அதுபோன்று இந்தத் திராட்சச் செடியும் கழிக்கப்படாமல் வளர்ந்திருக்கிறது (எண் 6:5).

தேசத்தின் ஓய்விலே பயிராகிறது இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆகாரமாயிருக்கும். ஓய்வு வருஷத்திலே விளைந்திருப்பதெல்லாம், அவர்களுடைய வேலைக்காரனுக்கும், வேலைக்காரிக்கும், கூலிக்காரனுக்கும், அவர்களிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும், அவர்களுடைய நாட்டு மிருகத்துக்கும், தேசத்தில் இருக்கிற காட்டு மிருகத்துக்கும் ஆகாரமாயிருக்கவேண்டும் (லேவி 25:6,7).

ஏழாம் வருஷம் தேசத்தின் நிலங்களுக்கு ஒய்வு வருஷம். அந்த வருஷத்திலே அவர்கள் நிலத்திலே ஒரு வேலையும் செய்யக்கூடாது. அறுவடையையும் எதிர்ப்பார்க்கக்கூடாது. ஏழாம் வருஷத்தில் விவசாய வேலைகள் எல்லாவற்றிற்கும் ஓய்வு கொடுத்துவிடவேண்டும். அந்த வருஷத்திலே வருஷாந்தர வேலைகள் எதுவும் நடைபெறக்கூடாது.

வாரத்தின் ஓய்வுநாளின்போது ஒரு வேலையும் செய்யாமல் ஓய்ந்திருப்பதுபோல, ஒய்வு வருஷத்தின்போது இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் நிலங்களிலும், திராட்சத்தோட்டங்களிலும் ஒரு வேலையும் செய்யாமல் ஓய்ந்திருக்கவேண்டும். தங்கள் நிலங்களுக்கும் திராட்சத்தோட்டங்களுக்கும் ஓய்வு கொடுக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் உயிருள்ள ஜீவராசிகளிடத்தில் அன்பாயும் கரிசனையாயும்இருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் வாரத்தின் ஓய்வுநாளின்போது, தங்கள் வீட்டு மிருகங்களுக்கு ஒரு வேலையும் கொடுக்காமல் அதற்கு ஓய்வுகொடுக்கிறார்கள். அதுபோலவே அவர்கள் தங்கள் நிலத்தின்மீதும் கரிசனையாகயிருந்து, ஓய்வு வருஷத்தின்போது தங்கள் நிலங்களுக்கு ஓய்வுகொடுக்கிறார்கள்.

ஏழாம் வருஷத்தில் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு கானான் தேசத்திற்கு இருக்கவேண்டும்.ஓய்வு வருஷம் ஆவிக்குரிய ஓய்வுக்கு அடையாளமாயிருக்கிறது.

"லாமேக்கு நூற்றெண்பத்திரண்டு வயதானபோது, ஒரு குமாரனைப் பெற்று, கர்த்தர் சபித்த பூமியிலே நமக்கு உண்டான வேலையிலும், நம்முடைய கைகளின் பிரயாசத்திலும், இவன் நம்மைத் தேற்றுவான் என்று சொல்லி, அவனுக்கு நோவா என்று பேரிட்டான்" (ஆதி 5:28,29).

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே மெய்யான நோவாவாக இருக்கிறார். கிறிஸ்துவானவர் நமக்கு உண்டான எல்லா வேலைகளிலும், நம்முடைய கைகளின் பிரயாசங்களிலும் நம்மைத் தேற்றுகிறார். பூமி சபிக்கப்பட்டிருந்தாலும் நமக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாக ஆசீர்வாதம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது.

ஒய்வு வருஷம் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திலே நீங்கள் போய்ச் சேர்ந்திருக்கும்போது, தேசம் கர்த்தருக்குக்கென்றுஓய்வு கொண்டாட வேண்டும் (யாத் 23:10-11).

2. ஆறுவருஷம் உன் வயலை விதைத்து, உன் திராட்சத்தோட்டத்தைக் கிளை கழித்து, அதின் பலனைச் சேர்க்கவேண்டும் (லேவி 25:3).

3. ஏழாம் வருஷத்திலோ, கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத்திற்கு இருக்கவேண்டும் (லேவி 25:4)

4. ஏழாம் வருஷத்தில் உன் வயலை விதைக்காமலும், உன் திராட்சத் தோட்டத்தைக் கிளைகழிக்காமலும் இருக்கவேண்டும்.

5. தேசத்தின் ஓய்விலே பயிராகிறது உங்களுக்கு ஆகாரமாயிருப்பதாக; உன் வேலைக்காரனுக்கும், உன் வேலைக்காரிக்கும், உன் கூலிக் காரனுக்கும், உன்னிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும், உன் நாட்டு மிருகத்துக்கும், உன் தேசத்தில் இருக்கிற காட்டு மிருகத்துக்கும் அதில் விளைந்திருப்பதெல்லாம் ஆகாரமாயிருப்பதாக (லேவி 25:5-6)

யூபிலி வருஷம்
லேவி 25:8-22

லேவி 25:8. அன்றியும், ஏழு ஓய்வு வருஷங்களுள்ள ஏழு ஏழு வருஷங்களை எண்ணுவாயாக; அந்த ஏழு ஓய்வு வருஷங்களும் நாற்பத்தொன்பது வருஷமாகும்.

லேவி 25:9. அப்பொழுதும் ஏழாம் மாதம் பத்தாந்தேதியில் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும்; பாவ நிவாரணநாளில் உங்கள் தேசமெங்கும் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும்.

லேவி 25:10. ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக்கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள்; அது உங்களுக்கு யூபிலி வருஷம்; அதிலே உங்களில் ஒவ்வொருவனும் தன் தன் காணியாட்சிக்கும் தன் தன் குடும்பத்துக்கும் திரும்பி போகக்கடவன்.

லேவி 25:11. அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்கு யூபிலி வருஷமாயிருப்பதாக; அதிலே விதைக்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளைக்கழிக்காமல் விடப்பட்ட திராட்சச் செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பீர்களாக.

லேவி 25:12. அது யூபிலி வருஷம்; அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருக்கவேண்டும்; அந்த வருஷத்தில் வயல்வெளியில் விளைந்தவைகளை நீங்கள் புசிக்கவேண்டும்.

லேவி 25:13. அந்த யூபிலி வருஷத்தில் உங்களில் அவனவன் தன் தன் காணியாட்சிக்குத் திரும்பிப்போகக்கடவன்.

லேவி 25:14. ஆகையால், பிறனுக்கு எதையாவது விற்றாலும், அவனிடத்தில் எதையாவது கொண்டாலும் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யக்கூடாது.

லேவி 25:15. யூபிலி வருஷத்துக்குப் பின்வரும் வருஷங்களின் தொகைக்கேற்கப் பிறனிடத்தில் கொள்ளுவாயாக; பலனுள்ள வருஷங்களின் தொகைக்கேற்க அவன் உனக்கு விற்பானாக.

லேவி 25:16. பலனுள்ள வருஷங்களின் இலக்கத்தைப் பார்த்து அவன் உனக்கு விற்கிறபடியால், வருஷங்களின் தொகை ஏறினால் விலையேறவும், வருஷங்களின் தொகை குறைந்தால், விலை குறையவும் வேண்டும்.

லேவி 25:17. உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக்கூடாது; உன் தேவனுக்குப் பயப்படவேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

லேவி 25:18. என் கட்டளைகளின்படி செய்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு அவைகளின்படி நடக்கக்கடவீர்கள்; அப்பொழுது தேசத்திலே சுகமாய்க் குடியிருப்பீர்கள்.

லேவி 25:19. பூமி தன் கனியைத் தரும்; நீங்கள் திருப்தியாகச் சாப்பிட்டு, அதில் சுகமாய்க் குடியிருப்பீர்கள்.

லேவி 25:20. ஏழாம் வருஷத்தில் எதைப் புசிப்போம்? நாங்கள் விதைக்காமலும், விளைந்ததைச் சேர்க்காமலும் இருக்க வேண்டுமே! என்று சொல்வீர்களானால்,

லேவி 25:21. நான் ஆறாம் வருஷத்தில் உங்களுக்கு ஆசீர்வாதத்தை அநுக்கிரகம்பண்ணுவேன்; அது உங்களுக்கு மூன்று வருஷத்தின் பலனைத் தரும்.

லேவி 25:22. நீங்கள் எட்டாம் வருஷத்திலே விதைத்து, ஒன்பதாம் வருஷம்மட்டும் பழைய பலனிலே சாப்பிடுவீர்கள்; அதின் பலன் விளையும் வரைக்கும் பழைய பலனைச் சாப்பிடுவீர்கள்.

ஏழு ஓய்வு வருஷங்களுக்கு பின்பு வரும் வருஷம் யூபிலி வருஷமாகும். கர்த்தர் யூபிலி வருஷத்தைப்பற்றிய பிரமாணத்தை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

ஏழு ஓய்வு வருஷங்களுள்ள ஏழு ஏழு வருஷங்களை எண்ணுவாயாக; அந்த ஏழு ஓய்வு வருஷங்களும் நாற்பத்தொன்பது வருஷமாகும். அப்பொழுதும் ஏழாம் மாதம் பத்தாந்தேதியில் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும்; பாவ நிவாரணநாளில் உங்கள் தேசமெங்கும் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும் (லேவி 25:8,9) என்றும்,

ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக்கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள்; அது உங்களுக்கு யூபிலி வருஷம்; அதிலே உங்களில் ஒவ்வொருவனும் தன் தன் காணியாட்சிக்கும் தன் தன் குடும்பத்துக்கும் திரும்பி போகக்கடவன் (லேவி 25:10) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

49 வருஷங்களில் ஏழு ஓய்வு வருஷங்கள் வரும். (லேவி 25:3-4) அடுத்த வருஷம் ஐம்பதாவது வருஷமாகும். அது யூபிலி வருஷம் என்று அழைக்கப்படுகிறது. (லேவி 25:8-13).

ஐம்பதாம் வருஷத்தில் தேசத்தின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறவேண்டும். கடன்கள் மன்னிக்கப்பட வேண்டும். (லேவி 25:8-13). யூபிலி வருஷத்தில் எல்லாமே மறுபடியும் ஆரம்பமாகும் (லேவி 25:14-17).

"தேசமெங்கும் அதின்குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். அமெரிக்க தேசத்தில் பென்சில்வேனியா மாகாணத்தில் பிலடெல்பியா பட்டணத்தில் சுதந்திர மணி ஒன்றுள்ளது. அதில் இந்த வாக்கியத்தை எழுதி வைத்திருக்கிறார்கள். **"Proclaim liberty throughout all the land unto all the inhabitants thereof"**

பாவநிவாரண நாளில் இஸ்ரவேல் தேசமெங்கும் எக்காள சத்தம் தொனிக்கப்படுகிறது. யூபிலி வருஷத்தை எக்காளம் தொனித்து அறிவிக்கவேண்டும். ஐம்பதாவது வருஷம் யூபிலி வருஷம். இஸ்ரவேல் புத்திரர் அந்த வருஷத்தை பரிசுத்தமாக்கி, கானான் தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலையை கூறவேண்டும்.

யூபிலி வருஷம் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சந்தோஷத்தின் வருஷமாகவும், ஜெயத்தின் வருஷமாகவும் இருக்கிறது. ஆகையினால் யூபிலி வருஷத்தை அறிவிப்பதற்காக கானான் தேசம் எங்கிலும் எக்காள சத்தம் தொனிக்கப்படுகிறது. யூபிலி என்னும் வார்த்தைக்கு, எக்காளத்திலிருந்து ஒலிக்கப்படும் விசேஷித்த தொனி என்று பொருள். யூபிலி என்னும் தொனிக்கும், எக்காளத்தின் மற்ற தொனிகளுக்கும் வித்தியாசமுண்டு.

பாவநிவாரணநாள் நிறைவுபெறும்போது எக்காளம் தொனிக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவம் நிவிர்த்தி செய்யப்பட்டிருப்பதினால், அவர்கள் தேவனோடு ஒப்புரவாகி, அவரிடத்தில் சமாதானமாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தேவனோடு ஒப்புரவாகும்போது, அவர்களுக்கு விடுதலை அறிவிக்கப்படுகிறது.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஒவ்வொரு ஐம்பதாவது வருஷமும் யூபிலி வருஷமாயிருக்கும். அவர்களுக்கு ஒவ்வொரு ஏழாம் வருஷமும் ஓய்வு வருஷம். ஏழாம் வருஷத்திலே கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு கானான் தேசத்திலிருக்கும். யூபிலி வருஷமும் பரிசுத்தமான ஓய்வு வருஷம். இந்த யூபிலி வருஷம் ஒவ்வொரு ஐம்பதாம் வருஷத்திலும் வரும்.

இஸ்ரவேல் புத்திரர் ஐம்பதாம் வருஷத்தை பரிசுத்தமாக்கி, கானான் தேசம் எங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறவேண்டும்.

அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்கு யூபிலி வருஷமாயிருப்பதாக; அதிலே விதைக்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளைக்கழிக்காமல் விடப்பட்ட திராட்சச் செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பீர்களாக (லேவி 25:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அது யூபிலி வருஷம்; அது அவர்களுக்குப் பரிசுத்தமாயிருக்கவேண்டும்; அந்த வருஷத்தில் வயல்வெளியில் விளைந்தவைகளை அவர்கள் புசிக்கவேண்டும் (லேவி 25:12).

யூபிலி வருஷத்தின்போது இஸ்ரவேல் புத்திரர் தங்களிடத்தில் கடன்பட்டிருக்கிறவர்களுக்கு அவர்களுடைய கடன்களையெல்லாம் விடுதலை பண்ணிவிடுவார்கள்.

"விடுதலையின் விபரமாவது: பிறனுக்குக் கடன்கொடுத்தவன் எவனும், கர்த்தர் நியமித்த விடுதலை கூறப்பட்டபடியால், அந்தக் கடனைப் பிறன் கையிலாகிலும் தன் சகோதரன் கையிலாகிலும் தண்டாமல் விட்டுவிடக்கடவன். அந்நிய ஜாதியான் கையிலே நீ கடனைத் தண்டலாம்; உன் சகோதரனிடத்திலோ உனக்கு வரவேண்டியதை உன் கை விட்டுவிடக்கடவது" (உபா 15:2,3).

யூபிலி வருஷத்தின்போது அடைமானமாக வைக்கப்பட்ட நிலங்கள், மற்ற சொத்துக்களெல்லாம் மீட்டுக்கொள்ளப்படும். அவை மறுபடியும் அந்த நிலத்தின் சொந்தக்காரருக்கே திரும்பக் கொடுக்கப்படும். அந்த யூபிலி வருஷத்தில் உங்களில் அவனவன் தன் தன் காணியாட்சிக்குத் திரும்பிப்போகக்கடவன் (லேவி 25:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே தங்கள் நிலங்களை விற்பதும், பிறருடைய நிலங்களை வாங்குவதும், யூபிலி வருஷங்களின் தொகைகேற்ற பிரகாரமாகவே நடைபெறுகிறது. யூபிலி வருஷத்தின்போது விற்ற பொருட்கள், வாங்கிய பொருட்கள், அடைமானமாக வைக்கப்பட்ட பொருட்கள் ஆகியவையெல்லாமே மீட்டுக்கொள்ளப்படும்.

ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் பிறனுக்கு எதையாவது விற்றாலும், அவனிடத்தில் எதையாவது கொண்டாலும் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யக்கூடாது (லேவி 25:14).

யூபிலி வருஷத்துக்குப் பின்வரும் வருஷங்களின் தொகைக்கேற்கப் பிறனிடத்தில் கொள்ளுவாயாக; பலனுள்ள வருஷங்களின் தொகைக்கேற்க அவன் உனக்கு விற்பானாக (லேவி 25:15) என்றும்,

பலனுள்ள வருஷங்களின் இலக்கத்தைப் பார்த்து அவன் உனக்கு விற்கிறபடியால், வருஷங்களின் தொகை ஏறினால் விலையேறவும், வருஷங்களின் தொகை குறைந்தால், விலை குறையவும் வேண்டும் (லேவி 25:16) என்றும்,

உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக்கூடாது; உன் தேவனுக்குப் பயப்படவேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் (லேவி 25:16) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

குத்தகை பொருட்கள், நிலங்களின் குத்தகை, வேலையாட்களின் சம்பளம் ஆகியவையெல்லாமே யூபிலி வருஷத்திற்கு முன்பாக உள்ள வருஷங்களைக் கணக்கில் கொண்டே நிர்ணயிக்கப்படும். (லேவி 25:15-16).

இஸ்ரவேல் தேசத்திலே ஒருவன் மற்றவருடைய நிலத்தை விலைக்கு வாங்கினாலும், அல்லது அடைமானமாக வாங்கினாலும் அதை அவன் அடுத்து வருகிற யூபிலி வருஷம் வரையில் மாத்திரமே பயன்படுத்த முடியும். அந்த நிலத்தை வரப்போகிற யூபிலி வருஷம் வரையிலும் பயிரிட்டு அறுவடை பண்ணலாம். யூபிலி வருஷம் வரும்போது விலைக்கு வாங்கின நிலத்தையும், அடைமானமாக வாங்கின நிலத்தையும் அதன் சொந்தக்காரருக்கு திருப்பி கொடுத்துவிடவேண்டும்.

ஐம்பதாம் வருஷமாகிய யூபிலி வருஷம் பரிசுத்தமான வருஷம். அந்த வருஷத்தில் கானான் தேசத்தின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறப்படுகிறது. யூபிலி வருஷத்திலே இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும் தன் தன் காணியாட்சிக்கும், தன் தன் குடும்பத்திற்கும் திரும்பிப்போவார். அவருடைய நிலம் ஏற்கெனவே விற்கப்பட்டிருந்தாலோ அல்லது அடைமானமாக வைக்கப்பட்டிருந்தாலோ, யூபிலி வருஷத்தின் போது அது அவருக்கு திரும்பக் கொடுக்கப்படும்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் மற்றவருடைய நிலத்தை அதிக பட்சமாக ஐம்பது வருஷங்கள் வரையில் அதாவது யூபிலி வருஷம் வரையிலும் மாத்திரமே வைத்துக்கொள்ள முடியும். யூபிலி வருஷம் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஐம்பதாம் வருஷமும் யூபிலி வருஷம் என்று நியமிக்கப்பட்டிருக்கிறது. யூபிலி வருஷம் எப்போது வரும் என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு தெரியும்.

ஆகையினால் கானான் தேசத்தின் நிலத்தை வாங்குகிறவர்கள், யூபிலி வருஷத்திற்கு பின்வரும் வருஷங்களின் தொகைகேற்ப, அந்த நிலத்தை மற்றவர்களிடத்தில் கிரயத்திற்கு வாங்குவார்கள். தங்கள் நிலத்தை விற்கிறவர்களும் யூபிலி வருஷத்திற்கு பின்வரும் பலனுள்ள வருஷங்களின் தொகைக்கேற்ப மற்றவர்களுக்கு விற்பார்கள்.

வியாபார ரீதியாக பார்க்கும்போது, இஸ்ரவேல் புத்திரருக்கு தங்களுடைய காணியாட்சியின் நிலத்தை விற்பதற்கு உரிமையில்லை. அவர்கள் தங்கள் நிலத்தை ஒரு யூபிலி வருஷத்திலிருந்து அடுத்த யூபிலி வருஷம் வரையிலும் குத்தகைக்கு விடுவதுபோல கொடுக்கலாம். குத்தகை காலம் அடுத்து வருகிற யூபிலி வருஷத்தை தாண்டிப்போய்விடக்கூடாது.

கர்த்தர் கானான் தேசத்தை பங்கிட்டுக்கொடுத்தபோது, தேசத்தின் நிலங்களை அந்தந்த கோத்திரத்தாருக்கு சீட்டுப்போட்டு பிரித்துக் கொடுத்தார். தேசத்தின் நிலம் விற்பனை செய்யப்படாமல், மற்றவர்களுக்கு குத்தகையாக கொடுக்கப்படுவதினால், யூபிலி வருஷத்தின்போது அந்தந்த கோத்திரத்தாரின் நிலம் அவர்களிடத்திலே திரும்பவும் வந்து சேரும்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் எவ்வளவு பெரிய செல்வந்தனாகயிருந்தாலும், அவனால் அதிகமான நிலங்களை கிரயத்திற்கு வாங்கமுடியாது. அவன் வாங்கின நிலமெல்லாம் யூபிலி வருஷத்தின்போது மீட்டுக்கொள்ளப்படும். கர்த்தருடைய இந்தப் பிரமாணத்தின் மூலமாக, இஸ்ரவேல் ஜனத்தாரால் தரித்திரரை வஞ்சித்து அவர்களுடைய நிலங்களை அபகரிக்க முடியாது.

"தாங்கள்மாத்திரம் தேசத்தின் நடுவில் வாசமாயிருக்கும்படி மற்றவர்களுக்கு இடமில்லாமற்போகுமட்டும், வீட்டோடே வீட்டைச் சேர்த்து, வயலோடே வயலைக் கூட்டுகிறவர்களுக்கு ஐயோ!" (ஏசா 5:8).

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு யூபிலி வருஷத்தின் பிரமாணம் நியமிக்கப்பட்டிருப்பதினால், நிலத்தை உழுது பயிரிடுவதற்காக மாத்திரமே, இஸ்ரவேல் புத்திரர் மற்றவர்களிடமிருந்து நிலத்தைக் கொள்ளுவார்கள். தங்களுடைய சொத்துக்களை விருத்திபண்ணவேண்டும் என்பதற்காக யாரும் நிலங்களை கொள்ளமாட்டார்கள். ஏனெனில் ஒவ்வொரு யூபிலி வருஷத்தின்போதும், அவர்கள் கொண்ட நிலங்களையெல்லாம், அந்த நிலத்தின் சொந்தக்காரர் மீட்டுக்கொள்வார்.

இஸ்ரவேல் தேசத்தில் பிறந்த ஒவ்வொருவனும் தன்னுடைய காணியாட்சியில் குடியிருக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறான். அவன் தரித்திரனாகி தன்னுடைய நிலத்தை பிறருக்கு விற்றுப்போட்டாலும், யூபிலி வருஷத்தின்போது அவன் திரும்பவும் தன்னுடைய காணியாட்சி நிலத்திற்கு வந்துவிடுவான். யூபிலி வருஷத்திலே இஸ்ரவேல் புத்திரரில் ஒவ்வொருவனும் தன் தன் காணியாட்சிக்கும் தன் தன் குடும்பத்திற்கும் திரும்பிப்போகவேண்டும் (லேவி 25:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய காணியாட்சி நிலத்தை மற்றவர்களுக்கு விற்றுப்போட்டால், அவர்கள் தங்கள் நிலத்திற்கு அந்நியராயிருப்பார்கள். ஆனாலும் யூபிலி வருஷத்தின்போது, தாங்கள் விற்றுப்போட்ட தங்கள் காணியாட்சியை திரும்பவும் மீட்டுக்கொண்டு, அதற்கு சொந்தக்காரராவார்கள். இஸ்ரவேல் புத்திரரில் தரித்திரராயிருக்கிறவர்களும், கானான் தேசத்திலே அந்நியராயிருக்கக்கூடாது என்பதற்காக கர்த்தர் யூபிலி வருஷத்தின் பிரமாணத்தை நியமனம் செய்திருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தில் யூபிலி வருஷத்தின் பிரமாணத்தை நியமனம் செய்திருப்பதினால், ஐசுவரியவான்கள் தரித்திரரை ஒடுக்குவதற்கு வாய்ப்பில்லை. ஒருவருக்கொருவர் அநியாயம் செய்வதற்கும் வாய்ப்பில்லை. தங்கள் நிலத்தை விற்கிறவனாலும், பிறருடைய நிலத்தை கொள்ளுகிறவனாலும், யாரும் யாரையும் ஏமாற்ற முடியாது.

பிறருடைய நிலத்தைக் கொள்ளுகிறவன் யூபிலி வருஷத்துக்குப் பின்வரும் வருஷங்களின் தொகைக்கேற்கப் பிறனிடத்தில் கொள்ளுவான்; பலனுள்ள வருஷங்களின் தொகைக்கேற்ப அவன் தன் நிலத்தை கொள்ளுகிறவனுக்கு விற்பான்.

தன் நிலத்தை விற்கிறவன் பலனுள்ள வருஷங்களின் இலக்கத்தைப் பார்த்து விற்கிறபடியால், வருஷங்களின் தொகை ஏறினால் விலையேறவும், வருஷங்களின் தொகை குறைந்தால், விலை குறையவும் செய்யும்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக்கூடாது; அவர்கள் தேவனுக்குப் பயப்படவேண்டும்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தன்னுடைய நிலத்தை விற்கிறவனுக்கும், பிறருடைய நிலத்தை வாங்குகிறவனுக்கும் கர்த்தராயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் யூபிலி வருஷத்தை பரிசுத்தமாய் ஆசரிப்பதினால் அவர்களுக்கு ஒரு நஷ்டமும் ஏற்படாது. "என் கட்டளைகளின்படி செய்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு அவைகளின்படி நடக்கக்கடவீர்கள்; அப்பொழுது தேசத்திலே சுகமாய்க் குடியிருப்பீர்கள். பூமி தன் கனியைத் தரும்; நீங்கள் திருப்தியாகச் சாப்பிட்டு, அதில் சுகமாய்க் குடியிருப்பீர்கள்" (லேவி 25:18,19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பீர்கள்" என்னும் வாக்கியத்திற்கு "தேசத்தில் பாதுகாப்பாய் குடியிருப்பீர்கள்" என்பது பொருளாகும். கானான் தேசத்தில் குடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு அந்நிய தேசத்தார் மூலமாக ஆபத்து வராது. இஸ்ரவேல் புத்திரரின் ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் கர்த்தருக்குள் பாதுகாப்பாயிருக்கும். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது, கர்த்தர் அவர்களை பாதுகாத்து பராமரிக்கிறார்.

கானான் தேசத்தின் பூமி தன் கனியைத் தரும். அவர்கள் திருப்தியாய்ச் சாப்பிடுவார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு பசியோ, பட்டினியோ, பஞ்சமோ ஏற்படாது. ஒவ்வொரு ஏழாம் வருஷமும் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒய்வு வருஷம். ஒய்வு வருஷத்திலே அவர்கள் தங்கள் வயலை விதைக்கக்கூடாது. விதைக்கவில்லையென்றால் அறுவடையும் இல்லை. ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் பசியாயும் பட்டினியாயும் இருக்கமாட்டார்கள். அவர்கள் திருப்தியாய்ச் சாப்பிட்டு, கானான் தேசத்திலே சுகமாய்க் குடியிருப்பார்கள்.

ஏழாம் வருஷத்தில் எதைப் புசிப்போம்? நாங்கள் விதைக்காமலும், விளைந்ததைச் சேர்க்காமலும் இருக்கவேண்டுமே! என்று சொல்வீர்களானால், நான் ஆறாம் வருஷத்தில் உங்களுக்கு ஆசீர்வாதத்தை அநுக்கிரகம்பண்ணுவேன்; அது உங்களுக்கு மூன்று வருஷத்தின் பலனைத் தரும் (லேவி 25:20,21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏழாம் வருஷத்தில் விதைக்கக்கூடாது, விளைந்ததைச் சேர்க்கக்கூடாது. ஆனாலும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைக் கைவிடமாட்டார். ஆறாம் வருஷத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு அதிகமான விளைச்சல் இருக்கும். அது ஏழாம் வருஷத்திற்கும் போதுமானதாக இருக்கும். ஆறாம் வருஷத்தில் கர்த்தருடைய அநுக்கிரகம் அடுத்துமூன்று வருஷங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். ஆறாம் வருஷத்தின் விளைச்சல் மூன்று வருஷத்தின் பலனைத் தரும் (லேவி 25:20-22).

இஸ்ரவேல் புத்திரர் எட்டாம் வருஷத்திலே விதைத்து, ஒன்பதாம் வருஷம்மட்டும் பழைய பலனிலே சாப்பிடுவார்கள்; அதின் பலன் விளையும் வரைக்கும் பழைய பலனைச் சாப்பிடுவார்கள் (லேவி 25:22).

ஏழாம் வருஷத்தில் விதை விதைக்காமல், அறுவடை செய்யாமலும் இருப்பதினால், இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு குறைவும் ஏற்படாது. கர்த்தர் ஆறாம் வருஷத்திலே அவர்களுக்கு ஆசீர்வாதத்தை அநுக்கிரகம் பண்ணுகிறார். ஆறாம் வருஷத்தின் அறுவடை அவர்களுக்கு மூன்று வருஷத்தின் பலனை தரும். புதிய பலன் விளையும் வரைக்கும் அவர்கள் ஆறாம் வருஷத்தின் ஆசீர்வாதத்தினால், பழைய பலனை சாப்பிடுவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிற வாக்குத்தத்தம், விசுவாசிகளாகிய நமக்கு உற்சாகமான வார்த்தையாயிருக்கிறது. எக்காலத்திலும் நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தர்மீது நம்முடைய கவலைகளையும் பாரங்களையும் வைத்துவிட்டு, நாம் கர்த்தரை சார்ந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தரை நம்புகிறவர்களுக்கு ஒரு குறைவும் ஏற்படாது. நாம் கர்த்தருடைய வார்த்தையைக் கனம்பண்ணி, அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது, கர்த்தர் நம்மைப் பாதுகாத்து பராமரிக்கிறார்.

யூபிலி வருஷம் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஏழு ஓய்வு வருஷங்களுள்ள ஏழு ஏழு வருஷங்களை எண்ணுவாயாக; அந்த ஏழு ஓய்வு வருஷங்களும் நாற்பத்தொன்பது வருஷமாகும்.

2. ஏழாம் மாதம் பத்தாந்தேதியில் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும்; பாவ நிவாரணநாளில் உங்கள் தேசமெங்கும் எக்காளச்சத்தம் தொனிக்கும்படி செய்ய வேண்டும் (லேவி 25:9).

3. ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக்கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறவேண்டும் (லேவி 25:10).

4. ஐம்பதாம் வருஷம் உங்களுக்கு யூபிலி வருஷமாயிருப்பதாக (லேவி 25:10-13).

5. யூபிலி வருஷத்தில் உங்களில் அவனவன் தன்தன் காணியாட்சிக்குத் திரும்பிப் போகக்கடவன்.

6. யூபிலி வருஷத்தில் உங்களில் அவனவன் தன் தன் குடும்பத்திற்குத் திரும்பிப் போகக்கடவன்.

7. யூபிலி வருஷத்தில் விதைக்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளைக்கழிக்காமல் விடப்பட்ட திராட்சச் செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருக்கவேண்டும் (லேவி 25:11).

8. யூபிலி வருஷம்; அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருக்கவேண்டும் (லேவி 25:12).

9. யூபிலி வருஷத்தில் வயல்வெளியில் விளைந்தவைகளை நீங்கள் புசிக்க வேண்டும்.

10. பிறனுக்கு எதையாவது விற்றாலும், அவனிடத்தில் எதையாவது கொண்டாலும் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யாமல், யூபிலி வருஷத்துக்குப் பின்வரும் வருஷங்களின் தொகைக்கேற்கப் பிறனிடத்தில் கொள்ள வேண்டும் (லேவி 25:14-17).

11. ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக்கூடாது (லேவி 25:14,17).

12. உன் தேவனுக்குப் பயப்படவேண்டும்.

தேசம் கர்த்தருடையது லேவி 25:23-38

லேவி 25:23. தேசம் என்னுடையதாயிருக்கிறபடியால், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்; நீங்கள் பரதேசிகளும் என்னிடத்தில் புறக்குடிகளுமாயிருக்கிறீர்கள்.

லேவி 25:24. உங்கள் காணியாட்சியான தேசமெங்கும் நிலங்களை மீட்டுக்கொள்ள இடங்கொடுக்கக்கடவீர்கள்.

லேவி 25:25. உங்கள் சகோதரன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியிலே சிலதை விற்றால், அவன் இனத்தான் ஒருவன் வந்து, தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன்.

லேவி 25:26. அதை மீட்க ஒருவனும் இல்லாமல், தானே அதை மீட்கத்தக்கவனானால்,

லேவி 25:27. அதை விற்றபின் சென்ற வருஷங்களின் தொகையைத் தள்ளி, மீந்த தொகையை ஏற்றி, கொண்டவனுக்குக் கொடுத்து, அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பிப்போகக்கடவன்.

லேவி 25:28. அப்படிக் கொடுப்பதற்கான நிர்வாகம் அவனுக்கு இல்லாவிட்டால், அவன் விற்றது வாங்கினவன் கையிலே யூபிலி வருஷம்மட்டும் இருந்து, யூபிலி வருஷத்திலே அது விடுதலையாகும்; அப்பொழுது அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பப் போவான்.

லேவி 25:29. ஒருவன் மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள தன் வாசஸ்தலமாகிய வீட்டை விற்றால், அதை விற்ற ஒரு வருஷத்துக்குள் அதை மீட்டுக்கொள்ளலாம்; ஒரு வருஷத்துக்குள்ளாகவே அதை மீட்டுக்கொள்ளவேண்டும்.

லேவி 25:30. ஒரு வருஷத்துக்குள்ளே அதை மீட்டுக்கொள்ளாதிருந்தால், மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள அந்த வீடு தலைமுறைதோறும் அதை வாங்கினவனுக்கே உரியதாகும்; யூபிலி வருஷத்திலும் அது விடுதலையாகாது.

லேவி 25:31. மதில்சூழப்படாத கிராமங்களிலுள்ள வீடுகளோ, தேசத்தின் நிலங்கள்போலவே எண்ணப்படும்; அவைகள் மீட்கப்படலாம்; யூபிலி வருஷத்தில் அவைகள் விடுதலையாகும்.

லேவி 25:32. லேவியரின் காணியாட்சியாகிய பட்டணங்களிலுள்ள வீடுகளையோ லேவியர் எக்காலத்திலும் மீட்டுக்கொள்ளலாம்.

லேவி 25:33. இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே லேவியருடைய பட்டணங்களிலுள்ள வீடுகள் அவர்களுக்குரிய காணியாட்சியானபடியால், லேவியரிடத்தில் அவனுடைய காணியாட்சிப் பட்டணத்திலுள்ள வீட்டை ஒருவன் வாங்கினால், விற்கப்பட்ட அந்த வீடு யூபிலி வருஷத்தில் விடுதலையாகும்.

லேவி 25:34. அவர்கள் பட்டணங்களைச் சூழ்ந்த வெளிநிலம் விற்கப்படலாகாது; அது அவர்களுக்கு நித்திய காணியாட்சியாயிருக்கும்.

லேவி 25:35. உன் சகோதரன் தரித்திரப்பட்டு, கையிளைத்துப் போனவனானால், அவனை ஆதரிக்கவேண்டும்; பரதேசியைப் போலும் தங்கவந்தவனைப்போலும் அவன் உன்னோடே பிழைப்பானாக.

லேவி 25:36. நீ அவன் கையில் வட்டியாவது பொலிசையாவது வாங்காமல், உன் தேவனுக்குப் பயந்து, உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படி செய்வாயாக.

லேவி 25:37. அவனுக்கு உன் பணத்தை வட்டிக்கும், உன் தானியத்தைப் பொலிசைக்கும் கொடாயாக.

லேவி 25:38. உங்களுக்குக் கானான் தேசத்தைக் கொடுத்து, உங்களுக்கு தேவனாயிருக்கும்படி, உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே.

கானான் தேசத்திலுள்ள இஸ்ரவேலரின் வீடுகளைப்பற்றிய பிரமாணத்தை கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். மேலும் இஸ்ரவேல் புத்திரர் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியில் சிலதை விற்கும்போது, என்ன செய்யப்படவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

“தேசம் என்னுடையதாயிருக்கிறபடியால், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்; நீங்கள் பரதேசிகளும் என்னிடத்தில் புறக்குடிகளுமாயிருக்கிறீர்கள்” (லேவி 25:23) என்பதே கர்த்தருடைய வார்த்தை. இஸ்ரவேல் தேசம் கர்த்தருடையது. கர்த்தர் கானான் தேசத்தை இஸ்ரவேல் தேசத்திற்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். அந்த தேசத்திலே அவர்களுக்கு குடியிருப்பதற்கு மாத்திரமே உரிமை உண்டு. அதை விற்க கர்த்தர் அவர்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை.

கர்த்தரே பூமியைச் சிருஷ்டித்தவர். ஆகையினால், பூமி கர்த்தருடையது. நிலங்களை அடகு வைப்பது, விற்பது ஆகியவை நிரந்தரமான காலத்திற்கென்று இருக்கக்கூடாது. இவை தற்காலிகமாக இருக்கவேண்டும். ஏனெனில் ஐம்பதாம் வருஷம் யூபிலி வருஷம். யூபிலி வருஷத்தில் எல்லாம் மீட்கப்படும். அந்த வருஷத்தில் விற்கப்பட்ட நிலம் நிலத்தின் சொந்தக்காரருக்கே திரும்பப் போய் சேர்ந்துவிடும் (லேவி 25:8-17,23-24).

கானான் தேசத்தில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஐசுவரியவான்களாயிருப்பதில்லை. அவர்களில் சிலர் தரித்திரப்பட்டுப் போகிறார்கள். "உங்கள் சகோதரன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியிலே சிலதை விற்றால், அவன் இனத்தான் ஒருவன் வந்து, தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன்" (லேவி 25:25) என்று கர்த்தர் சொல்லுகிறார். தங்கள் காணியாட்சியான தேசமெங்கும் நிலங்களை மீட்டுக்கொள்ள இஸ்ரவேல் புத்திரர் இடம் கொடுக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 25:24).

கானான் தேசம் கர்த்தருடையது. கர்த்தர் தம்முடைய தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தர தேசமாக கொடுத்திருக்கிறார். கர்த்தர் தாமே தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, கானான் தேசத்தின் நிலங்களை இஸ்ரவேல் புத்திரரின் குடும்பங்களுக்கு பங்கு பிரித்து கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் கானான் தேசத்தின் நிலம் பங்குவீதமாக கொடுக்கப்பட்டிருக்கிறது.

கானான் தேசம் கர்த்தருடையதாகயிருப்பதினால், அந்த தேசத்து நிலங்களை இஸ்ரவேல் புத்திரர் அறுதியாய் விற்கக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் பரதேசிகளாகவும், புறக்குடிகளாகவும் இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியில் சிலதை விற்றுப்போட்டால், பிற்காலத்தில் அதை மீட்டுக்கொள்வதற்கு அவனுக்கு திராணி வரும்போது, யூபிலி வருஷம் வருவதற்கு முன்பாகவே அவன் அதை மீட்டுக்கொள்ளலாம். தன்னுடைய காணியாட்சியை மீட்க யூபிலி வருஷம் வரும் வரையிலும் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை.

உங்கள் காணியாட்சியான தேசமெங்கும் நிலங்களை மீட்டுக்கொள்ள இடங்கொடுக்கக்கடவீர்கள் (லேவி 25:24) என்றும்,

உங்கள் சகோதரன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியிலே சிலதை விற்றால், அவன் இனத்தான் ஒருவன் வந்து, தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன் (லேவி 25:25) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

தரித்திரன் விற்றுப்போட்ட நிலத்தை அவனோ, அல்லது அவனுடைய இனத்தானோ மீட்க வேண்டும் (லேவி 25:25-26). மீட்பின் கிரயம் யூபிலி வருஷத்திற்கு முந்தியுள்ள வருஷங்களின் பிரகாரம் கணக்கிடப்படும் (லேவி 25:8-10).

அதை மீட்க ஒருவனும் இல்லாமல், தானே அதை மீட்கத்தக்கவனானால், அதை விற்றபின் சென்ற வருஷங்களின் தொகையைத் தள்ளி, மீந்த தொகையை ஏற்றி, கொண்டவனுக்குக் கொடுத்து, அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பிப்போகக்கடவன் (லேவி 25:26,27) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

தரித்திரனுக்கு யூபிலி வருஷத்தில் மற்றொரு வாய்ப்பு கொடுக்கப் படுகிறது. அவன் தன்னுடைய பொருளாதாரக் காரியங்களை மறுபடியும் ஆரம்பிக்கலாம்.

ஒருவன் தான் விற்ற நிலத்தை மீட்டுக்கொள்ளும்போது, யூபிலி வருஷத்திற்கு பின்வரும் வருஷங்களின் தொகைக்கேற்ப, அதற்கு கிரயம் செலுத்தி அதை மீட்டுக்கொள்ளவேண்டும். தன்னுடைய காணியாட்சியை அவன் எந்த வருஷம் விற்றானோ, அதை விற்ற பின் சென்ற வருஷங்களின் தொகையை தள்ளி மீந்த தொகையை ஏற்றி, அதை கொண்டவனுக்கு கொடுத்து, அவன் தன்னுடைய காணியாட்சியை மீட்டுக்கொள்ளவேண்டும். தன்னுடைய காணியாட்சியை மீட்டுக்கொள்ள ஒருவனுக்கு திராணியில்லாமல் போனால், அவன் விற்றதை, அவனுடைய சகோதரன் மீட்டுக்கொள்ளலாம்.

"அதைக் கேட்டு வாங்குகிறதற்கு இனத்தான் ஒருவனும் இல்லாதிருந்தால், அப்பொழுது அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படி ஆட்டுக்கடா செலுத்தப்படுவதுமல்லாமல், கர்த்தருக்கு அந்த அபராதம் செலுத்தப்பட்டு, அது ஆசாரியனைச் சேரவேண்டும்" (எண் 5:8).

"நீ யார் என்று கேட்டான்; அவள், நான் உம்முடைய அடியாளாகிய ரூத்; நீர் உம்முடைய அடியாள்மேல் உம்முடைய போர்வையை விரியும்; நீர் சுதந்தரவாளி என்றாள்" (ரூத் 3:9).

இந்த வசனங்களில் "இனத்தான்", "சுதந்தரவாளி" ஆகிய வார்த்தைகள் எபிரெய பாஷையில் "கோயல்" என்று அழைக்கப்படுகிறது. கோயல் என்னும் எபிரெய வார்த்தைக்கு "மீட்பர்" என்று பொருள் சொல்லலாம். சுதந்தரவாளி கிறிஸ்துவுக்கு அடையாளமானவர். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மானிட ரூபம் தரித்து, நம்முடைய சுதந்தரவாளியானார்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் தரித்திரப்பட்டு தன்னுடைய காணியாட்சியை விற்ற பின்பு, யூபிலி வருஷத்திற்கு முன்பு அதை மீட்டுக்கொள்வதற்கு அவனுக்கு திராணியில்லாமல் போகலாம். அவ்வாறு அவன் தன்னுடைய காணியாட்சியை யூபிலி வருஷத்திற்கு முன்பு மீட்டுக்கொள்ளவில்லையென்றால், யூபிலி வருஷத்தின்போது அவனுடைய காணியாட்சி நிலம் தானாகவே விடுதலையாகிவிடும். யூபிலி வருஷம் விடுதலையின் வருஷம்.

"அப்படிக் கொடுப்பதற்கான நிர்வாகம் அவனுக்கு இல்லாவிட்டால், அவன் விற்றது வாங்கினவன் கையிலே யூபிலி வருஷம்மட்டும் இருந்து, யூபிலி வருஷத்திலே அது விடுதலையாகும்; அப்பொழுது அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பப் போவான்" (லேவி 25:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாவிகளாகிய நாம் தேவனுடைய கிருபையினால் இலவசமாய் இரட்சிக்கப்படுகிறோம். நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள நமக்கு திராணியில்லை. பாவிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய மீட்கும் கிருபையினால், இரட்சிப்பு இலவசமாக கொடுக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஆதி பெற்றோராகிய ஆதாமும் ஏவாளும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்தார்கள். அவர்களுடைய கீழ்ப்படியாமையினால் பரதீசுக்கு அடையாளமான ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஆதாமும் ஏவாளும் இழந்துபோன சிலாக்கியத்தை, நம்முடைய மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக, நாம் திரும்ப பெற்றிருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நாம் பரதீசுக்குள் பிரவேசிக்கிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் விற்றுப்போட்ட காணியாட்சி நிலத்தை மீட்டுக்கொள்வது போல, தங்களுடைய வீடுகளை விற்றுப்போட்டால், அதையும் மீட்டுக்கொள்ளலாம். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் வீடுகளை இரண்டுவிதமாக பிரிக்கிறார். ஒன்று மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள வீடுகள். மற்றொன்று மதில் சூழப்படாத கிராமங்களிலுள்ள வீடுகள்.

இஸ்ரவேல் புத்திரர் மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள தங்கள் வாசஸ்தலமாகிய வீட்டை அதிக பிரயாசப்பட்டு கட்டியிருப்பார்கள். அவர்களுடைய பிரயாசங்களின் பலனெல்லாம் அந்த வீடாகவே இருக்கும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது அவர்களுக்கு வீடுகளை வாசஸ்தலமாக கொடுக்கிறார். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரரில் சிலர் தரித்திரப்பட்டு, தங்கள் காணியாட்சி நிலங்களை விற்றுப்போடுவதுபோல, தங்கள் வீடுகளையும் விற்றுப்போடுகிறார்கள்.

ஒருவன் மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள தன் வாசஸ்தலமாகிய வீட்டை விற்றால், அதை விற்ற ஒரு வருஷத்துக்குள் அதை மீட்டுக்கொள்ளலாம்; ஒரு வருஷத்துக்குள்ளாகவே அதை மீட்டுக்கொள்ளவேண்டும் (லேவி 25:29).

மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள வீடுகளுக்கும், மதில்சூழப் படாத பட்டணத்திலுள்ள வீடுகளுக்கும் வெவ்வேறு பிரமாணங்கள் உள்ளன. மதில்சூழப்படாத கிராமங்களிலுள்ள வீடுகளோ, தேசத்தின் நிலங்கள்போலவே பாவிக்கவேண்டும்; அவைகள் மீட்கப்படலாம்; யூபிலி வருஷத்தில் அவைகள் விடுதலையாகும் (லேவி 25:29-30= லேவி 25:31).

மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ளவர்கள் தங்களுடைய வீடுகளை விற்றுப்போட்டால், அதை விற்ற ஒரு வருஷத்திற்குள் மீட்க வேண்டும். இல்லையெனில், அந்த வீடு தலைமுறைதோறும் அதை வாங்கினவனுக்கே உரியதாகும்; யூபிலி வருஷத்திலும் அது விடுதலையாகாது.

ஒரு வருஷத்துக்குள்ளே அதை மீட்டுக்கொள்ளாதிருந்தால், மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள அந்த வீடு தலைமுறைதோறும் அதை வாங்கினவனுக்கே உரியதாகும்; யூபிலி வருஷத்திலும் அது விடுதலையாகாது (லேவி 25:30).

மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள வீட்டை விற்றவன், விற்ற ஒரு வருஷத்திற்குள்ளே அதை மீட்டுக்கொள்ளவேண்டும். அவ்வாறு மீட்டுக்கொள்ளவில்லையென்றால் அந்த வீடு யூபிலி வருஷத்திலே தானாக விடுதலையாகாது. அந்த வீட்டை வாங்கினவனுக்கு அது தலைமுறை தலைமுறை தோறும் உரியதாகயிருக்கும். வாங்கினவனுக்கு வீடு சொந்தமாகிவிடும். அவனுடைய தலைமுறையார் அந்த வீட்டிலே நிரந்தரமாக குடியிருக்கலாம்.

மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள வீடுகளைப்பற்றி கர்த்தர் சொல்லுகிற பிரமாணம் அந்நியருக்கும், யூதமார்க்கத்தமைந்த புறஜாதி ஜனங்களுக்கும் பிரயோஜனமாயிருக்கிறது. அவர்கள் இஸ்ரவேல் தேசத்திலே வந்து, அங்கே தங்களுக்கு வீடுகளை வாங்கி, அதிலே குடியிருப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது.

அந்நியராலும், யூதமார்க்கத்தமைந்த புறஜாதியாராலும் கானான் தேசத்தில் நிலங்களை கிரயத்திற்கு வாங்க முடியாது. ஆனால் அவர்களால் மதில் சூழ்ந்த பட்டணத்திலுள்ள வீடுகளை கிரயத்திற்கு வாங்க முடியும். அந்த வீடுகளுக்கு அவர்களால் நிரந்தர சொந்தக்காரராக முடியும்.

மதில்சூழ்ந்த பட்டணங்களிலுள்ள வீடுகளைப்பற்றிய பிரமாணத்தில், லேவியருக்கு விசேஷித்த சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

லேவியரின் காணியாட்சியாகிய பட்டணங்களிலுள்ள வீடுகளை, லேவியர் எக்காலத்திலும் மீட்டுக்கொள்ளலாம் (லேவி 25:32).

இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே லேவியருடைய பட்டணங்களிலுள்ள வீடுகள் அவர்களுக்குரிய காணியாட்சியானபடியால், லேவியரிடத்தில் அவனுடைய காணியாட்சிப் பட்டணத்திலுள்ள வீட்டை ஒருவன் வாங்கினால், விற்கப்பட்ட அந்த வீடு யூபிலி வருஷத்தில் விடுதலையாகும் (லேவி 25:33).

லேவியரின் வீடுகள் மீட்கப்படாவிட்டால், அந்த வீடு யூபிலி வருஷத்தில் தானாகவே விடுதலையாகும். அது மறுபடியும் அந்த லேவியனுக்கு சொந்தமாகும்.

மதில் சூழப்படாத கிராமங்களிலுள்ள வீடுகளுக்கு கர்த்தர் விசேஷித்த பிரமாணத்தை சொல்லுகிறார். மதில்சூழப்படாத கிராமங்களிலுள்ள வீடுகளோ, தேசத்தின் நிலங்கள்போலவே எண்ணப்படும்; அவைகள் மீட்கப்படலாம்; யூபிலி வருஷத்தில் அவைகள் விடுதலையாகும் (லேவி 25:31).

லேவியருடைய பட்டணங்களைச் சூழ்ந்த வெளிநிலம் விற்கப்படலாகாது; அது அவர்களுக்கு நித்திய காணியாட்சியாயிருக்கும் (லேவி 25:34).

இஸ்ரவேல் புத்திரர் தரித்திரரை ஆதரிக்கவேண்டும். "உன் சகோதரன் தரித்திரப்பட்டு, கையிளைத்துப் போனவனானால், அவனை ஆதரிக்கவேண்டும்; பரதேசியைப் போலும் தங்கவந்தவனைப்போலும் அவன் உன்னோடே பிழைப்பானாக" (லேவி 25:35) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூபிலி வருஷத்தில் எதை விடுதலைபண்ண முடியும், எதை விடுதலைபண்ண முடியாது என்பது பற்றி, லேவி 25:1-34 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. லேவி 25:35-55 ஆகிய வசனங்களில் அடிமைகளையும், வேலைக்காரரையும் பற்றிய பிரமாணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

தரித்திரப்பட்டு கையிளைத்துப்போன சகோதரனை ஆதரிப்பது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. சகோதரன் தரித்திரப்பட்டு, கையிளைத்துப் போனவனானால், அவனை ஆதரிக்கவேண்டும்.

2. பரதேசியைப் போலும் தங்கவந்தவனைப் போலும் அவன் உன்னோடே பிழைப்பானாக.

3. சகோதரனுக்கு பணத்தை வட்டிக்கும், தானியத்தைப் பொலிசைக்கும் கொடுக்கக் கூடாது (லேவி 25:36,37).

4. தேவனுக்குப் பயந்து, உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படி செய்ய வேண்டும் (லேவி 25:36,38).

தரித்திரப்பட்டு கையிளைத்துப்போன சகோதரனுக்கு உதவி புரிய வேண்டும். அவன் தன் தரித்திரனிமித்தம் தேசத்திலிருந்து துரத்தப்பட்டு விடக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் ஜீவிப்பதற்கு அவனுக்கும் ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். (லேவி 25:35-36).

நாம் எல்லோரையுமே சகோதரராக பாவிக்கவேண்டும். நம்முடைய தேவனாகிய கர்த்தர் மனுபுத்திரர் எல்லோருக்கும் பொதுவான பிதாவாகயிருக்கிறார்.

"நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ? நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, அவனவன் தன் தன் சகோதரனுக்குத் துரோகம்பண்ணுவானேன்?" (மல் 2:10).

இஸ்ரவேல் புத்திரர் தரித்திரரை ஆதாரிக்கவேண்டும். அவர்கள் தங்களோடே பிழைக்கும்படி அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். "நீ அவன் கையில் வட்டியாவது பொலிசையாவது வாங்காமல், உன் தேவனுக்குப் பயந்து, உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படி செய்வாயாக. அவனுக்கு உன் பணத்தை வட்டிக்கும், உன் தானியத்தைப் பொலிசைக்கும் கொடாயாக" (லேவி 25:36,37) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தன்னுடைய சொத்தை விருத்தி பண்ணுவதற்காக ஏழைகளை அநியாயமாய் நடத்தக்கூடாது (லேவி 25:37-38).

இஸ்ரவேல் ஜனத்தார் தரித்திரரை ஒடுக்கக்கூடாது. அவர்கள் தங்களோடே பிழைப்பதற்கு உதவி செய்யவேண்டும். அவர்கள் தங்கள் பணத்தை தரித்திரருக்கு வட்டிக்கு கொடுக்கக்கூடாது. தங்கள் தானியத்தை பொலிசைக்கு கொடுக்கக் கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் தரித்திரர் கையில் வட்டியாவது, பொலிசையாவது வாங்காமல், அவர்களும் தங்களோடுகூட பிழைப்பதற்கு உதவி செய்யவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணத்தை சொல்லும்போது, அவர்களுக்கு தாம் ஏற்கெனவே செய்த உதவிகளை இங்கு ஞாபகப்படுத்துகிறார். "உங்களுக்குக் கானான் தேசத்தைக் கொடுத்து, உங்களுக்கு தேவனாயிருக்கும்படி, உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே" (லேவி 25:38) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே" என்று, கர்த்தர் நான்கு வசனங்களில் இதுபற்றிச் சொல்லுகிறார். (லேவி 25:38,42,55; லேவி 26:13)

நிலங்களை மீட்டுக்கொள்வது பற்றிய பிரமாணத்தின் விவரம் :

1. தேசம் என்னுடையதாயிருக்கிறபடியால், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்.

2. சகோதரன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியிலே சிலதை விற்றால், அவன் இனத்தான் ஒருவன் வந்து, தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன் (லேவி 25:24-27).

3. நிலத்தை மீட்பதற்கான நிர்வாகம் அவனுக்கு இல்லாவிட்டால், அவன் விற்றது வாங்கினவன் கையிலே யூபிலி வருஷம்மட்டும் இருந்து, யூபிலி வருஷத்திலே அது விடுதலையாகும்; அப்பொழுது அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பப் போவான் (லேவி 25:28).

4. ஒருவன் மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள தன் வாசஸ்தலமாகிய வீட்டை விற்றால், அதை விற்ற ஒரு வருஷத்துக்குள் அதை மீட்டுக் கொள்ளலாம் (லேவி 25:29).

5. ஒரு வருஷத்துக்குள்ளே அதை மீட்டுக்கொள்ளாதிருந்தால், மதில்சூழ்ந்த பட்டணத்திலுள்ள அந்த வீடு தலைமுறைதோறும் அதை வாங்கினவனுக்கே உரியதாகும்; யூபிலி வருஷத்திலும் அது விடுதலையாகாது (லேவி 25:30).

6. மதில்சூழப்படாத கிராமங்களிலுள்ள வீடுகளோ, தேசத்தின் நிலங்கள்போலவே எண்ணப்படும்; அவைகள் மீட்கப்படலாம்; யூபிலி வருஷத்தில் அவைகள் விடுதலையாகும் (லேவி 25:31).

7. லேவியரின் காணியாட்சியாகிய பட்டணங்களிலுள்ள வீடுகளையோ லேவியர் எக்காலத்திலும் மீட்டுக்கொள்ளலாம் (லேவி 25:32).

8. லேவியரிடத்தில் அவனுடைய காணியாட்சிப் பட்டணத்திலுள்ள வீட்டை ஒருவன் வாங்கினால், விற்கப்பட்ட அந்த வீடு யூபிலி வருஷத்தில் விடுதலையாகும் (லேவி 25:33).

9. லேவியரின் பட்டணங்களைச் சூழ்ந்த வெளிநிலம் விற்கப்படலாகாது; அது அவர்களுக்கு நித்திய காணியாட்சியாயிருக்கும் (லேவி 25:34).

மனுஷனுக்கு விடுதலை லேவி 25:39-55

லேவி 25:39. உன் சகோதரன் தரித்திரனாகி, உனக்கு விலைப்பட்டுப் போனால், அவனை அடிமையைப்போல ஊழியஞ்செய்ய நெருக்கவேண்டாம்.

லேவி 25:40. அவன் கூலிக்காரனைப் போலவும் தங்கவந்தவனைப்போலவும் உன்னோடே இருந்து, யூபிலி வருஷம்மட்டும் உன்னிடத்தில் சேவிக்கக்கடவன்.

லேவி 25:41. பின்பு, தன் பிள்ளைகளோடுங்கூட உன்னைவிட்டு நீங்கலாகி, தன் குடும்பத்தாரிடத்துக்கும் தன் பிதாக்களின் காணியாட்சிக்கும் திரும்பிப்போகக்கடவன்.

லேவி 25:42. அவர்கள் நான் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின என்னுடைய ஊழியக்காரர்; ஆகையால், அவர்கள் அடிமைகளாக விற்கப்படலாகாது.

லேவி 25:43. நீ அவனைக் கொடூரமாய் ஆளாமல், உன் தேவனுக்குப் பயந்திரு.

லேவி 25:44. உனக்கு இருக்கும் ஆண் அடிமையும் பெண் அடிமையும் சுற்றிலும் இருக்கிற புறஜாதிகளாயிருக்கவேண்டும்; அவர்களில் நீ ஆண் அடிமையையும் பெண் அடிமையையும் விலைக்கு வாங்கலாம்.

லேவி 25:45. உங்களிடத்திலே பரதேசிகளாய்த் தங்குகிற அந்நிய புத்திரரிலும், உங்கள் தேசத்தில் உங்களிடத்திலே பிறந்திருக்கிற அவர்களுடைய குடும்பத்தாரிலும் நீங்கள் உங்களுக்கு அடிமைகளைக் கொண்டு, அவர்களை உங்களுக்குச் சுதந்தரமாக்கலாம்.

லேவி 25:46. அவர்களை உங்களுக்கு பின்வரும் உங்கள் சந்ததியாரும் சுதந்தரிக்கும்படி நீங்கள் அவர்களைச் சுதந்தரமாக்கிக் கொள்ளலாம்; என்றைக்கும் அவர்கள் உங்களுக்கு அடிமைகளாயிருக்கலாம்; உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரோ ஒருவரையொருவர் கொடூரமாக ஆளக்கூடாது.

லேவி 25:47. உன்னிடத்தில் இருக்கிற பரதேசியும் அந்நியனும் செல்வனாயிருக்க, அவனிடத்தில் இருக்கிற உன் சகோதரன் தரித்திரப்பட்டு, அந்தப் பரதேசிக்காவது, அந்நியனுக்காவது, பரதேசியின் குடும்பத்தாரில் எவனுக்காவது அவன் விலைப்பட்டுப்போனால்,

லேவி 25:48. அவன் விலைப்பட்டுபோனபின் திரும்ப மீட்கப்படலாம்; அவன் சகோதரரில் ஒருவன் அவனை மீட்கலாம்.

லேவி 25:49. அவனுடைய பிதாவின் சகோதரனாவது, அந்தச் சகோதரனுடைய புத்திரனாவது, அவன் குடும்பத்திலுள்ள அவனைச் சேர்ந்த இனத்தாரில் எவனாவது அவனை மீட்கலாம்; தன்னால் கூடுமானால், தன்னைத் தானே மீட்டுக்கொள்ளலாம்.

லேவி 25:50. அவன் தான் விலைப்பட்ட வருஷந்தொடங்கி, யூபிலி வருஷம்வரைக்கும் உண்டான காலத்தைத் தன்னை விலைக்குக் கொண்டவனுடன் கணக்குப்பார்க்கக்கடவன்; அவனுடைய விலைக்கிரயம் கூலிக்காரனுடைய காலக்கணக்குப்போல, வருஷத்தொகைக்கு ஒத்துப்பார்க்கவேண்டும்.

லேவி 25:51. இன்னும் அநேக வருஷங்கள் இருந்தால், அவன் தன் விலைக்கிரயத்திலே அவைகளுக்குத்தக்கதைத் தன்னை மீட்கும்பொருளாகத் திரும்பக் கொடுக்கக்கடவன்.

லேவி 25:52. யூபிலி வருஷம்மட்டும் மீதியாயிருக்கிற வருஷங்கள் கொஞ்சமேயானால், அவனோடே கணக்குப்பார்த்து, தன் வருஷங்களுக்குத்தக்கதை, தன்னை மீட்கும் பொருளாகத் திரும்பக் கொடுக்க வேண்டும்.

லேவி 25:53. இவன் வருஷத்திற்கு வருஷம் கூலிபொருந்திக்கொண்ட கூலிக்காரனைப்போல, அவனிடத்தில் இருக்கவேண்டும்; அவன் இவனை உனக்கு முன்பாகக் கொடூரமாய் ஆளக்கூடாது.

லேவி 25:54. இப்படி இவன் மீட்டுக்கொள்ளப்படாதிருந்தால், இவனும் இவனோடேகூட இவன் பிள்ளைகளும் யூபிலி வருஷத்தில் விடுதலையாவார்கள்.

லேவி 25:55. இஸ்ரவேல் புத்திரர் என் ஊழியக்காரர்; அவர்கள் நான் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின என் ஊழியக்காரரே; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்திருக்கிறார். அவர்கள் மறுபடியும் அடிமைகளாயிருக்கக்கூடாது என்பது தேவனுடைய சித்தம். இஸ்ரவேல் புத்திரர் அடிமைகளல்ல. அவர்கள் சுயாதீனமுள்ளவர்கள். அவர்கள் தேவனுக்கு விசேஷித்த ஜனமாயிருக்கிறவர்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சேஷ்டபுத்திர ஆசீர்வாதம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது.

விடுதலையாயிருக்கவேண்டிய இஸ்ரவேல் ஜனத்தாரை யாரும் அடிமைப்படுத்தக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர்கூட, தங்கள் சகோதரரை அடிமையைப்போல ஊழியம் செய்ய நெருக்கக்கூடாது. "உன் சகோதரன் தரித்திரனாகி, உனக்கு விலைப்பட்டுப் போனால், அவனை அடிமையைப்போல ஊழியஞ்செய்ய நெருக்கவேண்டாம்" *(லேவி 25:39)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் தரித்திரனாகி கடன்பட்டுப்போனதினால், அவன் மற்றொரு இஸ்ரவேல் புத்திரனுக்கு விலைப்பட்டுப்போகலாம். அல்லது தான் செய்த குற்றத்தினிமித்தமாக, இஸ்ரவேல் புத்திரன் கூலிக்காரனைப்போல சேவை செய்யவேண்டியது வரலாம். நியாயாதிபதிகள் இஸ்ரவேல் புத்திரரை தண்டிக்கலாம்.

இஸ்ரவேல் புத்திரர் தரித்திரனாகி விலைப்பட்டுப்போனாலும், தாங்கள் செய்த குற்றங்களினிமித்தமாக தண்டிக்கப்பட்டாலும் அவர்கள் ஆறு வருஷங்களுக்கு மாத்திரமே கூலிக்காரனைப்போல சேவை செய்யவேண்டும். ஏழாவது வருஷத்தில் அவர்கள் விடுவிக்கப்படவேண்டும்.

"எபிரெயரில் ஒரு அடிமையைக் கொண்டாயானால், அவன் ஆறுவருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே ஒன்றும் கொடாமல் விடுதலைபெற்றுப் போகக்கடவன்" *(யாத் 21:2)*.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் தரித்திரனாகி, பிறனிடத்தில் கடன்பட்டு, அந்தக் கடனை அடைக்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதிருக்கும்போது, தனக்கு கடன் கொடுத்தவனுக்கு அவன் விலைப்பட்டுப்போக வாய்ப்புள்ளது. தான் பட்ட கடனை அடைப்பதற்கு அவனுக்கு எந்தவிதமான நிர்வாகமும் இல்லையென்றால், அவனுடைய சரீரமும் ஜீவனும் மாத்திரமே அவனிடத்தில் இருக்கும். இஸ்ரவேல் புத்திரன் தான் பட்ட கடனுக்காக தன் சரீரத்தையும் ஜீவனையும் விலைப்பட்டுப் போகப்பண்ணலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் விலைப்பட்டுப் போனவனுக்கு என்ன செய்யவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

உன் சகோதரன் தரித்திரனாகி, உனக்கு விலைப்பட்டுப்போனால், அவனை அடிமையைப்போல ஊழியஞ்செய்ய நெருக்க வேண்டாம். அவன் கூலிக்காரனைப்போலவும் தங்கவந்தவனைப்போலவும் உன்னோடே இருந்து, யூபிலி வருஷம்மட்டும் உன்னிடத்தில் சேவிக்கக்கடவன் *(லேவி 25:39,40)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தரித்திரனாகி விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரனை, விலைக்கு வாங்கின இஸ்ரவேல் புத்திரன் அடிமையைப்போல ஊழியம் செய்ய நெருக்கக்கூடாது. தரித்திரனாகி விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரனை அடிமைகளாக விற்கவும் கூடாது *(லேவி 25:42)*. விலைப்பட்டுப்போனவன் கூலிக்காரனைப் போலவும் தங்க வந்தவனைப்போலவும், தன்னை விலைக்கு வாங்கினவனிடத்தில் சேவிக்கவேண்டும்.

விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரனை, அவனுடைய எஜமான் அடிமையைப்போல நடத்தக்கூடாது. அவனை ஒரு கூலிக்காரனைப்போல நடத்தலாம். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்திருக்கிறார். கர்த்தர் விடுவித்தவர்களை மனுஷன் அடிமைப்படுத்தக்கூடாது.

அவர்கள் நான் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின என்னுடைய ஊழியக்காரர்; ஆகையால், அவர்கள் அடிமைகளாக விற்கப்படலாகாது *(லேவி 25:42)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரனை விலைக்கு வாங்கினவன் கொடூரமாய் ஆளுகை செய்யக்கூடாது. அவனை விலைக்கு வாங்கினவனும் தன்னுடைய தேவனாகிய கர்த்தருக்கு பயந்திருக்கவேண்டும். தானும் அல்லது தன்னுடைய முன்னோரும் ஒரு காலத்தில் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தவர்கள் என்பதையும், கர்த்தர் தாமே எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவித்தவர் என்பதையும் அவர்கள் நினைவுகூரவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தபோது எகிப்தியர்கள் அவர்களை கொடூரமாய் ஆளுகை செய்தார்கள். எகிப்தியரின் ஆளோட்டிகள் அவர்களை அடித்து துன்பப்படுத்தினார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அதுபோன்ற துன்பமும் வேதனையும் மறுபடியும் வரக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரன் தரித்திரனாகி, மற்றொரு இஸ்ரவேல் புத்திரனுக்கு விலைப்பட்டுப்போகும்போது, அவன் கூலிக்காரனைப்போல வேலை செய்யவேண்டும். அவனை விலைக்கு வாங்கினவன் அவனை அடிமையைப்போல ஊழியம் செய்ய நெருக்கக்கூடாது. விலைப்பட்டுப்போனவனும் ஆபிரகாமின் சந்ததியைச் சேர்ந்தவனாயிருக்கிறான் என்னும் எண்ணம், அவனை விலைக்கு கொண்டவனுடைய மனதில் இருக்கவேண்டும்.

விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரன் யூபிலி வருஷமட்டும், தன்னை விலைக்கு வாங்கினவனிடத்தில் சேவிக்கவேண்டும். பின்பு அவன் தன் பிள்ளைகளோடுங்கூட உன்னைவிட்டு நீங்கலாகி, தன் குடும்பத்தாரிடத்துக்கும் தன் பிதாக்களின் காணியாட்சிக்கும் திரும்பிப்போகக்கடவன் *(லேவி 25:41)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூபிலி வருஷத்தின் எக்காள சத்தம் தொனிக்கப்படுவதற்கு பத்து நாட்களுக்கு முன்பே, யூதர்கள் மத்தியிலே விலைப்பட்டுப்போயிருக்கிற இஸ்ரவேல் புத்திரரை விடுதலைபண்ணும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகிவிடும் என்று யூதமார்க்கத்தின் சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். அப்போது, எஜமான்கள் தங்கள் வேலைக்காரர்களுக்கு புதிய வஸ்திரங்களைக் கொடுத்து, அவர்களுக்கு விருந்து உபசரணை செய்து, அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தாரையும், அவர்களுடைய பூர்வீக காணியாட்சிக்கு அனுப்பி வைப்பது வழக்கம்.

எபிரெயரில் விலைப்பட்டுப்போனவன் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. உன் சகோதரன் தரித்திரனாகி, உனக்கு விலைப்பட்டுப்போனால், அவனை அடிமையைப் போல ஊழியஞ்செய்ய நெருக்கவேண்டாம்.

2. அவன் கூலிக்காரனைப்போலவும் தங்கவந்தவனைப்போலவும் உன்னோடே இருந்து, யூபிலி வருஷம்மட்டும் உன்னிடத்தில் சேவிக்கக்கடவன் (லேவி 25:40).

3. யூபிலி வருஷம்மட்டும் உன்னிடத்தில் சேவிக்கக்கடவன். பின்பு, தன் பிள்ளைகளோடுங் கூட உன்னைவிட்டு நீங்கலாகி, தன் குடும்பத்தாரிடத்துக்கும் தன் பிதாக்களின் காணியாட்சிக்கும் திரும்பிப்போகக்கடவன் (லேவி 25:40-41).

4. உன் சகோதரர்கள் அடிமைகளாக விற்கப்படக்கூடாது (லேவி 25:42-43).

5. நீ அவனைக் கொடூரமாய் ஆளாமல், உன் தேவனுக்குப் பயந்திரு (லேவி 25:43).

இஸ்ரவேல் புத்திரர், தங்கள் சகோதரர்களை அடிமையைப்போல ஊழியம் செய்ய நெருக்கக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் அடிமைகளாக விற்கப்படலாகாது என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் புறஜாதிகளை அடிமைகளாக விலைக்கு வாங்கலாம்.

உனக்கு இருக்கும் ஆண் அடிமையும் பெண் அடிமையும் சுற்றிலும் இருக்கிற புறஜாதிகளாயிருக்கவேண்டும்; அவர்களில் நீ ஆண் அடிமையையும் பெண் அடிமையையும் விலைக்கு வாங்கலாம் (லேவி 25:44) என்றும்,

அவர்களை உங்களுக்கு பின்வரும் உங்கள் சந்ததியாரும் சுதந்தரிக்கும்படி நீங்கள் அவர்களைச் சுதந்தரமாக்கிக் கொள்ளலாம்; என்றைக்கும் அவர்கள் உங்களுக்கு அடிமைகளாயிருக்கலாம்; உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரோ ஒருவரையொருவர் கொடூரமாக ஆளக்கூடாது (லேவி 25:46) என்றும் கர்த்தர் சொல்லுகிறார். அடிமைகளாகயிருக்கிற புறஜாதியாரை யூபிலி வருஷத்திலே விடுதலை பண்ணவேண்டியதில்லை.

புறஜாதியாரில் விலைப்பட்டுப்போனவன் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. உனக்கு இருக்கும் அடிமைகள் உன் சகோதரர்களாயிராமல் புறஜாதிகளாயிருக்க வேண்டும்.

2. பரதேசிகளாய்த் தங்குகிற அந்நிய புத்திரரில் அடிமைகளைக் கொள்ளலாம் (லேவி 25:45).

3. உங்கள் தேசத்தில் உங்களிடத்திலே பிறந்திருக்கிற அவர்களுடைய குடும்பத்தாரிலும் நீங்கள் உங்களுக்கு அடிமைகளைக் கொள்ளலாம் (லேவி 25:45).

4. அவர்களை உங்களுக்கு பின்வரும் உங்கள் சந்ததியாரும் சுதந்தரிக்கும்படி நீங்கள் அவர்களைச் சுதந்தரமாக்கிக் கொள்ளலாம்; என்றைக்கும் அவர்கள் உங்களுக்கு அடிமைகளாயிருக்கலாம்; உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரோ ஒருவரையொருவர் கொடூரமாக ஆளக்கூடாது (லேவி 25:46).

இஸ்ரவேல் புத்திரர் தரித்திரனாகி, மற்றொரு இஸ்ரவேல் புத்திரனிடத்தில் விலைப்பட்டுப்போவதுபோல, அவன் யூதமார்க்கத்தமைந்தவனிடத்திலும், இஸ்ரவேல் தேசத்திலே பரதேசியும் அந்நியனுமாயிருக்கிறவனிடத்திலும் விலைப்பட்டுப்போவதற்கு வாய்ப்புள்ளது.

உன்னிடத்தில் இருக்கிற பரதேசியும் அந்நியனும் செல்வனாயிருக்க, அவனிடத்தில் இருக்கிற உன் சகோதரன் தரித்திரப்பட்டு, அந்தப் பரதேசிக்காவது, அந்நியனுக்காவது, பரதேசியின் குடும்பத்தாரில் எவனுக்காவது அவன் விலைப்பட்டுப்போனால், அவன் விலைப்பட்டுபோனபின் திரும்ப மீட்கப்படலாம்; அவன் சகோதரரில் ஒருவன் அவனை மீட்கலாம் (லேவி 25:47,48) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவனுடைய பிதாவின் சகோதரனாவது, அந்தச் சகோதரனுடைய புத்திரனாவது, அவன் குடும்பத்திலுள்ள அவனைச் சேர்ந்த இனத்தாரில் எவனாவது அவனை மீட்கலாம்; தன்னால் கூடுமானால், தன்னைத் தானே மீட்டுக்கொள்ளலாம் (லேவி 25:49).

மீட்கும் இனத்தாரின் பிரமாணத்தைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது (லேவி 25:25, 48-49) ரூத்தின் புஸ்தகத்தில் இதைப் பற்றிய செய்தி தெளிவாக உள்ளது.

விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரனை மீட்டுக்கொள்வதற்கான மீட்பின் கிரயத்தைப்பற்றியும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

அவன் தான் விலைப்பட்ட வருஷந்தொடங்கி, யூபிலி வருஷம்வரைக்கும் உண்டான காலத்தைத் தன்னை விலைக்குக் கொண்டவனுடன் கணக்குப்பார்க்கக்கடவன்; அவனுடைய விலைக்கிரயம் கூலி க்காரனுடைய காலக்கணக்குப்போல, வருஷத்தொகைக்கு ஒத்துப்பார்க்கவேண்டும். இன்னும் அநேக வருஷங்கள் இருந்தால், அவன் தன் விலைக்கிரயத்திலே அவைகளுக்குத் தக்கதைத் தன்னை மீட்கும்பொருளாகத் திரும்பக் கொடுக்கக்கடவன். யூபிலி வருஷம்மட்டும் மீதியாயிருக்கிற வருஷங்கள் கொஞ்சமேயானால், அவனோடே கணக்குப்பார்த்து, தன் வருஷங்களுக்குத்தக்கதை, தன்னை மீட்கும் பொருளாகத் திரும்பக் கொடுக்க வேண்டும் (லேவி 25:50-52) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரனை விலைக்கு வாங்கின இஸ்ரவேல் புத்திரன் அடிமையைப்போல ஊழியம் செய்ய நெருக்கக்கூடாது. அதுபோலவே அவனை விலைக்கு வாங்கின பரதேசியும் அந்நியனுமாயிருக்கிறவன், அவனை கொடூரமாய் ஆளக்கூடாது. இஸ்ரவேல் புத்திரன் அந்நியனிடத்தில் வருஷத்திற்கு வருஷம் கூலிபொருந்திக்கொண்ட கூலிக்காரனைப்போல, அவனிடத்தில் இருக்கவேண்டும்; அந்நியன் இஸ்ரவேல் புத்திரனை கொடூரமாய் ஆளக்கூடாது (லேவி 25:53).

எபிரெயரில் அடிமையானவன் ஆறு வருஷங்களுக்கு மட்டுமே கூலிக்காரனாக வேலைசெய்வான். அதற்குப் பின்பு, அவன் தன்னை மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்தால் மட்டுமே அவனைக் கூலிக்காரனாக வேலைவாங்க முடியும் (யாத் 21:1-6).

தன்னை மீட்டுக்கொள்ள இஸ்ரவேல் புத்திரனுக்கு திராணியில்லையென்றால் அல்லது அவனை மீட்டுக்கொள்ள அவனுடைய இனத்தாரில் ஒருவனும் முன்வரவில்லையென்றால், இவனும் இவனோடேகூட இவன் பிள்ளைகளும் யூபிலி வருஷத்தில் விடுதலையாவார்கள் (லேவி 25:54). தன்னை மீட்கும் பொருளாக விலைக்கிரயத்தை கொடுக்க முடியாத இஸ்ரவேல் புத்திரன், யூபிலி வருஷத்திலே தானாகவே விடுதலையாவான். இது விலைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைத்திருக்கிற சிலாக்கியம்.

இஸ்ரவேல் புத்திரர் என் ஊழியக்காரர்; அவர்கள் நான் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின என் ஊழியக்காரரே; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் (லேவி 25:55) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அந்நியரிடத்தில் விலைப்பட்டுப்போன எபிரெயரைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. உன்னிடத்தில் இருக்கிற பரதேசியும் அந்நியனும் செல்வனாயிருக்க, அவனிடத்தில் இருக்கிற உன் சகோதரன் தரித்திரப்பட்டு, அந்தப் பரதேசிக்காவது, அந்நியனுக்காவது, பரதேசியின் குடும்பத்தாரில் எவனுக்காவது அவன் விலைப்பட்டுப் போனால்,அவன் விலைப்பட்டுபோனபின் திரும்ப மீட்கப்படலாம் (லேவி 25:47-48).

2. அவனுடைய பிதாவின் சகோதரனாவது, அந்தச் சகோதரனுடைய புத்திரனாவது, அவன் குடும்பத்திலுள்ள அவனைச் சேர்ந்த இனத்தாரில் எவனாவது அவனை மீட்கலாம் (லேவி 25:48-49).

3. தன்னால் கூடுமானால், தன்னைத் தானே மீட்டுக்கொள்ளலாம் (லேவி 25:49).

4. அவன் தான் விலைப்பட்ட வருஷந் தொடங்கி, யூபிலி வருஷம்வரைக்கும் உண்டான காலத்தைத் தன்னை விலைக்குக் கொண்டவனுடன் கணக்குப் பார்க்கக்கடவன் (லேவி 25:50-52).

5. இவன் வருஷத்திற்கு வருஷம் கூலி பொருந்திக்கொண்ட கூலிக்காரனைப் போல, அவனிடத்தில் இருக்கவேண்டும் (லேவி 25:53).

6. அவன் இவனை உனக்கு முன்பாகக் கொடூரமாய் ஆளக்கூடாது.

7. இவன் மீட்டுக்கொள்ளப்படாதிருந்தால், இவனும் இவனோடேகூட இவன் பிள்ளைகளும் யூபிலி வருஷத்தில் விடுதலையாவார்கள் (லேவி 25:54-55).

அந்நியரிடத்தில் விலைப்பட்டுப்போன எபிரெயரை மீட்பது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. எபிரெயரில் அடிமையாய் விலைப்பட்டுப் போனவன் ஆறு வருஷங்களுக்கு மட்டுமே வேலைசெய்வான். (யாத் 21:1-6). லேவி 25:40 ஆவது வசனத்தில் "யூபிலி வருஷம் மட்டும்" என்னும் வாக்கியம் யூபிலி வருஷத்திற்கு முந்திய ஆறு வருஷங்களைக் குறிக்கும். அடிமையானவன் தானாக மனமுவந்து ஒப்புக் கொண்டால், அவன் தன் வாழ்நாள் முழுவதும் எஜமானுக்குச் சேவைசெய்யலாம். (யாத் 21:1-6)

2. எபிரெயரில் அடிமையாய் விலைப்பட்டுப் போனவன் தன்னால் கூடுமானால், தன்னைத் தானே மீட்டுக்கொள்ளலாம். அல்லது அவன் குடும்பத்திலுள்ள அவனைச் சேர்ந்த இனத்தாரில் எவனாவது அவனை மீட்கலாம். (லேவி 25:47-49).

3. அவன் தான் விலைப்பட்ட வருஷந் தொடங்கி, யூபிலி வருஷம்வரைக்கும் உண்டான காலத்தைத் தன்னை விலைக்குக் கொண்டவனுடன் கணக்குப் பார்க்கக்கடவன்; (லேவி 25:48-53).

4. ஆறாவது வருஷத்தில் இவன் மீட்டுக்கொள்ளப்படாதிருந்தால், இவனும் இவனோடேகூட இவன் பிள்ளைகளும் யூபிலி வருஷத்தில் விடுதலையாவார்கள் (லேவி 25:54-55).

26 அதிகாரம்

கர்த்தருடைய பிரமாணத்தின் முக்கியமான அம்சங்கள் அனைத்தும் இந்த அதிகாரத்தில் நிறைவுபெறுகிறது. கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு ஆசீர்வாதமும், கீழ்ப்படியாதவர்களுக்கு தண்டனையும் கொடுக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார் என்னும் நம்பிக்கையில் நாம் அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லையென்றால் கர்த்தர் நம்மை தண்டிப்பார் என்னும் பயத்தோடு இருக்கவேண்டும். நம்முடைய ஆத்துமாவில் கர்த்தருக்கு பயப்படும் பயமும், கர்த்தர்மீது விசுவாசமும் இருக்கவேண்டும். இவை இரண்டும் நம்மை ஆளுகை செய்யும்போது, நாம் கர்த்தருக்கு பிரியமானவர்களாய் ஜீவிப்போம்.

தாம் ஏற்கெனவே சொன்ன பிரமாணங்களை கர்த்தர் இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார் (லேவி 26:1,2). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணுகிறார் (லேவி 26:3-13).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு செவிகொடாமல், அவருடைய கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமல், அவருடைய கட்டளைகளை வெறுத்து, அவருடைய உடன்படிக்கையை மீறிப்போடுவார்கள் என்றால் கர்த்தர் அவர்களை சபித்துப்போடுவதாக சொல்லுகிறார் (லேவி 26:14-39).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கை செய்து, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்கள் இருதயத்தைத் தாழ்த்தும்போது கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பதாகவும், அவர்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையை நினைத்து அவர்களை ஆசீர்வதிப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார் (லேவி 26:40-46).

உபாகமம் 28-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்களும், இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்களும் ஒன்றுபோலுள்ளது.

ஆசீர்வாதங்கள்
லேவி 26:1-13

லேவி 26:1. நீங்கள் உங்களுக்கு விக்கிரகங்களையும் சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்குச் சிலையை நிறுத்தாமலும், சித்திரந்தீர்ந்த கல்லை நமஸ்கரிக்கும்பொருட்டு உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

லேவி 26:2. என் ஓய்வுநாட்களை ஆசரித்து, என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தியாயிருப்பீர்களாக; நான் கர்த்தர்.

லேவி 26:3. நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்தால்,

லேவி 26:4. நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழைபெய்யப்பண்ணுவேன்; பூமி தன் பலனையும், வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும்.

லேவி 26:5. திராட்சப்பழம் பறிக்குங் காலம் வரைக்கும் போரடிப்புக் காலம் இருக்கும்; விதைப்புக் காலம்வரைக்கும் திராட்சப்பழம் பறிக்குங் காலம் இருக்கும்; நீங்கள் உங்கள் அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்டு, உங்கள் தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பீர்கள்.

லேவி 26:6. தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன்; தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் படுத்துக்கொள்வீர்கள்; துஷ்ட மிருகங்களைத் தேசத்தில் இராதபடிக்கு ஒழியப்பண்ணுவேன்; பட்டயம் உங்கள் தேசத்தில் உலாவுவதில்லை.

லேவி 26:7. உங்கள் சத்துருக்களைத் துரத்துவீர்கள்; அவர்கள் உங்கள் முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.

லேவி 26:8. உங்களில் ஐந்துபேர் நூறுபேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறுபேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள்; உங்கள் சத்துருக்கள் உங்களுக்கு முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.

லேவி 26:9. நான் உங்கள் மேல் கண்ணோக்கமாயிருந்து, உங்களைப் பலுகவும் பெருகவும் பண்ணி, உங்களோடே என் உடன்படிக்கையைத் திடப்படுத்துவேன்.

லேவி 26:10. போன வருஷத்துப் பழைய தானியத்தைச் சாப்பிட்டு, புதிய தானியத்துக்கு இடமுண்டாகும்படி, பழையதை விலக்குவீர்கள்.

லேவி 26:11. உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன்; என் ஆத்துமா உங்களை அரோசிப்பதில்லை.

லேவி 26:12. நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன்; நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்.

லேவி 26:13. நீங்கள் எகிப்தியருக்கு அடிமைகளாயிராதபடிக்கு, நான் அவர்கள் தேசத்திலிருந்து உங்களைப் புறப்படப்பண்ணி, உங்கள் நுகத்தடிகளை முறித்து, உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணங்களை சொல்லி, அவர்களுடைய கீழ்ப்படிதலை சோதித்துப் பார்க்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கட்டளைகளின்படி நடந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யவேண்டும். அப்போது கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தர் சீனாய் மலையிலே மோசேக்கு சொன்ன பத்துக்கட்டளைகளில் இரண்டாவது கட்டளையும் நான்காவது கட்டளையும் இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கட்டளை விக்கிரகாராதனை சம்பந்தமானது. மற்றொரு கட்டளை ஓய்வுநாளை ஆசரிப்பது சம்பந்தமானது.

"நீங்கள் உங்களுக்கு விக்கிரகங்களையும் சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்குச் சிலையை நிறுத்தாமலும், சித்திரந்தீர்ந்த கல்லை நமஸ்கரிக்கும்பொருட்டு உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" *(லேவி 26:1)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் விக்கிரகாராதனைக்கு விரோதமாக சொல்லும் பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. உங்களுக்கு விக்கிரகங்களை உண்டாக்க வேண்டாம்.
2. உங்களுக்குச் சுரூபங்களை உண்டாக்க வேண்டாம்.
3. உங்களுக்குச் சிலையை நிறுத்த வேண்டாம்.
4. சித்திரந்தீர்ந்த கல்லை நமஸ்கரிக்கும் பொருட்டு அவற்றை உங்கள் தேசத்தில் வைக்க வேண்டாம்.
5. என் ஓய்வுநாட்களை ஆசரிக்க வேண்டும். *(லேவி 26:2)*.
6. என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தியாயிருக்க வேண்டும்.

கர்த்தருக்கு உருவமில்லை. அவர் நித்திய ஆவியானவர். கர்த்தருடைய ரூபத்திற்கு ஒப்பாக எந்த விக்கிரகங்களையும், எந்த சுரூபங்களையும் உண்டாக்கக்கூடாது. கர்த்தரே சர்வசிருஷ்டிகர். கர்த்தருக்கு எந்த ரூபத்தையும் சிருஷ்டிக்கக்கூடாது. கர்த்தரை தொழுதுகொள்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

கர்த்தர் சர்வவியாபகர். நித்திய ஆவியாகயிருக்கிற கர்த்தர் எல்லா இடங்களிலும் இருக்கிறவர். கர்த்தருக்கு ஒரு விக்கிரகத்தை உண்டுபண்ணி, அவரை ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்திற்குள் மட்டுப்படுத்த வேண்டும் என்று நினைக்கக்கூடாது. தங்களுக்கு விக்கிரகங்களையும், சுரூபங்களையும் உண்டாக்கி, அதை தங்கள் தெய்வம் என்று சொல்லி பணிந்து கொள்கிறவர்கள் சத்தியத்தைப் பொய்யாக்குகிறார்கள். கர்த்தருடைய மகிமையை வெட்கப்படுத்துகிறார்கள்.

"என் ஓய்வுநாட்களை ஆசரித்து, என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தியாயிருப்பீர்களாக; நான் கர்த்தர்" *(லேவி 26:2)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஓய்வுநாளை ஆசரிப்பதும், கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்து பயபக்தியாயிருப்பதும் மிகவும் முக்கியமான பிரமாணங்களாகும். இந்தப் பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமல், இந்தப் பிரமாணங்களை அசட்டைபண்ணுகிறவர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தை விட்டும், அவருடைய ஆராதனையை விட்டும், முடிவிலே கர்த்தரை விட்டும் விலகிப்போய்விடுவார்கள்.

இஸ்ரவேலரின் மார்க்க ஆராதனையில் ஓய்வுநாட்களை ஆசரிப்பதும், அவருடைய பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்தும் பயபக்தியாயிருப்பதும் மிகவும் முக்கியமான பிரமாணங்களாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு எப்பொழுதும் கீழ்ப்படியவேண்டும். தம்முடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு கர்த்தர் ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணுகிறார். உலகப்பிரகாரமான ராஜ்யங்களிலே, ஜனங்கள் தேசத்தின் சட்டங்களுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படும். கர்த்தரோ தம்முடைய கட்டளைகளுக்கும், கற்பனைகளுக்கும், பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிகிறவர்களை ஆசீர்வதிக்கிறார்.

"நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்தால், நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழைபெய்யப்பண்ணுவேன்; பூமி தன் பலனையும், வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும்" *(லேவி 26:3,4)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய ஆசீர்வாதங்களை சொல்லும்போது, அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கர்த்தர் அவர்களுக்கு சில நிபந்தனைகளையும் சொல்லுகிறார். லேவி 26:3-45 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பொதுவான நிபந்தனைகளின் விவரம் வருமாறு :

1. நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின் படி செய்தால்......நான் உங்களை ஆசீர்வதிப்பேன். *(லேவி 26:3-13)*.

2. நீங்கள் எனக்குச் செவிகொடாமலும், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும், என் கட்டளைகளை வெறுத்து, உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து, என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப் போடுவீர்களாகில்......நான் உங்களைச் சபிப்பேன். *(லேவி 26:14-39)*.

3. அவர்கள் எனக்கு விரோதமாகத் துரோகம் பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் அறிக்கையிடுகிறதுமன்றி, அவர்கள் எனக்கு எதிர்த்து நடந்தபடியினால், நானும் அவர்களுக்கு எதிர்த்து நடந்து, அவர்களுடைய சத்துருக்களின் தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய் விட்டதையும் அறிக்கையிட்டு, விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தைத் தாழ்த்தி, தங்கள் அக்கிரமத்துக்குக் கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்துக் கொண்டால்.....நான் யாக்கோபோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்; தேசத்தையும் நினைப்பேன். (லேவி 26:40-46).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியும்போது அவர்களுடைய விளைச்சல் அதிகமாயிருக்கும். மரங்கள் தங்கள் கனிகளைத் திரளாய்க் கொடுக்கும். பூமி தன் பலனைக் கொடுக்கும். இஸ்ரவேல் தேசத்திலே ஏற்ற காலத்திலே மழை பெய்யும்.

இஸ்ரவேல் ஜனத்தாரை கர்த்தர் ஆசீர்வதிக்கும்போது, அந்த ஆசீர்வாதம் தாராளமாயும், ஏராளமாயும் இருக்கும். திராட்சப்பழம் பறிக்குங் காலம் வரைக்கும் போரடிப்புக் காலம் இருக்கும்; விதைப்புக் காலம்வரைக்கும் திராட்சப்பழம் பறிக்குங் காலம் இருக்கும்; இஸ்ரவேல் புத்திரர் தங்கள் அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்டு, தங்கள் தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பார்கள் (லேவி 26:5).

தானியம் அறுவடை செய்யப்பட்டவுடன் போரடிப்புக் காலம் துவங்கும். விளைச்சல் அதிகமாக இருப்பதினால் போரடிப்புக் காலமும் அதிகமாக இருக்கும். திராட்சைப்பழம் பறிக்கும் காலம் வரும் வரையிலும் அவர்கள் போரடிக்க வேண்டியது வரும். திராட்சைப் பழங்களின் விளைச்சலும் அதிகமாக இருப்பதினால் அவற்றைப் பறிக்கும் காலமும் அதிகமாக இருக்கும். அவர்கள் விதைப்புக் காலம் வரைக்கும் திராட்சப்பழம் பறிக்குங் காலம் இருக்கும். பூமியில் அதிகமான செழிப்பு உண்டாயிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரருடைய தேவைகள் சந்திக்கப்படுவது மாத்திரமல்ல, அவர்களுக்கு ஆசீர்வாதங்கள் ஏராளமாய்க் கிடைப்பதினால், அவர்களுடைய தேவைகள் சந்திக்கப்பட்டதுபோக மீதமும் இருக்கும். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு மீதமாயிருப்பதை தரித்திரருக்கு கொடுத்து உதவிசெய்வார்கள். போன வருஷத்துப் பழைய தானியத்தைச் சாப்பிட்டு, புதிய தானியத்துக்கு இடமுண்டாகும்படி, பழையதை விலக்குவார்கள் (லேவி 26:10).

புதிய தானியத்திற்கு இடத்தை ஆயத்தம்பண்ணும் வண்ணமாக, தங்கள் களஞ்சியத்திலுள்ள பழைய தானியங்களையெல்லாம் தரித்திரருக்கு கொடுத்து உதவிசெய்வார்கள். பழைய தானியங்களும் மீதமாயிருக்கும். புதிய தானியங்களின் வரவும் அதிகமாயிருக்கும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது அவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பார்கள். சுகமாய்க் குடிப்பார்கள் என்னும் வாக்கியத்திற்கு பாதுகாப்பாய்க் குடியிருப்பார்கள் என்று பொருள். கர்த்தரே அவர்களுக்கு பாதுகாப்பைக் கட்டளையிடுகிறார். சத்துருக்கள் மூலமாக இஸ்ரவேல் ஜனங்களுக்கு எந்தப் பிரச்சனையும் வராது.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய மனதிலே சத்துருக்களைப்பற்றிய பயம் இருக்காது. அவர்கள் கர்த்தருடைய வல்லமையையும், அவருடைய வாக்குத்தத்தங்களையும் தங்களுடைய மனதிலே நினைத்து, சமாதானமாகவும், அமைதியாகவும் நித்திரை பண்ணுவார்கள்.

"தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன்; தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் படுத்துக்கொள்வீர்கள்; துஷ்ட மிருகங்களைத் தேசத்தில் இராதபடிக்கு ஒழியப்பண்ணுவேன்; பட்டயம் உங்கள் தேசத்தில் உலாவுவதில்லை" (லேவி 26:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரைசெய்வேன்; கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்" (சங் 4:8).

இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேசத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும் போது, அவர்களுக்கு யுத்தத்திலே வெற்றி கிடைக்கும். இஸ்ரவேல் தேசத்தில் சமாதானமும், சத்துருக்கள்மீது நடக்கும் யுத்தத்தில் வெற்றியும் கிடைப்பது அவர்களுக்கு கொடுக்கப்படும் மிகப்பெரிய ஆசீர்வாதம்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களைத் துரத்துவார்கள்; அவர்கள் இஸ்ரவேலருக்கு முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள். இஸ்ரவேல் புத்திரரில் ஐந்துபேர் நூறுபேரைத் துரத்துவார்கள்; அவர்களில் நூறுபேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள்; இஸ்ரவேல் ஜனத்தாருடைய சத்துருக்கள் அவர்களுக்கு முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள் (லேவி 26:7,8).

இஸ்ரவேல் ஜனத்தார் திரளாய்ப் பலுகிப்பெருகுவார்கள். கர்த்தர் அவர்களுக்கு நல்ல ஆரோக்கியத்தை கட்டளையிடுகிறார். "நான் உங்கள் மேல் கண்ணோக்கமாயிருந்து, உங்களைப் பலுகவும் பெருகவும் பண்ணி, உங்களோடே என் உடன்படிக்கையைத் திடப்படுத்துவேன்" (லேவி 26:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய கிருபையினாலேயே நமக்கு நன்மையான ஈவுகள் கிடைக்கிறது. எல்லா நன்மைகளுக்கும் கர்த்தருடைய கிருபையும், சிலாக்கியமும் ஆதாரமாகவும், ஊற்றாகவும், ஊற்றின் கண்ணாகவும் இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது, கர்த்தர் அவர்கள்மேல் கண்ணோக்கமாயிருந்து அவர்களை ஆசீர்வதிப்பார்.

நம்முடைய விசுவாசத்தின் கண்கள் கர்த்தர்மேல் கண்ணோக்கமாயிருக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதத்தின் கண்கள் நம்மேல் கண்ணோக்கமாயிருக்கும்.

கர்த்தருடைய பிரசன்னம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே இருக்கும். "உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன்; என் ஆத்துமா உங்களை அரோசிப்பதில்லை. நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன்; நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்" (லேவி 26:11,12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய வாசஸ்தலம் அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே தம்முடைய வாசஸ்தலத்தை ஸ்தாபித்து, தம்முடைய பரிசுத்த பிரசன்னத்தை அவர்கள் மத்தியிலே உறுதிபண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடே தம்முடைய உடன்படிக்கையை திடப்படுத்துகிறார். உடன்படிக்கையின் கிருபையே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் அஸ்திபாரமாகவும் ஊற்றாகவும் இருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் இந்த உடன்படிக்கையில் தங்கள் பாகத்தை நிறைவேற்றவேண்டும். அப்போது கர்த்தர், இந்த உடன்படிக்கையில், தம்முடைய பாகத்தை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராயிருப்பார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையின் பிரகாரமாக இஸ்ரவேல் ஜனத்தாரை பலுகவும் பெருகவும் பண்ணுவார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய நடுவிலே உலாவுவார். "நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்" (லேவி 26:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாருடைய தேவனாகிய கர்த்தர். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஜனமாகயிருப்பதினால், கர்த்தர் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டார்.

"நீங்கள் எகிப்தியருக்கு அடிமைகளாயிராதபடிக்கு, நான் அவர்கள் தேசத்திலிருந்து உங்களைப் புறப்படப்பண்ணி, உங்கள் நுகத்தடிகளை முறித்து, உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 26:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும் நிபந்தனையுள்ள ஆசீர்வாதங்களின் விவரம் வருமாறு :

1. நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழைபெய்யப்பண்ணுவேன்.

2. பூமி தன் பலனைக் கொடுக்கும்.

3. வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனிகளையும் கொடுக்கும்.

4. திராட்சப்பழம் பறிக்குங் காலம் வரைக்கும் போரடிப்புக் காலம் இருக்கும் (லேவி 26:5).

5. விதைப்புக் காலம்வரைக்கும் திராட்சப்பழம் பறிக்குங் காலம் இருக்கும்.

6. நீங்கள் உங்கள் அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிடுவீர்கள்.

7. நீங்கள் உங்கள் தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பீர்கள்.

8. தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன் (லேவி 26:6).

9. தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் படுத்துக்கொள்வீர்கள்;

10. துஷ்ட மிருகங்களைத் தேசத்தில் இராதபடிக்கு ஒழியப்பண்ணுவேன்.

11. பட்டயம் உங்கள் தேசத்தில் உலாவுவதில்லை.

12. உங்கள் சத்துருக்களைத் துரத்துவீர்கள் (லேவி 26:7).

13. அவர்கள் உங்கள் முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள். (லேவி 26:7-8).

14. உங்களில் ஐந்துபேர் நூறுபேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறுபேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள். (லேவி 26:8).

15. நான் உங்கள் மேல் கண்ணோக்கமாயிருப்பேன். (லேவி 26:9).

16. நான் உங்களைப் பலுகப்பண்ணுவேன்.

17. நான் உங்களைப் பெருகப்பண்ணுவேன்.

18. நான் உங்களோடே என் உடன்படிக்கையைத் திடப்படுத்துவேன்.

19. போன வருஷத்துப் பழைய தானியத்தைச் சாப்பிட்டு, புதிய தானியத்துக்கு இடமுண்டாகும்படி, பழையதை விலக்குவீர்கள். (லேவி 26:10).

20. உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன். (லேவி 26:11).

21. என் ஆத்துமா உங்களை அரோசிப்பதில்லை.

22. நான் உங்கள் நடுவிலே உலாவுவேன். (லேவி 26:12).

23. நான் உங்கள் தேவனாயிருப்பேன்.

24. நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு செய்த மூன்று முக்கியமான காரியங்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. எகிப்து தேசத்திலிருந்து அவர்களைப் புறப்படப்பண்ணினார்.
2. அவர்கள் நுகத்தடிகளை முறித்தார்.
3. அவர்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணினார்.

சாபங்கள்
லேவி 26:14-39

லேவி 26:14. நீங்கள் எனக்குச் செவிகொடாமலும், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும்,

லேவி 26:15. என் கட்டளைகளை வெறுத்து, உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து, என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப்போடுவீர்களாகில்:

லேவி 26:16. நான் உங்களுக்குச் செய்வது என்னவென்றால், கண்களைப் பூத்துப்போகப் பண்ணுகிறதற்கும், இருதயத்தைத் துயரப்படுத்துகிறதற்கும், திகிலையும் ஈளையையும் காய்ச்சலையும் உங்களுக்கு வரப்பண்ணுவேன்; நீங்கள் விதைக்கும் விதை விருதாவாயிருக்கும்; உங்கள் சத்துருக்கள் அதின் பலனைத் தின்பார்கள்.

லேவி 26:17. நான் உங்களுக்கு விரோதமாக என் முகத்தைத் திருப்புவேன்; உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படுவீர்கள்; உங்கள் பகைஞர் உங்களை ஆளுவார்கள்; துரத்துவார் இல்லாதிருந்தும் ஓடுவீர்கள்.

லேவி 26:18. இவ்விதமாய் நான் உங்களுக்குச் செய்தும், இன்னும் நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டித்து,

லேவி 26:19. உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப் போலவும், உங்கள் பூமியை வெண்கலத்தைப் போலவும் ஆக்குவேன்.

லேவி 26:20. உங்கள் பெலன் விருதாவிலே செலவழியும்; உங்கள் தேசம் தன் பலனையும், தேசத்தின் மரங்கள் தங்கள் கனிகளையும் கொடுக்கமாட்டாது.

லேவி 26:21. நீங்கள் எனக்குச் செவிகொடுக்க மனதில்லாமல், எனக்கு எதிர்த்து நடப்பீர்களானால், நான் உங்கள் பாவங்களுக்குத்தக்கதாக இன்னும் ஏழத்தனை வாதையை உங்கள் மேல் வரப்பண்ணி,

லேவி 26:22. உங்களுக்குள்ளே வெளியின் துஷ்டமிருகங்களை வரவிடுவேன்; அவைகள் உங்களைப் பிள்ளைகளற்றவர்களாக்கி, உங்கள் மிருகஜீவன்களை அழித்து, உங்களைக் குறைந்துபோகப் பண்ணும்; உங்கள் வழிகள் பாழாய்க் கிடக்கும்.

லேவி 26:23. நான் செய்யும் தண்டனையினால் நீங்கள் குணப்படாமல், எனக்கு எதிர்த்து நடந்தால்,

லேவி 26:24. நான் உங்களுக்கு எதிர்த்து நடந்து, உங்கள் பாவங்களினிமித்தம் ஏழத்தனையாக வாதித்து,

லேவி 26:25. என் உடன்படிக்கையை மீறினதற்குப் பழிவாங்கும் பட்டயத்தை உங்கள் மேல் வரப்பண்ணி, நீங்கள் உங்கள் பட்டணங்களில் சேர்ந்தபின், கொள்ளைநோயை உங்கள் நடுவிலே அனுப்புவேன்; சத்துருவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்கள்.

லேவி 26:26. உங்கள் அப்பம் என்னும் ஆதரவுகோலை நான் முறித்துப்போடும்போது, பத்து ஸ்திரீகள் ஒரே அடுப்பில் உங்கள் அப்பத்தைச் சுட்டு, அதைத் திரும்ப உங்களுக்கு நிறுத்துக்கொடுப்பார்கள்; நீங்கள் சாப்பிட்டும் திருப்தியடையமாட்டீர்கள்.

லேவி 26:27. இன்னும் இவைகளெல்லாவற்றாலும் நீங்கள் எனக்குச் செவிகொடாமல், எனக்கு எதிர்த்து நடந்தால்,

லேவி 26:28. நானும் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து, நடந்து, நானே உங்கள் பாவங்களினிமித்தம் உங்களை ஏழத்தனையாய்த் தண்டிப்பேன்.

லேவி 26:29. உங்கள் குமாரரின் மாம்சத்தையும் உங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் புசிப்பீர்கள்.

லேவி 26:30. நான் உங்கள் மேடைகளை அழித்து, உங்கள் விக்கிரகச் சிலைகளை நிர்த்தூளியாக்கி, உங்கள் உடல்களை உங்கள் நரகலான தேவர்களுடைய உடல்கள்மேல் எறிவேன்; என் ஆத்துமா உங்களை அரோசிக்கும்.

லேவி 26:31. நான் உங்கள் பட்டணங்களை வெறுமையும், உங்கள் பரிசுத்த ஸ்தலங்களைப் பாழுமாக்கி, உங்கள் சுகந்த வாசனையை முகராதிருப்பேன்.

லேவி 26:32. நான் தேசத்தைப் பாழாக்குவேன்; அதிலே குடியிருக்கிற உங்கள் சத்துருக்கள் பிரமிப்பார்கள்.

லேவி 26:33. ஜாதிகளுக்குள்ளே உங்களைச் சிதற அடித்து, உங்கள் பின்னாகப் பட்டயத்தை உருவுவேன்; உங்கள் தேசம் பாழும், உங்கள் பட்டணங்கள் வனாந்தரமுமாகும்.

லேவி 26:34. நீங்கள் உங்கள் சத்துருக்களின் தேசத்தில் இருக்கும்போது, தேசமானது பாழாய்க் கிடக்கிற நாளெல்லாம் தன் ஓய்வுநாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும். அப்பொழுது தேசம் ஓய்வடைந்து, தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும்.

லேவி 26:35. நீங்கள் அதிலே குடியிருக்கும்போது, அது உங்கள் ஓய்வு வருஷங்களில் ஓய்வடையாதபடியினாலே, அது பாழாய்க் கிடக்கும் நாளெல்லாம் ஓய்வடைந்திருக்கும்.

லேவி 26:36. உங்களில் உயிரோடு மீதியாயிருப்பவர்களின் இருதயங்கள் தங்கள் சத்துருக்களின் தேசங்களில் மனத்தளர்ச்சி அடையும்படி செய்வேன்; அசைகிற இலையின் சத்தமும் அவர்களை ஓட்டும்; அவர்கள் பட்டயத்திற்குத் தப்பி ஓடுகிறது போல ஓடி, துரத்துவார் இல்லாமல் விழுவார்கள்.

லேவி 26:37. துரத்துவார் இல்லாமல், பட்டயத்துக்கு முன் விழுவதுபோல, ஒருவர்மேல் ஒருவர் இடறிவிழுவார்கள்; உங்கள் சத்துருக்களுக்குமுன் நிற்க உங்களுக்குப் பெலன் இராது.

லேவி 26:38. புறஜாதிகளுக்குள்ளே அழிந்து போவீர்கள்; உங்கள் சத்துருக்களின் தேசம் உங்களைப் பட்சிக்கும்.

லேவி 26:39. உங்களில் தப்பினவர்கள் தங்கள் அக்கிரமங்களினிமித்தமும், தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினிமித்தமும், உங்கள் சத்துருக்களின் தேசங்களில் வாடிப் போவார்கள்.

தமக்கு செவிகொடுத்து, தம்முடைய கட்டளைகளின்படி நடந்து, தம்முடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வரப்போகும் ஆசீர்வாதங்களை சொன்ன பின்பு, அவர்களுக்கு சாபங்கள் வருவதற்கும் வாய்ப்புள்ளது என்று சொல்லி, கர்த்தர் அவர்களை எச்சரிக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு செவிகொடாமல், அவருடைய கற்பனைகளின்படி செய்யாமல் போனால் அவர்களுக்கு சாபங்கள் வரும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படியவில்லையென்றால், அவர்களுக்கு தீங்கும் மரணமும் வரும்.

"நீங்கள் எனக்குச் செவிகொடாமலும், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும், என் கட்டளைகளை வெறுத்து, உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து, என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப்போடுவீர்களாகில்; நான் உங்களுக்குச் செய்வது என்னவென்றால்" (லேவி 26:14-16) என்று சொல்லி, கர்த்தர் அவர்களுக்கு வரப்போகும் சாபங்களை எச்சரிப்பாய் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு எச்சரித்து சொல்லும் பாவங்களின் விவரம் வருமாறு :

1. நீங்கள் எனக்குச் செவிகொடாமல் போவீர்கள்.
2. நீங்கள் இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமல் போவீர்கள்.
3. என் கட்டளைகளை வெறுத்தீர்கள்.

4. உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசிக்கும்.

5. என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப்போடுவீர்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவம் இங்கு விவரிக்கப்படுகிறது. பாவத்தின் சம்பளம் மரணம். அவர்களுடைய பாவங்களினிமித்தமாக அவர்கள்மீது தீங்குகளும், துன்பங்களும் வரும். இவையெல்லாம் அவர்களுக்கு சாபமாயிருக்கும்.

இஸ்ரவேல் ஜனத்தார் அறியாமல் பாவம்செய்து, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்கள் பாவங்களை கர்த்தருடைய சமுகத்தில் அறிக்கை செய்தால், அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும். அவர்களுடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படவேண்டும் என்பதற்காக, கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் பாவநிவாரண பலிகளை சொல்லியிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் துணிகரமாய்ப் பாவம் செய்து, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, பாவங்களிலிருந்து விலகி வராமல், தொடர்ந்து பாவம் செய்தால் அவர்கள்மீது சாபம் வரும். மனந்திரும்பாத பாவங்களும், துணிகரமாய்த் தொடர்ந்து செய்யப்படும் பாவங்களும் மன்னிக்கப்படுவதில்லை. துணிகரமான பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு, கர்த்தர் பாவநிவாரண பலிகளை நியமனம்பண்ணவில்லை.

இஸ்ரவேல் புத்திரருடைய அழிவுக்கு இரண்டு காரியங்கள் காரணமாயிருக்கும். அவையாவன : 1. அவர்கள் கர்த்தருக்கு செவிகொடாமல், கர்த்தருடைய கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாமல் போவது. 2. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாக அவர்களை தண்டித்து திருத்தும்போது, அவர்கள் தங்கள் உள்ளத்தில் உணர்வடையாமல் கர்த்தருக்கு எதிர்த்து நடப்பது.

இஸ்ரவேல் புத்திரரின் பாவங்கள் ஆரம்பத்தில் கவனக்குறைவினாலும், கர்த்தருக்கு செவிகொடாமல் போவதினாலும், அவருடைய கற்பனைகளின்படி செய்யத்தவறுவதினாலும் வருகிறது. அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அதை அசட்டைபண்ணி, தங்களுடைய ஜீவியத்தில் கவனக்குறைவாகவும், நிர்விசாரமாகவும் ஜீவித்து பாவம் செய்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கற்பனைகளை சொல்லியிருக்கிறார். அவருக்கு இஸ்ரவேல் ஜனத்தாரை ஆளுகை செய்யும் அதிகாரமுள்ளது. கர்த்தருடைய கற்பனைகளில் அவருடைய ஆளுகையும், அதிகாரமும் இடம் பெற்றிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளின்படி செய்யாமல் போகும்போது, அவர்கள் அந்தக் கற்பனைகளையும், தங்களுக்கு அந்தக் கற்பனைகளைக் கொடுத்த கர்த்தரையும் அசட்டைபண்ணுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கட்டளைகளை வெறுக்கிறார்கள். அவர்கள் மனப்பூர்வமாக கர்த்தருடைய கட்டளைகளுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள்.

அவர்களுடைய ஆத்துமா கர்த்தருடைய நியாயங்களை அரோசிக்கிறது. கர்த்தருடைய கட்டளைகளையும் நியாயங்களையும் வெறுக்கிறவர்கள், அதற்கு விரோதமாக திரும்பி கலகம்பண்ணுவார்கள். அவர்களுடைய இருதயம் கர்த்தருடைய நியாயங்களை அரோசிக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, அவருடைய உடன்படிக்கையை மீறிப்போடுகிறார்கள். கர்த்தருடைய கட்டளைகளை வெறுக்கிறவர்கள், அதன்பின்பு கர்த்தரையே வெறுக்க ஆரம்பித்துவிடுவார்கள். இதன் விளைவாக அவர்கள் கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதையும் வெறுப்பார்கள்.

கர்த்தருடைய கற்பனைகளையும், நியாயங்களையும், கட்டளைகளையும் வெறுக்கிறவர்கள், அதன் தொடர்ச்சியாக, அவருடைய உடன்படிக்கையையும் மீறிப்போடுவார்கள். இவ்வாறாக இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, ஆரம்பத்தில் சிறிய அளவில் தோன்றிய பாவம், பிற்காலத்தில் அது பெரிதாகி, கர்த்தருடைய உடன்படிக்கையை அவர்கள் மீறிப்போடும் அளவுக்கு வளர்ந்து, அவர்களுக்கு அழிவை உண்டுபண்ணுகிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் பாவம் செய்யும்போது கர்த்தர் அவர்களை கண்டித்து திருத்துகிறார். அவர்கள் ஆரம்பத்தில் கர்த்தருக்கு செவிகொடாமல், அவருடைய கற்பனைகளின்படி செய்யாமல் போனாலும், தாங்கள் பாவம் செய்கிறோம் என்பதை உணர்ந்து, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்களுடைய பாவங்களை கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கை செய்தால், அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. அவர்கள் தண்டனைக்கும், அழிவுக்கும் தப்பித்துக்கொள்ளலாம்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாக கர்த்தர் அவர்களை தண்டித்தாலும், அந்த தண்டனையை அங்கீகரித்து, பாவத்திற்கு மனந்திரும்புவதற்கு பதிலாக, தொடர்ந்து துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் செய்த பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்யும்போது கர்த்தர் அவர்களை தண்டிக்கிறார். கர்த்தர் அவர்களுக்கு எப்படிப்பட்ட தண்டனைகளைக் கொடுக்கிறார் என்பது இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் அவர்களுடைய கண்களைப் பூத்துப்போகப் பண்ணுவார். அவர்களுடைய, இருதயத்தைத் துயரப்படுத்துவார். அவர்களுக்கு திகிலையும் ஈளையையும் காய்ச்சலையும் வரப்பண்ணுவார்;

"நீங்கள் விதைக்கும் விதை விருதாவாயிருக்கும்; உங்கள் சத்துருக்கள் அதின் பலனைத் தின்பார்கள். நான் உங்களுக்கு விரோதமாக என் முகத்தைத் திருப்புவேன்; உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படுவீர்கள்; உங்கள் பகைஞர் உங்களை ஆளுவார்கள்; துரத்துவார் இல்லாதிருந்தும் ஓடுவீர்கள்" *(லேவி 26:16,17)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்களை இவ்விதமாக தண்டித்தபோதிலும், "இன்னும் நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டித்து, உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப் போலவும், உங்கள் பூமியை வெண்கலத்தைப் போலவும் ஆக்குவேன்" *(லேவி 26:18,19)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏழத்தனை என்னும் வார்த்தைக்கு கடினமான தண்டனை என்று பொருள். லேவி 26:16-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் எட்டு தண்டனைகளோடு அதிகமான தண்டனை என்று பொருள்.

இஸ்ரவேல் தேசம் தங்களைக் குறித்து பெருமைப்படுகிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களைத் தூசியைப்போல தாழ்த்துவதாக எச்சரித்துக் கூறுகிறார்.

கர்த்தர் அவர்களுடைய வானத்தை இரும்பைப் போலவும், அவர்களுடைய பூமியை வெண்கலத்தைப் போலவும் ஆக்குவார். தேவனால் ஆசீர்வதிக்கப்படும் போது இஸ்ரவேல் தேசம் அதிகமான விளைச்சலைத் தரும். தேவன் அந்தத் தேசத்தைச் சபிக்கும்போதோ அதன் நிலம் பாழாய்ப்போகும் *(லேவி 26:19-20)*.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாகவும், மீறுதல்களினிமித்தமாகவும், அக்கிரமங்களினிமித்தமாகவும், கீழ்ப்படியாமையினிமித்தமாகவும் கர்த்தர் அவர்களை தண்டிக்கும்போது, அவர்கள் கர்த்தருக்கு செவிகொடுக்கவேண்டும். கர்த்தர் அவர்களை இவ்விதமாய்த் தண்டித்திருந்தும், அவர்கள் கர்த்தருக்கு செவிகொடாதிருந்தால் அவர்கள்மீது இன்னும் ஏழத்தனை அதிகமான தண்டனை வரும்.

"இவ்விதமாய் நான் உங்களுக்குச் செய்தும், இன்னும் நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டிப்பேன்" (லேவி 26:18) என்றும்,

நீங்கள் எனக்குச் செவிகொடுக்க மனதில்லாமல், எனக்கு எதிர்த்து நடப்பீர்களானால், நான் உங்கள் பாவங்களுக்குத்தக்கதாக இன்னும் ஏழத்தனை வாதையை உங்கள் மேல் வரப்பண்ணுவேன் (லேவி 26:21) என்றும்,

இன்னும் இவைகளெல்லாவற்றாலும் நீங்கள் எனக்குச் செவிகொடாமல், எனக்கு எதிர்த்து நடந்தால், நானும் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து, நடப்பேன் (லேவி 26:27,28) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஏழத்தனை வாதை என்னும் வார்த்தைக்கு கடினமான வாதைகள் என்று பொருள். இவை லேவி 26:16-17,18-20 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வாதைகளைவிட அதிகமான வாதைகள்.

ஜனத்தொகை குறைவாய் இருக்கும்போது துஷ்டமிருகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். (உபா 7:22; 2சாமு 21:10; 2இராஜா 17:25).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து நடக்கும்போது, கர்த்தரும் உக்கிரத்தோடே அவர்களுக்கு விரோதமாக எதிர்த்து நடப்பார் (லேவி 26:21,23,27). பாவிகள் எல்லோருமே கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய சத்தியங்களுக்கு விரோதமாகவும், அவருடைய பிரமாணங்களுக்கு விரோதமாகவும், அவருடைய ஆலோசனைகளுக்கு விரோதமாகவும் எதிர்த்து நடக்கிறார்கள்.

பாவிகளுடைய மீறுதல்களினிமித்தமாகவும், அக்கிரமங்களினிமித்தமாகவும் கர்த்தர் அவர்களை தண்டித்தாலும், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். பாவிகள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளுக்கு பயப்படாமல், துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து பாவத்திலே ஜீவிக்கிறார்கள்.

கர்த்தர் பாவிகளைத் தண்டித்தும், அவர்கள் இன்னும் கர்த்தருக்கு செவிகொடாமல், அவருக்கு எதிர்த்து நடந்தால், கர்த்தர் அவர்களை இன்னும் அதிகமாய்த் தண்டிப்பார். பாவிகளைத் திருத்தவேண்டும் என்பதற்காகவே கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். பாவிகளைத் தண்டித்து அவர்களை அழித்துப்போடவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமல்ல. பாவிகள் தங்கள் பாவங்களை உணர்ந்து, மனந்திரும்ப வேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம்.

தமக்கு செவிகொடாத பாவிகளை, கர்த்தர் ஏழத்தனையாக தண்டிக்கிறார். இந்தத் தண்டனையின் உக்கிரத்தைத் தாங்கமுடியாமல், பாவிகள் தம்மிடத்தில் திரும்பி வருவார்கள் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். தங்கள்மீது சுமத்தப்பட்டிருக்கிற தண்டனைகள் அதிகமாகயிருப்பதினால், தண்டனைக்கு தப்பிக்கவும், வேதனையிலிருந்து விடுதலை பெறவும், அவர்கள் தம்முடைய சமுகத்தை தேடி வருவார்கள் என்று கர்த்தர் காத்திருக்கிறார்.

அறியாமல் பாவம் செய்கிறவர்கள் கர்த்தருடைய நீதியான தண்டனைக்கு பயந்து, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். கர்த்தருடைய சமுகத்திலே தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து அவருடைய இரக்கத்தையும், மன்னிப்பையும் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால் துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்களோ, கர்த்தர் அவர்களை தண்டித்தாலும், அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், துணிகரமாய்த் தொடர்ந்து பாவம் செய்கிறார்கள்.

துணிகரமாய்ப் பாவம் செய்கிற பாவிகள்மீது கர்த்தருடைய கோபம் அதிகமாய் வந்து இறங்கும். கர்த்தருடைய தண்டனை அவர்களுக்கு ஏழத்தனையாய் அதிகரிக்கும்.

இவ்விதமாய் நான் உங்களுக்குச் செய்தும், இன்னும் நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டித்து, உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப் போலவும், உங்கள் பூமியை வெண்கலத்தைப் போலவும் ஆக்குவேன் (லேவி 26:18,19) என்றும்,

உங்கள் பெலன் விருதாவிலே செலவழியும்; உங்கள் தேசம் தன் பலனையும், தேசத்தின் மரங்கள் தங்கள் கனிகளையும் கொடுக்கமாட்டாது (லேவி 26:20) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

நீங்கள் எனக்குச் செவிகொடுக்க மனதில்லாமல், எனக்கு எதிர்த்து நடப்பீர்களானால், நான் உங்கள் பாவங்களுக்குத்தக்கதாக இன்னும் ஏழத்தனை வாதையை உங்கள் மேல் வரப்பண்ணி, உங்களுக்குள்ளே வெளியின் துஷ்டமிருகங்களை வரவிடுவேன்; அவைகள் உங்களைப் பிள்ளைகளற்றவர்களாக்கி, உங்கள் மிருகஜீவன்களை அழித்து, உங்களைக் குறைந்துபோகப் பண்ணும்; உங்கள் வழிகள் பாழாய்க் கிடக்கும் (லேவி 26:21,22) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

நான் செய்யும் தண்டனையினால் நீங்கள் குணப்படாமல், எனக்கு எதிர்த்து நடந்தால், நான் உங்களுக்கு எதிர்த்து நடந்து, உங்கள் பாவங்களினிமித்தம் ஏழத்தனையாக வாதித்து, என் உடன்படிக்கையை மீறினதற்குப் பழிவாங்கும் பட்டயத்தை உங்கள் மேல் வரப்பண்ணி, நீங்கள் உங்கள் பட்டணங்களில் சேர்ந்தபின், கொள்ளைநோயை உங்கள் நடுவிலே அனுப்புவேன்; சத்துருவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்கள் (லேவி 26:23-25) என்றும்,

உங்கள் அப்பம் என்னும் ஆதரவுகோலை நான் முறித்துப்போடும்போது, பத்து ஸ்திரீகள் ஒரே அடுப்பில் உங்கள் அப்பத்தைச் சுட்டு, அதைத் திரும்ப உங்களுக்கு நிறுத்துக்கொடுப்பார்கள்; நீங்கள் சாப்பிட்டும் திருப்தியடையமாட்டீர்கள் (லேவி 26:26) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

தேவன் மூன்றாம் முறையாக ஏழத்தனை என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்தால் அவர்களுக்கு வாதைகள் அதிகரிக்கும். லேவி 26:16-17, 18-20,21-22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வாதைகள் மட்டுமல்லாமல் இன்னும் அநேக வாதைகள் உண்டாகும் (லேவி 26:28).

கர்த்தர் அப்பம் என்னும் ஆதரவுகோலை முறித்துப்போடுவார். இஸ்ரவேல் புத்திரருக்கு உணவு கிடைக்காமல் போகும். (சங் 105:16; எசே 4:16; எசே 5:16; எசே 14:13).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை வாதிக்கும்போது, அவர்கள் அப்பத்தைச் சுட்டு நிறுத்துக் கொடுப்பார்கள். உணவுப்பொருட்களின் பற்றாக்குறைக்கு இது அடையாளம் (2இராஜா 6:25; எரே 14:18; புல 4:9; எசே 5:12; ஓசி 4:10; மீகா 6:14; ஆகாய் 1:6).

இன்னும் இவைகளெல்லாவற்றாலும் நீங்கள் எனக்குச் செவிகொடாமல், எனக்கு எதிர்த்து நடந்தால், நானும் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து, நடந்து, நானே உங்கள் பாவங்களினிமித்தம் உங்களை ஏழத்தனையாய்த் தண்டிப்பேன். உங்கள் குமாரரின் மாம்சத்தையும் உங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் புசிப்பீர்கள் (லேவி 26:27-29) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருடைய துணிகரமான பாவங்களினிமித்தமாக, அவர்கள் இரண்டுவிதமாக தண்டிக்கப்படுகிறார்கள். அவையாவன : 1. கர்த்தர் உக்கிரத்தோடே அவர்களுக்கு எதிர்த்து நடப்பார். 2. சர்வசிருஷ்டிகளும் துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்களுக்கு விரோதமாய் எதிர்த்து நின்று யுத்தம்பண்ணும்.

ஒருவனுக்கு விரோதமாக கர்த்தர் எதிர்த்து நிற்கும்போது அவன் ஆசீர்வதிக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது. இஸ்ரவேல் புத்திரருக்கு சாபமும், அழிவும் வருவதற்கு, கர்த்தர் உக்கிரத்தோடே அவர்களுக்கு விரோதமாக எதிர்த்து நிற்பதே பிரதான காரணம். மனுஷருக்கு வரும் எல்லா தீங்குகளுக்கும், வேதனைகளுக்கும், சாபங்களுக்கும் இதுவே காரணம்.

தம்மை ஒதுக்குகிறவர்களை கர்த்தரும் ஒதுக்கிவிடுகிறார். தம்மை வெறுக்கிறவர்களை கர்த்தரும் வெறுக்கிறார். கர்த்தரைவிட்டு யாராவது விலகிப்போனால், கர்த்தரும் அவர்களைவிட்டு விலகிப்போய்விடுவார். இஸ்ரவேல் ஜனத்தார் பாவம் செய்யும்போது கர்த்தர் அவர்களுக்கு விரோதமாக தம்முடைய முகத்தை திருப்புவார். அவர்களுடைய துணிகரமான பாவங்களினிமித்தமாக கர்த்தர் அவர்களைத் தண்டிப்பார்.

அவர்கள் தண்டனையை அனுபவித்தும், தங்கள் பாவங்களுக்கு இன்னும் மனந்திரும்பாமல் போனால், கர்த்தர் அவர்களை ஏழத்தனை அதிகமாய்த் தண்டிப்பார். இந்தத் தண்டனைகளையெல்லாம் அனுபவித்தும், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல் போனால் அவர்களுக்கு அழிவு நிச்சயம் வரும். புயல்காற்று ஒன்றன்பின் ஒன்றாக வலுவாக வீசுவதுபோல, பாவிகள்மீது தேவனுடைய உக்கிரகோபமும், சாபமும் ஒன்றன்பின் ஒன்றாக வரும்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், துணிகரமாய்த் தொடர்ந்து பாவம் செய்யும்போது, சர்வசிருஷ்டிகளும் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும். கர்த்தர் துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்களுக்கு விரோதமாக மாம்சசரீரத்தில் நியாயத்தீர்ப்புகளையும், அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நியாயத்தீர்ப்புகளையும் சொல்லுகிறார்.

மனந்திரும்பாத பாவிகள்மீது வியாதிகள் வரும். "நான் உங்களுக்குச் செய்வது என்னவென்றால், கண்களைப் பூத்துப்போகப் பண்ணுகிறதற்கும், இருதயத்தைத் துயரப்படுத்துகிறதற்கும், திகிலையும் ஈளையையும் காய்ச்சலையும் உங்களுக்கு வரப்பண்ணுவேன்" (லேவி 26:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

துணிகரமாய்ப் பாவம் செய்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு பஞ்சம் வரும். அவர்களுக்கு திருப்தியான ஆகாரம் கிடைக்காது. "நீங்கள் விதைக்கும் விதை விருதாவாயிருக்கும்; உங்கள் சத்துருக்கள் அதின் பலனைத் தின்பார்கள்" (லேவி 26:16) என்றும், "உங்கள் பெலன் விருதாவிலே செலவழியும்; உங்கள் தேசம் தன் பலனையும், தேசத்தின் மரங்கள் தங்கள் கனிகளையும் கொடுக்கமாட்டாது" (லேவி 26:20) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து பாவம் செய்யும்போது, அவர்களுக்கு பிரியமானவர்களில் அநேகர் மரித்துப்போவார்கள். "நான் உங்களுக்கு விரோதமாக என் முகத்தைத் திருப்புவேன்; உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படுவீர்கள்; உங்கள் பகைஞர் உங்களை ஆளுவார்கள்; துரத்துவார் இல்லாதிருந்தும் ஓடுவீர்கள்" (லேவி 26:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"ஆனாலும் என்னைச் சேவிக்கிறதற்கும், அந்நிய தேசங்களின் ராஜ்யங்களைச் சேவிக்கிறதற்கும் இருக்கிற வித்தியாசத்தை அவர்கள் அறியும்படிக்கு அவனைச் சேவிக்கிறவர்களாவார்கள் என்றார்" *(2நாளா 12:8).*

உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப் போலவும், உங்கள் பூமியை வெண்கலத்தைப் போலவும் ஆக்குவேன். உங்கள் பெலன் விருதாவிலே செலவழியும்; உங்கள் தேசம் தன் பலனையும், தேசத்தின் மரங்கள் தங்கள் கனிகளையும் கொடுக்கமாட்டாது *(லேவி 26:19,20)* என்றும்,

என் உடன்படிக்கையை மீறினதற்குப் பழிவாங்கும் பட்டயத்தை உங்கள் மேல் வரப்பண்ணி, நீங்கள் உங்கள் பட்டணங்களில் சேர்ந்தபின், கொள்ளைநோயை உங்கள் நடுவிலே அனுப்புவேன்; சத்துருவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்கள். உங்கள் அப்பம் என்னும் ஆதரவுகோலை நான் முறித்துப்போடும்போது, பத்து ஸ்திரீகள் ஒரே அடுப்பில் உங்கள் அப்பத்தைச் சுட்டு, அதைத் திரும்ப உங்களுக்கு நிறுத்துக்கொடுப்பார்கள்; நீங்கள் சாப்பிட்டும் திருப்தியடையமாட்டீர்கள் *(லேவி 26:25,26)* என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல் துணிகரமாய்ப் பாவம் செய்தாலும் "உங்கள் குமாரரின் மாம்சத்தையும் உங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் புசிப்பீர்கள். நான் உங்கள் மேடைகளை அழித்து, உங்கள் விக்கிரகச் சிலைகளை நிர்த்தூளியாக்கி, உங்கள் உடல்களை உங்கள் நரகலான தேவர்களுடைய உடல்கள்மேல் எறிவேன்; என் ஆத்துமா உங்களை அரோசிக்கும். நான் உங்கள் பட்டணங்களை வெறுமையும், உங்கள் பரிசுத்த ஸ்தலங்களைப் பாழுமாக்கி, உங்கள் சுகந்த வாசனையை முகராதிருப்பேன்" *(லேவி 26:29-31)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து பாவம் செய்யும்போது, கர்த்தர் அவர்களுடைய தேசத்தையே பாழாக்கிப்போடுவார்.

"நான் தேசத்தைப் பாழாக்குவேன்; அதிலே குடியிருக்கிற உங்கள் சத்துருக்கள் பிரமிப்பார்கள். ஜாதிகளுக்குள்ளே உங்களைச் சிதற அடித்து, உங்கள் பின்னாகப் பட்டயத்தை உருவுவேன்; உங்கள் தேசம் பாழும், உங்கள் பட்டணங்கள் வனாந்தரமுமாகும். நீங்கள் உங்கள் சத்துருக்களின் தேசத்தில் இருக்கும்போது, தேசமானது பாழாய்க் கிடக்கிற நாளெல்லாம் தன் ஓய்வுநாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும். அப்பொழுது தேசம் ஓய்வடைந்து, தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும்" *(லேவி 26:32-34)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்தப் பிரபஞ்சத்தின் சரித்திரத்தில் இஸ்ரவேல் புத்திரரைப்போல கர்த்தரால் கூட்டிச்சேர்க்கப்பட்ட ஜனம் வேறு யாருமில்லை. அதே வேளையில் அவர்களுடைய பாவங்களினிமித்தமாக, இஸ்ரவேல் புத்திரரைப்போல கர்த்தரால் சிதறடிக்கப்பட்ட ஜனமும் வேறு யாருமில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாயிருந்தார்கள். கர்த்தர் தமது கிருபையினால் அவர்களை புறஜாதி ஜனத்தாரிடமிருந்து வேறுபிரித்து, தமக்கு பரிசுத்தமான ஜாதியாக தெரிந்து கொண்டார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தங்களுடைய துன்மார்க்கத்தினால் புறஜாதியாரோடு கலந்து, தங்களை அசுத்தப்படுத்திக்கொண்டார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தாருடைய பாவங்களினிமித்தமாக அவர்களுடைய தேசத்தைப் பாழாக்குவார். அப்போது அந்த தேசத்திலே குடியிருக்கிற அவர்களுடைய சத்துருக்களும், கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை பாழாக்குவதைப் பார்த்து பிரமிப்பார்கள் *(லேவி 26:32).*

கர்த்தர் முதலாவதாக இஸ்ரவேல் புத்திரருடைய மேடைகளை அழிப்பார். அவர்களுடைய விக்கிரக சிலைகளை நிர்தூளியாக்குவார். அவர்களுடைய பட்டணங்களை வெறுமையும், அவர்களுடைய பரிசுத்த ஸ்தலங்களை பாழுமாக்குவார். அதன் பின்பு கர்த்தர் அவர்களுடைய தேசத்தையே பாழாக்கிப்போடுவார். அவர்களுடைய தேசம் பாழும், அவர்களுடைய பட்டணங்கள் வனாந்தரமுமாகும்.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தைப் பாழாக்கும்போது, தேசமானது பாழாய்க்கிடக்கும். அது பாழாய்க் கிடக்கிற நாளெல்லாம் தன் ஓய்வுநாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும். அப்பொழுது தேசம் ஓய்வடைந்து, தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும். இஸ்ரவேல் புத்திரர் அதிலே குடியிருக்கும்போது, அது அவர்களுடைய ஓய்வு வருஷங்களில் ஓய்வடையாதபடியினாலே, அது பாழாய்க் கிடக்கும் நாளெல்லாம் ஓய்வடைந்திருக்கும் (லேவி 26:34,35).

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை அழிக்கும்போது, அதிலுள்ள மேடைகளையும் விக்கிரக சிலைகளையும் அழித்துப்போடுவார். இஸ்ரவேல் தேசத்திலுள்ள மேடைகளையும் விக்கிரக சிலைகளையும் அழித்துப்போடுமாறு கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கட்டளை கொடுத்தார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. அவர்கள் மேடைகளையும் விக்கிரகத்தோப்புக்களையும் அழித்துப்போடவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் தம்முடைய கட்டளைக்கு கீழ்ப்படியாதபோது, கர்த்தரே தம்முடைய வல்லமையினால், தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுகிறார். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடுவதில்லை.

ஒரு காரியத்தை செய்யுமாறு கர்த்தர் நமக்கு கட்டளை கொடுக்கும்போது, நாம் அந்தக் காரியத்தை செய்யாமல் விட்டுவிட்டால், கர்த்தர் தமக்கு சித்தமான ஏதாவது ஒரு வழியில் அதை செய்து முடிப்பார். நம்முடைய உதவியும் ஒத்தாசையும், கீழ்ப்படிதலும் இல்லையென்றால் கர்த்தரால் ஒன்றும் செய்யமுடியாது என்று நாம் இறுமாப்பாய் நினைக்கக்கூடாது. கர்த்தருடைய ஊழியத்தை செய்வது நமக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய பாக்கியம். கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தருடைய ஊழியத்தில் நாம் பங்குபெறாவிட்டாலும், கர்த்தருடைய ஊழியம் அவருடைய சித்தத்தின் பிரகாரமாக நடைபெறும். ஊழியம் கர்த்தருடையது.

தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாத இஸ்ரவேல் புத்திரர்மீது கர்த்தர் ஆவிக்குரிய நியாயத்தீர்ப்புகளையும் கொடுக்கிறார். இந்த நியாயத்தீர்ப்புகள் இஸ்ரவேல் புத்திரருடைய மனதையும், ஆத்துமாவையும், ஆவியையும் பாதிக்கும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரையும், அவர்களுடைய ஆராதனையையும் அங்கீகரிக்கமாட்டார். "நான் உங்கள் சுகந்த வாசனையை முகராதிருப்பேன்" (லேவி 26:31) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய கீழ்ப்படியாமையினால் கர்த்தருக்கு செவிகொடுக்காமல் அவருடைய கற்பனைகளை மீறினார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஓய்வு நாட்களையும், ஓய்வு வருஷங்களையும் ஆசரிக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தருடைய ஓய்வுநாள் பிரமாணத்திற்கு கீழ்ப்படியாதே போனார்கள். அவர்கள் அதிலே குடியிருக்கும்போது, அது உங்கள் ஓய்வு வருஷங்களில் ஓய்வடையாதபடியினாலே, அது பாழாய்க் கிடக்கும் நாளெல்லாம் ஓய்வடைந்திருக்கும் (லேவி 26:35).

சத்துருக்கள் இஸ்ரவேல் ஜனத்தார்மீது யுத்தம்பண்ண வரும்போது, இஸ்ரவேல் புத்திரருடைய இருதயத்திலே பெலமும், தைரியமும், வீரமும் இருக்காது. கர்த்தரே அவர்களுக்கு பெலன். ஆனால் அவர்களோ கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போய்விட்டார்கள். கர்த்தரும் அவர்களுக்கு விரோதமாகத் திரும்பியிருக்கிறார்.

"ஆகையினால் உங்களில் உயிரோடு மீதியாயிருப்பவர்களின் இருதயங்கள் தங்கள் சத்துருக்களின் தேசங்களில் மனத்தளர்ச்சி அடையும்படி செய்வேன்" (லேவி 26:36) என்று கர்த்தர் சொல்லுகிறார். அசைகிற இலையின் சத்தமும் அவர்களை ஓட்டும்; அவர்கள் பட்டயத்திற்குத் தப்பி ஓடுகிறது போல ஓடி, துரத்துவார் இல்லாமல் விழுவார்கள். துரத்துவார் இல்லாமல், பட்டயத்துக்கு முன் விழுவதுபோல, ஒருவர்மேல் ஒருவர் இடறிவிழுவார்கள்; தங்களுடைய சத்துருக்களுக்குமுன் நிற்க அவர்களுக்குப் பெலன் இராது (லேவி 26:36,37).

இஸ்ரவேல் புத்திரர் புறஜாதிகளுக்குள்ளே அழிந்து போவார்கள்; அவர்களுடைய சத்துருக்களின் தேசம் அவர்களைப் பட்சிக்கும். அவர்களில் தப்பினவர்கள் தங்கள் அக்கிரமங்களினிமித்தமும், தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினிமித்தமும், தங்கள் சத்துருக்களின் தேசங்களில் வாடிப் போவார்கள் (லேவி 26:38,39).

இஸ்ரவேல் புத்திரருக்கு தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்னும் நம்பிக்கையில்லை. ஆகையினால் கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையும், அநுக்கிரகமும் தங்களுக்கு கிடைக்கும் என்னும் நம்பிக்கையும் அவர்களுக்கு இல்லாமல் போயிற்று. தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்பதற்கு அவர்களுக்கு பெலனில்லை. அவர்களுக்கு கர்த்தரோடு ஐக்கியமில்லை. அவர்கள் கர்த்தரைப்பற்றி நினைக்கும்போது, கர்த்தர் தங்களுக்கு உதவி செய்வார் என்னும் நம்பிக்கையும் அவர்களுடைய மனதில் ஏற்படவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்து, பரிதாபமான நிலமையிலிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்யும்போது அவர்களுக்கு வரும் வாதைகளின் விவரம் வருமாறு :

1. திகில் (லேவி 26:16)
2. ஈளை (லேவி 26:16; உபா 28:22)
3. காய்ச்சல் (லேவி 26:16; உபா 28:22)
4. அவர்கள் சத்துருக்கள் அதின் பலனைத் தின்பார்கள் (லேவி 26:17).
5. தேவன் அவர்களுக்கு விரோதமாக தம் முகத்தைத் திருப்புவார்.
6. யுத்தமும், அழிவும்
7. அடிமைத்தனம்
8. பயமும், கோழைத்தனமும்
9. அதிக தண்டனை (லேவி 26:18)
10. தேசிய அழிவு (லேவி 26:19)
11. கர்த்தருடைய ஆசீர்வாதம் வராது.
12. பூமி வெண்கலத்தைப்போல ஆகும். (லேவி 26:19; உபா 28:24)
13. அவர்கள் பெலன் விருதாவிலே செலவழியும்.
14. பூமி பலனைக் கொடுக்காது.
15. தேசத்தின் மரங்கள் தங்கள் கனிகளைக் கொடுக்க மாட்டாது. (உபா 28:22)
16. வாதை அதிகமாகும். (லேவி 26:21)
17. துஷ்டமிருகங்கள் அவர்களை அழிக்கும். (லேவி 26:22)
18. துஷ்டமிருகங்கள் அவர்களைப் பிள்ளைகளற்றவர்களாக்கும்.
19. துஷ்டமிருகங்கள் அவர்கள் மிருகஜீவன்களை அழிக்கும்.
20. துஷ்டமிருகங்கள் அவர்களைக் குறைந்துபோகப் பண்ணும்.
21. அவர்கள் வழிகள் பாழாய்க்கிடக்கும்.
22. அவர்கள் வாதை அதிகரிக்கும். (லேவி 26:23-24)
23. பட்டயத்தினால் அழிவு உண்டாகும். (லேவி 26:25,33)
24. சத்துருக்கள் அவர்கள் பட்டணங்களை முற்றுகையிடுவார்கள்.
25. பட்டணங்களில் கொள்ளைநோய் வரும். (லேவி 26:25)
26. சத்துருவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.
27. பஞ்சம் உண்டாகும். (லேவி 26:26)
28. தேவனுடைய உக்கிரம் ஊற்றப்படும். (லேவி 26:27-28)
29. கடுமையான நியாயத்தீர்ப்பு உண்டாகும்.
30. அவர்கள் குமாரரின் மாம்சத்தைப் புசிப்பார்கள். (லேவி 26:29)

31. அவர்கள் குமாரத்தியின் மாம்சத்தைப் புசிப்பார்கள்.

32. மேடைகளும் விக்கிரகச் சிலைகளும் அழியும். (லேவி 26:30)

33. கர்த்தருடைய ஆத்துமா அவர்களை அரோசிக்கும்.

34. அவர்கள் பட்டணங்கள் வெறுமையாய்ப் போகும் (லேவி 26:31,33)

35. அவர்கள் பரிசுத்த ஸ்தலங்கள் பாழாய்ப் போகும். (லேவி 26:31)

36. அவர்கள் பலிகள் அங்கிகரிக்கப்படாது. (லேவி 26:31,32)

37. தேசம் பாழாய்ப்போகும் (லேவி 26:32,33)

38. அவர்களைப் பார்த்து அவர்கள் சத்துருக்கள் பிரமிப்பார்கள் (லேவி 26:32)

39. ஜாதிகளுக்குள்ளே சிதறடிக்கப் படுவார்கள். (லேவி 26:33-36)

40. தேசம் பாழாய்க் கிடக்கும். (லேவி 26:34-35)

41. அவர்களில் உயிரோடு மீதியாயிருப்பவர்களின் இருதயங்கள் தங்கள் சத்துருக்களின் தேசங்களில் மனத்தளர்ச்சி அடையும் (லேவி 26:36)

42. பயமுண்டாகும்.

43. பட்டயத்திற்குத் தப்பி ஓடுவார்கள்.

44. துரத்துவார் இல்லாமல் விழுவார்கள்.

45. ஒருவர்மேல் ஒருவர் இடறிவிழுவார்கள். (லேவி 26:37)

46. அவர்கள் சத்துருக்களுக்குமுன் நிற்க அவர்களுக்குப் பெலன் இராது.

47. புறஜாதிகளுக்குள்ளே அழிந்து போவார்கள். (லேவி 26:38)

48. அவர்கள் சத்துருக்களின் தேசம் அவர்களைப் பட்சிக்கும்.

49. தங்கள் அக்கிரமங்களினிமித்தம் சத்துருக்களின் தேசங்களில் வாடிப் போவார்கள். (லேவி 26:39)

50. தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினிமித்தம், தங்கள் சத்துருக்களின் தேசங்களில் வாடிப் போவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களைத் தண்டிப்பார். கர்த்தர் அவர்களை தண்டிக்கும் விதம் பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. வியாதி, யுத்தம் ஆகியவற்றால் உண்டாகும் அழிவுகளும், எட்டுவிதமான சாபங்களும் (லேவி 26:16-17).

2. விவசாயத்தில் உண்டாகும் ஏழுவிதமான சாபங்கள்.லேவி 26:4-5 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆசீர்வாதம் உண்டாகாது. இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே விளைச்சலில் ஆசீர்வாதம் இருக்கும். (லேவி 26:18-20).

3. இஸ்ரவேல் தேசத்தில் துஷ்டமிருகங்கள் அதிகரிப்பதினால் ஆறுவிதமான வாதைகள் உண்டாகும்.

4. யுத்தம், பஞ்சம், கொள்ளைநோய் ஆகியவற்றினால் ஆறுவிதமான வாதைகள் உண்டாகும்.

5. தேசத்தில் 27 விதமான சாபங்களினால் பேரழிவு உண்டாகும். இஸ்ரவேல் புத்திரர் தேசங்கள் மத்தியில் சிதறிப்போவார்கள்.

மனந்திரும்புதல்
லேவி 26:40-46

லேவி 26:40. அவர்கள் எனக்கு விரோதமாகத் துரோகம் பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் அறிக்கையிடுகிறதுமன்றி,

லேவி 26:41. அவர்கள் எனக்கு எதிர்த்து நடந்தபடியினால், நானும் அவர்களுக்கு எதிர்த்து நடந்து, அவர்களுடைய சத்துருக்களின் தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய்விட்டதையும் அறிக்கையிட்டு, விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தைத் தாழ்த்தி, தங்கள் அக்கிரமத்துக்குக் கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொண்டால்,

லேவி 26:42. நான் யாக்கோபோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்; தேசத்தையும் நினைப்பேன்.

லேவி 26:43. தேசம் அவர்களாலே விடப்பட்டு, பாழாய்க் கிடக்கிறதினாலே தன் ஓய்வுநாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும்; அவர்கள் என் நியாயங்களை அவமதித்து, அவர்களுடைய ஆத்துமா என் கட்டளைகளை வெறுத்தபடியினால் அடைந்த தங்களுடைய அக்கிரமத்தின் தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொள்ளுவார்கள்.

லேவி 26:44. அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருந்தாலும், நான் அவர்களை நிர்மூலமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களோடே பண்ணின என் உடன்படிக்கையை அபத்தமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களைக் கைவிடவும் வெறுக்கவுமாட்டேன்; நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர்.

லேவி 26:45. அவர்களுடைய தேவனாயிருக்கும்படிக்கு, நான் புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக எகிப்துதேசத்திலிருந்து அவர்களைப் புறப்படச் செய்து, அவர்களுடைய முன்னோர்களோடே நான் பண்ணின உடன்படிக்கையை அவர்கள் நிமித்தம் நினைவுகூருவேன்; நான் கர்த்தர் என்று சொல் என்றார்.

லேவி 26:46. கர்த்தர் தமக்கும் இஸ்ரவேல் சந்ததியாருக்கும் நடுவே இருக்கும்படி மோசேயைக் கொண்டு, சீனாய் மலையின்மேல் கொடுத்த கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே.

கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்த இஸ்ரவேல் புத்திரர், தங்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கை செய்து, மனந்திரும்பும்போது கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னித்து, அவர்களை மறுபடியும் ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகிப்போனாலும், அவர்கள் மறுபடியும் கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் அவர்களை தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்கிறார். இஸ்ரவேலுக்கு கர்த்தருடைய சமுகத்திலே நம்பிக்கை உண்டு.

கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும்.

"அவர்கள் எனக்கு விரோதமாகத் துரோகம் பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் அறிக்கையிடுகிறதுமன்றி, அவர்கள் எனக்கு எதிர்த்து நடந்தபடியினால், நானும் அவர்களுக்கு எதிர்த்து நடந்து, அவர்களுடைய சத்துருக்களின் தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய்விட்டதையும் அறிக்கையிட்டு, விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தைத் தாழ்த்தி, தங்கள் அக்கிரமத்துக்குக் கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொள்ளவேண்டும்" *(லேவி 26:40,41)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் விருத்தசேதனமில்லாத தங்களுடைய இருதயத்தைத் தாழ்த்தி, கர்த்தருடைய சமுகத்தில் தங்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் அறிக்கையிடவேண்டும். அவர்கள் கர்த்தரிடத்தில் அறிக்கையிட வேண்டிய காரியங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. தங்கள் அக்கிரமம்

2. தங்கள் பிதாக்களின் அக்கிரமம்

3. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் பண்ணியது.

4. அவர்கள் கர்த்தருக்கு எதிர்த்து நடந்தது.

5. அதனால் கர்த்தரும் அவர்களுக்கு எதிர்த்து நடந்தது.

6. அவர்களுடைய சத்துருக்களின் தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய்விட்டது.

7. விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தைத் தாழ்த்த வேண்டியது.

8. தங்கள் அக்கிரமத்துக்குக் கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொள்ள வேண்டியது.

கர்த்தர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிற இஸ்ரவேல் புத்திரரிடத்திலிருந்து மூன்று காரியங்களை எதிர்பார்க்கிறார். அவையாவன :

1. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் அறிக்கையிடவேண்டும்.

2. விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தைத் தாழ்த்தவேண்டும்.

3. தங்கள் அக்கிரமத்துக்குக் கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக துரோகம்பண்ணி அக்கிரமத்தை நடப்பித்தார்கள். தங்களுடைய அக்கிரமத்தினிமித்தம் அவர்கள் மனம் வேதனைப்படவேண்டும். அவர்கள் தங்கள் இருதயத்தில் வெட்கப்படவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கை செய்து, கர்த்தரைக் கனம்பண்ணவேண்டும். அவரை மகிமைப்படுத்தவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக துரோகம்பண்ணி நடந்தது, அவர்களுடைய அக்கிரமமாகயிருக்கிறது. அவர்கள் கர்த்தருக்கு எதிர்த்து நடந்தபடியினால், கர்த்தரும் அவர்களுக்கு எதிர்த்து நடந்தார். கர்த்தர் அவர்களை அவர்களுடைய சத்துருக்களின் தேசத்தில் கொண்டுபோய்விட்டார்.

இஸ்ரவேல் ஜனத்தாரின் இருதயம் விருத்தசேதனமில்லாததாயிருக்கிறது. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, அவர்களுடைய இருதயத்திலே மனந்திரும்புதலுக்கேற்ற துக்கம் காணப்படவேண்டும். அவர்கள் விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தை கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தவேண்டும்.

மனந்திரும்பாத இருதயமும், கர்த்தர்மீது நம்பிக்கை வைக்காத இருதயமும், தன்னைத் தாழ்த்தாத இருதயமும் விருத்தசேதனமில்லாத இருதயம் என்று அழைக்கப்படுகிறது. புறஜாதியாரின் இருதயம் கர்த்தருக்கு அந்நிய இருதயமாகயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரின் இருதயமோ கர்த்தரோடு உடன்படிக்கை செய்திருக்கிறது.

"ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது" *(ரோம 2:28,29).*

"இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது விருத்தசேதனமில்லாதவர்களோடுங்கூட விருத்தசேதனமுள்ள யாவரையும், எகிப்தையும், யூதாவையும், ஏதோமையும், அம்மோன் புத்திரரையும், மோவாபையும், கடைசி எல்லைகளிலுள்ள வனாந்தரக்குடிகளான யாவரையும் தண்டிப்பேன்; புறஜாதியார் அனைவரும் விருத்தசேதனமில்லாதவர்கள்; ஆனாலும், இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரும் இருதயத்திலே விருத்தசேதனமில்லாதவர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" *(எரே 9:25,26).*

பாவிகள் தங்கள் இருதயத்தை கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தவேண்டும். விருத்தசேதனமில்லாத இருதயம் தாழ்த்தப்படும்போது, கர்த்தருடைய மன்னிக்கும் கிருபை கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. தங்கள் பாவத்தை அறிக்கை செய்து, கர்த்தருடைய சமுகத்திலே தங்களை தாழ்த்துகிறவர்களுக்கு பாவமன்னிப்பும், பாவத்திலிருந்து விடுதலையும், மெய்யான ஆறுதலும் கிடைக்கும்.

கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்கள் தேவனுடைய நீதிக்கு கீழ்ப்படியவேண்டும். தங்களுடைய அக்கிரமத்திற்கு கிடைத்த தண்டனையை அவர்கள் நியாயம் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். தாங்கள் பாவம் செய்திருந்தபோதிலும், தாங்கள் அனுபவிக்கும் தண்டனைகளுக்கு விரோதமாக முறுமுறுக்கக்கூடாது. கர்த்தர் தங்களை அநியாயமாய்த் தண்டித்துவிட்டார் என்று அவருக்கு விரோதமாகப் பேசக்கூடாது. கர்த்தரிடத்தில் ஒரு அநியாயமும் இல்லை. அவருடைய வார்த்தைகளும் செய்கைகளும் நீதியும் சத்தியமுமாயிருக்கிறது.

அவர்கள் எனக்கு எதிர்த்து நடந்தபடியினால், நானும் அவர்களுக்கு எதிர்த்து நடந்து, அவர்களுடைய சத்துருக்களின் தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய்விட்டதையும் அறிக்கையிட்டு, விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தைத் தாழ்த்தி, தங்கள் அக்கிரமத்துக்குக் கிடைத்த தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொள்ளவேண்டும் *(லேவி 26:41)* என்றும்,

தேசம் அவர்களாலே விடப்பட்டு, பாழாய்க் கிடக்கிறதினாலே தன் ஒய்வுநாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும்; அவர்கள் என் நியாயங்களை அவமதித்து, அவர்களுடைய ஆத்துமா என் கட்டளைகளை வெறுத்தபடியினால் அடைந்த தங்களுடைய அக்கிரமத்தின் தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொள்ளுவார்கள் *(லேவி 26:43)* என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தங்களை தண்டிக்கும்போது, அந்தத் தண்டனையானது தங்கள் அக்கிரமத்திற்கு கிடைத்த நியாயமான தண்டனை என்பதை இஸ்ரவேல் புத்திரர் ஒத்துக்கொள்ளவேண்டும் *(லேவி 26:41)*. இந்த வாக்கியத்தில் "ஒத்துக்கொள்ளுதல்" என்பதற்கான எபிரெய வார்த்தை "ராட்ஷா" என்பதாகும். இதற்கு சந்தோஷப்படுதல் என்னும் பொருளும் உள்ளது. இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு வந்த தண்டனையைச் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்கிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். தேவன் தாம் நேசிக்கும் ஜனங்களைச் சிட்சிக்கிறார்.

தங்கள் பாவங்களுக்கு உண்மையாகவே மனந்திரும்புகிறவர்கள், கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் தண்டனையை நீதியான தீர்ப்பு என்று அங்கீகரிப்பார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களினிமித்தமாக தங்கள்மீது குற்றம் சொல்லுவார்கள். தங்களை நீதியாய்த் தண்டிக்கிற கர்த்தர்மீது குற்றம் சொல்லமாட்டார்கள். இப்படிப்பட்டவர்களே உண்மையாய் மனந்திரும்புகிறவர்கள்.

பாவிகள் தங்களைத் தாழ்த்தி, தங்ளுடைய பாவங்களை அறிக்கை செய்யும்போது அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. அவர்கள் மனந்திரும்பும்போது தேவனுடைய கிருபையும் இரக்கமும் அவர்களுக்கு எவ்வாறு கிடைக்கிறது என்பது பற்றி இந்த வசனப்பகுதி விளக்குகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கைவிடவும் வெறுக்கவும் மாட்டார். அவரே அவர்களுடைய தேவனாகிய கர்த்தர்.

தேசம் அவர்களாலே விடப்பட்டு, பாழாய்க் கிடக்கிறதினாலே தன் ஒய்வுநாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும்; அவர்கள் கர்த்தருடைய நியாயங்களை அவமதித்து, அவர்களுடைய ஆத்துமா கர்த்தருடைய கட்டளைகளை வெறுத்தபடியினால் தாங்கள் அடைந்த தங்களுடைய அக்கிரமத்தின் தண்டனையை நியாயம் என்று ஒத்துக்கொள்ளுவார்கள் *(லேவி 26:43)*.

அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருந்தாலும், கர்த்தர் அவர்களை நிர்மூலமாக்கத்தக்கதாகவும், கர்த்தர் அவர்களோடே பண்ணின தம்முடைய உடன்படிக்கையை அபத்தமாக்கத்தக்கதாகவும், கர்த்தர் அவர்களைக் கைவிடவும் வெறுக்கவுமாட்டார்; அவர் அவர்கள் தேவனாகிய கர்த்தர் (லேவி 26:44).

இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களின் தேசத்தில் ஒடுக்கப்பட்டிருந்தாலும், கர்த்தர் அவர்களோடு செய்துகொண்ட தம்முடைய வாக்குத்தங்களை நினைவுகூருகிறார். கர்த்தர் நினைவுகூரும் ஒரு சில காரியங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. நான் அவர்களைக் கைவிடமாட்டேன்.
2. நான் அவர்களை வெறுக்கமாட்டேன்.
3. நான் அவர்களை நிர்மூலமாக்கமாட்டேன்.
4. நான் அவர்களோடே பண்ணின என் உடன்படிக்கையை அபத்தமாக்கமாட்டேன்.
5. அவர்களுடைய முன்னோர்களோடே நான் பண்ணின உடன்படிக்கையை அவர்கள் நிமித்தம் நினைவுகூருவேன்.

இந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் நிறைவேற வேண்டுமானால் இஸ்ரவேல் புத்திரர்கள் தாங்கள் செய்த பாவங்களுக்காக மனந்திருந்தி, தங்களுடைய பாவங்களைக் கர்த்தரிடம் அறிக்கையிடவேண்டும் (லேவி 26:40-41)

தேவன் இஸ்ரவேல் புத்திரரை முன்னறிந்திருக்கிறார். அவர்களைக் கைவிட்டு நிர்மூலம் பண்ணமாட்டார். அவர்களை மனந்திருந்த வைத்து, அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்க வைத்து, அவர்களுடைய பாவங்களை மன்னித்து, அவர்களைப் பெரிய ஜாதியாக்குவார் (ஏசா 11:10-12; எசே 27; சக 12:10-13:1; சக 14:14-21; லூக்கா 1:32-33; ரோமர் 11:1-2,11-33).

தேவன் தம்முடைய உடன்படிக்கையை முறித்துப் போடவில்லை. இஸ்ரவேல் புத்திரர்களே தேவனுக்குக் கீழ்ப்படியாமல் உடன்படிக்கையை முறித்துப்போட்டார்கள். ஆகையினால் அவர்கள் மனந்திருந்தும் வரையிலும் தேவன் தம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றமாட்டார். (ஏசா 1:9, ரோமர் 11:25-33; வெளி 12)

தேவன் மனுஷர் நிமித்தமாகவே பல காரியங்களைச் செய்கிறார். ஆகையினால் தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய சமூகத்தில் மனத்தளர்ச்சியடையாமல் நம்பிக்கையோடே சென்று, அவர் வாக்குத்தத்தம் பண்ணிய காரியங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் புதிய உடன்படிக்கை உண்டானபடியினால், தேவன் மோசேயின் உடன்படிக்கையை நினைவுகூரமாட்டார். லேவி 26:42,44-45 ஆகிய வசனங்களில் தேவன் ஆபிரகாமின் உடன்படிக்கையை நினைவுகூருவதாக சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய கிருபையுள்ள வார்த்தைகளை சொல்லுகிறார். அவர் தம்முடைய பிள்ளைகளிடத்தில் அன்பும் கரிசனையுமுள்ளவர். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவரை விட்டு விலகிப்போனாலும், கர்த்தரோ தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் அவர்களை மறுபடியுமாய் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்ள விரும்புகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக துரோகம்பண்ணி நடபித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கை பண்ணவேண்டும். அவர்கள் விருத்தசேதனமில்லாத தங்கள் இருதயத்தை கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தவேண்டும். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற தண்டனைகளை, தங்கள் அக்கிரமத்திற்கு கிடைத்த நியாயமான தண்டனை என்று ஒத்துக்கொள்ளவேண்டும்.

அப்பொழுது கர்த்தர் யாக்கோபோடே பண்ணின தம்முடைய உடன்படிக்கையையும், ஈசாக்கோடே பண்ணின தம்முடைய உடன்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின தம்முடைய உடன்படிக்கையையும் நினைப்பார்; கர்த்தர் கானான் தேசத்தையும் நினைப்பார் (லேவி 26:42).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய தேவனாயிருக்கும்படிக்கு, அவர் புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக எகிப்துதேசத்திலிருந்து அவர்களைப் புறப்படச் செய்து, அவர்களுடைய முன்னோர்களோடே தாம் பண்ணின உடன்படிக்கையை அவர்கள் நிமித்தம் நினைவுகூருவார் *(லேவி 26:45)* "நான் கர்த்தர் என்று சொல்" என்று கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களை அறிக்கை செய்து, கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் ஒரு சில காரியங்களை நினைவுகூருவதாக சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. நான் யாக்கோபோடே பண்ணின என் உடன்படிக்கையை நினைப்பேன்.
2. நான் ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கையை நினைப்பேன்.
3. நான் ஆபிரகாமோடே பண்ணின என் உடன்படிக்கையை நினைப்பேன்.
4. நான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நினைப்பேன்.
5. அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருந்தாலும், நான் அவர்களை நிர்மூலமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களோடே பண்ணின என் உடன்படிக்கையை அபத்தமாக்கத் தக்கதாகவும், நான் அவர்களைக் கைவிடவும் வெறுக்கவு மாட்டேன்; *(லேவி 26:45)*

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய மூவரும் சேர்த்துக் கூறப்பட்டிருக்கும் 40 இடங்களில் இந்த இடத்தில் மட்டுமே யாக்கோபின் பெயர் ஆபிரகாம், ஈசாக்கு ஆகியோரின் பெயர்களுக்கு முன்பாக வருகிறது. கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தையும் நினைப்பார். கர்த்தர் முற்பிதாக்களைப் பற்றி நினைக்கும்போது வாக்குத்தத்த தேசத்தைப் பற்றியும் நினைப்பார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடே பண்ணின உடன்படிக்கையை நினைவுகூருகிறார். கர்த்தர் உண்மையுள்ளவர். கர்த்தருடைய உடன்படிக்கையைப்பற்றி இந்த வசனப்பகுதியில் மூன்றுமுறை திரும்ப திரும்ப சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை மறக்காமல் நினைவு கூருகிறார் என்பதற்கு இது அடையாளம்.

கர்த்தர் நம்மோடு செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவுகூருவதுபோல, நாமும் அவரோடு செய்துகொண்ட உடன்படிக்கையை நினைவுகூரவேண்டும். கர்த்தர் உண்மையுள்ளவராகயிருப்பதுபோல, நாமும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து நடக்கிறவர்கள் பாவத்தின் பாதையிலே நடக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கும், தண்டனைகளுக்கும் பாத்திரவான்களாயிருக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து நடக்கிறவர்கள், தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்களுடைய இருதயத்தை கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தி, தங்கள் பாவங்களை அறிக்கை செய்யும்போது, கர்த்தர் தம்முடைய கிருபைகளையும் இரக்கங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார்.

பாவத்தின் பாதையில் நடக்கிறவர்கள், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் பாதையில் நடந்தாலும், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, அவர்கள் கர்த்தருடைய விசேஷித்த கிருபையின் பாதையிலும், இரக்கத்தின் பாதையிலும் நடக்கிறார்கள். நாம் கர்த்தருடைய கிருபையின் பாதையில் நடக்கும்போது கர்த்தர் நம்முடைய பாவங்களையும், மீறுதல்களையும், அக்கிரமங்களையும் நினைவுகூராமல், தம்முடைய கிருபையுள்ள உடன்படிக்கையையும், இரட்சிக்கும் உடன்படிக்கையையும் நினைவுகூருகிறார்.

கர்த்தர் தமக்கும் இஸ்ரவேல் சந்ததியாருக்கும் நடுவே இருக்கும்படி மோசேயைக் கொண்டு, சீனாய் மலையின்மேல் கொடுத்த கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே *(லேவி 26:46)*.

மோசேக்கு கட்டளைகளையும், நியாயங்களையும் கொடுத்தவர் தேவனே. இதுவே மோசேயின் உடன்படிக்கையாயிற்று. *(லேவி 26:46; லேவி 7:38; லேவி 25:1; லேவி 27:34)*. இந்தப் பகுதியுடன், லேவி 25:1 ஆகிய வசனத்தில் ஆரம்பமான விசேஷித்த பகுதி முடிவுபெறுகிறது.

27 அதிகாரம்

கர்த்தர் இதுவரையிலும் ஆராதனை சம்பந்தமான தம்முடைய பிரமாணங்களை சொன்னார். அவர் இந்த அதிகாரத்தில் விசேஷித்த பொருத்தனைகளைப்பற்றியும் காணிக்கைகளைப்பற்றியும் தம்முடைய பிரமாணங்களைச் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயினிடத்தில் தம்முடைய பிரமாணங்களை சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின் வார்த்தைகளைக் கேட்டு கர்த்தர்மீது பக்தி வைராக்கியமாயிருக்கிறார்கள். அவர்கள் தங்களையும், தங்களுடைய பிள்ளைகளையும், தங்கள் நிலங்களையும் பரிசுத்தம்பண்ணுகிறார்கள்.

கர்த்தருக்கு பரிசுத்தமாக நேர்ந்து கொள்ளப்பட்ட பொருத்தனைகளைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மனுஷர்கள் (லேவி 27:2-8). மிருகஜீவன்கள் (லேவி 27:9-13). வீடுகளும் நிலங்களும் (லேவி 27:14-25). தலையீற்றானவைகள் (லேவி 27:26,27). கர்த்தருக்கென்று சாபத்தீடாக நேர்ந்துகொள்ளப்பட்ட மிருகஜீவன்களும், காணியாட்சி நிலங்களும் (லேவி 27:28,29). தசமபாகங்கள் (லேவி 27:30-34).

மனுஷரையும், மிருகஜீவன்களையும் பொருத்தனைபண்ணுதல் லேவி 27:1-13

லேவி 27:1. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

லேவி 27:2. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், யாதாமொருவர் ஒரு விசேஷித்த பொருத்தனை பண்ணியிருந்தால், பொருத்தனை பண்ணப்பட்டவர்கள் உன் மதிப்பின்படி கர்த்தருக்கு உரியவர்கள்.

லேவி 27:3. இருபது வயதுமுதல் அறுபது வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை நீ பரிசுத்த ஸ்தலத்தில் சேக்கலாகிய ஐம்பது வெள்ளிச் சேக்கலாகவும்,

லேவி 27:4. பெண்பிள்ளையை முப்பது சேக்கலாகவும் மதிப்பாயாக.

லேவி 27:5. ஐந்துவயது முதல் இருபது வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை இருபது சேக்கலாகவும், பெண்பிள்ளையைப் பத்துச் சேக்கலாகவும்,

லேவி 27:6. ஒரு மாதம் முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை ஐந்து வெள்ளிச் சேக்கலாகவும், பெண்பிள்ளையை மூன்று வெள்ளிச் சேக்கலாகவும்,

லேவி 27:7. அறுபது வயது தொடங்கி, அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளையைப் பதினைந்து சேக்கலாகவும், பெண்பிள்ளையைப் பத்துச் சேக்கலாகவும் மதிக்கக்கடவாய்.

லேவி 27:8. உன் மதிப்பின்படி செலுத்தக் கூடாத தரித்திரனாயிருந்தால், அவன் ஆசாரியனுக்கு முன்பாகவந்து நிற்கக்கடவன்; ஆசாரியன் அவனை மதிப்பானாக; பொருத்தனை பண்ணினவனுடைய திராணிக்கேற்றபடி ஆசாரியன் அவனை மதிக்கக்கடவன்,

லேவி 27:9. ஒருவன் பொருத்தனை பண்ணினது கர்த்தருக்குப் பலியிடப்படத்தக்க மிருக ஜீவனானால் அவன் கர்த்தருக்குக் கொடுக்கிற அப்படிப்பட்டதெல்லாம் பரிசுத்தமாயிருப்பதாக.

லேவி 27:10. அதை மாற்றாமலும் வேறுபடுத்தாமலும் இருப்பானாக; இளப்பமானதிற்குப் பதிலாக நல்மானதையும், நல்மானதற்குப் பதிலாக இளப்பமானதையும் செலுத்தாமல் இருப்பானாக; அவன் மிருகத்திற்குப் பதிலாக மிருகத்தை மாற்றிக் கொடுப்பானாகில், அப்பொழுது அதுவும் அதற்குப் பதிலாகக் கொடுத்ததும் பரிசுத்தமாயிருப்பதாக.

லேவி 27:11. அது கர்த்தருக்குப் பலியிடப்படத்தகாத சுத்தமல்லாத யாதொரு மிருகமானால், அதை ஆசாரியனுக்கு முன்பாக நிறுத்தக்கடவன்.

லேவி 27:12. ஆசாரியன் அது நல்லதானாலும் இளப்பமானதானாலும் அதை மதிப்பானாக; உன் மதிப்பின்படியே இருக்கக்கடவது.

லேவி 27:13. அதை மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானாகில் உன் மதிப்போடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சமுகத்தில் பொருத்தனை பண்ணுகிறார்கள். அவர்கள் தமக்கு பொருத்தனைபண்ண வேண்டுமென்று கர்த்தர் எங்கும், யாரையும் கட்டாயம்பண்ணவில்லை. அவர்கள் மனப்பூர்வமாகவும், சுயாதீனமாகவும் கர்த்தருக்கு பொருத்தனை பண்ணுகிறார்கள்.

தமக்கு பொருத்தனை பண்ணுகிறவர்கள்மீதுகர்த்தர் பிரியப்படுகிறார். அவர்கள் தங்கள் பொருத்தனையில் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், யாதாமொருவர் ஒரு விசேஷித்த பொருத்தனை பண்ணியிருந்தால், பொருத்தனை பண்ணப்பட்டவர்கள் உன் மதிப்பின்படி கர்த்தருக்கு உரியவர்கள்" *(லேவி 27:1,2)* என்று சொல்லுகிறார்.

பொதுவாக ஒருவருக்கு வியாதி, ஆபத்து, ஆகியவை வரும்போது தேவனிடத்தில் பொருத்தனைபண்ணுவார்கள். அல்லது தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்போது ஸ்தோத்திரக் காணிக்கையாக ஒரு பொருத்தனை பண்ணிக் கொள்வார்கள். ஒருவன் தன்னையோ, தன் மனைவியையோ, தன் பிள்ளைகளையோ, தன் வேலைக்காரரையோ கர்த்தரிடத்தில் அர்ப்பணிக்கலாம். இவர்களுடைய வயது, ஆண், பெண் பாகுபடு ஆகியவற்றின் அடிப்படையில் இவர்களுக்கு மதிப்பிடப்பட்டு அந்தப் பணத்தை ஆசாரியரிடம் செலுத்த வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு மனுஷரையும், மிருகஜீவன்களையும், வீடுகளையும், நிலங்களையும் பொருத்தனைபண்ணினார்கள். மிருகங்களின் தலையீற்றுக்களையும் கர்த்தருக்கு பொருத்தனைபண்ணினார்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் தன்னையோ அல்லது தன்னுடைய பிள்ளையையோ ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்திற்கென்று பொருத்தனை பண்ணலாம். பொருத்தனை பண்ணப்பட்டவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை செய்வார்கள். ஆசரிப்புக்கூடாரத்தை சுத்தம்பண்ணுவது, சாம்பல்களை எடுத்து பாளயத்திற்கு புறம்பே கொட்டுவது போன்ற சாதாரணமான வேலைகளை செய்வார்கள்.

கர்த்தருக்கு தங்களை பொருத்தனை பண்ணுகிறவர்கள், கர்த்தருடைய ஊழியத்திற்காக தங்களை பரிசுத்தம்பண்ணிக் கொள்ளவேண்டும். கர்த்தருக்கு பணிவிடை செய்கிறவர்கள் முழுமனதோடும், முழுஆத்துமாவோடும், முழுஇருதயத்தோடும் சேவை செய்யவேண்டும்.

"ஆனாலும் கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதை நோக்கி: என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே இருந்தது நல்ல காரியந்தான்" *(2நாளா 6:8)*.

இஸ்ரவேல் புத்திரரில் சிலர் கர்த்தருக்கென்று தங்களை பொருத்தனை பண்ணுவார்கள். ஆனால் அவர்களால் ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை செய்வதற்கு, அங்கே வேலை எதுவும் இருக்காது. சில சமயங்களில் இஸ்ரவேல் கோத்திரத்தாரில் ஒரு குறிப்பிட்ட கோத்திரத்தார், ஆசரிப்புக்கூடாரத்தின் சில குறிப்பிட்ட வேலைகளை செய்து முடித்துவிடுவார்கள்.

கர்த்தருக்கு தங்களை பொருத்தனைபண்ணிக்கொண்டவர்கள், ஆசரிப்புக்கூடாரத்தில் பணிவிடை செய்யவில்லையென்றால், அவர்கள் தங்களை மீட்டுக்கொள்ளவேண்டும். பொருத்தனைபண்ணப்பட்டவர்கள் கர்த்தருக்குரியவர்கள்.

மோசே கர்த்தருக்கு விசேஷித்த பொருத்தனை பண்ணிக்கொண்டவர்களை தன்னுடைய மதிப்பின்படி மதிக்கவேண்டும். பொருத்தனைபண்ணின எல்லோரையும் ஒன்றுபோல் மதிக்கக்கூடாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான மதிப்பை கர்த்தர் நியமனம் செய்திருக்கிறார்.

பொருத்தனைபண்ணப்பட்டவர்கள், தாங்கள் மதிக்கப்பட்ட மதிப்பை கர்த்தருடைய ஆலயத்தில் காணிக்கையாக செலுத்தவேண்டும். பரிசுத்த ஸ்தலத்தை பழுதுபார்ப்பதற்கும், கர்த்தருடைய ஊழியங்களுக்கும் இந்தக் காணிக்கை செலவுபண்ணப்படும்.

"கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கும்படிக்கு வேலை செய்கிறவர்களுக்கே அதைக் கொடுத்தார்கள்" *(2இராஜா 12:14)*.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இருபது வயதுமுதல் அறுபது வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை நீ பரிசுத்த ஸ்தலத்தில் சேக்கலாகிய ஐம்பது வெள்ளிச் சேக்கலாகவும், பெண்பிள்ளையை முப்பது சேக்கலாகவும் மதிப்பாயாக" *(லேவி 27:3,4)* என்றும்,

"ஐந்துவயது முதல் இருபது வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை இருபது சேக்கலாகவும், பெண்பிள்ளையைப் பத்துச் சேக்கலாகவும், ஒரு மாதம் முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை ஐந்து வெள்ளிச் சேக்கலாகவும், பெண்பிள்ளையை மூன்று வெள்ளிச் சேக்கலாகவும், அறுபது வயது தொடங்கி, அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளையைப் பதினைந்து சேக்கலாகவும், பெண்பிள்ளையைப் பத்துச் சேக்கலாகவும் மதிக்கக்கடவாய் *(லேவி 27:5-7)* என்றும் சொல்லுகிறார்.

பொருத்தனைப்பண்ணப்பட்டவர்களால் தங்களுடைய மதிப்பின்படி கர்த்தருக்கு காணிக்கை செலுத்த முடியாத தரித்திரராகயிருக்கலாம். தரித்திரரால் தங்கள் மதிப்பின்படி கர்த்தருக்கு காணிக்கை செலுத்த முடியாது.

பொருத்தனைபண்ணப்பட்டவர்கள் மோசேயினுடைய மதிப்பின்படி செலுத்தக் கூடாத தரித்திரனாயிருந்தால், அவன் ஆசாரியனுக்கு முன்பாகவந்து நிற்க வேண்டும்; ஆசாரியன் அவனை மதிக்கவேண்டும்; பொருத்தனை பண்ணினவனுடைய திராணிக்கேற்றபடி ஆசாரியன் அவனை மதிக்கவேண்டும் *(லேவி 27:8)*.

பொருத்தனையின் மதிப்பைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஒரு மாதம் முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளை - ஐந்து வெள்ளிச் சேக்கல்

2. ஒரு மாதம் முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட பெண்பிள்ளை - மூன்று வெள்ளிச் சேக்கல்.

3. ஐந்துவயது முதல் இருபது வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளை - இருபது சேக்கல்

4. ஐந்துவயது முதல் இருபது வயதுக்கு உட்பட்ட பெண்பிள்ளை - பத்துச் சேக்கல்

5. இருபது வயதுமுதல் அறுபது வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளை - ஐம்பது வெள்ளிச் சேக்கல்

6. இருபது வயதுமுதல் அறுபது வயதுக்கு உட்பட்ட பெண்பிள்ளை - முப்பது வெள்ளிச் சேக்கல்

7. அறுபது வயது தொடங்கி, அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளை - பதினைந்து சேக்கல்

8. அறுபது வயது தொடங்கி, அதற்கு மேற்பட்ட வயதுள்ள பெண்பிள்ளை - பத்து சேக்கல்

இஸ்ரவேல் புத்திரர் தங்களையும், தங்களுடைய பிள்ளைகளையும் கர்த்தருக்கு விசேஷித்த பொருத்தனைபண்ணுவதுபோல, தங்கள் மிருகஜீவன்களையும் கர்த்தருக்கு பொருத்தனை பண்ணுகிறார்கள்.

ஒருவன் பொருத்தனைபண்ணினது கர்த்தருக்குப் பலியிடப்படத்தக்க மிருக ஜீவனானால் அவன் கர்த்தருக்குக் கொடுக்கிற அப்படிப்பட்டதெல்லாம் பரிசுத்தமாயிருப்பதாக (லேவி 27:9) என்றும்,

அதை மாற்றாமலும் வேறுபடுத்தாமலும் இருப்பானாக; இளப்பமானதிற்குப் பதிலாக நலமானதையும், நலமானதற்குப் பதிலாக இளப்பமானதையும் செலுத்தாமல் இருப்பானாக; அவன் மிருகத்திற்குப் பதிலாக மிருகத்தை மாற்றிக் கொடுப்பானாகில், அப்பொழுது அதுவும் அதற்குப் பதிலாகக் கொடுத்ததும் பரிசுத்தமாயிருப்பதாக (லேவி 27:10) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பொருத்தனைபண்ணப்பட்ட மிருகஜீவன், கர்த்தருக்குப் பலியிடப்படத்தகாத சுத்தமல்லாத யாதொரு மிருகமானால், அதை ஆசாரியனுக்கு முன்பாக நிறுத்தவேண்டும். ஆசாரியன் அது நல்லதானாலும் இளப்பமானதானாலும் அதை மதிக்கவேண்டும். அது மோசேயினுடைய மதிப்பின்படியே இருக்கவேண்டும் (லேவி 27:11,12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மிருகஜீவனை பொருத்தனைபண்ணினவன், அதை மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானாகில், அவன் மோசேயினுடைய மதிப்போடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கவேண்டும் (லேவி 27:13) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பொருத்தனை பண்ணும்போது அவசரப்பட்டு எதையும் பொருத்தனைபண்ணக்கூடாது. தங்களுடைய திராணிக்குத்தக்கதாகவும், விசுவாசத்திற்கு தக்கதாகவும் யோசித்துப் பார்த்து, தீர்மானம்பண்ணி பொருத்தனை பண்ணவேண்டும். பொருத்தனை பண்ணியவர்கள் தங்கள் பொருத்தனையில் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். பொருத்தனைபண்ணியதை கர்த்தருக்கு செலுத்தாமலிருப்பது பாவம்.

கர்த்தர்மீதுள்ள பக்தி வைராக்கியத்தினால் பொருத்தனை பண்ணிவிட்டு, அதை செலுத்தாமலிருக்கிறவர்கள், தங்கள் பக்தியினால், தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் சாபத்தையும், அழிவையும் வருவித்துக்கொள்கிறார்கள்.

பொருத்தனைகளைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், தாமொருவர் ஒரு விசேஷித்த பொருத்தனை பண்ணியிருந்தால், பொருத்தனை பண்ணப்பட்டவர்கள் இருபது வயதுமுதல் அறுபது வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை நீ பரிசுத்த ஸ்தலத்தில் சேக்கலாகிய ஐம்பது வெள்ளிச் சேக்கலாகவும் மதிப்பிட வேண்டும் (லேவி 27:2-3).

2. பெண்பிள்ளையை முப்பது சேக்கலாகவும் மதிப்பிடவேண்டும் (லேவி 27:4).

3. ஐந்துவயது முதல் இருபது வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளைக்கு இருபது சேக்கல் (லேவி 27:5).

4. ஐந்துவயது முதல் இருபது வயதுக்கு உட்பட்ட பெண்பிள்ளைக்குப் பத்துச் சேக்கல் (லேவி 27:5).

5. ஒரு மாதம் முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளைக்கு ஐந்து வெள்ளிச் சேக்கல் (லேவி 27:6).

6. ஒரு மாதம் முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட பெண்பிள்ளைக்கு மூன்று வெள்ளிச் சேக்கல் (லேவி 27:6).

7. அறுபது வயது தொடங்கி, அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைக்கு பதினைந்து சேக்கல் (லேவி 27:7).

8. அறுபது வயது தொடங்கி, அதற்கு மேற்பட்ட வயதுள்ள பெண்பிள்ளைக்கு பத்துச்சேக்கல் (லேவி 27:7).

9. உன் மதிப்பின்படி செலுத்தக் கூடாத தரித்திரனாயிருந்தால், அவன் ஆசாரியனுக்கு முன்பாகவந்து நிற்கக் கடவன்; ஆசாரியன் அவனை மதிப்பானாக; பொருத்தனை பண்ணினவனுடைய திராணிக்கேற்றபடி ஆசாரியன் அவனை மதிக்கக்கடவன் (லேவி 27:8).

மிருகஜீவன்களை பொருத்தனை பண்ணுவதுபற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஒருவன் பொருத்தனைபண்ணினது கர்த்தருக்குப் பலியிடப்படத்தக்க மிருக ஜீவனானால் அவன் கர்த்தருக்குக் கொடுக்கிற அப்படிப்பட்டதெல்லாம் பரிசுத்தமாயிருப்பதாக.

2. அதை மாற்றாமலும் வேறுபடுத்தாமலும் இருப்பானாக; இளப்பமானதிற்குப் பதிலாக நலமானதையும், நலமானதற்குப் பதிலாக இளப்பமானதையும் செலுத்தாமல் இருப்பானாக (லேவி 27:10).

3. அவன் மிருகத்திற்குப் பதிலாக மிருகத்தை மாற்றிக் கொடுப்பானாகில், அப்பொழுது அதுவும் அதற்குப் பதிலாகக் கொடுத்ததும் பரிசுத்தமாயிருப்பதாக.

4. அது கர்த்தருக்குப் பலியிடப்படத்தகாத சுத்தமல்லாத யாதொரு மிருகமானால், அதை ஆசாரியனுக்கு முன்பாக நிறுத்தக்கடவன் (லேவி 27:11).

5. ஆசாரியன் அது நல்லதானாலும் இளப்பமானதானாலும் அதை மதிப்பானாக; உன் மதிப்பின்படியே இருக்கக்கடவது (லேவி 27:12). அந்த மதிப்பின்படியே அந்த மிருகம் விற்கப்படலாம்.

6. அதை மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானாகில் உன் மதிப்போடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன் (லேவி 27:13).

பொருத்தனைகள் அனைத்தும் மனப்பூர்வமாகச் செய்யப்படவேண்டும். யாரும் பொருத்தனை பண்ணுவதற்குக் கட்டாயப்படுத்தப் படவில்லை. செய்து கொண்ட பொருத்தனையை நிறைவேற்ற வேண்டும். (எண் 30:2; பிர 5:4-6). நீதிமான் தன் வார்த்தையைக் காத்துக் கொள்வான். (சங் 15:4) தன்னுடைய ஆசை நிறைவேற வேண்டுமென்றும், தன்னுடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்க வேண்டுமென்றும் பொருத்தனை பண்ணுவது ஆரோக்கியமானதல்ல.

நமது விசுவாசமே நம்முடைய ஜெபத்திற்குப் பதிலைத்தரும். யெப்தா அவசரப்பட்டு பொருத்தனை பண்ணி, பின்பு அவதிப்பட்டான். (நியா 11:29-31). பொருத்தனை பண்ணாமலேயே யெப்தாவால் தன் சத்துருக்களை அழித்திருக்க முடியும். பென்யமீனரை அழிக்க வேண்டுமென்று இஸ்ரவேலர் பொருத்தனை பண்ணினார்கள்.

பென்யமீன் கோத்திரத்தாரில் மீதியுள்ளவர்களுக்குத் தங்கள் ஸ்திரீகளை விவாகம் பண்ணிக் கொடுக்க மறுத்து விடுகிறார்கள். ஆனாலும் தங்கள் செயலுக்காக இஸ்ரவேல் புத்திரர்கள் வருத்தப்பட்டார்கள் (நியா 20-21).

தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மிருகஜீவன் கர்த்தருக்குப் பரிசுத்தமானது என்று அழைக்கப்படவில்லை. சுத்தமான மிருகமே கர்த்தருக்குப் பரிசுத்தமானதாகும். (லேவி 27:10 =லேவி 27:11-13).

வீடுகளையும் நிலங்களையும் நேர்ந்துகொள்ளுதல் லேவி 27:14-25

லேவி 27:14. ஒருவன் தன் வீட்டைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், ஆசாரியன் அதின் நலத்துக்கும் இளப்பத்துக்கும் தக்கதாக அதை மதிக்கக்கடவன்; ஆசாரியன் மதிக்கிறபடி அது இருக்கக்கடவது.

லேவி 27:15. தன் வீட்டைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டவன் அதை மீட்டுக் கொள்ள மனதாயிருந்தால், நீ மதிக்கும் திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக் கடவன்; அப்பொழுது அது அவனுடையதாகும்.

லேவி 27:16. ஒருவன் தன் காணியாட்சியான வயலில் யாதொரு பங்கைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், உன் மதிப்பு அதின் விதைப்புக்குத்தக்கதாய் இருக்க வேண்டும்; ஒரு கலம் வாற் கோதுமை விதைக்கிற வயல் ஐம்பது வெள்ளிச் சேக்கலாக மதிக்கப்பட வேண்டும்.

லேவி 27:17. யூபிலி வருஷமுதல் அவன் தன் வயலைப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், அது உன் மதிப்பின்படி இருக்க வேண்டும்.

லேவி 27:18. யூபிலி வருஷத்துக்குப் பின் தன் வயலைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டானானால், யூபிலி வருஷம்மட்டுமுள்ள மற்ற வருஷங்களின் படியே ஆசாரியன் திரவியத்தைக் கணக்குப் பார்த்து, அதற்குத் தக்கது உன் மதிப்பிலே தள்ளப்பட வேண்டும்.

லேவி 27:19. வயலைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டவன் அதை மீட்டுக் கொள்ள மனதாயிருந்தால், உன் மதிப்பான திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு உறுதியாகும்.

லேவி 27:20. அவன் வயலை மீட்டுக்கொள்ளாமல், வயலை வேறொருவனுக்கு விற்றுப்போட்டால், அது திரும்ப மீட்கப்படாமல்,

லேவி 27:21. யூபிலி வருஷத்தில் மீட்கப்படும்போது, சாபத்தீடான வயல்ாகக் கர்த்தருக்கென்று நியமிக்கப்பட்டதாயிருக்கக்கடவது; அது ஆசாரியனுக்குக் காணியாட்சியாகும்.

லேவி 27:22. ஒருவன் தனக்குக் காணியாட்சி வயலாயிராமல் தான் விலைக்கு வாங்கின ஒரு வயலைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால்,

லேவி 27:23. அது யூபிலி வருஷம்மட்டும், உன் மதிப்பின்படி பெறும் விலை இன்னதென்று ஆசாரியன் அவனோடே கணக்குப் பார்த்து, அந்த உன் மதிப்பை, கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்படி, அவன் அந்நாளிலே கொடுக்கக் கடவன்.

லேவி 27:24. யார்கையிலே அந்த வயலைக் கொண்டானோ, அந்தக் காணியாட்சிக்காரன் வசமாய் அது யூபிலி வருஷத்தில் திரும்பச் சேரும்.

லேவி 27:25. உன் மதிப்பெல்லாம் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்காயிருக்கக் கடவது; ஒரு சேக்கலானது இருபது கேரா.

இஸ்ரவேல் புத்திரர் மனுஷரையும், மிருகஜீவன்களையும் கர்த்தருக்கு பொருத்தனை பண்ணுவதுபோல, தங்கள் வீட்டையும், காணியாட்சியான வயலையும் கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொள்கிறார்கள். கர்த்தருக்கென்று நேர்ந்துகொள்ளப்பட்டது எல்லாமே கர்த்தருக்குரியது. அதை நேர்ந்துகொண்டவர்கள் தங்களுடைய சொந்த உபயோகத்திற்கு அதை பயன்படுத்தவேண்டுமென்றால், அதை கர்த்தரிடத்திலிருந்து மீட்டுக்கொள்ள வேண்டும்.

கர்த்தருக்கு நேர்ந்துகொள்ளப்பட்ட வீடுகளும், காணியாட்சி நிலங்களும் கர்த்தருக்கு பரிசுத்தமாயிருக்கும். அவற்றை மீட்டுக்கொள்வதற்கான பிரமாணத்தை கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

ஒருவன் தன் வீட்டைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், ஆசாரியன் அதின் நலத்துக்கும் இளப்பத்துக்கும் தக்கதாக அதை மதிக்கக் கடவன்; ஆசாரியன் மதிக்கிறபடி அது இருக்கக்கடவது (லேவி 27:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நேர்ந்துகொள்ளப்பட்ட வீட்டின் மதிப்பை ஆசாரியனே மதிக்கவேண்டும். வீட்டை நேர்ந்துகொண்டவனுக்கும், ஆசாரியனுக்கும் இடையே பேரம்பேசுவதோ அல்லது கருத்து வேறுபாடோ இருக்கக்கூடாது. ஆசாரியன் மதிக்கிறபடி அந்த வீட்டின் மதிப்பு இருக்க வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். ஆசாரியரின் மதிப்பே முடிவானது.

கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொள்ளப்பட்ட வீடு, ஆசாரியன் மதிக்கிற மதிப்பின் பிரகாரம் கிரயத்திற்கு விற்கப்படும். அந்த வீட்டின் விற்பனை கிரயம் பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்திற்காக பயன்படுத்தப்படும். ஆசரிப்புக்கூடாரத்திலும், கர்த்தருடைய தேவாலயத்திலும் கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொள்ளப்பட்ட வீடுகளை விற்ற கிரயத்தின் மூலமாக, ஏராளமான காணிக்கைகள் வந்து சேர்ந்தது.

"தன் தகப்பனும் தானும் பரிசுத்தப்படுத்தும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டுவந்தான்" (1இராஜா 15:15).

ஒருவன் தன் வீட்டை கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்ட பின்பு, அந்த வீட்டை மற்றவர்களுக்கு விற்காமல், தானே மீட்டுக்கொள்ள மனதாயிருந்தால், அவன் அதை மீட்டுக்கொள்ளலாம். அந்த வீட்டை அவன் மீட்டுக்கொள்ள வேண்டுமென்றால், அந்த வீட்டுக்குரிய மீட்பின் கிரயத்தை செலுத்தவேண்டும்.

தன் வீட்டைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டவன் அதை மீட்டுக் கொள்ள மனதாயிருந்தால், நீ மதிக்கும் திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன்; அப்பொழுது அது அவனுடையதாகும் (லேவி 27:15) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த திரவியமும் பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்தில் பயன்படுத்தப்படும்.

ஒருவன் தன் வீட்டை கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொள்வதற்கு முன்பாகவே, அந்த வீட்டை மற்றவர்களுக்கு விற்கவேண்டுமா அல்லது தானே மீட்டுக்கொள்ளவேண்டுமா என்பதை, நேர்ந்துகொண்டவன் தீர்மானம்பண்ணவேண்டும்.

வீட்டை கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொள்வது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஒருவன் தன் வீட்டைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், அந்த வீடு கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்.

2. ஆசாரியன் அதின் நலத்துக்கும் இளப்பத்துக்கும் தக்கதாக அதை மதிக்கக் கடவன். ஆசாரியன் மதிக்கிறபடி அது இருக்கக்கடவது.

3. தன் வீட்டைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டவன் அதை மீட்டுக் கொள்ள மனதாயிருந்தால், அவன் மதிக்கும் திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன்; அப்பொழுது அது அவனுடையதாகும். (லேவி 27:15). பரிசுத்தம் என்று நேர்ந்து கொள்ளப்படும் வீடுகள், மதில் சூழப்படாத பட்டணத்தில் இருந்தால், அதை யூபிலி வருஷத்திற்கு முன்பாக எப்பொழுதும் மீட்டுக் கொள்ளலாம். (லேவி 25:31) மதில்சூழ்ந்த பட்டணத்திற்குள் இருக்கும் வீடுகளை ஒரு வருஷத்திற்குள் மீட்டுக் கொள்ள வேண்டும் (லேவி 25:29).

கர்த்தருக்கு பரிசுத்தமானது என்று நேர்ந்துகொள்வது சம்பந்தமான செய்திகளின் விவரம் வருமாறு :

1. மனுஷரை மட்டுமல்லாமல் மிருகஜீவன்களையும், வீடுகளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானது என்று நேர்ந்து கொள்ளலாம் (லேவி 27:14-33).

2. வீடுகள், வயல்கள், ஆகிய வஸ்துக்களில் பாவம் இருப்பதில்லை.

3. மனுஷனே பொருட்களைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொள்ள வேண்டும்.

4. கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொள்ளப்படுபவை கர்த்தருக்குப் பரிசுத்தமாக இருக்கும். வீடு (லேவி 27:14-15), நிலம் (லேவி 27:16-25), மிருகஜீவன் (தலையீற்றுத்தவிர) லேவி 27:26-27), மற்ற பொருட்கள் (தசமபாகம் தவிர) (லேவி 27:28-33) இவையெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும். (லேவி 27:14,23).

5. பரிசுத்தம் என்று நேர்ந்து கொள்ளப்பட்டதை அதன் மதிப்போடு சேர்ந்து இருபது சதவீதத்தைக் கூட்டிக்கொடுத்து மீட்டுக்கொள்ளலாம். (லேவி 27:15, 19-25,31).

6. பரிசுத்தம் என்று நேர்ந்து கொள்ளப்படுபவை ஆசாரியரைச் சேரும். ஆகையினால் இவற்றை மீட்கும் கிரயமும் ஆசாரியரையே சாரும்.

7. கர்த்தருக்கு ஏற்கெனவே உரியதை மனுஷன் கர்த்தருக்குப் பரிசுத்தமானது என்று நேர்ந்து கொள்ள முடியாது. (லேவி 27:26-33).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வீடுகளை கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொள்வதுபோல, தங்களுடைய காணியாட்சியின் மொத்த வயலையும் அல்லது அந்த வயலின் ஒரு பங்கையும் கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொள்ளலாம்.

கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்ட வயலை, மற்றவர்களுக்கு விற்கலாம். அல்லது தானே அதை மீட்டுக்கொள்ளலாம். அந்த வயலை விற்பனை செய்வது சம்பந்தமாக கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

ஒருவன் தன் காணியாட்சியான வயலில் யாதொரு பங்கைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், உன் மதிப்பு அதின் விதைப்புக்குத்தக்கதாய் இருக்க வேண்டும்; ஒரு கலம் வாற் கோதுமை விதைக்கிற வயல் ஐம்பது வெள்ளிச் சேக்கலாக மதிக்கப்பட வேண்டும் (லேவி 27:16) என்றும்,

யூபிலி வருஷமுதல் அவன் தன் வயலைப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், அது உன் மதிப்பின்படி இருக்க வேண்டும் (லேவி 27:17) என்றும்,

யூபிலி வருஷத்துக்குப் பின் தன் வயலைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டானானால், யூபிலி வருஷம்மட்டுமுள்ள மற்ற வருஷங்களின் படியே ஆசாரியன் திரவியத்தைக் கணக்குப் பார்த்து, அதற்குத் தக்கது உன் மதிப்பிலே தள்ளப்பட வேண்டும் (லேவி 27:18) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

தன்னுடைய காணியாட்சியான வயலை கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டவன், அதை மீட்டுக்கொள்ள மனதாயிருந்தால், அதை மீட்டுக்கொள்ளலாம். அந்த வயலை மீட்டுக்கொள்வது சம்பந்தமாக கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

வயலைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டவன் அதை மீட்டுக் கொள்ள மனதாயிருந்தால், மோசேயின் மதிப்பான திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு உறுதியாகும் (லேவி 27:19).

தன் காணியாட்சி வயலை கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்ட பின்பு, அவன் அந்த வயலை மீட்டுக்கொள்ளாமல், வயலை வேறொருவனுக்கு விற்றுப்போட்டால், அது திரும்ப மீட்கப்படாமல், யூபிலி வருஷத்தில் மீட்கப்படும்போது, சாபத்தீடான வயலாகக் கர்த்தருக்கென்று நியமிக்கப்பட்டதாயிருக்கக்கடவது; அது ஆசாரியனுக்குக் காணியாட்சியாகும் (லேவி 27:20,21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒருவன் தன் வயலைக் கர்த்தருக்கென்று நேர்ந்து கொண்டு, அந்த வயலை மீட்டுக்கொள்ளாமல், வேறொருவனுக்கு விற்றுப்போட்டால் அது சாபத்தீடான வயலாகக் கர்த்தருக்கென்று நியமிக்கப்பட்டதாயிருக்கும். யூபிலி வருஷம் வரையிலும் ஆசாரியர் அந்த நிலத்திலிருந்து குத்தகைத் தொகையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அது ஆசாரியனுக்குக் காணியாட்சியாகும். (லேவி 27:20-21)

ஒருவன் தனக்குக் காணியாட்சி வயலாயிராமல் தான் விலைக்கு வாங்கின ஒரு வயலைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், அது யூபிலி வருஷம்மட்டும், மோசேயின் மதிப்பின்படி பெறும் விலை இன்னதென்று ஆசாரியன் அவனோடே கணக்குப் பார்த்து, அந்த மதிப்பை, கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்படி, அவன் அந்நாளிலே கொடுக்கவேண்டும். யார் கையிலே அந்த வயலைக் கொண்டானோ, அந்தக் காணியாட்சிக்காரன் வசமாய் அது யூபிலி வருஷத்தில் திரும்பச் சேரும். (லேவி 27:22-24).

ஒருவன் தனக்குக் காணியாட்சி வயலாயிராமல் தான் விலைக்கு வாங்கின ஒரு வயலைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், அது யூபிலி வருஷம்மட்டும், மோசேயின் மதிப்பின்படி பெறும் விலை இன்னதென்று ஆசாரியன் அவனோடே கணக்குப் பார்த்து, அந்த மதிப்பை, கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்படி, அவன் அந்நாளிலே கொடுக்கக்கடவன் (லேவி 27:22,23) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வயலை கிரயத்திற்கு வாங்கினவன், யார்கையிலே அந்த வயலைக் கொண்டானோ, அந்தக் காணியாட்சிக்காரன் வசமாய் அது யூபிலி வருஷத்தில் திரும்பச் சேரும் (லேவி 27:24).

மோசேயினுடைய மதிப்பெல்லாம் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்காயிருக்க வேண்டும் என்றும், ஒரு சேக்கலானது இருபது கேரா என்றும் (லேவி 27:25) என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கான காணிக்கைகள் மிகவும் நேர்மையான முறையிலும், கண்ணியமான முறையிலும் சேகரிக்கப்படுகிறது.

வயலை கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொள்வது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஒருவன் தன் காணியாட்சியான வயலில் யாதொரு பங்கைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், உன் மதிப்பு அதின் விதைப்புக்குத் தக்கதாய் இருக்க வேண்டும்; ஒரு கலம் வாற் கோதுமை விதைக்கிற வயல் ஐம்பது வெள்ளிச் சேக்கலாக மதிக்கப்பட வேண்டும் (லேவி 27:16).

2. யூபிலி வருஷமுதல் அவன் தன் வயலைப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், அது உன் மதிப்பின்படி இருக்க வேண்டும் (லேவி 27:17).

3. யூபிலி வருஷத்துக்குப் பின் தன் வயலைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டானானால், யூபிலி வருஷம்மட்டுமுள்ள மற்ற வருஷங்களின்படியே ஆசாரியன் திரவியத்தைக் கணக்குப் பார்த்து, அதற்குத் தக்கது உன் மதிப்பிலே தள்ளப்பட வேண்டும் (லேவி 27:18).

4. வயலைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டவன் அதை மீட்டுக் கொள்ள மனதாயிருந்தால், உன் மதிப்பான திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக் கடவன்; அப்பொழுது அது அவனுக்கு உறுதியாகும் (லேவி 27:19).

5. அவன் வயலை மீட்டுக்கொள்ளாமல், வயலை வேறொருவனுக்கு விற்றுப் போட்டால், அது திரும்ப மீட்கப்படாமல், (லேவி 27:20) யூபிலி வருஷத்தில் மீட்கப்படும்போது, அது ஆசாரியனுக்குக் காணியாட்சியாகும்.

6. யூபிலி வருஷத்தில் மீட்கப்படும்போது, சாபத்தீடான வயலாகக் கர்த்தருக்கென்று நியமிக்கப்பட்டதாயிருக்கக்கடவது; அது ஆசாரியனுக்குக் காணியாட்சியாகும் (லேவி 27:21).

7. ஒருவன் தனக்குக் காணியாட்சி வயலாயிராமல் தான் விலைக்கு வாங்கின ஒரு வயலைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், அது யூபிலி வருஷம்மட்டும், உன் மதிப்பின்படி பெறும் விலை இன்னதென்று ஆசாரியன் அவனோடே கணக்குப் பார்த்து, அந்த உன் மதிப்பை, கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்படி, அவன் அந்நாளிலே கொடுக்கக்கடவன் (லேவி 27:23).

8. யார்கையிலே அந்த வயலைக் கொண்டானோ, அந்தக் காணியாட்சிக் காரன் வசமாய் அது யூபிலி வருஷத்தில் திரும்பச் சேரும் (லேவி 27:24).

9. உன் மதிப்பெல்லாம் பரிசுத்த ஸ்தலத்துக்குச் சேக்கல் கணக்காயிருக்கக்கடவது; ஒரு சேக்கலானது இருபது கேரா (லேவி 27:25).

கர்த்தருக்கு பரிசுத்தமானது லேவி 27:26-34

லேவி 27:26. தலையீற்றானவைகள் கர்த்தருடையது, ஆகையால் ஒருவரும் தலையீற்றாகிய மிருகஜீவனைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொள்ளலாகாது; அது மாடானாலும் ஆடானாலும் கர்த்தருடையது.

லேவி 27:27. சுத்தமல்லாத மிருகத்தினுடைய தலையீற்றானால், அதை அவன் உன் மதிப்பின்படி மீட்டுக்கொண்டு, அதனுடனே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக் கடவன்; மீட்கப்படாமலிருந்தால், உன் மதிப்பின்படி அது விற்கப்படக்கடவது.

லேவி 27:28. ஒருவன் தன் வசத்திலுள்ள நரஜீவனிலாவது, மிருக ஜீவனிலாவது, காணியாட்சி நிலத்திலாவது, எதையாகிலும் கர்த்தருக்கென்று சாபத்தீடாக நேர்ந்து கொண்டால், அது விற்கப்படவும் மீட்கப்படவும் கூடாது; நேர்ந்துகொள்ளப்பட்டவைகளெல்லாம் கர்த்தருக்காகப் பரிசுத்தமாயிருக்கும்.

லேவி 27:29. நரஜீவனில் சாபத்தீடாக நியமிக்கப் பட்டவைகளெல்லாம் மீட்கப்படாமல் கொலைசெய்யப்படக் கடவது.

லேவி 27:30. தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனியிலும், தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது.

லேவி 27:31. ஒருவன் தன் தசமபாகத்திலே எவ்வளவாவது மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானானால், அதனுடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக் கடவன்.

லேவி 27:32. கோலின் கீழ்ப்பட்ட ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது.

லேவி 27:33. அது நல்லதோ இளப்பமானதோ என்று அவன் பார்க்க வேண்டாம்; அதை மாற்றவும் வேண்டாம்; மாற்றினால், அதுவும் அதற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டதுமாகிய இரண்டும் பரிசுத்தமாகும்; அது மீட்கப்படக் கூடாதென்று அவர்களோடே சொல் என்றார்.

லேவி 27:34. இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லும்படி, கர்த்தர் சீனாய்மலையில் மோசேக்கு விதித்த கட்டளைகள் இவைகளே.

நியாயப்பிரமாணத்தின் பிரகாரம், சில மிருகஜீவன்கள் ஏற்கெனவே கர்த்தருக்குரியதாகயிருக்கிறது. கர்த்தருக்கு ஏற்கெனவே உரியதை, மறுபடியும் அவருக்கு பரிசுத்தமானது என்று யாரும் நேர்ந்துகொள்ளக்கூடாது.

தலையீற்றானவைகள் கர்த்தருடையது, ஆகையால் ஒருவரும் தலையீற்றாகிய மிருகஜீவனைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொள்ளலாகாது; அது மாடானாலும் ஆடானாலும் கர்த்தருடையது (லேவி 27:26).

நேர்ந்துகொள்ளப்பட்டவைகளெல்லாம் கர்த்தருக்காக பரிசுத்தமாயிருக்கும். ஒருவன் தன் வசத்திலுள்ள நரஜீவனிலாவது, மிருக ஜீவனிலாவது, காணியாட்சி நிலத்திலாவது, எதையாகிலும் கர்த்தருக்கென்று சாபத்தீடாக நேர்ந்து கொண்டால், அது விற்கப்படவும் மீட்கப்படவும் கூடாது; நேர்ந்துகொள்ளப்பட்டவைகளெல்லாம் கர்த்தருக்காகப் பரிசுத்தமாயிருக்கும் (லேவி 27:28).

நரஜீவனில் சாபத்தீடாக நியமிக்கப்பட்டவைகளெல்லாம் மீட்கப்படாமல் கொலைசெய்யப்படக்கடவது (லேவி 27:29) என்று கர்த்தர் சொல்லுகிறார். நரஜீவன் என்பது மனுஷரைக் குறிக்கும். சாபத்தீடாக நியமிக்கப்பட்ட மனுஷரை கொன்றுபோடும் அதிகாரம் யாருக்கும் கொடுக்கப்படவில்லை. இந்த வசனத்தில், "கொலைசெய்யப்படக்கடவது" என்னும் வார்த்தைக்கு, அந்த நபர் இஸ்ரவேலுக்கு பொதுவான சத்துருவாகயிருப்பார் என்பது பொருளாகும்.

"நரஜீவனிலாவது, மிருக ஜீவனிலாவது, காணியாட்சி நிலத்திலாவது" என்னும் வாக்கியம் நரபலியை அங்கிகரிக்கவில்லை. வேதாகமத்தில் மனுஷரைப் பலியிடுவது தடைபண்ணப் பட்டிருக்கிறது. (யாத் 13:13; யாத் 34:20; எண் 18:15). பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பலியிடக்கூடாது (உபா 12:30-31; சங் 106:37-38; எரே 7:31; எசே 16:20-21).

மனுஷரை நேர்ந்து கொள்வதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கும் எபிரெய வார்த்தை "கெரெம்" என்பதாகும். இதற்கு சாபத்தீடாக நேர்ந்து கொள்ளுதல் என்று பொருள். (1சாமு 15:21; 1இராஜா 20:42) இந்த வார்த்தையின் வேர்ச்சொல்லாகிய "கரம்" என்னும் எபிரெய வார்த்தை யாத் 22:20; எண் 21:2-3; உபா 2:34; உபா 7:2 ஆகிய வசனங்களில் "அழிவு" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

சுத்தமல்லாத மிருகத்தினுடைய தலையீற்றானால், அதை அவன் உன் மதிப்பின்படி மீட்டுக்கொண்டு, அதனுடனே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன்; மீட்கப்படாமலிருந்தால், உன் மதிப்பின்படி அது விற்கப்படக்கடவது (லேவி 27:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சுத்தமல்லாத மிருகத்தினுடைய தலையீற்றை, அதன் மதிப்பின்படி மீட்டுக் கொண்டு, அதனுடனே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். கழுதையின் தலையீற்றை ஆட்டுக்குட்டியால் மீட்க வேண்டும் அல்லது அதன் கழுத்து முறிக்கப்படவேண்டும் (யாத் 13:13; யாத் 34:20). இப்போதுள்ள புதிய பிரமாணத்தின் பிரகாரம் அதன் மதிப்பின்படி மீட்டு, அதோடு இருபது சதவீதம் கூட்டிக் கொடுக்கலாம். இதன் மூலமாக ஆசாரிய ஊழியம் செய்யும் ஆசாரியருக்கு ஆதரவு உண்டாகும்.

மூன்று காரியங்கள் கர்த்தருக்கு நித்தியமாக உரியது. அவையாவன :

1. மனுஷரிலும், மிருகஜீவன்களிலும் தலையீற்றானவைகள் கர்த்தருடையது.
2. கர்த்தருக்காக நேர்ந்து கொள்ளப்பட்டது அனைத்தும் (லேவி 27:28-29)
3. ஜனங்களுடைய தசமபாகங்கள் அனைத்தும் (லேவி 27:30-33).

கர்த்தர் இந்த வசனப்பகுதியில் தசமபாகத்தைப்பற்றிய பிரமாணத்தையும் சொல்லுகிறார். தசமபாகம் கர்த்தருடைய ஊழியத்திலே பயன்படுத்தப்படும். கர்த்தர் இந்தப் பிரமாணத்தை சொல்லுவதற்கு முன்பாகவே, ஆபிரகாம் தசமபாகம் செலுத்தியிருக்கிறார்.

"அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்." (ஆதி 14:18-20).

யாக்கோபும் தசமபாகம் செலுத்துவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். "நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத்தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக்கொண்டான்" (ஆதி 28:22).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய விளைச்சலிலும், தானியத்திலும், மிருகஜீவன்களிலும் கர்த்தருக்கு தசமபாகம் செலுத்தவேண்டும். தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனியிலும், தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது (லேவி 27:30).

ஒருவன் தன் தசமபாகத்திலே எவ்வளவாவது மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானானால், அதனுடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக் கடவன் (லேவி 27:31) என்றும்,

கோலின் கீழ்ப்பட்ட ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது (லேவி 27:32) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

அது நல்லதோ இளப்பமானதோ என்று அவன் பார்க்க வேண்டாம்; அதை மாற்றவும் வேண்டாம்; மாற்றினால், அதுவும் அதற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டதுமாகிய இரண்டும் பரிசுத்தமாகும்; அது மீட்கப்படக் கூடாதென்று அவர்களோடே சொல் (லேவி 27:33) என்று கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்துகொள்வது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. தலையீற்றானவைகள் கர்த்தருடையது, ஆகையால் ஒருவரும் தலையீற்றாகிய மிருகஜீவனைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொள்ளலாகாது (லேவி 27:26; யாத் 13:2; எண் 3:13; எண் 18:15).

2. சுத்தமல்லாத மிருகத்தினுடைய தலையீற்றானால், அதை அவன் உன் மதிப்பின்படி மீட்டுக்கொண்டு, அதனுடனே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன் (லேவி 27:27).

3. மீட்கப்படாமலிருந்தால், உன் மதிப்பின்படி அது விற்கப்படக்கடவது. விற்றப் பணம் ஆசாரியனிடம் கொடுக்கப்படவேண்டும்.

4. கர்த்தருக்கென்று சாபத்தீடாக நேர்ந்து கொண்டால், அது விற்கப்படவும் மீட்கப்படவும் கூடாது; நேர்ந்து கொள்ளப்பட்டவைகளெல்லாம் கர்த்தருக்காகப் பரிசுத்தமாயிருக்கும் (லேவி 27:28).

5. நரஜீவனில் சாபத்தீடாக நியமிக்கப் பட்டவைகளெல்லாம் மீட்கப்படாமல் கொலைசெய்யப்படக்கடவது (லேவி 27:29).

6. தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனியிலும், தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது (லேவி 27:30).

7. ஒருவன் தன் தசமபாகத்திலே எவ்வளவாவது மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானானால், அதனுடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன் (லேவி 27:31).

8. கோலின் கீழ்ப்பட்ட ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது. (லேவி 27:27,32).

9. ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது, அது நல்லதோ இளப்பமானதோ என்று அவன் பார்க்க வேண்டாம் (லேவி 27:33).

10. அது நல்லதோ இளப்பமானதோ என்று அவன் பார்க்க வேண்டாம்; அதை மாற்றவும் வேண்டாம்.

11. மாற்றினால், அதுவும் அதற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டதுமாகிய இரண்டும் பரிசுத்தமாகும்; அது மீட்கப்படக்கூடாது.

"உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு" (நீதி 3:9).

தசமபாகம் கர்த்தருடைய ஊழியத்தை செய்கிற ஊழியக்காரர்களுக்கும் ஆதரவாயிருக்கவேண்டும்.

"மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன்" *(கலா 6:6)*.

"நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா?" *(1கொரி 9:11)*.

கர்த்தர் சொன்ன பிரமாணத்திற்கு முடிவுரையாக, "இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லும்படி கர்த்தர் சீனாய்மலையில் மோசேக்கு விதித்த கட்டளைகள் இவைகளே" *(லேவி 27:34)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய பிரமாணத்தில், பல பிரமாணங்கள் நீதிநெறி சம்பந்தமானவை. நாம் இந்தப் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து, அவைகளை உண்மையாய்க் கைக்கொள்ளவேண்டும். ஒரு சில பிரமாணங்கள் சடங்காச்சாரம் சம்பந்தமானது. கர்த்தர் இந்தப் பிரமாணங்களை யூதர்களுக்கு பிரத்தியேகமாக கொடுத்திருக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் சீனாய் மலைக்கு வந்து சேரவில்லை. இதற்காக நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும்.

"அன்றியும், தொடக்கூடியதும், அக்கினி பற்றியெரிகிறதுமான மலையினிடத்திற்கும், மந்தாரம் இருள் பெருங்காற்று ஆகிய இவைகளினிடத்திற்கும், எக்காளமுழக்கத்தினிடத்திற்கும், வார்த்தைகளுடைய சத்தத்தினிடத்திற்கும் நீங்கள் வந்து சேரவில்லை; அந்தச் சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்களுக்கு வார்த்தை சொல்லப்படாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள்" *(எபி 12:18)*.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளல்ல. நாம் நியாயப்பிரமாணத்தின் இருளில் நடவாமல், சுவிசேஷத்தின் வெளிச்சத்தில் நடக்கிறோம்.

"விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" *(ரோம 10:4)*.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, பிதாவாகிய தேவனுக்கும் நமக்கும் மத்தியஸ்தராயிருக்கிறார். கிறிஸ்துவைப்பற்றிய அறிவு நம்முடைய ஆவிக்குரிய இருளை நம்மைவிட்டு அகற்றும்.

"அதினாலே, முதலாங்கூடாரம் நிற்குமளவும் பரிசுத்த ஸ்தலத்திற்குப் போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார். அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம். இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல" *(எபி 9:8-10)*

"இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக்குறித்துச் சாட்சி கொடுத்தார்; விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார். இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்? கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே என்றான்" *(அப் 15:8-11)*.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரமாணங்களுக்கு அடிமைகளல்ல. நாம் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியவேண்டியவர்கள். பிதாவாகிய தேவனை உண்மையாய் ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கவேண்டும்.

BELLWETHER INTERNATIONAL

லேவியராகமம் - விரிவுரை
LEVITICUS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

பிதாவைத் தொழுதுகொள்கிறவர்கள் குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாகவே அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, நம்முடைய பிரதான ஆசாரியராகவும், நம்முடைய ஆலயமாகவும், பலிபீடமாகவும், பலியாகவும், சுத்திகரிப்பாகவும் இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மாத்திரமே நமக்கு கிருபாசனத்தண்டையில் தைரியமாய்க் கிட்டிச்சேருகிற சிலாக்கியம் கிடைத்திருக்கிறது.